BIBLE TRAINING CENTRE FOR PASTORS

வேதாகம உபதேச ஆராய்வு



5

DENNIS J. MOCK

போதகர்கள் மற்றும் சபை
முன்னோடிகளுக்கான
வேதாகமப் பயிற்சி மையம்

வேதாகம உபதேச ஆராய்வு

பாட நூல்

பாடமுறை எண் 5

டென்னிஸ் ஜே. மாக்

ஆசிரியரைப் பற்றி.....

திரு நிலைப்படுத்தப்பட்ட போதகரான முனைவர் டென்னிஸ் J. மாக் அவர்கள் ஜனவரி 1985 முதல் அக்டோபர் 1995 வரையிலும் அமெரிக்காவின் ஜார்ஜியா மாகாணத்தில் உள்ள அட்லாண்டாவின் முதல் பேப்டிஸ்ட்டு சபையில் முதியோர் கல்வியின் ஊழியராகவும், வேதாகமப் போதனை மற்றும் பயிற்சியின் ஊழியராகவும் பணியாற்றியுள்ளார். ஜனவரி 1989ல் இருந்து அவரது ஊழியமானது ஏறக்குறைய முழுவதுமே BTCPயில் கவனம் கொண்டதாயுள்ளது, இதன் நிறுவனராகவும் நிர்வாக இயக்குநராகவும் இவர் பணி புரிகின்றார். தற்சமயத்தில் இவர் அட்லாண்டாவில் உள்ள டன்வுட்டி என்ற இடத்தின் வேதாகம சபையில் போதகராக இருக்கின்றார். 1982ல், இந்த ஊழியத்திற்கு வரும் முன்பு முனைவர் மாக் அவர்கள் 13 ஆண்டுகளாக சட்டத்துறைப் பணியில் செயலாற்றியுள்ளார். திருமண வாழ்வில் 34 ஆண்டுகள் வாழ்ந்துள்ள இவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றார்கள்.

ஞாயிறு வேதபாட சாலை மற்றும் முதியோர் வேதாகமக் கல்வி ஆகியவற்றிற்கு வேதாகமப் புத்தகக் கல்வி பற்றி முனைவர் மாக் அவர்கள் ஏராளமான நூல்களை எழுதியிருக்கின்றார் மற்றும் இவர் கொலம்பியா வேதாகமக் கல்லூரி (S.C)யின் துணை/விரிவாக்கக் கல்விப் பிரிவிலும் இருந்துள்ளார். அவர் பின்வரும் பட்டங்களைப் பெற்றுள்ளார்: சாம்ஃபோர்டு பல்கலைக் கழகத்திலிருந்து B.A. (1966) பட்டம்; மெரி சட்டப் பள்ளிப் பல்கலைக் கழகத்திலிருந்து சட்டத் துறையில் முனைவர் பட்டம் (J.D.); மற்றும் டல்லாஸ் இறையியல் குருமடத்திலிருந்து வேதாகமப் படிப்புகளில் M.A. பட்டம் (1984). வேதாகம போதனை, ஆசிரியர் பயிற்சி, பாடத் திட்ட முன்னேற்றம் மற்றும் எழுதுதல், மற்றும் மாநாடு/கருத்தரங்கு ஆகியவற்றில் உரையாற்றுதல் போன்ற பணிகளில் இவர் மும்முரமாய்ப் பணியாற்றி வருகின்றார்.

நன்றியுரை

இப்பாடத்திட்ட வளர்ச்சி மற்றும் போதகர்களுக்கான வேதாகமப் பயிற்சி மையம் என்ற கருத்து ஆகியவற்றிற்கான தரிசனத்தைத் தேவன் என் இருதயத்தில் நேரடியாக இட்டிருப்பினும், பின் வருபவர்களின் துணையின்றி என்னால் இப்பணியை முடித்திருக்க இயலாது:

பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசை

எனது மனைவி பேட் அவர்களின் உற்சாகம், நிலையான அன்பு மற்றும் பொறுமை

ஜார்ஜியா அட்லான்டாவின் முதல் பேப்டிஸ்ட் சபையில் உலக ஊழியங்களின் இயக்குநர் ஜார்ஜ் மார்கன் அவர்களின் நிபந்தனையற்ற பின்புல உதவி மற்றும் ஆதரவு

எனது ஊழிய உதவியாளரான கேரன் பிரையன் அவர்களின் சீரான பணி

கென்யாவின் நைரோபியில் உள்ள கிபேரா சபையில் இருக்கும் சக்கின் செர் அவர்களின் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளப்பட்ட தரிசனம்.

டென்னிஸ் மாக்
அட்லான்டா, ஜார்ஜியா
ஏப்ரல் 1989

போதகர்கள் மற்றும் சபை
முன்னோடிகளுக்கான
வேதாகப் பயிற்சி மையம்

பாட நூல்

வேதாகம உபதேச ஆராய்வு

© 1989 டென்னிஸ் J. மாக், அட்லான்டா, GA

பதிப்புரிமை பெற்றது

பதிப்புரிமை பெற்றவரின் முன் அனுமதியின்றி இந்நூலைப் பிரதியெடுக்கவோ, புகைப்பட நகலெடுக்கவோ, மறுபதிப்பிடவோ, ஒலி, ஒளிபரப்பவோ, மொழியாக்கம் செய்யவோ அல்லது வேறு எவ்வகையிலும் பயன்படுத்தவோ கூடாது.

(Rev. 06/91)0

கிறிஸ்துவ இறையியல், நடைமுறைக்கேற்ப, திருச்சபையின் பெரும்பான்மையான பாரம்பரிய கருத்துக்களைக் கொண்டதாக இருக்கும்படி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இது

• மாறாத சத்தியம் • சுவிசேஷத்துவம் • வேதத்தை மையமாகக் கொண்டது

வேதாகமத்தின் அடிப்படையில் தங்கள் பொறுப்புகளைத் திறம்பட நிறைவேற்றத் தேவையான அடிப்படை வேத அறிவும், திறமையுள்ள உலகெங்கும் பரவியுள்ள ஸ்தல சபைப் போதகர் மற்றும் சபைத் தலைவர்களுக்கென, வகுக்கப்பட்ட எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடிய பெரிய பாடத்திட்டத்தின் ஒரு சிறிய பகுதியே இந்நூல். இதிலுள்ள கருத்துக்கள் எந்தக் கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்களும் பயன்படுத்தும் வண்ணம் பொதுவாயிருக்கும்படி நிலைக்குமேற்ப விளக்கமாக எடுத்துக் கூறலாமேயன்றி, கருத்துக்களை மாற்றியமைக்கக்கூடாது. ஆனால் அவர்கள் இந்த அடிப்படைப் போதனைக்கேற்றபடி, தம் பண்பாட்டிற்கிசைந்த பொருத்தமான எடுத்துக் காட்டுகளையும், விளக்கக் கதைகளையும் கூறி சிறப்பாக விளக்கலாம்.

போதகர், சபைத் தலைவர்களுக்குரிய இந்த வேதாகமப் பயிற்சி மையத்தின் பாடப் புத்தகங்களாக உங்கள் வேதாகமத்தையும், இந்த பாட நூலையும் பயன்படுத்த வேண்டும். வேதாகமக் கல்லூரி அல்லது வேதாகமப் பள்ளியில் முறைப்படிப் படித்து முடித்தவர்களோ அல்லது இடையில் விட்டோரோ, போதகராகவோ அல்லது தலைவராகவோ தங்களை உருவாக்க விரும்பும் எவருக்கும் ஏற்றபடி போதிக்க, நடைமுறைக்கேற்ப, போதுமான விளக்கங்களுடன் திறம்பட எடுத்துரைக்கும் வண்ணம் இப்பாடத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இந்த பாடநூல்களை தனிப்பட்ட முறையில் வேதத்தைக் கற்றுக்கொள்ள உதவும் வழிகாட்டி நூலாகப் பயன் படுத்தக்கூடாது. மேலும் போதுமான தகுதியற்ற ஆசிரியரோ அல்லது போதனையாளரோ இந்தப் பாடங்களை நடத்தக்கூடாது. ஒவ்வொரு பாட முறையும், 40 மணி நேர வகுப்பிற்குள் போதித்து நடத்த வேண்டியது. பாடத்தை திருப்பிப் பார்க்கவும், கொடுக்கப்பட்ட பயிற்சிகளை முடிக்கவும், கசடறக் கற்கவும், திறமைகளை வெளிப்படுத்தவும் வசதியாக இருக்க இன்னும் 30 மணி நேரம் அதிகமாகச் செலவிடவும், சில பாடங்கள் நடத்த 60 மணி நேரமோ அதற்கு அதிகமாகவோ வகுப்பறையில் செலவிடவேண்டும். பாடத் தலைப்பிற்கேற்ப பாடங்கள் 100 பக்கங்கள் முதல் 300 பக்கங்கள் வரை வேறுபடும். பயிற்சி காலம் முடிந்ததோடு பாடநூல்கள் முடிந்து விடுவதில்லை. போதகர் அல்லது சபைத் தலைவர்களின் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து பயன் படும் ஆய்வு நூல்களாகவும் ஊழியத்திற்கு உதவும் ஆதாரங்களாகவும் இருக்கவேண்டும். ஆண்டாண்டு காலமாக போதகர்கள் வேதாகமத்தைப் போதிக்கவும், சபையில் பிரசங்கம் செய்யவும் போதுமான வேதாகமப் போதனைகளை வழங்கும் விசாலமான பெரிய களஞ்சியமாக இவை விளங்கும்.

கடவுளின் வார்த்தைகளைப் போதித்தும், பிரசங்கித்தும் சீடர்களை உருவாக்கும் போதகர்மார், சபைத்தலைவர்களுக்கு வேதத்திலிருந்து சில பகுதிகளை நினைப்பூட்ட விரும்புகிறேன் (**1 தீமோத்தேயு** 6:2; **2 தீமோத்தேயு** 2:2; **மத்தேயு** 28:18-20) வேதாகமத்தை அறிவதே இப்பாட முறையின் நோக்கமாக அமைய வேண்டும்.

'வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது' (**2 தீமோத்தேயு** 3:16,17).

இந்த பாடத்திட்டம் சபைத்தலைவர்களை தகுதி படைத்தவர்களாக்குவதற்கென வகுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்கள் போதகராகவும், திருவசனத்தை உபதேசிக்கிறவர்களாகவும் திறமை பெற்று, கடவுளின் மக்களை ஊழியத்தின் வேலைக்காக ஆயத்தப்படுத்தி, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் கட்டி (எபே. 4:11-12), கடவுளுக்கு மகிமையைக் கொணரவும் அவரது சித்தம் பூமியிலே நிறைவேறவும் ஏதுவாகும்.

இருவகைப் பாடத்திட்டங்கள்

போதகர்களுக்குரிய வேதாகமப் பயிற்சி மையம் (BTCP). இந்த முழுப்பயிற்சிக்கும் பத்துப் பாடநூல்கள் உண்டு. இவை போதகராக, மூப்பராக, சுவிசேஷராக, சபை உதவியாட்களாக அழைப்பைப் பெற்ற மக்களுக்காக உருவாக்கப் பட்டவை. போ.வே.ப.மையத்திற்கு 10 பாடமுறைகள் உண்டு. இதில் 4 *வேதாகம செய்திகளைப் பிரசங்கிப்பதும், போதக ஊழியமும்* என்கிற நூலும் அடங்கும்.

சபைத்தலைவர்களுக்குரிய வேதாகமப் பயிற்சி (BTCL) இந்தப் பயிற்சிக்கு மேற்கூறிய பத்துப்பாடநூல்களுள் எட்டுப் பாடநூல்கள் உண்டு. இவை சபைத் தலைவர்களுக்கும், ஊழியஞ் செய்ய விரும்பும் பெண்களுக்கும் சேர்த்து உருவாக்கப்பட்டது. ச.வே.ப. மையத்திற்கென 4L *வேதாகமச் செய்திகளை எடுத்துரைப்பதைப் பற்றிய நூல்* இதற்குரியதாகும். இது வேதாகமச் செய்தியைப் பிரசங்கிப்பதும், போதக ஊழியமும் என்கிற போ.வே.ப.மையின் நூலுக்குப் பதிலாகக் கொடுக்கப்படுவதாகும். பாடநூல் 8 கோட்பாடுகளையும், முறைகளையும் போதித்தல், பாடநூல் 9 திருச்சபை வரலாற்றுக் கண்ணோட்டம் என்கிற இந்த இருபாடமுறைகளும் சபைத் தலைவர்களுக்கு விருப்பப் பாடமாக அளிக்கப்படும். அவர்கள் விரும்பினால் இந்தப் பாடமுறையிலும் இணைந்து படிக்கலாம்.

போதகர்களுக்குரிய வேதாகமப் பயிற்சி மையம்

போ.வே.ப. மை – பாடத்திட்டம்

	பாடங்கள்	காலம்
1.	வேதாகமத்தைக் கற்கும் முறைகளும், வியாக்கியான விதிகளும்	40 மணி நேரம்
2.	பழைய ஏற்பாடு – கண்ணோட்டம்	60 மணி நேரம்
3.	புதிய ஏற்பாடு – கண்ணோட்டம்	60 மணி நேரம்
4.	வேதாகமச் செய்திகளைப் பிரசங்கிப்பதும், போதக உழியமும்	60 மணி நேரம்
5.	வேதாகமக் கோட்பாடுகள் – கண்ணோட்டம்	60 மணி நேரம்
6.	தனிநபர் ஆன்மீக வாழ்வு	40 மணி நேரம்
7.	சபை ஊழியம், நிர்வாகம், கல்வி	40 மணி நேரம்
8.	வேத கோட்பாடுகளையும், முறைகளையும் போதித்தல்	40 மணி நேரம்
9.	திருச்சபை வரலாறு	60 மணி நேரம்
10.	அருட்பணி/நற்செய்திப்பணி/சீடத்துவம்	60 மணி நேரம்
	மொத்தம்	**520 மணி நேரம்**

சபைத்தலைவர்களுக்குரிய வேதாகமப் பயிற்சி

ச. த. வே. ப. – பாடத்திட்டம்

	பாடங்கள்	காலம்
1.	வேதாகமத்தைக் கற்கும் முறைகளும், வியாக்கியான விதிகளும்	40 மணி நேரம்
2.	பழைய ஏற்பாடு – கண்ணோட்டம்	60 மணி நேரம்
3.	புதிய ஏற்பாடு – கண்ணோட்டம்	60 மணி நேரம்
4L.	வேதாகமச் செய்திகளை எடுத்துரைப்பது	40 மணி நேரம்
5.	வேதாகமக் கோட்பாடுகள் – கண்ணோட்டம்	60 மணி நேரம்
6.	தனிநபர் ஆன்மீக வாழ்வு	40 மணி நேரம்
7.	சபை ஊழியம், நிர்வாகம், கல்வி	40 மணி நேரம்
10.	அருட்பணி/நற்செய்திபணி/சீடத்துவம்	60 மணி நேரம்
	மொத்தம்	400 மணி நேரம்

பாட முறையிலுள்ள எட்டுப் பாடங்களையும் வாரந்தோறும் 4 மணி நேரம் வீதம் படித்து வந்தால் 400 மணி நேரப் பயிற்சியை முடிக்க இரண்டாண்டுகள் தேவைப்படும்.

ச. த. வே. ப. – விருப்பப் பாடங்கள்

8.	கோட்பாடுகளையும், முறைகளையும் போதித்தல்	40 மணி நேரம்
9.	திருச்சபை வரலாறு	60 மணி நேரம்
	மொத்தம்	**100 மணி நேரம்**

விருப்பப் பாடங்கள் இரண்டையும் வாரம் 4 மணி நேரம் வீதம் படித்து வந்தால் ஆறுமாத காலத்திற்குள் முடித்துவிடலாம்.

போதனை அனுகுமுறை

அட்டவணைப்படுத்தப்பட்ட பாடங்களை அந்தந்த வகுப்பில் செயலூக்கமாய் நிறைவு செய்யவும், விபரங்களில் "மூழ்கிப்போய் விடாமல்" அல்லது "புறம்பே இழுத்துச் செல்லப்படாமல்" இருப்பதற்கும் பின்வரும் ஆலோசனைகளைப் போதிப்பவர் கவனமாய்ப் பின் பற்ற வேண்டும்.

வகுப்பு நேரத்தில்,

- பாடப் பொருளை அறிமுகம் செய்யுங்கள்.
- "வழி நடத்தும் அல்லது ஆழமாய்ச் சிந்திக்கச் செய்யும்" கேள்விகளைக் கேளுங்கள்.
- முக்கியமான கருத்துக்களை வலியுறுத்தி விளக்கம் அளியுங்கள்.
- தேர்ந்தெடுத்த திறவுகோல் வசனங்களில் கவனம் செலுத்திப் பயன்படுத்துங்கள்.
- பாடக் கருத்தின் முக்கிய பகுதிகளை சிறப்பாய்க் கூறுங்கள்.
- மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டி விடுங்கள்.
- மாணவர்களின் சிந்தனையை ஒரு குறிப்பிட்ட இலக்கில் திருப்புங்கள்.
- கேள்விகளுக்குச் சுருக்கமாகவும் நேரடியாகவும் பதில் அளித்து மற்றவைகளைப் பின்னால் கேள்வி பதில் நேரத்தில் தெரிவிப்பதாகக் குறிப்பிடுங்கள்.
- பாடப் புத்தகத்தின் விஷயங்களை "வார்த்தைக்கு வார்த்தை" வாசித்து முடிக்க முயற்சிக்காதீர்கள் மாணவர்கள் பிற்பாடு அதை முழுமையாக வாசித்து மற்றும் படித்துக் கொள்வார்கள்.
- விபரங்களும் பிரவுகளும் வைக்கப்படுவதற்கேற்ற குறிப்புக்கான சந்தர்ப்பம் அல்லது அமைவை உருவாக்குங்கள்.
- முன்பு நிறைவு செய்த/போதிக்கப்பட்ட சத்தியங்கள் மற்றும் கொள்கைகளை வாசித்து மறுகண்ணோட்டமிட்டு, மற்றவைகளை முன்கண்ணோட்டமிடுங்கள்.
- திறவுகோல் கருத்துக்களையும், மற்றவைகளையும் சுருக்கி மறுபடியும் கூறுங்கள்.
- மற்ற பாடப் புத்தகங்களின் கருத்துக்களை ஒன்றிணைத்துக் குறிப்பிடுங்கள்.
- விரிவுரை, கலந்துரையாடல், உரையாடல் மற்றும் கேள்வி பதில் முறைகளைக் கலந்து பயன்படுத்துங்கள்.
- போதனை கற்றுக் கொள்ளுதல் இவற்றின் செயலாக்கத்தைப் பரிசோதிக்க ஆராய்வு வினாக்களைப் பயன்படுத்துங்கள்.
- அன்றாடம் நிறைவு செய்த பக்கங்கள் அல்லது பகுதிகளின்படி வளர்ச்சியை மதிப்பிடுங்கள் மற்றும் பிற ஆசிரியர்கள் இருந்தால் அவர்களிடத்தில் அறிவுரை பெறுங்கள்.

பொருளடக்கங்களின் அட்டவணை

ஆசிரியரைப் பற்றி 2

முன்னுரை 4

போ.வே.ப.மை. போதனை அணுகுமுறை 6

பொதுவான விஷயம்

- பாடத் திட்டம் 8
- பாட அட்டவணை 10
- போதனைக்கான அறிவுறுத்தல்கள் 11
- பாடப் புறக்குறிப்பு 12

பாடப் பொருளடக்கம்

I. அறிமுகம் 30
II. பிரதானமான பத்து உபதேசங்கள் 34

பிற்சேர்க்கை

- *NIV Study Bible*ஐப் பயன்படுத்த நடைமுறைக் குறிப்புகள்...............................1
- வேதாகமத்தின் 66 புத்தகங்கள் 7
- இரட்சிப்பின் திட்டம் 9
- விசுவாசக் கூற்று 10

பாட முறை 5

போதனைக்கான கொள்கைகள் மற்றும் முறைமைகள்

பாடத் திட்டம்

பாட விவரிப்பு:

போதகர் அல்லது சபை முன்னோடி ஆரோக்கியமான இறையியலைப் புரிந்து கொண்டு நடைமுறைப்படுத்துகையில் தேவன் அதிகம் முழுமையாக அறிந்து கொள்ளுதலுக்கான ஒரு வலியுறுத்தத்துடன் வேதாகமத்தின் பிரதானமான பத்து உபதேசங்களைப் பற்றிய ஒரு ஆராய்வு மற்றும் சுருக்கவுரை.

பாட இலக்குகள்:

(1) வேதாகம உபதேசத்தின் அஸ்திபாரமான சத்தியங்களை போதகர்கள் மற்றும் சபை முன்னோடிகளுக்குப் போதிக்க.

(2) தேவனைப் பற்றிய ஆழமானதொரு புரிந்து கொள்ளுதலிலும் மதிப்பிலும் போதகர்களையும் சபை முன்னோடிகளையும் வழி நடத்த.

(3) தேவனுடனான தனிப்பட்ட உறவில் போதகர்களையும் சபை முன்னோடிகளை யும் வளப்படுத்த.

(4) சரியான உபதேசத்தைப் போதிக்கவும் கள்ள உபதேசத்தை எதிர்த்து நிற்கவும் போதகர்களையும் சபை முன்னோடிகளையும் பயிற்றுவிக்க.

(5) சரியான நம்பிக்கையானது சரியான நடக்கையில் பிரதிபலிப்பதைக் காணும்படி போதகர்களையும் சபை முன்னோடிகளையும் பெலப்படுத்த.

★ மேன்மை பாராட்டுகின்றவன் ..... கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக் கடவன்.★ (எரே. 9:24).

பாட ஆதாரங்கள்:

(1) இந்தக் கை நூல்.

(2) The 10th Anniversary Edition of The NIV Study Bible (English version, © 1995), Zondervan Publishing House.

பாடத் தேவைகள்:

1. வகுப்பறைச் செயல்பாடு. வகுப்பு விரிவுரை மற்றும் கலந்துரையாடல்கள் பற்றி இந்தப் புத்தகத்திலேயே குறிப்பெழுதத் தயாராயிருங்கள் மற்றும் அந்தக் கலந்துரையாடல்களில் பங்கேற்கவும் தயாராயிருங்கள்.

2. அன்றாடக் கடமைகள். அந்தந்த நாளில் வகுப்பில் நடத்தப்பட்ட பாடங்களை எல்லா வேத வசனக் குறிப்புகள் உட்பட வாசித்து கவனமாய் மறுகண்ணோட்டமிடுங்கள் மற்றும் எந்த ஒரு பாடப் பணியையும் முடித்து விடுவதிலும் கவனமாய் இருங்கள். பாடக் கருத்தின் (வகுப்பிற்கு 4 10 பக்கங்கள்) பொருளடக்கம், கருத்துக்கள் மற்றும் பயன்பாடு ஆகியவற்றை நீங்கள் புரிந்து கொண்டீர்களா என்று நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். பாடப் பணிகளை முடித்த பிறகு, மாணவர்கள் தங்கள் வேதாகமத்தை வாசிக்கும் பணியில் ஈடுபடலாம்.

3. வகுப்பறைக்கு வருகை தருதல். வகுப்புக்கு வருதல் அவசியமாய் வேண்டப்படுகின்றது. அதிகமாய் வராமலிருத்தல் என்பது வகுப்பிலிருந்து நீக்கிப்படுதலே விளைவிக்கலாம். ஏதேனும் வகுப்புகளைத் தவற விட்டால் (கிடைக்கும் இடத்தில்) ஒலி நாடாக்களைக் கேட்டுக் கவனித்து எந்த ஒரு வீட்டுப் பாடத்தையும் நிறைவு செய்யலாம். போ.வே.ப. அல்லது ச.மு.வே.ப., சான்றிதழ் பெறுவதற்கு 75% வகுப்பறை வருகை வேண்டப்படுகின்றது.

4. மதிப்பீடு செய்தல். வேதாகமப் பயிற்சி மையத்தில் பிற பயிற்சிகளைப் பெற வேண்டுமென்றால், நீங்கள் பாடங்களைத் தெளிவாகப் புரிந்து கொண்டு போதிக்கப்பட்ட திறமைகளை நடைமுறைப்படுத்த வல்லவர் என்று உங்கள் ஆசிரியர் உங்கள் மேல் திருப்தி கொள்ளும்படி செயல் விளக்கப்படுத்துங்கள். உங்கள் கேள்விகளுக்குப் பதில் தரும்படியும், உங்களிடத்தில் குழப்பம் எதுவும் இருந்தால் அதைத் தெளிவாக்கும்படி தயவு செய்து உங்கள் ஆசிரியரிடம் கேளுங்கள். உங்கள் பாடப் புத்தகத்தில் நீங்கள் நிறைவு செய்துள்ள வீட்டுப் பாடங்களை உங்கள் ஆசிரியர் மறுகண்ணோட்டமிடுவார், அவர் வகுப்பறையில் உங்களின் பங்கேற்பை மதிப்பிடுவார், மற்றும் நடைமுறை ஊழியத்தில் உங்கள் ஈடுபாட்டையும் அவர் மதிப்பிடுவார். நீங்கள் கற்றுக் கொண்டிருக்கின்றீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவர் உங்களை கிரமமாகப் பேட்டி காண்பார்.

5. கூடுதல் தேவைகள்:
   - அ. இந்தப் பாடத்தில் உங்களை அதிகம் கவர்ந்த சத்தியம், கொள்கை, கருத்து அல்லது வேதாகமத்தின் ஒரு நபர் பற்றி விவரிக்கும் ஒரு பக்கக் கட்டுரையொன்றை நீங்கள் எழுதி, அதைக் கடைசி வகுப்பிற்கு முன்பாக ஆசிரியரிடம் கொடுக்க வேண்டும்.
   - ஆ. பருவங்களுக்கு இடைப்பட்ட விடுமுறை நாட்களில், நீங்கள் பின்வரும் வேதாகமப் பகுதிகளை வாசித்து முடிக்கும்படி வேண்டிக் கொள்ளப்படுகின்றீர்கள்.
     - இந்தப் பாடத்திற்கான புத்தகத்தை மறுபடியும் வாசித்து மறுகண்ணோட்டமிடுங்கள்.
     - உங்கள் வேதாகமத்தில் பின்வரும் பகுதியை வாசியுங்கள்.

3ம் பாடம் தொடங்கும் பொழுது	ஆதியாகமம் முதல் 1 இராஜாக்கள் வரை.
5ம் பாடம் தொடங்கும் பொழுது	2 இராஜாக்கள் முதல் உன்னதப்பாட்டு வரை.
7ம் பாடம் தொடங்கும் பொழுது	ஏசாயா முதல் மல்கியா வரை.
10ம் பாடம் தொடங்கும் பொழுது	மத்தேயு முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை

★ தினமும் 25 பக்கங்கள் (வேதாகமத்திலிருந்து மட்டும்) வாசிக்கவும்.

- இந்தப் பணியை நீங்கள் செய்து முடித்ததை எழுத்து மூலம் ஆசிரியரிடம் தெரிவிக்கவும்

பாடத்தின் கால அட்டவணை

வகுப்பு #	தேதி	பக்கங்கள்	தலைப்பு
1			
2			
3			
4			
5			
6			
7			
8			
9			
10			
11			
12			
13			
14			
15			
16			
17			
18			
19			
20			
பிற			

குறிப்பு: ஆசிரியர் இந்த கால அட்டவணையை நிரப்பவும் மற்றும் ஒவ்வொரு வகுப்பிலும் தாம் நடத்த விரும்பும் பாடங்கள் பற்றி மாணவர்களுக்கு அறிவிக்கவும் விரும்பலாம் (பாடத்தைப் பொறுத்து தினமும் சுமார் 5-10 பக்கங்கள்). மேலும் வேதாகம வாசிப்பில் உதவும் பிற்சேர்க்கையில் உள்ள நடைமுறைக் குறிப்புக்களைக் கொண்டும் ஆசிரியர் தொடங்க விரும்பலாம்.

ஆலோசனைத் திட்டம்

மாணவர்களின் தேவைகளுக்கேற்ப திட்டத்தை வடிவமைக்க முழு சுதந்திரம் அளிக்கப்படுகின்றது. இங்கு கொடுக்கப்பட்டுள்ள பொது வழி முறைமையானது இப்பாடங்களை அதிகபட்சம் மூன்று ஆண்டுகளில் முடிக்க வழி வகுக்கும்.

முழு நாள் படிப்பு முறை

திங்கள் முதல் வெள்ளி வரை தினமும் 3 அல்லது 4 மணி நேரம் வகுப்பு நடத்தினால், ஒவ்வொரு வாரமும் 15 முதல் 20 மணிகள் வகுப்பு நேரம் கிடைக்கும். இருவாரம் விடுமுறையும் 6 வார வகுப்பும் கொண்ட பருவமாய் நடத்தினால் தினமும் 13 மணி வீதம் 10 மாதம் அல்லது தினமும் 4 மணி வீதம் 8 மாதத்தில் முடிக்கலாம்.

கிரமமான படிப்பு முறை

ஒரு நாளைக்கு ஆறு மணி நேரம் வீதம் (வாரம் 30 மணி நேரம்) நடத்தினால் இதை நிறைவு செய்வதற்கு 18 வாரங்கள் ஆகும். ஒரு மாதத்திற்கு ஒரு வாரம் என்று நடத்திச் சென்றால் இதை முடிக்க ஒன்னறை ஆண்டுகள் ஆகும்.

இரவு அல்லது வார இறுதிப் படிப்புமுறை

வார இறுதி அல்லது இரவு நேரப் படிப்பு முறை என்பது வாரத்தில் 4 மணி நேரம் வீதம் படித்தால் 2 1/2 ஆண்டுகளிலும், வாரத்தின் 6 மணி நேரம் வீதம் படித்தால் ஒன்னறை ஆண்டுகளிலும் இப்பாடத்தை நிறைவு செய்யலாம்.

போதனைக்கான அறிவுறுத்தல்கள்

அடிப்படை மற்றும் பயன்பாட்டு அறிவையும் திறமைகளையும் உட்கிரகித்தல் என்ற நடைமுறை அறிவு புகட்டுதலே இப்பாடத்தின் பின்னணியில் உள்ள போதனைத் தத்துவமாகும். மாணவர்கள் சுயமாய் ஈடுபடும்படியாகவும், போதிக்கப்பட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்படியாகவும் அவர்களுக்குத் தரப்படும் வீட்டுப் பாடங்கள் அமைந்துள்ளன. மாணவர்கள் இன்றியமையாத சத்தியங்களைப் புரிந்து கொண்டு கூற முடியும் என்பதை மறுகண்ணோட்டப் பகுதிகள் உறுதிப்படுத்துகின்றன. நல்ல கலந்துரையாடலையும் கற்பித்தல், செயல்பாட்டை மதிப்பிடுதலையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஆசிரியர் விரிவுரை முறை வினா விடை முறை மற்றும் கலந்துரையாடல் முறை ஆகியவற்றை இணைத்துப் பயன்படுத்த விரும்புவார். கலாச்சாரத்திற்கு ஏற்ற விளக்கங்களையும் எடுத்துக் காட்டுகளையும் ஆசிரியர் பயன்படுத்த வேண்டும்.

வேறு வகையில் அனுமதிக்கப்பட்டாலன்றி, சிறு தேர்வு, தேர்வுகள், ஆய்வுக் கட்டுரை எழுதுதல் அல்லது வேதாகமம் தவிர மற்ற பாடப் புத்தகங்களைப் பயன்படுத்துதல் போன்ற எதுவும் தேவைப்படாத அளவுக்கு இப்பாடமானது போதிக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் பயன்படுத்துவதற்கென்று ஒளிப் படங்கள் தரப்படக் கூடும். ஒளிப்படக் கருவியைப் பயன்படுத்திப் பணியாற்றுதல் அல்லது வீட்டுப்பாடங்களை மறு கண்ணோட்டமிடுதல் என்பது வகுப்பறையில் நல்ல பங்கேற்பையும் பரஸ்பரம் கற்றுக் கொள்ளுதலையும் நன்கு வளர்க்கும்.

பிரதான பாட நூலான வேதாகமத்தைத் தொடர்ந்து பயன்படுத்துவதை உற்சாகப் படுத்தும் வகையிலேயே இப்பாட நூல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்பாட நூல்களில் உள்ள முக்கிய வேதாகமக் குறிப்புகள் வகுப்புகளில் வாசிக்கப்பட்டு, வலியுறுத்தும் கருத்துக்களாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

பாடமுறை 5 வேதாகம உபதேச ஆராய்வு
போதனைக்கான ஆலோசனைகள்

பக்கங்கள்: *312* **தேவைப்படும் மணிகள்**: குறைந்தது *60* (ஒருவேளை *70- 80)* **வகுப்புகள்**: *30*

அளவும் அட்டவணையும்: கைநூலில் உள்ள இயல்பான பிரிவுகளுக்கேற்றபடி *2* மணி நேரத்திற்குச் சுமார் *10* பக்கங்கள்.

<u>குறிப்பு</u>: அறிமுகம் மற்றும் பிரதான *10* உபதேசப் பகுதிகளை நிறைவு செய்ய, ஆசிரியர் பாடப் பகுதியை *10* அலகுகளாய்ப் பிரித்து அவை ஒவ்வொன்றிற்கும் *3* வகுப்புகளை ஒதுக்கத் தேர்ந்து கொள்ளலாம். அநேகமாக வேறு எந்தப் பாடத்தைக் காட்டிலும் அதிகமான கேள்விகள் இந்தப் பாடத்தில், அதிலும் குறிப்பாக ஒரு பல்வேறுபட்ட நாமகரணக்கூட்ட அமைப்பில் எழுப்பப்படும். அவசியப்பட்டால் வகுப்பு நேரங்கள் நீட்டிக்கப்படக் கூடும் அல்லது நாளின் முடிவில் ஒரு வினா விடைப் பகுதி நேரம் சேர்க்கப்படக் கூடும்.

<u>குறிப்புக்களும் அணுகுமுறையும்</u>

- வேதாகம உபதேச ஆராய்வு என்பது BTCP/BTCL பாடங்களிலேயே போதிக்க மிகவும் கடினமானதாக இருக்கும், மற்றும் ஆசிரியர் கூருணர்வை செயல்விளக்கப்படுத்தி, மாறுபட்ட கண்ணோக்கங்களுக்கு மரியாதை அளித்து, அன்பைத் தெரிவித்து அதே வேளையில் வேத வசனங்கள் போதிப்பதின் அடிப்படையில் மாறுபாடான இறையியல் விஷயங்களை நேர்மையுடன் கையாள வேண்டும். அதிகமான ஜெபமும், பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலும் இவ்விடத்தில் அவசியமாய் உள்ளன.
- அடிப்படை இலக்கு என்பது போதனைப்படியான உபதேசப்படுத்துதல் அல்ல, ஆனால் வசனம் உண்மையில் போதிப்பதென்ன என்பதன் அடிப்படையில் மாணவர்கள் தங்கள் இறையியலைத் தீர்மானிக்க ஊக்குவித்தலேயாகும்.
- அறைகூவல் விடுக்கும், வழி நடத்தும் கேள்விகள் பாடக் கருத்தைப் பெறுவதற்கான மிகச் சிறந்த வழியாய் உள்ளன.
- இறையியலின் சிறு கருத்துக்களில், தெளிவான முரண்பாடும் தீர்வு இல்லாததுமான விஷயங்களில் ஒப்புமை இல்லாதிருக்க ஆசிரியர் சுயாதீனம் பெற்றுள்ளார் (எ.கா. விவாக இரத்து மற்றும் மறு திருமணம்; பரமானந்தம் மற்றும் இரண்டாம் வருகையின் காலம் முதலியன). இப்படிப்பட்ட விஷயங்களில் அவர் தமது சொந்தக் கண்ணோட்டங்களை விளக்கலாம், ஆனால் பாடக் கருத்தை விமர்சிக்கும் வகையிலோ அல்லது போதிக்கப்படும் நிலைப்பாடுகளில் உள்ள நம்பிக்கையைத் தரம் தாழ்த்தும் வகையிலோ அதைச் செய்யக் கூடாது.
- நல்ல இறையியலை (ஆரோக்கியமான உபதேசம்/நலமான போதனை) வளரச் செய்வதில் வலியுறுத்தம் காட்டப்பட வேண்டும், ஏனென்றால் நாம் நம்புகின்றவைகளே நாம் செய்பவற்றைத் தீர்மானிக்கின்றன. இறையியல் என்பது அன்றாட வாழ்விலிருந்து பிரிக்கப்படக் கூடாது.
- வகுப்பறை வினாக்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் இல்லையென்றால் பாடம் ஒருக்காலும் முடிவடையாது.
- இறையியலில் முழுமையான கருத்து ஒருமைப்பாடு நடைமுறையில் சாத்தியமற்றது என்பதை நினைவில் வையுங்கள்.
- உபதேசக் கருத்து ஒவ்வொன்றும் மைய வசனப் பகுதி ஒன்றினால் தாங்கப்படுவதை நிச்சயத்துக் கொள்ளுங்கள்.
- வகுப்பில் முடிந்த அளவுக்கு வசனத்தில் நிலைத்திருந்து அது தன் சுய அதிகாரம் கொண்டிருக்க அனுமதியுங்கள்.
- இக்கை நூலின் பாடக் கருத்துக்களுடன் மிக நெருக்கமாய் ஒட்டியிருத்தல் அறிவுரைக்குரியது ஆகும்.

பாடப் புறக்குறிப்பு

வேதாகம உபதேச ஆராய்வு

I. அறிமுகம் (ப. 30 -33)

அ. இறையியலின் இயல்பு ப. 30

- விளக்கங்கள்
  - இறையியல்
  - உபதேசம்
- இறையியலின் வகைகள்
  - வேதாகம ரீதியானது
  - அமைப்பு ரீதியானது
  - வரலாற்று ரீதியானது

ஆ. படிப்பின் முறை மற்றும் நோக்கம் ப. 31

- இந்தப் பாடத்தின் அணுகுமுறை
- அஸ்திபாரமான 3 கருத்துக்கள்
- வழிகாட்டும் 4 கொள்கைகள்
- விசுவாசத்தின் 5 அடிப்படைகள்
- நல்ல இறையியல் மாணவர் ஒருவரின் இன்றியமையாத எண்ணப் போக்குகள்
- உபதேசத்தைப் படித்தலின் நோக்கம்

II. பிரதான பத்து உபதேசங்கள் (ப. 34- 311)

அமைப்பியல் ரீதியான வேதாகம இறையியலின் பிரதானமான பத்து உபதேசப் பிரிவுகளின் மேல் கண்ணோட்டம்

உபதேசம்		நுட்பத் தலைப்பு
1. தேவன்	–	ஏற்புடையஇறையியல்
2. வேதாகமம்	–	வேதாகமவியல்
3. இயேசு கிறிஸ்து	–	கிறிஸ்து இயல்
4. பரிசுத்த ஆவியானவர்	–	ஆவியியல்
5. தூதர்கள்	–	தூதரியல்
6. மனிதன்	–	மானிடவியல்
7. பாவம்	–	பாவவியல்
8. இரட்சிப்பு	–	இரட்சிப்பியல்
9. சபை	–	சபையியல்
10. எதிர்கால விஷயங்கள்	–	முடிவியல்

1. தேவன் - ஏற்புடைய இறையியல் (ப. 34- 88)

அ. தேவன் யார் அல்லது எப்படிப்பட்டவர்? ப. 34

ஆ. உலகத்தின் பிரதானமான கண்ணோட்டங்கள் ப. 34

1. ஒரு தெய்வக் கொள்கை
2. இரு தெய்வக் கொள்கை
3. மனிதவியல் கொள்கை
4. நாத்திகக் கொள்கை
5. கடவுள் மறுப்புக் கொள்கை
6. பொருள் முதல் வாதக் கொள்கை
7. மேலான தெய்வக் கொள்கை
8. பல தெய்வக் கொள்கை
9. பல வித நம்பிக்கைகளின் கொள்கை
10. கடவுள் விலக்கக் கொள்கை
11. ஆத்திகக் கொள்கை

இ. தேவனுடைய இருப்பும் அறிவும் ப. 36

- தேவனைப் பற்றிய அறிவின் சாத்தியக் கூறுள்ள ஆதார மூலங்கள்
- தேவனுடைய இருப்பிற்கான இயல்பான விவாதங்கள்
  1. வானவியல் ரீதியானது
  2. முடிவுக் காரணக் கொள்கை ரீதியானது
  3. மானிடவியல் ரீதியானது
  4. மெய்ப்பொருளின் தொடக்கவியல் ரீதியானது

ஈ. தேவனுடைய இன்றியமையாத இயல்பு ப. 41

- தேவனைப் பற்றிய இறையியல் விளக்கங்கள்
- தேவனுடைய சாரம்சம்
  - தேவனை தேவனாக்குகின்ற 5 விஷயங்கள்
    1. ஆவி
    2. உயிர்
    3. முழுமைத் தன்மை/குறையற்ற தன்மை
    4. தனிச் சிறப்பான தன்மை
    5. நித்தியத் தன்மை

- தேவனுடைய முக்கியமான மற்ற பண்புகள் (இயல்புகள்) ப. 48

  6. பரிசுத்த தன்மை
  7. புலன் கடந்த தன்மை
  8. சுய நிறைவான தன்மை
  9. முடிவற்ற தன்மை
  10. மாறாத தன்மை
  11. சர்வ வல்லமை
  12. எங்கும் நிறைந்திருக்கும் தன்மை
  13. எல்லாம் அறிந்த தன்மை
  14. ராஜரீகத் தன்மை
  15. உண்மையுள்ள தன்மை

- தேவனைப் பற்றிய வேதாகமத்தின் மற்ற விவரிப்புகள் ப. 58

  16. அன்பு
  17. ஒளி
  18. சத்தியம்
  19. நல்லதன்மை
  20. ஞானம்
  21. நீதி
  22. இரக்கம் நிறைந்தவர்
  23. கிருபையுள்ளவர்
  24. கோபம் நிறைந்தவர்
  25. மன்னிப்பவர்
  26. பொறுமையுள்ளவர்
  27. நியாயமுள்ளவர்

உ. தேவனுடைய ஆளுமைத் தன்மை ப. 70

ஊ. தேவனுடைய பெயர்கள் ப. 71

- <u>பழைய ஏற்பாட்டில் 3 அடிப்படைப் பெயர்கள்</u>

  1. ஏலோஹிம்
  2. அதோனாயி
  3. யாவே அல்லது யேகோவா

- <u>பழைய ஏற்பாட்டு "ஏல்" கூட்டுப் பெயர்கள்</u>

4. ஏல் சதாய்
5. ஏல் ஏல்யோன்
6. ஏல் ரோயீ
7. ஏல் ஓலம்

- <u>பழைய ஏற்பாட்டு "யாவே" பிரதான கூட்டுப் பெயர்கள்</u>

8. யாவே யீரை
9. யாவே சபோத்
10. யாவே ரோப்
11. யாவே சாலேம்
12. யாவே நிசி
13. யாவே சித்கெனு
14. யாவே மக்காதேஸ்கீம்
15. யாவே ரா

- <u>தேவனுக்குப் புதிய ஏற்பாட்டு அடிப்படைப் பெயர்கள்</u>

1. தியோஸ்
2. குரியோஸ்
3. டெஸ்போட்டெஸ்
4. அப்பா (தந்தை)

- <u>இயேசுவுக்குப் புதிய ஏற்பாட்டு பிரதான பெயர்கள்</u>

5. இம்மானுவேல்
6. இயேசு
7. கிறிஸ்து

எ. **தேவ திரித்துவம்** ப. 75

- கருத்தின் கூற்று
- உபதேச விளக்கம்
- உறவுமுறைகளின் வரைபடம்
- 4 மடங்கு பழைமை வாத வலியுறுத்தம்
- 3 பொதுவான தவறுகள் அல்லது எதிர்க் கொள்கைகள்
- பழைய ஏற்பாட்டு திறவுகோல் வசனப் பகுதிகள் மறைவான உபதேசம்
- புதிய ஏற்பாட்டு திறவுகோல் வசனப் பகுதிகள் போதிக்கப்பட்ட உபதேசம்

ஏ. தேவனின் பணிகள் ப. 79

- தேவனுடைய ஆணை
  - தேவனுடைய ஆணையின் குறிப்பிட்ட சில அம்சங்கள்
    - படைப்பு
    - அளித்தல் மற்றும் பரிவிரக்கக் கவனிப்பு
    - மனிதரின் இரட்சிப்பு
    - படைப்பின் மீட்பு
    - மனிதரின் சுயாதீன சித்தம்
- தேவனுடைய பிரதானமான உடன்படிக்கைகள்
  - ஆபிரகாமுடன் உடன்படிக்கை
  - மோசேயுடன் உடன்படிக்கை
  - தாவீதுடன் உடன்படிக்கை
  - புதிய உடன்படிக்கை
  - தேவனுடைய உடன்படிக்கை அன்பு

2. வேதாகமம் வேதாகமவியல் (ப. 88 -102)

அ. உபதேசத்தின் முக்கியத்துவம் ப. 88

ஆ. வேதாகமத்தின் இயல்பு ப. 88

- வெளிப்படுத்துதலாக
- விளக்கம்
- தேவனுடைய வார்த்தையாக

இ. வேதாகமம் பற்றிய வேறுபட்ட கண்ணோட்டங்கள் ப. 90

- விடுதலையியம்
- புதிய பழைமை வாதம்
- ரோமன் கத்தோலிக்கவியம்
- மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாத, சுவிசேஷத்துவ பழைமை வாதக் கண்ணோட்டம்

ஈ. வேதாகமத்தின் தொடக்கம் ப. 92

- ஏவுதல்
  ஏவுதல் பற்றிய சில தவறான கண்ணோட்டங்கள்
- தவறற்ற தன்மை
- ஒளியூட்டிய தன்மை
- அதிகாரமுடைமை
- விதிமுறைப்படுத்தும் தன்மை
  அடிப்படை உறுதிப்பாடுகள்
  பழைய ஏற்பாட்டின் விதிமுறை
  புதிய ஏற்பாட்டின் விதிமுறை
- வேதாகம வசனங்களின் நம்பகத் தன்மை
  பழைய ஏற்பாடு
  புதிய ஏற்பாடு
- வேதாகமத் திறனாய்வு
  பொதுவான உயர்நிலை விமர்சனம்
  பழைய ஏற்பாட்டு உயர்நிலை விமர்சனம்
  – மூல ஆதாரம்
  – வடிவம்
  – பதிப்பித்தல்
  கீழ்நிலை அல்லது வசனரீதியான விமர்சனம்

3. இயேசு கிறிஸ்து - கிறிஸ்து இயல்பு (ப. 102- 142)

அறிமுகம் - இயேசு கிறிஸ்து யார்?

அ. கிறிஸ்துவின் தெய்வீகத்துவம் ப. 104

1. அவரது முன் இருப்பு நிலை
2. அவரது நித்திய தன்மை
3. அவரது தெய்வீக இயல்பு
4. அவரது பெயர்களும் இயற்பெயர்களும்
   இயேசு
   இம்மானுவேல்
   கிறிஸ்து
   யாவே
   கர்த்தர்
   தேவன்
   தேவகுமாரன்

மனுஷ குமாரன்
தாவீதின் குமாரன்

5. அவரது சிறப்புப் பெயர்கள்
    - ஒரே குமாரன் (ஒரே பேறானவர்)
    - முதற்பேறானவர்
6. யெகோவாவின் தூதராக அவரது அவதாரத்திற்கு முந்திய பழைய ஏற்பாட்டுத் தரிசனங்கள்.
7. பழைய ஏற்பாட்டில் அவரது முன் சித்தரிப்பு
8. பழைய ஏற்பாட்டின் மேசியாத்துவ தீர்க்க தரிசனங்கள் அவர் நிறைவேற்றுதல்

ஆ. கிறிஸ்துவின் மனிதத்துவம் ப. 112

1. அறிமுகம்
2. அவரது அவரதாரம்
3. கன்னியிடமிருந்து அவரது பிறப்பு
4. தேவப் பண்பைத் துறத்தல்
5. அவரது உண்மையான மனிதத்துவம்
6. இயற்கைக்கு மேலான ஒருமைப்பாடு
7. அவரது ஞானஸ்நானம்
8. அவர் சோதிக்கப்படுதல்
9. அவரது பாவமற்ற வாழ்வு
10. பூமியில் அவரது ஊழியம் மற்றும் அற்புதங்கள்
11. அவரது இரட்சிப்பின் ஊழியம்
12. அவரது பணிகள்
    தீர்க்கதரிசி
    ஆசாரியர்
    நியாயதிபதி
    இராஜா
13. (நமக்கு) பதிலாக அவரது தியாகமான மரணம்
14. அவரது சரீர உயிர்த்தெழுதல்
15. அவரது பரத்துக்கேறுதல்

இ. கிறிஸ்துவின் தற்கால ஊழியம் ப. 138

- பொதுவாக பரலோகத்தில்
- சபைக்கு
- தனித்தனி விசுவாசிகளுக்கு

ஈ. கிறிஸ்துவின் எதிர்கால ஊழியம் ப. 141

4. | பரிசுத்த ஆவியானவர் ஆவியியல் | (ப. 143- 160)

அறிமுகம்

அ. | பரிசுத்த ஆவியானவரின் இயல்பும் நபர்த்துவமும் | ப. 143

1. அவரது தெய்வீகத்துவம்
2. அவரது பண்புகள் (சார்பண்புகள்)
3. அவரது பெயர்கள் மற்றும் அடையாளங்கள்
4. அவரது புறப்படுதல்

ஆ. | பரிசுத்த ஆவியானவரின் கடந்த கால ஊழியமும் பணியும் | ப. 147

1. பழைய ஏற்பாட்டில்
    - படைத்தல்
    - ஜீவனைத் தாங்கிப் பாதுகாத்தல்
    - ஊழியத்திற்கு அபிஷேகம் பண்ணி பெலப்படுத்துதல்/வல்லமை அளித்தல்
2. வெளிப்படுத்துதல் மற்றும் ஏவுதல் ஆகியவற்றில்
3. கிறிஸ்துவின் வாழ்வில்
    - கன்னியிடமிருந்து பிறப்பு
    - ஊழியத்திற்கு அபிஷேகம் செய்வித்து வல்லமை அளித்தல்
    - பரிகார மரணம்
    - உயிர்த்தெழுதல்
4. புதிய ஏற்பாட்டுக் காலங்களில் நடபடிகள்
   வரைபடம் நடபடிகளில் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுதல்

இ. | பரிசுத்த ஆவியானவரின் தற்கால ஊழியமும் பணியும் | ப. 155

1. பொதுவாக இழந்து போகப்பட்ட உலகத்திற்கு
    - பாவத்தை உணர்த்துதல்
    - கிறிஸ்துவை மகிமைப்படுத்துதல்
    - பொல்லாங்கைக் கட்டுப்படுத்துதல்
2. நிறுவன முறையில் சபைக்கு
    - சாட்சியளிக்க மற்றும் ஊழியம் செய்ய வல்லமை அளித்தல்
    - சுவிசேஷப் பிரசங்கத்தைச் செயல் வலியுள்ளதாக்குதல்
    - விசுவாசிகளை சபையில் ஞானஸ்நானப் படுத்துதல்
    - ஆவிக்குரிய வரங்களைப் பகிர்ந்தளித்தல்
    - ஆவிக்குரிய வளர்ச்சியைச் சாத்தியமாக்குதல்
    - கிறிஸ்துவின் சரீரத்தை ஒருமைப்படுத்துதல்
    - ஐக்கியத்தைப் பேணி வளர்த்தல்

3. தனிப்பட்ட வகையில் விசுவாசிகளுக்கு
- விசுவாசிகளைக் கிறிஸ்துவுடன் அடையாளப்படுத்துதல்
- மறுவுருவாக்குதல்
- பாவத்திலிருந்து சுத்திகரித்து தூய்மைப்படுத்துதல்
- பரிசுத்தமாக்குதல்
- முழுமையாகவும் நிரந்தரமாகவும் உள்ளாக வாசம் பண்ணுதல்
- இரட்சிப்பை முத்திரையிட்டு உத்தரவாதப்படுத்துதல்
- இரட்சிப்பை உறுதிப்படுத்துதல்
- வல்லமைக்கு நிரம்புதல்
- கிறிஸ்துவைப் போன்று கனிகளை உண்டாக்குதல்
- மனதை ஒளியூட்டுதல்
- விசுவாசிகளுக்காக ஜெபித்தல்
- கள்ள ஆவிகளையும் உபதேசங்களையும் பகுத்தறிதல்
- முன் சென்று வழி நடத்துதல்
- போதித்தல்

குறிப்பு: ஆவியானவரின் ஞானஸ்நானம், உள்ளாக வாசம் பண்ணுதல் மற்றும் நிரம்புதல் பற்றி

ஈ. பரிசுத்த ஆவியானவரின் எதிர்கால ஊழியமும் பணியும் — ப. 159

1. மகா உபத்திரவத்தின் காலத்தின் பொழுது
2. ஆயிரவருட அரசாட்சியின் பொழுது

5. தூதர்கள் - துதரியல் — (ப. 160- 179)

அறிமுகம்

அ. தூதர்களின் தோற்றம் — ப. 160

ஆ. தூதர்களின் இயல்பு — ப. 160

இ. தூதர்களின் வகை — ப. 162

- வரிசை நிலை, அமைப்பு முறை மற்றும் வகைகள்
- விசேஷித்த தூதர்கள்
- இரு வகுப்புகள்
  - தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்
  - விழுந்து போனவர்கள்

ஈ. தூதர்களின் ஊழியம் — ப. 165

- பொதுவாக
- தேவனுக்கு

- கிறிஸ்துவுக்கு
- இரண்டாம் வருகையில்
- நடபடிகளில் சபைக்கு
- இனங்களுக்கு/நாடுகளுக்கு
- விசுவாசிகளுக்கு

உ. **விழுந்துபோன தூதர்கள்** ப. 168

1. விழுதல் விவரிக்கப்படுதல்

2. சாத்தான்
   - அவனது உண்மை நிலை
     - பழைய ஏற்பாட்டில்
     - புதிய ஏற்பாட்டில்
   - அவனது பெயர்கள்
   - அவனது பட்டப் பெயர்கள்
   - அவனது இயல்பு
   - அவனது ஆளுமைத்தன்மை
   - அவனது (ஆளுகை) வட்டாரம்
   - அவனது யுக்தி
     - தேவனைப் பொறுத்தமட்டில்
     - கிறிஸ்துவைப் பொறுத்தமட்டில்
     - அவிசுவாசிகளைப் பொறுத்தமட்டில்
     - விசுவாசிகளைப் பொறுத்தமட்டில்
   - சாத்தானைத் தேவன் எவ்விதம் பயன்படுத்துகின்றார்
   - சாத்தானை விசவாசிகள் எவ்விதம் எதிர்க்கின்றனர்

3. அசுத்த ஆவிகள்
   - அவைகளின் உண்மை நிலை
   - அவைகளின் இயல்பும் வேலையும்
   - அசுத்த ஆவிகளின் நிலை
   - அசுத்த ஆவி பிடித்தல்

ஊ. **தூதர்களின் முடிவு நிலை** ப. 178

1. அசுத்த ஆவிகளின் நிலை
2. தூதர்கள்

6. **மனிதன் மானிடவியல்** (ப. 179 -201)

அ. **மனிதனின் தொடக்கம்** ப. 180

1. நாத்திகவாதப் பரிணாமம்

- திறவுகோல் கருத்துக்கள்
- பிரதான குறைகள்
- ஆத்திகவாதப் பரிணாமத்தின் மீதான குறிப்புகள்

2. ஆத்திகவாத படைப்பு
    - அஸ்திபாரமான 3 சத்தியங்கள்
    - பின்வருபவை பற்றி வேதாகமம் போதிப்பது என்ன?
        - உலகத்தின் படைப்பு
        - படைப்பு பற்றிய மற்ற கண்ணோட்டங்களின் மீதான குறிப்புகள்
        - மனிதனின் படைப்பு
        - தேவனுடைய சாயலாக மனிதன் படைக்கப்பட்டான்

ஆ. மனிதனின் இயல்பு — ப. 190

1. அறிமுகம்
2. பொருள் ரீதியான அம்சங்கள்
    - சரீரம் அல்லது மாம்சம்
3. பொருள் அல்லாத அம்சங்கள்
    - ஆவி
    - ஆத்துமா
    - இருதயம்
    - மனம்/சிந்தை
    - சித்தம்
    - மனச்சாட்சி

இ. மனிதனின் வீழ்ச்சி — ப. 195

- மனிதனின் தொடக்க நிலை
- மனிதன் சோதனைக்குட்படுதல்
- வீழ்ச்சி
- வீழ்ச்சியின் விளைவுகள்
- நியாயத் தீர்ப்புகள்
- மனிதனில் தேவனுடைய சிதைவுபட்ட சாயல்

7. பாவம் பாவவியல் — (ப. 202- 216)

அ. பாவத்தின் உண்மை நிலை — ப. 202

- பாவம் பற்றிய தவறான கண்ணோட்டங்கள்

ஆ. பாவத்தின் தொடக்கம் — ப. 204

இ. பாவத்தைப் பற்றிய விளக்கமும் பாவத்தின் இயல்பும் — ப. 205

- பாவத்தைப் பற்றிய விளக்கம்

- பாவத்தைப் பற்றிய விவரணம்
- குறிப்பிட்ட பாவங்கள்

ஈ. பாவத்தின் இயல்பும் யுக்தியும் — ப. 210

- வஞ்சிக்க
- அடிமைப்படுத்த மற்றும் கட்டுப்படுத்த
- அழிக்க

உ. பாவத்தின் விளைவுகள் — ப. 211

- தேவனிடமிருந்து பிரிக்கப்படுதல்
- பாவங்களில் மரித்தல்
- தீர்க்கப்படுதல்
- நம்பிக்கையின்றி, இழந்து போகப்படுதல்
- ஆதாமுக்குள்
- சாத்தானுடைய அரசில் ஒரு உறுப்பினர்
- நித்திய அக்கினிக் கடலுக்கு நியமிக்கப் படுதல்

ஊ. பாவமும் அவிசுவாசியும் — ப. 213

- பாவ இயல்பை சுதந்தரித்தல்/சுதந்தரிக்கப்பட்ட பாவ இயல்பு
- சுமத்தப்பட்ட பாவம்
- சொந்தப் பாவங்கள்

எ. பாவமும் விசுவாசியும் — ப. 125

8. இரட்சிப்பு இரட்சிப்பியல் — (ப. 217-240)

அ. இரட்சிப்பின் தேவை — ப. 217

1. மனிதனின் இழந்து போகப்பட்ட தன்மை
2. மனிதன் தன்னைத் தானே இரட்சிக்க முடியாத நிலை
3. தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ள மனிதனின் முயற்சிகள்

ஆ. தேவனுடைய அளிப்பு/ஈவு

1. தேவனுடைய முதல் முயற்சி
2. இரட்சிப்பின் அஸ்திபாரம் (தேவனே)
   - தேவனுடைய அன்பு
   - தேவனுடைய இரக்கம்
   - தேவனுடைய கிருபை
3. இரட்சிப்பின் ஆதாரம்/அடிப்படை (சிலுவை)
4. இரட்சிப்பின் வழிகள் (விசுவாசம்)
   - பழைய ஏற்பாட்டு இரட்சிப்பு
   - புதிய ஏற்பாட்டு இரட்சிப்பு
   - விசுவாசத்தின் அர்த்தம்
   - விசுவாசத்தின் குறிக்கோள்
   - விசுவாசத்தின் நிறைவான தன்மை
   - மனந்திரும்புதல் மற்றும் விசுவாசம் ஆகியவற்றின் உறவு
   - கர்த்தத்துவ இரட்சிப்பின் சில வடிவங்களின் தவறுகள்

இ. இரட்சிப்பில் தேவனுடைய தேர்ந்தெடுத்த நோக்கம் ப. 225

- அழைத்தல்
- முன் குறித்தல்
- முன்னறிதல்

ஈ. இரட்சிப்பில் பரிசுத்த ஆவியானவரின் பணி ப. 227

உ. பரிகாரத்தின் இயல்பும் விரிவளவும் ப. 228

- பரிகாரத்தின் இயல்பு
  - தியாகமானது
  - பதிலாக ஆனது
  - போதுமானது
  - நிறைவானது/இறுதியானது
  - நிலையானது
- பரிகாரத்தின் விரிவளவு
  - சிலுவையில் கிறிஸ்துவின் ஊழியத்தின் 3 அம்சங்கள்
    - ஒப்புரவாக்குதல்
    - மீட்பு
    - சினம் தனித்தல்
  - வரைபடம் : 3 கண்ணோக்கக் கருத்துக்களில் இருந்த இரட்சிப்பு

ஊ. இரட்சிப்பின் விளைவுகள் ப. 234

- இரட்சிப்பின் பயன்கள்
  1. நீதியாக்கப்படுதல்
  2. பாவங்களுக்கு மன்னிப்பு
  3. மறு உருவாக்கப்படுதல்
  4. பரிசுத்தமாக்கப்படுதல்
  5. பின்வருவனவற்றிலிருந்து விடுதலை
     - பாவத்தின் அடிமைத்தனம்
     - பாவத்தின் ஆக்கினைத் தீர்ப்பு
     - பாவத்தின் வல்லமை மற்றும் பாவத்தின் இயல்பு
     - பாவத்தின் தண்டனை
     - பிரமாணத்தின் பிணைப்பு/கட்டு
     - மரண பயம்
  6. கிறிஸ்துவுக்குள் நித்திய ஜீவனைப் பெறுதல்
  7. பரிசுத்த ஆவியானவரின் வரம் அருளப்படுதல்
  8. தேவனுடைய இராஜ்யத்திற்கு மாற்றப்படுதல்
  9. தேவனுடைய பிள்ளையாக சுவிகரிக்கப்படுதல்
  10. கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர் என்று அறிவிக்கப்படுதல்
  11. தேவனுக்கு சிநேகிதராக்கப்படுதல்
  12. ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதிக்கப்படுதல்

13. கிறிஸ்துவுக்குள் வைக்கப்படுதல் மற்றும் அவர் உள்ளாக வாசம் பண்ணுதல்
14. நித்திய பாதுகாப்பு
15. இரட்சிப்பின் உறுதிப்பாடு
16. மகிமைப்படுத்தப்பட நியமிக்கப்படுதல் மற்றும் கிறிஸ்துவுக்குநிச்சயிக்கப்படுதல்

9. சபை - சபையியல் (ப. 240- 275)

அ. சபையின் இயல்பு ப. 241

1. விளக்கம்
2. உலகளாவிய சபை
3. உள்ளூர் சபை

ஆ. சபையின் தொடக்கம்/தோற்றம் ப. 242

1. புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்ட ஒரு இரகசியம்
2. சபையின் அஸ்திபாரம்
   அ. கிறிஸ்து
   ஆ. அப்போஸ்தலர்கள்
   இ. தேவனுடைய வசனம்
3. பெந்தெகொஸ்தேயன்று தொடக்கங்கள்

இ. சபையின் நோக்கம் ப. 243

1. சீஷர்களாக்க மற்றும் பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படிய
2. ஒன்று கூடிக் கூட
3. ஆவியானவரின் வல்லமையினால் ஊழியம் செய்ய
4. உலகத்தில் கிறிஸ்துவின் ஊழியத்தை நிறைவாக்க
5. உலகத்தில் நீதியை வளரச் செய்ய
6. சபையைக் கிறிஸ்துவின் மணவாட்டியாக ஆயத்தம் செய்ய
7. தேவனை மகிமைப்படுத்த

ஈ. உள்ளூர் சபையின் அலுவலர்கள் ப. 246

ஆவிக்குரிய தலைவர்கள் - மூப்பர்கள்

1. விளக்கங்கள்
   அ. ஆயர்
   ஆ. மூப்பர்
   இ. பாஸ்டர்
2. அலுவலர்களின் பொறுப்புகள்
3. எண்ணிக்கை
4. பணிகள்
5. தகுதிகள்
6. நியமனம்
7. பட்டமளித்தல்/திருநிலைப்படுத்துதல்

ஊழியம் செய்யும் தலைவர்கள் - உதவிக்காரர்கள்

1. பொதுக் கருத்து
2. நுட்பவியல் கருத்து
3. அலுவலின் தொடக்கம்
4. பணிகள்
5. தகுதிகள்
6. உதவிக்காரிகளாகப் பெண்கள்

சபையில் அலுவலர்கள் என்ற வகையில் பெண்களின் பங்கு

- பொதுவாக
- சபையில் பேசுதல்
- போதித்தல் அல்லது ஆண்கள் மேல் அதிகாரம் செலுத்துதல்
- முடிவுரை

உ. **உள்ளூர் சபையின் நிறுவன அமைப்பும் அரசு முறையும்/ஆளுகை முறையும்** ப. 256

1. பொதுவான கருத்து
2. சபை அரசாங்கத்தின் அடிப்படையான மூன்று வடிவங்கள்

- எப்பிஸ் கோப்பல் அல்லது படிநிலை வடிவம்
  அ. விளக்கம்
  ஆ. விவரணம்
  இ. வேதாகம அடிப்படை

- பிரிஸ்பட்டேரியன் அல்லது ஸ்தாபன வடிவம்
  அ. விளக்கம்
  ஆ. விவரணம்
  இ. வேதாகம அடிப்படை

- சபையார் என்ற வடிவம்
  அ. விளக்கம்
  ஆ. விவரணம்
  இ. வேதாகம அடிப்படை

முடிவுரை

ஊ. உள்ளூர் சபையின் மேலாணைகள் ப. 260

1. பொதுவாக
   - விளக்கம்
   - திருநிலையுடன் உறவு
2. அறிந்துணரப்பட்ட மேலாணைகள்
   - கர்த்தருடைய பந்தி
   - ஞானஸ்நானம்
3. கர்த்தருடைய பந்தி மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின் தனிச் சிறப்புகள்
4. அறிந்துணரப்பட்ட மேலாணைகள் அக்கறையுடன் கவனிக்கப்படுதல்

அ. கர்த்தருடைய பந்தி (திருவிருந்து)

1. தோற்றம்/தொடக்கம்
2. பொருட்கள்
3. சொல்வழக்கியல்
4. அர்த்தம் மற்றும் தனிச் சிறப்பு
   அ. நினைவு கூரும் கண்ணோட்டம்
      - நினைவாகச் செய்தல்
      - ஐக்கியம்
   ஆ. ரோமன் கத்தோலிக்கக் கண்ணோட்டம்
   இ. லுத்தரன் கண்ணோட்டம்
   ஈ. சுவிங்கிலியக் கண்ணோட்டம்
   உ. சீர் திருத்தக் கண்ணோட்டம்
5. செயல்படுத்துதலின் வகையும் முறையும் கால அளவும்
6. முடிவுரை

ஆ. ஞானஸ்நானம்

1. விளக்கம்
2. தோற்றம்/தொடக்கம்
3. அர்த்தம் மற்றும் நோக்கம்
4. வகை/முறை
   - தெளித்தல் அல்லது ஊற்றுதல்
   - முழுக்காட்டுதல்
5. ஞானஸ்நானம் பெறுபவர்கள்

எ. தேவனுடைய தீர்க்கதரிசனத் திட்டத்தில் சபையின் எதிர்காலம் ப. 272

ஏ. சபை பற்றிய புதிய ஏற்பாட்டின் திறவுகோல் வசனப் பகுதிகள் ப. 274.

10. எதிர்கால விஷயங்கள் முடிவியல் (ப. 275- 311)

அறிமுகம் ப. 275

- முடிவியலின் இயல்பு
- நிறைவேறாத தீர்க்கதரிசனத்தை ஏன் படிக்க வேண்டும்
- தேவனுடைய தீர்க்கதரிசனத் திட்டத்தில் இஸ்ரவேல்

அ. சபையின் பேரானந்தம் ப. 283

1. பேரானந்தத்தின் விளக்கம்
2. பேரானந்தத்தின் கால அளவு
3. பேரானந்தத்தின் பிரதான கண்ணோட்டங்கள்
   - உபத்திரவத்திற்குப் பிந்திய நிலை
   - உபத்திரவத்திற்கு முந்திய நிலை
4. பேரானந்தத்தைத் தொடர்ந்து பரலோகத்தில் சபை
   - விசுவாசிகளின் ஊழியங்களுக்கு "bema" இருக்கை நியாயத் தீர்ப்பு
   - ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து

ஆ. 7 ஆண்டுகள் மகாப் பெரிய உபத்திரவம் ப. 289

இ. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ப. 292

- ஆயிரமாண்டு அரசாட்சிக்குப் பின்
- ஆயிரமாண்டு அரசாட்சியில்
- ஆயிரமாண்டு அரசாட்சிக்கு முன்

ஈ. ஆயிரமாண்டு அரசாட்சி ப. 297

உ. சாத்தான் கட்டவிழ்க்கப்படுதல் கடைசிக் கலகம் ப. 300

ஊ. சரீர உயிர்த்தெழுதல் ப. 301

- கிறிஸ்து
- இரட்சிக்கப்பட்டவர்கள்
  - பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள்
  - புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள்
  - உபத்திரவ காலப் பரிசுத்தவான்கள்
- இரட்சிக்கப்படாதவர்கள்

எ. **நியாயத் தீர்ப்புகள்** ப. 302

- விசுவாசிகளுக்கு
- இரட்சிக்கப்படாதவர்களுக்கு
- சாத்தானுக்கு/அசுத்த ஆவிகளுக்கு

ஏ. **மனிதரின் அடைவிடம்** ப. 305

1. *தற்காலிகமானது*
   - *சரீர உயிர்த்தெழுதலுக்கு முன்பு*
     - *பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள்*
     - *பழைய ஏற்பாட்டு காலத்தில் இரட்சிக்கப்படாதவர்கள்*
     - *புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள்*
     - *புதிய ஏற்பாட்டு காலத்தில் இரட்சிக்கப்படாதவர்கள்*
2. *மனிதரின் இறுதி அடைவிடம்*
   - *இரட்சிக்கப்படாதவர்கள்*
   - *இரட்சிக்கப்பட்டவர்கள்*

ஐ. **நித்திய நிலை** ப. 308

- அவிசுவாசிகளுக்கு
- விசுவாசிகளுக்கு

I. அறிமுகம்

அ. இறையியலின் இயல்பு

- விளக்கங்கள்

  – **இறையியல்** - இது தவிர்க்கப்படவோ அல்லது பயப்படவோ வேண்டிய வார்த்தையல்ல; "இது தேவனைப் பற்றிய படிப்பு" என்று மட்டுமே அர்த்தப்படுகின்றது.

  – **உபதேசம்** - இது நல்ல (ஆரோக்கியமான) போதனை என்று அர்த்தப்படுகின்றது.

  தீத்து 2:1 பின்வரும் கட்டளையைக் கொடுக்கின்றது:

  "நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு"

  எனவே இறையியலைப் படித்தல் என்பது தேவனைப் பற்றிய ஆரோக்கியமான போதனையை (உபதேசத்தை) தீர்மானிக்க என்பதற்காகும், இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனெனில் தேவனைப்பற்றி அறியும்படியும் அவரைத் தனிப்பட்ட வகையிலும் அனுபவரீதியாகவும் அறியும்படியும் வேத வசனங்கள் நம்மை வற்புறுத்துகின்றன.

  எரே. 9:23- 24
  யோவா. 17:3
  பிலி. 3:7 -9
  2 பேது. 3:18

- இறையியலின் வகைகள்

  இறையியல் ரீதியான படிப்பில் 3 பிரதான வகைகள் உள்ளன:

  – **வேதாகமரீதியான இறையியல்** –
  இது தேவனைப் பற்றி வேதாகமத்தின் எல்லா அல்லது குறிப்பிட்ட எழுத்தாளரோ அல்லது புத்தகமோ போதிப்பது என்ன என்பதில் கவனம் செலுத்துகின்றது (எ.கா. கிறிஸ்துவின் தெய்வீகத்துவம் பற்றி யோவான் என்ன போதிக்கின்றார்; சபையைப் பற்றி எபேசியர் நிருபம் என்ன போதிக்கின்றது, முதலியன)

  – **அமைப்பு ரீதியான இறையியல்** –
  இது தேவனைப் பற்றியும் அவரது பணிகள்/கிரியைகள் பற்றியும் வேதாகமம் முழுவதும் போதிக்கின்ற படிப்பின் மீது முறையான வரை நெறிப்படுத்துதல் மற்றும் தொடர்புபடுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றது.

- வரலாற்று ரீதியான இறையியல் –
  இது வரலாற்றின் வித்தியாசப்பட்ட காலகட்டங்களில் சபையின் (பழைமைவாத மற்றும் எதிர்வாத) உபதேச நம்பிக்கைகளின் மீது கவனம் செலுத்துகின்றது. வரலாற்று ரீதியான இறையியல் என்பது சபை வரலாறு என்ற பாட நூல் 9ல் எடுத்துரைக்கப்படும்.

வேதாகம உபதேச ஆராய்வு என்ற இந்தப் பாடமானது பிரதானமான பத்து உபதேசப் பிரிவுகளில் வேதாகமம் என்ன போதிக்கின்றது என்பதைப் படிப்பதன் மூலம் அமைப்பியல் ரீதியான வேதாகமே இறையியலை சுருக்கமான நடையில் முன்னிலைப்படுத்தும்.

★ குறிப்பு: இந்தப் பாடத்தில் இதன் எழுத்தாளர் முன்னிலைப் படுத்துகின்ற போதனை நிலைப்பாடுகள் மற்றும் முடிவுகள் எல்லாவற்றையும் ஒப்புக் கொள்ளும்படி மாணவர்கள் கேட்டுக் கொள்ளப் படுவதில்லை. இருப்பினும், வேத வசனங்களின் போதனைகளை மாணவர்கள் கவனமாய்ப் படிப்பதின் அடிப்படையில் தங்கள் முடிவுகளையும் நிலைப்பாடுகளையும் அடையும்படி பலமாய் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

ஆ. படிப்பின் முறை மற்றும் நோக்கம்

- <u>இந்தப் பாடத்தின் அணுகுமுறை</u>

நாம் வேதாகம உபதேசத்தைப் பொதுத்துவத்தலின் நிலைப்பாட்டினால் பின்வரும் வழிமுறைகளின் மூலம் கற்றுக் கொள்ள நாடுவோம்:

- வேத வசனத்தின் பாடப் பகுதியை அடிப்படையில் படித்தல்.
- நமது படிப்பில் இருந்து முடிவுகளைப் பெறுதல்
- முறையான நடையில் விளைவுகளை ஒழுங்கமைத்தல்.
- நமது கண்டறிதல்களின் மறை கருத்துக்களைப் புரிந்து கொள்ள முயற்சித்தல், தேவனைப் பற்றிய அறிவு முழுவதையும் நம்மால் தீர அறிய முடியாது என்பதையும், அவரை (தேவனை) சீரான, முறையான ஒரு இறையியல் அமைப்புக்குள் எல்லைப்படுத்த முடியாது என்பதையும் உணர்ந்தறிதல்.

நமது அணுகுமுறையானது பின்வருவனவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது:

- வேத வசனங்களின் சாதாரணமான, நேரடிப் பொருள் விளக்கங்கள்
- வேதாகம வெளிப்பாட்டின் படிப்படியான வளர்ச்சி இயல்பு அதாவது புதிய ஏற்பாடு என்பது பழைய ஏற்பாட்டை நிறைவு செய்வதாகவும் முழுமையாக்குவதாகவும் உள்ளது. ப.ஏ. இன்றி பு.ஏ.வை முற்றிலுமாகப் புரிந்து கொள்ள முடியாது.
- அமைப்பியல் ரீதியான வேதாகம இறையியலை வளரச் செய்ய மைய (திறவுகோல்) வசனப் பகுதிகளைப் பயன்படுத்துதல்.

- <u>அஸ்திபாரமான 3 கருத்துக்கள்:</u>

தேவனைப் பற்றி ஒவ்வொருவரும் சிலவற்றை நம்புகின்றனர், எ.கா.,

நாத்திகவாதி - தேவன் இல்லையென்று நம்புகின்றார்.

கடவுள் மறுப்புவாதி - தேவன் இருந்தாலும் அவரைப் பற்றி நாம் அறிய முடியாதென்று நம்புகின்றார்.

ஆத்திகவாதி - தேவன் இருக்கின்றார் என்று நம்புகின்றார்.

வேதாகம உபதேசத்தின் இந்தப்படிப்பானது பின்வரும் அஸ்திபாரமான மூன்று கருத்துக்கள் அல்லது யூகங்களின் மேல் கட்டப்பட்டுள்ளது:

1. தேவன் இருக்கின்றார்
   ஆதி. 1:1
2. தேவன் அறியப்பட முடியும்
   யோவா. 17:3
3. இயேசு கிறிஸ்து என்ற நபரிலும், ஏவப்பட்டதாக உள்ள வேதாகமத்திலும் (எனவே இது தவறற்றதாகவும், அதிகார முடையதாகவும் உள்ளது) தேவன் தம்மையே வெளிப் படுத்தியிருக்கின்றார்.
   எபி 1:1 -3
   2 தீமோ. 3:16
   யோவா. 1:18

- <u>வழிகாட்டும் 4 கொள்கைகள்</u>

இணைத்தன்மை - உபதேசங்களைச் சரியான வகையில் இணைவு படுத்து வதற்காக, அவைகளுக்குள்ளும், அவைகளுக்கிடையிலும் உள்ள உறவுகளை நாம் படிப்போம் (எ.கா. கிறிஸ்துவியலானது முடிவியலுடன் எவ்விதத்தில் உறவு படுகின்றது).

சமானத்தன்மை - ஒரு உபதேசத்தை ஒரு தலைப்பட்சமாகப் பற்றியிராதபடிக்கு "தேவனுடைய முழு ஆலோசனையையும்" முடிவு செய்வதற்கு/தீர்மானிப் பதற்கு நாம் பஏ மற்றும் புஏ ஆகியவற்றின் வேதவாக்கியங்களினுடைய மைய வசனப் பகுதிகள் யாவற்றையும் படிப்போம்.

சீரான தன்மை - மைய வசனப் பகுதிகள் மற்றும் உபதேசக் கருத்துக்கள் எல்லாவற்றையும் நாம் இசைவு படுத்தும்படி நாடுவோம் (எ.கா. கிறிஸ்துவின் மனித்துவம் எதிர் தெய்வீகத்துவம்).

மிகச் சரியான தன்மை - வசனம் என்ன கூறுகின்றது என்பதன் அடிப்படையில் வேதாகமத்தின்படி சரியானதைக் காண நாம் கடும் முயற்சி செய்வோம்.

- <u>கிறிஸ்தவ விசுவாசத்தின் 5 அடிப்படைகள்:</u>

பழைமைக் கிறிஸ்தவமானது பின்வரும் அடிப்படை நம்பிக்கைகளை வரலாறு முழுவதிலும் உறுதியாகப் பற்றிக் கொண்டுள்ளது:

1. கன்னியிடமிருந்து கிறிஸ்துவின் பிறப்பு.
2. கிறிஸ்து செலுத்திய பதில் நிவாரணப்பலி
3. கிறிஸ்துவின் தெய்வீகத்துவம்
4. வேத வசனத்தின் ஏவுதல்
5. கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதல் மற்றும் இரண்டாம் வருகை

கிறிஸ்தவமானது மேற்கண்ட ஐந்து சத்தியங்களின் மீதுதான் அமைந்துள்ளது.

- ஒரு நல்ல இறையியல் மாணவருக்கான இன்றியமையாத எண்ணப் போக்குகள்

    - தேவனுடைய வசனத்தை ஊக்கத்துடன் படிக்க ஒரு விருப்பம்.
    - வேத வசனத்தின் ஏவுதல், பிழைப்பற்ற தன்மை மற்றும் அதிகாரமுடைமை ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளுதல்.
    - திறந்த மனது.
    - போதிக்கக் கூடிய ஒரு ஆவி.
    - பரிசுத்த ஆவியானவரின் உட்கண்ணோக்கு மற்றும் ஒளியூட்டுதல் ஆகியவற்றைச் சார்ந்திருத்தல்.
    - தேவனுக்கு இன்னும் முழுமையாகக் கீழ்ப்படிவதற்காக, அவரை அதிகம் முழுமையாக அறிந்து கொள்ள விருப்பம்.
    - தேவன் தம்மைப் பற்றி அறியப்படுவதற்கு அனுமதிப்பார் என்ற மேன்மையான ஒரு நம்பிக்கை.

    எபி. 11:6; 1 நாளா. 28:9

- உபதேசத்தைப் படிப்பதன் நோக்கம்

இறையியலைப் படிப்பதன் நோக்கம் தேவனைப் பற்றி அதிகம் அறிவுடையவராக இருப்பதற்கு மட்டுமல்ல. ஆனால் பண்பிலும் நடக்கையிலும் இன்னும் அதிகமாய் அவரைப் போல் ஆவதற்காகவும் ஆகும்.

தேவனைப் பற்றிய சரியான நம்பிக்கையானது தேவனுக்கு சரியான வகையில் பதில்செயல் செய்வதற்கும், வாழ்வில் தக்க நடக்கையைக் கொண்டிருப்பதற்கும் வழி நடத்துகின்றது. நீங்கள் ஒரு பாஸ்டராக இருப்பதால் தவறான உபதேசத்தை மறுப்பதற்கு நீங்கள் சரியான உபதேசத்தை அறிவது மிகவும் இன்றியமையாததாக உள்ளது. ***தீத்து 1:9***

இறையியல் = **நீதியாக வாழ்வதற்கு வழி நடத்துகின்ற, தேவனைப் பற்றிய சரியான சிந்தனை. கொலோ. *1:9 10***

தேவனைப் பற்றி நீங்கள் உண்மையில் நம்புவது என்ன என்பதை முடிவு செய்யும்படியாக இறையியலானது உங்களைக் கட்டாயப்படுத்துகின்றது.

★நாம் தேவனைப் பற்றிய சரியான சிந்தனைகளைக் கொண்டிருக்கும் பொழுது, அவரது சாயலுக்கு ஒப்பானவர்களாய் இருக்கும் நிலையில் நாம் உள்ளோம்.★

II. பிரதான பத்து உபதேசங்கள்

1. தேவன் ஏற்புடைய இறையியல்

அ. தேவன் யார் அல்லது எப்படிப்பட்டவர்?

வேதாகம உபதேசங்களின் நமது படிப்பை நாம் தொடங்குகையில், தேவனைப் பற்றிய நமது சொந்தக் கருத்தில் உண்மையில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்ன என்பதை நாம் அக்கறையுடன் கவனிப்பது அவசியமாகும்.

பழைமைவாதியும், சுவிசேஷத்துவ இறையியலாளரும், எழுத்தாளருமான J.I. Packer அவர்கள் பின்வரும் வழியில் கேள்வி கேட்டார்:

"நீங்கள் தேவன் என்று கூறும் பொழுது நீங்கள் அர்த்தப்படுத்துவது என்ன?" அல்லது இதை வேறு வழியில் கூறுவதென்றால், "தேவன் யார் அல்லது எப்படிப்பட்டவர்?"

பயிற்சி: தேவனைப் பற்றி ஒன்றும் அறியாத ஒருவரிடம் நீங்கள் பேசிக் கொண்டிப்பதாகக் கொண்டால், தேவனைப் பற்றி நீங்கள் விளக்குவதை அல்லது விவரிப்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் எழுதவும்:

____

____

____

<u>தேவனைப் பற்றி வேதாகமரீதியில் இல்லாத புகழ் பெற்ற சில விவரிப்புகள்:</u>

சில மக்களுக்கு தேவன் என்பவர் பின்வருமாறு உள்ளார்:

"வாழ்வின் சக்தி"
"நமது இருப்பின் அடிப்படை"
"அன்பின் கொள்கை"
"நிறைவான உண்மை நிலை"
"தாய் இயல்பு"
"மனித படிகள்"
"நாம் அறிந்த எதையும் போன்றவரல்ல"

ஆ. உலகத்தின் பிரதானமான கண்ணோட்டங்கள்

உலகத்தின் மிகச் சிறந்த பல கண்ணோட்டங்களின் அடிப்படையிலேயே தேவனைப் பற்றிய இந்தக் கருத்துக்களில் பெரும்பான்மை யானவைகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன:

1. <u>ஒரு தெய்வக் கொள்கை</u>
   நபர்த்துவமற்ற உறுதியான ஒரு கொள்கை, சக்தி அல்லது நோக்கம் என்பது இந்த அண்டத்தின் மீது செயலாற்றுகின்றது.
2. <u>இரு தெய்வக் கொள்கை</u>
   உலகில் சமமான ஆனால் ஒன்றுகொன்று எதிரெதிராக உள்ள இரண்டு

சக்திகள் உள்ளன நன்மை எதிர். தீமை; மனம் எதிர். பொருள்; ஆவிக்குரியது எதிர். சரீரத்திற்குரியது.

3. <u>மனிதவியல் கொள்கை</u>
மனிதன் தனது சொந்த "கடவுளாய்" இருக்கின்றான், எல்லா உயிர்களிலும் அவனே மிக உயர்ந்தவனாய் உள்ளான் மற்றும் மனித முயற்சி, சாதனை ஆகியவைகளைச் சுற்றியே வாழ்வானது மையம் கொண்டுள்ளது.

4. <u>நாத்திகக் கொள்கை</u>
தேவன் இல்லை

5. <u>கடவுள் மறுப்புக் கொள்கை</u>
தேவன் ஒருவர் இருக்கின்றார் என்றால், அவர் நிச்சயமாய் அறியப்பட முடியாது.

6. <u>பொருள் முதல் வாதக்கொள்கை</u>
ஒவ்வொன்றையும் விளக்கப் படுத்தக்கூடிய இயற்கையான அல்லது பொருள் சார்ந்த சக்திகள் அல்லது சட்டங்கள் உலகத்தில் செயல் படுகின்றன.

7. <u>மேலான தெய்வக் கொள்கை/எல்லாமே தெய்வம் என்ற கொள்கை</u>
தேவன் ஒவ்வொரு பொருளுமாய் உள்ளார் மற்றும் ஒவ்வொரு பொருளும் தேவனாக உள்ளது (தேவன்=உலகம்). கூடுதலாக, தொடர்புடைய இரண்டு கருத்துக்கள் மேலான தெய்வக் கொள்கை என்று அறியப்படுகின்றன. இவைகள் உலகம் தேவனுக்குள் இருக்க, தேவன் உலகத்தை விட மேலானவராக இருக்கின்றார் என்று போதிக்கின்றன (அதாவது, அண்ட மானது தேவனுடைய உடலைப் போன்றதாக உள்ளது, அது தேவனைத் தனது மனமாகக் கொண்டுள்ளது); மற்றும் செயல்முறை இறையியல் என்பது, தேவனும் இந்த அண்டமும் மாற்றத்தின் செயல்பாட்டில் உள்ளன மற்றும் புதிதான காரண காரிய உறவுகள் அனுபவிக்கப்படுகையில் அதிகம் சிக்கலும் நிறைவுத் தன்மையும் உடையவைகளாய் ஆகின்றன என்று போதிக்கின்றது.

8. <u>பல தெய்வக் கொள்கை</u>
மாறுபட்ட பல தெய்வங்கள் உள்ளன, அவைகளில் சில மற்றவற்றைக் காட்டிலும் அதிகம் தனிச்சிறப்பு வாய்ந்தவைகளாய் இருக்கின்றன.

9. <u>பல வித நம்பிக்கைகளின் கொள்கை</u>
மாறுபட்ட பல நம்பிக்கைகள், நடைமுறைகள் மற்றும் தெய்வங்களை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் இணைத்துக் கொள்ளுதல்.

10. <u>கடவுள் விலக்கக் கொள்கை/இயற்கைச் சமயக் கொள்கை</u>
தேவன் எல்லாவற்றையும் படைத்து தம்முடைய இயற்கைச் சட்டங்களின் படி அவைகள் இருப்பதற்கு அனுமதிக்கின்றார், ஆனால் அவர் அதனிடம் தலையிடுவதோ அல்லது தனிப்பட்ட வகையில் அதில் ஈடுபடுவதோ இல்லை. தொடர்புடைய இரு கருத்துக்கள் இவ்விடத்தில் குறிப்பிடத் தக்கவைகளாய் உள்ளன. புலன்கடந்த தன்மை என்பது தேவன் தாம் படைத்த முறைகளுக்கு மேலாக, பெரியவராக, அப்பால், புறம்பே உள்ளார் என்ற கருத்தாகும். உள்ளார்ந்த தன்மை என்பது தேவன் இந்த உலகத்தில் பிரசன்னமாகியிருந்து, தனிப்பட்ட வகையில் இதில் ஈடுபாடு கொள்கின்றார்.

11. <u>ஆத்திகக் கொள்கை</u>

நபர்த்துவமான ஒரு தேவன் இருக்கின்றார், அவர் புலன் கடந்தவராகவும், உள்ளார்ந்தவராகவும் இருக்கின்றார், மற்றும் அவரே இந்த அண்டத்தின் ராஜரீகப்படைப்பாளராகவும், ஆளுபவராகவும், நிலைநிறுத்துபவராகவும் இருக்கின்றார். ஆத்திகக் கொள்கையைப் பற்றிக் கொண்டிருப்பவர்கள் பின்வரும் இரு கண்ணோட்டக் கருத்துக்களில் ஒன்றிலிருந்து அவ்விதம் பற்றிக் கொண்டுள்ளனர் இயற்கையான ரீதியில் அல்லது வேதாகமரீதியில், இந்த வித்தியாசங்கள் பிற்பாடு விளக்கப்படும்.

<u>குறிப்பு:</u> கிறிஸ்தவமற்ற உலக மதங்களில் பெரும்பாலானவைகள் மேலான தெய்வக் கொள்கையின் மீதோ அல்லது பல தெய்வக்கொள்கை யின் மீதோ கட்டி எழுப்பப்பட்டுள்ளன.

உபதேசம் பற்றிய நமது படிப்பானது வேதாகமரீதியான ஆத்திகக் கொள்கையின் மீது ஸ்தாபிக்கப்பட்டதாக உள்ளது.

பயிற்சி: வேதாகமத்திலிருந்து நீங்கள் கற்றறிந்திராத வகையில், தேவனைப் பற்றி நீங்கள் தனிப்பட்ட முறையில் அறிந்து புரிந்து கொண்டுள்ளது என்ன என்பதை விவரிக்கவும்.

____

____

____

____

____

____

இ. தேவனுடைய இருப்பும் அறிவும்

தேவனைப் பற்றிய அறிவதற்கு வலிவார்ந்த 3 ஆதார மூலங்கள் உள்ளன:

1. <u>மனிதத்துவமான காரண அறிவும் உள்ளுணர்வும்</u>
இது தேவனைப் பற்றி மனிதன் சிந்திக்க, கனவு காண அல்லது யூகிக்க முடியும் என்பதைக் குறிப்பிடுகின்றது.

2. <u>பாரம்பரியம் மற்றும் அனுபவம்</u>
இது சபை சட்டங்கள், அறிக்கையிடுதல்கள் மற்றும் பாரம்பரியங்கள் உட்பட கடந்த காலத்தில் இவ்விடத்தில் மற்றவர்கள் தேவனைப் பற்றி அனுபவித்த அல்லது முடிவு செய்த விஷயங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

3. <u>வெளிப்படுத்துதல்</u>
இது புரிந்து கொள்ளக்கூடிய வழி முறைகளில் மனிதருக்குத் தேவன் தம்மையே அறியப்படுத்தியதைக் குறிப்பிடுகின்றது.
   - அவருடைய படைப்பினால்
   - தனிப்பட்ட மனிதர்களுக்கு
   - தம்முடைய குமாரனில்
   - தம்முடைய வசனத்தின் மூலமாக

   போன்ற வழிமுறைகளை அவர் கையாண்டுள்ளார்.

பயிற்சி: தேவனைப் பற்றிய அறிவிற்கான இந்த 3 ஆதார மூலங்களில் எது மிகவும் நம்பகத் தன்மையும் மிகச் சரியானதுமாக உள்ளது? ஏன்?

____

____

____

____

★ பொதுவான இயல்லது இயல்பான வெளிப்பாடு (மனிதன், வரலாறு, படைப்பு) மற்றும் விசேஷித்த வெளிப்பாடு (இயேசு கிறிஸ்து மற்றும் வேதாகமம்) ஆகியவற்றின் மூலம் தேவன் தம்மையே வெளிப்படுத்தத் தேர்ந்து கொண்டதினாலேயே தேவனைப் பற்றி நாம் நிச்சயமாய் அறிந்துள்ளவைகளைக் கற்றுக் கொண்டுள்ளோம். பொதுவான மற்றும் விசேஷித்த வெளிப்பாடுகளைப் பற்றி நாம வேதாகமவியலில்

ஆனால் எல்லைக்குட்பட்ட மனிதன் எல்லையற்ற தேவனைப் பற்றி அறிவது உண்மையிலேயே சாத்தியமா?

ஆம், ஏனென்றால்:

— தேவன் மனிதனுக்குத் தம்மை வெளிப்படுத்துவதைத் தேர்ந்து கொண்டார்.
யாத். 3:1 -6, 13:14.
உபா. 29:29

— தேவன் தம்முடைய சொந்த ஆவிக்குரிய சாயலில் மனிதனை அவனது சிந்தை, விருப்பம், உணர்வுகள் மற்றும் ஆளுமைத் தன்மை ஆகியவற்றின் மூலம் அவருடன் தொடர்பு கொள்ளக் கூடிய திறமையுடன் படைத்தார்.
ஆதி. 1:26 -27

— புரிந்து கொள்ளக் கூடிய மொழியில் தேவன் மனிதருடன் செய்தித் தொடர்பு கொண்டார்.
ஆதி. 2:15- 17
எபி. 1:1 2

— மனிதத் தேவனைத் தேடி அவரைக் கண்டறிய வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்.
எரே. 29:13
1 நாளா. 28:9

— தேவனை நாம் அறிந்து அதிகம் முழுமையாகப் புரிந்து கொள்ளும்படியாகப் பரிசுத்த ஆவியானவரை அவர் நமக்கு அருளியிருக்கின்றார்.
1 கொரி. 2:10 -13

மீண்டும், தேவனைப் பற்றிய நமது பாடமானது அவருடைய வசனத்தின் விசேஷித்த வெளிப்பாடுகளின் மூலமாக தேவன் தம்மைப் பற்றி வெளிப்படுத்தியுள்ளது என்ன என்பதின் மீதே அடிப்படையான கவனம் செலுத்தும்.

• தேவனுடைய இருப்பிற்கு ஆத்திகவாதிகளால் அளிக்கப்படும் இயற்கை சார்ந்த விவாதங்கள்

தனிச் சிறப்பான நான்கு விவாதங்களைப் பயன்படுத்தி பல நூற்றாண்டு களினூடே மனிதர் தேவனுடைய இருப்பை விளக்கப்படுத்தி, நிரூபிக்க நாடியுள்ளார். ஒவ்வொரு விவாதத்திற்குப் பின்பும் அவ்விஷயத்தைப் பற்றி வேதாகமம் எடுத்துரைப்பது என்ன என்பதைக் கவனியுங்கள்.

1. <u>வானவியல் ரீதியானது</u> - அண்டம் என்பது ஒரு விளைவாக உள்ளது (அதாவது, அதன் இருப்பு மறுக்க முடியாததாக உள்ளது) இது, போதுமானதாக உள்ள, மற்றும் நிலைநிறுத்துகின்ற ஒரு முதல் காரணத்தை வேண்டிக் கேட்கின்றது.
[ஒவ்வொரு விளைவும் ஒரு போதுமான காரணத்தைக் கொண்டிருக்க வேண்டும்]

அ. ஏதோ ஒன்று இருக்கின்றது (உலகம்)
ஆ. ஒன்றுமில்லாமை என்பது ஏதோ ஒன்றை உண்டாக்க முடியாது.
இ. ஏதோ ஒன்று (யாரோ ஒருவர்) அதற்குக் காரணமாய் இருக்க வேண்டும்.

அண்டம் என்பது பின்வரும் மூன்றில் ஒன்றினால் ஏற்பட்டிருக்க வேண்டும்:

(1) சுயமாக - ஏற்பட்டிருக்க வேண்டும் - சாத்தியமற்றது (தானாகவே ஏற்பட்டிருப்பதற்கு அதுதான் இருப்பதற்கு முன்பே இருந்திருக்க வேண்டும்).

(2) காரணமற்ற - வகையில் ஏற்பட்டிருக்க வேண்டும் - நித்தியம் மற்றும் எல்லையற்ற தன்மை இல்லாத வரையில் சாத்தியமற்றது.

அல்லது

(3) இன்னொன்றினால் ஏற்பட்டிருக்க வேண்டும்

மற்றும் காரணமற்ற காரணங்களினால் நீங்கள் ஒரு எல்லையற்ற பின்வளர்ச்சித் தொடரைப் பெற்றிருக்க முடியாது என்பதால், இது அனைத்தையும் தொடங்கிய போதுமான, காரண மற்ற முதல் காரணம் இருந்திருக்க வேண்டும்.

[தேவன் எல்லையற்றவராய் நித்தியமானவராய் இருப்பதைக் காண்பிக்கின்றது]

ஆதி. 1:1

யாத். 20:11

எபி. 11:3

2. முடிவுக்காரணக் கொள்கை ரீதியானது - அண்டத்தின் வடிவமைப்பு, ஒழுங்கமைவு மற்றும் சிக்கலான அமைவு ஆகியவை, எல்லாவற்றிற்கும் முதற் காரணமான ஒரு பகுத்தறிவுள்ள, புத்திக் கூர்மையுள்ள, நோக்கம் நிறைந்த படைப்பாளரைச் சுட்டிக் காட்டுகின்றன. கடிகாரம் என்பது கடிகாரம் செய்பவர் இருப்பதை வேண்டிக் கேட்கின்றது என்ற விவாதம்.

அ - வடிவமைப்பும் ஒழுங்கு முறையும் ஒரு வடிவமைப்பாளரை மறைமுகமாய்க் குறிக்கின்றன.

ஆ - நாம் வடிவமைப்பைக் காணுகின்றோம்.

இ - ஒரு வடிவமைப்பாளர் இருக்க வேண்டும்.

[தேவன் புத்திக்கூர்மையுள்ளவராய் நோக்கம் நிறைந்தவராய் இருப்பதைக் காண்பிக்கின்றது]

ஆதி 1:1 -27

சங். 19:1

யோபு 38 -39 (விசேஷமாக 38:1- 7)

ரோமர் 1:19 -20

3. மானிடவியல் ரீதியானது - மனிதரின் ஆளுமைத் தன்மை (மனம், சித்தம், உணர்வுகள்) மற்றும் ஒழுக்க இயல்பு ஆகியவை, படைப்பாளரான ஒரு தேவன் தம்மிலே நபர்த்துவமும் ஒழுக்கமும் உடையவராய் இருக்கின்றார் என்பதைப் பிரதிபலிக்க வேண்டும் [படைப்பானது படைப்பாளரைப் பிரதிபலிக்கின்றது].

[தேவன் நபர்த்துவமும் ஒழுக்க உணர்வும் உடையவராயிருப்பதைக் காண்பிக்கின்றது]

ஆதி. 1:27

ரோமர் 2:12-15

ரோமர் 1:18, 21-23

சங். 8:3-6

4. மெய்ப் பொருளின் தொடக்கவியல் ரீதியானது ஒரு முழுமையான/ முழு நிறைவான இருப்பு பற்றிய கருத்தானது பெரும்பாலும் ஒவ்வொரு மனிதரின் மனதிலும் உள்ளது, மனிதருக்குப் புறம்பே உள்ள முழுமையான/முழு நிறைவான இருப்பிலிருந்தே இந்தக் கருத்து வந்திருக்க வேண்டும், அந்த முழுமையான/முழு நிறைவான இருப்புதான் எல்லாவற்றிற்கும் முதற் காரணமாக உள்ளது. [தேவனைக் குறித்து, மனிதருடைய கருத்தின் இயல்பானது அவரது (தேவனுடைய) இருப்பை வேண்டிக் கேட்கின்றது.]

[தேவன் முழு நிறைவானவராக இருப்பதைக் காண்பிக்கின்றது]
ஆதி. 3:5
ஏசா. 55:8-9
சங். 14:1
உபா. 32:4
பிர. 3:11
அப். 17:24-28

★ வேதாகமமானது தேவனுடைய இருப்பைக் குறித்து உண்மையில் விவாதிப்ப தில்லை, ஆனால் தேவன் இருக்கின்றார் என்று யூகிக்கவும் மற்றும் அவரது இருப்பை முற்றாக செயல்விளக்கப்படுத்தவும் மட்டுமே செய்கின்றது. ★

தேவனுடைய இருப்பை ஏற்றுக் கொள்ளுதல் என்பது விசுவாசத்தைப் பொறுத்த விஷயமாகும்.

எபி. 11:6

பயிற்சி: தேவனுடைய இருப்பிற்கான இந்த இயற்கை ரீதியான விவாதங் களுக்கு எவையேனும் மதிப்பு இருந்தால், அம்மதிப்பு என்ன? எது மிகவும் பலமானதாக உள்ளது? ஏன்?

ஈ. தேவனுடைய இன்றியமையாத இயல்பு

தேவன் யார் மற்றும் அவர் எப்படிப்பட்டவராய் இருக்கின்றார் என்பவைகளை நாம் புரிந்து கொள்ள முயற்சிக்கத் தொடங்கும் பொழுது, பின்வரும் ஒரு எளிய கேள்வியுடன் நாம் தொடங்க வேண்டும்:

தேவனைத் தேவனாக்குவது எது? அல்லது இதை இன்னொரு வழியில் கேட்பதென்றால் தேவனுடைய சாரம்சம் என்னவாக உள்ளது?

பதில் அளிக்க மிகவும் கடினமான மற்றும் ஒருவேளை சாத்தியமற்ற கேள்வியாக இது இருக்கையில், இது இவ்விடத்தில் கேட்கப்பட வேண்டியதாகவும் நல்லதொரு தொடக்க நிலையாகவும் உள்ளது:

மனிதரிடத்தில் இல்லாத யாவும் தேவனாக உள்ளது!

- தேவனைப் பற்றிய இறையியல் விளக்கங்கள்

  <u>தேவனைப் பற்றிய மதரீதியான சில இறையியல் விளக்கங்கள்:</u>

  <u>மார்மன்கள்</u> - "தேவன் முழு நிறைவானவராக உள்ளார், நேர்ப் பொருளான மாம்சம் மற்றும் எலும்புகள் சரீரத்துடன் மேன்மைப் படுத்தப்பட்ட மனிதனாக அவர் இருக்கின்றார்"

  <u>கிறிஸ்தவ அறிவியல்</u> - "தேவன் நித்தியமானவராக, நபர்த்துவமற்ற கொள்கையாக, சட்டமாக, சத்தியமாக, ஆவியாக மற்றும் கருத்தாக இருக்கின்றார்"

  <u>வெஸ்ட்மினிஸ்ட்டர் அறிக்கை</u> - "உயிருள்ள, மெய்யான ஒரே தேவன் இருக்கின்றார், அவர் இருப்பில் எல்லையற்றவராக மற்றும் முழு நிறைவானவராக, மிகவும் தூயதான ஒரு ஆவியாக, காணப்படாதவராக, சரீரமோ, உறுப்புக்களோ அல்லது உணர்வுகளோ அற்றவராக, மாற்றப்பட முடியாதவராக, மிகப் பெரியவராக, நித்தியமானவராக, புரிந்து கொள்ள முடியாதவராக, சர்வ வல்லவராக, மிகவும் ஞானமுள்ளவராக, மிகவும் பரிசுத்தமானவராக, மிகுந்த சுயாதீனமுள்ளவராக, மிகுந்த முடிவான மெய்மையாக, தமது சொந்தமான மாறாத்தன்மையும் நீதியும் உள்ள சித்தத்தின்படியான ஆலோசனையின்படியே எல்லாக் கிரியைகளையும் செய்கின்றவராக, கிருபையுள்ளவராக, இரக்கம் நிறைந்தவராக, நீடிய பொறுமையுள்ளவராக, நன்மையும் சத்தியமும் பெருகினவராக, அக்கிரமத்தை மீறுதலை மற்றும் பாவத்தை மன்னிப்பவராக இருக்கின்றார்; ஊக்கத்துடன் அவரைத் தேடுகின்றவர்களுக்குப் பலனளிக்கின்றார்; தம்முடைய நியாயத் தீர்ப்புகளில் மிகவும் நீதியும் பயங்கரமும் உள்ளவராய் இருக்கின்றார்; எல்லாப் பாவத்தையும் வெறுக்கின்றவராயும் மற்றும் குற்றத்தை எவ்வழியிலும் சுத்திகரிக்காதவராயும் இருக்கின்றார்."

  <u>பேப்டிஸ்டு விசுவாசம் மற்றும் செய்தி</u> - "உயிருள்ள மெய்யான ஒரே ஒரு தேவன் இருக்கின்றார். அவர் புத்திக் கூர்மையுள்ள, ஆவிக்குரிய மற்றும் நபர்த்துவமான இருப்பாக, அண்டத்தைப் படைத்தவராக, மீட்பவராக, பாதுகாப்பவராக, மற்றும் அதை ஆளுபவராக அவர் உள்ளார். பரிசுத்த மற்றும் எல்லா பிற முழுமைத் தன்மைகளிலும் அவர் எல்லையற்றவராக உள்ளார். மிக உயர்ந்த அன்பும், பயபக்தியும் மற்றும் கீழ்ப்படிதலும் அவருக்கே உரித்தாக்கப்பட வேண்டியது."

<u>வெஸ்ட்மினிஸ்ட்டர் குறுகிய ஞானோபதேசம்</u> - வினா நான்கு: "தேவன் யார்? தேவன் ஆவியாக, எல்லையற்றவராக, நித்தியமானவராக மற்றும் தம்முடைய இருப்பு, ஞானம், வல்லமை, பரிசுத்தம், நீதி, நற்தன்மை மற்றும் சத்தியம் ஆகியவற்றில் மாற்றப்பட முடியாதவராக இருக்கின்றார்."

புகழ்பெற்ற சில இறையியலாளர்கள்:

<u>ஆன்செல்ம்</u> - "அவரைக் காட்டிலும் பெரியதொன்றைச் சிந்திக்க முடியாது"

<u>ஹொய்க்கேமா</u> - "தேவன் என்பவர் எளிமையானவராக, முழு நிறைவான வராக, முற்றிலும் ஆவிக்குரியவராக, எல்லையற்ற முழுமைத்துவங்களின் நபர்த்துவமான இருப்பாக, உலகம் எல்லாவற்றிலும் முழுமையாக உள்ளார்ந்தவராக இருக்கின்றார், இருப்பினும் எல்லாப் பொருட் களுடனும் தொடர்புள்ள வகையில் அவர் புலன் கடந்தவராகவும் இன்றிமையாத நிலையில் உள்ளார்."

<u>பெர்க்காஃப்</u> -"தேவன் ஒருவராக, முழுமைத்தன்மையுடையவராக, மாற்ற முடியாதவராக மற்றும் அவரது ஞானம் மற்றும் அறிவு, அவரது நற்தன்மை மற்றும் அன்பு அவரது இரக்கம் மற்றும் கிருபை, அவரது நீதி மற்றும் பரிசுத்தம் ஆகியவற்றில் எல்லையற்றவராக இருக்கின்றார்."

<u>ஸ்ட்ராங்</u> - "தேவன் என்பவர் எல்லாவற்றிற்கும் மூல ஆதாரம், ஆதரவு மற்றும் முடிவு ஆகியவற்றைக் கொண்டுள்ள எல்லையற்ற மற்றும் முழுநிறை வான ஆவியாக இருக்கின்றார்."

<u>லைட்னர்</u> - "தேவன் ஆவியாய் இருக்கின்றார். அவர் வாழ்கின்ற மற்றும் செயல்படுகின்ற தெய்வீக நபராய் இருக்கின்றார், அவர் தமது இருப்பு, வல்லமை, பரிசுத்தம், நீதி, நற்பண்பு, சத்தியம் மற்றும் அன்பு ஆகியவற்றில் எல்லையற்றவராகவும் மாற்றப்பட முடியாதவராகவும் இருக்கின்றார். அவர் தம் சொந்த சாயலில் தாம் படைத்த நபர்களுடன் ஐக்கியத்தை மகிழ்வுடன் அனுபவிக்க முடியும், மற்றும் அவர்களைத் தமது கிருபையினால் மீட்கவும் முடியும், மற்றும் அவர் எப்பொழுதும் தமது முழு நிறைவான இயல்புக்கு இசைவாகவே செயல்படுகின்றார்."

பயிற்சி: இந்த விளக்கங்களில் எதை நீங்கள் அதிகம் ஒப்புக் கொள்கின்றீர்கள்? ஏன்?

தேவனைப் பற்றி நாம் முழுமையாய் விளக்க முடியாதிருக்கையில், வேதாகமம் கூறுவதன் அடிப்படையில் நாம் அவரைப் பற்றி விவரிக்க முடியும் என்று நம்மில் பலர் அநேகமாய் முடிவு செய்வோம்! ஏனெனில் தேவன் அறியப் படுபவராகவும் அறியப்பட முடியாதவராகவும் இருக்கின்றார்.

சங். 145:3-18
யோவா. 17:3
ரோமர் 11:33
ஏசா. 11:9
யோபு 11:7-8

- **தேவனுடைய சாரம்சம்**

தேவனை தேவனாக்குகின்ற 5 விஷயங்கள்

1. தேவன் ஆவியாய் இருக்கின்றார்.
2. தேவன் உயிருள்ளவராய் இருக்கின்றார்.
3. தேவன் முழு நிறைவானவராய் இருக்கின்றார்.
4. தேவன் தனிச் சிறப்பான தன்மையுள்ளவராய் இருக்கின்றார்.
5. தேவன் நித்தியமானவராய் இருக்கின்றார்.

தேவனைப் பற்றிய உண்மையான விஷயங்கள் தேவனுடைய குறிப்பிடத்தக்க பண்புகள் அல்லது குணநலன்கள் என்று அடிக்கடி அழைக்கப்படுகின்றன. A.W. டோஸர் அவர்கள், "தேவனுடைய குறிப்பிடத் தக்க பண்பு என்பது தேவன் தாம் கொண்டிருப்பதாகத் தம்மைப் பற்றியே ஏதாதொரு வழியில் வெளிப்படுத்திய எதுவும் ஆக உள்ளது" என்று கூறுகின்றார்.

இந்த முதல் 5 குறிப்பிடத் தக்க பண்புகள் தேவனுடைய இன்றியமையாத இயல்பை விவரிக்கின்றன.

1. தேவன் ஆவியாய் இருக்கின்றார்.

திறவுகோல் வசனம்: **யோவான் 4:23 -24**

அர்த்தம்: தேவன் தம்முடைய இன்றியமையாத இயல்பில் ஆவியாய் இருக்கின்றார்.

<u>விளக்கம்:</u>

- கிறிஸ்துவில் தேவன், மனித சரீரத்தின் வரையறைகளை எடுத்துக் கொள்ளத் தேர்ந்தெடுத்திருப்பினும் தேவன் தம்முடைய சாராம்சத்தில் சரீரப்பிரகாரமானவராகவோ அல்லது பொருளாகவோ இருப்பதில்லை.
- தேவன் தம்மை கிறிஸ்துவில் வெளிப்படுத்தத்தேர்ந்து கொண்டதைத் தவிர, அவர் (தேவன்) காணப்படாதவராகவே இருக்கின்றார்.
  யோவா. 1:18
  கொலோ. 1:15
  1 தீமோ. 1:17
  1 தீமோ. 6:14-16
  1 யோவா. 1:1-2
- மனிதரால் உண்டாக்கப்பட்ட எந்த உருவத்தினாலும் தேவனை மிகச் சரியாகப் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது (விக்கிரகார தனைக்கு எதிரான தடையைக் கனம் பண்ணுதல்).
  யாத். 20:3-4
- தேவன் தம்முடைய சாராம்சத்தில் எளிமையைக் கொண்டுள்ளார் (பிரிவினையின்மை அல்லது பகுதிகளாக இன்மை) மற்றும் ஒருமைப் பாட்டையும் கொண்டுள்ளார்.
  உபா. 6:4

பயிற்சி: தேவன் இன்றியமையாத ஆவிக்குரிய தன்மையைத் தவிர, சரீரப் பிரகாரமாகவும் உள்ளார் என்றால் அது அர்த்தப்படுத்துவது என்ன?

____

____

____

____

____

2. தேவன் உயிருள்ளவராய் இருக்கின்றார்.

<u>திறவுகோல் வசனங்கள்:</u> ***யோவா. 5:26; யோபு 34:14- 15***

<u>அர்த்தம்:</u> உயிர் (ஜீவன்) என்பது தேவனுக்குள் இயல்பாக உள்ள ஒரு பண்பு ஆகும்.

- எல்லா உயிரும் தேவனிடமிருக்கும் ஆதார மூலத்திலிருந்து வருவதாகவும் பெறப்படுவதாகவும் உள்ளது

யோவா. 1:3-4
அப். 17:24-28

- தேவன் சகல உயிர்களையும் நிலைநிறுத்துகின்றவராய் இருக்கின்றார்.
  கொலோ. 1:17
  ஏசா. 42:5

- தேவன் சகல உயிர்களையும் கொடுக்கிறவராகவும் எடுக்கிறவராகவும் இருக்கின்றார்.
  தானி. 5:23
  சங். 139:16

- நித்திய ஜீவன் என்பது இயேசு கிறிஸ்துவின் ஜீவனாக உள்ளது.
  1 யோவா. 5:11- 13

பயிற்சி: இந்தக் குறிப்பிடத்தக்க பண்பு (ஜீவன்) எவ்வகையில் மனிதரின் அர்த்தத்துடனும் நோக்கத்துடனும் உறவு படுகின்றது?

____

____

____

____

3. தேவன் முழுநிறைவானவராக இருக்கின்றார்.

திறவுகோல் வசனம்: **மத். 5:48**

அர்த்தம்: தேவன் எல்லா வகையிலும் முழுமையானவராக உள்ளார் மற்றும் அவர் எதிலும் குறைவு படுவதில்லை. தேவன் முற்றிலும் தவறற்றவராக உள்ளார். தேவன் முற்றிலும் உன்னதமான ஒரு நிலையில் இருக்கின்றார். தேவன் முழுமையும் சரியானவராகவும் மிகச் சரியானவராகவும் உள்ளார்.

விளக்கம்:

- தேவனுடைய கிரியைகள் முழு நிறைவானவைகளாக உள்ளன.
  உபா. 32:4

- தேவனுடைய வழிகள் முழுநிறைவானவைகளாக உள்ளன.
  2 சாமு. 22:31

- தேவனுடைய வசனம் முழு நிறைவானதாக உள்ளது. **சங். 18:30**
- தேவனுடைய பிரமாணங்கள் முழு நிறைவானவைகளாக உள்ளன. **சங். 19:7**

பயிற்சி: தேவன் முழு நிறைவானவராக இருத்தல் என்பது ஏன் முக்கிய மானதாக உள்ளது? அவர் அப்படி இல்லாதிருந்தால் என்ன?

____

____

____

____

4. தேவன் தனிச் சிறப்பான தன்மையுள்ளவராக இருக்கின்றார்.

திறவுகோல் வசனம்: **ஏசா. 40:25**

அர்த்தம்: தேவன் தனிப்பட நிற்கின்றார். அவரைப் போன்றவர் ஒருவரும் இல்லை அவர் இணையற்றவராக மற்றும் ஒப்பற்றவராக, தமது படைப்புக்கு மேலானவராக இருக்கின்றார்.

விளக்கம்:

- கர்த்தர் மட்டுமே தேவனாக இருக்கின்றார.
  2 சாமு. 7:22
- கர்த்தர் மட்டுமே மகா பெரியவராகவும் வல்லமை நிறைந்தவராகவும் இருக்கின்றார்.
  எரே. 10:6
  ஏசா. 40:10
- கர்த்தர் மட்டுமே நீதியுள்ளவராக இருக்கின்றார்.
  சங். 51:4
  யோபு. 33:12
  ஆதி. 18:25
  ஏசா. 45:19
- கர்த்தர் மட்டுமே ஞானமுள்ளவராக இருக்கின்றார்.
  தானி. 2:20

- கர்த்தர் மட்டுமே நல்லவராக இருக்கின்றார்.
  சங். 100:5
  மத். 19:7
- கர்த்தர் மட்டுமே ராஜரீகமுள்ளவராக இருக்கின்றார்
  தானி. 4:34 -35
- கர்த்தர் மட்டுமே பரிசுத்தமானவராக இருக்கின்றார்.
  1 சாமு. 2:2
- கர்த்தர் மட்டுமே உண்மை நிறைந்தவராக இருக்கின்றார்.
  2 தீமோ. 2:13
- கர்த்தர் மட்டுமே இரட்சிக்க முடியும்
  ஏசா. 59:16
  லூக். 18:26-27

பயிற்சி: *தேவன் தனிச் சிறப்பான தன்மையுடையவர் அல்ல என்றால் அதன் மறைகருத்துக்கள் என்னவாயிருக்கும்?*

____

____

____

____

5. **தேவன் நித்தியமானவராக இருக்கின்றார்.**

திறவுகோல் வசனம்: ***சங். 90:2***

அர்த்தம்: தேவன் இப்பொழுதும், எப்பொழுதும் மற்றும் என்றென்றும் இருக்கின்றவராக உள்ளார். அவர் துவக்கமும் முடிவும் அற்றவராக இருக்கின்றார்.

விளக்கம்:

- தேவன் காரணமற்றவராக, எல்லாவற்றிற்கும் முதற் காரணராக இருக்கின்றார்.
  1 தீமோ. 6:16
  ஏசா. 41:4
  எபி. 11:3

- தேவன் தாமாகவே இருப்பவராக உள்ளார்.
  யாத். 3:14
  யோவா. 1:1 2

- தேவன் சார்பற்றவராக /சுயாதீனமானவராக இருக்கின்றார்.
  ஏசா. 40:13- 14
  அப். 17:24 -28

- தேவன் காலத்தினால் வரையறைப்படுத்தப்படுவதில்லை.
  சங். 90:1-4

- தேவன் சார்ந்திருப்பவராக இருக்க முடியாது. **சங். 145:4, 13**

பயிற்சி: தேவன் நித்தியமானவராக இருப்பது என்பது ஏன் முக்கியமானதாக உள்ளது?

____

____

____

____

- தேவனுடைய முக்கியமான மற்ற பண்புகள் (இயல்புகள்)

தேவனுடைய பின்வரும் பண்புகள் ஏற்கனவே விவரிக்கப் பட்டுள்ளன இன்றியமையாத 5 பண்புகளைக் காட்டிலும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ முக்கியத்துவமுடையவை களாய் இருப்பதில்லை. ஆனால் தேவனுடைய இந்த மற்ற இயல்புகள் இன்றியமையாத முதல் 5 பண்புகளில் இருந்து பெருக்கெடுத்து வருபவையாக உள்ளன. மீண்டுமாக, இந்த இயல்புகள் என்பவை தேவனைப் பற்றி வேதாகமக் வெளிப் படுத்துகின்ற விஷயங்கள் உண்மையாய் இருக்கின்றன என்பதாக மட்டுமே உள்ளன.

தேவனுடைய இயல்புகளைப் பற்றிய சில உண்மைகளைச் சிந்தையில் தெளிவாய்க் காத்துக் கொள்வதும் கூட உதவி நிறைந்ததாக உள்ளது:

- எந்த ஒரு பண்பு மட்டும் தேவனை முழுமையாக விவரிப்பதில்லை.
- தேவனுடைய பண்புகள் யாவும் சமமானவைகளாய் உள்ளன, அதே வேளையில் அவை அவருடைய இயல்பிலும் உள்ளன.
- தேவன் ஒரு பண்பை வெளிப்படுத்துகையில் மற்றவைகளைக் கொண்டிராமல் நின்று விடுவதில்லை.
- தேவன் தம்முடைய பண்புகளில் மொத்தத்தைப் பார்க்கிலும் மகாபெரியவராக இருக்கின்றார்.

- தேவனுடைய பண்புகளைப் பற்றி நாம் கற்றுக் கொள்பவை யாவும் அவருடைய சுயமான வெளிப்படுத்துதலினாலேயே கற்றுக் கொள்கின்றோம்.
- தேவனுடைய பண்புகள் யாவும் உள்ளாக ஒன்றையொன்று சார்ந்தவைகளாகவும், ஒத்திசைவு உள்ளவைகளாகவும், ஒன்று மற்றதைச் சமானப்படுத்துவதாகவும் உள்ளன (சங். *62:11-12*ஐக் காணவும்)
- தேவனுடைய பண்புகள் அவரைப் பொறுத்த வரையில் ஒன்றுமற்றவைகள் ஆகும், ஆனால் அவர் யார் என்றும் அவர் எப்படிப்பட்டவர் என்றும் மட்டுமே அவை விவரிக்கின்றன.

6. பரிசுத்த தன்மை.

திறவுகோல் வசனங்கள்: ***1 சாமு. 2:2***
லேவி. 19:2
சங். 99:9
ஏசா. 6:1-8

அர்த்தம்: தேவன் ஒழுக்கரீதியாக மிகவும் மேன்மையானவராக உள்ளார், முற்றிலும் தூய்மையானவராக, பாவம் மற்றும் பொல்லாங்கிலிருந்து முழுவதும் பிரிந்துள்ளவராக இருக்கின்றார். பரிசுத்தமே தேவன் தெய்வீகமானவராகவும் மற்ற எல்லாரிலும் உயர்ந்த வகையில் மாறுபட்டவராகவும் ஆக்குகின்றது.

விளக்கம்:

- தேவன் பாவத்தின் மீது அங்கீகாரத்துடன் கண்ணோக்க முடியாது.
  ஆபா. 1:13
  சங். 5:4
- பாவமானது மனிதரைத் தேவனிடமிருந்து பிரிக்கின்றது.
  ஏசா. 59:2
  ரோமர் 3:10, 23
- தேவனுடைய தக்க வகையில் உறவு படுத்தப்பட்டுள்ள எதுவும் பரிசுத்தமாய் இருக்க வேண்டும்.
  1 பேது. 1:15-16
  2 கொரி. 7:1

பயிற்சி: பெரும்பாலான மக்கள் தேவனுடைய பரிசுத்தத்தை வினயமாய்க் கவனிக்காமலிருப்பது ஏன்?

____

____

____

____

7. புலன் கடந்த தன்மை

<u>திறவுகோல் வசனங்கள்:</u> **யோபு 11:7-8**
யோபு 37:22-23
ஏசா. 66:1-2
ஏசா. 35:5
சங். 113:4-6

<u>அர்த்தம்:</u> தேவன் தம் படைப்பு யாவற்றையும் விட உயர்ந்தவராக, மேலானவராக இருக்கின்றார்.

<u>விளக்கம்:</u>

- தேவன் தம்மையே வெளிப்படுத்தத் தேர்ந்து கொள்ளுதல் தவிர, அவர் புரிந்து கொள்ளப்படாதவராகவும் அணுகப்பட முடியாதவராகவும் இருக்கின்றார்.
  உபா. 29:29
  ரோமர் 11:33
  யோபு 26:14
  1 தீமோ. 6:16

- தேவனுடைய வழிகளும் சிந்தனைகளும் மனிதருடையவைகளை விட உயர்ந்தவைகளாகவும் மாறுபட்டவைகளாகவும் உள்ளன.
  ஏசா. 55:8- 9

- தேவன் தம்முடைய உயர்வான மாறுபட்ட வழிகளில் விசுவாசிகள் நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்.
  லேவி. 18:1-5
  2 கொரி. 10:2
  ரோமர் 12:2

பயிற்சி: தேவன் தம்முடைய படைப்புக்கு மேலானவராயிருத்தல் திறனாய்வுக்குரியதாய் உள்ளது/இடர்ப்பாடு மிக்கதாக உள்ளது என்பது ஏன்?

8. சுயநிறைவான தன்மை.

<u>திறவுகோல் வசனங்கள்:</u> ***அப். 17:24-25***
உபா. 32:39
யாத். 3:13-14
ஏசா. 40:13-14
ஏசா. 45:11-12
சங். 50:9-12
2 சாமு. 7:5-7

<u>அர்த்தம்:</u> தேவன் எக்காலத்திலும் இருக்கின்றார், அவராகவே இருக்கின்றார், ஆகையால் அவர் சார்பற்றவராக, சுய நிறைவானவராக மற்றும் எவரொருவரும் அல்லது ஏதொன்றும் தேவைப்படாதவராக இருக்கின்றார்.

<u>விளக்கம்:</u>

- தேவன் முற்றிலுமாகச் சுயாதீனமுள்ளவராகவும் எந்தத் தேவையையும் சாராதவராகவும் இருக்கின்றார்.

- தேவன் கட்டுப்பாடு உள்ளவர் அல்ல அல்லது எவருக்கும் ஏதொன்றும் கடன்பட்டவரும் அல்ல.
  ரோமர் 11:35-36
  யோபு 41:11

- தேவன் நம்மைத் தாமாகவே அழைக்கும் பொழுதோ அல்லது அவரது ஊழியத்தில் நம்மைப் பயன்படுத்தும் பொழுதோ அது அவர் அவ்விதம் செய்யத் தேர்ந்து கொண்டதாலேயே நடக்கிறது.
  யோவா. 6:65
  யோவா. 15:16

பயிற்சி: தேவன் பொதுவாக மனிதர் தேவைப்படதாவராகவும் குறிப்பாக நம்மைத் தேவைப்படாதவராகவும் இருக்கும் உண்மையின் மறைவான கருத்துக்கள் யாவை?

9. **முடிவற்ற தன்மை**

<u>திறவுகோல் வசனங்கள்:</u> ***1 இரா. 8:27***
சங். 145:3
எரே. 23:23- 24
ரோமர் 8:38- 39

<u>அர்த்தம்:</u> தேவன் வரையறுத்தல்கள் எல்லாவற்றிலுமிருந்து சுயாதீனமுள்ளவராக இருக்கின்றார். அவர் கட்டுப் படுத்துதல்கள் எதையும் அறிவதோ கொண்டிருப்பதோ இல்லை. அவருடைய பண்புகள் சாக்குப் போக்கு கூறப்படவோ அல்லது கறைப்படுத்தவோ முடியாதவைகளாகும்.

<u>விளக்கம்:</u>

- தேவன் ஒருக்காலும் களைப்படைவதோ அல்லது சோர்ந்து போவதோ இல்லை.
  ஏசா. 40:28- 29
- தேவனுடைய எல்லாப் பண்புகளும் முடிவற்றவைகளாய் உள்ளன, எ.கா. அன்பு.
  ரோமர் 8:31 -39
- தேவன் எவ்வகையிலும் கட்டுப்படுத்தப்படவோ அல்லது மறைக்கப்படவோ முடியாதவர் ஆவார்.
  தானி. 4:35
- தேவன் காலம், வெளி மற்றும் பொருள் ஆகியவற்றினால் கட்டப் பட்டவரல்ல.
  எபி. 7:3
  வெளி. 1:8
  சங். 145:13
- மனிதனிடம் இல்லாத யாவும் தேவன் கொண்டுள்ளவராய் இருக்கின்றார்.
  யோபு 38:1-3
  யோபு 40:1-2
  யோபு 42:1-3

பயிற்சி: தேவன் தம்முடைய பண்புகள் யாவற்றிலும் முடிவற்றவராக இருப்பது உண்மையில் அவருக்கு அவசியமாகும் என்பது ஏன்?

___

___

___

___

10. மாறாத தன்மை.

<u>திறவுகோல் வசனங்கள்:</u> **யாக். 1:17**
எண். 23:19
மல். 3:6
எபி. 1:10-12
எபி. 13:8

<u>அர்த்தம்:</u> தேவன் இன்னும் சிறந்தவராகவோ அல்லது மோசமான வராகவோ மாற முடியாது; தேவனுடன் ஒன்றையும் கூட்டவோ அல்லது அவரிடமிருந்து ஒன்றையும் குறைக்கவோ முடியாது.

<u>விளக்கம்:</u>

- தேவன் எப்பொழுதும் தமது பண்புக்கு முற்றிலும் இசைவாகவே செயல்படுகின்றார்.
- தேவன் உணர்வுகளினாலோ அல்லது சூழ்நிலைகளினாலோ செல்வாக்குச் செலுத்தப்படுவதில்லை.
  எசே. 24:14.
- தேவனுடைய எண்ணப் போக்குகளும் செயல்பாடுகளும் எப்பொழுதும் சீராகவே உள்ளன.
- தேவன் மேல் நம்பிக்கை வைக்கப்பட முடியும்
  1 சாமு. 15:29

பயிற்சி: தேவன் மாறாதவராய் இருப்பது ஏன் முக்கியமானதாக உள்ளது?

____

____

____

____

11. சர்வ வல்லமை.

<u>திறவுகோல் வசனங்கள்:</u> **எரே. 32:17**
சங். 77:14
சங். 145:6
லூக். 18:26-27
வெளி. 4:11

<u>அர்த்தம்:</u> தேவன் சகல வல்லமை, திறமை மற்றும் பலம் ஆகியவற்றைத் தமக்குள்ளாகவே கொண்டு செயல் படுத்துகின்றார்.

<u>விளக்கம்:</u>

- தேவனால் நிறைவேற்ற முடியாதது என்று ஒன்றும் இருப்பதில்லை.
- எல்லா வல்லமையும் தேவனிடமிருந்தே பெறப்படுகின்றது.
- தேவன் தம்முடைய வல்லமையினால் சகலத்தையும் நிலைநிறுத்து கின்றார். தேவன் தம்முடைய வல்மையை செயல்படுத்த அவர் பேசுதல் என்பது மட்டுமே தேவைப்படுகின்றது.
  ஆதி. 1:3

பயிற்சி: தேவனுடைய சர்வ வல்லமை என்பது எவ்வகையில் ஆறுதல் படுத்துகின்றது? எவ்வகையில் அது பயன்படுத்துவதாக உள்ளது?

____

____

____

____

12. எங்கும் நிறைந்திருக்கும் தன்மை.

<u>திறவுகோல் வசனங்கள்:</u> ***சங். 139:7-12***
எரே. 23:23-24
நீதி. 15:3

<u>அர்த்தம்:</u> எல்லா இடமும் தேவனுடைய பிரசன்னத்தில் உள்ளது.

<u>விளக்கம்:</u>

- தேவன் இல்லாத இடம் என்று ஒரிடத்திற்கும் நாம் செல்ல முடியாது.
- தேவன் எல்லாவற்றையும் எல்லாக் காலங்களிலும் காண்கின்றார்.

- இரகசியமான பாவங்கள் என்று எதுவும் இல்லை.
- தேவன் எப்பொழுதும் நம்முடன் இருக்கின்றார். **மத். 28:20**

பயிற்சி: தேவனுடைய எங்கும் நிறைந்திருக்கும் தன்மை உங்களை எவ்வகையிலாவது கவலைப்படுத்துகின்றதா? ஏன்?

____

____

____

____

13. எல்லாம் அறிந்த தன்மை.

<u>திறவுகோல் வசனங்கள்:</u> **ஏசா. 46:10**
1 யோவா. 3:20
சங். 139:1 6, 13-16
யோபு 37:16
சங். 147:5
எசே. 11:5
மத். 6:8
யோவா. 21:17
2 தீமோ. 2:19

<u>அர்த்தம்:</u> தேவன் இதற்கு முன் இருந்துள்ள, இப்பொழுதுள்ள, இனி இருக்கப் போகின்ற, இருந்திருக்க கூடிய அல்லது சாத்தியமாயிருந்திருக்கக் கூடிய சகல விஷயங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் கடந்த, நிகழ், எதிர்கால மனிதர்கள், சாத்தியக் கூறுகள் அல்லது வலிவுகள் ஆகிய யாவற்றையும் அறிந்தும் புரிந்தும் இருக்கின்றார்.

<u>விளக்கம்:</u>

- ஏதொன்றும் தேவனுடைய அறிவுக்கு அப்பால் இருப்பதில்லை. **யோபு 28:23- 24**
- சகல விஷயங்களும் தேவனால் முழுமையாக அறியப்பட்டுள்ளன.
- தேவனைத் திகைப்படையச் செய்யவோ, அதிர்ச்சியடைய வைக்கவோ அல்லது காவலிலிருந்து எடுத்துப் போடவோ முடியாது

- தேவன் எப்பொழுதும் ஒவ்வொன்றிற்கும் முன்னதாகவே ஆயத்தமாக இருக்கின்றார்.

பயிற்சி: தேவனுடைய எல்லாம் அறிந்த தன்மை காரணச் செயலாக உள்ளதா? ஏன் அல்லது ஏன் இல்லை?

____

____

____

____

14. இராஜரீகத் தன்மை.

<u>திறவுகோல் வசனங்கள்:</u> **ஏசா. 46:8 -10**
தானி. 2:20- 21
தானி. 4:34 -35
சங். 103:19
நீதி. 16:4
பிர. 3:14 -15
ரோமர் 13:1 -2
எபே. 1:11

<u>அர்த்தம்:</u> தேவன் யாராக உள்ளாரோ, அதினால் அவர் தம்முடைய பூரணமான சித்தத்தின்படி எல்லாவற்றையும் ஆளுகை செய்யவும் கட்டுப்படுத்தவும் அதிகாரமும், உரிமையும், வல்லமையும் உடையவராய் இருக்கின்றார்.

<u>விளக்கம்:</u>

- தேவன் எல்லாவற்றையும் முழுமையாகக் கட்டுப்படுத்துகின்றார்.
  லூக். 8:22-25

- தேவன், நல்ல மற்றும் மோசமான எல்லா விஷயங்களையும் தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுத்துகின்றார்.
  ஆதி. 50:20
  ரோமர் 8:28

- தேவனுடைய படைப்பின் ஒரு பகுதி என்ற வகையில் நாம் தேவனுடைய இராஜரீக ஆளுகையுடன் ஒத்துழைக்க வேண்டியது அவசியம், அதற்கு எதிராகச் சண்டையிடக் கூடாது.
  சங். 46:10
  எரே. 18:1-6

பயிற்சி: தேவனுடைய இராஜரீகத்தின் வகையில், உலகத்தில் உள்ளவைகள் உண்மையில் எப்பொழுதாவது கட்டுப்பாட்டை விட்டு வெளிச் செல்ல முடியுமா? இது உங்களுக்குத் தனிப்பட்ட வகையில் எவ்விதம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது?

____

____

____

____

15. உண்மையுள்ள தன்மை.

<u>திறவுகோல் வசனங்கள்:</u> ***2 தீமோ. 2:13***
உபா. 7:9-10
புலம். 3:22-23
1 தெச. 5:23-24
1 இரா. 8:56

<u>அர்த்தம்:</u> தேவனுடைய செயல்பாடுகளும் எண்ணப் போக்குகளும் எப்பொழுதுமே அவருடைய பண்புக்கு ஒத்ததாகவே உள்ளன மற்றும் அவர் எப்பொழுதுமே தம்முடைய வாக்குத்தத்தங்களைக் காத்துக் கொள்கின்றார்.

<u>விளக்கம்:</u>

- தேவன் தம்முடைய ஆசீர்வாதத்தின் வாக்குத்தத்தங்கள் மற்றும் நியாயத்தீர்ப்பு ஆகியவற்றில் சமமான அளவு உண்மை நிறைந்தவராக உள்ளார்.
  வெளி. 20:6
  வெளி. 20:15
- தேவன் முற்றிலும் மற்றும் முழுமையாக சார்ந்திருக்கப்பட மற்றும் நம்பத் தகுதியாவனவராய் இருக்கின்றார்.
  சங். 121
- மனிதர்கள் தவற விட்டாலும் தேவன் உங்களை ஒருக்காலும் தவற விடமாட்டார்.
  சங். 146.

பயிற்சி: விசுவாசியின் விசுவாசம் எவ்விதத்தில் தேவனுடைய உண்மையுள்ள தன்மையுடன் தொடர்புடையதாக உள்ளது?

____

____

____

____

- தேவனைப் பற்றிய வேதாமத்தின் மற்ற விவரிப்புகள்:

பின்வரும் விவரிப்புகளைச் சிலர் தேவனுடைய குறிப்பிடத் தக்க இயல்புகள் அல்லது பண்புகள் என்று வகைப்படுத்துகையில், இவைகள் தேவன் தமது பண்புகளென்று மாறுபட்ட வழிகளில் விவரிப்பதாகவே அதிகமாகக் காணப்படுகின்றன.

16. தேவன் அன்பாக இருக்கின்றார்.

<u>திறவுகோல் வசனங்கள்:</u> ***சங். 145:17***
1 யோவா. 4:8-11
ரோமர் 5:6-8
நெகே. 1:5
சங். 136
1 கொரி. 13:1-13

<u>அர்த்தம்:</u> தேவன் எப்பொழுதுமே மற்றவர்களின் மிக உயர்ந்த நன்மையை நாடும்படியாகத் தன்னார்வத்துடன் தம்மையே அளிக்க உறுதிப்பாடு தருவதினால் தேவனுடைய பண்பின் செயல் விளக்கமாக இருப்பது அன்பு ஆகும்.

<u>விளக்கம்:</u>

தேவனுடைய அன்பானது
- தவறாததாக
- தகுதியின்றியே தரப்படுவதாக
- முடிவற்றதாக
- ஆழ்ந்த அறியப்படாததாக உள்ளது.

பயிற்சி:	தேவனும் உலகமும் அன்பினைக் கண்ணோக்கும் விதங்களுக்கிடையே உள்ளவேறுபாட்டை விவரிக்கவும்.

17. தேவன் ஒளியாயிருக்கின்றார்.

திறவுகோல் வசனங்கள்: ***1 யோவா. 1:5***
1 தீமோ. 6:16
2 கொரி. 4:4-6
ஏசா. 60:1-2
லூக். 2:29-32
யோவா. 1:4-5

அர்த்தம்: ஒளி என்பது தேவன் தம்மைப்பற்றிய ஒரு உண்மையான அறிவை, தமது இரட்சிப்பை, மற்றும் தம்முடைய ஒழுக்கரீதியான முழுமையான தூய்மையை அவரே வெளிப்படுத்துகின்றதினால் ஆன தேவனுடைய பண்பாக உள்ளது.

விளக்கம்:

- தேவன் தூய்மையான ஒளியாக இருக்கின்றார் அவருக்குள் இருளோ அல்லது பொல்லாங்கோ வாசம் பண்ணுவதே இல்லை.
- தேவனுடைய சுய வெளிப்பாட்டின் ஒளியானது இரட்சிப்பைச் சாத்தியமாக்குகின்றது.
  மத். 16:15-17
- வேதாகமத்தில் வெளிச்சம் என்பது சில வேளைகளில் பின்வருவனவற்றிற்கு எதிரிடையாகப் பயன்படுத்தப்படுகின்றது:
  - பாவம் ***(1 யோவா. 1:7)***
  - அறியாமை ***(ஏசா. 9:2)***
- ஒளியும் மற்றும் சத்தியமும் (ஒளி வீசச் செய்தல்/புரிந்து கொள்ளுதல்) ***(எபே. 4:17-18)*** ஆகியவை வேத வசனத்தில் அடிக்கடி ஒரு பொருள் பல சொற்களாகப் பயன் படுத்தப்படுகின்றன.

பயிற்சி: மனிதர்கள் தேவனுடைய ஒளியை எதிர்த்துக் கலகம் செய்வது ஏன்?

___

___

___

___

18. **தேவன் சத்தியமாக (உண்மையாக) இருக்கின்றார்.**

திறவுகோல் வசனங்கள்: ***தீத்து 1:2***
யோவா. 14:6
யோவா. 16:13
யோவா. 45:19

அர்த்தம்: தேவன் இருக்கின்ற, கூறுகின்ற மற்றும் செய்கின்ற ஒவ்வொன்றும் நிறைவான உண்மை நிலையை முற்றிலுமாக உறுதிப்படுத்துகின்றன.

விளக்கம்:

- தேவன் கூறுகின்ற எதுவும் முற்றிலும் சரியானதாக, துல்லிய மானதாக மற்றும் நம்பகமானதாக உள்ளது.
- தேவன் ஏதொன்றைப் பற்றியும் பொய்யுரைக்கவோ அல்லது தவறாகக் குறிப்பிடவோ முடியாது.
- தேவனுடைய வசனங்கள் எப்பொழுதுமே உண்மையான வைகளாய் உள்ளன.
  சங். 119:160
- தேவனுடைய வசனமாகிய வேதாகமம் துல்லியமானதாக, சரியானதாக மற்றும் தவறு எதுவும் அற்றதாக உள்ளது.
  யோவா. 17:17
- சத்தியமானது இயேசு கிறிஸ்துவில் உருவெடுத்துள்ளது
  யோவா. 1:14, 17; 1 யோவா. 5:20
- தேவனுடன் ஒப்புமையாகாதது எதுவும் தவறானதாக உள்ளது.
  1 யோவா. 4:4-6

பயிற்சி: தேவனுடையது போல சத்தியத்தின் முழுமையான தராதரம் ஒன்று இருக்க வேண்டியது முக்கியமாக உள்ளது என்பது ஏன்?

19. தேவன் நல்லவராக இருக்கின்றார்.

திறவுகோல் வசனங்கள்: ***சங். 34:8***
சங். 100:5
மத். 19:17
யாக். 1:17

அர்த்தம்: தேவன் உள்ளாகவே நல்லவராக இருக்கின்றார் மற்றும் அவர் தம் நோக்கிலிருந்து பயனுள்ள, பிரயோஜனமான, உபயோகம் நிறைந்த மற்றும் தகுதியான விளைவை நிறைவேற்ற சரியான நோக்கத்தை நாடச் செயல் படுகின்றார்.

விளக்கம்:

- தேவன் ஒரு பொழுதும் மோசமான ஒரு விளைவைக் கொண்டு வர நாடுவதில்லை.
- பொல்லாங்கானது தேவனிடமிருந்து தோன்றுவதில்லை
- தேவன் நம்மை ஒழுங்கு படுத்தும் போதும் கூட அதுவும் நமது நன்மைக்கானதாகவே உள்ளது.
  எபி. 12:10-11
- மோசமான விஷயங்கள் மற்றும் சூழ்நிலைகள் ஆகியவற்றைக் கூட தேவன் நல்ல விளைவுகளை நிறைவேற்றவே பயன் படுத்துகின்றார்.
  ஆதி. 50:20

- நமக்காகத் தேவனுடைய விருப்பம் என்பது எப்பொழுதுமே நன்மையினால் தூண்டப்படுகின்றது.
  மத். 7:9-11

பயிற்சி: தேவன் எப்பொழுதுமே நன்மையைத் தான் நிறைவேற்ற நாடுகின்றார் என்று அறிவது எவ்விதத்தில் உதவியாய் உள்ளது?

___

___

___

___

20. தேவன் ஞானமுள்ளவராக இருக்கின்றார்.

<u>திறவுகோல் வசனங்கள்:</u> **தானி. 2:20-21**
எரே. 10:12
யாக். 1:5
கொலோ. 2:2-3
சங். 111:10
யோபு 28:20-28
1 கொரி. 1:17- 2:16

<u>அர்த்தம்:</u> தேவன் மட்டுமே எல்லா விஷயங்களையும் புரிந்து கொண்டும், விரும்பும் விளைவை நிறைவேற்ற வாழ்வில் அவைகளை திறமையாகவும் ஏற்ற வகையிலும் எப்படி அந்த அறிவை நடைமுறைப்படுத்துவதென்றும் அறிந்தும் இருக்கின்றார். ஞானம் என்பது முழுமையாகப் புரிந்து கொண்டு, திறமையாக நடைமுறைப்படுத்தப்படும் அறிவாக உள்ளது.

<u>விளக்கம்:</u>

- தேவனின்றி மனிதர் உண்மையான ஞானத்தைக் கொண்டிருப்பதில்லை.
  யோபு. 38:1-2

- தேவனுடைய ஞானத்துடன் ஒப்பிடுகையில் மனித ஞானம் மதியீனமானதாகும்.
  1 கொரி. 1:25

- கிறிஸ்துவில் ஞானம் காணப்படுகின்றது.
  1 கொரி. 1:30

- வேத வசனம் நம்மை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்களாக்கக் கூடியதாக உள்ளது.
  2 தீமோ. 3:15
- ஞானத்தை உண்மையாக விரும்புபவர்கள் தேவனை நாட வேண்டும்.
  யோபு 28:20-28

பயிற்சி: *தேவனுடைய ஞானம் மனிதருடைய ஞானத்திலிருந்து எவ்விதத்தில் வேறுபடுகின்றது?*

____

____

____

____

21. தேவன் நியாயமுள்ளவராக இருக்கின்றார்.

<u>திறவுகோல் வசனங்கள்:</u> ***எசே. 18:4, 19-21, 29-30***
எரே. 9:24
செப். 3:5
மத். 20:1-16
சங். 89:14
அப். 17:29-31
ரோமர் 14:10-12
1 பேது. 2:23

<u>அர்த்தம்:</u> எல்லா மனிதர்களும் தேவனுக்கே கணக்கு ஒப்புவிக்கும் படியாகத் தேவன் யாவரையும் சமமாகவே நடத்துகின்றார், மற்றும் நீதிமானுக்கு வெகுமதியும் துன்மார்க்கருக்குத் தண்டனையும் தருவதற்கு அவர் ஒரே தர அளவீட்டையே பயன்படுத்துகின்றார்.

<u>விளக்கம்:</u>

- தேவன் பட்சபாதம் காட்டுவதில்லை.
  யோபு 34:17-19
  அப். 10:34- 35
- எல்லா மனிதர்களும் அளக்கப்படுகின்ற மற்றும் எல்லாரும் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய பரிசுத்தமான தர அளவையாக இருப்பவர் தேவனே.
  ஆமோ. 7:7-8
  1 பேது. 1:17

- பாரபட்சமற்றிருத்தல் என்பது மனிதரைப் பொறுத்த அளவில் சொந்த சூழ்நிலைகளின் அடிப்படையிலும், மற்றவர்கள் நடத்தப் படும் விதத்துடன் தொடர்புடைய வகையிலும் அமைந்த மனிதக் கருத்தாக உள்ளது.
- தேவன் நீதியுள்ளவராக இருப்பதால், அவர் நீதிமானுக்கு வெகுமதியும் துன்மார்க்கருக்குத் தண்டனையும் அளிப்பவராகவே இருக்க வேண்டும்.
  எண். 14:18
- தேவனுடைய நீதியானது இரக்கத்துடனும் கிருபையுடனும் செயல்படுத்தப்படுகின்றது.

பயிற்சி: *தேவன் நீதியுள்ளவராக இருப்பது ஏன் முக்கியமானதாக உள்ளது? நீதி என்பது பாரபட்சமற்றிருத்தலிலிருந்து எவ்விதம் வேறுபடுகின்றது?*

____

____

____

____

22. தேவன் இரக்கம் நிறைந்தவராக இருக்கின்றார்.

திறவுகோல் வசனங்கள்: ***சங். 25:6-7***
நீதி. 28:13
ரோமர் 9:14-18
எபே. 2:4
ஆப. 3:2
தீத்து 3:5

அர்த்தம்: நமது பாவத்தினால் நமக்கு நீதியுள்ள வகையில் தரப்பட வேண்டியவைகளை தேவன் பரிவிரக்கத்துடன் நிறுத்தி வைத்திருப்பதே இரக்கம் என்பதாகும்.

விளக்கம்:

- இரக்கம் என்பது வேத வசனத்தில் பரிவு என்பதாக அடிக்கடி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- தேவன் இரக்கத்துடன் செயல்படத் தேர்ந்து கொள்ளும் பொழுது, சுய பலன் அல்லது தகுதியை ஒருவரும் உரிமை கோர முடியாது.

- தேவனுடைய இரக்கமும் கிருபையும் பாவமன்னிப்பிற்கான இருமடங்கு தூண்டுகலாக உள்ளன.
- இரக்கம் என்பது தேவனால் செயல்படும் தெரிந்து கொள்ளுதலை விளக்கப்படுத்துகின்றது.

பயிற்சி: தேவன் இரக்கமற்றவராயிருந்தால் எல்லா மனிதருக்கும் என்ன நேரிடும்?

___

___

___

___

23. தேவன் கிருபையுள்ளவராக இருக்கின்றார்.

<u>திறவுகோல் வசனங்கள்:</u> ***சங். 111:4***
நெகே. 9:17
தீத்து 2:11-12
எபே. 2:4-9
ரோமர் 3:22-24
1 கொரி. 15:9-10

<u>அர்த்தம்:</u> நாம் நியாயமான வகையில் பெற்றுக்கொள்ளத் தகுதியற்றவைகளை நமக்கு தாராளமாகவும் பெருந் தன்மையுடனும் கொடுத்தல் என்பதே தேவனுடைய இரக்கமாக உள்ளது.

<u>விளக்கம்:</u>

- தகுதியற்ற வகையில் நாம் இருப்பினும் நம்மேல் பொழியப் படுவதாகவும், அவருக்குப் பதில்செயல் செய்து மற்றும் அவருக்கு ஊழியம் செய்வதைச் சாத்தியமாக்கும் அவரது தெய்வீகமாகவும் இருப்பதே தேவனுடைய கிருபையாகும்.
- இயேசு கிறிஸ்து என்ற நபரில் கிருபை உருவப்படுத்தப் பட்டுள்ளது.
யோவா. 1:14-17
- தேவனுடைய நற்தன்மையிலும் மாபெரும் அன்பிலும் கிருபை பெருக்கெடுக்கின்றது.

- தேவனுடைய கிருபையும் இரக்கமும் பாவமன்னிப்பிற்கான இரு மடங்கு தூண்டுதலாய் உள்ளது.
- தேவன் கிருபையற்றவராய் இருந்திருந்தால் எல்லா மனிதர்களும் பாவங்களில் மரித்திருப்பார்கள்.

பயிற்சி: தேவன் நம்மிடத்தில் கிருபையுடன் செயல்படும்படி அவரைத் தூண்டுகின்றது என்ன?

____

____

____

____

24. தேவன் கோபம் நிறைந்தவராக இருக்கின்றார்.

<u>திறவுகோல் வசனங்கள்:</u> ***செப். 2:1-3***
யோவா. 3:36
ரோமர் 1:18
கொலோ. 3:5-6
எபே. 5:6
வெளி. 16:6

<u>அர்த்தம்:</u> பாவம் மற்றும் துன்மார்க்கமுள்ள மனிதர்களுக்கெதிராக அமைந்த தேவனுடைய பண்பாகவும் நீதியுள்ள கோபமாகவும் உள்ளதே இந்த (உக்கிர) கோபம் ஆகும்.

<u>விளக்கம்:</u>

- தேவன் நீதியும் பரிசுத்தமும் உள்ளவராக இருப்பதால் அவர் பாவத்திற்கு எதிராகத் தம்முடைய கோபத்தை ஊற்றியாக வேண்டும்.
- தேவனுடைய கோபம் என்பது அநீதிக்கான அவரது மறுசெயலாக இன்றி, அமைத்து வைக்கப்பட்ட அவருடைய இயற்கைப் பண்பாக உள்ளது.
- மனிதர் பாவத்தினால் எப்பொழுதுமே தம்மேல் தேவ கோபத்தை வருவித்துக் கொள்கினறனர்.
- தேவன் தம் கோபத்தைச் செயப்படுத்துதல் என்பது அவருடைய உண்மைத் தன்மையைச் செயல்விளக்கப்படுத்துகின்றது.

பயிற்சி: தேவன் தம்முடைய கோபத்தைச் செயல்படுத்துவது ஏன் அவசியமாய் உள்ளது?

___

___

___

___

25. **தேவன் மன்னிக்கின்றவராக இருக்கின்றார்.**

திறவுகோல் வசனங்கள்: ***தானி. 9:9***
எரே. 31:34
எபே. 1:7
எபே. 4:32
கொலோ. 2:13-14

அர்த்தம்: நமது பாவத்திற்கான தண்டத்தைக் கிறிஸ்து நமக்காகச் செலுத்தியிருக்கின்றபடியால் தண்டத்திற்கான பொறுப்பை தேவன் நம்மிடத்தில் வைப்பதில்லை என்பதே மன்னிப்பு என்பதாக உள்ளது.

விளக்கம்:

- பாவமன்னிப்புக்கு அறிக்கையிடுதலும் மனந்திரும்புதலும் அவசியமானவைகளாக உள்ளன.
- இயேசு கிறிஸ்துவினால் சிந்தப்பட்ட இரத்தமானது தேவன் நமது பாவங்களை மன்னிக்க அனுமதிப்பதுடன் நம்மை இன்னும் நீதியுள்ளவர்களாய் இருக்கச் செய்கின்றது.
- சிலுவையில் இயேசுவால் நிறைவு செய்யப்பட்ட ஊழியத்தின் மேல் உள்ள விசுவாசமானது பாவிகளுக்கு மன்னிப்பைக் கிடைக்கச் செய்கின்றது.

பயிற்சி: தேவன் நமது பாவங்களைத் தண்டம் செலுத்தப்படாமலே நீதியுடன் மன்னிக்க முடியுமா?

___

___

___

___

26. தேவன் பொறுமையுள்ளவராக இருக்கின்றார்.

திறவுக்கோல் வசனங்கள்: **நெகே. 9:29-31**
சங். 145:8
ரோமர் 2:4
1 பேது. 3:20
2 பேது. 3:8-9

அர்த்தம்: மனிதர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட வேண்டும் என்ற தேவனுடைய விருப்பத்தினால் பாவத்தை நியாயந் தீர்ப்பதைத்தேவன் சுயமாகக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதே பொறுமை ஆகும்.

விளக்கம்:

- தேவனுடைய பொறுமை என்பது சில வேளைகளில் கோபம் கொள்ளத் தாமதித்தல் மற்றும் நீடிய பொறுமை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- தேவனுடைய பொறுமையானது தீர்ந்து போக முடியும்
  எரே. 6:11
  எரே. 15:6
- துன்மார்க்கர் தங்கள் பாவங்களில் அழிந்து போய் விடக் கூடாது என்ற தேவனுடைய விருப்பத்தை அவரது பொறுமையான இயல்பானது செயல்விளக்கப் படுத்துகின்றது.
  எசே. 18:23
- தேவனுடைய பொறுமையை மனிதர்கள் முன் அனுமானம் செய்து கொள்ளக் கூடாது.
  ஏசா. 7:13

பயிற்சி: தேவன் பொறுமையற்றவராய் இருந்தால் மனிதர்கள் எங்கிருப்பார்கள்?

____

____

____

____

27. தேவன் நீதியுள்ளவராக இருக்கின்றார்.

<u>திறவுகோல் வசனங்கள்:</u> **சங். 11:7**
சங். 119:142
சங். 145:17
ஏசா. 45:21
ரோமர் 1:17
1 யோவா. 2:1
1 கொரி. 1:30
2 கொரி. 5:21

<u>அர்த்தம்:</u> தேவன் எப்பொழுதுமே நீதியுள்ளவராக இருக்கின்றார், மற்றும் அவர் தம்முடைய பரிசுத்தமான பண்புக்கு முற்றிலும் ஏற்ற வகையிலேயே செயல்படுகின்றார்.

<u>விளக்கம்:</u>

- நீதி என்பது உள்ளார்ந்த அளவில் தாம் நீதிமானாக இருக்கின்ற தேவனுடைய நீதியான நிலைப்பாட்டில் இருத்தல் என்பதாகும்.
- நீதி என்பது தேவனுடைய வழிகளின்படி நீதியாக(பரிசுத்தமாக) வாழுதல் ஆகும்.
  ரோமர் 6:19-22
- நீதியுள்ள மனிதர் தேவன் மேல் தாம் கொண்டுள்ள விசுவாசத்தினால் வாழ்கின்றார்.
  ஆப. 2:4
- இயேசு கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே நீதி வருகின்றது.
  ரோமர் 3:21-22
- தேவன் இன்றி மனிதரிடம் நீதி எதுவும் இல்லை.
  ரோமர் 3:10-12

பயிற்சி: பெரும்பாலான மக்கள் எந்த அடிப்படையில் நீதியை நியாயந் தீர்க்கின்றனர்?

____

____

____

____

தேவனுடைய பண்புகள் இந்த 27 மட்டுமே அல்ல ஆனால் இவைகள் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி தேவனுடைய குணத்தின் முழு நிறைவான விவரிப்பை அளிக்கின்றன.

உ. தேவனுடைய ஆளுமைத் தன்மை

திறவுகோல் வசனங்கள்: ***ஆதி. 1:27***
ஆதி. 3:8-13
சங். 145:14-18
1 யோவா. 1:3

அர்த்தம்: தேவன் என்பவர் நபர்த்துமற்ற சக்தியாகவோ அல்லது கொள்கையாகவோ இருப்பதில்லை, ஆனால் அவர் தம்முடைய படைப்புடன் தொடர்பு கொள்ள விரும்கின்ற மற்றும் ஐக்கியப்பட விரும்புகின்ற ஒரு தெய்வீக உறவுள்ள நபராய் இருக்கின்றார்.

விளக்கம்:

- தேவன் ஆளுமைத் தன்மையின் எல்லாப் பண்புகளையும் - மனம், சித்தம், மற்றும் உணர்வுகள் ஆகியவற்றை - கொண்டுள்ளார், ஆனால் அவற்றை மனிதனைக் காட்டிலும் மேலான ஒரு அளவில் எல்லையற்ற விதத்தில் கொண்டுள்ளார்.
- தேவன் எங்கும் நிறைந்துள்ளார் - அதாவது அவர் தம்முடைய படைப்பினால் எல்லையிடப்படாதிருப்பினும் தம்முடைய படைப்புடன் தனிப்பட்ட விதத்தில் பிரசன்னமாயிருந்து ஈடுபாடு கொண்டவராய் இருக்கின்றார்.
- தேவனுடைய ஆளுமைத் தன்மையானது அவர் வெறுமனே உயர்த்தப் பட்ட ஒரு மனிதர் மட்டுமே என்றோ அல்லது கிறிஸ்துவில் காணப் படுகிறபடி தவிர, அவருக்கு ஒரு உடல் உண்டு என்றோ அர்த்தப் படுவதில்லை.
- தேவன் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளார்:
  - **ஒரு தனிப்பட்ட பெயர் - *யாத். 3:14***
  - **அறிவுக் கூர்மை - *1 கொரி. 2:11***
  - **சித்தம் - *யோவா. 6:38-40; யோவா. 10:17-18***
  - **உணர்வுகள்**

    துக்கம் - *ஆதி. 6:6*
    அன்பு - *யோவா. 3:16*
    எரிச்சல் - *யாத். 20:5*
- தேவன் பேசுகின்றார்
  யாத். 3:4
- தேவன் காண்கின்றார்
  ஆதி. 16:13
- தேவன் கேட்கின்றார்
  சங். 94:9

- தேவன் ஆவிக்குரிய அடிப்படையில் மனிதருடன் முதன்மைத் தொடர்பு கொள்கின்றார்.
  யோவா. 4:24
- தேவன் செயல்படுகின்றார்
  1 இரா. 18:37-38
- தேவன் ஆளுமைத் தன்மை உடைவராய் இருப்பதால், அவர் மனிதருடன் தொடர்பு கொண்டு, செய்தியளிக்க முடியும்.
- தேவன் மனிதருடன் முதலாவது சிருஷ்டிகர் என்ற வகையில் - பிறகு இரட்சகர் என்ற வகையில் - பிறகு கர்த்தர் என்ற வகையில் - பிறகு பிதா என்ற வகையில் உறவு படுகின்றார்.

பயிற்சி: தேவன் ஒரு சக்தியாகவோ அல்லது கொள்கையாகவோ இருந்தால் நீங்கள் தனிப்பட்ட வகையில் அவருடன் எவ்விதம் உறவு படுவீர்கள்?

____

____

____

____

ஊ. தேவனுடைய பெயர்கள்

வேத வசனங்களில் தேவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர்கள் அல்லது பட்டங்கள் அவருடைய பண்புகளை - அவர் யார், அவர் என்னவாக உள்ளார் மற்றும் அவர் என்ன செய்கின்றார் என்பவைகளை - அதிகமாய் வெளிப்படுத்துகின்றன. "தேவனுடைய நாமம்" அல்லது "கர்த்தருடைய நாமத்திலே" என்ற சொற்றொடர்களை வேதாகமம் பயன்படுத்தும் பொழுது அது அவருடைய முழுமையான நபர்த்துவத்தை - அவரைப் பற்றிய யாவையையும் - குறிக்கின்றது. மற்றும் தேவனுடைய நாமமானது மேன்மையும் மகத்துவமும் நிறைந்தது **சங். 8:1**

- <u>பழைய ஏற்பாட்டில் தேவனுக்குள் அடிப்படையான 3 பெயர்கள்:</u>
  1. **ஏலோஹிம்** (தேவன்) = இது "வல்லமை அல்லது பலம் உள்ளவர்" என்று அர்த்தப்படுகின்றது; இது தேவனுடைய வல்லமை மற்றும் ஒப்புயர்வற்ற தன்மையைக் குறிக்கின்றது; மற்றும் இது படைத்தல் மற்றும் பலம் ஆகியவற்றுக்குத் தொடர்புடைய வகையில் விசேஷமாகப் பயன்படுத்தப்படுகின்றது.
     ஆதி. 1:1
     சங். 68:1

ஏல் (ஒருமை) மற்றும் ஏலோஹிம் (பன்மை) ஆகியவை பெயர்கள் என்பவைகளாக இருப்பதைக் காட்டிலும் அதிகமாய் பட்டங்கள் என்பவைகளாகவே உள்ளன. அவைகள் பொய்யான "தேவர்களைக்" குறிப்பிடவும் பயன்படுத்தப்படலாம்.
ஆதி. 35:2

2. **அதோனாய்** (ஆண்டவர்) என்பது "எஜமானர், ராஜரீகமான ஆளுநர் அல்லது ஆண்டவர்" என்று அர்த்தப்படுகின்றது, மற்றும் இது தேவனுடைய அதிகாரம் மற்றும் தகுதி நிலை/ பதவி நிலை ஆகியவற்றைப் பொதுவாகக் குறிப்பிடுகின்றது.
சங். 68:32
ஏசா. 6:8-11

அதோனாய் என்பதும் பெயரை விட அதிகமாய்ப் பட்டம் என்பதாகவே உள்ளது. இது NIVயில் "Lord" (ஆண்டவர்) என்று தருவிக்கப்பட்டுள்ளது. இது இயேசுவுக்குப் பயன்படுத்தப்படும் பொழுது, ஆண்டவர்/எஜமானர் என்ற வகையிலான அவருடைய தகுதி நிலையை குறிப்பிடுவது மட்டுமின்றி, அவரை பரவின் யாவே/அதோனியியுடன் அடையாளப் படுத்துகின்றது.

3. **யாவே அல்லது யேகோவா** ("கர்த்தர்") என்பது பெரும்பாலும் தாமாகவே இருக்கின்ற ஒருவரை (இருக்கிறவராக இருக்கிறேன் அல்லது இருக்கிறவர்) என்பதை அர்த்தப் படுத்துகின்றது மற்றும் தேவனுடைய சொந்தப் பெயரையும் அவரது நித்திய தன்மையையும் குறிப்பிடுகின்றது. இது இரட்சகர் அல்லது உடன்படிக்கையைக் காப்பவர் என்ற வகையில் தேவனுக்குள் உறவில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது. பழைய ஏற்பாட்டில் யாவே என்பதே தேவனுக்கு மிகவும் பொதுவான பெயராக உள்ளது. தேவனுடைய சொந்தப் பெயரானது யூதர்கள் அதைத் தவறாகப் பயன்படுத்தி விடுவோமோ என்ற பயத்தில் எழுதுவதற்கும் கூறுவதற்கும் அச்சமுற்ற யாவேக்கு அதோனாயி என்ற பதில் பெயரைப் பயன்படுத்துமளவுக்கு அதிக பயத்திற்குரியதாய் இருந்தது. தேவனுடைய சொந்தப் பெயருக்கு நிலைநிற்க இவ்விரண்டிலிருந்து யேகோவா என்ற ஆங்கில வார்த்தை தர வழைக்கப்பட்டது. NIVஆனது யாவே அல்லது யேகோவா என்பதை LORD என்று தரவழைத்தது மற்றும் அதோனாயி என்பதும் யாவே என்பதும் இணைந்து வருமிடங்களில் அது "Soverign LORD" என்று தரவழைக்கப் பட்டது.
ஆதி. 2:4
யாத். 3:14 "இருக்கிறவராக இருக்கிறேன்"
சங். 68:4
இயேசுவும் கூடத் தம்மைப் பற்றிக் குறிப்பிட இப்பெயரை **யோவா 8:58-59**ல் பயன்படுத்தினார், இவ்விதமாக அவர் தாம் தேவனாயிருப்பதாக உரைத்தார். ஏலோஹிம் என்பது தேவனுக்கான ஒரு பொதுமைப் பட்டமாயிருக்கையில், அதோனாய் என்பது ராஜரீகமான கர்த்தர் என்ற வகையிலான அவரது தெய்வீகத்தையும் நிலைப்பாட்டையும் குறிப்பிடுகின்றது. யாவே என்பது தேவனுடைய சொந்தமான, உடன்படிக்கைப் பெயராக உள்ளது.

- <u>பழைய ஏற்பாட்டில் தேவனுக்கு El என்ற கூட்டுப் பெயர்கள் (முக்கியமானவை):</u>

4. **எல் சதாய்** என்பது "சர்வ வல்லமையுள்ள தேவன்" என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது தேவனை ஆசீர்வாதம் மற்றும் ஆறுதலின் வல்லமை நிறைந்த மூல ஆதாரமாகச் சித்தரிக்கின்றது.
ஆதி. 17:1
யாத். 6:3
சங். 68:14

5. **எல் எல்யோன்** என்பது "மிகவும் உன்னதமான தேவன்" என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது தேவனுயை பலத்தையும் ராஜரீகத்தையும் சித்தரிக்கின்றது.

ஆதி. 14:18
சங். 9:2

6. **எல்ரோயீ** என்பது "காண்கின்ற தேவன்" என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது தேவனுடைய தனிப்பட்ட கவனிப்பையும் பிரசன்னத்தையும் குறிக்கின்றது.
ஆதி. 16:13

7. **எல் ஓலம்** என்பது "என்றென்றுமுள்ள அல்லது நித்தயமான தேவன்" என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது தேவனுடைய நித்தியத்துவத்தையும் எல்லையற்ற பலத்தையும் சித்தரிக்கின்றது.
ஆதி. 21:33
ஏசா. 40:28

- <u>யாவே/யெகோவா என்பதற்கான பழைய ஏற்பாட்டின் முக்கியமான கூட்டுப் பெயர்கள்:</u>

8. **யெகோவாயீரே** என்பது "கர்த்தர் அளிக்கின்றார்" என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது ஈசாக்கிற்குப் பதிலாகப் பலியிட ஆட்டுக் குட்டியொன்றை தேவன் அளித்த பொழுது ஆபிரகாமால் பயன்படுத்தப்பட்டது.
ஆதி. 22:14

9. **யாவே சாபோத்** என்பது "சேனைகளின் கர்த்தர்" என்று அர்த்தப்படுகின்றது ("சேனைகள்" என்பது சில வேளைகளில் சர்வ வல்ல அல்லது இராணுவம் என்று மொழிபெயர்க்கப்பட்டது) மற்றும் இது தேவனை வானமண்டல சேனைகளின் தளபதியாகச் சித்தரிக்கின்றது.
யோசு. 5:14
1 சாமு. 1:3
சங். 24:10

10. **யாவே ரோப்பே** (அல்லது ரப்பா) என்பது "குணமாக்கும் கர்த்தர்" என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது தேவனுடைய சரீர மற்றும் ஆவிக்குரிய குணமாக்கும் வல்லமையைக் குறிக்கின்றது.
யாத். 15:26

11. **யாவே ஷாலோம்** என்பது "சமாதானத்தின் கர்த்தர்" என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது தேவனுக்குள் இறுக்கம், முரண்பாடு மற்றும் விரோதம் ஆகியவை குறைவு படுவதைக் குறிக்கின்றது.
நியா. 6:24

12. **யாவே நிசி** என்பது "கர்த்தர் எனது கொடியாய் இருக்கிறார்" என்று அர்த்தப் படுகின்றது மற்றும் இது யுத்தம் கர்த்தருடையது என்பதைக் குறிப்பிடுகின்றது.
யாத். 17:15

13. **யாவே சிட்கெனு** என்பது "கர்த்தர் நமது நீதி" என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது தேவன் மட்டுமே உண்மையான நீதியின் ஒரே ஆதார மூலமாய் இருக்கின்றார் என்று குறிப்பிடுகின்றது.
எரே. 23:6

14. **யாவே மக்கா தெஷ்கேம்** என்பது "கர்த்தர் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறவர்" (அல்லது உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்) என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது தேவனே மக்களைப் பிரித்தெடுத்துப் பரிசுத்தமாக்குகிறவர் என்று குறிப்பிடுகிறது.
யாத். 31:13
லேவி. 20:8

15. **யாவே ராஹ்ற** (rohi) என்பது "கர்த்தர் நமது மேய்ப்பர்" என்று அர்த்தப் படுகின்றது, மற்றும் இது தேவனுடைய மக்கள் மீதான அவருடைய அன்பின் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் அளிப்பு ஆகியவற்றைக் குறிக்கின்றது.
சங். 23:1
குறிப்பு: யாவே ஏலோஹிம் என்ற கூட்டுப் பெயரானது சில வேளைகளில் தேவனாகிய (ஏலோஹிம்) கர்த்தர் (யாவே) என்று அர்த்தப்படும் வகையில் பயன்படுத்தப்படுகின்றது.
ஆதி. 2:4

- தேவனுக்குப் புதிய ஏற்பாட்டின் அடிப்படைப்பெயர்கள்

1. **Theos** என்பது "தேவன்" என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது பழைய ஏற்பாட்டின் ஏலோஹிம் அல்லது யாவே என்ற பெயருக்குச் சமமான புதிய ஏற்பாட்டுப் பெயராக உள்ளது.
தீத்து 2:13
2. **Kurios** என்பது "கர்த்தர்" என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது தேவனுடைய சொந்தப் பெயரின் மீதுள்ள பயபக்தியினிமித்தமாக யாவே என்ற அதற்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்ட அதோனாயி என்ற பழைய ஏற்பாட்டுப் பெயருக்குச் சமமான புதிய ஏற்பாட்டுப் பெயராக உள்ளது. இது இயேசுவை பஏவின் யாவே/அதோனாயி என்பவராக அடையாளப்படுத்துகின்றது.
யோவா. 20:28
3. **Despotes** என்பது "எஜமானர்" என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது சில வேளைகளில் "இராஜரீகம் செய்யும் கர்த்தர்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.
லூக். 2:29
அப். 4:24
2 பேது. 2:1
வெளி. 6:10
4. **Abba (Pater)** என்பது "தகப்பன்" என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது தேவனுடன் ஒரு விசுவாசிக்கு இருக்கின்ற விசேஷித்த உறவைக் குறிக்கின்றது.
யோவா. 4:23
ரோம. 8:15

- புதிய ஏற்பாட்டில் இயேசுவுக்கான முக்கியமான பெயர்கள்

5. **Immanuel** இம்மானுவேல் என்பது கிறிஸ்துவின் அவதாரத்தைக் குறிப்பிடும் "தேவன் நம்மோடிருக்கிறார்" என்று அர்த்தப்படுகின்றது.
மத். 1:23
(கிறிஸ்துவில் தேவனுடைய பிரசன்னத்தை விளக்குகின்ற **யோவா. 1:14**ஐயும் காணவும்.)
6. **இயேசு** என்பது அவரது சொந்தப் பெயராகும், இது "கர்த்தர் இரட்சிப்பாய் இருக்கிறார்" என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது "யோசுவா" என்ற பஏ பெயருக்கு இணையான புஏ பெயராகும்.
மத். 1:16
7. **கிறிஸ்து** என்பது அவரது இயற்பெயர் ஆகும் இது "அபிஷேகம் பண்ணப் பட்டவர்" என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது "மேசியா" என்ற பஏ பெயருக்கு இணையான புஏ பெயராகும்.

பயிற்சி: நீங்கள் வழக்கமாக எந்தப் பெயரினால் தேவனை அழைக்கின்றீர்கள்? அந்தப் பெயர் உங்களுக்கு எதனைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது?

____

____

____

____

ஏ. தேவ திரித்துவம்

- கருத்தின் எடுத்துரைப்பு

"திரித்துவம்" என்ற வார்த்தை வேதாகமத்தில் காணப்படவில்லையென்றாலும், இக்கருத்தானது தெளிவாகவே வேதாகமத்தின் படியானதாகும். தேவ திரித்துவ (அல்லது திரியேக) போதனையானது புரிந்து கொள்ள மிகவும் ஒரு கடினமான இரகசியமாகும் ஆனால் விசுவாசத்தினால் இதனை நம்ப வேண்டியது அவசியமானதாக/இன்றியமையாததாக உள்ளது.

கர்த்தர் என்பவர் மூன்று நபர்களில் ஒரே தேவனாகவும் உள்ளார் மற்றும் மூன்று நபர்கள் ஒரே தேவனுக்குள் உள்ளனர் என்பதே திரித்துவத்தின் அடிப்படைக் கருத்தாக உள்ளது. இந்நபர்கள் தனிப்பட்டவர்களாக உள்ளனர் ஆனால் தனித்திருப்பதில்லை, மற்றும் ஒரே சாரம் அல்லது இயல்பில் இவர்கள் யாவரும் சமமானவர்களாக உள்ளனர்.

பிதாவானவர் தேவனாயிருக்கின்றார் என்று அறிவிக்கப் படுகின்றார் **(யோவா. 6:27).**

குமாரனானவர் தேவனாயிருக்கின்றார் என்று அறிவிக்கப் படுகின்றார் **(எபி. 1:8).**

பரிசுத்த ஆவியானவர் தேவனாயிருக்கின்றார் என்று அறிவிக்கப் படுகின்றார் **(அப். 5:3-4).**

இருந்தாலும் இந்த 3 நபர்களும் சமமாக ஒருவரே என்று அடையாளப் படுத்தப்படுகின்றனர் **(மத். 28:19; 2 கொரி. 13:14).**

- உபதேச விளக்கம்

பழமைவாத எடுத்துரைப்புகள்:

தேவன் ஒருவராக தெய்வீகமானவராக உள்ளார், அவர் நித்தியத்திற்கும் மூன்று தனித் சிறந்த நபர்களாக (பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர்) அவர்கள் யாவரும் சமமானவர்களாக சாராம்சத்தில் தேவனாக இருக்கின்றார்.

அன்த்தனேசியன் உபதேச சட்டம் - திரித்துவத்தைப் பற்றிய கிறிஸ்தவத்தின் முதலாம் அறிக்கைக் கூற்று - கி.பி. 4வது அல்லது 5வது நூற்றாண்டு.

நாம் ஒரே தேவனை திரித்துவத்தில் மற்றும் ஒருமையின் திரித்துவத்தில் ஆராதிக்கின்றோம்; நபர்களுக்கிடையில் குழம்புவதுமில்லை பொருள் கருத்தைப் பிரிப்பதுமில்லை.

வெஸ்ட் மினிஸ்டர் அறிக்கை (1647)

"தேவத்துவத்தின் ஒருமையில் ஒரே பொருள், வல்லமை மற்றும் நித்தியத்துவம் உள்ள மூன்று நபர்கள் உள்ளனர்: பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், மற்றும் பரிசுத்த ஆவியானவராகிய தேவன் (ஆவியானவர்). பிதாவானவர் பெற்றெடுக்கப்பட்டவருமல்லர் அல்லது வளர்ந்தேறுகிறவருமல்லர். குமாரனானவர் நித்தியத்தில் பிதாவானவரால் பெறப்பட்டவர்; பரிசுத்த ஆவியானவர் பிதா மற்றும் குமாரனிடத்திலிருந்து புறப்படுகின்றவர்."

- <u>உறவு முறைகளின் வரைபடம்</u>



பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவி ஆகியோர்,

(1) இன்றியமையாத இயல்பில் தேவனாகவும் நோக்கத்தில் ஒன்றானவர்களாகவும் உள்ளனர் (3ல் 1).

(2) ஒவ்வொருவரும் தனிச் சிறப்புள்ளவர்களாகவும் தனித்தனி நபர்களாயிராமலும் உள்ளனர் (3ல் 1).

(3) மாறுபட்ட பணித்துவப் பாங்குகளைச் செயல்படுத்துகின்றவர்களாய் இருக்கின்றனர்.

- <u>4-மடங்கு பழமை வாத வலியுறுத்தம்</u>

  1. இயல்பு அல்லது சாரம்சத்தின் **ஒருமைத்தன்மை** (ஒன்றாயிருத்தல்)
  2. நபர்களின் **மும்மைத் தன்மை** (பல்வகைப்பாடு)
  3. **பணித்துவ முறைமை** (பணிகள்) அல்லது செயல் [சாராம்சத்தின் தாழ்வு இன்றி தேவத்துவத்திற்குள் தன்னார்வமுள்ள, முழுமையான கீழ்ப்படிதல் உள்ளது.]
  4. தேவத்துவத்தின் அனைத்து நபர்களின் **நித்தியதன்மை.**

- <u>3 பொதுவான தவறுகள் அல்லது முரணான கோட்பாடு</u>

திரித்துவத்துடன் தொடர்புடைய பெரும்பாலான தவறுகள் தெய்வீக - மனிதர் என்ற வகையில் இயேசு கிறிஸ்துவுக்குப் பிதாவுடன் உள்ள உறவு பற்றியே எழுந்துள்ளன.

3 பொதுவான தவறுகள் பின்வருமாறு:

ஒருமைத்தத்துவம் - இது ஒரே ஒரு நபர் தான் உள்ளார் என்று போதிக்கின்றது, இவ்விதமாக தேவத்துவத்தின் மூன்று நபர்த்துவத்தை இது மறுக்கின்றது.

மூவர்தத்துவம் - இது 3 "கடவுள்கள்" உள்ளதாகப் போதிக்கின்றது, இவ்விதமாக தேவத்துவத்தின் ஒருமைத்தன்மையை இது மறுக்கின்றது.

வகை முறைத் தத்துவம் - இது குமாரனும் பரிசுத்த ஆவியானவரும் தேவன் தம்மையே வெளிப்படுத்துகின்ற இருப்பின் வகைமுறை அல்லது வழிகள் என்று போதிக்கின்றது, இவ்விதமாக தேவத்துவத்தின் தனிச் சிறந்த நபர்களை இது மறுக்கின்றது.

★ மூவொருவரான நமது தேவன் வல்லவரும், மகத்துவமானவரும் மற்றும் அற்புதமானவருமாக இருக்கின்றார்!★

- <u>பழைய ஏற்பாட்டுத் திறவுகோல் வசனங்கள்</u>

உபதேசம் மறை கருத்தாயுள்ளது

பழைய ஏற்பாடானது திரித்துவத்தை வெளிப்படையாகப் போதிக்கா திருப்பினும் திரித்துவத்தின் இருப்பைக் குறைந்தபட்சம் மறைமுகமாக வாவது குறிப்பிடுகின்றது. இங்கு சில திறவுகோல் வசனங்கள் உள்ளன:

முத்தன்மை
ஆதி. 1:26
ஏசா. 48:16
ஏசா. 63:7-10

ஒருமைத்தன்மை
உபா. 6:4
ஏசா. 6:3-8
யோவா. 12:41

குமாரனுடைய பணித்துவக் கடமைகள்
சங். 2:2, 6-7
1 கொரி. 10:1-4ஐயும் காணவும்

பரிசுத்த ஆவியானவரின் பணித்துவக் கடமைகள்
ஆதி. 1:2
1 சாமு. 16:13-14
எபி. 3:7-8ஐயும் காணவும்

- <u>திரித்துவத்திற்கான புதிய ஏற்பாட்டுத் திறவுகோல் வசனங்கள் உபதேசம் போதிக்கப்பட்டது</u>

ஒருமைத் தன்மை
யோவா. 10:29-30
யோவா. 14:9
1 கொரி. 8:4-6
எபே. 4:5-6

மும்மைத் தன்மை
மத். 28:19
2 கொரி. 13:14
ரோமர் 8:26-27, 34

பணித்துவக் கடமைகள்
யோவா. 14:13-16
மத். 3:16
லூக். 4:14-18

நித்திய தன்மை
யோவா. 1:1, 14 (இயேசு)
எபி. 9:14 (பரிசுத்த ஆவியானவர்)
எபி. 13:20 (பிதாவானவர்)

விவரிப்பு

திரித்துவத்தின் கருத்தைப் பற்றிய முழுமையான விவரிப்பு என்று உண்மையில் ஒன்றும் இல்லை. அடிக்கடி பயன்படுத்தப்படும் உதாரண மான சூரியன் (பிதா), சூரிய ஒளி (இயேசு) மற்றும் சூரிய சக்தி (பரிசுத்த ஆவியானவர்) என்று உதவி நிறைந்ததாக ஆனால் போதுமானதாக இல்லாததாக உள்ளது
(1 தீமோ. 6:14-16)

பயிற்சி: வேதாகமம் போதிக்கின்றபடி திரித்துத்தை உங்கள் சொந்த வார்த்தைகளில் விவரிக்கவும்

____

____

____

____

ஏ. தேவனின் ஆணை

- தேவனுடைய ஆணை

  விளக்கம்: தேவனுடைய ஆணை என்பது அவருடைய

  இராஜரீகம்

  ஒருமைத்தன்மை

  நித்தியத்துவம்

  ஞானம்

  சார்ப்பற்ற தன்மை ஆகியவையாய் உள்ளது.

  எல்லா விஷயங்களையும் குறித்து தமது சித்தம் மற்றும் நோக்கத்தின்படி நிறைவேற்றத் தீர்மானித்துள்ள நிபந்தனையற்ற திட்டமாகும்.

தேவனுடைய ஆணையானது நித்தியத்தின் கடந்த காலத்தில் திட்டமிடப் பட்டு, காலத்தில் செயல்படுத்தப்பட்டுக் கொண்டுள்ளது. ஆகையால் வரலாறு அனைத்தும் நேர்க் கோட்டு வரிசையில் மற்றும் நோக்கம் நிறைந்த வகையில் தேவனுடைய முன் தீர்மானமான இலக்கை நோக்கிச் சீராக நகர்ந்து கொண்டுள்ளது. தேவனுடைய சர்வ வல்லமை, எல்லாம் அறிந்த தன்மை மற்றும் எங்கும் நிறைந்த தன்மை ஆகிய பண்புகள் அவர் தம் நித்திய ஆணை அல்லது திட்டத்தை முழுமையாக நிறைவேற்றச் செய்கின்றன. தேவனுடைய நித்திய திட்டமானது பலன் தருவதாகவும் மற்றும் அன்பிரக்கம் உள்ளதாகவும் இருக்கின்றது, மற்றும் இது கிறிஸ்துவுக்குள் யாவற்றையும் தொகுப்பதைக் கவனம் செலுத்துகின்றது.

<u>திறவுகோல் வசனங்கள்:</u> ***ஏசா. 14:24, 26-27***
ஏசா 37:26
ஏசா. 46:9-13
ஏசா. 40:13-17, 21-24
ஏசா. 43:9-13
ஏசா. 45:5-7
சங். 104:24
சங். 135:6
தானி. 2:20-21
தானி. 4:34-35
எபே. 1:9-11
அப். 17:24-28

- தேவனுடைய ஆணையின் திட்டவட்டமான சில அம்சங்கள்

  – படைப்பு
  ஆதி. 1:1
  கொலோ. 1:15-17
  வெளி. 4:11

  – அளித்தல் மற்றும் அருளிரக்கப் பராமரிப்பு
  பிரச. 3:1-8, 11-15
  சங். 104
  சங். 139:13-18
  மத். 6:25-34

  – மனிதரின் இரட்சிப்பு
  அப். 2:22-25
  வெளி. 13:8
  யோவா. 6:38-40

எபே. 1:1-8
ரோம. 8:28-30
கலா. 4:4
பிலி. 3:20-21
வெளி. 17:8

– படைப்பின் மீட்பு
ரோம. 8:18-25
2 பேது. 3:8-13

– மனிதரின் சுயசித்தம்

தேவனுடைய ராஜரீகமான நித்திய ஆணைக்குள்ளாக அவர் மனிதனைத் தன்னார்வமான தேர்வுகளை ஏற்படுத்திக் கொள்ளவும் அந்தத் தேர்வுகளின் விளைவுகளை அநுபவிக்கவும் அனுமதிக்கின்றார்.

யோசு. 24:14-15
அப். 2:23
ரோமர் 1:20-25
கலா. 6:7-8
யோவா. 3:35-36
2 தெச. 1:5-10

சுயசித்தமானது மனிதனைத் தேவனுடைய திட்டத்தில் ஒத்துழைக்கவும் அதனால் ஆசீர்வதிக்கப்படவும் கூட அனுமதிக்கின்றது. ***அப். 13:36***

பயிற்சி: தேவனுடைய நித்திய ஆணை அல்லது திட்டமானது உங்களை பாதுகாப்பாக உணரச் செய்கின்றதா அல்லது அமைதி குலையச் செய்கின்றதா? ஏன்

- தேவனுடைய பிரதான உடன்படிக்கைகள்

தேவன் சில உடன்படிக்கைகளைத் தொடங்கி வைத்தார் (ஒப்பந்தங்கள் அல்லது இணக்கச் செயல்கள்). வேதவசனங்களில் இவை தெரிவிக்கப்படுகின்றன. NIV Study Bibleன் பக். 19ல் பெரும்பாலான உடன்படிக்கைகளின் அட்டவணையொன்று உள்ளது. இந்தப் பிரதான உடன்படிக்கைகளில் நான்கு உடன்படிக்கைகள் மீட்புக்கான தேவனுடைய நோக்கம் மற்றும் திட்டம் ஆகியவற்றைப் புரிந்து கொள்வதில் அவைகளின் (உடன்படிக்கைகளின்) மாபெரும் தனிச்சிறப்பின் நிமித்தம் இங்கு விளக்கப்படுகின்றன. இந்தக் கை நூலின் பக். 87ல் உள்ள அட்டவணையானது இந்தப் பிரதான உடன்படிக்கைகளுக்கிடையே உள்ள தொடர்பைச் சித்தரிக்கின்றது.

- **ஆபிரகாமுடனான உடன்படிக்கை**

ஆபிரகாமுடனான உடன்படிக்கையானது வேதாகமத்தின் வாக்குத்தத்தத்தினுடைய அஸ்திபாரமான உடன்படிக்கையாய் இருக்கின்றது. தேவனுடைய தெரிந்து கொண்ட மக்களான இஸ்ரவேலுக்கான அவருடைய திட்டமும் இயேசு கிறிஸ்துவை அளிப்பதன் மூலமாக இரட்சிப்புக்கான அவருடைய திட்டமும் இதன் மீதுதான் அமையப் பெற்றுள்ளன.

தேதி: கி.மு. சுமார் 2100

வசனங்கள்: **ஆதி. 12:1-3** (உடன்படிக்கை எடுத்துரைக்கப்பட்டது)
ஆதி. 15:1-21 (உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது அல்லது வெட்டப்பட்டது)
ஆதி. 17:1-22 (உடன்படிக்கை உறுதிப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டது)

அம்சங்கள்:

தேவன் ஆபிரகாமிடத்தில் நிபந்தனையற்ற 3 வாக்குத்தத்தங்களை ஏற்படுத்தினார்:

தனிநபருக்குரியது - தேவன் ஆபிரகாமை ஆசீர்வதித்து அவரைப் பெரியவராக்குவதாக வாக்களித்தார்.

இனத்திற்குரியது - தேவன் ஆபிரகாமை ஒரு பெரிய இனமாக்குவதாகவும் அவருடைய சந்ததியாருக்கு ஒரு அரசையும் இஸ்ரவேல் நாட்டையும் என்றென்றைக்கும் கொடுப்பதாகவும் வாக்களித்தார்.

உலகத்திற்குரியது - தேவன் ஆபிரகாமின் மூலம் எல்லா மக்களையும் ஆசீர்வதிக்கப் போவதாக வாக்களித்தார்.

விருத்தசேதனம் என்பது ஆபிரகாமுடனான உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளுவதின் அடையாளமாய் இருந்தது. இது இந்த உலகத்திலிருந்து தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டதான ஆவிக்குரிய உறவைப் பிரதிநிதித்து வப்படுத்துகின்ற சரீரப்பிரகாரமான ஒரு செயலாக இருந்தது. ஆபிரகாமை ஆசீர்வதிப்பவர்களையும் எபிரெயர்களையும் தாம் ஆசீர்வதிப்பதாகவும் அவர்களைச் சபிப்பவர்களைத் தாமும் சபிப்பதாகவும் கூட தேவன் வாக்களித்தார்.

பயன்பாடு

நாட்டைப் பற்றிய வாக்குத்தத்தம்

இஸ்ரவேலுக்குத் தேவன் அருளிய நாட்டைப் பற்றிய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதில் தேவன் இன்னமும் செயல்பட்டுக் கொண்டுள்ளார், இது கிறிஸ்து 1000 வருடங்கள் ஆளுகை செய்யும் பொழுது பூமியில் ஆயிர வருட அரசாட்சியில் முழுமைப்படுத்தப்படும் மற்றும் புதிய உடன்படிக்கையில் இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்றப்படுகின்றன.

<u>ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்</u>

இது ஆபிரகாமுக்குத் தரப்பட்ட மூன்றாவது வாக்குத்தத்தமாக உள்ளது, அதாவது சுவிசேஷம் தோற்றுவிக்கப்படுகின்றது - இது இயேசு கிறிஸ்துவின் மூலமாக பாவங்களுக்கு மன்னிப்பும் மற்றும் இரட்சிப்பும் அருளுகின்ற தேவனுடைய அளிப்பாகும். சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக விசுவாசத்தினால் இரட்சிப்பு என்பது சாத்தியமாகியுள்ளது ஆபிரகாமுடன் தேவன் ஏற்படுத்திய என்றென்றைக்குமுள்ள, ஒரே பக்கமான, நிபந்தனையற்ற கிருபையுள்ள வாக்குத் தத்தத்தினால் என்பது கலா. *3:6-18* மற்றும் ரோமர் *4:1-25* ஆகிய இரு வசனப் பகுதிகளுமே மிகவும் தெளிவாக்குகின்றன.

- **மோசேயுடனான உடன்படிக்கை** (இது சீனாய் உடன்படிக்கை என்றும் மற்றும் மோசேயின் நியாயப்பிரமாணம் என்றும் கூட அழைக்கப்படுகின்றது).

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் சென்று கொண்டிருந்த இஸ்ரவேலரின் புதிய தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்காக உபாகமம் புத்தகமானது நியாயப் பிரமாணத்தையும் உடன்படிக்கையையும் மறுபடியும் எடுத்துரைத்தது. உடன்படிக்கை யின் கீழ் கீழ்ப்படிதலுக்கு ஆசீர்வாதத்தையும் மற்றும் கீழ்ப்படியாமைக்கு சாபத்தையும் இஸ்ரவேலுக்கு தேவனுடைய வாக்குத்தத்தமாக விளக்குகின்ற **உபா. 28-30** வசனப் பகுதிகள் சிறப்பாக முக்கியத்துவம் உடையவைகளாய் உள்ளன. இந்த உடன்படிக்கை யானது இஸ்ரவேலரின் வாழ்வில் செயல்பட்ட வரலாற்றை பஏ பதிவு செய்கின்றது.

<u>தேதி:</u> கி.மு. சுமார *1450*-கி.பி. *33*

<u>வசனங்கள்:</u> ***யாத். 19-24***
லேவி. 1-27
எண். 1-10

<u>அம்சங்கள்:</u>

- மேசேயுடனான உடன்படிக்கையானது தேவனுக்கும் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு பரஸ்பர நிபந்தனையுள்ள உடன்படிக்கையாய் இருந்தது. அந்த மக்களை எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து தேவன் விடுவித்திருந்த பிறகு அவர்கள் மீட்கப்பட்ட இஸ்ரவேலர்களாய் இருந்தனர்.

- மோசே உடனான உடன்படிக்கையானது பின்வரும் நோக்கம் கொண்டதாக இருந்தது:

1. தேவனுடைய பரிசுத்தத்தை வெளிப்படுத்துதல்.
2. மனிதரின் பாவம் நிறைந்த தன்மையை வெளிப்படுத்துதல்.
3. தேவனுக்குப் பிரியமான வகையில் ஒரு வாழ்க்கையை வாழ்வதற்குத் தராதரம் ஒன்றைத் தேவனுடைய மக்களுக்கு அளித்தல்.
4. இஸ்ரவேலை ஒரு நாடாக உருவாக்குதல்.
5. மக்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிதலின் மூலம் தேவன் மேல் உள்ள தங்கள் விசுவாசத்தை நிரூபிக்க அல்லது செயல் விளக்கப்படுத்த வழிமுறைகளை அளித்தல்.
6. தேவனிடத்திலும் மற்ற மக்களிடத்திலும் ஏற்புடைய வகையில் உறவு கொள்வது எப்படி என்று மக்களுக்குக் காண்பித்தல்.
7. மக்கள் இயேசு கிறிஸ்து தங்களுக்குத் தேவை என்பதை உணர நிறைவாக அவர்களை வழி நடத்துதல்

8. அறியாமல் செய்த பாவங்களைப் பொறுத்துத் தற்காலிகமாகச் செயல்படும் வழிமுறைகள் அளித்தல்.
9. சிலுவையில் கிறிஸ்துவின் பாவ நிவாரண பலியை முன் நிழலிடுதல் அல்லது முன் கண்ணோட்டம் இடுதல்.

- நியாயப்பிரமாணமானது இரட்சிப்பின் வழிமுறையாகக் கொடுக்கப் படவில்லை.

- உடன்படிக்கையின் கீழ், கீழ்ப்படிதலுக்கு ஆசீர்வாதமும் கீழ்ப்படியாமைக்குச் சாபமும் வாக்களிக்கப்பட்டன. ஓய்வு நாளைக் கடைப்பிடித்தல் என்பது மோசேயின் உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளும் அடையாளமாய் இருந்தது.

<u>பயன்பாடு</u>

- மோசேயுடனான உடன்படிக்கையில் நிரந்தரமாக இருந்த வெளிப் படுத்தப்பட்ட சில அம்சங்களும், இஸ்ரவேலுக்கு மட்டும் இருந்த தற்காலிகமான ஒழுங்கு படுத்தும் சில அம்சங்களும் அடங்கியிருந்தன.

- தேவன் தம் தெரிந்து கொண்ட மக்களான இஸ்ரவேலைக் கையாளுவதற்கான வழிமுறையாக இருந்த நியாயப்பிரமாணமானது சிலுவையில் முடித்து வைக்கப்பட்டது.
  2 கொரி. 3:1-18
  எபி. 8:10
  கலா. 3:15-25
  எபே. 2:13-18

- மோசேயுடனான உடன்படிக்கையின் "கொள்கைகள்" புதிய ஏற்பாட்டில் மீண்டும் கூறப்படுகின்றன மற்றும் இவை இயேசுவால் **மத். 22:34**ல் தொகுக்கப்படுகின்றன (**மத். 5:17-20**ஐயும் காணவும்).

- விசுவாசிகள் என்ற வகையில் நாம் தேவன் மீது கொண்டுள்ள அன்பினாலும், அவருக்கு நமது விசுவாசத்தைச் செயல்விளக்கப் படுத்துவதற்காகவும் நாம் தேவனுடைய பிரமாணத்திற்கு (கட்டளை களுக்கு) கீழ்ப்படிகின்றோம் (**யோவா. 14:15**). எனவே மாறுபட்ட ஒரு நோக்கத்தை தூண்டுதலைக் கொண்டுள்ளோம், மற்றும் நாம் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்வதற்குப் பரிசுத்த ஆவியானவரால் பலம் பெறுகின்றோம் (**1 யோவா. 2:3-6**).

- **தாவீதுடனான உடன்படிக்கை**

இஸ்ரவேலின் அரியணையில் என்றென்றும் ஒரு அரசரை இருக்கச் செய்வேன் என்று தேவன் நேர்க்கோட்டு வகையில், நிபந்தனையற்ற வாக்குத்தத்தம் ஒன்றைக் கொடுத்தார் என்ற வகையில் தாவீதுடனான உடன்படிக்கையானது ஆபிரகாமுடனான உடன்படிக்கையுடன் தொடர்பு படுத்தப்படுகின்றது (**ஆதி. 17:1-7**ஐக் காணவும்). தாவீதே இந்த முதல் அரசராக இருந்தார் மற்றும், இயேசு கிறிஸ்துவானவர் நிறைவான "தாவீதுத்துவ" அரசராக உள்ளார் இவர் என்றென்றும் அரசாளுவார்.

தேதி: கி.மு. சுமார் 1000

வசனங்கள்: **2 சாமு. 7:4-17**
சங். 2:1-12
லூக். 1:26-33
வெளி. 20:1-6

அம்சங்கள்:

- தாவீதின் வழியான அரசத்துவமானது ஒரு
  - வீடு
  - அரசு
  - அரியணை

  ஆகியவற்றைக் கொண்டதாக என்றென்றைக்கும் இருக்கும்.

பயன்பாடு

தாவீதுடனான உடன்படிக்கையின் முழு விளக்கமானது இந்தப் பூமியில் கிறிஸ்துவின் 1000 ஆண்டு அரசாட்சியின் தொடக்கத்தில் (ஆயிரமாண்டு அரசாட்சியில்) காணப்படும் மற்றும் அது என்றென்றைக்கும் இருக்கும்.

- **புதிய உடன்படிக்கை**

மோசேயின் பழைய உடன்படிக்கையின் கீழ் தெற்கு இராஜ்யமான யூதா தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனதினிமித்தம் அது பாபிலோனியாவில் 70 ஆண்டு அடிமைத்தனத்திற்கு அனுப்பப்படுவதற்குச் சற்று முன்னதாகத் தேவன் இஸ்ரவேலுக்குக் கொடுத்த நிபந்தனையற்ற, நேர்கோட்டு முறையில் அமைந்த, மாற்றப்பட முடியாத வாக்குத்தத்தமே புதிய உடன்படிக்கையாய் இருந்தது. புதிய உடன்படிக்கையானது ஆபிரகாமுடனான உடன்படிக்கையின் மூன்றாவது வாக்குத்தத்துடன் (ஆபிரகாமின் சந்ததி மூலமாக எல்லா மக்களுக்கும் இரட்சிப்பின் ஆசீர்வாதம்) நேரடியாகத் தொடர்பு படுத்தப்படுகின்றது மற்றும் இது சிலுவையில் கிறிஸ்துவின் மரணத்தினால் அமலுக்கு வருவதாயிருந்தது. தேவனால் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்கள் முற்றிலும் அருளத் தகுதியற்றவை களாகும் மற்றும் இவை தேவனுடைய "உடன்படிக்கை அன்பு" (hesed) கிருபை மற்றும் இரக்கத்தின் அடிப்படையில் அருளப்படுபவையாகும்.

தேதி: கி.மு. 600

வசனங்கள்: **எரே. 31:31-40**
எசே. 36:22-38
2 கொரி. 3:1-18
லூக். 22:14-20
எபி. 8:6-13
எபி. 9:14-18
ரோமர் 11:28-29

<u>அம்சங்கள்:</u>

தேவன்,

- இஸ்ரவேலரை மறுபடியும் ஒன்று கூட்டி அவர்களைக் கானான் நாட்டில் என்றென்றைக்குமாக மீளக்கட்டுவார்.
- நாட்டின் அரசியல் வலுவையும் பொருள் வளத்தையும் மீளக்கட்டுவார்.
- அவர்களுடைய இருதயங்களைச் சுத்திகரித்து, அவர்களுடைய பாவங்களை மன்னித்து, அவர்களுடைய ஆவிக்குரிய வலுத்தன்மையை மீளக் கட்டுவார்.
- கிறிஸ்துவின் சிலுவை மூலமாக எல்லா மனிதருக்கும் இரட்சிப்பைக் கிடைக்கச் செய்வார்.
- தம்மைப்பற்றிய அறிவினால் இந்தப் பூமியை நிறைப்பார்.
- தம்முடைய பிரமாணங்களை மனிதர்களின் இருதயங்களில் எழுதுவார்.
- மனிதர்களுக்கு ஒரு புதிய இருதயத்தைக் கொடுப்பார்.
- மனிதர்களுக்கு ஒரு புதிய ஆவியைக் கொடுப்பார்.

<u>பயன்பாடு</u>

- இஸ்ரவேலர் மறுபடியும் ஒன்று கூட்டப்படுதலும் மீளக் கட்டியெழுப்பப் படுதலும் ஒரு பகுதிதான் நிறைவாக்கப்பட்டுள்ளது. பூமியின் மீது கிறிஸ்துவின் ஆயிரமாண்டு அரசாட்சி காலத்தில் புதிய உடன்படிக்கையின் எல்லா அம்சங்களும் நிறைவேற்றப்படும்.

- எல்லா விசுவாசிகளும் (இணைவான சபை) தற்பொழுது கிறிஸ்துவின் மூலம் கொண்டு வரப்பட்ட இரட்சிப்பின் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் பாவங்களுக்கு மன்னிப்பையும் மகிழ்வுடன் அநுபவிக்கின்றனர். புதிய ஏற்பாட்டின் ஆவிக்குரிய பலன்கள் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் (வெளி. *21:1-7;* வெளி. *21:22-27;* வெளி. *22:1-5* ஆகிய வசனங்களைக் காணவும்). இஸ்ரவேலுடன் தொடர்புடைய புதிய உடன்படிக்கையின் அரசியல், பொருள், உலக ரீதியான அம்சங்களில் சில இன்னும் நிறைவேற்றப்பட வேண்டியவைகளாக உள்ளன.

- **தேவனுடைய உடன்படிக்கை அன்பு**

இஸ்ரவேலர் மற்றும் தேவன் மேல் விசுவாசம் வைத்து இவ்விதம் அவருடன் தக்க விதத்தில் தொடர்பு கொண்டுள்ள எல்லா மக்கள் ஆகியோர் கொண்ட தேவனுடைய மீட்கப்பட்ட மக்கள் மேல் அவர் கொண்டுள்ள விசேஷித்த அன்பை விவரிப்பதற்குப் பழைய ஏற்பாட்டில் ஒரு தனிச் சிறந்த வார்த்தையான "Hesed" என்பது உள்ளது.

தேவனுடைய "Hesed" என்பது உணர்வின் அடிப்படையிலானதல்ல, ஆனால் தெய்வீகத் தேர்வின் அடிப்படையிலானது, மற்றும் இது பின்வரும் அடிப்படைக் கருத்துக்களை உள்ளடக்கியிருக்கின்றது.

- நிபந்தனையற்ற பற்று
- தவறாத உண்மைத் தன்மை
- தகுதியற்றிருந்தும் இரக்கம்
- முடிவில்லாத அன்பு

யாத். 34:6-7
எரே. 31:3
ஓசி. 2:19

ஆபிராகாம், மோசே, தாவீது மற்றும் புதிய உடன்படிக்கைகள் ஆகியவற்றிற்கிடையே உள்ள உறவுமுறைமை



Hesed என்பது சிலவேளைகளில் பின்வருமாறு மொழிபெயர்க்கப் பட்டுள்ளது:

- அன்பு
- இரக்கத்தன்மை
- என்றுமுள்ள அன்பு
- அன்பு கூரும் இரக்கம்

இது நன்முறையில், ''தேவனுடைய ஆர்வப்பற்றுடைய உடன்படிக்கை அன்பு'' என்று மொழிபெயர்க்கப்படலாம். மனிதரை இரட்சிப்பதற்காகத் தேவன் மனிதரிடத்தில் வந்து சேர்ந்தமைக்கு இதுவே அடிப்படையாக உள்ளது. தேவன் தம்முடைய மக்களை ஆசீர்வதிக்கும் பொழுது அல்லது தண்டிக்கும் பொழுது அது அவருடைய உடன்படிக்கை அன்பின் உண்மைத் தன்மையினுடைய காரணத்தினாலே நடைபெறுகின்றது.

பயிற்சி: ஆபிரகாமுடனான உடன்படிக்கையானது கிறிஸ்தவர்களுக்கு மிகவும் தனிச் சிறப்பு வாய்ந்ததாக இருப்பது ஏன்?

____

____

____

____

2. வேதாகமம் - வேதாகமவியல்

அ. உபதேசத்தின் முக்கியத்துவம்

வேதாகமத்தின் உபதேசமானது மிகுந்த திறனாய்வுக்குரியதாக, எல்லாவற்றிற்கும் அடிப்படை அஸ்திபாரமான உபதேசமாக உள்ளது, ஏனெனில் தேவனைப் பற்றியும் அவருடன் நமக்குள்ள உறவுமுறைமை பற்றியும் நாம் உண்மையில் அறிந்துள்ளவை யாவும் வேதவாக்கியத்திலிருந்தே வருகின்றன.

வேதாகமம் பற்றி நாம் நம்புவது என்ன என்கின்ற விஷயமானது மற்ற முக்கியமான உபதேசங்களைப் பற்றி நாம் நம்புகின்ற விஷயங்களைத் தீர்மானிக்கக் கூடிய பெரும் அளவையாக உள்ளது.

ஆ. வேதாகமத்தின் இயல்பு

- வெளிப்படுத்துதலாக

தேவன் தம்மைப் பற்றியும், தம்முடைய கிரியைகள் மற்றும் தம்முடைய சித்தம் ஆகியவைகளைப் பற்றியுமான ஒரு உண்மையான அறிவை வேதாகமத்தில் திரை நீக்கி அல்லது வெளிப்படுத்தி இருக்கின்றார். அத்துடன் கூடுதலாக, மனிதன் யார் என்பதையும் மனிதன் தேவனுடன் ஏற்புடைய வகையில் தொடர்பு படுத்தப்படுவது எவ்விதம் என்பதையும் தேவன் வேதாகமத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

வேதாகமப் படிப்பு முறைமைகள் என்ற பாட நூல் எண் 1ல் இருந்து நீங்கள் நினைவு கூரும் வண்ணம், தேவனுடைய வெளிப்படுத்துதலானது இரண்டு அடிப்படை வடிவங்களை மேற்கொண்டுள்ளது:

பொதுவான வெளிப்படுத்துதல் - தேவன்,

படைப்பு -	***சங். 19:1-6; ரோமர் 1:18-21***
மனிதன் -	***ரோமர் 2:12-16; பிர. 3:11***
வரலாறு -	***அப். 17:24-28***

ஆகியவற்றின் மூலம் தமது இருப்பு, பண்புகள் மற்றும் தெய்வீக வல்லமையைப் பொதுவாக வெளிப்படுத்தியுள்ள இடங்கள்.

பொதுவான வெளிப்படுத்துதல் என்பது சொல்லற்றது மற்றும் அது தேவனை இந்த அகிலத்தின் ராஜரீக படைப்பாளராக அறியப்படுத்துகின்றது.

விசேஷித்த வெளிப்படுத்துதல் - தேவன் தம்முடைய,

– **ஜீவனுள்ள வசனம்** - இயேசு கிறிஸ்து
  யோவா. 1:14-18
  யோவா. 14:6-9
  எபி. 1:1-3

– **எழுதப்பட்ட வசனம்** - வேதாகமம்
  2 தீமோ. 3:15-17
  யாவா. 5:39-40

ஆகியவற்றின் மூலம் தனிப்பட்ட வகையில் வெளிப்படுத்தியுள்ள இடங்கள். விசேஷித்த வெளிப்படுத்துதல் என்பது சொல்லப்பட்டதாக மற்றும் எழுதப் பட்டதாக உள்ளது, மேலும் இது தேவனைக் கர்த்தராகவும் மீட்பராகவும் அறியப்படுத்துகின்றது. வேதாகமத்தின் உபதேசமானது இந்த இரண்டாம் வகையான விசேஷித்த வெளிப்படுத்துதலின் மீது ஏற்படுத்தப்பட வேண்டியதாக உள்ளது - எழுத்து வடிவில் உள்ள தேவனுடைய சுயமான வெளிப்படுத்துதலானது, பொதுவான வெளிப்படுத்துத லில் உள்ள யாவற்றையும் கூட உள்ளடக்கியுள்ளது. வேதாகமத்தின் தேவன் தாம் யார், தாம் எவ்வாறு இருக்கின்றார், மற்றும் தாம் மனிதரிடத்தில் கேட்டுக் கொள்வது என்ன என்பவற்றை விளக்கப்படுத்தியுள்ளார்.

- ஒரு விளக்கம்: வேதாகமம் என்பது தேவனுடைய தெய்வீகமான படிப்படியான எழுதப்பட்ட வெளிப்படுத்துதலாக உள்ளது, இது அவர் யார் என்பதையும் அவருடன் மனிதனுக்குள்ள தொடர்பு பற்றியும் இவ்வகையில் வெளிப்படுத்துகின்றது.

- தேவனுடைய வசனம் என்ற வகையில்:
  வேதாகமம் உண்மையாகவே/நேரடியாகவே/அப்படியே தேவனுடைய வசனமாய் உள்ளது என்பது அதுவே கூறும் திகைப்பிற்குரிய உரிமைகோருதல் ஆகும்.
  மத். 15:3-9
  கொலோ. 1:25

வேதாகமம் என்பது உண்மையிலேயே தேவனுடைய வசனமாய் உள்ளது என்ற உறுதிப்பாட்டை நாம் விசுவாசத்தினால் ஏற்றுக் கொண்டால், அது தேவனைப் பற்றி நாம் நம்புவது என்ன என்பதில் மாபெரும் செல்வாக்கைச் செலுத்தும். ஏனெனில், தேவன் பேசுகின்ற பொழுது மனிதர் அதை கவனித்து, அதை இருதயத்தில் எடுத்துக் கொண்டு, அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் - மற்றும் தேவன் வேதாகமம் என்ற தம்முடைய வசனத்தில் பேசியுள்ளார்.

இ. வேதாகமம் பற்றிய மாறுபட்ட கண்ணோட்டங்கள்

- **விடுதலையியல்**

விடுதலையியல் என்பது மாறுபட்ட பல வடிவங்களை எடுத்திருந்தாலும், மற்றும் அது மாறுபட்ட பல ஆதரவாளர்களால் போதிக்கப்பட்டிருந்தாலும், வேத வசனத்தைப் பற்றிய இந்தக் கண்ணோட்டத்தை விவரிக்கின்ற பொதுமையான சில கூறுகள் உள்ளன.

விடுதலையியலானது பின்கண்ட கொள்கைகள் உடையதாகும்:

1. வேதாகமம் என்பது மனித எழுத்தாளர்களின் பிழைபடக் கூடிய உற்பத்திப் பொருளாகும்.
2. வேதாகமம் என்பது தேவனைப்பற்றி மனிதரின் சிந்தனைகளின் பதிவுகளைக் கொண்டதாகும்.
3. வேதாகமத்தின் இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களை உண்மை என்று ஏற்றுக் கொள்ள முடியாது.
4. வேதாகமத்தின் உண்மையென்பது மனித அறிவுப் பயன்பாடு மற்றும் அனு பவத்திற்கு உட்பட்டதாகும்.
5. வேதாகமத்தில் உள்ள எந்த உண்மையும் உணர்வின் பாற்பட்டதும் சார்புடையதுமான உள்ளதேயன்றி அது புற உண்மையின் பாற்பட்டதாகவோ மற்றும் முற்றானதாகவே இருப்பதில்லை.
6. வேதாகமம் என்பது தேவனிடமிருந்து வந்த தெய்வீகத்துவமான இயற்கைக்கு மேலான வெளிப்படுத்துதல் அல்ல.
7. தேவனல்லா, ஆனால் மனிதனே சத்தியத்தின் கடைசி அதிகாரம் கொண்டுள்ளான்.
8. தேவன் என்பவர் நாம் உணரக்கூடியவராக அல்லது அனுபவிக்கக் கூடியவராக மட்டுமே இருக்கலாம்.

இம்மானுவேல் கான்ட் (1724-1804) மற்றும் ஃபிரெடெரிக் ஸ்க்ளெயர் மேஷர் (1768-1834) போன்ற மனிதர்கள் விடுதலையியல் இயக்கத்திற்குப் பெரும் பங்களித்தவர்களாய் இருந்தார்கள்.

விடுதலையியலானது இயற்கைக்கு மேலானதை மறுக்கின்றது மற்றும் அது மனிதனின் காரண அறிவை மேன்மைப் படுத்துகின்றது.

- **புதிய - பழைமை வாதம்**

வேத வசனம் பற்றிய இந்தக் கண்ணோட்டமானது மாபெரும் அளவிலான குழப்பம் மற்றும் இரட்டுற மொழிதல் ஆகியவற்றினால் சூழப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தின் முக்கிய தோற்றுவிப்பாளராக இருந்தவர் கார்ல் பார்த் (1886-1968) ஆவார்.

புதிய - பழமை வாதமானது பொதுவாகப் பின்வரும் கொள்கைகளை உடையதாகும்:

1. வேதாகமம் தேவனுடைய வசனத்தை உடையதாய் இருக்கலாம் என்றிருக்கையில், அது தேவனுடைய வசனமாயிருப்பதில்லை, ஆனால் கிறிஸ்துவுக்கு, பிழைபடும் மனித சாட்சியாக மட்டுமே உள்ளது.
2. கிறிஸ்து தேவனுடைய வசனமாய் இருக்கின்றார், ஆனால் அவர் ஒருவரே தேவனைத் தனிப்பட்ட வகையில் எதிர்கொண்ட அனுபவம் பெற்றுள்ளார்.

3. தம்மைப் பற்றிய தேவனுடைய வெளிப்படுத்துதலானது வேதாகமத்தின் மூலமாக அல்ல ஆனால் அவரைத் தனிப்பட்ட விதத்தில் அனுபவித்தலின் மூலமாக மட்டுமே வருகின்றது.

4. வேதாகமத்தின் உண்மை என்பது சார்புடையதாகவும் உணர்வின் பாற்பட்டதாகவும் உள்ளது.

இவ்விதமாக, புதிய - பழைமை வாதம் என்பது வேத வசனத்தைப்பற்றி ஒரு தாழ்ந்த கண்ணோட்டமும், மனிதனின் உணர்வின் பாற்பட்ட அனுபங்களைப் பற்றி ஒரு உயர்வான கண்ணோட்டமும் கொண்டுள்ளது.

- **ரோமன் கத்தோலிக்கம்**

இந்தக் கண்ணோட்டமானது, சபையின் பாரம்பரியங்களும், வேதாகமத்தைப் பற்றிய அதன் விளக்கக் கண்ணோட்டங்களும் வேதாகமத்திற்கு உள்ளதைப் போன்ற அதே அதிகாரமும் மதிப்பும் உடையவைகளாய் உள்ளன என்ற கொள்கையைக் கொண்டுள்ளது. இவ்விதமாக வேதாகமமானது எதைப் போதிப்பதாகச் சபை கூறுகின்றதோ அதையே வேதாகமம் போதிக்கின்றது.

- **மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாத, சுவிசேஷ ஊழியத்துவப் பழைமை வாதக் கண்ணோட்டம்**

நமது வேதாகமக் கண்ணோட்டமானது பின்வரும் கொள்கைகளை உடையதாகும்:

1. வேதாகமம் என்பது தேவன் தம்மைப் பற்றி தெய்வீகமாக, இயற்கைக்கு மேலான வகையில் வெளிப்படுத்தியதாக உள்ளது.
2. வேதாகமத்தின் பிழையற்ற வசனங்கள் தேவனால் ஏவப்பட்டவைகளாக உள்ளன எனவே அவை அதிகாரமுடையவைகளாகும்.
3. வேதாகமம் தேவனுடைய புறவயத்தின் பாற்பட்ட முற்றான உண்மையாய் உள்ளது, இதன் மூலமாகவே வேறு எந்த ஒரு விஷயமும் சோதிக்கப்பட முடியும்.
4. வேதாகமம் உணர்வின் பாற்பட்டதோ அல்லது சார்புடையதோ அல்ல.
5. முழு வேதாகமும் கவனத்துடனும் படிக்கப்பட வேண்டியதாயிருக்கையில், அதன் உண்மையும் சரியான தன்மையும் மனிதரின் காரண அறிவையோ அல்லது அனுபவத்தையோ சார்ந்திருப்பதில்லை.

★ வேதாகமம் என்பது மனிதர்களுக்கு தேவனுடைய பிழையற்ற வசனமாய் இருக்க வேண்டும், அல்லது அது தேவனைப் பற்றி மனிதர்களின் பிழைபட்ட வசனமாயிருக்க வேண்டும் - அது இவ்விரண்டாகவும் இருக்க முடியாது!

வேத வசனத்தைப் பற்றிய ஒருவரின் கண்ணோட்டமானது அவர் சரியான உபதேசத்தில் மேம்பட்டு வளருதல் என்ற செயலில் குறிப்பிடத் தக்க பணியைச் செயல்படுத்துகின்றது.

பயிற்சி: வேதாகமம் பற்றிய இந்தப் பலவகைக் கண்ணோட்டங்களின் வேர் எது?

___

___

___

ஈ. வேதாகமத்தின் தொடக்கம்

ஏவுதல் மற்றும் பிழையற்ற தன்மை என்ற கருத்துக்களை நாம் கண்ணோக்கத் தொடங்குதையில், இந்த இரு சொற்றொடர்களுக்கும் மற்றும் வெளிப்படுத்துதல் என்பதற்கும் இடையில் உள்ள தொடர்பை சிந்தையில் வைத்துக் கொள்ளுதல் உதவி நிறைந்ததாக இருக்கின்றது.

வெளிப்படுத்துதல் = வேத வசனத்தின் செய்தி - இது செய்தித் தொடர்பின் செயல்முறையையும் மற்றும் பொருளடக்கத்தையும் உள்ளடக்குகின்றது.

ஏவுதல் = தேவன் தம்முடைய வெளிப்படுத்துதலைக் கொண்டிருந்த முறையானது வேத வசனம் என்ற எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட்டது.

பிழையற்ற தன்மை = விளைவான வேத வசனத்தின் முற்றான சத்தியம் மற்றும் மிகச் சரியான தன்மை.

வேதாகமத்தின் தொடக்கம் அல்லது ஆதார மூலம் என்பதற்கு உண்மையில் இரண்டு தெரிவுகள் மட்டுமே உள்ளன - தேவன் அல்லது மனிதன். வேதாகமம் தன்னைப் பற்றி என்ன கூறுகின்றது என்பதே தீர்மானிக்கும் காரணியாக உள்ளது, மற்றும் இது விசுவாசத்தினாலே நம்பப்பட வேண்டும்.

- **ஏவுதல்** - என்பது தேவன் சுவாசித்தார் என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது தேவன் தம்முடைய எழுத்து வடிவிலான வெளிப் படுத்துதலை செய்தித் தொடர்பு கொண்டு, பாதுகாத்த வழி முறையைக் குறிப்பிடுகின்றது.

(1) ***2 தீமோ 3:16***

இவ்விதமாக வேத வாக்கியங்களெல்லாம்
- தேவ ஆவியினால் அருளப்பட்டதாக உள்ளது மற்றும்
- பிரயோஜனமுள்ளதாயிருக்கின்றது.

இங்கு வேத வாக்கியத்தின் தெய்வீக ஆதார மூலம் வலியுறுத் தத்ததைப் பெறுகின்றது - தேவன் தாமே வேதவாக்கியங்களின் வசனம் யாவற்றிற்கும் மூலமாக உள்ளார்.

(2) ***2 பேது. 1:20-21***

இங்கு தேவனுடைய வசனங்களை எழுதுவதற்குப் பரிசுத்த ஆவியானவரால் கொண்டு போகப்பட்ட (அப். 27:15) அல்லது வழி நடத்தப்பட்ட மனித எழுத்தாளர்கள் வலியுறுத்தம் பெறுகின்றனர்.

மனித எழுத்தாளர்கள் பரிசுத்த ஆவியானவரால் செல்வாக்குச் செலுத்தப்பட்டவர்களாய் அல்லது இயக்கப்பட்டவர்களாயிருக்கை யில், மனிதர்கள் அல்ல ஆனால் வசனங்களே ஏவப்பட்டன (தேவன் சுவாசித்தார்). மிகச் சரியான தன்மை உறுதிப்படுத்தப் படுவதற்காக பரிசுத்த ஆவியானவர், இயேசு போதித்திருந்தவைகளை நினைப் பூட்டி எழுத்தாளர்களை எழுதக் கூடியவர்களாக்கவும் போதிக்கவும் செய்தார் என்று வேத வசனங்கள் குறிப்பிடுகின்றன.

- <u>ஏவுதலைப் பற்றிய சில தவறான கண்ணோட்டங்கள்</u>

  1. வேத வசனத்தின் ஒரு பகுதி மட்டுமே ஏவுதல் பெற்றதாக உள்ளது. இந்தக் கண்ணோட்டமானது ***2 தீமோத்தேயு 3:16***ஐ "ஏவப்பட்ட வேத வசனம் ஒவ்வொன்றும்" பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது என்று சரியற்ற வகையில் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பில் இருந்து வருகின்றது.

     <u>பதிலுரை:</u> ஒன்று வேத வசனங்கள் யாவும் ஏவுதல் பெற்றதாயிருக்க வேண்டும், அல்லது அதில் எதுவும் ஏவுதல் பெற்றதாயிராது. எந்த பாகங்கள் தேவனுடைய வசனங்கள் மற்றும் எந்த பாகங்கள் மனிதருடைய வார்த்தைகள் மட்டுமே என்று எதைக் கொண்டு நாம் தீர்மானிக்க முடியும்?

  2. தேவன், வசனங்களை "இயந்திர ரீதியாக எழுதக் கூறினார்," மனிதர்கள் உண்மையில் அவற்றை எழுதாமல், தங்களுக்குக் கூறப்பட்டவைகளைப் பதிவு மட்டுமே செய்தார்கள்.

     <u>பதிலுரை:</u> வேதாகமத்தை எழுதிய மனித எழுத்தாளர்களின் எழுத்துப் பாணி, வார்த்தைத் தேர்வு மற்றும் ஆளுமைத் தன்மைகள் யாவும் இந்தக் கண்ணோட்டத்திற்கு எதிராகவே வாதிடுகின்றன. இது தேவனால் தரப்பட்ட சுயாதீனமான சித்தத்தை மீறுவதா யிருக்கும்.

  3. மனிதர்களல்ல, வசனங்களே ஏவப்பட்டன.

     <u>பதிலுரை:</u> மனித எழுத்தாளர்கள் பரிசுத்த ஆவியானவரால் இயக்கப்பட்டு, செல்வாக்குச் செலுத்தப்பட்டனர், ஆனால் அவர்கள் எழுதிய வார்த்தைகள் ஏவுதல் ("தேவன் சுவாசித்தார்") பெற்றுள்ளன. இத்துடன், வசனப் பகுதியானது மனிதர்கள் ஏவப் பட்டார்கள் என்று கூறுவதில்லை. இந்தக் கண்ணோட்ட மானது வார்த்தையின் அதிகாரத்தைக் கீழ்ப்படுத்துவதாகவும், வசனத்தில் தவறுகளைக் காணக் கதவைத் திறக்கின்றதாகவும் உள்ளது.

ஏவுதல் என்பதற்கான வேதாக ரீதியிலான விளக்கம்:

ஏவுதல் என்றால் "தேவன் சுவாசித்தார்" என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது தேவனுடைய வசனத்தை எவ்விதத் தவறுமின்றி எழுதுவதற்கும் பாதுகாப்பதற்கும், மற்றும் அதை எழுதிய மனிதர் களின் ஆளுமைத் தன்மையை எவ்வகையிலும் மீறாதிருப்பதற்கும் வேத வசனத்தின் மனித எழுத்தாளர்களைப் பரிசுத்த ஆவியானவர் செல்வாக்குச் செலுத்தி இயக்கிய (***1 தெச. 2:13***ஐக் காணவும்).

<u>குறிப்பு:</u>
ஏவுதல் என்பது வேத வாக்கியங்களின் மூல வசனங்களுக்கு மட்டுமே தொடர்புடையதாக உள்ளது.

- **தவறற்ற தன்மை** - இது வேதாகமமானது தேவனால் கொடுக்கப்பட்ட தொடக்க நிலையில் தவறற்று உள்ளது என்று அர்த்தப்படுகின்றது. தவறற்ற தன்மையானது மூலப்பிரதிகளின் வசனங்களுடன் மட்டுப்படுத்தப் படுகின்றது, இது பிரதிகள் அல்லது மொழிபெயர்ப்புகளுக்கு இவைகள் தொடக்க அர்த்தத்தை அப்படியே தரும் நிகழ்வைத் தவிர, வேறு வகையில் பயன்படுத்தப்பட முடிவதில்லை.

  வேதாகமம் தவறற்றதாக உள்ளது ஏனெனில் இது ஏவப்பட்டுள்ளது - வேதாகமம் தேவனுடைய வசனமாய் இருப்பதால், இது தவறற்றதாக இருக்க வேண்டும். வேதாகமம் தவறுகள் உடையதாகும் என்று நீங்கள் நம்பினால், பின்வரும் இரண்டில் ஒன்று உண்மையாக உள்ளது -

  - ஒன்று, வேதாகமம் தேவனுடைய வசனம் அல்ல
  - அல்லது தேவன் உண்மையை உரைப்பதில்லை.

  <u>குறிப்பு:</u> ''வழுவாத் தன்மை'' என்பது தவறற்றது என்று அர்த்தப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றது, ஆனால் இன்றைய நாட்களில் இது, தவறற்ற தன்மையை மறுக்கின்றவர்களால், வேதாகமமானது மீட்பு மற்றும் விசுவாசம் ஆகியவை பற்றிச் சரியாகப் பேசுகின்றது, ஆனால் மனிதர், வரலாறு, புவியியல், அறிவியல், மற்றும் இது போன்ற விஷயங்களில் (வேதாகமத்தில்) தவறுகள் உள்ளது என்று அர்த்தப்படுத்தப் பயன்படுத்தப்படுவதாக உள்ளது. எடுத்துக்காட்டாக, ஆதி. 1-11 அதிகாரங்கள் நேரடியான உண்மைகளாய் இருப்பதில்லை, ஆனால் அவைகள் கற்பனைகளும் புராணங்களுமாகவே உள்ளன என்று விடுதலைக் கல்வியாளர்கள் கூறுகின்றனர். இப்படிப்பட்ட ஒரு கண்ணோட்டமானது தேவனுடைய வசனத்தை அவமதிக்கின்றது மற்றும் நமது இயல்பான, மனித குலம் சார்ந்த் சமூகத்திற்கு இடமுண்டாக்க ஏதுவாக உள்ளது.

★ஒன்று, தேவனுடைய வசனம் முழுவதும் உண்மையாய் உள்ளது அல்லது அதில் எதுவுமே உண்மையல்ல★

வேதாகமம் தேவனுடைய வசனமாக உள்ளது என்று நாம் நம்பினால், தேவனுடைய பண்பின் நிமித்தமாக அதில் பிழைகள் இருக்க முடியாது என்ற கருத்து தர்க்க ரீதியாகத் தொடருகின்றது.
யோவா. 17:7
ரோமர் 3:3-4
தீத்து 1:1-3

வேத வசனமும் கூட தன்னில் தவறற்ற தன்மை உள்ளதை உரிமை கோருகின்றது.
மத். 5:17-18
யோவா. 10:31-36

இயேசு தாமே, வேத வசனத்தின் மிகச் சரியான தன்மை பற்றி மிக உயர்வான கண்ணோக்கம் கொண்டிருந்தார் ***(மத். 22:29-33)***. மற்றும் சில வேளைகளில், வேதாகமத்தின் நம்பிக்கைக்குரிய தன்மையும் மிகச் சரியான தன்மையும் ஒரு வார்த்தை ஒருமையா அல்லது பன்மையா என்ற அளவுக்கு இறங்கி வருகின்றது - ''வித்து'' ***(கலா. 3:15-16)***.

மீண்டும், நீங்கள் வேத வசனத்தை தேவனுடைய வசனமாக உள்ளது என்று உறுதிப்படுத்தினால், நீங்கள் அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்துவீர்கள்.

இயேசுவும் மற்றும் வேத வசனத்தின் எழுத்தாளர்களும் கூட வேதாகம நிகழ்ச்சிகள் மற்றும் மக்களின் வரலாற்று ரீதியான உண்மை நிலையையும் மிகச் சரியான தன்மையையும் உறுதிப்படுத்தினார். எ.கா.:

<u>வசனக் குறிப்பு</u>	நிகழ்ச்சி
மத். 12:38-41	*(யோனா)*
மத். 2:3-6	*(இயேசுவின் பிறப்பிடமாக பெத்லகேமை முன்னுரைத்தல்*
2 கொரி. 11:3	*(ஏவாளும் சாதனையும்)*
1 தீமோ. 2:13	*(படைப்பின் விபரங்கள்)*
2 பேது. 3:1-16	*(வெள்ளப் பெருக்கு)*
மத். 24:36-38	*(நோவா)*
யோவா. 12:37-41	*(ஏசாயாவின் தரிசனம்)*

<u>முடிவுகள்:</u>

1. தவறற்ற தன்மை என்பது வேத வசனங்களினாலேயே உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.
2. தவறற்ற தன்மை என்பது வேத வாக்கியங்களின் மூல வசனங்களை, இப்பொழுதுள்ள பிரதிகளில் அடங்கியுள்ள யாவற்றையும் குறிக்கின்றது.
3. தொடக்க கால சபை வரலாற்றிலிருந்தே தவறற்ற தன்மை என்பது தீர்மானமுள்ளதாய் இல்லாத நிலையிலும் போதிக்கப்பட்டுள்ளது (எ.கா. அகுஸ்டின் மற்றும் அக்குவினாஸ்).
4. பிரதிகள் அல்லது மொழிபெயர்ப்புகளில் உள்ள சிறு தவறுகள் அல்லது கருத்து வேறுபாடுகள் மூல நூலின் சரியான தன்மையை ஒன்றுமற்றதாக்குவதில்லை.
   கடினமான வசனப் பகுதிகளை கையாளுவதற்கான வழிகாட்டுதல் களின் அட்டவணைக்கு வேதாகமத்தைப் படிக்கும் முறைமைகள் என்ற கைநூலைக் காணவும்.

நிரூபணமற்ற மாறுபாடுகளை நாம் எவ்வாறு கையாளுகின்றோம்? வேதாகமம் ஏவப்பட்டது மற்றும் தவறற்றது என்று நாம் யூகித்தால், நமது நிலைப்பாடானது பின்வருமாறு இருக்கும்:

தக்க வகையில் புரிந்து கொள்ளப்பட்டு, பொருத்தமான அனைத்துத் தகவல்களுக்கும் வழி பெற்றிருக்கையில், வேதாகமத்தில் உள்ள நிரூபணமற்ற மாறுபாடு ஒவ்வொன்றும் போதிய அளவில் விளக்கம் அளிக்கப்பட்டு, வேத வசனங்களின் எஞ்சிய பகுதியுடன் இசைவிக்கப்பட முடியும்.

விளக்கம் அளிப்பதற்குத் தக்க விதிகளைப் பின்பற்றுதலும் கூட சரியான முடிவை அடைவதில் பெரிதும் உதவ முடியும்.

பயிற்சி: ***2 சாமு. 24:1*** மற்றும் ***1 நாளா. 21:1*** ஆகியவற்றில் உள்ளதாகத் தோன்றுகின்ற முரண்பாடு எவ்விதம் ஒப்புரவாக்கப்பட முடியும்?

____

____

____

____

- **ஒளியூட்டுதல்** - என்பது "வெளிச்சமாக்குதல்" என்பதற்கு அர்த்தப் படுகின்றது மற்றும் இது, பரிசுத்த ஆவியானவரின் ஊழியமானது விசுவாசிகள் வேத வசனத்தைப் புரிந்து கொள்ளத் திறனளிப்பதுடன் அதை சத்தியம் என்று ஏற்றுக் கொள்ளவும் செய்கின்றது என்பதைக் குறிப்பிடுகின்றது.

  ஒளியூட்டுதல் என்பது பின்வருவனவற்றை வலியுறுத்துகின்றது:

  அ. ஆவிக்குரிய பக்குவம் உட்பட கிறிஸ்துவுடன் விசுவாசிக்கும் உள்ள உறவுமுறை.

  ஆ. தேவனுடைய சத்தியத்தைப் புரிந்து கொள்ள, ஏற்றுக் கொள்ள மற்றும் நடைமுறைப்படுத்தத் திறன். ***லூக். 24:45; மாற். 4:34*** ஆகியவற்றையும் காணவும்.
  நீங்கள் மீட்கப் படாமலும், ஆவிக்குள் நடவாமலும் இருந்தால், வேத வசனங்களைப் புரிந்து கொள்வதும் அவற்றை சத்தியம் என்று ஏற்றுக் கொள்வதும் இயலாததாக இல்லா விட்டாலும், கடினமானதாக இருக்கும்.

- **அதிகாரம்** - என்பது தெய்வீகமாய்த் தரவழைக்கப்பட்ட உரிமை மற்றும் வல்லமையைக் குறிக்கின்றது, தேவனுடைய வசனமும் இதைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

  அ. மற்ற ஒவ்வொன்றையும் அளவிடுகின்ற வகையில் முற்றான சத்தியத்தின் நம்பிகைக்கு உகந்த, சார்ந்திருக்கத் தக்க, குறிக்கோள் அளவான தராதரத்தை அமைத்தல்.

  ஆ. எல்லா மனிதருக்கும் மற்றும் கிறிஸ்துவுக்காகவும் சரியான நம்பிக்கை மற்றும் சரியான நடத்தையை முடிவு செய்தல்.

  இ. தேவனைப் பற்றியும் மனிதனின் ஆவிக்குரிய இயல்பு பற்றியும் அறிவின் நம்பத் தக்க ஆதார மூலத்தை மற்றும் அமுல் படுத்துதல் (மத். 7:28-29; மத். 28:18).

★ தேவனுடைய வசனத்தின் அதிகாரமுடைமையானது மனிதர்களின் பாரம்பரியங்கள், கலாச்சார நடவடிக்கைகள், அனுபவம், சபை போதகம், தத்துவம் மற்றும் கருத்துக்களைக் காட்டிலும் உயர்வானதாக உள்ளது.★
மத். 5:43-44; மத். 15:1-9

பயிற்சி: வேத வாக்கியத்தைப் பற்றிய உங்கள் கண்ணோட்டமானது வசனத்தைப் பற்றிய உங்கள் படிப்பு, பிரசங்கித்தல் மற்றும் போதனை ஆகியவற்றை எவ்வாறு பாதிக்கின்றது?

___

___

___

___

- ***ஏற்புடைய தன்மை*** - *ஏற்புடைய தன்மை என்பதன் கீழ் உள்ள விஷயமானது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் இன்றைய நாட்களில் நாம் பெற்றுள்ள புத்தகங்கள் வேத வசனங்கள் என்று புரிந்துணர்ந்து கொள்ளும்படியானது எவ்வாறு? என்பது உள்ளது.*

Canon = வேதாகமத்தில் இருக்க வேண்டியவைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல்கள்.

— <u>*அடிப்படை உறுதிப்பாடுகள்*</u>

1. *சரியான நூல்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டிருத்தலை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகப் பரிசுத்த ஆவியானவர் ஏற்புடைமையின் (Canonization) செயல்பாட்டை மேற்பார்வையிட்டார்.*

2. வேதாகமத்தில் உள்ள எந்தப் புத்தகமும் ஒரு சபைக் கூட்டத்தின் செயல்பாட்டினால் அவ்வாறு உட்படுத்தப்படவில்லை - சபைக் கூட்டங்கள் குறிப்பிட்ட அதிகாரமுள்ள புத்தகங்களின் ஏற்புடையத் தன்மையைப் புரிந்து கொள்ள மட்டுமே செய்தன.

3. ஏற்புடையத் தன்மையின் சோதனைகள்

   — ஒரு புத்தகமானது
   - அதிகாரமுடையது - இதில் தேவனுடைய வசனம் அடங்கப் பெற்றுள்ளதா?
   - தீர்க்கதரிசனமானது - இது தேவனுடைய மனிதர்களால் எழுதப்பட்டதா?
   - நம்பத்தக்கது - இது வரலாற்றுப் பூர்வமாக நம்பத் தக்கதா?
   - இயங்குகின்றது - இது வாழ்வை மாற்றும் வல்லமை கொண்டுள்ளதா?
   - ஏற்றுக் கொல்ளப்படுவது - இது சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பயன்படுத்தப்படுகிறதா?

   தேவன் அருளியுள்ள புத்தகங்களை சபைக் கூட்டங்கள் ஏற்றுக் கொள்ள மட்டுமே செய்துள்ளன.

— <u>பழைய ஏற்பாட்டின் ஏற்புடையதன்மை</u>

- இது இயேசுவின் காலத்தில் 39 புத்தகங்களாகவும் எபிரெய வேதாகமத்தின் அடிப்படைப் பிரிவுகளாகவும் நிறைவு செய்யப்பட்டிருந்தது.
  மத். 5:17
  லூக். 11:50-51
  லூக். 24:44

- இது எபிரெயப் பழைய ஏற்பாட்டின் 22 புத்தகங்கள் என்று வரலாற்றாளரான யோசிப்பஸ் (கி.பி. 37-100) என்பவரால் உறுதிப் படுத்தப்பட்டது, இதுவே இன்றைய நாட்கள் நமக்குள்ள 39 புத்தகங்களாகவும் உள்ளது.

- யூதாவில் யோப்பாவுக்கும் காசாவுக்கும் இடையில் இருந்த ஜமினியா என்ற இடத்தில் போதிக்கும் வீடு ஒன்றிருந்தது, இங்கு கி.பி. 90ல் பழைய ஏற்பாட்டின் ஏற்புடைய தன்மை விவாதிக்கப்பட்டு அடிப்படையாக உறுதிப்படுத்தப்பட்டது.

- சபையின் முற்பிதாக்கள் இன்றைய நாட்களில் உள்ளது போலவே ஏற்புடைய தன்மை கொண்ட நூல்களை சீராக ஒத்துக் கொண்டனர்.

- "தள்ளுப்படி ஆகமத்தில்" 14 நூல்கள் அடங்கியுள்ளன, இவை பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு காலங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் எழுதப்பட்டன, இவை இலத்தீன் வல்கேட் மொழி பெயர்ப்பில், தொடக்க கால KJV ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டன மற்றும் இவை இன்றும் கூட கத்தோலிக்க மற்றும் புதிய ஆங்கில வேதாகமங்களில் ஒரு பாகமாக உள்ளன. இந்தத் தள்ளுப்படி நூல்கள் (மறைவான அல்லது இரகசியமானவை) ஏற்புடைய தன்மைக்கான சோதனைகளில் வெற்றி பெறாமையால் பெரும்பாலான பழைமைவாத சுவிசேஷ ஊழியத்துவங்களினால் பொதுவாக அங்கிகரிக்கப் படுவதில்லை. இவைகள் மிகச் சிறிய அளவுக்கே ஆவிக்குரிய மதிப்பைக் கொண்டுள்ளன மற்றும் இவைகள் தேவனால் ஏவப்பட்டவை அல்ல என்பது தெளிவாகின்றது. இந்த நூல்களில் சில, 1 எஸ்தராஸ், தொமியா, யூதித், எரேமியாவின் நிருபம், 1 மற்றும் 2 மக்காபேயர்கள், மற்றும் சாலமோனின் ஞானம், முதலியவற்றை உள்ளடக்குகின்றன.

— <u>புதிய ஏற்பாட்டின் ஏற்புடைய தன்மை</u>

புதிய ஏற்பாட்டின் ஏற்புடைய தன்மையானது நியாயமான அளவு தெளிவான வரலாற்றைக் கொண்டுள்ளது.

- <u>ஏற்புடைய தன்மைக்குச் சோதனைகள்</u>
  1. இது ஏவுதலின் அடையாளங்களைக் கொண்டுள்ளதா?
  2. இது ஒரு அப்போஸ்தலரால் அல்லது அவரது அதிகாரத்தின் கீழ் (இன்னொருவரால்) எழுதப்பட்டுள்ளதா? எடுத்துக்காட்டாக, மாற்கு ஒரு அப்போஸ்தலரல்ல, ஆனால் அவர் பேதுருவால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டார். லூக்கா தம்முடன் பயணம் சென்ற பவுலினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டார்.
  3. இது சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பயன்படுத்தப்பட்டதா?

* <u>பிற ஆதாரம்</u>
    1. புதிய ஏற்பாட்டு நிருபங்கள் சபைகளின் மத்தியில் சுற்றுக்கு விடப்பட்டன. **கொலோ. 4:16**
    2. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தங்களின் எழுத்துக்கள் தேவனுடைய வசனங்களாயிருந்தன என்று ஒப்புகையளித்தார்கள். **1 தெச. 2:13**
    3. பவுலின் எழுத்துக்கள் வேத வாக்கியங்கள் என்று பேதுரு அங்கிகரித்தார். **2 பேது. 3:15-16**
    4. இன்றைய நாட்களில் நாம் கொண்டுள்ள புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களையும் ஏற்புடையவைகள் என்று கி.பி. 397ல் கார்த்தேஜில் கூடிய சபை ஆலோசனைக்குழு உறுதிப்படுத்திற்று.

* **வேதாகம வசனப் பகுதிகளின் நம்பகத் தன்மை**

வேதாகமத்தினுடைய புத்தகங்களின் எந்த ஒரு மூல நூலும் நம்மில் இல்லையாதலால், நாம் வைத்துள்ளது மிகச் சரியானது என்று நாம் எவ்வாறு அறிய முடியும்?

பழைய ஏற்பாடு

* எபிரெய வேதபாரகர்கள், 1947ல் சவக் கடல் சுருள்கள் கண்டறியப்பட்ட பொழுது அந்தப் பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களைக் கவனத்துடன் பிரதியெடுத்தார்கள். அவை கி.மு. சுமார் 150ல் எழுதப்பட்டவைகளாய் இருந்தன ஆனாலும் கி.பி. 800ல் பயன்படுத்தப்பட்ட பிரதிகள் போலவே மிகச் சரியாக இருந்தன.

* சவக் கடல் சுருளில் இருந்த ஏசாயாவின் புத்தகமானது வசனப் பகுதியின் மிகச் சரியான தன்மை பற்றி உறுதிப்படுத்தியது மட்டுமின்றி ஏசாயா 1-39 மற்றும் 40-66 பகுதிகள் மாறுபட்ட இரண்டு எழுத்தாளர்களால் எழுதப் பட்டன என்ற கோட்பாடுகளையும் பொய்யென்று நிரூபித்தது. முழுப் புத்தகமும் ஒரே சுருளில் காணப்பட்டது மற்றும் அதிகாரம் 39 முடிந்த அதே பத்தியிலேயே அதிகாரம் 40 தொடங்கிற்று.

புதிய ஏற்பாடு

* புதிய ஏற்பாடு 5000க்கும் மேற்பட்ட கையெழுத்துப் பிரதிகளைக் கொண்டுள்ளது, இது உலகப் பிரகாரமானதோ அல்லது மதரீதியானதோ எந்தப் பழங்கால எழுத்துக்களிலும் இது மிகவும் சிறந்தது என்ற உத்தரவாதத்தைப் புதிய ஏற்பாட்டுக்குத் தந்துள்ளது.
* நாம் கொண்டுள்ள எல்லாப் பிரதிகளிலும் குறைந்தது 105% மூல வசனப் பகுதியைக் கொண்டுள்ளோம், அதாவது வசனப் பகுதி எதுவும் தவறவில்லை, ஆனால் சில பிரதிகளில் கூடுதலாகச் சில விஷயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
* புதிய ஏற்பாட்டின் மிக முந்திய துண்டானது கி.பி. 135ல் எழுதப்பட்டதாகத் தேதியிடப்பட்டுள்ளது.
* மிகவும் முழுமையான புதிய ஏற்பாட்டுப் பிரதிகள் கி.பி. 4ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகத் தேதியிடப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய இரண்டுமே குறிப்பிடத் தக்க அளவில்

- ஒருமைப்பாடு
- சீர்த்தன்மை
- மிகச் சரியான தன்மை
- இணை மேற்கோள்கள் முதலியவற்றைக் காண்பிக்கின்றன.

- **வேதாகம விமர்சனம்**

வேதாகமத்தின் சரியான அர்த்தத்தையும் பயன்பாட்டையும் தீர்மானிக்க, வேதாகமத்தைக் கவனமாகப் படித்து ஆராய்தல் **(எஸ்றா 7:10-11; அப். 8:26-31; அப். 17:11; 2 தீமோ. 2:15)** என்பது ஒரு விஷயமாயிருக்கின்றது. ஆனால் அவிசுவாசமான இருதயத்துடன் வேதாகமத்திடம் வந்து, அதைப் பொய்யென்று நிரூபிக்கவும் அதன் மிகச் சரியான தன்மை இல்லாததென்று உறுதிப்படுத்தவும் முயற்சித்தல் என்பது வேறு விஷயமாயிருக்கின்றது.

பகுத்தறிவு வாதம், விடுதலையியம் மற்றும் புதுப் பழைமை வாதம் ஆகியவற்றின் வளர்ச்சியினால், வேதாகமத்தைப் படிப்பதில் இன்றும் புகழ் பெற்றுள்ள பல அணுகுமுறைகள் வளர்ந்துள்ளன, ஆனால் இவை தேவனையோ அல்லது வேதாகமத்தையோ கனம் செய்வதில்லை.

— உயர்நிலை விமர்சனம் (சில வேளைகளில் நேரடியான விமர்சனம் என்று அழைக்கப்படுகின்றது) என்பது ஒரு பதிவின் வசனப் பகுதியானது உள்ளான மற்றும் புறம்பான ஆதாரத்தின் அடிப்படையில் உண்மையானதாக உள்ளதா அல்லவா என்று தீர்மானிக்கும் ஒரு முறைமையாக உள்ளது. இது மனித காரண அறிவின் அடிப்படையிலானதாகவும், இயற்கைக்கு மேலான வற்றிற்கு எதிரான கருத்துக் கொண்டதாகவும் உள்ளது. உயர்நிலை விமர்சகருக்கு, புறம்பான ஆதாரமானது வசனப் பகுதியின் சாட்சியத்தை விட அதிக கனமான விஷயங்களைக் கொண்டுள்ளது போலக் காணப்படுகின்றது.

— பழைய ஏற்பாட்டு உயர்நிலை விமர்சனம் என்பது வழக்கமாக பழைய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள், காலம் மற்றும்/அல்லது, அதன் எல்லா அல்லது பகுதிகளின் ஒருமைப்பாடு ஆகியவற்றை மறுத்துரைக்கும் அணுகுமுறையை எடுத்துக் கொண்டுள்ளது.

மிகப் பொதுவான இரண்டு உதாரணங்கள் பின்வருமாறு:

(1) நான்கு மாறுபட்ட எழுத்தாளர்கள் பஞ்சாகமத்தை எழுதினார்கள் மற்றும் பின்னாளில் சில பதிப்பாளர்கள் அதை ஒன்றாக இட்டனர் என்ற கோட்பாட்டைத் தரும் பதிவேடு கருதுகோள் (JEDP) என்பதை வளரச் செய்த ஜூலியஸ் வெல் ஹாவ் சென் (1876) போன்ற மனிதர்களால், பஞ்சாகமத்தை (ஆதி. - உபா.) எழுதியவர் மோசே என்பது மறுக்கப்படுதல்.

J = "Jehova" Source;
E = "Elohim" Source;
D = "Deuternonomy Source;
P = "Priestly" Source

வெல்ஹாவ்சனின் கோட்பாடானது ஆதி. 1 மற்றும் 2ல் படைப்பு பற்றியும் இரு விபரங்களின் அடிப்படையை பெரும்பாலும் கொண்டதாகும்; தேவனுக்குப் பயன்படுத்தப்பட்ட மாறுபட்ட பெயர்கள் (ஏலோஹிம் எதிர். யாவே);

மற்றும் எழுச்சு நடையிலும் சொல்பாட்டிலும் உள்ளதாக யூகிக்கப்படும் வேறுபாடுகள். இது இயற்கைக்கு மேற்பட்டதற்கு எதிரான ஒரு பலத்த கருத்தை வெளிப்படுத்துகிறது. உண்மையில் படைப்பு பற்றி தரப்படும் இரு விபரங்களும் ஒன்றையொன்று நிறை செய்பவைகளாய் உள்ளன - ஆதி. 1 பொதுவான விபரத்தை முன் வைக்கையில், ஆதி. 2, 6ம் நாளில் மனிதன் படைக்கப்பட்டதன் மீது கவனம் செலுத்துகின்றது. ஏலோஹிம் என்பது தேவனுக்கு ஒரு பொதுப் பெயராயிருக்கையில், யாவே என்பது அவருடைய தனிப்பட்ட பெயராக உள்ளது.

(2) ஏசாயா புத்தகத்தின் *1-39* அதிகாரங்களும், *40-66* அதிகாரங்களும் இரு வேறு எழுத்தாளர்களால் எழுதப்பட்டது என்ற கோட்பாடானது அவற்றின் ஆய்வுக் கருத்து, நோக்கம் மற்றும் மொழிநடை முதலியவற்றில் வேறுபாடு உள்ளது என்று யூகிக்கப்படுவதின் காரணத்தினால் உண்டானது. இந்தக் கோட்பாட்டின் ஒரு பகுதியானது பகுதி 2ல் *(எ.கா. ஏசா. 44:28-45:4)* உள்ள முன்னுரைப்பு தீர்க்கதரிசனத்தின் நிரூபணமற்ற சாத்தியமின்மையின் அடிப்படையில் அமைந்துள்ளது. சவக்கடல் சுருள்கள் நிரூபித்துள்ளதன் வகையில் உண்மையில் இக்கோட்பாட்டிற்கு அடிப்படை எதுவும் இருப்பதில்லை. ஏசாயாவின் இரு பகுதிகளுமே தேவனை இஸ்ரவேலின் பரிசுத்தர் என்று குறிப்பிடுகின்றன, மற்றும் இவ்விரு பகுதிகளிலிருந்துமே புதிய ஏற்பாட்டில் இயேசு மேற்கோள் காட்டி, இவை இரண்டும் ஏசாயாவினுடையவைகள் என்று குறிப்பிடுகின்றார்.

வேத வாக்கியங்கள் ஏவுதல், தவறற்ற தன்மை மற்றும் அதிகாரம் உடையவை என்பதைப் பற்றி தாழ்ந்த கண்ணோக்குடையவர்களிடமிருந்து உயர்நிலை விமர்சனங்கள் வருகின்றன.

<u>புதிய ஏற்பாட்டு உயர்நிலை விமர்சனம்</u>

இதுவும் பழைய ஏற்பாட்டு உயர்நிலை விமர்சனம் போன்றே தவறான அதே கோட்பாடுகளின் மீது அமைந்துள்ளது, ஆனால் குறிப்பான மூன்று இலக்குகளை மேம்படுத்திக் கொண்டுள்ளது.

- <u>ஆதார மூலம் பற்றிய விமர்சனம்</u>
  இது புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் பயன்படுத்தப்பட்டுள்ள உண்மைகளுக்கான எழுதப்பட்ட மற்றும் வாய்மொழியான மனித ஆதாரங்கள் மீது கவனம் செலுத்த நாடுகின்றது, எனவே இது வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டது என்பதை மறுக்கின்றது. இது ஒரு பகுதியில், மத்தேயு - மாற்கு - லூக்கா ஆகியவற்றையும் லூக்கா *1:1-4*ன் ஆதார மூலங்களின் கூற்றையும் ஒப்புரவாக்குதலில் உள்ள தொகுத்துக் கூறும் பிரச்சனையினால் மேம்படுத்தப்பட்டது. மனித எழுத்தாளர்கள் மற்ற ஆதார மூலங்களைச் சார்ந்து அவற்றிலிருந்து கருத்துக்களைக் கடனாகப் பெற்றுள்ளனர் என்றும் மற்றும் அவர்களின் தெய்வீக எழுத்துருவாக்கத்தை மறுத்தும் ஆதார மூல விமர்சகர்கள் வழக்கமாக உறுதிப்பாடு செய்கின்றனர்.

- <u>வடிவமைப்பு விமர்சனம்</u>
  இது உண்மையில் கூறப்பட்டதும் செய்யப்பட்டதும் வசனப்பகுதியில் எழுதப் பட்டதற்கு எதிர்ப்பாக உள்ளது என்று தீர்மானிக்க நாடுகின்றது. இது சபை அல்லது மத சமூகம் முதலியவற்றால் சுவிசேஷங்களின் வடிவம் மற்றும் வசனப் பகுதிகளை உருவாக்க வாய் மொழிப் பாரம்பரியங்களும், கூற்றுகளும் மற்றும் நிகழ்ச்சிகளும் பயன்படுத்தப்பட்டன அடையாளப்படுத்த நாடுகின்றது. இவ்விதமாக, வடிவமைப்பு விமர்சகர்கள் வசனப்பகுதியானது தேவனால் தரப்படவில்லை என்று உறுதிப்படுத்துகின்றனர்.

- <u>பதிப்பு விமர்சனம்</u>
  இது புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் பயன்படுத்தப்பட்ட ஆதார மூலங்களையும், வசனப் பகுதிகளைக் கட்டியமைக்க எவரொருவராலும் பயன்படுத்தப்பட்ட பதிப்பித்தல் செயல்முறைகளையும் ஒரு குறிப்பிட்ட இலக்கிய அல்லது இறையியல் நோக்கத்திற்குரியதாகத் தீர்மானிக்க நாடுகின்றது. பதிப்பு விமர்சகர், வசனப் பகுதியானது பின்னாட்களில் இருந்த ஆதார மூலங்களைப் பயன்படுத்தி பதிப்பாளர் சிலரால் செயற்கையாக உருவாக்கப்பட்டதென்று உறுதிப்படுத்துகின்றார்.

— தாழ்ந்த அல்லது வசன ரீதியான விமர்சனம்
இது கிடைக்கின்ற எல்லாப் பிரதிகளையும் மற்றும் வேதாகமம் எழுதப்பட்ட "சந்தர்ப்ப சூழ்நிலைகள்" பலவற்றையும் (எ.கா. வரலாற்று ரீதியான, கலாச்சார ரீதியான, மொழி ரீதியான, அரசியல் ரீதியான, சமூக ரீதியான, மத ரீதியான சூழ்நிலைகள் யாவற்றையும்) கருத்தில் கொண்டு சரியான மூலப்பொருளையும் சரியான விளக்கவுரையையும் தீர்மானிக்க, விவிலிய விளக்கங்களையும் விளக்கவுரைகளின் விதியையும் பயன் படுத்துகின்ற ஒரு கல்விப்புலம் ஆகும்.

தக்க வகையில் பயன்படுத்தப்பட்டு மற்றும் வேத வசனங்களின் சரியான கண்ணோக்குடன் இருக்கும் பொழுது தாழ்ந்த அல்லது வசன ரீதியான விமர்சனமானது வேத வசனத்திற்கு பழைமைவாத சுவிசேஷக அணுகுமுறையை மிகச் சரியான வகையில் விளக்கம் அளிக்கின்றது இது,
— ஏவுதல்
— தவறற்ற தன்மை மற்றும்
— அதிகாரமுடைமை ஆகியவற்றை யூகிக்கின்றது,
ஆனால் தேவன் கேட்டுக் கொள்கின்றபடி வசனத்தை கவனமாகவும் ஊக்கமாகவும் படிப்பதை நாடுகின்றது.

பயிற்சி: வேதாகம விமர்சனத்தின் எந்த வகைகள் சட்டப் பூர்வமானவை களாகவும் உதவி நிறைந்தவைகளாகவும் உள்ளன? ஏன்?

____

____

____

____

3. இயேசு கிறிஸ்து - கிறிஸ்து இயல்

அறிமுகம் - இயேசு கிறிஸ்து யார்?

ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்பு, இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் இரண்டு கேள்விகளைக் கேட்டார் அவை இன்னமும் மனிதர்களின் இருதயங்களிலும் சிந்தைகளிலும் ஒலித்துக் கொண்டுள்ளன.

1. "மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்?"
2. "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" **(மத். 16:13-16).**

முதல் கேள்விக்கு மக்கள் பலரும், மத அமைப்புகளும், மற்றும் தத்துவ ஞானிகளும் பல்வேறு பதில்களை ஆலோசனையாக அளித்துள்ளனர். சிலருக்கு இயேசு ஒரு தீர்க்கதரிசியாக இருக்கின்றார், மற்றவர்களுக்கு அவர் ஒரு மாபெரும் போதகராக இருக்கின்றார், மற்றும் இன்னும் பிறருக்கு அவர் ஒரு நல்ல, ஒழுக்கம் நிறைந்த மனிதராக, பின்பற்றத் தகுதியான தனிச் சிறந்த வாழ்வைக் கொண்டவராக மட்டும் இருக்கின்றார்.

ஆனால், இரண்டாவது கேள்விக்கான பதில் மிகவும் பெரிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஏனெனில் ஒவ்வொரு தனிநபரின் பதிலிலும் அவர்களின் நித்திய அடைவிடம் **(யோவா. 3:36)** மட்டுமின்றி, இங்கு இப்பொழுது அவர்களின் வாழ்வினுடைய அர்த்தம் நிறைந்த தன்மையும் கனி தரும் தன்மையும் கூட சார்ந்துள்ளன **(யோவா. 10:10; கொலோ. 3:3-4; கலா. 2:20)**. இவ்விதமாக "இயேசு கிறிஸ்து யார்?" என்பதே காலங்கள் தோறும் இறையியலின் மையமான, உலகளாவிய விஷயமாக இருந்துள்ளது, இன்னமும் உள்ளது. மற்றும் அவர் யாரென்று வேதாகமம் கூறுகின்றபடியே - மாம்சத்தில் வந்தவனாக - அவர் இருப்பதால் எங்குமுள்ள எல்லா மக்களும் மதத்தைப் பற்றியல்ல, ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவனுடன் சரியான உறவுக்குள் வந்து வாழ்தல் பற்றியே அக்கறையுள்ளவர்களாயிருப்பது அவசியம் **யோவா. 14:6**.

ஆகையால், கிறிஸ்துவைப் பற்றிய போதனையைக் காட்டிலும், படிக்க வேண்டிய மிக முக்கியமான போதனை வேறெதுவும் இல்லை. ஏனெனில் தேவன் யார் என்றும் அவர் எது போன்றுள்ளார் ***(யோவா. 1:18)*** என்றும் மனிதருக்கு விளக்குவதற்காக மட்டுமின்றி, மனிதர் யார் என்றும் மனிதர் எது போன்றிருக்கும்படி தேவன் நோக்கங் கொண்டுள்ளார் என்றும் செயல்விளக்கப்படுத்துவதற்காகவும் கூட ***(1 பேது. 2:21; 1 கொரி. 15:45-49)*** இயேசு மனித வடிவத்தை எடுத்தார் ***(பிலி. 2:5-11)***. எனவே கிறிஸ்துவைப் பற்றிய தக்கதொரு உபதேசப் படிப்பானது தேவனைப் பற்றியும் மனிதரைப் பற்றியும் அதிகமாகவும், மனிதர் தேவனுடனும் பிற மனிதர்களுடனும் தக்க வகையில் உறவுபடுதல் பற்றி அதிகமாகவும் வெளிப்படுத்தும். உபதேசம் பற்றிய நமது படிப்புகள் எல்லாவற்றிலும் போலவே இயேசு கிறிஸ்துவைப் பற்றிவேதாகமம் என்ன கூறுகின்றது என்பதிலும் நாம் ஏறக்குறைய தனிப்பட்ட வகையில் கவனம் செலுத்துவோம்.

கிறிஸ்து இயலின் திறவுகோல் வசனப் பகுதிகள்

இயேசு கிறிஸ்துவைப் பற்றி முக்கிய வசனப் பகுதிகள் ஏராளமாயிருக்கையில், பின்வருபவை சிறப்பான குறிப்பிடுதல்கள் உள்ளவையாகவும் கவனத்துடன் படிக்கப்பட வேண்டியவைகளாகவும் உள்ளன:

யோவா. 1:1-18
ரோமர் 5:12-20
எபே. 1:3-10
பிலி. 2:5-11
கொலோ. 1:15-22
கொலோ. 2:9-15
எபி. 1:1-9

இயேசு யார் மற்றும் அவர் என்ன செய்யும்படி வந்தார் என்பவை பற்றிய போதனையில் இந்த வசனங்கள் சிறப்பான முக்கியத்துவம் வாய்ந்தவைகளாய் உள்ளன.

அ. **இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்துவம்**

இயேசு தேவனாக இருக்கிறார் என்று வேத வசனத்திலிருந்து செயல்விளக்கப் படுத்துதல் விமர்சனத்துக்கு உட்பட்டதாக/இடர்ப்பாடு மிக்கதாக உள்ளது.

1. *அவருடைய முன் இருத்தல் நிலை*

- இயேசு தம்முடைய மனித அவதாரத்திற்கு முன்பே இருந்தார்.
யோவா. 1:1-2, 14
யோவா. 1:30
யோவா. 6:38
யோவா. 17:5

2. *அவருடைய நித்திய தன்மை*

- இயேசு மனிதராவதற்கு முன்பே இருந்தார் என்பது மட்டுமின்றி, அவர் நித்தியமானவராய் இருப்பதாகக் கூறப்படுகின்றார், இது தேவனுக்கு மட்டுமே உரிய பண்பாக உள்ளது.
ஏசா. 9:6-7
யோவா. 8:58
எபி. 13:8
வெளி. 1:4-8
வெளி. 22:12-13

3. *அவருடைய தெய்வீக இயல்பு*

- இயேசு முழுமையும் தெய்வீகமானவராக இருக்கிறார்.

  — சாரப் பொருளில் இயேசுவும் பிதாவும் ஒன்றாயிருக்கின்றனர்.
  யோவா. 10:30

  — இயேசு முழுமையும் தேவனாகவும், எல்லா தெய்வீக இயல்பும் சாரமும் உருப் பெற்றவராகவும் இருந்தார்.
  பிலி. 2:6
  கொலோ. 1:15
  கொலோ. 2:9
  எபி. 1:3

  — இயேசு மனிதருக்கு தேவனுடைய இயல்பையும் பண்பையும் வெளிப்படுத்தினார்.
  யோவா. 1:14, 18
  யோவா. 14:9-11
  எபி. 1:2

— இயேசு திரித்துவத்தின் ஒருங்கிணைந்த பாகம் என்று குறிப்பிடப் படுகின்றார்.
மத். 28:19
2 கொரி. 13:14

- தேவனுக்கு மட்டுமே உரிய தெய்வீகப் பண்புகளை இயேசு காட்சிப் படுத்தினார்.

— சர்வ வல்லமை — கிறிஸ்து புயலை அமர்த்தினார்.
லூக். 8:22-25

— சர்வ ஞானம் — மனிதருள்ளத்தில் இருந்ததை கிறிஸ்து அறிந்தார்.
யோவா. 2:24-25

— எங்கும் நிறைந்த தன்மை — கிறிஸ்துவின் பிரசன்னமும் வல்லமையும் வெளியினால்/இடத்தினால் வரையறுக்கப்படவில்லை.
யோவா. 1:48-49
மத். 8:5-13

— மாறாத தன்மை — கிறிஸ்து ஒருக்காலும் மாறுவதில்லை.
எபி. 13:8

— ஜீவன் — கிறிஸ்து ஜீவனை சுதந்தரித்துக் கொண்டுள்ளார்.
யோவா. 5:26

- தேவன் மட்டுமே செய்யக் கூடிய செயல்களை இயேசு நிகழ்த்தினார்.

— தண்ணீரின் மேல் நடந்ததினால் இயேசு இயற்கை விதிகளைக் கடந்து நின்றார்.
மாற். 6:47-51

— பிறவியிலேயே பார்வையற்றிருந்த மனிதருக்கு இயேசு பார்வையை திருப்பித் தந்தார்.***யோவா. 9:1-7***

— இயேசு பாவங்களை மன்னித்தார். ***மத். 9:1-7***

— இயேசு மரித்தவரை உயிரோடு எழுப்பினார். ***லூக். 7:11-15***

- இயேசு படைப்பில் ஈடுபட்டிருந்தார் மற்றும் எல்லாவற்றையும் நிலைநிறுத்துபவராக உள்ளார்.

யோவா. 1:3
கொலோ. 1:16-17

4. <u>அவருடைய பெயர்களும் இயற்பெயர்களும்</u>

இயேசுவின் பெயர்களும் இயற்பெயர்களும் அவருடைய தெய்வீகத்துவத்தைச் சுட்டிக் காண்பிக்கின்றன.

இயேசு = கர்த்தர் மீட்பாயிருக்கிறார், ***மத். 1:21***
இம்மானுவேல் = தேவன் நம்மோடிருக்கிறார், ***மத். 1:23***

கிறிஸ்து = அபிஷேகம் பண்ணப்பட்டவர் (தேவனுடைய மேசியா), **மத். 11:1-6; மத். 16:16.**

யாவே = பழைய ஏற்பாட்டின் "**இருக்கிறவர்**" (**யாத். 3:14**ஐக் காணவும்) என்பதாகவே தாம் இருந்ததாக இயேசு கூறினார் (**யோவா. 8:58).**

கர்த்தர் = பழைய ஏற்பாட்டின் அதோனாயி என்பதற்குச் சமமான புதிய ஏற்பாட்டுச் சொல், **2 பேது. 1:11**

தேவன் = பழைய ஏற்பாட்டின் ஏலோஹிம் என்பதற்குச் சமமான புதிய ஏற்பாட்டுச் சொல், **2 பேது. 1:1**

தேவனுடைய குமாரன் = இந்த இயற்பெயரானது பிதாவுடன் இயேசுவுக்குள்ள நித்தியமான உறவை விவரிக்கிறது, மற்றும் இது ஒரு சில கால கட்டத்தில் (எ.கா. பிறப்பு, ஞானஸ்நானம், உயிர்த்தெழுதல் முதலியன) இயேசு தேவனுடைய குமாரன் ஆனார் என்று மறைமுகமாய் உணர்த்துவதில்லை. கிறிஸ்து எப்பொழுதுமே பிதாவுடன், குமாரன் என்ற உறவுக்கு உட்பட்டிருந்தார், **யோவா. 3:16-17; கலா. 4:4.** இந்த இயற் பெயரானது இயேசுவுக்கு/பயன்படுத்தப்பட்ட போது யூதர்கள் அவர் மீது தேவ தூஷண(அதாவது - தேவன் என்று உரிமைகோரியதாக)க் குற்றம் சாட்டினார்கள் **மத். 26:62-66.**

மனுஷ குமாரன் = இது இயேசு தம்மைப் பற்றிக் கூறிக் கொண்ட அவருக்குப் பிரியமான இயற்பெயராய் இருந்தது. ஆனால் இதுவும் கூட **மத். 26:62-66** தெளிவாக்குகிறபடி தேவனாக இருப்பதாக உரிமைகோருதலாகவே இருந்தது. ஏனெனில் இயேசுவை மனுஷகுமாரன் என்று அழைப்பதானது அவரை உண்மையான மனிதர் என்றும் பூரணமான மனிதர் (கடைசி/பிந்தின ஆதாம்) என்றும் அடையாளப்படுத்துவதாக இருந்தது. ஆதாம் இருந்திராத வகையில் எல்லாம் இயேசு ஒரு மனிதராக இருந்தார். "மனுஷ குமாரன்" என்பது இயேசுவை அரசத்துவத் தீர்க்கதரிசனத்துடன் இணைக்கின்றது (**தானி. 7:13-14; மத். 19:28)** மற்றும் இது அவரது மீட்பின் ஊழியத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது, **மாற். 10:45.**
தாவீதின் குமாரன் = இந்த இயற்பெயரானது, இயேசு தாவீதின் உடன்படிக்கையின் கீழான என்றென்றைக்கும் உள்ள அரியணையில் அமரும் உரிமையைப் பெறுவார் என்பதைக் குறிப்பாக எடுத்துரைக்கின்றது.
2 சாமு. 7:11-16
லூக். 1:26-33
மத். 21:9-11

5. <u>அவரது பணி நிலைப் பெயர்கள்</u>
   - "ஒரே" குமாரன் (ஒரே பேறானவர்).
     "monogenes" என்ற சொற்றொடரானது, நித்தியம் யாவற்றிலும் தேவனுடைய ஒரே குமாரன் என்ற வகையில் கிறிஸ்துவின் தனிச் சிறப்பை வலியுறுத்துகின்றது. கிறிஸ்துவைப் போன்றவர் வேறெவருமில்லை.
     யோவா. 1:14, 18
     யோவா. 3:16, 18
     1 யோவா. 4:9

- "முதற் பேறானவர்"

  "prototokos" என்ற இச்சொற்றொடரானது கிறிஸ்துவின் முன்னிருப்பு நிலையையும் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவராக இருந்த நிலையையும் வலியுறுத்துகின்றது. இது ஏறக்குறைய, தேவனுடைய குமாரன் என்ற வகையில் அவருடைய உண்மை நிலையான உரிமைகள் என்ன என்பதை எடுத்துரைக்கும் வரலாற்று ரீதியான இயற்பெயரைப் போன்றுள்ளது. காலத்துடன் அல்லது வரலாற்றின் ஒரு கால கட்டத்தில் கிறிஸ்து உருவாக்கப்பட்டார் என்ற கருத்துடன் இதற்குத் தொடர்பு ஒன்றும் இருப்பதில்லை. இது ஒரு தந்தைக்கு முதற்பேறாக பிறந்த மகனுக்கு உடமையின் மீதுள்ள முன்னுரிமை என்ற பழைய ஏற்பாட்டுக் கருத்தை எடுத்துரைத்து விரிவாக்குகிறது.

  கொலோ. 1:15
  கொலோ. 1:18
  ரோமர் 8:29
  வெளி. 1:5
  சங். 2:6-9

6. <u>அவரது அவதாரத்திற்கு முன்பு "யெகோவாவின் தூதன்" என்ற வகையிலான அவரது பழைய ஏற்பாட்டுத் தரிசனங்கள்</u>

பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவே தேவனுடைய மகிமையை வெளிப்படுத்தி பிரதிபலிக்கின்ற மற்றும் பிதாவின் சார்பாகத் தரிசனமாகின்ற "யெகோவாவின் (கர்த்தரின்) தூதராக" இருந்துள்ளார். கர்த்தருடைய தூதர் அடிக்கடி தேவன் என்ற வகையில் குறிப்பிடப்படுகின்றார்.

இந்தத் தரிசனங்கள் கிறிஸ்துவின் அவதாரத்திற்கு முந்திய இருப்பையும் ஊழியத்தையும் கூடச் செயல்விளக்கப்படுத்துகின்றன.

பின்வருபவை, பழைய ஏற்பாட்டில் "கர்த்தருடைய தூதர்" என்ற வகையில் கிறிஸ்துவின் தரிசனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாதிரிகளாக உள்ளன:

ஆதி. 16:7-13 ஆகாருக்கு கிறிஸ்து தரிசனமாகி தேவனென்று அடையாளப் படுத்தப்பட்ட பொழுது.

ஆதி. 22:1-19 ஈசாக்குக்குப் பதிலாகப் பலிப் பொருளை கிறிஸ்து அளித்த பொழுது,

யாத். 3:1-4 எரியும் முட்புதரில் கிறிஸ்து மோசேக்குத் தரிசனமான பொழுது,

நியா. 6:11-24 நியாயாதிபதி/இரட்சகர் என்ற வகையில் கிதியோனைத் தேவனுடைய ஊழியத்திற்குக் கிறிஸ்து அழைத்த பொழுது.

இவற்றிலிருந்தும் மற்றும் பிற உதாரணங்களிலிருந்தும், இந்த "தூதர்" என்பவர் தேவனுடைய செய்தியாளர் ஒருவரைக் காட்டிலும் அதிகம் மேலானவரா யிருந்தார் - அவர் தேவனுடைய குமாரனாகவே இருந்தார் - என்பது தெளிவாகின்றது!

7. <u>பழைய ஏற்பாட்டில் அவருடைய முன்னடையாளம்</u>

பழைய ஏற்பாட்டில் கிறிஸ்து வெளிப்படுத்தப்பட்டு முன்னடையாளப் படுத்தப்பட்டார் என்பது அவர் தேவனுடனும் தேவன் என்ற வகையிலும் அடையாளப்படுத்தப்பட்டதை மிகவும் தெளிவாக்குகின்றது. இங்கு சில உதாரணங்கள் தரப்படுகின்றன:

- பழைய ஏற்பாட்டு வேத வசனங்களில் தேவன் என்ற வகையில் கிறிஸ்து வெளிப்படுத்தப்பட்டார் என்று புதிய ஏற்பாடு அடையாளப்படுத்துகின்றது.

— யாவேயின் பாடனுபவிக்கும் ஊழியக்காரர்
அப். 8:30-35
1 பேது. 2:21-25
ஏசா. 53:4-12

தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியா
லூக். 24:25-27
லூக். 24:44-46

— தேவனுடைய அரசர்
தானி. 2:44-45
1 பேது. 2:4-8
மத். 21:42-44

— மாபெரும்/நல்ல மேய்ப்பர்
சங். 23:1
எபி. 13:20-21
யோவா. 10:11-18

— தேவனுடைய மகிமை
ஏசா. 6:1-3
யோவா. 12:37-41
யோவா. 1:14, 18

- பழைய ஏற்பாட்டின் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் மற்றும் புதிய ஏற்பாட்டில் விளக்கப்பட்டுள்ள மக்களிடத்தில் கிறிஸ்து முன்னடையாளப்படுத்தப்பட்டு, முன் கண்ணோட்டமிடப்பட்டு அல்லது வகைப்படுத்தப்பட்டு உள்ளார்.

<u>ப. ஏ. வின் நபர் அல்லது நிகழ்ச்சி</u>	<u>பு.ஏ.வில் கிறிஸ்து</u>
1. முந்தின ஆதாம் **ரோமர் 5:12-14**	இரண்டாவது அல்லது பிந்தின ஆதாம் என்ற வகையில் **1 கொரி. 15:45-47**
2. மெல்கிசேதேக்கு, சாலோமின் இராஜா/ ஆசாரியர் **ஆதி. 14:18-24**	மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியர் என்ற வகையில் **எபி. 7:1-3, 11-17**
3. பஸ்கா **யாத். 12:12-13**	நமது பஸ்கா என்ற வகையில் **1 கொரி. 5:7**
4. பலி செலுத்தும் முறை **லேவி. 17:11**	நமது பலி என்ற வகையில் **எபி. 9:18-24**
5. ஆசரிப்புக் கூடாரத் திரை **லேவி. 16:2**	நமது திரை என்ற வகையில் **எபி. 10:19-22**
6. அளிப்பின் கன்மலை **யாத். 17:5-6**	நமது ஆவிக்குரிய கன்மலை என்ற வகையில் **1 கொரி. 10:1-4**
7. வெண்கல சர்ப்பம் **எண். 21:5-9**	நமது மீட்பர் என்ற வகையில் **யோவா. 3:14-16**

8. அவருடைய பழைய ஏற்பாட்டு மேசியாத்துவ தீர்க்க தரிசனங்களின் நிறைவேற்றம்
பழைய ஏற்பாட்டில் முன்னுரைக்கப்பட்ட (தானி. 7:13-14; தானி. 9:24-27ஐக் காணவும்) மேசியா (அபிஷேகம் பண்ணப்பட்டவர்) புதிய ஏற்பாட்டின் இயேசு கிறிஸ்துவே என்பது கேள்விக்கப்பாற்பட்ட உண்மையாக உள்ளது. இயேசு முழுமையாக நிறைவேற்றிய பழைய ஏற்பாட்டு மேசியாத்துவத் தீர்க்கதரிசனங்கள் 40 அல்லது அதற்கு மேற்பட்டவை உள்ளன. இந்த உரிமைகோருதலை வரலாற்றில் வேறு எந்த நபருக்கும் கூறப்பட முடியாது.

பின்வருபவை கிறிஸ்துவால் நிறைவேற்றப்பட்ட பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவையாய் உள்ளன:

	பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனம்	புதிய ஏற்பாட்டு நிறைவேற்றம்
1. அவரது நபர்த்துவம்		
• தெய்வீகத்துவம்	*ஏசா. 9:6*	*லூக். 2:11*
• பெயர்	*ஏசா. 7:14*	*மத். 1:23*
• மனிதத்துவம்	*ஏசா. 7:14*	*எபி. 2:14*
• தாவீதின் அரசத்துவம்	*2 சாமு. 7:11-16; ஏசா. 9:7*	*லூக். 1:31-33*
• யூதாவின் வம்சாவளி/இனம்	*ஆதி. 49:8-10*	*வெளி. 5:5-7*
2. அவரது பிறப்பு		
• எங்கு	*மீகா. 5:2*	*மத். 2:5-6*
• எப்பொழுது	*தானி. 9:24-27*	*லூக். 2:1-2; கலா. 4:4*
• எவ்வாறு	*ஏசா. 7:14*	*லூக். 1:26-38*
• எகிப்துக்குத் தப்பியோடுதல்	*ஓசியா 11:1*	*மத். 2:13-15*
• ஏரோதினால் குழந்தைகள் கொல்லப்படுதல்	*எரே. 31:15*	*மத். 2:17-18*
3. அவரது ஊழியம்		
• தேவனுடைய ஆவியினால் நிறையப்படுதல்	ஏசா. 11:1-2	லூக். 4:14-22
• புறஜாதியாருக்கு ஒளி	ஏசா. 60:1-3	லூக். 2:25-32

• மீட்பர்	ஏசா. 49:6	மத். 1:21 யோவா. 1:29 லூக். 19:9-10
• பாவங்களுக்காக மரித்தல்	ஏசா. 53:4-7	1 பேது. 2:24-25
• குணப்படுத்துதல்	ஏசா. 53:4	மத். 8:16-17
• புறக்கணிக்கப்படுதல்	சங். 22:16-18	யோவா. 19:20
• மரணம் மற்றும் அடக்கம்	ஏசா. 53:9	மத். 27:57-60
• உயிர்த்தெழுதல்	சங். 16:9-11	மத். 28:2-8

4. அவரது எதிர்கால ஊழியம்

• பரத்துக்கேறுதல்	ஏசா. 52:13	அப். 1:6-11
• உயர்த்தப்படுதல்	சங். 110:1	லூக். 20:42-43 பிலி. 2:5-11
• இரண்டாம் வருகை	சக. 14:3-9	வெளி. 19:11-16
• நித்திய அரசத்துவம்	தானி. 2:44	வெளி. 11:15

பயிற்சி: இயேசு உண்மையில் தேவனல்ல என்றால் அதன் மறைமுகக் குறிப்புகள் யாவை?

____

____

____

____

ஆ. கிறிஸ்துவின் மனிதத்துவம்

1. அறிமுகம்

இயேசு உண்மையிலேயே மனிதராயிருந்தார் என்ற உண்மையை விட, இயேசு தேவனாயிருந்தார் என்ற உண்மையை ஏற்றுக் கொள்வது பல மனிதர்களுக்குச் சுலபமாயிருக்கிறது என்று காணப்படுகின்றது! தேவன் மனிதரான பின்பும் எப்படி தேவனாயிருக்க முடியும்? இது எவ்வளவு இரகசியமானதாக/அற்புதமானதாகக் காணப்பட்டாலும், இதுவே வேத வசனங்களின் தெளிவான போதனையாக உள்ளது. இயேசு மனிதரானார் என்ற சத்தியத்தில் திரு அவதாரம் என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுகின்றது. நாம் இப்பொழுது இந்தப் பாடக் கருத்தை நோக்கியே திரும்புகின்றோம்.

2. அவருடைய திரு அவதாரம்

விளக்கம்:

திரு அவதாரம் என்பது, பரிசுத்த ஆவியானவரின் செயலினால் கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்ற வழிமுறையின் மூலமாக தேவன் இயேசு கிறிஸ்து என்ற நபரில் மனிதராகுதல் என்ற செயல்பாடு என்பதாக அர்த்தப்படுகின்றது.

திரு அவதாரம் மூலமாக இயேசு (திரித்துவத்தில் 2ம் நபரான) தேவனுடைய குமாரனாகவில்லை, ஆனால் அவர் நித்தியத்திற்கும் தேவனுடைய குமாரனாகவே இருந்துள்ளார் என்பதைச் சிந்தையில் கொண்டிருக்க வேண்டியது முக்கியமான தாக உள்ளது.

யோவா. 1:1-3
சங். 2:4-12

கிறிஸ்து பிதாவிடமிருந்து நித்தியத்திற்கும் "படைக்கப்பட்டுள்ளதாக"வும் திரு அவதாரமானது (மனிதராக இயேசு பிறந்தது) தேவன் குறித்த வேளையில் உலகத்தின் மீட்பராக பிதாவின் தெய்வீகக் கட்டளையினால் கிறிஸ்து அனுப்பப்பட்டதைக் குறிப்பதாகவும் கூறப்படுகின்றது. **(கலா. 4:4; யோவா. 17:4-5; 1 பேது. 1:10-12).** "படைக்கப்படுதல்" என்பது பணிப் பொறுப்பை மற்றும் நோக்கத்தைக் குறிக்கின்றதே தவிர படைப்பின் சாராம்சத்தையோ காலத்தையோ குறிப்பதில்லை.

இயேசு தேவனுடைய குமாரனாக நித்தியத்திற்கும் இருந்துள்ளார் - அவர் திரு அவதாரத்தில் மனுஷகுமாரனானார்!

இயேசு மனிதராவது ஏன் அவசியமாயிருந்தது? குறைந்தபட்சம் நான்கு தனிச் சிறப்பான காரணங்கள் உள்ளன:

1. மனிதருக்குத் தேவனை வெளிப்படுத்த **(யோவா. 1:18).**
2. தேவன், மனிதர் தம்மைப் போலிருக்க நோக்கங் கொண்டார் என்று வெளிப்படுத்த **(1 கொரி. 11:1).**
3. மனிதரிடம் (தேவன்) தமது குமாரன் மூலமாகப் பேச **(எபி. 1:1-2).**

4. பாவத்தைக் குறித்து தேவனுடைய மீட்பின் திட்டத்தை நிறைவேற்ற.

எபி. 2:14
ரோமர் 8:1-4
1 பேது. 2:24-25
யோவா. 3:16-18
கலா. 4:4-7
1 கொரி. 15:17-22
1 கொரி. 15:55-57

தேவனுடைய நீதியும் பரிசுத்தமும் பாவத்திற்கு ஒரே தரமான முழு நிறைவான பலியைக் கேட்டுக் கொண்டது, மற்றும் மனிதரின் பாவங்களுக்கான அந்த பலியை மனிதரின் நபர்த்துவத்தில் தேவன் மட்டுமே செலுத்த முடிந்தது - இவ்விதமாக அவர் நம்மீது அன்பு கூர்ந்ததால் தமது குமாரனை அனுப்பினார்.

யோவா. 1:29
ரோமர் 5:6-11
1 யோவா. 7:26-27
எபி. 9:11-15

திரு அவதாரத்திற்கான திறவுகோல் வசனப் பகுதிகள்

தேவனுடைய நித்திய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மனித குமாரனான திரு அவதாரத்தின் சத்தியம் பற்றிப் பின்வரும் வசனப் பகுதிகள் சீராகப் போதிக்கின்றன:

யோவா. 1:14
ரோமர் 1:3
ரோமர் 8:3
கலா. 4:4
பிலி. 2:7-8
எபி. 2:9, 14

கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்ற வழிமுறையினால் பரிசுத்த ஆவியானவரின் நபர்த்துவத்தின் மூலமாக கிறிஸ்துவின் திரு அவதாரத்தை நிறைவேற்றத் தேவன் தேர்ந்து கொண்டார்.

3. கன்னிப் பெண்ணிடமிருந்து அவருடைய பிறப்பு

இயேசு கிறிஸ்து கன்னிப் பெண்ணிடமிருந்து பிறந்ததும் மற்றும் அவருடைய சரீர உயிர்தெழுதலும் கிறிஸ்தவ விசுவாசத்தின் திறவுகோல் அற்புதங்களாய் உள்ளன. கன்னிப் பெண்ணிடமிருந்து (அவருடைய) பிறப்பு என்பதை விசுவாசியாத வரைக்கும் ஒரு நபர் கிறிஸ்தவராயிருக்க முடியாது, ஏனெனில் அவ்விதப் பிறப்பிலையேல் இயேசு தேவனாயிருக்க மாட்டார், ஆனால் மற்ற எல்லா மனிதர்களைப் போலவே பாவ இயல்புடையவராய் இருந்திருப்பார் மற்றும் இதனால் தேவனுடைய முழு நிறைவான பலியாக இருக்க அவர் தகுதியுடையவராய் இருந்திருக்க மாட்டார்.

இயேசுவை மனிதராக்க கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பதைத் தேவன் தேர்ந்து கொண்டது ஏன்?

இதற்குப் பல முக்கிய காரணங்கள் உள்ளன:

- தேவன் மட்டுமே இதைச் செய்ய முடியும் என்ற அளவுக்கு இது அவ்விதமான இயற்கைக்கு மேம்பட்ட செயலாயிருந்தது, இவ்விதமாக நம்புவதற்கு விசுவாசம் தேவைப்படுகிறது (லூக். 1:29-37).
- குறிப்பாக இது, பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசனத்தை நிறைவேற்றியது மற்றும் இது இயேசுவை, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா/மீட்பர் (கிறிஸ்து = அபிஷேகம் பண்ணப்பட்டவர்) என்று அடையாளப்படுத்திற்று. (மத். 1:22-23; ஏசா. 7:14).
- இயேசு உண்மையான "தேவன் - மனிதராய்" இருக்கும்படி தெய்வீகத்தை இழந்து விடாமல் அவரை தெய்வீக மனிதராக்குவதற்கு இது தேவனுக்கு மிகச் சிறந்த வழியாக இருந்தது. இவ்விதமாக, ஒரு தனிச் சிறந்த அற்புதத்தினால் இயேசு கிறிஸ்து தெய்வீகத்தையோ அல்லது மனிதத்துவத்தையோ விட்டுக் கொடுக்காமல் நபர்த்துவத்தில் மனிதரானார் - அவர் உண்மையிலேயே ஒரு மனிதராய் இருந்தார், ஆயினும் அப்பொழுதும் அவர் உண்மையிலேயே தேவனாக(வும்) இருந்தார். அவர் தமது மனிதத்துவத்தை உத்தரவாதப்படுத்த பூமிக்குரிய தாயையும், தமது தெய்வீகத்துவத்தை உத்தரவாதப் படுத்த பரலோக தந்தையையும் கொண்டிருந்தார் (கொலோ. 2:9).
- இது, இயேசு பூமிக்குரிய தந்தையைக் கொண்டிருக்க மாட்டார் என்பதையும் பாவ இயல்பு ஒன்றைச் சுதந்தரித்துக் கொள்ள மாட்டார் என்பதையும் உத்தரவாதப்படுத்தியது. இது அவருடைய பாவமற்ற தன்மையை உறுதிப்படுத்திற்று.
  லூக். 3:23
  2 கொரி. 5:21
  எபி. 4:15
  எபி. 7:26-27
  1 பேது. 2:22

<u>கன்னிப் பெண்ணிடமிருந்து பிறப்பு என்பதன் விபரங்கள்</u>

கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பது பற்றி வேத வசனங்களில் இரண்டு (இடத்தில்) விபரங்கள் அடங்கியுள்ளன, மற்றும் அவை ஒவ்வொன்றும் இக்கருத்தையும் நிகழ்வையும் நாம் புரிந்து கொள்ளுதலுக்குத் தனிச் சிறந்த வகையில் பங்களிக்கின்றன.

மத்தேயு சுவிசேஷத்தில் அடங்கியுள்ள விபரம் (**மத். 1:16-25**)

வலியுறுத்தம்:

- யோசேப்பின் மீது கவனம் செலுத்துதல்.
- பரிசுத்த ஆவியானவரின் செயல் (**மத். 1:18**).
- யோசேப்பு ஈடுபடாமை (**மத். 1:16, 20**).
  "கிறிஸ்து என்று அழைக்கப்படுகின்ற இயேசுவைப் பெற்றெடுத்த மரியாளின் கணவரான யோசேப்பு."

குறிப்பு: "யாருடைய" என்ற சொற்றொடரானது உற்பத்தி செய்தலில் - பெண்மை - ஒருமையாக இலக்கண வடிவில் உள்ளது, இது ஆண் யாரும் ஈடுபடவில்லை என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றது. இந்த சத்தியத்திற்கு **கலா. 4:4**ம் கூடச் சாட்சியம் அளிக்கின்றது.

- பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் திட்டவட்டமாக நிறைவேற்றம் அடைகின்றது. **மத். 1:23, ஏசா. 7:14**ஐ மேற்கோள் காட்டுகின்றது.

- தாவீதின் குல (தாவீதின் வீட்டு மற்றும் பரம்பரையில் வந்த) அரசர் என்ற வகையில் ஆட்சி செய்ய இயேசுவின் சட்ட ரீதியான உரிமையைக் காண்பிக்கிறது. **மத். 1:1, 17, 20**

- "இம்மானுவேல் - தேவன் நம்மோடிருக்கிறார்" என்ற கிறிஸ்துவின் இயற்பெயரில் அவரது தெய்வீகத்தைக் காண்பிக்கிறது. **மத். 1:23.**

<u>லூக்கா கொடுத்த விபரம்</u> **(லூக். 1:26-28)**

வலியுறுத்தம்:

- மரியாளின் மீது கவனம் செலுத்துகிறது.
- மரியாளின் சொற்பொருளான கன்னித் தன்மை. **(லூக். 1:34)**
- இயேசு உண்மையில் ஒரு குழந்தையாக ஆனால் பாவ இயல்பு அற்றவராக இருப்பார் என்பதற்கான பரிசுத்த ஆவியானவரின் பாதுகாக்கும் "நிழலிடுதல்" (இயேசு "பரிசுத்தமுள்ளவர் - தேவனுடைய குமாரன்" என்று அழைக்கப்பட்டார்). **லூக். 1:35**
- தாவீதின் சரீரப்படியான வழித் தொன்றுதல் தொடர்பையும் இயேசுவின் உண்மையான மனிதத்துவத்தையும் காண்பிக்கிறது. **(லூக். 1:27-33; லூக். 3:31)**
- 8ம் நாளில் இயேசு தேவாலயத்தில் அர்ப்பணிக்கப்பட்ட போது கூறப்பட்ட பிரசங்கத் தீர்க்கதரிசனமானது அவர் பழைய ஏற்பாட்டில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவாயிருந்தார் என்று தெளிவாகச் சுட்டிக் காண்பிக்கிறது. **(லூக். 2:21-32)**

4. **தெய்வீகத்தைத் துறத்தல்** (சுய வரையறை அல்லது வெறுமையாக்குதல்)

திரு அவதாரத்தின் மூலம் தேவன் என்ற வகையில் இயேசு ஒரு உண்மை மனிதரானார். ஆனால் தேவன் மனிதத்துவத்தை மேற்கொண்டு இன்னமும் தேவனாக இருப்பது எவ்வாறு?

மூன்று திறவுகோல் கருத்துக்கள் கவனத்துடன் ஆராயப்பட வேண்டும்.

- கிறிஸ்து "தெய்வீகத்தைத் துறத்தல்"
- கிறிஸ்துவின் உண்மை மனிதத்துவம்
- இயற்கைக்கு மேலான நிலைப்புத் தன்மையின் ஒருமைப்பாடு

பிலி. 2:5-11 வசனப் பகுதி "தெய்வீகத்தைத் துறத்தல்" (கிறிஸ்துவின் சுய வரையறை அல்லது வெறுமையாக்குதல்) என்பதற்கு திறவுகோல் பாடத்தை அளிக்கையில் **ரோமர் 8:3** மற்றும் **எபி. 2:14** ஆகியவையும் நமது புரிந்து கொள்ளுதலுக்குப் பங்களிக்கின்றன.

கிறிஸ்துவைப் பற்றிய 4 அடிப்படை சத்தியங்களை **பிலி. 2:5-11** போதிக்கிறது.

கிறிஸ்துவின் நித்திய தெய்வீகத்துவம்	- **வ. 6** "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும்"
கிறிஸ்துவின் உண்மையான மனிதத்துவம்	- **வ. 7** "மனுஷர் சாயலானார்"
கிறிஸ்துவின் ஊழியத்துவப் பணி	- **வ. 8** "மனுஷ ரூபமாய் ..... சிலுவையின் மரண பரியாந்தமும் கீழ்ப்படிந்தவராகி"
கிறிஸ்து உயர்த்தப்படுதல்	- வ. 9-11 "இயேசு கிறிஸ்து கர்த்தராக இருக்கிறார்"

ஆனால், கிறிஸ்து "தம்மையே வெறுமையாக்கினார்" என்று கூறுவதன் அர்த்தம் என்ன? (kenosis = சுயத்தை வெறுமையாக்குதல்) என்று **பிலி. 2:7**ல் உள்ளது. கிறிஸ்து மனிதரான பொழுது, ஏதாவதொரு வழியில் அவர் தேவனாய் இருப்பதை விட்டொழித்தார் என்றால், அவர் உண்மையில் தேவனல்ல என்றாகிறது மற்றும் **கொலோ. 2:9** உண்மையாய் இருப்பதில்லை (என்றாகின்றது). எனவே இயேசு மீட்பராய் இருப்பதற்காக தம்முடைய தெய்வீகத்திலிருந்து எதையும் நீக்கிப் போடாமல், தம்முடைய தெய்வீகத்து வத்துடன் மனிதத்துவத்தைக் கூட்டினார்.

எனவே "துறத்தல்" என்பது எதனை அர்த்தப்படுத்துகிறது? பிலி. 2:6-8ல் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடர்களைக் கவனியுங்கள்:

> ".... தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்" வ. 6
>
> "தம்மையே வெறுமையாக்கி" வ. 7
>
> "..... தம்மைத் தாமே தாழ்த்தினார்" வ. 8

"துறத்தல்" என்பதன் வலியுறுத்தம் பின்வருமாறுள்ளது: கிறிஸ்து,

(1) தமது தெய்வீகச் சிறப்புரிமைகள் சிலவற்றையும் தமது தெய்வீக நிலைப்பாட்டையும் பயன்படுத்தும் உரிமையைச் சில காலத்திற்கு மனப்பூர்வமாக விட்டுக் கொடுத்தார்.

(2) தம் தெய்வீகத்துடன் மகிமையற்ற மனிதத்துவத்தைக் கூட்ட மனம் ஒப்பினார்.

(3) தாம் மனதராயிருக்கையில் தமது தெய்வீகப் பண்புகள் சிலவற்றின் பயன்பாட்டை வரையறைக்கு உட்படுத்தச் சம்மதித்தார்.

(4) தமது பூமிக்குரிய ஊழியத்தின் போது பரிசுத்த ஆவியானவரை மனப்பூர்வமாகச் சார்ந்திருந்தார். அப். 10:38

(5) தியாக உணர்வுடன் தேவனுடைய ஊழியக்காரர் ஆனார்.

தேவ மனிதரான இயேசு கிறிஸ்துவைப் பற்றிய இவ்விஷயங்களையே **ஏசா. 9:6** முன்னதாகக் கூறிற்று.

★ கிறிஸ்து தம்முடைய மகிமையைப் பற்றிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, தம் தெய்வீக நிலைப்பாட்டையும் தம் சிறப்புரிமைகளையும் தம்முடைய பிதாவின் மீட்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகச் சில காலம் விட்டுக் கொடுத்ததன் மூலம் மகிமையைப் பெற்றுக் கொண்டார். ***எபி. 1:1-3; எபி. 12:2***

- "துறத்தல்" என்பது பற்றி ஆழ்ந்த சிந்தனைக்குரிய மற்ற (சில) வசனப் பகுதிகள்:

  கிறிஸ்து மனிதனாய் இருக்கையில் தம்முடைய மகிமையில் ஒரு பகுதியை திரையிட்டு மறைத்தார் என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.
  யோவா. 1:14
  யோவா. 17:5
  மத். 17:1-8
  லூக். 9:26

  இருப்பினும், பல வேளைகளில் இயேசு தமது மகிமையையும் தெய்வீகப் பண்புகளையும் வெளிப்படுத்தினார்.
  லூக். 5:1-10
  யோவா. 2:11
  யோவா. 17:24
  யோவா. 18:1-6

  ஆனால் அவர் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையுடன் அவரைச் சார்ந்த ஊழியமும் செய்தார்.
  லூக். 4:14-15

  உண்மையில் இது நம்மால் முழுவதுமாய்ப் புரிந்து கொள்ளப்பட முடியாத இரகசியமாய் உள்ளது. ஆனால் கிறிஸ்து சில வழிகளில் தமது தெய்வீகத்தை மனப்பூர்வமாக மட்டுப்படுத்தினார், தம்மையே தாழ்த்தினார் மற்றும் மீட்பில் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற மனிதரானார். இருப்பினும் அவர் முழுமையும் தேவனாயிருந்தார் என்பதே "துறத்தல்" என்பதன் முக்கிய கருத்தாக உள்ளது.
  லூக். 22:66-71

5. அவருடைய உண்மையான மனிதத்துவம்

இயேசு உண்மையான மாம்சமும் எலும்புகளும் கொண்ட ஒரு உண்மையான மனிதராய் இருந்தார் என்பதற்கான வசன ஆதாரம் ஏராளமாக உள்ளது. (1 யோவா. 1:1-3; 4:2-3). பின்வருபவை கிறிஸ்துவின் உண்மை மனிதத்துவத்தைச் செயல் விளக்கப்படுத்தும் எடுத்துக் காட்டுகளாய் உள்ளன:

- அவர் ஒரு குழந்தையாக வளர்ந்தார்.
  லூக். 2:40-52

- அவர் உறங்கினார்
  லூக். 8:23
- அவர் குடித்தார்
  லூக். 22:17
- அவர் அழுதார்
  யோவா. 11:35
- அவர் பாடுபட்டு, இரத்தம் சிந்தி, சிலுவையில் மரித்தார்.
  யோவா. 19:32-37

எனவே கிறிஸ்துவின் மனிதத்துவம் என்பது அவரது தெய்வீகத்தைப் போலவே உண்மையானதும், முக்கியமானதுமாயிருந்தது. ***(எபி. 2:14-18; எபி. 4:14-16ஐக் காணவும்)***

இயேசு ஒரே வேளையில் தெய்வீக இயல்பையும், மனித இயல்பையும் கொண்டவர்ாக, முழுமையாக தேவனாகவும் முழுமையாக மனிதராகவும் இருக்க முடிந்தது எவ்விதம்? இவ்விரு இயல்புகளும் எவ்விதம் ஒன்றுக்கொன்று உறவுபடுகின்றன? இப்பொழுது நாம் இந்தப் பாடத்திற்கு இவ்வாறு திரும்புகின்றோம்.

பயிற்சி: இயேசு உண்மையாகவே ஒரு மனிதரல்ல என்றால் அதில் உள்ள மறைவான கருத்துக்கள் யாவை?

____

____

____

____

6. மேலான நிலைத்தன்மையுள்ள ஒருமைப்பாடு

கிறிஸ்துவின் தெய்வீக மற்றும் மனித இயல்புகள் ஒரு நபருக்குள் ஒன்று கூடிவருதல் என்பது மேலான நிலைப்புத் தன்மையுள்ள ஒருமைப்பாடு (<u>ஒன்று கூடி நிலைநிற்கக் காரணம்</u> என்று அர்த்தப்படுகின்றது) என்று அழைக்கப்படுகிறது.

பழைமை வாதக் கூற்று

<u>கிறிஸ்துவின் நபர்த்துவம்</u>

இயேசு கிறிஸ்து பிரிக்க இயலாத வகையில் ஒருமைப்பட்ட (ஆனால் குழப்பமூட்டாத) முழுமையான தெய்வீகத்துவமும் முழுமையான மனிதத்துவமும் ஒரு நபரில் என்றென்றும் உள்ள உண்மை தேவனும் உண்மை மனிதருமாக இருக்கிறார்.

அந்த உபதேசக் கூற்றிலிருந்து வளர்க்கப்பட்ட மாறுபட்ட மற்றும் தேவனுக்கெதிரான கூற்றுகள் அடுத்த பக்கத்தில் உள்ள வரைவட்டவணையில் காணப்படுகின்றன.

பழைமை வாதத்திலிருந்து மாறுபட்ட கருத்துக்கள்

தொடக்க காலத் திருச்சபையானது கிறிஸ்துவின் தெய்வீக மற்றும் மனிதத்துவ இயல்புகளுக்கு இடையிலான உறவுமுறை குறித்துப் போராட்டம் கொண்டிருந்தது.

நான்கு சபை மாநாடுகள்:

மாநாடு	முடிவு	தவறு
(1) நீசியா 325	கிறிஸ்து சாரத்திலும் இருப்பிலும் பிதாவைப் போன்றே இருக்கிறார் ஆனால் நபர்த்துவத்தில் தனிப் பட்டவராய் இருக்கிறார்.	ஆரியஸ் என்பவர், கிறிஸ்து நித்தியமானவரல்ல ஆனால் படைக்கப்பட்டவராய் இருக்கிறார் - தெய்வீகத்துவம் வாய்ந்தவர் ஆனால் தேவனல்ல (முழு தெய்வீகத்தை மறுத்தல்) என்று உரிமைகோரினார். உண்மைத் தேவன் அல்ல.
(2) கான்ஸ்டாண்டி நோபிள் 381	நீசியாவின் முடிவை உறுதிப்படுத்தியது மற்றும் கிறிஸ்துவை முற்றிலும் மனிதர் என்று அறிவித்தது.	அப்போல்லினரியஸ் என்பவர், கிறிஸ்து மனித உடலையும் ஆன்மாவையும் கொண்டிருந்தார், ஆனால் ஒரு தெய்வீக ஆவியை(யும்) கொண்டிருந்தார் என்று உரிமைகோரினார். உண்மை மனிதர் அல்ல.
(3) எபேசு 431	கிறிஸ்துவின் மனிதத்துவ மற்றும் தெய்வீக இயல்புகள் ஒரு நபரில் முழுமையாக ஒன்றுபட்டதை அறிவித்தது.	நெஸ்டோரியஸ் என்பவர், முழுமையான தெய்வீகத்தையும் ஒருமைப்பாட்டையும் மறுத்தார் மற்றும் தேவன் மாம்சமாக முடியாதென்று உரைத்தார்; கிறிஸ்துவின் தெய்வீகத்துவம் என்பது தோற்றத்தில் மட்டுமே இருந்தது - அவர் "தேவனைச் சுமப்பவராய்" இருந்தார், உண்மையான தேவ மனிதரல்ல.
(4) கால்சிடோன் 451	பழைமைவாத நிலைப்பாடு முழுமையாக தேவனும் முழுமையாக மனிதனும் பிரிக்க இயலாதபடி ஒன்றுபட்டனர், ஆனால் என்றென்றும் ஒரே நபரில் குழப்பமற்ற வகையில் உள்ளனர். (மேலான நிலைத்த ஒருமைப்பாடு)	யுட்டிக்கஸ் என்பவர், கிறிஸ்துவின் மனிதத்துவம் அவரது தெய்வீகத்தில் விழுங்கப்பட்டது, கிறிஸ்து பொய்த் தோற்றம் உடையவராக மட்டுமே இருந்தார். உண்மை மனிதரல்ல.

மேலான நிலைத்த ஒருமைப்பாடு பற்றிய சில முடிவுகள்

- கிறிஸ்து எப்பொழுதுமே தமது இயல்புகளில் ஒன்றிற்குப் பதில் அளிக்கும் வகையில் முழுமையான நபராகச் செயல்பட்டார், ஆனால் அவருடைய தெய்வீக இயல்பும் சித்தமும் மேலோங்கியிருந்தது.
  யோவா. 12:27-28.

- இயேசு குழந்தைப் பருவத்தில் இருந்தே தெய்வீக சுய உணர்வு கொண்டிருந்தார்.
  லூக். 2:46-50

- இயேசுவின் தெய்வீக சித்தம் அவரது மனித சித்தத்தை மேலாதிக்கம் செய்தது, ஆனால் அது எப்பொழுதும் பிதாவிற்குக் கீழ்ப்பட்டிருந்தது.
  யோவா. 6:38
  லூக். 22:41-46

- ஒவ்வொரு வேளையிலும் இயேசுவின் தெய்வீகத்தையும் இயல்பையும் முழுமையாய்ப் பிரித்துப் பார்ப்பது சாத்தியமானதாக இருப்பதில்லை.

- தேவன் மரிக்க முடியாது என்பதால், கிறிஸ்துவின் மனிதத்துவமே சிலுவையில் மரித்தது.

  — அவர் ஒரு மனிதர் என்ற வகையில், மனுக்குலத்தை மீட்பதற்காக உடல் ரீதியான மற்றும் ஆவிக்குரிய மரணத்தை அனுபவித்தார்.
  1 பேதுரு 2:24
  1 பேதுரு 3:18
  கொலோ. 1:22

  — அவர் ஒரு நபர் என்ற வகையில் பிதாவிடமிருந்து தமது ஆவிக்குரிய பிரிதல் பற்றி அறிந்தார்.
  சங். 22:1
  மத். 27:46

  — கிறிஸ்து தம் தெய்வீகத்துடன் கூட்டப்பட்டதைக் கொண்டு - மகிமையற்ற ஆனால் வீழ்ந்து போகாத மனிதத்துவத்துடன் - மரித்தார். கிறிஸ்துவின் மனிதத்துவம் உண்மையானது - அவரது மாம்சமானது நம்முடையது போலவே இருந்தது. ஆயினும் ஒரு முக்கிய விஷயத்தில் மாறுபட்டிருந்தது - அவர் பாவ இயல்பு கொண்டிருந்ததில்லை.
  ரோமர் 8:3-4
  2 கொரி. 5:21
  வெளி. 5:6

  — கிறிஸ்து ஒரு மகிமையுள்ள சரீரத்தில் உயிர்த்தெழுப்பப்பட்டார்.
  1 கொரி. 15:35-54
  ரோமர் 6:4

பயிற்சி: இயேசு 2 இயல்புகளுடன் ஒரு நபராக எவ்வாறு செயலாற்ற முடிந்தது?

---

7. அவருடைய ஞானஸ்நானம்

இயேசு ஞானஸ்நானம் பெறத் தேவையற்றிருந்ததால் அதன் நோக்கம் என்னவாக இருந்தது?

<u>இயேசுவின் ஞானஸ்நானம்</u>

- மனந்திரும்புதலின் அவசியம் பற்றிய யோவான் ஸ்நானனின் பிரசங்கத்தை அவருடன் அடையாளப்படுத்துங்கள் - இயேசு இவ்விதம் தம் நாட்களில் இருந்த மத அமைப்பு முறைக்கெதிராக நிலைப்பாடு கொண்டார், அது மனந்திரும்புதல் அல்லது ஞானஸ்நானம் ஆகியவற்றின் தேவையை மறுத்தது.

- தேவனுடைய ஊழியத்தை நிறைவேற்றுவதற்கான அவரது பூமிக்குரிய ஊழியத்தைத் தொடங்கி வைத்தது.

- அவரை தேவனுடைய குமாரன் என்று அங்கிகரித்தது.

- கிறிஸ்துவின் மூலம் வர இருந்த ஆவிக்குரிய ஞானஸ்நானத்தை முன் கண்ணோட்டமிட்டது.

திறவுகோல் வசனப் பகுதி:

மத். 3:1-17

பயிற்சி: இயேசு தம் ஞானஸ்நானத்தின் மூலம் அளித்த செய்தி என்ன?

____

____

____

____

8. அவர் சோதிக்கப்படுதல்

தேவன் சோதிக்கப்பட முடியாது என்பதால் (அதாவது தீமை செய்யும்படி மயக்கப்பட முடியாது - **யாக். 1:13**), இயேசு எந்த வகையில் சோதிக்கப் பட்டார்? அதன் நோக்கம் என்னவாக இருந்தது?

ஒரு மனிதர் என்ற வகையில் இயேசு பிற மனிதர்களைப் போன்று அதே வழிகளில் "சோதிக்கப்பட்டார்":

- எனவே அவர் நமக்காகப் பரிதபித்து நமது பலவீனங்களில் நமக்கு உதவ முடியும்.
  எபி. 2:18
  எபி. 4:15

- எனவே அவர் நமக்கு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வசனத்தின் மீது சார்ந்திருப்பதால் சோதனையை எதிர்த்து நிற்க முடியும் என்று காண்பிக்க முடிந்தது.
  லூக். 4:1-13

தேவன் என்ற வகையில் இயேசு "சோதிக்கப்பட்டார்" "பரீட்சிக்கப் பட்டார்"

- பாவமற்ற மீட்பர் என்று தகுதிப்பட்டவர் என்று மெய்ப்பிப்பதற்காகத் தேவனால் சோதிக்கப்பட்டார்.
  எபி. 7:26-28

- சிலுவையைத் தவிர்க்கும்படியும் சாத்தானுடைய வழியில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்படி தூண்டும் முயற்சியினால் சாத்தான் அவரைச் சோதித்தான். **லூக். 22:39-44**

சோதனை பற்றிய பிற திறவுகோல் வசனப்பகுதிகளுக்குப் பின்வருபவற்றைக் காணவும்

ஆதி. 3:1-7
யாக். 1:12-16
1 கொரி. 10:11-13
1 யோவா. 2:15-17

ஆனால், இயேசு தேவனாக இருந்ததால் சோதனைகள் உண்மையானவைகளாய் இருந்தனவா? **ஆமாம்,** ஏனெனில் அவைகள் கிறிஸ்துவின் பாவமற்ற தன்மையைக் காண்பிக்கவும் அவரை மீட்பர் என்று தகுதிப்படுத்தவும் வடிவமைக்கப் பட்டிருந்தன. மற்றும், ஒரு மனிதர் என்ற வகையில் இயேசு,

– பரிசுத்த ஆவியானவரின் வல்லமை மீதும்
– தேவனுடைய வசனத்தின் சத்தியத்தின் மீதும்

சார்ந்து சோதனையை எதிர்த்து நிற்க வல்லவராயிருந்தார்.

ஆனால் இயேசு,
(1) குறை கூற முடியாதவராய் இருந்தார் - அவர் தேவனாக இருந்ததால் பாவம் செய்யக் கூடாதவராய் இருந்தார்.

அல்லது

(2) பாவம் செய்யக் கூடாதவராயிருந்தார் - ஏனெனில் ஒரு மனிதர் என்ற வகையில் அவர் தேவனை முழுமையாகச் சார்ந்திருந்தார்.

இந்த இறையியல் விஷயமானது பல நூற்றாண்டுகளாக விவாதிக்கப்பட்டுள்ளது மற்றும் இது இவ்விரு நிலைப்பாடுகளுக்கும் ஏற்பாடு செய்யக் கூடிய ஒரு நல்ல விஷயமாய் இருந்துள்ளது.

ஒரு வேளை, (ஒருவேலை) இயேசு நமது மனித இயல்பில் பாவம் செய்யக் கூடியவராய் இருந்தாலும் தமது தெய்வீக இயல்பின்படி பாவம் செய்யக் கூடாதவராய் இருந்தார் என்று கூறுவது அவர் ஒரு நபர் என்ற வகையில் தமது தெய்வீகத்தால் கட்டுப்படுத்தப்பட்டவராய் இருந்தார் என்பதால் ஒரு நல்ல தீர்வாக உள்ளது.

கிறிஸ்து பாவம் செய்யவில்லை, இவ்விதமாக மீட்பராய் இருப்பதற்கான தேவனு டைய தர அளவையை அவர் கொண்டிருந்தார் என்பது மிகவும் தெளிவானதாக உள்ளது.

பயிற்சி: இயேசு சோதிக்கப்பட்டும் பாவம் செய்யாதிருந்தார் என்பது ஏன் முக்கியமானதாக இருந்தது?

____
____
____
____

9. அவருடைய பாவமற்ற வாழ்வு

கிறிஸ்து பாவம் செய்யாதிருந்தார் என்பது வேத வாக்கியங்களின் போதனைக்கு ஏற்றதாக உள்ளது. இவ்விதமாக அவர் மற்றவர்களின் பாவங்களுக்குப் பூரணமான பலியை ஒப்புக் கொடுக்க முடிந்தது, ஏனென்றால் அவர் தமக்குத் தாமே பலி ஒப்புக் கொடுக்கத் தேவையில்லாதிருந்தது.

யோவா. 1:29
1 பேதுரு 1:18-20
1 பேதுரு 2:21-22
எபி. 4:15
எபி. 7:26-27
யோவா. 18:38

பயிற்சி: *தேவனுக்குப் பரிபூரணமான பலியாக இயேசுவை ஏற்படுத்தியது எது?*

____

____

____

____

10. அவருடைய பூமிக்குரிய ஊழியமும் அற்புதங்களும்

மீட்பிற்கான தேவனுடைய திட்டத்தைச் செயல்படுத்துவது என்பதே இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் அடிப்படை நோக்கமாயிருக்கையில் (NIV Study Bible நூலில் பக். *1478-79*ல் கிறிஸ்துவின் வாழ்வு என்ற அட்டவணையில் காணவும்), அவருடைய பூமிக்குரிய ஊழியமானது குறிப்பிடத்தக்க செயல்பாடுகள் பலவற்றை உள்ளடக்கியிருந்தது:

- *சுவிசேஷத்தையும் மனந்திரும்புதலுக்கான அவசியத்தையும் பிரசங்கித்தல்.* ***மாற். 1:14-15***
- *வாழ்வை நன்கு வாழ்வதற்குத் தேவனுடைய கொள்கைகளைப் போதித்தல்.* ***மத்தேயு 5:1-11***
- *வியாதிகளையும் நோய்களையும் குணப்படுத்துதல்.* ***மத்தேயு 4:23***
- *அசுத்த ஆவிகளைத் துரத்துதல்.* ***மாற்கு 1:21-28***

- *அவருடைய நாட்களில் இருந்த கள்ள போதனையை எதிர்த்து நிற்றல்.* ***மத். 5:17-20, 27-28*** *(*NIV Study Bible*என்ற நூலில் பக். 1476ல் யூத மார்க்கங்களின் முக்கிய போதனைகள் என்ற அட்டவணையைக் காணவும்)*

- *அவருடைய சீஷர்களைப் பயிற்றுவித்தல்.* ***மாற். 4:33-34; மாற். 6:7-12; லூக். 4:25-35*** *(*NIV Study Bible*என்ற நூலில் பக். 1570-71ல் உவமைகள் பற்றிய அட்டவணையைக் காணவும்)*

- *மக்களின் சரீரத் தேவைகளைச் சந்தித்தல்.*
  மாற். 6:30-44

- *ஊழியத் தலைமைத்துவத்தைச் செயல்படுத்துதல்.* ***யோவா. 13:1-17***

- *பரலோகம் மற்றும் நரகம் ஆகியவற்றின் உண்மை நிலையை முன் கண்ணோட்டமிடுதல்.*
  லூக். 16:19-31
  மத். 25:40-46

- *அவரது இரண்டாம் வருகை உட்பட எதிர்காலத்தை முன்னுரைத்தல்.* ***மத். 24-25***

- *தாமே தேவனுடைய குமாரன், பழைய ஏற்பாட்டு மேசியா என்பதை*
  - *தமது* ***வார்த்தைகளாலும், லூக். 4:14-21***
  - *தமது* ***செயல்களாலும் மத். 9:1-8*** *மெய்ப்பித்தல்*

- *பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுதல். மத். 8:16-17*

- *மக்கள் தம் மீது விசுவாசம் கொள்ளச் செய்தல்.* ***யோவா. 2:11; யோவா. 20:30-31.***

- *பிதாவை மகிமைப்படுத்துதல்.* ***யோவா. 8:50; யோவா. 17:4***

கிறிஸ்துவின் வாழ்வு பற்றிக் கற்கக்கூடுதலான உதவிகளுக்கு NIV Study Bible *என்ற நூலில் பின்வரும் வரைபடங்களைக் காணவும்:*

பக். 1440 பக். 1506
பக். 1442 பக். 1540
பக். 1497 பக். 1597
பக். 1500 பக். 1603

கிறிஸ்துவின் அற்புதங்கள்:

வேதாகமத்தில் அற்புதங்களின் மாபெரும் காலங்கள் நான்கு இருந்தன:

(1) வனாந்தர யாத்திரையின் காலம் (மோசே).

(2) எலியா மற்றும் எலிசா ஆகியோரின் காலம் (1 மற்றும் 2 இராஜாக்கள்).

(3) கிறிஸ்துவின் காலம்

(4) நடபடிகள் மற்றும் அப்போஸ்தலர்களின் காலம்
(பேதுரு மற்றும் பவுல்).

இந்தக் கால வேளைகள் ஒவ்வொன்றிலும் அற்புதங்கள் அடிப்படையாகப் பின்வருபவற்றிற்காகப் பணி செய்தன:

- மனிதர்கள் தேவனை அறிந்து மகிமைப்படுத்த
- தேவனுடைய வல்லமையின் மேன்மைத்துவத்தைச் செயல் விளக்கப்படுத்த
- தேவனுடைய வசனத்தை உறுதிப்படுத்த
- தேவனுடைய செய்தியாளரை உறுதிப்படுத்த

இயேசுவின் அற்புதங்கள் குறிப்பாக,

- இயேசுவை மேசியா என்று உறுதிப்படுத்தின. **யோவா. 20:30-31**
- தேவனை மகிமைப்படுத்தி அவரை அறியச் செய்தன. **யோவா. 11:38-44**
- இயேசு தேவனென்று மெய்ப்பித்தன. **யோவா. 9:30-33**
- மனிதர்கள் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளக் காரணமாயின. **யோவா. 11:45**

(*NIV Study Bible* என்ற நூலில் பக். 1593ல் அற்புதங்கள் என்ற வரைவட்டவணையைக் காணவும்).

ஆனால் இயேசுவின் பூமிக்குரிய ஊழியமும் கூட பிதாவிடமிருந்து வந்த அவருடைய நித்திய மீட்பின் ஊழியத்துடன் தொடர்பு கொண்டிருந்தன.

பயிற்சி: *இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் முனைப்பானது சரீரத் தேவைகளைச் சந்தித்தல் என்பதாய் இருந்ததா? ஆம் அல்லது இல்லை என்றால் ஏன்?*

___

___

___

___

11. அவருடைய மீட்பு ஊழியம்

இயேசு ஒரு முக்கிய நோக்கத்திற்காக ஒரு மனிதராக இப்பூமிக்கு வந்தார் - எல்லா மனிதரின் பாவங்களுக்குப் பதிலீடான பலியாக சிலுவையில் மரித்தல். அதுவே கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்திற்கான தெய்வீக நோக்கமாய் இருந்தது.

மத். 20:17-19
மாற். 10:45
லூக். 9:20-22
லூக். 19:8-10
லூக். 24:45-48
யோவா. 1:29
யோவா. 3:16-18
யோவா. 4:42
யோவா. 10:14-18
யோவா. 12:23-33
யோவா. 19:30
அப். 2:22-24
வெளி. 13:8

மற்றும் அந்த ஊழியத்தை இயேசு தெளிவாக உறுதிப்படுத்தப்பட்ட தம்முடைய சரீர உயிர்த்தெழுதலின் மூலம் நிறைவேற்றினார்.
ரோமர் 1:1-4
ரோமர் 6:4
1 கொரி. 15:12-22

பயிற்சி: இயேசு மரிக்கத் தேவையற்றிருந்ததால், அவர் மரிக்கும்படி பூமிக்கு வருவதற்கு அவரைத் தூண்டியது எது?

____

____

____

____

12. அவரது பணி நிலைகள்

கிறிஸ்து தமது முதல் மற்றும் இரண்டாம் வருகையில் தேவனால் கொடுக்கப்பட்ட பணி நிலைகள் பலவற்றைச் செய்திருக்கிறார் அல்லது செய்வார்:

தீர்க்கதரிசி - தேவனின் சார்பாக மனிதர்களிடம் பேசுதல் என்பதே தீர்க்கதரிசியின் வேதாகம ரீதியான பணியாக இருந்தது; தேவனுடைய சத்தியத்தைப் பேசுதலும் எதிர்காலத்தைப் பற்றிய சத்தியத்தைப் பேசுதலும் இப்பணியாக இருந்தது. தேவனுடைய தீர்க்கதரிசி என்ற வகையில் கிறிஸ்து தமது பணி நிலையைப் பரிபூரணமாக நிறைவேற்றினார்.

உபா. 18:14-22
மத். 21:11
யோவா. 6:14
யோவா. 7:37-44
யோவா. 8:31-38
யோவா. 8:45-47
லூக். 17:20-37
எபி. 1:1-2

கிறிஸ்து தமது முதல் வருகையில் தீர்க்கதரிசியின் பணிநிலையை நிறைவேற்றினார்.

ஆசாரியர் - பாவம் குறித்து தேவனுக்கு முன்பாக மனிதர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துதல் என்பதே ஆசாரியரின் வேதாகம ரீதியான பணியாக இருந்தது. கிறிஸ்து நிறைவான பிரதான ஆசாரியர் என்ற வகையில் பூரணமான, பதிலீடான பலியைச் செலுத்தினார், ஏனெனில் அவர் தமக்காகத் தாம் பலி செலுத்தத் தேவையில்லாதிருந்தது.

லேவி. 16:20-22
யோவா. 1:29
யோவா. 10:17-18

ரோமர் 3:21-25
எபி. 2:17
எபி. 7:22-28
எபி. 9:24-28

கிறிஸ்து தமது முதல் வருகையில் ஆசாரியர் என்ற தமது பணிநிலையை நிறைவேற்றினார், இருப்பினும் அவர் இன்னமும் பரிசுத்தவான்களின் மன்னிக்கப்பட்ட நிலையைப் பொறுத்த அளவில் அவர்களுக்காகத் தேவனிடம் பரிந்து பேசுகின்றார். ***1 யோவா. 2:1-2***

நியாயாதிபதி - தவறான செயல் அல்லது பாவத்திற்கு ஆதாரத்தை மதிப்பிட்டு, ஒரு தீர்ப்பைத் தரவழைத்தல் என்பது நியாயாதிபதியின் வேதாகம ரீதியான பணியாக இருந்தது; மற்றும் அந்த நியாயத் தீர்ப்பை நிறைவேற்றுதல் என்பதும் அவரது பணியாக இருந்தது. கிறிஸ்து எல்லா மனிதருடைய பாவத்தைக் குறித்தும் நியாயாதிபதியாக வந்தார்.

யோவா. 3:16-21
யோவா. 5:22-30
யோவா. 9:30-39
அப். 10:36-43

கிறிஸ்து தமது முதல் வருகையில் தேவனுடைய நியாயத் தீர்ப்புகளுக்கான நீதியான அடிப்படையைச் செயல் விளக்கப்படுத்தினார். கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில் பாவத்தின் காரணமாக உலகை நியாயம் தீர்ப்பார் மற்றும் பாவத்திற்கெதிரான தேவ கோபத்தைச் செயல்படுத்துவார் ***(வெளி. 19:11-21).*** மேலும் கிறிஸ்து, பெரிய வெள்ளை அரியணை நியாயத் தீர்ப்பில் அவிசுவாசிகள் அனைவரையும் நியாயத் தீர்ப்பார் ***(வெளி. 20:11-15).***

பேமா இருக்கையில் விசுவாசிகள் யாவரும் கிறிஸ்துவினால் நியாயந் தீர்க்கப்படுவார்கள் (மதிப்பிடப்படுவார்கள், ஆக்கினைத் தீர்ப்பு அடைவதில்லை).

ரோமர் 8:1
2 கொரி. 5:8-10
ரோமர் 14:9-12
1 கொரி. 4:1-5
1 கொரி. 3:5-15

அரசர் - தேவனால் அபிஷேகிக்கப்பட்ட பிரதிநிதி என்ற வகையில் மக்கள் மீது ஆளுகை செய்தலே அரசரின் வேதாகம ரீதியான பணியாக இருந்தது.

கிறிஸ்து தேவனால் அபிஷேகிக்கப்பட்ட அரசராய் இருக்கிறார். ***சங். 2:4-12; லூக். 1:30-33.***

கிறிஸ்து தமது முதல் வருகையில்.

- தம்மை அரசராக முன்னிறுத்தினார்

  மத். 2:2
  மத். 21:1-10

மத். 27:11
மாற். 1:14-15
லூக். 17:20-21
யோவா. 6:15

- ஆனால் அரசர் என்பது புறக்கணிக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார்.

லூக். 19:11-14
யோவா. 19:14-16
மத். 27:37

கிறிஸ்து, யூதர்கள் எதிர்நோக்கியிருந்த அரசியல்/குடிமைத்துவ மேசியாவாக இல்லாதிருந்ததாலும், அவர்களின் மத அமைப்புக்கு அவர் ஒரு உண்மையான அச்சுறுத்தலாய் இருந்ததாலும் அவர் புறக்கணிக்கப் பட்டார்.

யோவா. 11:45-57

- அவரது இரண்டாம் வருகை மட்டும் பூமியில் அவருடைய இராஜ்யமானது தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

மத். 21:38-43

கிறிஸ்து தமது இரண்டாம் வருகை தொடங்கி, என்றென்றைக்கும் இராஜாதி இராஜாவாக ஆட்சியும் ஆளுகையும் செய்வார்.

சக. 14:1-9
பிலி. 2:5-11
வெளி. 11:15
வெளி. 15:2-4
வெளி. 17:12-14
வெளி. 19:16
வெளி. 22:1-5

<u>தொகுப்புரை</u>

<u>தீர்க்கதரிசி</u> என்ற வகையில் - இயேசு முற்றிலுமான சத்தியமாய் இருக்கின்றார்.

<u>ஆசாரியர்</u> என்ற வகையில் - இயேசு முழுமையான பலியாக இருக்கின்றார்.

<u>நியாயாதிபதி</u> என்ற வகையில் - இயேசு நீதியுள்ள தர அளவையாய் இருக்கின்றார்.

<u>அரசர்</u> என்ற வகையில் - இயேசு கர்த்தாதி கர்த்தாவாக இருக்கின்றார்.

பயிற்சி: *கிறிஸ்துவின் பணி நிலைகளில் ஏதாவதொன்று மற்றவற்றைக் காட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளதா? ஆம் அல்லது இல்லையென்றால் ஏன்?*

____

____

____

____

13. அவரது தியாகமான, பதிலீடான மரணம்

சிலுவையில் இயேசு கிறிஸ்து தமது சரீரத்தில் நமது பாவங்களைச் சுமந்தார், நமது தண்டத்தைச் செலுத்தினார், மற்றும் நாம் மீட்கப்பட்டு, மன்னிக்கப்பட்டு தேவனுடன் சரியான உறவுமுறைக்குத் திரும்பக் கொண்டு வரப்படுவதற்காக நமது இடத்தில் அவர் பாவமானார்.

அவரது மரணம்,

- சுயவிருப்பத்தின்படியானதாக
- தியாகம் நிறைந்ததாக
- பதிலீடானதாக
- ஒப்புரவாக்குவதாக
- யாவருக்கும் போதுமானதாக இருந்தது.

மற்றும் அது எல்லாரும் அவர் மீது விசுவாசம் கொள்ளவும் மீட்படையவும் மாட்டார்கள் என்றாலும் எல்லா மனிதர்களையும் மீட்படையக் கூடியவர்களாகத் தர வழைத்தது.

1 பேது. 1:17-21
1 பேது. 2:24-25
2 கொரி. 5:21
ரோமர் 5:6-11
எபி. 7:27
1 யோவா. 2:2

மற்றும் வேத வாக்கியம் சாட்சியம் அளிக்கின்றபடி, சிலுவையில் அறையப் பட்டு கிறிஸ்து மரணம் அடைந்தார் என்பது உண்மையானதாகவே இருந்தது.

லூக். 23:26-56

(NIV Study Bible என்ற நூலின் பக். 1520-21ல் பாடுகளின் வாரம் என்ற வரைவட்டவணையைக் காணவும்).

சிலுவையில் இயேசு கிறிஸ்துவின் மரணத்தினுடைய தனிச் சிறப்புக்கள் பின்வருமாறு சுருக்கமாய்க் குறிப்பிடப்பட முடியும்:

- மீட்பிற்கான பிதாவின் திட்டத்தை கிறிஸ்து நிறைவேற்றினார்.

  யோவா. 6:38-40
  யோவா. 10:18
  யோவா. 17:4

- பாவத்திற்குச் செலுத்தும்படி தேவன் கேட்டுக் கொண்ட பரிசுத்தத்தைக் கிறிஸ்து நிறைவுபடுத்தினார்.

  எபி. 9:13-14
  கொலோ. 2:13-15
  1 யோவா. 2:2
  எபே. 1:7-10

- தவறாத, தகுதியற்றவர்க்கும் கூடக் காண்பிக்கப்படக் கூடிய தேவ அன்பை கிறிஸ்து செயல்விளக்கப்படுத்தினார்.

  யோவா. 3:16
  1 யோவா. 4:9-10
  ரோமர் 5:8

- யாவருக்குமான இரட்சிப்பின் வழியை கிறிஸ்து பெற்றுத் தந்தார்.

  யோவா. 1:12
  யோவா. 3:14-16
  யோவா. 3:36
  யோவா. 6:40
  ரோமர் 4:22-25

பயிற்சி: எல்லாரும் மீட்கப்பட மாட்டார்கள் என்றிருக்கையில், எல்லா மனிதர்களுக்குமான தண்டத்தைக் கிறிஸ்து செலுத்தியது ஏன்?

____

____

____

____

14. அவருடைய உடல் ரீதியான உயிர்த்தெழுதல்

இயேசுவின் பூமிக்குரிய ஊழியமானது கன்னியிடமிருந்து அவர் அற்புதமாய்ப் பிறந்த திரு அவதாரத்துடன் தொடங்கிற்று. இயேசுவின் பூமிக்குரிய ஊழியமானது இன்னொரு அற்புதத்தினால் - அவது சரீர உயிர்த்தெழுதலினால் முடிய வேண்டியது அவசியமாய் இருந்தது. கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலை மறுத்தல் என்பது திரு அவதாரத்தை ஒன்றுமற்ற தாக்குவதாக உள்ளது.

கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட பிறகு, அடக்கம் பண்ணப்பட்டார், மற்றும் மூன்றாம் நாளில் அவர் மீண்டும் ஒருக்காலும் மரியாதிருக்கும்படி உடலுடன் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார். அவ்வாறு செய்ததில், அவரில் விசுவாசம் கொள்கிறவர்களும் வாழும்படிக்கு, அவர் மரணத்தையும் பாவத்தையும் வெற்றி கொண்டார். கிறிஸ்து, உயிர்ப்பிக்கப்பட இருப்பவர்களின் முதற் கனியானார்.

சரீர உயிர்த்தெழுதல் என்பது கிறிஸ்தவத்தின் தனிச்சிறந்த பண்புக் கூறாக உள்ளது, இது கிறிஸ்தவத்தை மற்ற எல்லா மதங்களில் இருந்தும் பிரிக்கிறதாகவும் சுவிசேஷ செய்தியின் மிக முக்கியமான பகுதியாகவும் உள்ளது.

<u>சுவிசேஷ திறவுகோல் வசனப் பகுதிகள்:</u>

சுவிசேஷம் ஒவ்வொன்றும் கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலை உறுதிப்படுத்துகிறது.

மத். 27:57-28:20
மாற். 16:1-20
லூக். 24:1-52
யோவா. 20:1-21, 25

இத்துடன் கூடுதலாக, உயிர்த்தெழுதல் பற்றிக் குறைந்தபட்சம் மற்ற இரண்டு முக்கிய வசனப் பகுதிகள் உள்ளன.

அப். 1:1-11
1 கொரி. 15:1-58

(NIV Study Bible என்ற நூலின் பக். 1586ல் உயிர்த்தெழுதல் [நடந்த பின்] தரிசனங்கள் என்ற வரைவட்டவணையில் காணவும்).

<u>உயிர்த்தெழுதலின் உண்மைகள்</u>

கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலின் உண்மை நிலை என்பது எல்லாக் காலங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகளில் மிகச் சிறந்ததாக உள்ளது. பின்வரும் உண்மைகள் உறுதியாகக் கட்டப்பட்ட, மறுக்க இயலாத ஆதாரத்தை அளிக்கின்றன:

1. வெறுமையான கல்லறை

2. (கிறிஸ்துவின்) உடல் அங்கில்லாமை.
3. தூதனின் அறிவிப்பு
4. விட்டுச் செல்லப்பட்ட (பிணத்தைச் சுற்றியிருந்த) துணிகள்
5. பெண்களின் சாட்சியம்
6. எம்மாவு செல்லும் பாதையில் 2 சீஷர்களின் சாட்சியம்
7. பேதுருவுக்குத் தரிசனம்
8. சீஷர்களுக்கு 2 தரிசனங்கள்
9. கிறிஸ்துவின் மகிமையுள்ள சரீரத்தின் மாறுதல்கள் மற்றும் உண்மை நிலை (மாம்சமும் எலும்புகளும் இருந்தும் கூட ஆவிக்குரிய நிலை).
10. அப்போஸ்தலர்களின் வாழ்வின் தைரியம் மற்றும் சாட்சியம் ஆகியவற்றில் ஏற்பட்ட வியத்தகு மாற்றங்கள்.
11. நடபடிகளின் வல்லமையின் அற்புத வெளிப்பாடு.
12. ஓய்வு நாளில் இருந்து கிறிஸ்தவ ஆராதனையானது உயிர்த்தெழுதலின் நாளான ஞாயிற்றுக் கிழமைக்கு மாறுதல்.
13. இன்றைய நாட்களில் சபை நிலவுதல்.

சாட்சியம் யாவும் வேதாகம ரீதியானதென்று ஒப்புக் கொள்ளப்படுகிறது, எனவே நாம் மீண்டும் வேத வசனத்தின் நம்பகத் தன்மையின் மீது நிலைநிற்கின்றோம். வேத வசனம் உண்மையானதாக இருக்கின்றதால், உயிர்த்தெழுதலும் உண்மையானதாகவே இருக்கின்றது.

<u>உயிர்த்தெழுதல் பற்றிய தவறான கண்ணோட்டங்கள்:</u>

உயிர்த்தெழுதல் பற்றிய தவறான மனிதக் கண்ணோட்டங்கள் பல உள்ளன, ஆனால் அவை யாவையும் வேதாகமத்தின் சத்தியத்தைப் புறக்கணிக்கவோ அல்லது மறுக்கவோ வேண்டும். சில தவறான கண்ணோட்டங்கள் பின்வருமாறு:

- சிலுவையில் கிறிஸ்து உண்மையிலேயே மரிக்கவில்லை, ஆனால் உணர்விழந்து மட்டுமே இருந்தார்.
- சீஷர்கள் கிறிஸ்துவின் சரீரத்தைத் திருடிச் சென்று ஒளித்து வைத்து விட்டு, அவருடைய தரிசனங்கள் பற்றிப் பொய்யுரைத்தார்கள்.
- கிறிஸ்துவின் உடல் அல்ல ஆனால் ஆவி மட்டுமே வாழ்விக்கப்பட்டது.

இவை யாவும் மற்றும் இது போன்ற மற்ற தவறான கண்ணோட்டங்களும் வேத வசனத்தின் போதனைக்கு முரண்படுகின்றன, எனவே இவை யாவையும் புறக்கணிக்கப்பட வேண்டும்.

<u>பதிலுரை:</u>

வசனத்தின் சத்தியத்தின் மீதுள்ள விசுவாசத்தால் நம்புவதற்கு ஒரு நபர் தேர்ந்து கொள்ளும் பொழுது மட்டுமே கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலின் உண்மை நிலையானது பகுத்துணரப்பட முடியும்.

<u>கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலின் தனிச் சிறப்பு</u>

சரீர உயிர்த்தெழுதலின் தனிச் சிறப்பானது மிகைப்படுத்தி உரைக்கப்பட முடியாது, ஏனெனில் கிறிஸ்தவத்தின் சாராம்சம் இந்த அஸ்திபாரமான சத்தியத்தின் மீதுதான் நிலைநிற்கின்றது.

இயேசுவின் சரீர உயிர்த்தெழுதலானது

- பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தைச் செல்லுபடியாக்குகிறது.

  லூக். 24:19-27
  லூக். 24:44-45
  சங். 16:10
  அப். 2:24-35

- கிறிஸ்துவின் தெய்வீகத்தையும் அவரது மீட்பு ஊழியத்தை தேவன் அங்கீகரித்ததையும் செயல் விளக்கப்படுத்துகின்றது.

  ரோமர் 1:4
  எபே. 1:18-21

- சுவிசேஷத்தின் மையச் செய்தியை உள்ளடக்குகின்றது.

  1 கொரி. 15:2-4
  ரோமர் 10:9-10
  அப். 2:24
  அப். 4:8-11
  அப். 17:31-32

- நமக்குப் பின்வருபவற்றை உறுதிப்படுத்துகின்றது:
  - கிறிஸ்து உயிர் வாழ்கின்றார்.
  - சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் என்பது வீண் முயற்சியல்ல.

- நமது விசுவாசம் வீணானதோ அல்லது மதிப்பற்றதோ அல்ல.
- நாம் தவறான சாட்சியம் கொடுப்பதில்லை.
- நாம் இன்னமும் பாவத்தில் மரித்தவர்களாய் இருப்பதில்லை.
- பாவமும் மரணமும் தோற்கடிக்கப்பட்டுள்ளன.
- நாம் நித்திய ஜீவனின் நம்பிக்கையைப் பெற்றுள்ளோம்.
- நாமும் சரீரத்தில் உயிர்த்தெழுந்து கிறிஸ்துவைப் போன்று மகிமையுள்ள சரீரத்தைப் பெறுவோம்.
- நாம் நித்தியத்திற்கும் உருவற்ற ஆவிகளாய் இருக்க மாட்டோம்.
  1 கொரி. 15

- விசுவாசிகளை பாவத்திற்கல்ல ஆனால் இயேசுவின் உயிர்த்தெழுதலின் வல்லமைக்கென்று வாழக் கூடியவர்களாக்குகிறது.

ரோமர் 6:4-12
ரோமர் 8:9-12
பிலி. 3:10-11

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சரீரம்

இயேசுவின் மகிமைக்குரிய உயிர்த்தெழுந்த சரீரம் பின்வரும் பண்புகளைக் கொண்டிருந்தது:

- அது உடல் ரீதியானதாக (மெய்யானதாக) மற்றும் ஆவிக்குரியதாக இருந்தது.
- அதினால் பேசவும் கேட்கப்படவும் முடிந்தது.
- உணர்ந்தறியக் கூடியதாக இருந்தது.
- உண்ணக் கூடியதாக இருந்தது.
- சில வழிகளில் உலகப்படியானதல்லாமல் இருந்தது.
- காலம் இடம் அல்லது உலகப் பொருட்களினால் வரையறைக்குட்படுத்தப்படாது இருந்தது.
  லூக். 24:13-43
  யோவா. 20:10-21:25

1 கொரி. 15:35-55ன் அடிப்படையில் விசுவாசிகளின் மகிமையுள்ள உயிர்த்தெழும் சரீரமானது கிறிஸ்துவினுடையதைப் போன்றதாக இருக்கும்.
(***பிலி. 3:20-21***ஐயும் காணவும்)

கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதல் இன்றி,
- பாவங்களுக்கு மன்னிப்பு இல்லை.
- மரணத்தின் சாபத்திலிருந்து விடுதலை இல்லை.
- மரணத்திற்குப் பிறகு வாழ்வு இல்லை.

உயிர்த்தெழுதலினால் கிறிஸ்துவின் மனிதத்துவமானது மகிமைப்பட்டது மற்றும் அவருடைய தெய்வீகமானது அவரது முந்திய மேன்மையான நிலைக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டது.

15. அவரது பரத்துக்கேறுதல்

இயேசு நமது பூமிக்குரிய ஊழியத்தை நிறைவேற்றிய பிறகு, *40* நாட்கள் அளவாக உயிர்த்த பிறகு தரிசனங்கள் மற்றும் ஊழியம் செய்த பிறகு பரலோகத்திற்கு ஏறிச் சென்றார். கிறிஸ்து தம்முடைய மகிமைப் படுத்தப்பட்ட உடலுடன் பரலோகம் சென்றார், மற்றும் இப்பொழுது அவர் தேவனுடைய வலது புறத்தில் வீற்றிருக்கின்றார். வேத வசனத்தின் சுட்டிக்காட்டுதல்கள் ஒவ்வொன்றின்படியும், கிறிஸ்து மகிமைப்படுத்தப் பட்ட தமது மனிதத்துவத்தை என்றென்றைக்கும் தக்க வைத்துக் கொள்வார் (**வெளி. *5:6***ஐக் காணவும்). கிறிஸ்து மகிமைப்படுத்தப்பட்ட தேவனாக/ மனிதராக பரலோகத்திற்கு ஏறிச் சென்றார். அதே விதமாகவே கிறிஸ்து மீண்டும் திரும்பி வருவார். **இயேசு பரலோகத்தில் இருந்து இறங்கியது திரு அவதாரமாக இருந்தது. அவர் பரலோகத்திற்குத் திரும்பியது பரத்துக் கேறுதலாயிருந்தது.**

<u>பரத்துக்கேறுதல் பற்றிய திறவுகோல் வசனங்கள்:</u>

மாற். 16:9
லூக். 24:45-53
யோவா. 6:62
யோவா. 20:17
அப். 1:1-11
எபே. 4:7-13
1 பேது. 3:21-22

இவைகள் மற்றும் பிற வசனப் பகுதிகளின் அடிப்படையில் இயேசு கிறிஸ்துவின் பரத்துக்கேறுதல் தனிச் சிறப்புடையதாக உள்ளது ஏனென்றால் இது,

- உயிர்த்தெழுதலை நிறைவாக்குகின்றது
  அப். 2:32-33
- அவரது மறு - மேன்மைப்படுதல் மற்றும் ஆட்சி புரிதலைத் தொடங்கி வைக்கின்றது.
  பிலி. 2:5-11
  யோவா. 17:5
- அவரது மீட்பின் ஊழியத்திற்கான தேவனுடைய அங்கீகாரத்தை உறுதிப்படுத்துகிறது.
  எபி. 1:3
  எபி. 12:2
- கிறிஸ்துவின் பரிந்து பேசும் ஊழியத்தைச் செயல்படுத்துகின்றது.
  ரோமர் 8:34
- கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தை நிறைவு செய்து, அவரது சுய - வரையறையை (kenosis) முடித்து வைக்கின்றது.
  பிலி. 2:9-11

- பரிசுத்த ஆவியானவர் இவ்வுலகிற்கு வந்து, விசுவாசிகள் மற்றும் குற்றம் உணர்ந்த பாவிகளுக்குள் வாசம் பண்ணுவதை அனுமதிக்கின்றது.
  யோவா. 16:7-11
- விசுவாசிகள் தேவனிடம் சேரும் வழியை அனுமதிக்கின்றது
  எபி. 4:14-16
  ரோமர் 5:1-2
- சபை யுகத்தைத் தொடங்கி வைத்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்நோக்குகின்றது.
  அப். 1:7-11

பயிற்சி: கிறிஸ்து தாம் பரத்துக்கேறிய பிறகு(ம்) மகிமைப்படுத்தப்பட்ட தம்முடைய மனிதத்துவத்தைத் தக்க வைத்துக் கொண்டது ஏன்?

____

____

____

____

இ. கிறிஸ்துவின் தற்கால ஊழியம்

கிறிஸ்து இப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய வலது புறத்தில் வீற்றிருந்து தமது திரு அவதாரத்திற்கு முந்திய நிலையையும் இராஜரீகத்தையும் பெற்றுச் செயல்படுத்திக் கொண்டுள்ளார்.

- பரலோகத்தில் கிறிஸ்துவின் ஊழியம் பொதுவாக பின்வருமாறு உள்ளது

கிறிஸ்து,

- எல்லார் மீதும் அதிகாரத்தை செயல்படுத்துபவராக, படைக்கப்பட்ட எல்லாவற்றையும் தாங்குகின்றவராக இதைப் பிதாவின் திட்டத்தின்படி செய்பவராக இருக்கின்றார்.

  மத். 28:18
  எபே. 1:19-22
  கொலோ. 1:17-18
  1 பேது. 3:21-22

- தனித்தனியாகப் பரிசுத்தவான்களுக்காகவும் சபைக்காகவும் பிதாவின் முன்பாகப் பரிந்து பேசுகிறார்.

  1 யோவா. 2:1
  ரோமர் 8:33-34

- எல்லாப் பரிசுத்தவான்களின் மீட்பையும் உறுதியாகப் பாதுகாக்கின்றார்.

  எபி. 7:25
  யோவா. 10:27-30
  ரோமர் 8:38-39
  யூதா 24

- விசுவாசிகளுக்குப் பரலோகத்தில் ஒரு இடத்தைத் தயார் செய்கின்றார்.

  யோவா. 14:1-3

- *சபைக்கு கிறிஸ்துவின் ஊழியம்*

கிறிஸ்து,

- தலைவராகவும் பாதுகாவலராகவும் செயல்படுகின்றார்.

  எபே. 1:19-23
  எபி. 13:20

- பிரதான மூலைக் கல்லாகவும் அஸ்திபாரமாகவும் இருக்கின்றார்.

  1 கொரி. 3:11-15
  எபே. 2:20
  1 பேது. 2:4-8

- கிறிஸ்துவின் சரீரத்தைச் சுத்திகரித்து அதைத் தம் மணவாட்டியாய் இருக்கும்படிக்குத் தயார் செய்கின்றார்.

  எபே. 5:25-27

- சபைக்கு ஆவிக்குரிய பக்குவம் பெற்ற மனிதர்களைக் கொடுத்து, சபையைத் தமக்குள் பக்குவம் பெற்று வளரத் தேவையானவற்றை அளிக்கின்றார்.

  எபே. 4:7-16

- <u>தனித்தனி விசுவாசிகளுக்குக் கிறிஸ்துவின் ஊழியம்</u>

கிறிஸ்து,

- உள்ளாக வாசம் பண்ணி வல்லமையளிக்கின்றார்
  ரோமர் 8:9-12
  பிலி. 4:13
- அவர்களைப் பாவத்திற்கு மரித்து தேவனுக்கென்று பிழைத்திருக்கச் செய்கின்றார்.
  ரோமர் 6:11-12
- அவர்களின் பலவீனத்தில் அவர்களுக்காகப் பரிதபிக்கின்றார்.
  எபி. 4:15
- தேவைப்படும் காலத்தில் உதவி செய்ய இரக்கத்தையும் கிருபையையும் நீட்டிருக்கின்றார்.
  எபி. 4:16
- தமக்குள்ளும் தம் வசனத்திற்குள்ளும் விசுவாசிகள் நிலைத்திருக்கையில் அவர்களைக் கனி தரக் கூடியவர்கள் ஆக்குகின்றார்.
  யோவா. 15:1-7
- சோதனையை எதிர்த்து நிற்க அவர்களைப் பலப்படுத்துகின்றார்.
  எபி. 2:17-18
- அவர்கள் மூலம் சாட்சியளிக்கின்றார்
  அப். 1:8
- அவர்கள் ஞானமும், நீதியும் மற்றும் பரிசுத்தமுமாய் இருக்கின்றார்.
  1 கொரி. 1:30
- அவர்களின் மூலம் தமது வாழ்வையும் மகிமையையும் வெளிப்படுத்துகின்றார்.
  2 கொரி. 4:5-7
  கலா. 2:20
  கொலோ. 3:4
- அவர்களுடன் ஐக்கியம் கொள்ளுகின்றார்.
  1 யோவா. 1:3
- தம் சித்தத்தை நிறைவேற்றவும் தேவனைப் பிரியப்படுத்தவும் தேவையானவற்றை அவர்களுக்குத் தருகின்றார்.
  எபி. 13:21
- தமது சாயலுக்கொப்ப அவர்களை மாற்றுகின்றார்.
  2 கொரி. 3:18
  ரோமர் 8:28-29
  பிலி. 3:20-21

- தமது மகிமையுள்ள ஐசுவரியத்தினாலும் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளப் பட்ட சுதந்தரத்தினாலும் அவர்களின் தேவைகளைச் சந்திக்கின்றார்.
  பிலி. 4:19

- வாழ்விற்கும் தேவ பக்திக்கும் தேவையான எல்லாவற்றையும் அவர்களுக்குத் தருகின்றார்.
  2 பேது. 1:2-3

ஈ. | கிறிஸ்துவின் எதிர்கால ஊழியம்

கிறிஸ்துவின் எதிர்கால ஊழியம் பற்றிய பல அம்சங்கள் எதிர்கால விஷயங்களின் (முடிவு நிலை கோட்பாடு) உபதேசத்தில் விரிவாகக் கூறப்படும் என்றிருக்கையில், ஒரு சுருக்கமான தொகுப்புரை இங்கு அளிக்கப்படுகின்றது.

கிறிஸ்து தமது எதிர்கால ஊழியத்தில்,

- தமது சபையைப் பரவசமாக்கத் திரும்பி வருவார்.
  யோவா. 14:1-3
  1 தெச. 4:13-18

- மரித்த விசுவாசிகளை உயிர்ப்பித்து, உயிருள்ள விசுவாசிகளை மறுரூபமாக்குவார்.
  பிலி. 3:20-21

- உபத்திரவத்தின் போது பாவத்தின் மீது நியாயத் தீர்ப்பு ஊற்றப்படுதலை மேற்பார்வையிடுவார்.
  வெளி. 5:1-10

- தமது மணவாட்டியாகிய சபையைப் பரலோகத்தில் திருமணம் முடித்துக் கொள்வார்.
  எபே. 5:25-27
  வெளி. 19:6-9

- பரலோகத்தில் விசுவாசிகளுக்கு "பேமா இருக்கை" மதிப்பீட்டை நடத்துவார்.
  ரோமர் 14:9-12
  2 கொரி. 5:9-10
  1 கொரி. 3:6-15
  1 கொரி. 4:1-5

- பாவத்தை நியாயத் தீர்க்கவும் அர்மெகதோனில் தேவனுடைய எதிரிகளைத் தோல்வியடையச் செய்யவும் தமது இரண்டாம் வருகையில் திரும்புவார்.
  வெளி. 19:11-21

- எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்தி, இராஜ்யத்தைப் பிதாவாகிய தேவனிடத்தில் ஒப்புவிப்பார்.
  வெளி. 11:15
  1 கொரி. 15:24-28

- பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக ஆயிரமாண்டு அரசாட்சியின் போது தாவீதின் அரியணையில் வீற்றிருந்து 1000 ஆண்டுகள் பூமியை ஆட்சி செய்வார்.
  வெளி. 20:1-6
  லூக். 1:31-33

- சாத்தானை அக்கினிக் கடலிலே தள்ளுவார்.
  வெளி. 20:7-10

- நித்திய மரணத்திற்கென்று தாம் உயிர்ப்பிக்கும் அவிசுவாசிகளுக்குப் பெரிய வெள்ளை அரியணையின் மீதிருந்து நியாயத் தீர்ப்பை நடத்துவார்.
  வெளி. 20:11-15

- இராஜாதி இராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் என்றென்றும் அரசாளுவார்.
  வெளி. 19:15-16
  வெளி. 21-22

பயிற்சி: *கிறிஸ்துவின் ஊழியத்தை அவர் பூமியில் இருந்த நாட்களுடன் நாம் வரையறைப் படுத்தச் சாய்வது ஏன்?*

____

____

____

____

4. பரிசுத்த ஆவியானவர் - ஆவியியல்

அறிமுகம்

பரிசுத்த ஆவியானவர் பற்றிய பல பாடங்கள் அவரது வல்லமை, ஊழியம் மற்றும் அவரது தெய்வீகத்துவத்திற்கும் ஆசாரியத்துவத்துக்கும் தனிப்பட்ட வகையிலான வரங்கள் பற்றிக் கவனம் செலுத்துகின்றன. மற்றும் பரிசுத்த ஆவியானவரை "வல்லமை"யுடன் மட்டும் சமானப்படுத்துதல் என்பது வழக்கமாக உபதேசத்துடன் தொடர்புடைய தவறான செயல்முறைக்கு வழிநடத்துகின்றது. திரித்துவத்தின் 3ம் நபரான பரிசுத்த ஆவியானவரின் இயல்பு, நபர்த்துவம் மற்றும் ஊழியம் ஆகியவை பற்றி வேதாகம் போதிப்பது என்ன என்பதே நமது வலியுறுத்தலாக உள்ளது.

அ. பரிசுத்த ஆவியானவரின் இயல்பு நபர்த்துவமும்

1. அவரது தெய்வீகத்துவம்

சாராம்சத்தில் பரிசுத்த ஆவியானவர், பிதா மற்றும் குமாரன் ஆகியோருடன் நபர் என்ற வகையில் உறவுபட்டு தேவனுக்குச் சமமானவராகவே இருக்கின்றார்.

- ***மத். 28:19***
  பரிசுத்த ஆவியானவரின் "நாமம்" பிதா மற்றும் குமாரன் ஆகியோரின் அதே அளவு கொண்டதாக உள்ளது.

- ***யோவா. 14:16-17***
  இயேசுவைப் போன்று அதே வகையிலான இன்னொரு ஆலோசனை யாளராகவே பரிசுத்த ஆவியானவர் குறப்பிடப்படுகின்றார்.

- ***2 கொரி. 13:14***
  கிறிஸ்துவின் கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியானவரின் "ஐக்கியமும்" சமானப்படுத்தப்பட்டுள்ளன.

- ***எபி. 10:15-17***
  தேவன் பேசுகின்ற பொழுது பரிசுத்த ஆவியானவர் பேசுகின்றதாகக் கூறப்படுகிறார்.

- ***அப். 5:3-4***
  தேவன் மட்டுமே "பரிசுத்தமானவராக" இருப்பதால், ஆவியானவர் பரிசுத்த ஆவியானவர் என்று அழைக்கப்பட்டிருப்பது அவரை தெய்வீகமானவர் என்று அடையாளப்படுத்துகின்றது.

2. அவரது பண்புகள் (குணநலன்கள்)

தேவனுக்கு மட்டுமே உரித்தான பண்புகள் பரிசுத்த ஆவியானவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளன

- *நித்திய தன்மை* — ***எபி. 9:14***
- *சர்வ வல்லமை* — ***ரோமர் 8:11***
- *எங்கும் நிறைந்துள்ள தன்மை* — ***சங். 139:7-12***
- *எல்லாம் அறிந்த தன்மை* — ***1 கொரி. 2:10-11***
- *சத்தியம்* — ***யோவா. 14:16-17***
- *அன்பு* — ***ரோமர் 5:5***
- *ஜீவன்* — ***யோவா. 6:63***

3. அவரது இயற்பெயர்களும் அடையாளங்களும்

- வேத வசனங்களில் பரிசுத்த ஆவியானவருக்குத் தரப்பட்டுள்ள இயற்பெயர்கள் தேவன் என்ற வகையில் அவரது இயல்பைக் குறிக்கின்றன.

பரிசுத்த தன்மையின் ஆவியானவர்	*ரோமர் 1:4*
கர்த்தருடைய ஆவியானவர்	*லூக். 4:18*
கிறிஸ்துவின் ஆவியானவர்	*ரோமர் 8:9*
இயேசுவின் ஆவியானவர்	*அப். 16:7*
உங்கள் பிதாவின் ஆவியானவர்	*மத். 10:20*
ஜீவனுள்ள தேவனின் ஆவியானவர்	*2 கொரி. 3:3*

- வேத வசனங்களில் ஆவியானவரைக் குறிப்பிடும் அடையாளங்கள் அவரது இயல்பையும் ஊழியத்தையும் வெளிப்படுத்துகின்றன.

காற்று	*யோவா. 3:8*

எண்ணெய்	***1 சாமு. 16:13*** ***அப். 10:38*** ***1 யோவா. 2:20, 27***
ஜீவ தண்ணீர்	***யோவா. 4:14*** ***யோவா. 7:38-39***
அக்கினி	***மத். 3:11-12***
அச்சாரம் (உத்தரவாதம்)	***எபே. 1:13-14***
முத்திரை (பாதுகாப்பு)	***2 கொரி. 1:22***
உடை	***லூக். 24:49***
புறா	***யோவா. 1:32-34***
வல்லமை	***அப். 2:8***

4. அவருடைய புறப்படுதல்

பரிசுத்த ஆவியானவர் நித்தியத்திற்கும் பிதா மற்றும் குமாரன் ஆகியோரிடத்திலிருந்து புறப்படுகின்றார்.

யோவா. 14:15-17
யோவா. 15:26
யோவா. 16:7
கலா. 4:4-6

ஆனால் பெந்தெகொஸ்தே நாளன்று இவர் பிதா மற்றும் குமாரன் ஆகியோரால் ஒரு விசேஷித்த வகையில் பின்வருவனவற்றைச் செய்வதற்காக "அனுப்பப்பட்டார்" (புறப்பட்டார்).

- சபையின் ஊழியத்திற்கு வல்லமை அளிக்க.
- விசுவாசிகளுக்கு கிறிஸ்துவின் சரீரத்தினுள் ஞானஸ்நானம் தர மற்றும் விசுவாசிகள் சாட்சி கொடுக்கும்படியும் ஆவிக்குரிய கனிதரும்படியும் அவர்களைப் பெலப்படுத்த.
- உலகத்தின் பாவங்களை உணர்த்த.

லூக். 24:48-49
யோவா. 7:39-40
அப். 1:1-5
யோவா. 16:7-11

5. அவரது நபர்த்துவம்

பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய "வல்லமை" யுடன் அடையாளப் படுத்தப் பட்டிருக்கையில், அவர் நபர்த்துவமற்ற சக்தியாக அல்ல ஆனால் ஒரு நபராக - திரித்துவத்தின் 3ம் நபராக இருக்கின்றார்.

<u>"பரிசுத்த ஆவியானவர்" என்ற சொற்றொடரின் அர்த்தம்</u>

புதிய ஏற்பாட்டில் "பரிசுத்த ஆவியானவர்" என்பது "பரிந்துரையாளர்" என்று குறிப்பிடப்படுகின்றது.

இது பின்வருமாறு அர்த்தப்படுகின்றது:

- ஆலோசனையாளர் **யோவா. 14:16**
- தேற்றரவாளர் **யோவா. 14:26; யோவா. 15:26**
- ஆறுதல் தருபவர் **யோவா. 16:7**
- பரிந்துரையாளர் **1 யோவா. 2:1**

மற்றும் இது பின்வருமாறு நேரடியாக மொழிபெயர்க்கப்பட முடியும்

"உதவியாக அல்லது உதவ உடன் வருகின்ற ஒருவர்"

பரிசுத்த ஆவியானவர், மீட்பர் என்ற நபரின் மூலமாக இஸ்ரவேலருக்கு வரும் மீட்பின் ஆறுதல் (தேற்றரவாளர்) என்று கூறப்பட்டார். எனவே "தேற்றரவாளர்" என்பதும் கூட ஆசாரியத்துவத்தைச் சுட்டிக் காண்பிக்கின்றது. **லூக். 2:22-32**

<u>பரிசுத்த ஆவியானவர் நபர்த்துவத்தின் பண்புகளை ஆதாரப்படுத்துகின்றார்</u>

பரிசுத்த ஆவியானவர்,

- ஒரு சிந்தை — **ரோமர் 8:27**
- ஒரு சித்தம் — **1 கொரி. 12:11**
- உணர்வுகள் — **எபே. 4:30**

ஆகியவற்றைக் கொண்டுள்ளார்.

நபர் என்ற வகையில் பரிசுத்த ஆவியானவர்,

- பேசுகின்றார் — **யோவா. 15:26**
- ஜெபிக்கின்றார் — **ரோமர் 8:26-27**
- வழி நடத்துகின்றார் — **யோவா. 16:13**
- போதிக்கின்றார் — **1 கொரி. 2:13**
- வழிகாட்டி முன் செல்கின்றார் — **ரோமர் 8:14**

பரிசுத்த ஆவியானவரை

- அவரிடத்தில் பொய்யுரைக்கக் கூடும் — **அப். 5:3**
- துக்கப்படுக்கக் கூடும் — **எபே. 4:30**
- அவமானப்படுத்தக் கூடும் — **எபி. 10:29**
- எதிர்த்து நிற்கக்கூடும் — **அப். 7:51**
- அவித்துப் போடக் கூடும் — **1 தெச. 5:19**

"ஆவி" என்பது பாலற்ற சொல்லாயிருப்பினும் வேத வசனங்களில் பரிசுத்த ஆவியானவர், "அவர்" என்ற ஆண்பால் தனிப்பட்ட பெயர்ச் சொல்லினால் குறிப்பிடப்படுகின்றார் (**யோவா. 16:13-14**) மற்றும் **யோவா. 14:16**ல், இயேசு பரிசுத்த ஆவியானவரை "வேறொரு தேற்றரவாளர்" என்று குறிப்பிடுகின்றார், இது இயேசுவைப் போன்ற "அதே வகையானவர்" என்று அர்த்தப்படுகின்றது.

பரிசுத்த ஆவியானவரின் நபர்த்துவத்தை மறுப்பதும் அவரை ஒரு சக்தி என்று குறிப்பிடுவதும் அவருக்கு செய்யக் கூடிய மாபெரும் அவமானகர மான சேவையாக உள்ளது! அப்படிப்பட்டதொரு கருத்து வேதாகமத்தின் படியானதாக இருப்பதில்லை.

பயிற்சி: வழக்கமாக நாம் பரிசுத்த ஆவியானவரை "சக்தி" என்று மட்டும் நினைப்பு ஏன்?

___

___

___

___

ஆ. பரிசுத்த ஆவியானவரின் கடந்த கால ஊழியமும் பணியும்

1. பழைய ஏற்பாட்டில்

பரிசுத்த ஆவியானவர் பின்வரும் செயல்களில் நேர்முகமாய் ஈடுபட்டிருந்தார்

- படைப்பு
  ஆதி. 1:2
  யோபு 33:4
- ஜீவனை நிலைத்திருக்கும்படி தாங்குதல் மற்றும் பாதுகாத்தல்
  சங். 104:29-30
- ஊழியத்திற்கென்று மனிதர்களை அபிஷேகம் செய்து வல்லமை அளித்தல்
  எண். 11:24-30
  நியா. 6:33-34

பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரின் ஊழியமும் பணியும் புதிய ஏற்பாட்டுக் காலங்களில் இருந்ததிலிருந்து மாறுபட்டதாகக் காணப் படுகின்றது.

புதிய ஏற்பாடு, ஆவியானவர் "**உங்களுக்கு**" மற்றும் **உங்களுடன் (யோவா. 14:17)**, இருப்பதாக கூறுகின்றது; இது ஆவியானவர் **நிலைத்து வாசம் பண்ணுதலாக (1 கொரி. 6:19), தொடர்ந்து வல்லமையளிப்பதாக (அப். 1:8), நிறைப்பதாக (எபே. 5:18), வல்லமை தருவதாக (கலா. 5:16-25)** மற்றும், ஆவியானவராலேயே **நடத்தப்படுவதாக** மற்றும் **வாழ்வதாக (ரோமர் 8:4-6)** இருக்கின்றது. பழைய ஏற்பாட்டு மொழிநடையும் ஆதாரமும் இது போன்று இருப்பதில்லை.

பழைய ஏற்பாட்டில் ஆவியானவர் மக்கள் மீது "இறங்கி வருவதாகவும்" ஊழியத்திற்கென்று தற்காலிகமாக அவர்களுக்கு வல்லமையளிப்பதாகவும் கூறப்பட்டது **(எ.கா. நியா. 15:14-15ல் சிம்சோன்).**

சவுல் அம்மோனியரைத் தோல்வியடையச் செய்யக்கூடும்படிக்கு, அவர்மேல் தேவனுடைய ஆவியானவர் வல்லமையாய் இறங்கி வந்தார் **(1 சாமு. 11:6)** ஆனால் ஆவியானவர் சவுலை விட்டு விலகியும் சென்றார் **(1 சாமு. 16:14).**

தாவீது தேவனுடைய ஊழியத்தில் வல்லமைக்காக ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்பட்டார் **(1 சாமு. 16:13)** ஆனால் பின்னாளில் அவர், தேவன் அவருடைய ஆவியை தம்மிடமிருந்து எடுத்துப் போடாதிருக்கும்படி ஜெபித்தார் **(சங். 51:11).**

பரிசுத்த ஆவியானவர் பழைய ஏற்பாட்டு மனிதர்கள் சிலருடன் தற்காலிகமாக இருந்தார்.

எ.கா.

யோசேப்பு	-	**ஆதி. 41:38**
யோசுவா	-	**எண். 27:18**
தானியேல்	-	**தானி. 5:11**

மற்றும், பழைய ஏற்பாட்டில் தேவன், புதிய உடன்படிக்கையின் ஒரு பகுதியாக மனிதரில் தம்முடைய ஆவியை வைப்பேன் என்று வாக்குத்தத்தம் பண்ணினார் **(எசே. 36:26-27),** இது கிறிஸ்து பரத்துக்கேறி, பெந்தெகொஸ்தே நாளன்று ஆவியானவர் இறங்கி வரும் வரையிலும் நடைபெறாதிருந்தது.

மிகச் சிறப்பாய்க் கூற வேண்டுமென்றால், பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் பற்றிய பழைய ஏற்பாட்டுப் போதனையானது திரையிடப்பட்டுள்ளது. இருப்பினு ம், வேத வசனங்களின்படி, ஆவியானவர் என்ன செய்யாதிருந்தார் என்பதை அறிவுக்கேற்ற வகையில் கொண்டு வரக் கூடிய சில முடிவுகள் உள்ளன.

பஏவில் ஆவியானவர் பின்வருவனவற்றில் ஈடுபட்டிருந்ததில்லை என்பது உறுதி

- நிரந்தரமாக வாசம் பண்ணுதல்
- தொடர்ந்து செல்லும் வல்லமையளித்தல்
- முத்திரையிடுதல்
- ஞானஸ்நானப் படுத்துதல்

ஆனால் ஆவியானவர் தேர்ந்தெடுத்த வகையில் பின்வருபவற்றைச் செய்தார்

• பாவத்தை உணர்த்துதல்	***ஆதி. 6:3***
• போதித்து அறிவுறுத்துதல்	***நெகே. 9:20***
• புத்தி கூறுதல்	***நெகே. 9:30***
• வழிநடத்தி முன் செல்லுதல்	***சங். 143:10***
• மற்றும் அவருக்கெதிராகக் கலகம் செய்தல்	***சங். 106:33***
• மற்றும் அவரைச் சாராதிருத்தல்	***ஏசா. 30:1***

பழைய ஏற்பாட்டிலும் இதே பரிசுத்த ஆவியானவரே இருந்தார், ஆனால் அவரது பணிப் பொறுப்பும் மனிதருடன் அவர் தொடர்பு கொண்ட வழிமுறையும் புதிய ஏற்பாட்டில் அவரது முறைமைகளில் இருந்து மாறுபட்டதாக இருந்தது.

பயிற்சி: பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் மாறுபட்ட வகையில் பணியாற்றியது ஏன்?

____

____

____

____

2. <u>வெளிப்படுத்துதலிலும் ஏவுதலிலும்</u>

தேவனுக்காகப் பேசும்படி மனிதர்களுக்கு வல்லமையளித்தல் என்பது பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக இருந்தது. பரிசுத்த ஆவியானவர் என்பவர், தேவன் மனிதர்கள் மூலம் பேசக் கூடிய வழிமுறையாய் இருந்தார்.

2 சாமு. 23:2
மீகா. 3:8

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் மூலம் தேவன் தமது ஆவியானவரால் பேசியதினால் சத்தியத்தை அறிவித்து, பாவத்தை உணர்த்தினார்.

மத். 22:43-44
அப். 1:16
எபி. 1:1-2

வேத வசனத்தின் ஏவுதலைப் பொறுத்தமட்டில் பரிசுத்த ஆவியானவர் அடிப்படை முகவராய் இருந்தார் என்பதும் மிகவும் தெளிவாக உள்ளது ***(2 தீமோ. 3:16)*** இவர் வேத வசனத்தின் மனித எழுத்தாளர்களுக்குப் போதித்து, அவர்களை வழிநடத்தி, இயக்கி, அவர்கள் மீது செல்வாக்கைச் செலுத்தினார் ***(2 பேது. 1:20-21).*** கிறிஸ்து போதித்தவற்றைப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் நினைவு படுத்திக் கொள்ளவும் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் வல்லமை அளித்தார்.

யோவா. 14:26
யோவா. 16:13-14

3. <u>கிறிஸ்துவின் வாழ்வில்</u>

இயேசுவின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் ஊழியமானது நான்கு அடிப்படைப் பகுதிகளுடன் தொடர்பு கொண்டுள்ளது.

- **கன்னியிடம் இருந்து அவரது பிறப்பு**

  கிறிஸ்து உண்மையிலேயே மனிதராயிருந்தும் பாவ இயல்பற்றவராய் இருந்தார் என்பதை உறுதிப்படுத்த கிறிஸ்துவின் பிறப்பில் பரிசுத்த ஆவியானவர் இயற்கைக்கு மேம்பட்ட தன்மையில் ஈடுபட்டார் என்பதை மத்தேயு மற்றும் லூக்கா ஆகிய இருவரும் தெளிவாகச் சுட்டிக் காண்பிக்கின்றனர்.
  மத். 1:18-20
  லூக். 1:35-37
  யோவான் ஸ்நானனுடைய பிறப்பிலும், அவரது தாய் எலிசபெத்து, அவரது தந்தை சகரியா மற்றும் தீர்க்கதரிசியான சிமியோன் ஆகியோரின் வாழ்விலும் பரிசுத்த ஆவியானவர் தனிச்சிறந்த வகையில் செயலாற்றினார். உண்மையில் **லூக்கா 1-2**ன் பக்கங்கள் யாவற்றிலும் பரிசுத்த ஆவியானவர் இருக்கின்றார்!

- **ஊழியத்திற்கென்று அவர் அபிஷேகமும் வல்லமையும் பெறுதல்**

  இயேசு ஒரு மனிதர் என்ற வகையில் தமது ஞானஸ்நானத்தின் போது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றார் **(லூக். 3:21-22);** சோதிக்கப்படும்படி இயேசுவை ஆவியானவர் வனப்பகுதிக்குள் நடத்திச் சென்றார் **(லூக். 4:1-2);** மற்றும் அவரது பிரசங்கித்தல், போதித்தல் மற்றும் குணமாக்குதல் என்ற ஊழியங்களுக்காக அவருக்கு வல்லமை அளித்தார் **(லூக். 4:14-15, 18).**

  சில நிகழ்ச்சிகளில் கிறிஸ்து தமது சுய வல்லமையில் அற்புதங்களை நிகழ்த்தினார் **(மாற். 5:35-43);** மற்றும் பிற வேளைகளில் அவர் பரிசுத்த ஆவியானவரின் நபர்த்துவத்தில் தேவனுடைய வல்லமையைச் சார்ந்திருந்தார், இவர் இயேசுவின் ஊழியத்தில் பெரும் பங்கு வகித்திருந்தார் **(மத். 12:28; லூக். 5:17, 18; அப். 2:22; அப். 10:38).**

- **அவரது ஒப்புரவாக்கும் மரணம்**

  எபிரெயர் 9:14 வசனமானது, கிறிஸ்துவின் மரணத்தினால் விளைந்த சுத்திகரித்தல் மற்றும் மன்னித்தல் ஆகியவற்றில் பரிசுத்த ஆவியானவர் ஈடுபட்டிருத்தல் பற்றிப் போதிக்கின்றது.

- ***அவரது உயிர்த்தெழுதல்***

  ரோமர் 1:4 *மற்றும்* ***8:11*** *ஆகியவை* ***1 பேதுரு 3:18*** *உடன் சேர்ந்து, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் ஆவியானவர் தனிப்பட்ட வகையில் ஈடுபட்டிருந்தார் என்று சுட்டிக்காட்டுவதாகக் காணப்படுகின்றன.*

குறிப்பு: ஒரு மனிதர் என்ற வகையில் இயேசு, விசுவாசிகள் பின்பற்ற அர்த்தம் நிறைந்த உதாரணமாக இருக்கின்றார், ஏனென்றால் ஊழியத்தை நிகழ்த்தவும் தேவனுக்குப் பிரியமான ஒரு வாழ்வை வாழவும் பரிசுத்த ஆவியானவரை இயேசு சார்ந்திருந்தார் என்பதை மீண்டும் மீண்டும் செயல்விளக்கப் படுத்தினார்.

பயிற்சி: இயேசு தேவனாக இருந்தும் கூட, வல்லமைக்கு அவர் ஏன் ஆவியானவரை அடிக்கடி சார்ந்திருந்தார்?

____

____

____

____

4. *நடபடிகளிலும் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்திலும்*

   இங்கு நாம் பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்ட பிறகு அவரது ஊழியத்திற்கான வேதாகம ரீதியான ஆதாரங்களைச் சுருக்கமாய்க் காண்போம்.

   நடபடிகளின் புத்தகத்திற்கு "அப்போஸ்தலர்களின் மூலமாகப் பரிசுத்த ஆவியானவரின் நடபடிகள்" என்ற தலைப்பானது மிகவும் சரியானதாக இருக்குமளவுக்கு நடபடிகளின் புத்தகத்தில் பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் தலை சிறந்து விளங்குகின்றது.

   நடபடிகளில் பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் பற்றிய பின்வரும் உறுதிப்பாடுகளை மிகுந்த தைரியத்துடன் கூற முடியும்:

   - அப்போஸ்தலர்கள் சாட்சியளிப்பதற்கென்று அடிப்படையில் அவர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் நிறைக்கப்படுதல். *அப். 1:8*

- அப். 2ல் பெந்தெகொஸ்தே நாளன்று ஞானஸ்நானமும் ஆவியானவரால் நிரப்பப்பட்டதும் **யோவேல் 2:28-29ன்** நேரடியான ஒரு பகுதி நிறைவேற்றமாகவும் **லூக். 24:49, யோவா. 16:7** மற்றும் **அப். 1:4-5ல்** இயேசு கிறிஸ்துவின் வாக்குத்தத்தமுமாய் இருந்தது.
- **அப். 2:11ல்** ஆவியானவரால் நிரப்பப்பட்டு பற்பல பாஷைகளைப் பேசியது அவிசுவாசிகளுக்குத் தேவனிடத்திலிருந்து வந்த அதிகாரப் பூர்வமான செலுக்கான அடையாளமாய் இருந்தது (**1 கொரி. 14:22**ஐயும் காணவும்).

நடபடிகளில் பாஷைகளில் ("glossa") என்பது பேசுபவர்களுக்குப் புரிந்திராத ஆனால் கேட்பவர்கள் அறிந்து கொண்ட அயல் மொழிகள் என்று தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றது. இவ்விடத்தில் மொழிகள் என்பவை தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட ஊழியம் என்று மதிப்பிடப்பட்டதை **1 கொரி. 14:21-22** தெளிவாக்குகின்றது. உண்மையில் "பாஷை" என்று **அப். 2:6, 8**ல் மொழிபெயர்க்கப் பட்ட வார்த்தை "glossa" அல்ல ஆனால் "dialektos" ("ஜென்ம பாஷை") என்பதாகவே உள்ளது.

"பாஷைகள்" **அப். 2ல்** பேதுரு மூலம் பிரசங்கிக்கப்பட்ட வசனத்திற்கு நம்பகத் தன்மையை அளித்து, அவரது அப்போஸ்தலிக்க ஊழியத்தை மதிப்புமிக்கதாக்கின.

நடபடிகளில் பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்ட மற்ற நிகழ்ச்சிகளுக்கு இக்கை நூலில் 154ம் பக்கத்தில் உள்ள அட்டவணையைக் காணவும்.

குறிப்பு: **அப். 10**ல் "பாஷைகள்" புறஜாதியாருக்கு மீட்பை செல்லத் தக்கதாக்கின, மற்றும் **அப். 19**ல் பாஷைகள் பவுலின் அப்போஸ்தல ஊழியத்தை செல்லத் தக்கதாக்கின.

பாஷைகள் பற்றிய குறிப்பு: நடபடிகளில் உள்ள பாஷைகள் என்பவை அயல் மொழிகளேயன்றி பரவசப் பேத்துக்களோ அல்லது உளரல்களோ அல்ல என்பது தெளிவு. **1 கொரி. 12-14**ல் பவுல் பாஷைகளைப் பற்றிக் கூறும் பொழுது அவர் "glossa" என்ற அதே அடிப்படை வார்த்தையைப் பயன்படுத்தினார். சபையில் அந்நிய பாஷை பேசுதல் என்பது பேசுபவரைத் தவிர வேறு எவருக்கும் பயன்படாது என்பதே பவுல் காண்பிக்கும் கருத்தாக உள்ளது, ஏனென்றால் தேவனுடைய வசனத்தை எடுத்துரைக்கும் அந்நிய பாஷையை அதற்கு விளக்கம் இல்லாமல் எவரொருவரும் புரிந்து கொள்ள மாட்டார்கள். இப்பொழுது தேவனுடைய வெளிப்பாடு முடிந்துள்ள நிலையில் வேதாகமத்தை (நாம்) பெற்றிருக்கையில் சபையில் அந்நிய பாஷை என்ற வார்த்தைச் செயல்படுத்துவதற்கான உண்மைக் காரணம் எதுவும் இல்லை என்பதாகக் காணப்படுகின்றது.

தனிப்பட்ட ஆராதனை மற்றும் பக்திவிருத்தியூட்டும் ஆகியவற்றிற்கு அந்நிய பாஷைகளைத் தனிப்பட்ட வகையில் பயன்படுத்துதல் என்பது தனிநபர் ஒவ்வொருவரையும் சார்ந்ததாக விடப்படுகின்றது.

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளைக் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஞானஸ்நானப் படுத்தினார். ஆவியானவரால் ஞானஸ்நானப் படுத்தப்படுதல் என்பது பரிசுத்த ஆவியானவரை ஒரு வரமாகப் பெற்றுக் கொள்ளுதலாக இருக்கின்றது. (எ.கா. **அப். 8:14-17**). மீட்பின் இந்த ஒருமுறை நடக்கும் செயலான **ஆவிக்குரிய ஞானஸ்நானத்தினால்** விசுவாசி ஒருவர் -

- இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுடன் அடையாளப்படுத்தப் படுகின்றார்.
  ரோமர் 6:1-4
- கிறிஸ்துவின் சபையில் அவரது சரீரத்தின் உறுப்பாக்கப் படுகின்றார்.
  1 கொரி. 12:13

"எல்லாரும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்" என்பது கடந்த கால வினைச் சொல்லாக உள்ளது மற்றும் இது எல்லா விசுவாசிகளையும் அவர்கள் பாஷைகள் பேசினாலும் அல்லது பிற அடையாள வரங்களைப் பயன்படுத்தினாலும் அவர்கள் யாவரையும் குறிக்கின்றது என்பதைக் கவனமாகக் கவனிக்கவும்.

மீட்புக்குப் பிறகு ஆவியானவரின் இரண்டாம் ஞானஸ்நானத்தையோ (அல்லது கிருபையின் 2ம் ஊழியத்தையோ) வேத வசனங்கள் போதிப்பதே இல்லை.

- பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவுக்கு தைரியமாய் சாட்சியளிக்கும்படி வல்லமை அளித்தார்.
  அப். 1:8
  அப். 4:31
- பின்வரும் செயல்களுக்காக பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களின் மூலம் அற்புதங்களை நிகழ்த்தினார்:
  - மனிதரையும் அவரது செய்தியையும் அங்கீகரிக்க
  - தேவனுடைய வல்லமையை காட்சிப் படுத்த
  - தேவனை மகிமைப்படுத்த
  - மனிதர்கள் தேவனை விசுவாசிப்பதற்குக் காரணமாக
    அப். 3:1-9
    அப். 5:12-16
- ஊழியப் பணிக்கென்று மனிதர்களைப் பரிசுத்த ஆவியானவர் பிரித்து வைத்து அவர்களுக்கு வல்லமை அளித்தார்.
  அப். 13:1-5
- செயல் விளைவுள்ள ஊழியத்திற்காக பரிசுத்த ஆவியானவர் மக்களை நிரப்பினார் (இயக்கி, செல்வாக்குச் செலுத்தி, வழிநடத்தினார்).
  அப். 6:1-4
  அப். 11:22-24
- கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டி எழுப்புவதற்குப் பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய வரங்களைத் தீர்மானித்து, பகிர்ந்தளித்து, வளர்ச்சியுறச் செய்தார்.
  1 கொரி. 12:1-11.

குறிப்பு: சபை ஊழியம் என்ற பாடத்தில் ஆவிக்குரிய வரங்களைப் பற்றி விரித்துரைக்கப்படும்.

- பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசிகள் மூலம் பேசினார்
  அப். 11:27-28
- பரிசுத்த ஆவியானவர் சபையைப் பாவத்திலிருந்து தூய்மையாக்கினார்.
  அப். 5:1-11
- பரிசுத்த ஆவியானவர் ஊழியத்தில் அறிவுறுத்தி வழிநடத்தினார்.
  அப். 16:6

நடபடிகளில் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுதல்

	அதிகாரம் 2	அதிகாரம் 8	அதிகாரம் 10	அதிகாரம் 19
நிகழ்வு	யூதர்களின் பெந்தெகொஸ்தே யூதர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டார்	பேதுருவின் மூலம் சமாரியர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டார்.	புறஜாதியார் பெந்தெகொஸ்தே புறஜாதியாருக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டார்.	பவுலின் மூலம் புறஜாதியாருக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டார்.
நடப்பு (அ) உணர்வுகள்	பாஷைகள் மற்றும் பிரசங்கித்தல்	கைகளை வைக்குதல்	பாஷைகளும் தேவனை மகிமைப்படுத்துதலும்	பாஷைகளும், தீர்க்கதரிசனம் கூறுதலும். கைகளை வைக்குதல்
வரிசை முறை	1. விசுவாசம் 2. தண்ணீர் ஞானஸ்நானம் 3. மீட்புக்குப் பிறகு ப.ஆ. மீட்புக்குப் பிறகு ப.ஆ.	1. விசுவாசம் 2. தண்ணீர் ஞானஸ்நானம் 3. மீட்புக்குப் பிறகு ப.ஆ. மீட்புக்குப் பிறகு ப.ஆ.	1. விசுவாசம் 2. பரிசுத்த ஆவியானவர் 3. தண்ணீர் ஞானஸ்நானம் மீட்பில் ப.ஆ.	1. விசுவாசம் 2. தண்ணீர் ஞானஸ்நானம் 3. மீட்புக்குப் பிறது ப.ஆ. மீட்புக்குப் பிறகு ப.ஆ.
சாட்சிகள்	அப்போஸ்தலர்கள் யூதர்கள் விசுவாசத்திற்குள் வந்தனர்	பேதுரு மற்றும் யோவான் சமாரியர்கள் விசுவாசத்திற்குள் வந்தனர்; யூதர்கள் ஒப்புக் கொண்டனர்.	7 சாட்சியங்கள் புறஜாதியார் விசுவாசத்திற்குள் வந்தனர்; யூதர்கள் ஒப்புக் கொண்டனர்.	12 மனிதர்கள் புறஜாதியாருக்கான புதிய அப்போஸ்தலர் மூலம் புறஜாதியார் விசுவாசத்திற்குள் வந்தனர்
தனிச்சிறப்பு	யூதர்களுக்கு ப.ஆ. இராஜரீகமாகத் தரப்பட்டார். ப.ஏ. தீர்க்க தரிசனத்தையும் (யோவேல் 2) இயேசுவின் வாக்குத்தத்தையும் (லூக். 24) நிறைவேற்றுகின்றது.	பேதுருவின் அப்போஸ்த ஊழியத்தை அங்கிகரிக்கின்றது. "ஒரே சபையை"ப் பாதுகாக்கின்றது.	புறஜாதியாருக்கு ப.ஆ. இராஜரிகமாகத் தரப்பட்டார். எல்லாருக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதம் (ஆதி. 12:3)	பவுலின் அப்போஸ்தல ஊழியத்தை அங்கிகரித்தல்

எருசலேம் → சமாரியா → கடைசி பரியந்தமும்

தொகுப்புரையாக விசேஷமாக நடபடிகளில் பரிசுத்த ஆவியானவர்,

- சபையைத் தோற்றுவித்தார்.
- சபையை வளரச் செய்தார்.
- சபையை விரிவாக்கினார்.
- சபைக்கு வல்லமை அளித்தார்.

பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் பற்றி நடபடிகளில் உண்மையாய் இருந்தது எதுவோ, அது கி.பி. 37-100 வரையிலான புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலம் முழுவதிலும் உண்மையாக இருந்தது. மற்றும் நடபடிகளிலும் புதிய ஏற்பாட்டிலும் ஆவியானவரின் பணி மற்றும் ஊழியமாகக் காணப்படுவபவற்றில் பெரும்பான்மையானவை இன்னும் இன்றைய நாட்களிலும் உள்ளது.

பயிற்சி: நடபடிகளில் அதிகம் இன்றியமையாததாகக் காணப்படும் ஆவியானவரின் அற்புதமான செயல்விளக்கம் என்னவாக இருந்தது?

____

____

____

____

இ. பரிசுத்த ஆவியானவரின் தற்கால ஊழியமும் பணியும்

1. பொதுவாக இழந்து போகப்பட்ட உலகத்திற்கு

பரிசுத்த ஆவியானவர் பின்வருபவற்றில் ஈடுபடுகின்றார்:

– **குற்றத்தை உணர்த்துவதில்** (குற்றம் உண்டென்று அறிவிப்பதில்)
பாவம்
நீதி
நியாயத் தீர்ப்பு ஆகியவற்றை அறிவிப்பதில்

யோவா. 16:8-11

அவிசுவாசிகளின் இழந்து போகப்பட்ட நிலை பற்றியும் மற்றும் மீட்பின் அவசியம் பற்றியும் கிறிஸ்து இப்பூமியில் தொடங்கி வைத்த ஊழியத்தைத் தொடர்ந்து செய்தல் என்பது பரிசுத்த ஆவியானவரின் ஊழியமாக உள்ளது.

– **கிறிஸ்துவை மகிமைப்படுத்துதல்**
யோவா. 16:13-14

பரிசுத்த ஆவியானவர் தமக்கே அல்ல ஆனால் கிறிஸ்துவுக்கு மகிமையைக் கொண்டு வருவார்.

– **பொல்லாங்கை நீக்கிப் போடுதல்/தடை செய்தல்**
2 தெச. 2:6-7

பரிசுத்த ஆவியானவர் சபையின் மூலமாக உலகத்தில் பொல்லாங்கு மற்றும் பாவத்தின் சக்திகளை மாபெரும் உபத்திரவ காலத்தில் தேவன் விடுவிக்கத் தீர்மானம் செய்யும் வரைக்கும் தடை செய்கின்றார்.

2. <u>சபைக்கு நிறுவன இணைவு வகையில்</u>

சபைக்குப் பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

- சாட்சியம் மற்றும் ஊழியம் ஆகியவற்றிற்காக சபைக்கு **வல்லமை அளித்தல்**
அப். 1:8
லூக். 24:46-49
1 கொரி. 2:1-5

- **சுவிசேஷப் பிரசங்கத்தைச் செயல்வலிவுள்ளதாக்குதல்.**
1 பேது. 1:12

- கிறிஸ்துவின் சரீரத்தில் விசுவாசிகளை **ஞானஸ்நானப்படுத்துதல்.**
1 கொரி. 12:13

- சரீரத்திற்குள் **ஆவிக்குரிய வரங்களைப் பகிர்ந்து கொடுத்தல்.**
1 கொரி. 12:1-11

- சரீரத்தில் **ஆவிக்குரிய வளர்ச்சியைச் சாத்தியமாக்குதல்.**
கொலோ. 1:28-29

- கிறிஸ்துவின் **சரீரத்தை ஒருமைப்படுத்துதல்.**
எபே. 4:3-4

- விசுவாசிகள் மத்தியில் **ஐக்கியத்தை வளப்படுத்துதல்**
பிலி. 2:1

3. <u>விசுவாசிகளுக்குத் தனிப்பட்ட வகையில்</u>

பரிசுத்த ஆவியானவர்,

- கிறிஸ்துவுக்குள் **விசுவாசிகளை அடையாளப்படுத்துகிறார்.**
 ரோமர் 6:3-4
 கொலோ. 2:12

- **மறுஜென்மம் கொடுக்கிறார்** (மீட்கின்றார்).
 பரிசுத்த ஆவியானவர் விசுவாசிக்குள் புதுப் பிறப்பைச் செயல்படுத்த தேவனுடைய வழிமுறையாக உள்ளார் - அவர் (விசுவாசி) மீண்டும் அல்லது மேலிருந்து பிறக்கின்றார்.
 தீத்து 3:5
 யோவா. 1:12-13
 யோவா. 3:3-8
 1 கொரி. 6:11

- **பாவத்திலிருந்து சுத்திகரித்து தூய்மையாக்குகிறார்.**
 பாவத்திலிருந்து சுத்திகரிக்கும் செயல்முறையில் பரிசுத்த ஆவியானவர் பங்கேற்கிறார்.
 ரோமர் 2:29
 ரோமர் 8:13-14

- **பரிசுத்தப்படுத்துகிறார்** (தனியே பிரித்து வைத்து பரிசுத்தமாக்குகிறார்)
 ரோமர் 15:16
 2 தெச. 2:13
 1 பேது. 1:2

- **முழுமையாகவும் நிரந்தரமாகவும் உள்ளாக வாசம் பண்ணுகிறார்.**
 விசுவாசிக்குள் பரிசுத்த ஆவியானவர் நிரந்தரமாகத் தங்குமிடத்தை எடுத்துக் கொள்கிறார்
 யோவா. 3:34
 யோவா. 14:17
 1 கொரி. 6:16
 1 கொரி. 8:9

- **மீட்பை முத்திரையிட்டு உத்தரவாதப்படுத்துகிறார்.**
 நமது நித்திய மீட்புக்கு உத்தரவாதமாகத் தரப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானவரால் எல்லா விசுவாசிகளும் பாதுகாக்கப் படுகின்றனர்.
 2 கொரி. 1:21-22
 எபே. 1:13-14
 எபே. 4:30

- ***மீட்பை உறுதிப்படுத்துகிறார்.***
  பரிசுத்த ஆவியானவர், நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று உள்ளாகச் சாட்சியளிக்கிறார்.
  ரோமர் 8:16

- வல்லமை மற்றும் பணிக்கென்று (நம்மில்) நிரம்புகின்றார்.
  பரிசுத்த ஆவியானவர் தமக்கு இணங்கும் விசுவாசிகளை இயக்கி, கட்டுப்படுத்தி, அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றார்.
  எபே. 5:18

- விசுவாசியின் வாழ்வில் கிறிஸ்துவைப் போன்று கனி தரச் செய்கிறார்.
  கலா. 5:16, 22-25
  கலா. 6:7-8

- தேவனுடைய விஷயங்களைப் புரிந்து கொள்ளவும் ஏற்றுக் கொள்ளவும் சிந்தைக்கு ஒளியூட்டுகிறார்.
  1 கொரி. 2:10-15
  1 யோவா. 2:20, 27

- தேவனுடைய சித்தத்தின்படி எல்லா விசுவாசிகளுக்காகவும் ஜெபிக்கிறார்.
  விசுவாசிகளின் பலவீனங்களில் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு உதவுகிறார்.
  ரோமர் 8:26-27
  எபே. 6:18

- கள்ள ஆவிகளையும் உபதேசத்தையும் பகுத்து அறிகிறார்.
  விசுவாசிகள் பொய்யிலிருந்து சத்தியத்தைப் பகுத்தறிய பரிசுத்த ஆவியானவர் பலம் அளிக்கிறார்.
  1 யோவா. 4:1-4

- வழிகாட்ட முன் சென்று வழிநடத்துகிறார்.
  பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்கு வாழ்வதற்குச் சரியான வழியைக் காட்டுகிறார்.
  ரோமர் 8:14

- விசுவாசிகளுக்குச் சத்தியத்தைப் போதிக்கிறார்
  யோவா. 16:12-15

பயிற்சி: *சபைக்கும் விசுவாசிகளுக்கும் பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் எவ்வளவு தனிச் சிறந்ததாக உள்ளது?*

____

____

____

____

ஆவியானவரின் ஞானஸ்நானம், உள்ளாக வாசம் பண்ணுதல் மற்றும் நிரப்புதல் பற்றிய குறிப்பு

இந்த மூன்று பகுதிகளில் பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் பற்றிய சில திறவுகோல் கருத்துக்களையும் தனிச் சிறப்புக்களையும் வேத வசனம் போதிக்கிறது:

ஆவியானவரின் ஞானஸ்நானம் **(1 கொரி. 12:13)**

- மீட்பின் வேளையில் எல்லா விசுவாசிகளுக்கும் நடைபெறும் ஒரு - முறை நடக்கும் நிகழ்வு.
- விசுவாசிகளைக் கிறிஸ்துவின் சரீரத்தில் வைக்கிறது.
- அடையாளங்கள் இணைந்திருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம்.

"இரண்டாம் ஆசீர்வாதம்" அல்லது "ஆவியானவரின் மிக ஆழமான ஊழியம்" என்று அழைக்கப்படக் கூடிய "இரண்டாம் ஞானஸ்நானம்" ஒன்றுக்கு பலத்த வேத வசன ஆதாரம் இல்லை.

உள்ளாக வாசம் பண்ணுதல் **(யோவா. 14:17; 1 கொரி. 6:19)**

- எல்லா விசுவாசிகளும் தங்கள் மீட்பின் வேளையிலிருந்து தங்களுடன் வாழுகின்ற பரிசுத்த ஆவியானவரின் நிரந்தர மற்றும் முழுமையான உள்ளான வாசம் பண்ணுதலைப் பெறுகின்றனர்.

நிரப்புதல் **(எபே. 5:18)**

- விசுவாசி எப்பொழுதெல்லாம் தேவனுக்கு தம் வாழ்வைக் கட்டுப்படுத்த இணங்கி உள்ளாக வாசம் பண்ணும் ஆவியானவர் விசுவாசியை கிறிஸ்துவைப் போலிருப்பதிலும் கீழ்ப்படிதலிலும் இயக்கவும், வழிநடத்தவும், செல்வாக்குச் செலுத்தவும், வல்லமையளிக்கவும் அனுமதிக்கின்றாரோ, அப்பொழுதெல்லாம் (நிரப்புதல்) நடக்கின்றது.
- தற்காலிகமானதாக அல்லது சீரானதாக இருக்கக் கூடும்.
- பலமுறை நடைமுறைக் கூடும்.

★ ஒரு விசுவாசி மீட்பின் வேளையில் பெற்றதைக்காட்டிலும் பரிசுத்த ஆவியானவரை ஒருக்காலும் அதிகமாய்ப் பெற முடியாது. ஆனால் அவர் தம்மைப் பரிசுத்த ஆவியானவர் அதிகமாய்ப் பெறும்படி அனுமதிக்க முடியும். ★

ஈ. பரிசுத்த ஆவியானவரின் எதிர்கால ஊழியமும் பணியும்

1. மகா உபத்திரவத்தின் போது

மகா உபத்திரவத்தின் காலத்தின் பொழுது பரிசுத்த ஆவியானவரின் பொதுவான குற்றம் உணர்த்தும், மீட்கும் மற்றும் முத்திரையிடும் ஊழியம் தொடரும் என்பதாகத் தோன்றுகிறது.

சக. 12:10
யோவேல் 2:28-32
சக. 4:1-6
வெளி. 11:1-12

2. ஆயிரமாண்டு அரசாட்சியின் போது

ஆயிரமாண்டு அரசாட்சியின் போது கிறிஸ்து பூமியின் மீது ஆளுகை செய்கையில் அவர் மீதும் விசுவாசிகள் மீதும் தேவனுடைய ஆவியானவர் நிலைத்து நிற்பார்.
ஏசா. 11:1-16
எசே. 36:24-30

5. தூதர்கள் - தூதரியல்

அறிமுகம்

தூதர்கள் மற்றும் அசுத்த ஆவிகளைப் பற்றி ஒருவர் என்ன நினைத்துக் கொண்டிருப்பினும், அவர்களின் இருப்பு பற்றிய வேத வசனங்களின் ஆதாரம் ஏராளமாக உள்ளது. இந்தப் பாடக் கருத்தைப் பற்றி நாம் என்ன நம்புகிறோம் என்பது மக்கள் என்ன நினைக்கின்றனர் அல்லது என்ன கூறுகின்றனர் என்பதின் அடிப்படையில் அல்ல ஆனால் வேதாகமம் இதைப் பற்றி என்ன கூறுகின்றது என்பதின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட வேண்டும்.

தூதர்களைப் பற்றிய போதனைகள் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு, கிறிஸ்துவின் உபதேசங்கள், மற்றும் பவுல், யோவான் ஆகியோரின் போதனைகள் ஆகியவற்றில் காணப்படுகின்ற. **வெளிப்படுத்தின விசேஷத்தில்** மட்டும் தூதர்களைப் பற்றி 60க்கும் மேற்பட்ட குறிப்புகள் அடங்கியுள்ளன அவர்கள் உண்மையிலேயே இருக்கின்றனர்!

அ. தூதர்களின் தோற்றம்/தொடக்கம்

- தூதர்கள் என்பவர்கள் கிறிஸ்துவின் கட்டளையினால் இருப்புக்குக் கொண்டு வரப்பட்ட படைக்கப்பட்ட நித்திய ஜீவிகளாய் உள்ளனர்.
  கொலோ. 1:16
  சங். 148:2-5

  தூதர்கள் என்பவர்கள் இந்த பூமி படைக்கப்படும் முன்பு ஒரு காலக் கட்டத்தில் படைக்கப்பட்டனர் **(யோபு. 38:4-7)** மற்றும் **ஆதி.** 3ல் இவர்கள் விழுந்து போயிருந்தனர். அவர்களின் பாவம் மனிதனின் பாவத்திற்கு முந்தியதாய் இருந்தது - தூதர்களின் வீழ்ச்சியே முதல் வீழ்ச்சியாக இருந்தது! தூதர்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட முடியாததாக உள்ளது.
  எபி. 12:22
  வெளி. 5:11

ஆ. தூதர்களின் இயல்பு

- தூதன் என்ற வார்த்தை அடிப்படையில் செய்தியாளன் என்று அர்த்தப்படுகின்றது.
- தூதர்கள் மனிதர்களிலிருந்து மாறுபட்ட வகையில் படைக்கப்பட்ட ஆவிக்குரிய ஜீவிகளாய் உள்ளனர்.
  எபி. 1:7
  எபி. 1:14
  எபி. 2:5-7

- தூதர்கள் சோதிக்கப்படாத பரிசுத்தத்துடன் தேவனை ஆராதிக்கவும் சேவிக்கவும் படைக்கப்பட்டனர், ஆனால் அவர்களுக்கு ஒரு சித்தமும், தேர்ந்து கொள்ளக் கூடிய திறனும் உள்ளது.
  எபி. 1:6
  யூதா 6-9

- தூதர்கள் மாபெரும் வல்லமை கொண்டுள்ளனர்.
  வெளி. 7:1
  2 பேது. 2:10-11
  சங். 103:20

- படைக்கப்பட்ட உயிர்கள் என்ற வகையில் தூதர்கள் வரையறைக்கு உட்பட்டுள்ளனர்
  மத். 24:36
  1 பேது. 1:10-12

- தூதர்கள் திருமணம் செய்து கொள்வதோ அல்லது இனப் பெருக்கம் செய்வதோ இல்லை, அவர்கள் ஆண் பாலினம் ஆவார்கள்.
  மத். 22:30

- தூதர்கள் இறப்பதில்லை
  லூக். 22:30
  லூக். 20:36

- தூதர்கள் சில வேளைகளில் "தேவ புத்திரர்" (bene elohim) என்று வேத வசனங்களில் அழைக்கப்படுகின்றனர்.
  யோபு 1:6

- தூதர்களுக்கு உடல் அல்லது மாம்சம் மற்றும் இரத்தம் கொண்ட வழக்கமான உடல்/சரீரம் இல்லை என்றாலும் அவர்கள் அடிக்கடி மனித வடிவம் எடுக்கின்றனர்.
  எபி. 13:2
  எபே. 6:12
- தூதர்கள் மனிதர்களைக் காட்டிலும் உயர்வான வடிவில் படைக்கப்பட்டுள்ளனர் ஆனால் மகிமைப்படுத்தப்பட்ட மனிதனோ தீய தூதர்களை நிறைவில் நியாயந் தீர்ப்பான்.
  1 கொரி. 6:3
  எபி. 6:12
- தூதர்கள் மனிதர்களைக் காட்டிலும் உயர்வான வடிவில் படைக்கப்பட்டுள்ளனர் ஆனால் மகிமைப் படுத்தப்பட்ட மனிதனோ தீய தூதர்களை நிறைவில் நியாயந்தீர்ப்பான்.
  1 கொரி. 6:3
  எபி. 2:5-9

- தூதர்கள் ஆளுமைத் தன்மையின் எல்லாப் பண்புகளையும் காட்சிப்படுத்துகின்றனர்.
  சிந்தை *1 பேது. 1:12*
  சித்தம் *2 தீமோ. 2:26*
  உணர்வுகள் *யாக். 2:19*

- நல்ல மற்றும் தீய தூதர்கள் யாவரும் தேவனுக்குக் கீழ்ப்பட்டவர்களாய் இருக்கின்றனர்.
  (நல்ல தூதர்கள்) *லூக். 1:26*
  (தீய தூதர்கள்) *வெளி. 9:1-5*

பயிற்சி:. மனிதர்களுக்கும் தூதர்களுக்கும் இடையில் உள்ள மிகவும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் யாவை?

இ. தூதர்களின் பகுப்புகள்

தூதர்களின் குழுவின் முறைமை, வகுப்பு, தகுதிநிலை, மற்றும் பணிபுரியும் அமைப்பு ஆகியவை முற்றிலுமாகப் புரிந்து கொள்வது கடினம் என்றாலும் அவர்களிடையே இது உள்ளது. எடுத்துக்காட்டாக, **சங். 89:5-7** வசனப் பகுதி தேவனுடைய "பரிசுத்தவான்களின்" குழு அல்லது கூட்டம் பற்றிப் பேசுகின்றது. பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள "சிங்காசனங்கள், கர்த்தத்துவங்கள், துரைத்தனங்கள் மற்றும் அதிகாரங்கள்" உட்பட அனைத்தையும் கிறிஸ்து படைத்தார். **கொலோ. 1:16**

மற்றும் **எபேசியருக்கு** எழுதிய நிருபத்தில் **நல்ல** (தேர்ந்தெடுக்கப்பட்ட) தூதர்கள் மற்றும் தீய (விழுந்து போன) தூதர்கள் ஆகிய இரு சாராரும் நிறுவன ரீதியான அமைவு மற்றும் தகுதி நிலை கொண்டுள்ளனர் என்று காணப்படுகிறது.

நல்ல (தூதர்கள்) — **எபே. 3:10** ("உன்னதங்களிலுள்ள துரைத்தனங்கள் மற்றும் அதிகாரங்கள்")

தீய (தூதர்கள்) — **எபே. 6:12** ("துரைத்தனங்கள்," "அதிகாரங்கள்," இப்பிரபஞ்சத்தின் அந்தரகார லோகாதிபதிகள்; "வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள்")

மேலும், சாத்தான், கீழ்ப்படிதலைத் தூண்டுகிற "ஆகாயத்து அதிகாரப் பிரபு"வாய் இருப்பதாகக் கூறப்படுகிறது. **எபே. 2:2**

- <u>தூதர்களின் தகுதி நிலை, முறை மற்றும் வகைகள்</u>

  எல்லா வேறுபாடுகளும் தெளிவாக இல்லாத நிலையில், பின்வரும் பட்டியலானது தூதர்களின் மிகச் சிக்கலான அமைப்பு முறையை விவரிக்கின்றது.

  – பிரதான தூதனாகிய மிகாவேல் - இவன் ஒருவனே வேத வசனத்தில் இவ்விதமாகக் குறிப்பிடப்படுகின்றான் மற்றும் இவன் இஸ்ரவேலின் பாதுகாக்கும் தூதனாகக் காணப்படுகிறான்.
  தானி. 10:13

தானி. 12:1
யூதா 9
1 தெச. 4:16
வெளி. 12:7

- ***பிரதான அதிபதிகள்*** - ஆவிக்குரிய யுத்தம் மற்றும் நாடுகளின் அரசியல் வல்லமை ஆகியவற்றில் ஈடுபடுபவர்கள் என்று உறுதியாய்க் காணப்படுகிற உயர் பதவி நிலையில் உள்ள தூதர்கள். **தானி. 10:13**

- ***கேருபீன்கள்*** - கூடாரம், உடன்படிக்கைப் பெட்டி, மற்றும் தேவனுடைய அரியணை ஆகியவற்றைக் காப்பதில் ஈடுபட்டுள்ள விசேஷ வகையான தூதர்கள். சாத்தான் வீழ்ந்து போவதற்கு முன்பு இவ்வகைப் பட்டவனாகவே இருந்தான்.
  ஆதி. 3:22-24
  யாத். 37:1-9
  எசே. 1:4-14; 10:15-20
  எசே. 28:14, 16
  வெளி. 4:6-9

- ***சேராபீகள்*** - தேவனுடைய அரியணையைச் சுற்றிலும் ஆராதனை மற்றும் பரிசுத்தம் செய்கின்ற விசேஷித்த வகையான தூதர்கள்.
  ஏசா. 6:1-6

- ஆளுகை செய்யும் தூதர்கள் - நல்லவர்கள் அல்லது தீயவர்கள்

  அரசியல் தலைவர்கள் மூலம் பணியாற்றி, நாடுகளின் விஷயங்களில் ஈடுபட்டுள்ள அல்லது, பரலோக வட்டாரங்களின் தூதர்களில் ஆளும் வகுப்பின் பாகமாய் இருக்கின்ற தூதர்களைப் பற்றி வேத வசனங்கள் பேசுவதாகக் காணப்படுகிறது. (**தானி. 10:13, 20-21**ஐக் காணவும்) இந்தத் தூதர்கள் பல்வேறு மாறுபட்ட சொற்றொடர்களினால் விவரிக்கப் படுகின்றனர்.

துரைத்தனங்கள் அல்லது அதிகாரங்கள்	***எபே. 3:10*** ***கொலோ. 1:16***
அதிகாரங்கள்	***எபே. 3:10*** ***கொலோ. 1:16***
வல்லமைகள்	***ரோமர் 8:38-39*** ***1 பேது. 3:22***
ஆவிக்குரிய சக்திகள்	***எபே. 6:12***
அரியணைகள்	***கொலோ. 1:16***
ஆளுகை	***எபே. 1:21***

மற்றும் **எபே. 6:10-13** வசனப் பகுதியானது விசுவாசிகளுக்கும் சாத்தானின் சக்திகளுக்கும் இடையில் நடக்கின்ற ஆவிக்குரிய யுத்தத்தைச் சித்தரிப்பதோடு, **வெளி. 12:7-12** நல்ல மற்றும் தீய தூதர்களுக்கிடையில் நடைபெறும் யுத்தத்தைப் பற்றியும் சித்தரிக்கிறது.

- <u>விசேஷித்த தூதர்கள்</u>

வேத வசனங்களில் விசேஷித்த தூதர்கள் பலர் காணப்படுகின்றனர்

– காபிரியேல்

வேத வசனங்களில் பெயர் கொடுக்கப்பட்டுள்ள இன்னும் ஒரே ஒரு தூதன் காபிரியேல் என்பவனாக உள்ளான். இவன் பின்வருபவர் களுக்குத் தேவனு டைய செய்தியைக் கொடுத்த, தேவனுடைய விசேஷித்த செய்தியாளனாக இருக்கிறான்.

தானியேல்	***தானி. 8:16; 9:21***
சகரியா	***லூக். 1:19***
மரியாள்	***லூக். 1:26***

– குறிப்பிட்ட பணிப் பொறுப்புகளுடைய தூதர்கள்:
சில தூதர்களுக்குத் தேவனால் விசேஷித்த பணிப் பொறுப்புகள் நியமிக்கப் பட்டுள்ளன.

ஜீவ விருட்சத்தைக் காத்து நிற்கும் தூதர்கள்	***ஆதி. 3:24***
பாதாளத்தின் தூதன்	***வெளி. 9:11***
தண்ணீர்களின் தூதன்	***வெளி. 16:5***
சாத்தானைக் கட்டுகிற தூதன்	***வெளி. 20:1-2***

- <u>தூதர்களின் இரு வகுப்புகள்</u>

வேத வசனங்களில் தூதர்களின் இரு பெரும் பிரிவுகள் இருப்பதாகக் காணப் படுகிறது - தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மற்றும் விழுந்து போனவர்கள் (பெரும் பாலும் மனிதர்களைப் போலவே: மீட்கப்பட்டவர்கள் மற்றும் மீட்கப்படாத வர்கள்).

எல்லாத் தூதர்களுமே "சோதனைக்குட்படாத" பரிசுத்தத்தில் படைக்கப்பட்டனர் **(யூதா 6)** என்பது உறுதி, மற்றும் **ஆதி. 3**க்கு முன்னதாக தேவனுக்கெதிராகச் சாத்தானுடைய கலகத்தின் வேளையில் தேவனை அல்லது சாத்தானை வழிபடும் ஒரு - வேளை தெரிவு செய்தல் இவர்களுக்குத் தரப்பட்டது. அந்தத் தெரிவு செய்தலானது அவர்களின் நித்திய அடைவிடத்தை முத்திரையிட்டது.

– தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் - தேர்ந்தெடுக்கப்பட்ட தூதர்கள் தேவனை எந்நாளும் ஆராதிக்க மற்றும் சேவிக்கத் தேர்ந்து கொண்ட பரிசுத்த தூதர்களாய் இருக்கின்றனர்.
1 தீமோ. 5:21
லூக். 9:26

– <u>விழுந்து போனவர்கள்</u> - விழுந்து போன தூதர்கள் என்பவர்கள் தேவனுக்கெதிரான சாத்தானின் கலகத்தில் அவனைப் பின்பற்றத் தேர்ந்து கொண்ட தீய தூதர்களாய் உள்ளனர். விழுந்து போன இந்தத் தூதர்கள், அசுத்த ஆவிகள் என்று அழைக்கப்படுகின்றனர்.
மத். 12:24

மூன்றில் ஒரு பங்கு தூதர்கள் விழுந்து போயுள்ளனர் மற்றும் மூன்றில் இரண்டு பங்கு தூதர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர் என்பது உறுதி.

லூக். 10:17-18
மத். 25:41
2 பேது. 2:4
யூதா 6
வெளி. 12:3-4

இந்தத் தெரிவு செய்து கொள்ளுதல் ஒருமுறை மேற்கொள்ளப்பட்ட பின்பு அது நிலையானதாக உள்ளதாகக் காணப்படுகிறது, ஏனெனில் தூதர்களை மீட்பதற்காகக் கிறிஸ்து மரிக்கவில்லை. **எபி. 2:16-17**

சாத்தானும் அவனுடைய அசுத்த ஆவிகளின் சேனை யாவையும் விழுந்து போன (தீய) தூதர்கள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நூலில் இனி, தேர்ந்தெடுக்கப்பட்ட தூதர்கள், தூதர்கள் என்றும், விழுந்து போன தூதர்கள் சாத்தானைத் தங்கள் தலைவனாகக் கொண்ட அசுத்த ஆவிகள் என்றும் குறிப்பிடப்படுவார்கள். **மத். 25:41**

ஈ. தூதர்களின் ஊழியம்

- <u>பொதுவானது</u>

தூதர்கள் என்பவர்கள் செய்தியாளர்களாய்ச் செயல்படவும், தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் ஊழியம் செய்யவும் படைக்கப்பட்ட ஊழியக்காரர்களாய் உள்ளனர்.

- <u>தேவனுக்கு ஊழியம்</u>

தூதர்கள் தேவனுக்குப் பல வகையான ஊழியங்கள் செய்கின்றனர்:

– ஆராதனை	**எபி. 1:6**
– ஊழியம்	**வெளி. 22:9**
– துதி	**சங். 148:2**
– தேவனுடைய கட்டளையை நிறைவேற்றுதல்	**சங். 103:20-22**
– செய்திகளைச் சேர்ப்பித்தல்	**லூக். 1:11-13**
– தேவனுடைய நியாயத் தீர்ப்பைச் செயல்படுத்துதல்	**வெளி. 8:7; அப். 12:22-23**
– வெளிப்படுத்துதலை அறிவித்தல்	**எபி. 2:2; கலா. 3:19; தானி. 9:20-27**
– மனிதர்களின் வாழ்வில் இடைப்படுதல்	**எண். 22:21-28; ஆதி. 19:15.1**

- <u>கிறிஸ்துவுக்கு ஊழியம்</u>

  கிறிஸ்துவின் பூமிக்குரிய வாழ்வின் போது அவரது ஊழியத்தில் தூதர்கள் குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றினார்கள்:

  - *அவருடைய பிறப்பை அறிவித்தனர் **(லூக். 1:26-33)***
  - *அவரைத் துதித்தனர் **(லூக். 2:8-15)***
  - *அவர் சோதிக்கப்பட்ட பின்பு அவருக்குப் பணிவிடை செய்தனர் **(மத். 4:11)***
  - *கெத்செமெனே தோட்டத்தில் அவரைப் பெலப்படுத்தினர் **(லூக். 22:43)***
  - *அவரைக் காவல் காத்து பாதுகாத்தனர் **(சங். 91:11-12)***
  - *அவரது கல்லறையில் இருந்து கல்லைப் புரட்டிப்போட்டனர் **(மத். 28:2)***
  - *அவருடைய உயிர்த்தெழுதலை அறிவித்தனர் **(மத். 28:5-7)***
  - *அவர் பரத்துக்கேறியது பற்றிச் சாட்சியளித்தனர் **(அப். 1:10-11)***

- <u>இரண்டாம் வருகையில் ஊழியம்</u>

  - *பரவச நிலையை சைகை காட்டுவார்கள் **(1 தெச. 4:16)***
  - *கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவருடன் திரும்பி வருவார்கள் **(மத். 25:31)***
  - *விசுவாசிகளை அவிசுவாசிகளில் இருந்து பிரிப்பார்கள் **(மத். 13:37-41)***

- <u>நடபடிகளில் சபைக்கு ஊழியம்</u>

  - *பேதுருவைச் சிறையினின்று விடுவித்தான் **(அப். 5:19)***
  - *செல்ல வேண்டிய இடத்தைக் கட்டளையாய் அளித்தான் **(அப். 8:26)***
  - *அறிவுறுத்தல் கொடுத்தான் **(அப். 10:22)***
  - *தேவனுடைய சித்தத்தை உறுதிப்படுத்தினான் **(அப். 27:23)***

- <u>நாடுகளுக்கு/இனங்களுக்கு ஊழியம்</u>

  - *மிகாவேல் இஸ்ரவேலர்களைப் பாதுகாத்தான் **(தானி. 12:1)***
  - *தூதர்கள் உலகத் தலைவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றனர் **(தானி. 10:20-21).***

- விசுவாசிகளுக்கு ஊழியம்
  - அவர்களைப் பெலப்படுத்துதல். **(1 இராஜா. 19:5-8)**
  - அவர்களைப் பாதுகாத்தல்.
    2 இராஜா. 6:11-18
    சங். 34:7
    மத். 18:10
  - அவர்களுக்கு உதவுதல் மற்றும் ஊழியம் செய்தல் **(எபி. 1:14)**
  - ஜெபங்களுக்குப் பதில்களைப் பெற்றுத் தருதல் **(அப். 12:5-11)**
  - மீட்பின் நிமித்தம் சந்தோஷப்படுதல் **(லூக். 15:10)**
  - மனிதர்களின் ஊழியத்தைக் கவனித்தல் **(1 கொரி. 4:9)**
  - மரித்த விசுவாசிகளைப் பரலோகத்திற்கு அழைத்துச் சென்று சேர்த்தல் **(லூக். 16:22)**

பயிற்சி: தூதர்களின் ஊழியத்தினுடைய பரப்பெல்லை மற்றும் இயல்பு பற்றி நீங்கள் வியப்படைகிறீர்களா? ஆம் அல்லது இல்லை என்றால் ஏன்?

____

____

____

____

பயிற்சி: தூதர்களின் ஆவிக்குரிய வட்டாரம் ஏன் இவ்வளவாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது? இது மறைமுகமாய் எதை உணர்த்துகிறது?

____

____

____

____

உ. விழுந்து போன தூதர்கள்

முன்பே குறிப்பிடப்பட்டபடி, தூதர்கள் மூன்றில் ஒரு பங்கினர் அசுத்த ஆவிகள் என்று அழைக்கப்படுகிற விழுந்து போன, தீய தூதர்களாய் உள்ளனர், சாத்தான் அசுத்த ஆவிகளுக்குத் தலைவனாய் இருக்கிறான். ***(மத். 12:24)***

1. <u>விழுந்து போகுதல் விவரிக்கப்பட்டது</u>
   ஏசா. 14:12-15
   லூக். 10:17-18
   வெளி. 12:4

ஆதி. 3க்கு முன்னதாக ஏதோ ஒரு காலத்தில், சாத்தான் பரலோகத்தில் தேவனுடைய வல்லமைக்கும் அதிகாரத்திற்கும் அறைகூவல் விடுத்து, அவரை இடம் மாற்றும் முயற்சியில் ஒரு கலகத்தை தேவனுக்கு எதிராகத் தூண்டி நடத்தினான்.

ஏசா. 14 சாத்தானின் "நான் (இதைச்) செய்வேன்" என்று 5 விஷயங்களை விவரிக்கின்றது, இது அவனது கலகம் மற்றும் அவன் பரலோகத்திலிருந்து தள்ளப்படுதல் ஆகியவற்றிற்கு வழிநடத்திய அவனது கர்வத்தைச் சித்தரிக்கிறது.

1 தீமோ. 3:6, சாத்தானுடைய பாவத்திற்கு இறுமாப்பே வேராய் இருந்ததென்று எடுத்துரைக்கிறது. சாத்தான் தனக்குத்தானே தேவனாயிருக்க விரும்பினான்! சாத்தான். "நான் தேவனுடைய அரியணையை அவரிடமிருந்து எடுத்துக் கொள்வேன்" என்று கூறினான்.

தேவன் சாத்தானையும் அவனைப் பின்பற்றிய தூதர்களையும் பரலோகத்திலிருந்து வெளியேற்றி அவர்களைக் கடைசியில் அக்கினிக் கடலுக்கு ஒப்புக் கொடுத்ததின் மூலம் அவர்களை நியாயந்தீர்த்தார். ***(மத். 25:41)***. அவ்வேளையில் இருந்து சாத்தானும் அவனுடைய தூதர்கள் அனைவரும் நிரந்தரமாகத் தீயவர்கள் ஆனார்கள் மற்றும் அவர்களின் முடிவு முத்திரையிடப்பட்டது. கிறிஸ்து சிலுவையில் சாத்தானுடைய வேலைகளை நியாயந்தீர்த்து அழித்திருந்தாலும் ***(யோவா. 16:11; 1 யோவா. 3:8)***, சாத்தானுக்கெதிரான தேவனுடைய நியாயத் தீர்ப்பு செயல்படுத்தப்படுதல் எதிர்காலம் வரையிலும் தள்ளி வைக்கப்பட்டுள்ளது (***யோபு 1:6; வெளி. 12:1-9; வெளி. 20:1-3, 7-10*** ஆகியவற்றைக் காணவும். அதே வேளையில், சாத்தான், தேவனுடைய ராஜரீகமான கரத்தின் கீழ் உண்மையில் தேவனுடைய நிறைவான நோக்கங்களுக்காகச் செயல்படும் அவனுடைய தீய சூழ்ச்சிகளை தொடர்ந்து செய்ய விடுதலையாக்கப்பட்டுள்ளான்.

தேவனுடன் நிலைத்திருப்பதைத் தேர்ந்து கொண்ட தூதர்கள் என்றென்றைக்கும் பரிசுத்தமானவர்களாகவும், தேர்ந்து கொள்ளப்பட்டவர்களாகவும் ஆனார்கள் என்பதை நினைவில் வையுங்கள்.

2. <u>சாத்தான்</u>

சாத்தான் என்பவன் அசுத்த ஆவிகளின் சேனைகள் யாவற்றுக்கும் தலைவனாய் இருக்கின்றான். மக்களில் பலர் சாத்தானை நபர்த்துவமற்ற தீய சக்தி என்று நினைத்துக் கொண்டிருக்கையில், வேத வசனம் விழுந்து போன தீய தூதன் என்ற வகையில் அவனது இருப்பின் உண்மை நிலையைப் போதிக்கிறது.

- **சாத்தானின் உண்மை நிலை**

– <u>பழைய ஏற்பாட்டில்</u>

பழைய ஏற்பாட்டில் ஒவ்வொரு பெரும் பிரிவும் சாத்தானின் இருப்பைப் போதிக்கிறது.

நியாயப் பிரமாணம்	- **ஆதியாகமம்**
வரலாறு	- **1 நாளாகமம்**
பாடல்	- **யோபு**
பெரிய தீர்க்க தரிசனங்கள்	- **ஏசாயா, எசேக்கியேல்**
சிறிய தீர்க்க தரிசனங்கள்	- **சகரியா.**

– <u>புதிய ஏற்பாட்டில்</u>

புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர் ஒவ்வொருவரும் சாத்தானின் உண்மை நிலையை உறுதி செய்கின்றார். சுவிசேஷங்களில் 25 தனித்தனி நிகழ்ச்சிகளில் இயேசு சாத்தானைப் பற்றிப் பேசினார்.

சாத்தானுக்கு வேத வசனத்தில் அவனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள பல்வேறு பெயர்களும் இயற்பெயர்களும் உள்ளன.

- **சாத்தானுடைய பெயர்கள்**

– சாத்தான் (குற்றம் சாட்டுபவன் அல்லது எதிராளி) **சக. 3:1; மத். 4:10**
– பிசாசானவன் (பழியுரைப்பவன்) **எபி. 2:14; மத். 4:8**
– லூசிஃபெர் (விடிவெள்ளி, அதிகாலையின் மகன், பிரகாசிக்கிறவன்) **ஏசா. 14:12**
– பெயல்செபூல் (ஈக்களின் கர்த்தன்) **மத். 12:24**
– பேலியாள் (துன்மார்க்கம்) **2 கொரி. 6:15.**

- ***சாத்தானுடைய இயற்பெயர்கள்/பட்டப் பெயர்கள்***

வேத வசனங்கள் சாத்தானுக்குப் பல விவரிப்பான பட்டப் பெயர்களைக் குறிப்பிடுகின்றன:

– பிசாசுகளின் தலைவன்	***மத். 12:24***
– இப்பிரபஞ்சத்தின் தேவன்	***2 கொரி. 4:4***
– ஆகாயத்து அதிகாரப் பிரபு	***எபே. 2:2***
– பிரபு (இந்த உலகத்தின் அதிபதி)	***யோவா. 12:31***
– பொல்லாங்கன்	***1 யோவா. 5:19***
– வலுசர்ப்பம்/பாம்பு	***வெளி. 12:7, 9***
– சோதனைக்காரன்	***1 தெச. 3:5***
– சகோதரர் மேல் குற்றஞ் சுமத்துகிறவன்	***வெளி. 12:10***
– சத்துரு	***மத். 13:39***
– கெர்ச்சிக்கிற சிங்கம்	***1 பேது. 5:8***
– ஒளியின் தூதன்	***2 கொரி. 11:14***

- ***சாத்தானுடைய இயல்பு***

– வேத வசனத்தின்படி, தொடக்கத்தில் சாத்தான் மிக உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த தூதனாகப் படைக்கப்பட்டான். சாத்தான் வீழ்ந்து போவதற்கு முன்பு அவனது இயல்பைப் பற்றி எசே. *28:12-17* பின்வருமாறு விவரிக்கிறது:
– "முழுமையின் மாதிரி"
– "ஞானத்தால் நிறைந்தவன்"
– "பூரண அழகுள்ளவன்"
– "காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப்"
– "உன் வழிகளில் குறைவற்றவன்"

சாத்தானுக்குள் "அநியாயம் (பாவம்)" கண்டு பிடிக்கப்பட்டது மட்டும் அவன் இவை எல்லாவற்றையும் கொண்டிருந்தான்.

மனிதர்களைப் போலவே தூதர்களையும் தேவனைத் தொழுது கொள்ளலாமா அல்லது வேண்டாமா என்பதைச் சுயமாகத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் சித்தம் கொண்டவர்களாகவே படைத்தார். சாத்தான் தேவனுக்கெதிராகக் கலகம் செய்வதைத் தேர்ந்து கொண்டதால் தனக்குள் தீமைக்கான சாத்தியக் கூற்றினைத் தூண்டி விட்டுக் கொண்டான்.

- ***சாத்தானுடைய ஆளுமைத் தன்மை***

மீண்டும், சாத்தான் என்பவன் நபர்த்துவமற்ற சக்தியாயிராமல், ஆளுமைத் தன்மையுள்ளவனாகப் படைக்கப்பட்ட ஒரு தூதனாக இருக்கிறான்.

சிந்தை	-	***2 கொரி. 11:3*** "தந்திரம்"
		எபே. 6:11 "தந்திரம்" (சூழ்ச்சிகள்)
சித்தம்	-	***ஏசா. 14:12-15*** "நான் செய்வேன்"
உணர்வுகள்	-	***வெளி. 12:17*** "கோபம் கொண்டான்"

மற்றும், பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகிய இரண்டுமே சாத்தானை ஒரு நபராகக் குறிப்பிடுகின்றன **யோபு 1:12** (உன் கைகள்); **லூக். 4:6** (எனக்கு, நான்)

- சாத்தானுடைய குணம்

  வேத வசனங்களில் சாத்தான் பின்வருமாறு விவரிக்கப்படுகின்றான்

  – (மனுஷ) கொலை பாதகன் ***யோவா. 8:44***
  – பொய்யன் ***யோவா. 8:44***
  – மோசம் போக்குபவன் ***வெளி. 20:7-8***
  – நமது எதிராளி ***1 பேது. 5:8***
  – அவிசுவாசிகளின் பிதா ***யோவா. 8:44***

- **சாத்தானுடைய வட்டாரம்**

  சாத்தான் பரலோக வட்டாரங்களிலும் பூமியின் மீதும், இவ்வுலகை அல்லது வானவெளியை முழுமையாக நிரப்பும்படி ஆளுகை செய்கின்றான் - **அதாவது தேவனுடைய விஷயங்களுக்கு எதிர்த்து நின்று, தேவனின்றி சுயாதீனமாய் வாழும் நிலையைத் தூண்டும் வகையில் உள்ள, சாத்தானால் நடத்தப்படும் ஒரு போலியான உலக அமைப்பை ஆளுகை செய்கிறான்.**

  1 யோவா. 2:13-17
  1 யோவா. 5:19

  ஆனால் இன்னமும் சாத்தான் தேவனுடைய ஆளுகையின் கீழாகவே இயங்குகிறான், மற்றும் அவரது அனுமதியுடனேயே அவன் இயங்கு கிறான், ஏனெனில் சாத்தான் ஏற்கனவே தோல்வியுறச் செய்யப்பட்ட ஒரு எதிரியாக இருக்கிறான்.

  யோபு 1:12
  யோபு 12:31
  யோவா. 16:11

- **சாத்தானுடைய வியூகம்**

  <u>தேவனைப் பொறுத்தமட்டில்</u>

  – தேவனுடைய வசனத்தின் சத்தியத்திற்கு அறைகூவல் விடுக்கிறான்
  ஆதி. 3:3
  – தேவனை ஒரு பொய்யர் என்று அழைக்கிறான்.
  ஆதி. 3:4
  – தேவனுடைய நற்பண்பு பற்றிக் கேள்வி எழுப்புகிறான்.
  ஆதி. 3:5
  – தேவனுக்கு எதிரான கலகத்தை ஊக்கப்படுத்துகிறான்.
  ஆதி. 3:6
  – மக்களைத் தேவனின்றி சுயாதீனமாய் வாழும்படி வழிநடத்துகிறான்.
  ஆதி. 3:6
  – தேவனை அவமதிக்க நாடுகிறான்.
  யோபு 1:8-11
  – தேவனுடைய ஊழியக்காரரைப் பாவம் செய்யும்படி தூண்டுகிறான் (தாவீது)
  1 நாளா. 21:1-2

- தீய ஆட்சியாளர்களுக்கு வல்லமை அளிக்கிறான்.
  ஏசா. 14:3-6; எசே. 28:1-5; 11-12
- தேவனைத் தூஷிக்கிறான்.
  வெளி. 13:5-6
- கள்ள உபதேசம் மேம்படச் செய்கிறான்.
  வெளி. 2:24; 1 தீமோ. 4:1
- பாவத்தைத் தீவிரமாக உற்சாகப்படுத்துகிறான்.
  2 தெச. 2:9-10
- உலகில் தேவனுடைய ஊழியத்தை எதிர்த்து நிற்கிறான்.
  மத். 16:21-23; லூக். 22:1-6
- தேவனுடைய மக்களைத் துன்புறுத்துகிறான்.
  வெளி. 12:17
- துன்ப காலத்தில் தேவனுக்கு எதிரான, உலக அரசை, பொருளாதாரத்தை மற்றும் மதத்தைக் கொண்ட போலியான ஒரு அரசாங்கத்தை/இராஜ்யத்தை அமைக்கிறான்.
  வெளி. 13:1-18
- துன்ப வேளையில் - சாத்தான், அந்தி கிறிஸ்து மற்றும் கள்ளத் தீர்க்கதரிசி ஆகியோரைக் கொண்ட - பரிசுத்தமற்ற ஒரு திரித்துவத்தை நிலைநாட்டுகிறான்.
  வெளி. 13:1-18
- மக்கள் தன்னை ஆராதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறான்.
  வெளி. 13:1-18
- மக்களினங்களை வஞ்சித்து, தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் எதிராகக் கலகம் செய்யும்படி வழிநடத்துகிறான்.
  வெளி. 20:7-10

கிறிஸ்துவைப் பொறுத்தமட்டில்

- கிறிஸ்து பிறந்த பொழுது அவரைக் கொல்லும்படி ஏரோதுவைத் தூண்டினான்.
  மத். 2:13-16
  வெளி. 12:1-5
- வனாந்தரத்தில் கிறிஸ்துவைச் சோதித்தான்.
  - அவர் தமது சுய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும்படி
  - அவர் தமக்குத்தாமே மகிமை ஏற்படுத்திக் கொள்ளும்படி
  - உண்மையில் அவருக்குரியதை சாத்தானுடைய வழியில் பெற்றுக் கொள்ளும்படி
  - சாத்தானை ஆராதிக்கும்படி அவரைச் சோதித்தான்.

  லூக். 4:1-13
- கிறிஸ்துவை இஸ்ரவேலர்கள் புறக்கணிக்கும் செயலை வடிவமைத்தான்.
  மத். 12:22-32
- இயேசுவின் சீஷர்களுக்குள் குழப்பமூட்டினான்.
  மத். 16:21-23
- சிலுவையைத் தவிர்க்கும்படியும் தேவனுடைய சித்தத்தைச் செய்யாதிருக்கும்படியும் கிறிஸ்துவைத் தோட்டத்தில் சோதித்தான்.
  லூக். 22:39-46.

<u>அவிசுவாசிகளைப் பொறுத்தமட்டில்</u>

– அவர்களின் பிதாவாய் இருக்கிறான்.	யோவா. 8:44
– சத்தியத்திற்கு அவர்கள் சிந்தைகளைக் குருடாக்குகிறான்.	2 கொரி. 4:3-4
– அவர்கள் பொய் சொல்லும்படி செல்வாக்குச் செலுத்துகிறான்.	அப். 5:3
– சுவிசேஷத்தைப் பறித்துக் கொண்டு போகிறான்.	மாற். 4:13-15
– அவர்களைப் பாவத்திற்கும் கீழ்ப்படியாமைக்கும் வழிநடத்துகிறான்.	எபே. 2:1-3
– அவர்களின் அதிபதியாய் இருக்கிறான்	அப். 26:17-18; கொலோ. 1:13
– அவர்களைத் தன் சித்தத்திற்கு அடிமைப்படுத்தப் பற்றுகிறான்.	2 தீமோ. 2:25-16
– அவர்களைப் பாவத்திற்கு அடிமையாக்குகிறான்.	யோவா. 8:34; ரோமர் 6:12-13

<u>விசுவாசிகளைப் பொறுத்தமட்டில்</u>

– ஒளியின் தூதனைப் போல் வேஷம் தரிக்கிறான்.	2 கொரி. 14:14
– அவர்களின் சத்துருவாய் (எதிராளியாய்) இருக்கிறான்.	1 பேது. 5:8
– அவர்களின் ஜெபங்களைத் தடை செய்கிறான்.	தானி. 10:12-13
– குழப்பதையும் விரோதத்தையும் உண்டாக்குவதற்காக சபையில் கள்ள கிறிஸ்தவர்களை இட்டு வைக்கிறான்.	மத். '13:36-43
– ஒழுக்கவீனத்தை உற்சாகப்படுத்துகிறான்.	1 கொரி. 7:1-7
– பாவம் பற்றிக் குற்றம் சாட்டுகிறான்.	வெளி. 12:10 சக. 3:1-5 1 யோவா. 2:1
– ஊழியத்தைத் தடை செய்கிறான்	1 தெச. 2:18
– விசுவாசிகளுக்கெதிராய் ஆவிக்குரிய யுத்தத்தைத் தூண்டுகிறான்.	எபே. 6:10-18
– அவர்களை மேட்டிமையில் அகப்படுத்த முயற்சி செய்கிறான்.	1 தீமோ. 3:7
– அவர்களின் விசுவாசத்தைச் சோசிக்கிறான்.	லூக். 22:31-32
– மன்னியாதிருக்கும்படி அவர்களைச் சோதிக்கிறான்	2 கொரி. 2:9-11
– சில வேளைகளில் வியாதி மற்றும் பலவீனங்களினால் துன்புறுத்துகிறான்.	லூக். 13:16 2 கொரி. 12:7
– அவர்களின் சாட்சியத்தையும் தேவனுக்கு அவர்கள் பயன்படும் தன்மையையும் அழிக்க நாடுகிறான்.	1 பேது. 5:8 யாக். 13-15
– பாவம் செய்யும்படி அவர்களைச் சோதிக்கிறான்	1 தெச. 3:5

பயிற்சி: சாத்தானுடைய பாவத்தின் சாராம்சம் என்ன? அவனுடைய வியூகத்தைப் பற்றிய விஷயம் என்ன?

___

___

___

___

- தேவன் சாத்தானை எவ்வாறு பயன்படுத்துகிறார்

சாத்தான் இவ்வுலகத்தைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது போலத் தோன்றினாலும், தேவன் தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளச் சாத்தானைப் பயன்படுத்துகிறார்.

– மனிதனின் பாவம் நிறைந்த தன்மையை உறுதிப்படுத்துதல். **வெளி. 9:20-21; வெளி. 20:7-10**
– பாவத்திற்கு எதிரான தேவனுடைய நியாயத் தீர்ப்பைச் செயல்படுத்துதல் **வெளி. 9:1-11**
– விசுவாசிகளின் விசுவாசத்தைச் சோதித்தல். **யோபு 1:8-12; எபே. 6:16; லூக். 22:31-32**
– விசுவாசிகளைத் தாழ்மையானவர்களாய்க் காத்துக் கொள்ளுதல். **2 கொரி. 12:7-10**

- விசுவாசிகள் சாத்தானை எவ்வாறு எதிர்த்து நிற்கின்றனர்

சாத்தான் தேவனாய் இருப்பதில்லை, ஆகையால் அவன் எல்லாம் வல்லவனாகவே, எல்லாம் அறிந்தவனாகவோ அல்லது எங்கும் நிறைந்தவனாகவோ இருப்பதில்லை என்று இருக்கையில், அவன் மிகுந்த வல்லமை நிறைந்த, அச்சுறுத்தும் எதிரியாய் இருக்கிறான். எந்த விசுவாசி தமது சொந்த பலத்தில் நிற்கிறாரோ, அவரைச் சாத்தான் சுலபமாய்த் தோல்வியுறச் செய்ய முடியும்.

ஆனால், வேத வசனங்களின் கொள்கைகளையும் கிறிஸ்துவின் உதாரணத்தையும் பின்பற்றுவதினால் விசுவாசி சாத்தானை எதிர்த்து நின்று அவனைத் தோல்வியடையச் செய்ய முடியும் என்பது வேத வசனங்களின் வாக்குத்தத்தமாக உள்ளது.
விசுவாசியானவர்,

– சாத்தானை ஒருக்காலும் குறைவாய் மதிப்பிட்டு விடக்கூடாது (யூதா 8-10)
– தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் (யாக். 4:7)
– சாத்தானை எதிர்த்து நிற்க வேண்டும் (யாக். 4:7)
– சாத்தானின் சூழ்ச்சிகள் மற்றும் சோதனைகளுக்கு எதிராக விசுவாசத்தில் உறுதியாய் நிற்க வேண்டும் (எபே. 6:13-16; 1 பேது. 5:8).

- பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைச் சார்ந்திருக்க வேண்டும் (எபே. 6:18; 1 யோவா. 4:4)
- இயேசுவின் ஜெபங்களில் நிலைநிற்க வேண்டும் (யோவா. 17:15)
- கிறிஸ்துவின் நாமத்தில் சாத்தானைக் கடிந்து கொள்ள வேண்டும் (மத். 16:23; யூதா. 9; சக. 3:2).
- சாத்தானின் வியூகங்களுக்கு (எதிராக) தேவனுடைய வசனத்தின் சத்தியத்தைப் பயன்படுத்த வேண்டும் (மத். 4:4; எபே. 6:17)

3. அசுத்த ஆவிகள்

- <u>அவற்றின் உண்மை நிலை</u>

சாத்தானுடைய உண்மை நிலையைப் போலவே அசுத்த ஆவிகளின் உண்மை நிலையும் வேத வசனத்தின் சத்தியத்தின் மீதே நிலை நிற்கிறது. அசுத்த ஆவிகள் என்பவை விழுந்து போன தூதர்களாக வும் சாத்தானைப் பின்பற்றி சேவிக்கின்றவைகளாகவும் உள்ளன என்பதை உணர்ந்து அறிதல் உதவி மிக்கதாக உள்ளது.

அசுத்த ஆவிகள் பற்றிய வேத வசனத்தின் சாட்சியம் சீரானதாக உள்ளது.

பழைய ஏற்பாட்டில்
உபா. 32:17
1 சாமு. 16:14-15

புதிய ஏற்பாட்டில்
1 கொரி. 10:20-21
ரோமர் 8:38

சுவிசேஷங்களில் கிறிஸ்துவால்
மாற்கு 5:1-16

முடிவு காலங்களில்
வெளி. 9:20

- <u>அவைகளின் இயல்பும் வேலைகளும்</u>

அசுத்த ஆவிகள் தீமையானவைகளாக, தங்களை ஆள்பவனான சாத்தானின் கட்டளைகளைச் செயல்படுத்தும் சுத்தமற்ற ஆவிகளாக உள்ளன. அவைகள் சாத்தானை விடத் தாழ்வான படிநிலையில் உள்ள, விழுந்து போன தூதர்களாக உள்ளன.

மத். 12:24
மாற். 5:12-13

அசுத்த ஆவிகள் சாத்தான் போன்று அதே செயல்களில் ஈடுபட்டுள்ளன:

- உலகத் தலைவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன:
- பூமியில் தேவனுடைய ஊழியத்தை எதிர்த்து நிற்கின்றன
- அவிசுவாசிகளின் மத்தியில் பாவத்தைப் பெருக்கம் அடையச் செய்கின்றன
- விசுவாசிகளைப் பாவம் செய்யத் தூண்டுகின்றன
- விக்கிரக ஆராதனையை ஊக்கப்படுத்துகின்றன
- கள்ள உபதேசத்தைப் போதிக்கின்றன
- கிறிஸ்தவர்கள் போல கள்ளத்தனமாய் நடிக்கின்றன

<u>அசுத்த ஆவிகள்:</u>

வல்லமை நிறைந்தவைகளாய் உள்ளன
அப். 19:13-16

புத்திக் கூர்மையுடன் உள்ளன
லூக். 8:26-32

உணர்வுள்ளவைகளாய் இருக்கின்றன
யாக். 2:19

பெயர்கள் கொண்டுள்ளன
லூக். 8:30-31

ஆனாலும் கூட இவைகள் தேவனுக்குக் கீழ்ப்பட்டுள்ளன
லூக். 9:42-43

- <u>அசுத்த ஆவிகளின் நிலை</u>

சில அசுத்த ஆவிகள்:

1. **சுயாதீனமும் செயல்பாடும் கொண்டுள்ளன எபே. 6:11-12**
   இவை ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன **1 தீமோ. 4:1**

2. மற்ற அசுத்த ஆவிகள் **எல்லைக்கு உட்பட்டுள்ளன**

   - நிரந்தரமாகப் பாதாளக்குழிக்குள் இருக்கின்றன
     2 பேது. 2:4; யூதா. 6; 1 பேது. 3:18-20
     முழுமையான பாவங்கள் சிலவற்றினால் (ஒரு வேளை **ஆதி. 6:1-6)** இந்த அசுத்த ஆவிகள் தேவனால் அடைக்கப் பட்டன.

– பாதாளக் குழியில் தற்காலிகமாய் உள்ளன
வெளி. 9:1-15
உபத்திரவத்தின் காலத்தில் பாவத்திற்கு எதிராக நியாயத் தீர்ப்பின் கருவிகள் என்ற வகையில் கட்டவிழ்த்து விடப்பட வேண்டியவைகளாய் உள்ளன.

• <u>அசுத்த ஆவி கொண்டிருத்தல்</u>

அசுத்த ஆவிகள் மனிதர்களையும் விலங்குகளையும் பிடிக்க முடியும் என்பது வேதத்தில் இருந்து தெளிவாகிறது. **லூக். 8:26-38**

"பிடித்தல்" என்றால் ஒரு நபருக்குள் தங்கியிருப்பதன் மூலம் அசுத்த ஆவி அந்த நபரை இயக்கி, கட்டுப்படுத்தி மற்றும் அவர் மீது செல்வாக்குச் செலுத்துதலை அர்த்தப்படுத்துகிறது.

அவிசுவாசிகளை அசுத்த ஆவி பிடிக்கக் கூடும் என்பது மிகத் தெளிவாய்க் காணப்படுகின்றது. இப்படிப் பிடித்துக் கொள்ளுதல் பல விதமான அறிகுறிகளை உண்டாக்குகிறது.

மாற். 5:1-20 வசனப் பகுதி, அசுத்த ஆவி பிடிக்கப்பட்ட நபரின் குணங்களை விவரிக்கின்றது.
– அசுத்த ஆவி குடியிருத்தல்
– மனிதருக்குள் மேலான பலம்
– ஆளுமைத் தன்மையில் மாற்றம்
– மனநிலையில் பிறழ்வு
– மனிதருக்கு மேலான உணர்வறிவு
– கட்டுப்படுத்த முடியாத உணர்ச்சிகள்
– தேவனுக்குரிய விஷயங்களை எதிர்த்து நிற்குதல்

மேலும் அசுத்த ஆவிகள் உடல வியாதிகளையும் மனநிலை பாதிப்புகளையும் ஏற்படுத்த முடியும்.
மத். 9:32; லூக். 8:34-36

அவிசுவாசியை அசுத்த ஆவி பிடிக்க (அவருக்குள் குடியிருக்க) முடியும் என்றிருக்கையில், <u>விசுவாசிக்குள் பரிசுத்த ஆவியானவர் குடியிருப்பதால் அவர் மீது அசுத்த ஆவி செல்வாக்குச் செலுத்த மட்டுமே முடியுமேயன்றி அவருக்குள்ளாக வந்து குடியிருக்க முடியாது என்று வேத வசனம் போதிக்கின்றது.</u>
1 கொரி. 6:19; 2 கொரி. 6:14-17
மத். 16:21-23
1 நாளா. 21:1-2

- *அசுத்த ஆவி பிடித்துள்ளவரை/பிடித்துள்ளதைக் கையாளுதல்*

சாத்தானை எதிர்த்து நிற்கப் பயன்படுத்தக்கூடிய அதே வேத வசனக் கொள்கைளும் முன்னெச்சரிக்கைகளும் அசுத்த ஆவிகளுக்கும் பயன்படுத்தப்பட முடியும். அசுத்த ஆவிகளை இலேசாக நினைத்து விடக் கூடாது. தேவனுடைய வல்லமை மட்டுமே அசுத்த ஆவிகள் மற்றும் சாத்தான் ஆகியவற்றைக் கையாள முடியும்.

***மாற். 9:14-29**ஐக் காணவும்.*

***பயிற்சி:** அசுத்த ஆவி பிடித்துள்ளது என்று தெளிவாகக் காணப்படக் கூடிய ஒரு விஷயத்தை நீங்கள் எவ்வாறு கையாளுவீர்கள்?*

____

____

____

____

ஊ. *தூதர்களின் அடைவிடம்*

1. *<u>அசுத்த ஆவிகளின் அடைவிடம்</u>*

விழுந்து போன இந்தத் தூதர்களுக்கு எதிராகத் தேவனுடைய நியாயத் தீர்ப்பு ஏற்கனவே விதிக்கப்பட்டாயிற்று. இவைகள் சாத்தானுடைய அவிசுவாசிகள் எல்லாவற்றுடனும் அக்கினிக் கடலில் தள்ளப்படுவதே இவைகளின் முடிவாகும்.

மத். 25:41; வெளி. 20:10-13

2. *<u>தூதர்கள் அடைவிடம்:</u>*

தேவனுடைய தேர்ந்து கொள்ளப்பட்ட தூதர்கள் சதாகாலமும் தேவனுடன் வாழ்ந்து, அவரைச் சேவித்து, அவரை ஆராதிப்பார்கள்.

வெளி. 5:11-14

பயிற்சி: தேவன் தூதர்களுக்கு மீட்பைக் கிட்டச் செய்யாதது ஏன்?

____

____

____

____

6. மனிதன் - மானியவியல்

இப்பொழுது நாம் மனிதனைப் பற்றிய உபதேசத்தின் பக்கமாய்த் திரும்பி, பின்வருவன போன்ற கேள்விகளுக்குப் பதில்களை நாடுகின்றோம்:

- நாம் எங்கிருந்து வந்தோம்?
- நாம் யாரைப் போன்று இருக்கிறோம்?
- நாம் ஏன் படைக்கப்பட்டோம்?
- நமது நிலை என்ன?
- நமது அடைவிடம் எது?
- வாழ்வின் அர்த்தத்தையும் நோக்கத்தையும் நாம் எங்கு காண்கின்றோம்?

பல மக்கள் பின்வருவனவற்றில் விடை காணத் தேடுகின்றனர்:

- தத்துவம்
- மதம்
- வரலாறு
- பாரம்பரியம்
- அனுபவம்
- அறிவியல்
- இன்னும் பிற விஷயங்கள்

நாம் மனிதனைப் பற்றி நம்புகிற விஷயங்களுக்கு **வேதாகமத்தில்** கண்ணோக்குவோம்.

அ. | மனிதனின் தொடக்கம் |

மனிதனின் தொடக்கத்தைக் குறித்து ஒவ்வொவரும் பின்வரும் அடிப்படைக் கண்ணோட்டங்கள் இரண்டில் ஏதாவதொன்றைக் கொண்டுள்ளனர்:

பரிணாமக் கொள்கையை வழக்கமாய் உள்ளடக்கியதும் (படைப்புச்) செயல்முறையில் தேவனை (சேர்க்காமல்) விட்டுவிடுகிறதுமாகிய நாத்திகவாதக் கண்ணோட்டம்.

அல்லது

பரிணாமக் கருத்துக்கள் சிலவற்றை உள்ளடக்கியிருப்பதும் ஆனால் மனிதனின் தொடக்கத்திற்கு தேவனுடைய படைப்புச் செயல்களைக் குறிப்பிடுவதுமாகிய ஆத்திகவாதக் கண்ணோட்டம்.

அறிவியல், அனுபவம் அல்லது வரலாறு என்ன முடிவைப் பற்றிக் கொள்கிறது என்பதைப் பொருட்படுத்தாமல் இவ்விரு கண்ணோட்டங்களுமே வேத வசனங்கள் போதிக்கின்ற கருத்துக்களின் வெளிச்சத்தில் நியாயம் தீர்க்கப்பட வேண்டும்.

மனிதனின் தோற்றம் குறித்த தரம் வாய்ந்த நாத்திகவாதக் கூற்றின் முதலில் கவனிப்பது உதவி நிறைந்ததாக உள்ளது.

1. <u>நாத்திகவாதப் பரிணாமம்</u>

வேத வசனத்துடன் நேரடியாக முரண்படுகிற இந்தக் கோட்பாடு பல வகையான திறவுகோல் கருத்துக்களின் மீது நிலைநிற்கின்றது:

- **<u>நாத்திகவாதப் பரிணாமத்தின் திறவுகோல் கருத்துக்கள்:</u>**

  1. இயற்கைக்கு மேற்பட்ட சுயபடைப்பாளர் என்ற தேவன் என்று ஒருவரும் இல்லை.
  2. உயிர் வாழ்க்கையானது மனிதரின் சிந்தையாலும் அறிவியல் புள்ளி விபரங்களினாலும் போதுமான அளவு விளக்கப்பட முடியும்.
  3. நாம் அறிந்துள்ளபடி, விரிவடைந்து கொண்டுள்ள இந்த அண்டம் பல கோடி ஆண்டுகளுக்கு முன்பாக மிகப் பெரும் வெடிப்பு ("பிக் பேங்") ஏற்பட்டதன் விளைவாக படைக்கப்பட்டது.
  4. இயக்க வாழ்வு என்பது உயிரற்ற பொருளில் இருந்து தற்செயல் மற்றும் சூழ்நிலை ஆகியவற்றினால் எப்படியோ தாமாகவே உண்டாக்கப்பட்டது.
  5. மனிதன் என்பவன் விலங்குகளின் மிகத்தாழ்ந்த வகையில் இருந்து பல்லுயிர்களாக மாறிய பல கோடி ஆண்டுகள் செயல் விளைவினால் பரிணாமம் பெற்றுள்ளான்.
  6. பொருள் என்பது நித்தியமானது, அதை ஆக்கவோ அழிக்கவோ முடியாது.

7. மனிதனின் பரிணாமம் வளர்நிலையுடையதாகவும் பின்வருவன வற்றிலிருந்து விளைஞ்ததாகவும் உள்ளது.

   – நோக்கமற்ற மாறுதல்கள்
   – இயற்கைத் தெரிவு
   – தகுதியுள்ளதின் பிழைப்பு
   – ஒரு ஒற்றைச் செல்லானது இன்றைய நாட்களில் உள்ள சிக்கலான உயிரினமாகுதல்.
   – கோடிக்கணக்கான ஆண்டுகளாகச் சுற்றுச் சூழலில் ஏற்பட்ட சீரான மாற்றம்.

நாத்திகவாதப் பரிமாணம் என்பது,

- நிரூபிக்கப்படாத கோட்பாடுகள்
- தற்செயல் நிகழ்வு மற்றும் நிகழ்தகவு
- மனிதனிலும் அறிவியலிலும் உள்ள விசுவாசம்

ஆகியவற்றின் மேல் கட்டியெழுப்பப்படுகிறது.

நாத்திகவாதப் பரிணாமம் என்பது மனிதனின் தோற்றம் பற்றிய வேதாகம விபரங்களுடன் நேரடியாக முரண்படுகின்றது, ஆனால் வேறு வகையில் இது எவ்வளவாய்க் கருத்தறிவை ஏற்படுத்துகிறது?

- பரிணாமக் கொள்கையின் பிரதான தவறுகள்:

1. உயிரற்ற பொருட்களிலிருந்து உயிர் என்பது தானாக உற்பத்தியாவதற் குரிய கணக்கியல் வாய்ப்புகள் நம்புவதற்கு அரியதாக உள்ளது - கோடான கோடி வாய்ப்புகளில் ஒன்றே ஒன்று.

2. உயிருள்ள செல்கள் தங்களுக்குள் மறுஉற்பத்தி செய்ய முடியும் ஆனால் அவை அதிகம் சிக்கலானவைகளாக வளருவதில்லை. மனித ஜீன்களில் பாரம்பரிய பண்பைக் கொண்டுள்ள நுண்ணுயிரியான DNA மூலக்கூறு ஒன்று உலகின் மிகப் பெரிய கம்ப்யூட்டரைக் காட்டிலும் மிகவும் சிக்கலான அமைப்பைக் கொண்டுள்ளது.

3. அறிவியலில் மாற்றங்கள் என்பவை பயன் மிக்கதாகவோ வளர் நிலைக்குரியதாகவோ இல்லாமல் எப்பொழுதும் தீமை நிறைந்தவை யாகவே பெரும்பாலும் உள்ளன.

4. உயிரினங்களுக்கிடையே (எ.கா. குரங்கிற்கும் மனிதனுக்கும் இடையே) மாறுதல் ஏற்படுத்தும் தொந்து போன இணைவுகள் ஒருக்காலும் கண்டறியப்பட்டதில்லை.

5. தேவன் ஒவ்வொன்றையும் வளர்வுற்ற நிலையிலேயே படைத்தார் என்பதால் பூமியானது பல கோடி ஆண்டுகள் பழமையானது என்பது ஒரு மாயக் கருத்தாகவே உள்ளது (எ.கா. தேவன் வளையங்களைத் தன்னிலே கொண்ட மரங்களை உடனடியாகப் படைத்தார்; ஆதாம் ஒரு குழந்தையாக அல்ல வளர்ச்சி பெற்ற மனிதனாகவே படைக்கப்பட்டான்).

   இவ்விதமாக படைப்பின் அமைவானது வயதானது போன்ற தோற்றம் மட்டுமே கொண்டுள்ளது.

6. சுற்றுச் சூழலில் உள்ள மாற்றங்கள் திடீரென்று உண்டானவையாகவும், உடனடியாக நிகழ்ந்தவையாகவும் உள்ளன - எ.கா. ஆதியாகமத்தில் விவரிக்கப்பட்ட உலகளாவிய வெள்ளப் பெருக்கானது இன்று நாம் காணும் புதைபொருள் படிமம் மற்றும் புவியியல், சூழ்நிலை மாற்றங்களுக்குக் காரணமாயிற்று.

7. வெப்பவியலின் 2ம் விதியின்படி, நமது அண்டத்தில் கிடைக்கின்ற சக்தியின் மொத்த அளவானது குறைந்து கொண்டுள்ளது, இது வளர்வதில்லை மற்றும் பொருட்கள் அழிந்து கொண்டுள்ளன, அவை மேம்படுவதில்லை.

நாத்திகவாதப் பரிணாமக் கொள்கை என்பது மனிதன் மீதும் அறிவியல் மீதும் கொண்ட நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்பட்டவையேன்றி இவைகள் நிரூபிக்கப்பட்ட உண்மைகள் அல்ல. இது இயற்கைக்கு அப்பாற்பட்டதற்கு எதிரான அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டது.

- <u>ஆத்திகவாதப் பரிணாமத்தின் மீதான குறிப்பு</u>

சில கிறிஸ்தவர்கள் அறிவியல் கோட்பாடுகளுக்கு வேதாகமத்தை இசையச் செய்து, வேதாகமத்தின் சத்தியத்தை விசுவாசிக்க மறுக்கின்றனர். கோடிக்கணக்கான ஆண்டுகளினூடே மிருகங்களில் இருந்து மனிதன் பரிணமித்தான் என்ற நம்பிக்கையை இவர்கள் பற்றிக் கொண்டு, தேவன்

– இச்செயல்முறையைத் தொடங்கினார் என்றும்
– காலத்தின் ஒரு குறிப்பிட்ட வேளையில் அவர் விலங்கிலிருந்து மனிதனைப் படைக்க இடைப்பட்டார் என்றும் இவர்கள் நம்புகின்றனர்.

ஆத்திகவாதப் பரிமாணத்திற்கான பதில் எளிமையானதாக உள்ளது; வேதாகமம் நாத்திகவாதப் பரிணாமக் கொள்கையை மறுத்துரைப்பது போலவே இதையும் மறுத்துரைக்கிறது (ஆதி. 2:7). உயிரினங்களின் வரிசை அமர்வினூடே, பரிணாமம் என்பது (பெரும் பரிணாமம், எ.கா. மீனில் இருந்து நிலத்தில் வாழும் விலங்கு தோன்றிற்று; மனிதக் குரங்கில் இருந்து மனிதன் தோன்றினான் முதலியன) வேதாகமத்தின்படியானது அல்ல, ஏனெனில் உயிரினம் ஒவ்வொன்றும் "அதனதன் வகைப்படியே" உண்டாக்கப் பட்டது (ஆதி. 1:24; 1 கொரி. 15:38-41).

இருப்பினும், உயிரினங்களுக்குள்ளாக மேம்பாடும் மாற்றமும் (பெரும் பரிணாமம்) இருந்துள்ளது என்பதைக் கிறிஸ்தவர்கள் நம்புவதில்லை. படைப்பு காலத்திலிருந்து மனிதன் மேம்படுத்தப்பட்டு, தகவமைக்கப்பட்டு, மற்றும் மாற்றம் பெற்றானா என்ற கேள்விக்கே இடம் இல்லை, ஆனால் அவன் மனிதனாகவே இருக்கிறான். உயிரினங்களுக்குள்ளாக பரிணாமம் மற்றும் மாற்றம் என்பது ஆதாரத்திற்கு அப்பாற்பட்டதாகவே உள்ளது.

விலங்குகள் மற்றும் தாவரங்கள் ஆகியவற்றின் உலகிலும் இதே விஷயமே காணப்படுகிறது. ஆனால் இவ்வகையான பரிணாமக் கொள்கை போதிக்கப்படுவதில்லை.

★படைப்பை நம்புவதைக் காட்டிலும் பரிமாணத்தை நம்புவதற்கு அதிக விசுவாசம் தேவைப்படுகிறது, ஏனென்றால் பரிணாமத்தை உண்மைகள் ஆதரிப்பதில்லை!★

2. <u>ஆத்திகவாதப் படைப்பு</u>

மனிதனின் தோற்றம் பற்றிய வேதாகம உண்மையானது விசுவாசத்தினாலும் நம்பப்பட வேண்டும் உண்மைகள் இருந்தும் பார்வையற்ற விசுவாசத்தினால் அல்ல ஆனால் இயற்கைக்கு மேம்பட்ட யெகோவா தேவனில் கொண்டுள்ள நம்பிக்கை மிக்க விசுவாசத்தினால் இவைகள் நம்பப்பட வேண்டும்! (**எபி. 11:1-3**ஐக் காணவும்)

- <u>அஸ்திபாரமான மூன்று சத்தியங்கள்</u>

படைப்பு பற்றிய வேதாகமக் கண்ணோட்டம் தேவன் மீதுள்ள விசுவாசம் மற்றும் வேத வசனங்களில் போதிக்கப்படும் பின்வருகிற மூன்று அஸ்திபார சத்தியங்கள் ஆகியவற்றின் மீது கட்டி எழுப்பப்பட்டுள்ளது:

1. உலகம் மற்றும் மனிதனின் படைப்பு தேவனுடைய இயற்கைக்கு மேலான **செயல்பாட்டினால்** ஆனது.
   ஆதி. 1:24
   சங். 33:6-9
2. படைப்பு என்பது **நோக்கம் நிறைந்ததாக** இருந்தது.
   ஆதி. 1:27:31
3. படைப்பு என்பது **உடனடியானதாக** இருந்தது.
   ஆதி. 1:3
   ஆதி. 2:7
   யாத். 20:11

பயிற்சி: கிறிஸ்தவர்களில் பலரும் கூட பரிணாமக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்வது ஏன்?

___

___

___

___

- <u>உலகம் மற்றும் மனிதன் படைக்கப்பட்டது பற்றி வேதாகமம் போதிப்பது என்ன?</u>

  – **உலகத்தின் படைப்பு**

1. முன்பு இருந்திராத உலகம் இருக்கும்படி (creation ex-nihilo) தேவன் உரைத்தார். "தேவன் உரைத்தார், அது அப்படியே ஆயிற்று."
   ஆதி. 1:1-3
   நெகே. 9:5-6
   யோபு 38:1-7
   சங். 33:6-9
   ரோமர் 1:20
   ரோமர் 4:17
   எபி. 11:1-3
   கொலோ. 1:16

2. பொருளைப் படைத்து தேவன் அண்டத்தை இன்று நாம் அறிந்துள்ளபடி அமைத்து, வடிவுண்டாக்கி, உருப்படுத்தினார்.
   ஆதி. 1:1-2:2
   ஏசா. 44:24
   ஏசா. 45:18
   யோபு 38:8-33

3. உலகம் 5 சூரிய நாட்களில் (24 மணி கால அளவுகள் கொண்டவை) படைக்கப்பட்டது.
   ஆதி. 1:31-2:1
   யாத். 20:11

   குறிப்பு: குறிப்பான ஒரு எண்ணிக்கையுடன் (எ.கா. "6") நாள் ("Yom") என்ற எபிரெய வார்த்தை பயன்படுத்தப்பட்ட பொழுது அது எப்பொழுதுமே 24 மணிகள் கொண்ட நாட்களைக் குறிக்கிறது.

4. பூமியும் மனிதனும் வயதான தோற்றத்துடனேயே படைக்கப் பட்டார்கள் - மரங்கள் பக்குவம் அடைந்தவையாக உண்டாக்கப் பட்டன, மற்றும் ஆதாம் ஒருவேளை 20 வயதுடையவனாக தேவனால் உண்டாக்கப்பட்டான். தேவனுடைய செயல் அல்லது கட்டளை யினால் உண்டான படைப்புக்கு நீண்ட காலம் தேவைப்படவில்லை. பூமியின் உண்மையான வயதை நமக்குத் தேவன் வெளிப்படுத்தாமல் இருக்கையில், வேதாகமமானது, மனிதன் கி.மு. சுமார் 4000 ஆண்டில் படைக்கப்பட்டிருப்பான் என்று கூறுகிறது, எனவே பூமியின் வயது 6000த்திலிருந்து 10000 ஆண்டுகளுக்கு இடையில் இருக்கலாம். கடந்த இருபது ஆண்டுகளில் நிலவைப் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், விண்கற்களிலிருந்து எழும்பிய சிறு அளவிலான வான் பொருட்களின் தூசிகளைச் சுட்டிக்காண்பித்துள்ளன, இது நமது அண்டம் மிகவும் வயதானதல்ல என்று சுட்டிக்காண்பிக்கிறது.

– **படைப்பு பற்றிய மற்ற கண்ணோட்டங்களின் குறிப்பு:**

சில கிறிஸ்தவர்களும், அவிசுவாசிகளும் ஆதி. 1ன் நாட்கள் என்பவை உண்மையில் 24 மணிகள் கொண்ட நாட்களல்ல என்றும் அவை பூமி யையும் மனிதனையும் தேவன் படைத்த நீண்ட கால வேளைகள் என்றும் கூறும் கோட்பாட்டைப் பற்றிக் கொண்டுள்ளனர். இந்தக் கண்ணோட்டங்கள் எதுவும் வேதாகமத்தின் ஆதாரத்தைக் கொண்டிருப்பதில்லை, ஆனால் அவர்கள் வேதாகம வசனப் பகுதி களை அறிவியல் கோட்பாடுகளுக்கு இசையச் செய்து இன்னும் இவற்றைப் போதிக்கின்றனர்.

<u>மாற்றுக் கருத்துக் கொண்ட நாள் - காலக் கோட்பாடு</u>

இந்தக் கண்ணோட்டமானது **ஆதியாகமத்தி**ன் 6 நாட்களும் உண்மை யில் 24 மணிகள் கொண்ட நாட்களாகவே உள்ளன, ஆனால் ஒவ்வொரு நாளும், தாவரங்கள் மற்றும் விலங்குகள் மற்றும் புதைபொருள்படிமங்களின் வளர்ச்சிக்கு அனுமதிக்கும் கோடிக் கணக்கான ஆண்டுகள் கொண்ட புவியியல் காலத்தினால் பிரிக்கப் பட்டுள்ளது என்று போதிக்கின்றது. இவ்விதமாக காலம் என்பது ஒரு உண்மையான நாளுக்கும் புவியியல் காலத்துக்கும் இடையில் மாற்றாக செயல்படுகிறது.

<u>நாள் - காலம் கோட்பாடு</u>

இந்தக் கண்ணோட்டமானது, ஆதியாகமத்தின் ஆறு நாட்களும் உண்மையான 24 மணிகள் கொண்ட நாட்கள் அல்ல ஆனால் தேவன் தமது படைப்புத் தொழிலைச் செய்த நீண்ட புவியியல் காலங்களாக உள்ளன என்று போதிக்கிறது.

<u>ஏதேன் மட்டுமே என்ற கோட்பாடு</u>

இந்தக் கண்ணோட்டமானது, ஆதியாகமம் என்பது 6 உண்மையான நாட்களில் மட்டும் நடைபெற்ற ஏதேன் தோட்டத்தின் படைப்பு பற்றிய விசேஷித்த விபரமாகும், அதே வேளையில் பூமியின் பிற பகுதிகளும் மனித இனமும் கோடிக்கணக்கான ஆண்டுகள் காலத்தில் வளர்ச்சி பெற்றன என்று போதிக்கிறது.

வெளிப்படுத்துதல் நாட்கள்

இந்தக் கண்ணோட்டமானது, படைப்பு கோடிக்கணக்கான ஆண்டு களாக நடைபெற்றது, ஆனால் ஆதியாகமத்தின் விபரமானது தேவன் தாம் செய்திருந்தவற்றை 6 உண்மையான நாட்களில் மோசேக்கு வெளிப்படுத்திக் கூறிய நாட்களாய் உள்ளன என்று போதிக்கிறது.

இடைவெளி கண்ணோட்டம்

*இந்தக் கண்ணோட்டமானது புவியியல் சார்ந்த யுகங்கள் நிகழ்ந்த காலமான ஒரு பெரிய இடைவெளியானது **ஆதி. 1:1** மற்றும் **1:2** ஆகிய வற்றிற்கு இடையே உள்ளது என்று போதிக்கிறது. **ஆதி. 1:1** படைப்பின் முழுமுதல் தொடக்கம் பற்றி எடுத்துரைக்கிறது ஆனால் **ஆதி. 1:2**, ஆதாமுக்கு முந்திய யுகம் என்று யூகிக்கப்படுகின்ற அல்லது சாத்தானுக்கு தேவன் நியாயத் தீர்ப்பை விதித்த பின்பு படைப்பு மீளக்கட்டப்பட்ட விஷயத்தை எடுத்துரைக்கிறது. ஒழுங்கின்மையும் வெறுமையும் என்ற வார்த்தைகள் கை விடப்பட்ட மற்றும் வீணான என்று அர்த்தப்படும் நியாயத் தீர்ப்பின் வார்த்தைகளாக உள்ளன. ஆனால் வசனப் பகுதியானது, ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் என்பதற்குள்ள ஒரு இடைவெளியானது, **ஆதி. 1** மற்றும் **2** எடுத்துரைக் கின்றபடியாக தேவன் அதனை வடிவமைத்து நிரப்புவதற்கு முன்பு இருந்த நிலை பற்றி விவரிக்கும் சூழ்நிலைகளைக் கவனிக்கும்/ உதவும் பெயர்ச் சொற்களாய் உள்ளன என்று நேரடியாகவோ அல்லது மறைமுக மாகவோ குறிப்பிடுவதில்லை. (**ஏசா. 45:18**ஐயும் காணவும்)*

படைப்பு பற்றிய பிற கண்ணோட்டங்கள் யாவையும் இல்லாவிடினும், அவற்றில் பெரும்பான்மையானவை கொண்டுள்ள உண்மைப் பிரச்சனை யானது பின்வருமாறு மும்மடங்கானதாக உள்ளது:

1. *வேதாகம வசனப் பகுதிகள் இவற்றைப் பலமாக ஆதரிப்பதில்லை.*
2. *தேவனுடைய இயற்கைக்கு மேலான அற்புதமான வல்லமை மீதுள்ள விசுவாசக் குறைவை இவை வெளிப்படுத்துகின்றன.*
3. *வேதாகமத்தை இவை உடன்படச்செய்து அதனை (வேதாமத்தை) மனிதக் கண்ணோட்டங்களுக்கு, வரையறைக்குட்பட்ட அறிவுக்கும் பொருந்தி வருமாறு செய்ய முயற்சிக்கின்றன.*

பயிற்சி: *உலகின் படைப்பு பற்றி நாம் விசுவாசிப்பது/நம்புவது என்ன என்பதைத் தீர்மானிப்பதற்கு அடிப்படையாக இருக்க வேண்டியது எது?*

____

____

____

____

– **மனிதனின் படைப்பு/மனிதன் படைக்கப்பட்ட விஷயம்**

தேவன் மனிதனைப் படைத்தார் என்று வேதாகம வசனம் வெளிப்படுத்துகின்றது.

ஆதி. 2:7
"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்."

- **உடனடியாக**
- **இயற்கைக்கு மேலான வகையில்** - ஆதாம் பூமியின் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டான் மற்றும் ஏவாள் ஆதாமில் இருந்து உருவாக்கப்பட்டாள்.
- அவனுக்குள் ஜீவ சுவாசத்தை ஊதுதல் என்ற **விசேஷித்த செயலினால்** உயிர் மட்டுமே உயிரை உண்டாக்க முடியும்.
  ஏசா. 42:5
  தானி. 5:23
  அப். 17:25
  1 கொரி. 15:45
  யோவா. 1:3-4

குறிப்பு: ***ஆதி. 1*** தேவனுக்கு ஏலோஹிம் என்பதைப் பயன்படுத்துகிற, படைப்பைப் பற்றிய பொதுவான விபரமாய் இருக்கையில், ***ஆதி. 2,*** ஆறாம் நாளின் மீதும் மற்றும் மனிதன் படைக்கப்பட்ட விபரத்தின் மீதும் கவனம் செலுத்துகிற குறிப்பிட்ட விபரமாக உள்ளது, மேலும் இது தேவனை யெகோவா (கர்த்தர்) என்று குறிப்பிடுகிறது. இவைகள் முரண்படுவதில்லை,"ஆனால் ஒன்றுக்கொன்று நிறைவு செய்கின்றவைகளாய் உள்ளன.

வேத வசனத்தின் பிற சாட்சியங்கள் பின்வருமாறு:

- ஆதாமும் ஏவாளும் **உண்மையான** தனித்தனி மக்களாய் இருந்தார்கள்
  ஆதி. 4:1
  ஆதி. 5:5
  லூக். 3:38
  ரோமர் 5:14
  1 கொரி. 15:22
  1 கொரி. 15:45
  1 தீமோ. 2:13-14

ஏவாள், ஆதாமில் இருந்து சிறப்பான வகையில் படைக்கப்பட்டாள் என்பதைக் கவனியுங்கள்.

ஆதி. 2:20-23

- *மனிதன் படைக்கப்பட்டது தற்செயலாய் அல்ல ஆனால் நோக்கம் நிறைந்த வகையில் நடந்தது.*
  சங். 8:1-9

தேவன் பின்வரும் நோக்கங்களுக்காக மனிதனைப் படைத்தார்:

- *தேவனுடன் ஐக்கியமாய் இருப்பதற்காக.*
  ஆதி. 3:8; ஆதி. 5:24; 1 யோவா. 1:3
- *பூமியை ஆளுகை செய்வதற்காக*
  ஆதி. 1:26
- *பூமியெங்கும் பரம்புவதில்/செல்வதில் அவனுக்கு அர்த்தம் மிக்க பணியளிப்பதற்காக.*
  ஆதி. 2:4-5, 15
- *அவரை ஆராதிப்பதற்காக*
  ஆதி. 4:4; 4:26; 6:8-9
- *அவரை மகிமைப்படுத்துவதற்காக*
  சங்க. 34:1-3; வெளி. 5:13
- *தேவனுடைய சாயலாக*
  ஆதி. 1:26, 27

– ***மனிதன் தேவனுடைய சாயலாகவே படைக்கப்பட்டான்***

மனிதன் தேவனுடைய சாயலாகவும், ரூபத்தின்படியேயும் படைக்கப் பட்டான் என்று கூறுவது அவர் ஒரு மாம்சப் பிரகாரமான உடல் கொண்டுள்ளார் என்று அர்த்தப்படுத்துவதில்லை, ஏனெனில் அவர் சாராம்சத்தில் ஆவியாகவே உள்ளார் (யோவா. 4:23-24) ஆனால் மனிதன் தேவனால் தேவனுடைய ஒழுக்கத்தின், ஆவியின் சாயலில் படைக்கப்பட்டான்.

எனவே தேவனால் படைக்கப்பட்ட மனிதன் சில வழிமுறைகளில் தேவனைப் பிரதிபலிக்கிறான்.

தேவனுடைய சாயலில் என்பதில் பல திறவுகோல் கருத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- *மனிதன் என்பவன் ஒரு இயல்பான சரீரத்தில் வாழ்கின்ற ஆவிக்குரிய ஜீவியாக இருக்கிறான். இயல்பான உடல் நல்லதாகவே உள்ளது **(ஆதி. 1:31)** ஆனால் அது நிறைவாகத்தேவனுடன் தக்க வகையில் உறவுபடுத்தப்படுவதற்கு மீட்கப்படுதலும் மகிமைப் படுத்தப்படுதலும் அவசியமாகும். **(1 கொரி. 15:42-54)***

- மனிதன் ஆளுமைத் தன்மையை - சிந்தை, சித்தம் மற்றும் உணர்வுகள் ஆகியவற்றை - கொண்டவனாக இருக்கிறான்.
- மனிதன் தேவனுடன் செய்தித் தொடர்பு கொள்ளவும் உரையாடவும் திறன் கொண்டுள்ளான்.
- மனிதன் என்பவன்,

உறுதிப்படுத்தப்படாத ஒன்றும் அறியாமை

அல்லது

சோதித்தறியப்படாத பரிசுத்த தன்மை

என்பதன் நிலை அல்லது நிபந்தனை என்று விவரிக்கப்பட்டுள்ள வகையில் படைக்கப்பட்டான்.

இவ்விதமாக ஆதாமும் ஏவாளும் நன்மையை அல்லது தீமையைச் செய்வதைத் தேர்ந்து கொள்ளக் கூடிய திறமையுள்ளவர்களாகப் படைக்கப்பட்டார்கள்; தேவனுக்குக் கீழ்ப்படிவதா அல்லது கீழ்ப் படியாமல் போவதா என்பதை அவர்கள் தேர்ந்து கொள்ள முடிந்தது. மற்றும் தேர்ந்து கொள்வதற்கான அந்தத் திறமையானது பாவத்திற்கான சாத்தியக்கூறாக இருந்தது. ஆனால் தேவனுடைய படைப்பு யாவும் மகிமையுள்ளதாக இருந்தது, அது மிகவும் நல்லது என்று தேவனாலேயே அறிவிக்கப் பட்டிரிந்தது. படைப்பு என்பது பிரச்சனையாக இருந்ததில்லை - ஆனால் மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் பாவம் செய்யத் தேர்ந்து கொண்டதே உண்மை யான பிரச்சனையாயிற்று.

கடைசியாக, ஒருவர், படைப்பைப் பற்றி வேதாகமத்தில் தேவன் வெளிப்படுத்தியுள்ளதை விசுவாசிக்கும்படியாகவோ

அல்லது

படைப்பைப் பற்றி மனிதன் கனவு கண்டுள்ளவற்றை விசுவாசிக்கும்படியாகவோ தேர்ந்து கொள்ள வேண்டியதாக உள்ளது.

இவ்விரண்டில் எதற்கு அதிகமான விசுவாசம் தேவைப்படுகின்றது?

பயிற்சி: ஆதி. 2:7ஐ வாசிக்கவும். இந்தத் திறவுகோல் வசனம் மனிதன் படைக்கப்பட்டது பற்றி போதிப்பது என்ன? இது பரிணாமக் கொள்கையை ஆதரிக்கின்றதா?

____

____

____

____

ஆ. மனிதனின் இயல்பு

1. அறிமுகம்

மனிதன் என்பவன் ஒருமைப்பட்டவனாக, தனித்தனியான பகுதிகளாய்ப் பிரிக்கப்பட முடியாதவனாக இருக்கையில், மனிதன் குறைந்தபட்சம் இரண்டு அடிப்படை அம்சங்களைக் கொண்டுள்ளதாக வேதாகமம் போதிக்கின்றது.

- பொருள் சார்ந்த (இயல்பான/உடல் ரீதியான) பகுதி/அம்சம்
- பொருள் சாராத (ஆவிக்குரிய) பகுதி/அம்சம்
  மற்றும், மனிதனின் பொருள் சாரா அம்சமானது சில வேளைகளில் பின்வரும் இரண்டு அம்சங்களாக வேறுபடுத்தப் படுகின்றது: ஆவி மற்றும் ஆத்துமா.

எனவே மனிதன் என்பவன், **உடல், ஆத்துமா, ஆவி** என்ற 3 அம்சங்களின் ஒருமைப்பட்ட ஜீவியாகக் காணப்படுகிறான் **(1 தெச. 5:23)**

நமது நோக்கங்களுக்காக, மனிதனில் உள்ள இந்த 3 அம்சங்களையும் நாம் பின்வரும் எளிய சொற்றொடர்களில் நினைத்துப் பார்க்கலாம்.

ஆவி = ஒருவரை உயிருடன் இருக்கச் செய்யும் உயிர்க் கொள்கை
(தூண்டுதல் மற்றும் சக்தியூட்டுதல்)

ஆத்துமா = ஆளுமைத் தன்மை (சிந்தை, சித்தம், உணர்வுகள்)

உடல் = ஆவி/ஆத்துமா வெளிப்படுத்தப்படுகிற இயல்பான பாத்திரம்

ஆனால், மனிதனின் பொருள் சார்ந்த மற்றும் பொருள் சாராத அம்சங்களுக்கிடையில் உள்ள வேறுபாடுகள் பொருட்படுத்தப்படாமல், மனிதனின் (உடல், ஆத்துமா மற்றும் ஆவி என்ற) மூன்று அம்சங்களுமே மீட்புக்குத் தேவையானவையாகவும், உட்படும் பாடக் கருத்தாகவும் உள்ளன.

2. <u>மனிதனின் பொருள் சார்ந்த அம்சங்கள்</u>

- சரீரம்/உடல் அல்லது மாம்சம்

  தேவன் பூமியின் மண்ணிலிருந்து மனிதனை உண்டாக்கினார், அவனுக்கு ஒரு உடலை வடிவமைத்தார். **ஆதி. 2:7**

  மனிதனின் உடலானது,
  "மண்ணுக்குரியது"
  "அழியக் கூடியது"
  "இயல்பானது"
  "சாவுக்கேதுவானது"
  என்று அழைக்கப்படுகின்றது **(1 கொரி. 15:40-54).**

ஒரு "கூடாரம்"	**2 கொரி. 5:4**
ஒரு "மண் பாத்திரம்"	**2 கொரி. 4:7**
"மாம்சம்" (உடல்)	**யோவா. 1:14**
	2 கொரி. 12:7 என்று(ம்) அழைக்கப்படுகின்றது.

குறிப்பு: மாம்சம் என்பது வழக்கமாக இயல்பான உடலைக் குறிப்பிடுவதாய் இருக்கையில் இது சில வேளைகளில் மனிதனின் பாவம் நிறைந்த இயல்பை (**ரோமர் 8:4-6**ல் மாம்சம் என்பது பாவம் நிறைந்த மனிதன் அல்லது பாவ இயல்பு என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) அல்லது நமது பலத்தை நம்பி இருத்தல் (**பிலி. 3:3-4)** என்பதையும் குறிக்கின்றது. மாம்சம் என்பது உடலைக் குறிக்கிறதா அல்லது பாவ இயல்பைக் குறிக்கிறதா அல்லது தனது சுய பலத்திலும் சக்தியிலும் செயல்படும் மனிதனைக் குறிக்கிறதா என்பதை சந்தர்ப்பப் பொருள்தான் தீர்மானிக்கும்.

எனவே உடல் என்பது மனிதனின் நபர்த்துவத்தை குடியிருக்கச் செய்வதற்கு தேவன் உண்டாக்கிய இயல்பான ஒரு வாகனமாக மட்டுமே உள்ளது. விசுவாசிகளின் சரீரம் என்பது பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாய் இருப்பதற்கும் போதிய அளவு தகுதியானதாகவும் உள்ளது. **1 கொரி. 6:19**

மற்றும் உடல் நல்லதாக இருக்கையில் (**ஆதி. 1:31)** மற்றும் ஜீவ விருட்சத்திலிருந்து (கனிகளை) உண்பதால் என்றென்றைக்கும் அழியாதிருக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டதாய் இருக்கையில் (**ஆதி. 3:22-24**ஐக் காணவும்), பாவத்தின் காரணமாக உடலானது மோசம் போக்கப்பட்டு அழிவுறுகிறது, மற்றும் அது தேவனுடன் தக்க வகையில், உறவுபடுவதற்கு மீட்கப்படுவதும், மகிமைப் படுத்தப்படுவதும் அவசியமாக உள்ளது. **ரோமர் 8:22-23; 1 கொரி. 15:44-54)**

விசுவாசிகளின் சரீரமும் கூட கடைசியில் கிறிஸ்துவின் மகிமையுள்ள சரீரத்திற்கு ஒப்பாக உயிர்த்தெழுதலில் மறுரூபப்படுத்தப்படும். **பிலி. 3:20-21**

அவிசுவாசிகளின் உடல்களும் கூட உயிர்ப்பிக்கப்படும், ஆனால் அவை மகிமைக் கென்றல்ல ஆனால் கனவீனத்திற்கென்றே உயிர்ப்பிக்கப்படும். **யோவா. 5:28-29; வெளி. 20:5, 11-15**

நிறைவில் மனிதனின் உடலானது, உடல் ரீதியான நிலையை விட அதிகமாக ஆவிக்குரிய நிலையை அடையும்.

பயிற்சி: இப்படிப்பட்ட அழிவுக்குட்படும் உடலில் மனிதனை வைக்கத் தேவன் தேர்ந்து கொண்டது ஏன்?

____

____

____

____

3. <u>மனிதனின் பொருள் சாராத அம்சங்கள்</u>

மனிதனின் ஆத்துமாவுக்கும் மனிதனின் ஆவிக்கும் இடையில் வேறுபடுத்துதல் என்பது மிகவும் கடினமானதாக உள்ளது. தேவனுடைய வசனமானது ஆத்துமா மற்றும் ஆவி ஆகியவற்றுக்கிடையில் உள்ள வித்தியாசங்களை பிரித்து வகையறுக்கக் கூடும் என்றாலும், நாம் அவற்றை விவரிக்க மட்டுமே முடியும். **எபி. 4:12**

- **ஆவி** - ஆவி என்பது உயிராய் உள்ளது - ஒருவரை உயிருடன் இருக்கச் செய்யும் ஒரு கொள்கையாக உள்ளது. உடல்ரீதியான மரணம் என்பது ஆவி உடலில் இருந்து பிரிதல் என்பதாக உள்ளது.
  யாக். 2:26
  யோவா. 19:30, 33
  லூக். 8:53-55

  மனிதனின் ஆவியானது, சாவாமையுள்ளது என்று தெளிவாகக் காணப் படுகையில்,
  நீதி. 2:18
  ஏசா. 14:9
  ஒரு மனிதன் தேவனிடத்திலிருந்து "புதிய ஆவி"யைப் பெறுகின்ற பொழுதுதான் அவன் தேவனுடன் என்றென்றைக்கும் சரியான வகையில் உறவுபட முடியும். **எபி. 12:23**

  மீட்பில், விசுவாசிகள் ஒரு "புதிய ஆவியை" பெறுகின்றனர் மற்றும் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள்ளாக வந்து வாசம் பண்ணுகின்றார்.
  எசே. 36:24-27
  யோவா. 14:16-18
  2 கொரி. 3:1-6
  ரோமர் 8:9-11

  பழைய ஆவியானது புதிய ஆவியினால் இடப் பெயர்ச்சி செய்யப்படுகிறது மற்றும் பரிசுத்த ஆவியானவர் விசுவாசிக்கு நித்திய வாழ்வை அளிக்கின்றார்
  கலா. 6:8
  லூக். 11:13
  ரோமர் 6:23
  அப். 2:38

- **ஆத்துமா** - சிந்தை, சித்தம் மற்றும் உணர்வுகள் ஆகிவற்றை உள்ளடக்குகிற மனிதனின் நபர்த்துவம் முழுமையும் ஆத்துமாவாக உள்ளது. மனிதன் ஆவியை உடையவனாய் இருக்கும் அதே வேளையில் ஒரு ஆத்துமாவாகவும் இருக்கின்றான்.

  ஆத்துமா என்பது மனிதனின் இருப்பு மற்றும் நபர்த்துவம் முழுமையையும் வெளிப்படுத்துகிறது:
  உபா. 6:4-5
  1 சாமு. 1:15
  சங். 34:2
  சங். 42:1
  மத். 10:28

மத். 11:29
மத். 16:26
மத். 22:37

மற்றும் மனிதனுடைய ஆத்துமாவே மீட்பின் கருப்பொருளாக உள்ளது.
எசே. 18:4
சங். 62:1
1 பேது. 1:8-9
1 பேது. 2:24-25

மீட்பின்போது மனிதனின் ஆத்துமாவானது தகுதி நிலைக் கருத்தில் பரிபூரணமாக்கப்படுகிறது, ஆனால் நடைமுறையில் பேசும் பொழுது, அதன் சிந்தை, சித்தம் மற்றும் உணர்வுகள் ஆகியவை பரிசுத்தப்படுத்தப் பட வேண்டியவைகளாய் உள்ளன.

மனிதனின் ஆவியும் ஆத்துமாவும் பிரிக்கப்பட முடியாதவைகளாக அல்லது இருப்பில் ஒழிக்கப்படக் கூடாதவைகளாக உள்ளன - அவைகள் வேறுபடுத்திக் காணப்பட மட்டுமே முடியும்.

பிற சொற்றொடர்கள்

- ***இருதயம்*** *- வேத வசனத்தில் இருதயம் என்பது இரத்தத்தைச் செலுத்துகின்ற உடல்ரீதியான உறுப்பாகக் குறிப்பிடப்படலாம், ஆனால் மிகவும் அடிக்கடி இது,*
  - *மனிதனின் உணர்வுகள், பிரியம், உணர்வெழுச்சிகள் மற்றும் சித்தம் ஆகியவற்றின் மையம்*
  - *மனித இருப்பின் முழுமைத்துவம்*
  - *உள்ளான மனிதன் ஆகியவற்றைக் குறிக்கிறது.*

ரோமர் 9:2
ரோமர் 10:9-10
எபி. 12:3

"இருதயம்" என்பது ஆத்துமாவிற்குரிய கருத்துக் கூறும் இன்னொரு சொல்லாக(வும்) உள்ளது மற்றும் இது தன்னிலே பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட வேண்டும்.
ரோமர் 2:29; மாற். 7:20-23; எரே. 17:9

உணர்வெழுச்சிகள் அல்லது உணர்வுகள் *என்பவை வழக்கமாகச் சூழ்நிலைகளின் அடிப்படையில் உள்ளன மற்றும் வாழ்வின் உண்மை நிலைக்கும் தேவனுடைய வசனத்தின் சத்தியத்திற்கும் ஏற்ற வகையில் அவை உருமாற்றப்பட வேண்டும்.*
நீதி. 23:35
தானி. 8:23-25

- **சிந்தை** - இதுவும் மனிதனுடைய ஆத்துமாவின் ஒரு அம்சமாக உள்ளது இது, சிந்தித்தல், உணர்வு, புரிந்து கொள்ளுதல், விசுவாசித்தல், பகுத்துணருதல் ஆகியவற்றுடன் தொடர்பு படுத்தப்படுகின்றது.

  சிந்தையானது மோசம் போக்கப்பட்டுள்ளது மற்றும் இது ஆவியினாலும் வசனத்தினாலும் புதுப்பிக்கப்பட வேண்டும்.
  ரோமர் 1:28-29
  ரோமர் 8:5
  ரோமர் 12:2
  எபே. 4:23
  விசுவாசி கிறிஸ்துவின் சிந்தையைக் கொண்டுள்ளார் ***1 கொரி. 2:16***

- **சித்தம்** - இது தேர்ந்து கொள்ளுதல் மற்றும் முடிவெடுத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய மனித ஆத்துமாவின் அம்சமாக உள்ளது. இது மனிதனின் அடைவிடத்தை முடிவு செய்கின்ற தேர்ந்து கொள்ளும் (சுயாதீன சித்தம்) உரிமையைச் செயல்படுத்துவதாக உள்ளது.
  யோசுவா 24:14-15
  யோவா. 7:17
  1 கொரி. 7:37
  யாக். 4:4
  ஏசா. 66:2-4

  கிறிஸ்துவினுடைய சித்தம் போன்றே மனிதனுடைய சித்தமும் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தப்பட வேண்டும்.
  யோவா. 6:38-40
  லூக். 9:23-24

- **மனச்சான்று** - இது சரியானது மற்றும் தவறானது என்ன என்று அறிந்து கொள்ளுதலுடன் தொடர்புடைய மனித ஆத்துமாவின் உள்ளான உட்சார்புடைய அம்சமாக உள்ளது.
  1 சாமு. 24:5-7
  ரோமர் 2:12-15

  தேவனுடைய ஆவி மனிதனின் மனச்சான்றை பாவத்திற்குக்குணர்வுடையதாக உயர்த்துகிறது.

  மற்றும் மனிதன் உடல் ரீதியானவனாய் இருப்பதை விட அதிகம் ஆவிக்குரியவனாய் இருக்கிறான் என்று வேத வசனம் போதிக்கின்றது. மனிதனின் ஆவி/ஆத்துமா என்பதே மகிமையுள்ள வசனத்துக்குரிய உடல் ஒன்றில் தேவனுடன் என்றென்றைக்கும் வாழும்.

  தேவன்,
  நமது ஆவியை **மாற்றுவார்**
  நமது உடலை **மீட்டு** மகிமைப்படுத்துவார்
  நமது ஆத்துமாவைப் (சிந்தை, இருதயம், சித்தம், உணர்வுகள் ஆகியவற்றைப்) **புதுப்பித்து** பரிசுத்தமாக்குவார் அதனால் நாம் கிறிஸ்துவுக்குள் ஒரு புதுப்படைப்பாகவே இருப்போம்.
  2 கொரி. 5:16-17

இ. மனிதனின் வீழ்ச்சி

தேவனால் படைக்கப்பட்ட (வேளையில்) மனிதன் நல்லவனாகவே இருந்தான் - சொல்லப் போனால், உண்மையில் மனிதன் தேவனுடன் தக்க வகையில் உறவுபடும் மற்றும் ஐக்கியம் கொள்ளும் வகையிலேயே படைக்கப் பட்டிருந்தான். மற்றும் **ஆதி.** ***3***க்கு முற்பட்ட காலத்தில் ஆதாமும் ஏவாளும் பாவம் செய்யாதிருந்தனர் என்பது தெளிவாக உள்ளது. படைப்பைத் தொடர்ந்து ஒரு சில காலத்திற்கு ஆதாமும் ஏவாளும் ஒருவர் மற்றவருடனும், தேவனுடனும் முறிவு படாத ஐக்கியத்தை மகிழ்வுடன் அனுபவித்திருந் தார்கள்.

என்ன நடந்தது? **ஆதி.** ***3*** பதிலைத் தருகின்றது.

- <u>மனிதனின் தொடக்க நிலை</u>

  தேவனால் மனிதன் உறுதிப்படுத்தப்படாத அறியாமையுடன் அல்லது சோதித்தறியப்படாத பரிசுத்தத்துடன் இருக்கும் நிலையில் படைக்கப் பட்டான். மனிதனுடைய கீழ்ப்படிதலும், அவன் தேவனை ஆராதிக்கவும் அர்த்தம் நிறைந்ததாய் இருப்பதற்கு அது மனப்பூர்வமானதாக இருக்க வேண்டியதாயிற்று.

  ஆகையால் தேவன்,

  - மனிதனுக்குள், நன்மை அல்லது தீமையைச் செய்தல் தேவனுக்குக் கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாதிருத்தல், பாவம் செய்தல் அல்லது பாவம் செய்யாதிருத்தல், ஆகியவற்றைத் தேர்ந்து கொள்ளுதல் என்ற திறனை (சுயாதீன சித்தத்தை) வைத்தார்.
  - ஒரு கட்டுப்பாடு (தடை, சட்டம், கட்டளை) உள்ள இடத்தில் அவனை வைத்து, அந்தக் கட்டுப்பாட்டை மனிதனிடம் தெளிவாக அறிவித்தார். தேவன் ஒரு தெரிவைக் கொடுக்கும்போது மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படிவதைத் தேர்ந்து கொள்வானா என்று முடிவு செய்வதற்காக தேவனுக்கு மனிதனின் கீழ்ப்படிதலைச் சோதித்தறியும் வகையில் இந்தக் கட்டுப்பாடு வடிவமைக்கப்பட்டிருந்தது.

    இந்தக் கட்டுப்பாடு **ஆதி.** ***2:16-17***ல் முன் வைக்கப்பட்டுள்ளது:

    தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.
  - தோட்டத்தின் எந்த மரத்திலிருந்தும் (கனியைப்) புசிக்கும் முழுமையான சுதந்திரத்தை மனிதனுக்குக் கொடுத்தார்.
  - கீழ்ப்படியாமையின் விளைவுகளைப் பற்றி மனிதனை எச்சரித்தார்.

- <u>மனிதன் சோதனைக்கு உட்படுதல்</u> (**ஆதி.** ***3:1-5***)

  ஆதி. ***3***க்கு முன்பே, சாத்தான் பாவம் செய்திருந்தான் மற்றும் வீழ்ந்து போயிருந்தான், தேவன் மனிதனின் கீழ்ப்படிதலைத் தாம் சோதிக்கும் கருவியாய் இருக்கும்படி சாத்தானை அனுமதித்தார். (**வெளி.** ***12:7-10***ஐக் காணவும்)

சாத்தான் ஒரு சர்ப்பத்தின் (மின்னுகின்ற நேராய் நிற்கும் உயிர்) வடிவத்தை எடுத்து ஏழாளை எதிர்கொண்டான்

சாத்தான்,

- தேவனுடைய வசனத்தின் சத்தியத்தைப் பற்றி சந்தேகங்கள் எழுப்பினான்.
- தேவனுடைய வசனத்திற்கு முரண்பட்டான்.
- தேவனுடைய நற்தன்மை மற்றும் நோக்கம் குறித்துக் கேள்வி கேட்டான்.
- பாதி உண்மையை (அதாவது முழுமையான பொய்யைக்) கூறி ஏவாளைச் சோதித்தான்.

- வீழ்ச்சி **(ஆதி. 3:6)**

ஏவாள்,

- ஏவாள் சாத்தானின் சோதனையிலும் மாம்சத்திலும் இச்சை மற்றும் விருப்பத்திலும், ஜீவனத்தின் பெருமையிலும் விழுந்து போனாள் (**1 யோவா. 2:15-17**ஐக் காணவும்).
- ஆதாமுக்கும் கனியைக் கொடுத்தாள், அவனும் உண்டான்.

ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள் **(2 கொரி. 11:3)** ஆனால் ஆதாம் அறிந்த நிலையிலேயே உண்டான் (**1 தீமோ. 2:11-14**ஐக் காணவும்) என்று வேத வசனம் கூறுகின்றது. இருவருமே பாவத்தினால் குற்றப்பட்டனர் ஆனால் தலை என்ற வகையில் ஆதாம் அதிகம் பொறுப்புடையவனாய் இருந்தான் (**ரோமர் 5:14; 1 கொரி. 15:22**ஐக் காணவும்).

தெரிவு ஒன்று தரப்பட்டிருந்த பொழுது, சோதிக்கப்பட்டதினால் ஆதாமும் ஏவாளும் ஆகிய இருவருமே பாவத்தின் செயலைச் செய்தனர், அது அவர்களைப் பாவ இயல்புள்ளவர்கள் ஆக்கிற்று (**ரோமர் 5:18-19**).

சுயாதீன சித்தத்தை (சரியானது அல்லது தவறானதைத் தேர்ந்து கொள்ளும் உரிமையை) செயல்படுத்தியதன் மூலமாக பாவம் இந்த உலகில் நுழைந்தது (**ரோமர் 5:12-14**).

பாவம் சாத்தானுக்குள் கண்டறியப்பட்டது (எசே. 28:15-16) மற்றும் இப்பொழுது அது தன் வழியில் மனிதனுக்குள் செயல்பட்டுக் கொண்டுள்ளது. சாத்தானுடைய பாவமானது மற்றவர்களை எதிர் வகையில் பாதித்தது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாகவே ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரின் பாவமும் பிறரை எதிர் வகையில் பாதிக்கின்றது.

பாவத்திற்கு பெருமையே - அதாவது நீங்கள் உங்கள் தேவனாக இருக்க விரும்புதல் என்பதே அடிப்படையாக உள்ளது. வஞ்சித்தல் என்பது பாவத்தின் பிரதான குணமாய் உள்ளது.

பாவம் என்பது மகிழ்வு, சந்தோஷம், திருப்தி, மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை வாக்களிக்கிறது, ஆனால் சலிப்பு, குற்ற உணர்வு, அடிமைத்தளை, மரணம் மற்றும் அழிவு ஆகியவற்றையே கொடுக்கின்றது.

<u>வீழ்ச்சியின் விளைவுகள்</u> **(ஆதி. 3:7-24)**

- பாவமானது ஆதாம் ஏவாளின் ஒன்றுமறியாத ஒழுக்கத்தன்மையை **(3:7)** சீரழித்துப் போட்டது, மற்றும் இவ்விதமாக மனிதனில் இருந்த தேவ சாயலைக் கெடுத்துப் போட்டது/மோசம் போக்கிற்று.
- பாவமானது பரிசுத்த தேவனுக்கும் பாவம் நிறைந்த மனிதனுக்கும் இடையில் பிரிவினைக்குக் காரணமாயிற்று மற்றும் தேவனுடனான அவர்களின் ஐக்கியத்தை முறித்துப் போட்டது (**ஆதி. 3:8-10, 23-24** மற்றும் **ஏசா. 59:1-2**ஐயும் காணவும்).
- பாவமானது தேவன் வாக்களித்திருந்தபடியாகவே அவரது விரைவான நியாயத் தீர்ப்பைக் கொண்டு வந்தது. சாத்தான் பொய்யுரைத் திருந்தான் - தேவனோ சத்தியத்தை உரைத்திருந்தார்!
- பாவமானது படைப்பு முழுமையும் சாபத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கக் காரணமாயிற்று.

<u>வீழ்ச்சியின் விளைவாக நியாயத் தீர்ப்புகள்</u> **(ஆதி. 3:14-24)**

தேவனுடைய நியாயத் தீர்ப்புகள் (3:14-19)

தேவனால் அறிவிக்கப்பட்ட நியாயத் தீர்ப்புகள் படைப்பின் அமைவில் பல்வேறு அம்சங்களுக்கிடையே வரிசையான முரண்பாடு களை இயக்கத்தில் அமைத்து வைத்தது. அமைவும், ஒருமைப்பாடும் மற்றும் பரிபூரண இசைவும் இருந்த இடத்தில் இப்பொழுது கூச்சலும், விரோதமும் ஒருமைப்பாடின்மையும் உண்டாகியிருந்தது.

நியாயத் தீர்ப்புகள் பல்வேறு விரிவான வகைகளாகப் பிரிக்கப்பட முடியும்:

விலங்குகளின் மீது, விசேஷமாக சர்ப்பங்களின் மீது சாபம் (3:14-15)

மனிதனின் வீழ்ச்சியில் சர்ப்பத்தின் பங்கு காரணமாக உயிர் வாழும் பிராணிகளாகப் படைக்கப்பட்ட அமைவு முழுமையும் நியாயந் தீர்க்கப்பட்டது. எல்லா விலங்குகளும் சபிக்கப்பட்டன (கால் நடை) ஆனால் சர்ப்பமானது ஒளிமிக்க, நேராய் நிற்கும் உயிரினமாய் இருத்தலில் இருந்து தரையில் ஊர்ந்து சென்று மண்ணை உண்பதும் மனிதனுக்கு எப்பொழுதும் எதிரியாய் இருப்பதுமான அருவருப்பான உயிரினமாயிற்று.

சாத்தானின் மீது சாபம் (3:15)

ஸ்திரீயின் வித்து (**கலா. 3:16**) என்ற வகையில் கிறிஸ்து சிலுவையில் சாத்தானுக்கு மரண அடி கொடுப்பார் அவனோ கிறிஸ்துவை உடல் ரீதியான மரணம் என்ற வகையில் மட்டுமே காயப்படுத்த முடியும் என்று தேவன் சாத்தானின் கடைசித் தோல்வியைக் குறித்தும் இவ்விடத்தில் அவனை சபித்தார். இவ்விடத்தில் தேவன் முதன் முறையாக சுவிசேஷத்தை அறிவித்தார் (முதல் சுவிசேஷ ஊழியம்). சாத்தான் மனினுக்கும் கிறிஸ்துவுக்கும் சாவுக்கேதுவான விரோதியாய் இருப்பான். நித்தியமான நிலை வரையிலும் நன்மைக்கும் தீமைக்கும் இடையில் போராட்டம் இருந்து கொண்டேயிருக்கும்.

ஏவாளின் மீது சாபம் (3:16)

இனப் பெருக்கத்திற்கென்றே தேவன் பெண்ணைப் படைத்து பலுகிப் பெருகும்படி ஏவாளுக்கு அவர் கட்டளையிட்டிருந்தாலும், தேவன் விதித்திருந்து அந்தப் பணியானது இப்பொழுது மிகுந்த வேதனையுடன் நிறைவேற்றப்பட வேண்டியதாய் இருந்தது. இவ்விதமாக, ஆண்களுக்கு வேலை என்பதும் பெண்களுக்கு குழந்தைப் பேற்றின் பெரிய வேதனை என்பதும் வீழ்ச்சியின் விளைவாக உள்ளது.

மற்றும் பாவத்தின் விளைவாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் முரண்பாடும் இயக்கத்தில் வைத்தமைக்கப்பட்டது. **3:16ல்** பயன்படுத்தப் பட்டுள்ளபடி ஆசை என்ற வார்த்தையானது பாலுறவு மற்றும் உணர்வெழுச்சியின் மேல் தொனியைக் கொண்டிருப்பதில்லை, ஆனால் இது பாவத்தின் இயல்பைப் பற்றி **4:7**ல் விவரிக்கப்பட்டுள்ள அதே கருத்தைக் கொண்டுள்ளது - அதன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அதனை ஆண்டு கொள்ளுவாய்

மனிதன் ஆளுகையை(கர்த்தத்துவத்தை)க் கொண்டிருப்பான் என்று தேவன் அறிவிப்பதைக் குறிப்பாய்க் கவனிக்கவும் - அவன் உன்னை ஆண்டு கொள்வான். மேலும் ஆதாம் விலங்குகளுக்குப் பெயரிட்டது போலவே **3:20**ல் பெண்ணுக்கு ஏவாள் என்று பெயரிட்டதன் மூலம் அவள் மீது தன் கர்த்தத்துவத்தைச் செயல்படுத்தினான். இருப்பினும், இயல்பான பெண் என்பவள் தனது கணவனைக் கட்டுப்படுத்த விருப்பம் கொண்டிருப்பாள், இவ்விதமாக முரண்பாடு எழுகின்றது. வீழ்ச்சிக்கு முன்னால், கீழ்ப்படிதல் என்பது ஒரு பிரச்சனையாக இருந்ததில்லை; வீழ்ச்சிக்குப் பிறகோ, ஆணுக்குப் பெண்ணின் கீழ்ப்படிதலானது மாபெரும் இறுக்கம் மற்றும் விரோதத்துடனேயே நிறைவேற்றப்பட்டது. கிறிஸ்துவுக்குள் மட்டுமே ஆவியானவரின் வல்லமையினால் கீழ்ப்படிதல் உணர்ந்தறியப்படுகின்றது.

பூமியின் மீதும் ஆணின் மீதும் நியாயத் தீர்ப்பு (3:17-19)

மனிதனின் பாவத்தினால் பூமி தன்னிலே சபிக்கப்பட்டது (**3:17**). அது தயக்கத்துடனே முட்களாகவும் குருக்குகளாகவும் தனது கனியை உண்டாக்கும். படைப்பின் இந்த பாகமும் கூட மீட்கப்பட வேண்டும்.

வீழ்ச்சிக்கு முன்பும் வேலை செய்தல் கேட்டுக் கொள்ளப்பட்டது என்றிருக்கையில் (**2:15**ஐ காணவும்), இப்பொழுது அது வருத்தத்தோடு (**3:16**ல் வேதனை என்பதற்குள்ள அதே வார்த்தை) மற்றும் முகத்தின் வியர்வையோடு செய்யப் பட வேண்டும். அது மாத்திரமின்றி, மனிதன் மண்ணுக்குத் திரும்புவான், அதாவது தேவனுடைய குறிப்பான நிியாயத் தீர்ப்பு என்ற வகையில் உடல் ரீதியாக இறந்து போவான். மற்றும் அந்த வேளையில் இருந்து ஆதாம் இறக்கத் தொடங்கினான், ஆனால் முடிவுக்கு முன்னதாக அவன் 930 வயதுடையவானா யிருப்பான் (**ஆதி. 5:5**ஐக் காணவும்).

எனவே, பாவம் என்பது தேவனிடத்திலிருந்து மனிதன் இயல்பான பிரிதலை அடையக் காரணமாயிற்று (அதாவது மரணம்) மற்றும் அது தேவன் விரைவிலேயே இழந்து போகப்பட்ட பரதீசில் இருந்து மனிதனைத் துரத்தி விடுவார் என்ற வகையில் தேவனுடைய பிரசன்னத்திலிருந்து ஆவிக்குரிய வகையில் பிரிதலுக்கும் காரணமாயிற்று.

தேவனுடைய கிருபையான அளிப்பு *(3:20-21)*

(முதல் முறையாக) தேவன் தாமே, ஒரு விலங்கின் இரத்தத்தை பலி செலுத்தி, அதன் தோலை அவர்களுக்கும் அவர்களின் பாவத்திற்கும் மூடலாகக் கொடுத்ததில் நியாயத் தீர்ப்பிலும் கூட நாம் தேவனுடைய இரக்கத்தையும் கிருபையையும் காண்கின்றோம். மனிதன் ஏற்கனவே தனது சுயமுயற்சி களினால் ***(3:7)*** தனது பாவத்தை மூடத் தலைப்பட்டிருந்தான், மற்றும் தேவன் மனிதனால் செய்ய முடியமாற் போனதைத்தாமே செய்வதற்கு இரக்கத்துடன் முன் வந்தார். இவ்விடத்தில் ப.ஏ. பலி அமைப்புகளும் மற்றும் கடைசியாக, நிறைவாக, போதுமானதாக, ஒரே முறையாக கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட ஒப்புரவாக்கும் பலியும் ஆகிய இரண்டுமே முன்னிழலாட்டமாய் உள்ளன. மற்றும் கிறிஸ்து தமது நீதியினால் நம்மை மூடி, நாம் கிறிஸ்துவின் பிரசன்னத்தில் குற்றமில்லாதவர்களாய் நிற்கக் கூடும்படி செய்தார்.

ஆதாமும் ஏவாளும் மீட்கப்பட்டார்களா? வேத வசனம் இதைப் பற்றித் தெளிவாய்க் கூறுவதில்லை. ஆனால் ஆதாம், அப்பொழுதுதான் விதிக்கப் பட்டிருந்த நியாயத் தீர்ப்பின் முன்பாகவும் கூட ***(3:20)*** ஜீவனுள்ளோருக் (கெல்லாம் தாய்) என்று அர்த்தப்படும் ஏவாள் என்று பெயரை சற்று விசுவாசம் கொண்டிருந்ததை மெய்ப்பித்தான். மற்றும் ***4:1ல்*** ஏவாள் தனது முதல் பேறான மகனைக் கொண்டு தேவனுக்கு மதிப்பளித்தாள். ***3:21ல்*** தேவன் அவர்களின் பாவங்களை மூடிய வேளையில் அவர்களை மீட்டும் இருப்பார்.

தோட்டத்திலிருந்து துரத்தப்படுதல் *(3:22-24)*

மனிதன் தனது விழுந்து போன நிலையில் நித்தியத்திற்கும் நிலைத்திருப்பவனாய் இருத்தலில் இருந்து அவனைப் பாதுகாப்பதற்காகத் தேவன் ஆதாமையும் ஏவாளையும் தோட்டத்திலிருந்து வெளியே அனுப்பினார். மனிதன் அழியாமையுள்ளவனாக இருக்க வேண்டும் மற்றும் பாவத்தின் விளைவாக மரணம் ஏற்படுகிறது என்ற கருத்தாவது குறைந்தபட்சம் இங்கு மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது. ஜீவ விருட்சத்தில் இருந்து உண்ணுதல் என்பது கடைசியில் மீட்கப்பட்டவர்களின் அடைவிடமாய் இருக்கும், ஏனெனில் ஜீவ விருட்சம் புதிய எருசலேமில் தோன்றும் ***(வெளி. 22:2ஐக் காணவும்).***

தொடக்கத்தில் மனிதனுக்கு ஜீவ விருட்சத்தில் இருந்து உண்ணும் சிலாக்கியம் கொடுக்கப்பட்டிருந்தது ***(2:9, 16-17ஐக் காணவும்),*** ஆனால் பாவத்தின் காரணமாக அந்த உரிமை தடை செய்யப்பட்டது, மற்றும் தேவன் இந்த மரத்தை இந்த வாழ்வில் தடை செய்யப்பட்டுள்ளவைகளின் பட்டியலில் வைத்தார்.

மனிதன் தோட்டத்தில் இருந்து துரத்தப்பட்டு (விலக்கப்பட்டு) நிலத்தில் பண்படுத்தும் வேலை செய்யும்படி அனுப்பப்பட்டான், மற்றும் தேவன் ஜீவ விருட்சத்திற்குப் போகும் வழியை காவல் செய்ய கேருபீம்களை வைத்தார். பாவத்தின் காரணமாக இயேசு கிறிஸ்து ஒருவரே தேவனிடத்திற்குத் திரும்பிச் செல்லும் ஒரே வழியாக இருக்கிறார்.

இவ்விடத்தில் பாவத்தின் பயங்கரம் நிறைந்த விளைவுகள் பற்றி மற்றும் ஆவிக்குரிய மரணம் பற்றி (தேவனுடைய பிரசன்னத்திலிருந்து பிரிதல்) வரைபட சித்திரம் ஒன்று எந்னவாகத் தரப்பட்டுள்ளது! - உடல் ரீதியான மரணம், துன்பம், வேதனை முதலியன, மனிதன் செய்யும் விவாகரத்தானது ஆவிக்குரிய விவாகரத்தினை சாராம்சத்தில் சித்தரிப்பதால் அதைத் தேவன் வெறுப்பதில் வியப்பு எதுவும் உள்ளதா?

ஏதேன் தோட்டம் (மனிதனுக்கு) விலக்கப்பட்ட நிலையில், அவன் பாவத்தால் சபிக்கப்பட்ட பூமியில் வெறுப்பு மிகுந்த சூழ்நிலையில் தனது பிழைப்புக்கான வழியைக் காண வேண்டும். ஆதாமும ஏவாளும் பாவ இயல்பைச் சுதந்தரித்துக் கொண்டதால் (தேவனிடமிருந்து விலகி பாவத்தை நோக்கித் திரும்பும் ஒரு நிலைப்பாடு) மற்றும் இது பாவச் செயல்களை உண்டாக்கி நாம் யாவரும் பிறக்கும் ஆவிக்குரிய பிரிதலின் நிலையை உறுதிப்படுத்துவதால் ஒவ்வொரு நபரும் இவ்விதமாகவே பிறக்கின்றனர். ஆனால் இழந்து போன நிலையில் இருந்து மீட்பின் வழிமுறையை இயேசு கிறிஸ்துவின் மூலம் தந்துள்ள தேவனுக்குப் புகழ்ச்சி உண்டாவதாக!

- <u>மனிதனுக்குள் அழிவுக்குட்பட்ட (மோசம் போக்கப்பட்ட அல்லது வீழ்ந்து போன) தேவசாயல்</u>

மனிதனின் உடலானது சுகவீனம் மற்றும் வியாதிக்கு உட்பட்டதாக ஆனதுமின்றி, இந்த பூமியானது புயல்கள், இயற்கை அழிவுகள், சூழ்நிலையின் உச்சகட்ட தன்மைகள், முதலியவற்றினால் அழிவுக்கு உட்பட்டதாயிற்று. மனிதன் உடலுக்குரிய மற்றும் ஆவிக்குரிய மரணத்தினால் ஆக்கினைக்கு உட்பட்டான்.

மனிதனுடைய பொருள் சார்ந்த அம்சமானது (உடல்) அழிவுக்குட்பட்டதாக, சாவுக்குக் கீழ்ப்பட்டதாக ஆயிற்று, மற்றும் அவனது பொருள்சாராத அம்சமானது (அவனது ஆவி மற்றும் ஆத்துமா) தேவனுடைய பரிசுத்தத்தைத் தூய்மையாகப் பிரதிபலிக்கும் திறனையும், மற்றும் அவருடன் தக்க வகையில் உறவுபடும் திறனையும் இழந்து போயிற்று. மனிதனுக்குள் இருந்த தேவ சாயலானது பாவத்தினால் மோசம் போக்கப்பட்டது.

<u>மனிதன்:</u>

- இயல்பினால் பாவியாக ஆனான்.
- இப்பொழுது இருளாக்கப்பட்ட சிந்தை கொண்டிருந்தான்.
- இப்பொழுது அவனது இருதயத்தில் தீய விருப்பங்கள் கொண்டிருந்தான்.

- இப்பொழுது அவனது உணர்வெழுச்சிகள் அவனது மாம்ச இச்சைகளால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

  ஆதி. 6:5
  ஆதி. 8:21
  ரோமர் 1:18-32
  ரோமர் 3:10-18
  ரோமர் 5:19
  எரே. 17:9-10
  மாற். 7:20-23
  1 பேது. 1:14

- இப்பொழுது அவன் பாவத்தினால் பரிசுத்த தேவனிடத்தில் அந்நியமாகி பிரிக்கப்பட்டிருந்தான்.

  ஏசா. 59:1-2
  எபே. 2:1-3
  எபே. 2:12

தேவன் மனிதனைச் சோதித்தறிந்தார், மனிதன் தவறிப்போய் வீழ்ந்திருந்தான். பாவத்தின் செயலைச் செய்திருந்தபடியால் ஆதாம் ஒரு பாவியாகி இருந்தான். அதன் பிறகு எல்லா மனிதர்ளும் பாவ இயல்பு கொண்டிருப்பதால் பாவத்தின் செயல்களைச் செய்பவர்களாய் இருப்பார்கள்.

பயிற்சி: *மனிதன் பாவம் செய்ய வேண்டியிருந்ததா? மனிதன் ஏன் பாவம் செய்வதைத் தேர்ந்து கொண்டான்?*

____

____

____

____

7. பாவம் - பாவவியல்

அ. பாவத்தின் உண்மை நிலை

இன்றைய நாட்களில் (இறையிலாளர்கள், பிரசங்கியார்கள் மற்றும் போதகர்கள் உட்பட) பல மனிதர்கள் பாவத்தைப் பற்றிப் பேச விரும்புவதில்லை மற்றும் இவர்கள் நிச்சயமாகவே மக்களைப் பாவிகள் என்று அழைக்க விரும்புவதில்லை.

<u>பாவம் பற்றிய தவறான கண்ணோட்டங்கள்</u>

மக்களில் சிலருக்கு, பாவம் என்பது

- <u>உண்மையானதாக அல்ல ஆனால் ஒரு மாயத்தோற்றமாக மட்டுமே உள்ளது.</u>

  இப்படிப்பட்ட மக்கள், மனிதன் அடிப்படையில் நல்லவனாகவே இருக்கிறான், மற்றும் அவனுக்கு மேன்மையானவனாவதற்காகப் போதிய அளவு நேரமும், ஆதார மூலங்களும் மற்றும் சரியான சூழ்நிலைகளும் தரப்பட்டுள்ளன என்ற கருத்தைப் பற்றிக் கொண்டுள்ளார்கள். மனிதன் பாவம் நிறைந்தவனாகத் தோற்றம் மட்டுமே தருகிறான், அவன் மனந்திரும்பத் தேவையில்லை, ஆனால் அவன் தன்னைச் சீர்ப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று இவர்கள் நினைக்கின்றார்கள்.

- <u>சுயநலத்தை விட அதிகமானது ஒன்றுமில்லை</u>

  மனிதன் இருக்கின்றவாறே தேவன் அவனைப் படைத்தார், எனவே சுயநலத்துடன் இருப்பது சரியானதுதான்.

- <u>இது ஒரு சமூக வியாதி மட்டுமே</u>

  மனிதர்கள் பல வகை மாறுபட்ட ஆளுமைத்தன்மைகளையும், இலக்குகளையும் மற்றும் விருப்பங்களையும் கொண்டுள்ளதால் பாவம் உண்டாகிறது, இவை மற்ற மக்களுடன் அவர்களை முரண்படச் செய்கின்றன.

- <u>உலகத்தில் பொதுவான தீமை மட்டுமே உள்ளது</u>

"பாவம்" என்பது மிகவும் திட்டவட்டமானதாக உள்ளது. உலகத்தின் பணியில் நபர்த்துவமற்ற இரு சக்திகள் உள்ளன - நன்மை மற்றும் தீமை (இருவியம்) மற்றும் அது மனிதனைப் பாவியாக்குவதில்லை - அது தீமை நிலவுவதற்கான பொதுவான வழிமுறையாக மட்டுமே உள்ளது.

- <u>இது மக்கள் மத்தியில் ஒப்பீடாக மட்டுமே உள்ளது</u>

  மக்களில் சிலர் மற்றவர்களைக் காட்டிலும் மேன்மையானவர்களாய் இருப்பதினாலேயே பாவம் நிலவ வேண்டியதாய் உள்ளது.

- இருதயத்தின் எண்ணப் போக்கிற்கு அல்ல செயல்பாடுகள் குறித்தே இது நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதாக உள்ளது. இது இயேசுவின் நாட்களில் இருந்த பரிசேயர்களின் அணுகுமுறையாக இருந்தது. மதரீதியான மக்கள் பாவம் என்று அழைக்கின்ற "மோசமான விஷயங்களை" மக்களில் சிலர் செய்கின்றனர்.

பாவம் பற்றிய இந்தக் கருத்துக்கள் யாவையும் இந்நாட்களில் பிரபலமானவைகளாயிருக்கையில், இவற்றில் எதுவும் வேதாகமத்தின் படியானதல்ல மற்றும் இவையாவும் தவறான கருத்துக்களாக உள்ளன.

வேதாகமம் பின்வருமாறு போதிக்கிறது:

- பாவம் உண்மையானதாக உள்ளது.
  1 யோவா. 1:8; ஆதி. 4:7
- பாவம் என்பது மரணத்திற்கும் அழிவிற்கும் காரணமாகின்றது.
  ரோமர் 6:23; யாக். 1:15
- பாவம் நம்மைப் பரிசுத்தமான தேவனிடத்திலிருந்து பிரிக்கின்றது.
  ஏசா. 59:1-2
- பாவம் என்பது எப்போதுமே தேவனை நோக்கியே கடைசியில் திருப்பப்படுகிறது.
  சங். 51:3-5

பயிற்சி: மக்கள் பாவத்தைப் பற்றிப் பேசுவதற்கு விரும்பாமல் இருப்பது ஏன்?

ஆ. பாவத்தின் தொடக்கம்

தேவனே எல்லாவற்றையும் படைத்தார், பாவம் என்பது மோசமானதாக உள்ளது, மற்றும் தேவன் மிகவும் நல்லவராக உள்ளார் என்பதால், தேவன் எப்படி பாவத்தைப் படைத்திருக்கக் கூடும்?

பதில்:

- தேவன் பாவத்தைப் படைக்கவில்லை, ஏனெனில் பாவம் என்பது படைக்கப்பட்ட விஷயமாக இருப்பதில்லை, ஆனால் நன்மையான விஷயம் இல்லாதிருப்பது அல்லது அதில் குறைவு படுவது என்பதே பாவமாக உள்ளது. எடுத்துக்காட்டாக, சுகவீனம் என்பது தன்னிலே உள்ள ஒரு விஷயம் அல்ல, ஆனால் அது உடல்நலம் இல்லாமை என்பதாகவே உள்ளது. நன்மையான விஷயம் மோசம் போக்கப்பட்ட செயலே பாவம் எனப்படுகின்றது.
- தீமை, பாவம் மற்றும் எதிர்ப்பு என்பவை தேவனுடைய நோக்கத்திற்கு உதவுகின்றதால் அவற்றை அவர் அனுமதிக்கின்றார். (**யோபு. 2:10; ஏசா. 45:5-7; ஆதி. 50:20** ஆகியவற்றைக் காணவும்).
- பாவம் என்பது பெருமையுடன் உறவுப்படுத்தப்பட்டது மற்றும் அது சுயாதீன சித்தத்தினால் (நன்மை அல்லது தீமையை, சரியானதை அல்லது தவறானதைத் தேர்ந்து கொள்ளும் திறன்) செயல்படுத்தப்பட்டது.
- வேத வசனங்கள் பின்வருமாறு போதிக்கின்றன:
  - சாத்தானுக்குள் பாவம் (தீமை) கண்டு பிடிக்கப்பட்டது. **எசே. 28:15-16**
  - ஆதாமின் கீழ்ப்படியாமையினால் பாவம் இவ்வுலகில் நுழைந்தது. **ரோமர் 5:12**
- "தேர்ந்து கொள்ளுதல்" இருப்பதினால் பாவம் இருக்கின்றது. கீழ்ப்படியாமை சாத்தியமானதாக இருந்தால் மட்டுமே மனப்பூர்வமான சித்தம் கொண்ட கீழ்ப்படிதல் சாத்தியமானதாக இருக்கும், இது கீழ்ப்படிதலை அர்த்தமுள்ளதாக்குவதற்கு பாவம் அனுமதிக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறது.

இந்த எடுத்துரைப்புகளுக்கு அப்பால், பாவத்தின் தொடக்கம் பற்றியோ அது சாத்தானுக்குள் புகுந்த விதம் பற்றியோ வேதாகமம் வெளிப்படையாக எதையும் கூறுவதில்லை.

நினைவில் வையுங்கள்: மனிதன் வீழ்ச்சியடையும் முன்பாகவே சாத்தான் பாவத்தில் வீழ்ந்தான் மற்றும் நரகம் (நித்திய அக்கினி) என்பது சாத்தானுக்காகவும் அவனது அசுத்த ஆவிகளுக்காகவும் தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது. **மத். 25:41**

இ. பாவத்தைப் பற்றிய விளக்கமும் பாவத்தின் இயல்பும்

- பாவத்தைப் பற்றிய விவரிப்பு

ஒரு வார்த்தை, ஒரு சொற்றொடர் அல்லது ஒரு எளிய வாக்கியத்தில் பாவத்தைப் பற்றி விவரிப்பது ஏறக்குறைய சாத்தியமற்றதாக உள்ளது. எடுத்துக்காட்டாக பாவத்தைப் பற்றிய பொதுவான ஒரு சிறந்த விளக்கம் பின்வருமாறு இருக்கும்:

பரிசுத்தமான தேவனுடைய பண்புக்கு முரண்படும் எந்த ஒரு எண்ணப் போக்கும் அல்லது செயல்பாடும் பாவமாக உள்ளது.

இருப்பினும், பாவம் என்பது செயல் அல்லது எண்ணப் போக்கு என்பதை விட அதிகமானதாகவும் உள்ளது, இது மனிதன் தன்னிலே கண்டறிகிற ஒரு நிலையாக மற்றும் அவன் கொண்டுள்ள ஒரு இயல்பாக உள்ளது. பாவத்தைப் பற்றி விவரிப்பதற்கும் முயற்சி செய்யும் முன்பாக வேத வசனம் விவரிக்கின்றபடி பாவத்தை விவரித்தல் ஒருவேளை சிறந்ததாக இருக்கலாம்.

பாவம் என்பது,

- இலக்கை (தேவனுடைய தர அளவையை) தவறவிடுதலாக உள்ளது — ***மத். 1:21***
- தேவனுடைய பிரமாணத்தை முறித்துப் போடுதலாக (மீறுதலாக) உள்ளது — ***ரோமர் 2:23***
- தேவனுக்குக் கீழ்ப்படியாமையாக உள்ளது — ***1 சாமு. 28:18***
- தேவனுக்கு எதிராகக் கலகம் செய்தலாக உள்ளது — ***ஏசா. 59:13***
- நியாயப்பிரமாணத்தை மீறுதலாக உள்ளது — ***1 யோவா. 3:4***
- அநீதியான செயலாக உள்ளது — ***ரோமர் 3:5***
- தேவபக்தியில்லாமையாக உள்ளது — ***ரோமர் 1:18***
- துன்மார்க்கமாக உள்ளது — ***எசே. 28:15***
- புறம்பே விலகிச் செல்லுதலாக உள்ளது — ***ஏசா. 53:6***
- அக்கிரமமாக உள்ளது — ***சங். 51:2***
- தீமையானதாக (தவறானதாக) உள்ளது — ***ஆப. 1:13***
- தேவ மகிமையற்றுப் போகுதலாக உள்ளது — ***ரோமர் 3:23***
- பெருமை (இறுமாப்பு) என்பதாக உள்ளது — ***1 தீமோ. 3:6-7***
- தேவனின்றி சுயாதீனமாய் வாழுதலாக உள்ளது — ***ஆதி. 3:5*** (அதாவது, நாமே நமது சொந்த தேவனாக இருத்தல்) ***நியா. 21:25***

★ பாவம் என்பது தேவனை மறுப்பதாகவும் சுயத்தை மேன்மைப் படுத்துதலாகவும் உள்ளது★

பாவம் என்பது தேவனுக்கு விருப்பமற்றதாகவும் மக்களை தேவனுக்கு விருப்பமற்றவர்கள் ஆக்குவதாலும் அது தீமையானதும் தவறானதுமாக உள்ளது.

பயிற்சி: பாவத்தை விவரிப்பதாய் உங்களுக்குத் தோன்றக் கூடிய ஒரு வார்த்தை அல்லது சொற்றொடர் என்ன?

____

____

____

____

- பாவம் பற்றிய விளக்கம்

பாவம் என்பது பரிசுத்த தேவனுடைய பண்புக்கு முரண்பட்ட வகையிலான எண்ணப்போக்குகளைக் கொண்டிருக்கவும் அவ்விதமான செயல்களைச் செய்யவும் காரணமாக மனிதனுக்குள் இருக்கின்ற நீதியற்ற இயல்பாக உள்ளது.

சுருக்கமாய்க் கூறினால், பாவம் என்பது தேவனுடைய பரிசுத்த தன்மை எதையும் மீறுதலாக உள்ளது

பாவம் = SIN

S - **selfishness** - சுயநலம்

I - **independence** - சுயாதீனம்

N - **not keeping God's standards** - தேவனுடைய தர அளவைகளைக் காத்துக் கொள்ளாமை

- <u>குறிப்பிட்ட பாவங்கள்</u>

பாவத்தின் மாறுபட்ட வகைகள் எல்லாவற்றையும் பட்டியலிட எந்த முயற்சியும் மேற்கொள்ளப்பட மாட்டாது, ஆனால் பாவம் என்பது பல வடிவங்களை எடுக்கக் கூடும் மற்றும் எடுக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட முயற்சி மேற்கொள்ளப்படும். எடுத்துக்காட்டாக, பின்வரும் வேத வசனங்கள் பல்வேறு பாவங்களின் விவரணங்களை அளிக்கின்றன:

கலா. 5:19-21, 26

விபசாரம்
அசுத்தம்
விக்கிரகாராதனை, பில்லி சூனியம்
பகை
விரோதம்
பொறாமை
சண்டைகள்
சுயநல நோக்கம்
பிரிவினைகள்
மார்க்க பேதங்கள்
வைராக்கியம்
வெறிகள்

எபே. 4:29-32

கெட்ட வார்த்தை
கசப்பு
கோபம், மூர்க்கம்
கூக்குரல் தூஷணம்
துர்க்குணம்
மன்னிக்காத ஆவி

எபே. 5:4

வம்பு
புத்தியீனமான பேச்சு
பரியாசம்
ஆபாசமான நகைச்சுவை

ரோமர் 1:29

அநியாயம்
துரோகம்
குரோதம்
வாக்குவாதம்
கொலை
புறங்கூறுதல்
வஞ்சகம்
வன்மம்
பெருமை

ரோமர் 13:8-13

விபசாரம்
களவு
பொருளாசை

1 கொரி. 10:1-10

முறுமுறுத்தல்
முறையிடுதல்
நன்றியுணர்வில் குறைபாடு

யாக்கோபு 2:8-10

பட்சபாதம்(பாரபட்சம்) காண்பித்தல்
ஆள் கண்டு மதித்தல்

ரோமர் 1:26-27

ஓரினச் சேர்க்கை (ஆண் அல்லது பெண்)
காம விகாரம்

1 தீமோ 6:6-10

பண ஆசை
உண்மையற்ற ஆராதனை
மாய் மாலம் - இல்லாத ஒன்றை நாம் கொண்டுள்ளது போல் நடித்தல்;
சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றும் செய்வது இன்னொன்றுமாயிருத்தல்.

வெளி. 21:8

பொய் கூறுதல்
சூனியம்

யாத். 20:1-17

தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்குதல்
பெற்றோருக்கு மதிப்பளிக்க தவறுதல்
ஓய்வு நாள் கருத்தை ஆசரிக்கத் தவறுதல்
களவு செய்தல்
பொய்ச் சாட்சி கூறுதல்

மாற்கு 7:20-23

தீய சிந்தனைகள்
வஞ்சகம்
தவறான கருத்து

இந்தக் குறிப்புப் பட்டியலானது மேன்மேலும் வளர்ந்து சென்று கொண்டிருக்க முடியும் மற்றும் "தேவனுக்குக் கீழ்ப்படியாமை" என்பதையும் உள்ளடக்கக் கூடும், மற்றும் ***2 தீமோ. 3:1-5*** மற்றும் ***உபா. 18:9-13*** முதலிய வசனப் பகுதிகளையும் கொண்டிருக்கக்கூடும். சில பாவங்கள் பின்வருபவற்றைக்காட்டிலும் அதிகம் குறிப்பிடத் தக்கவைகளாய் இருக்கையில் (எ.கா. விரோதம் எதிர். கொலை; காம விகாரம் எதிர். விபசாரம்), பாவம் பாவமாகவே உள்ளது மற்றும் அது நாம் தேவனுடன் சரியான வகையில் உறவுபடுவதைத் தடுக்கிறது அல்லது அவருடனான நமது ஐக்கியத்தை முறித்துப் போடுகிறது.

பாவத்தின் மற்ற சில வகைகள் இங்கு கவனிக்கப்பட வேண்டும்:

- நன்மை செய்யாமல் இருத்தல் ***யாக். 4:17***
- விசுவாசத்தினால் வராத யாவும் ***ரோமர் 14:23***
- பிறருக்காக ஜெபிக்காதிருத்தல் ***1 சாமு. 12:23***
- அறியப்பட்டுள்ள தேவ சித்தத்திற்கு விரோதமானவற்றை நாடுதல்
  1 சாமு. 12:19
  யாக். 4:13-16

- மற்றவர்களின் தேவைகளைச் சந்தியாமல் இருத்தல்
  மத். 25:41-46
  1 யோவா. 3:17
  யாக். 2:14-17

- உலகத்தின் வழியைப் பின்பற்றுதல்
  ரோமர் 12:2
  லேவி. 18:1-5

பாவம் என்பது பின்வருவனவற்றுடன் தொடர்புடையதாய் இருக்க முடியும்:

- சிந்தனைகள்
- எண்ணப்போக்குகள்
- செயல்பாடுகள்
- விடுதல்கள்
- நாம் செய்கின்றவைகள் மற்றும் நாம் செய்யாதவைகள்

கிறிஸ்து ஒருவர் மட்டுமே "பாவமற்றவராக" இருந்தார் என்பதிலோ அல்லது அவருடைய நீதியினால் மட்டுமே நாம் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக முடியும் என்பதிலோ வியப்பு எதுவும் உள்ளதா?
2 கொரி. 5:21
ரோமர் 3:21-26

பயிற்சி: பாவத்தின் தீவிரத்தன்மையைக் குறித்து உங்கள் மதிப்பீடு வளர்ச்சி பெற்றுள்ளதா? எவ்வாறு?

____

____

____

____

ஈ. பாவத்தின் இயல்பும் வியூகமும்

பாவத்தின் இயல்பும் வியூகமும் பின்வருமாறு உள்ளது:

- **வஞ்சித்தல்**
  ஆதி. 3:4-7
  1 தீமோ. 2:11-14
  2 கொரி. 11:3
  எபி. 3:13
  எபி. 11:25
  கலா. 6:7-8
  2 தெச. 2:10

  பாவம் நிறைவு, சந்தோஷம் மற்றும் மகிழ்ச்சி ஆகியவற்றை வாக்களிக்கிறது, ஆனால் இவைகளில் எதையும் அது கொடுப்பதில்லை.

- ***அடிமைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்***
  ஆதி. 4:6-7
  யோவா. 8:34
  ரோமர் 6:16-19
  தீத்து 3:3

- ***அழித்தல்***
  யாக். 1:13-16
  ரோமர் 3:9-18
  ரோமர் 6:23
  பிலி. 3:18-19

பயிற்சி: *பாவம் பற்றிய வேதாகம ரீதியான கண்ணோட்டத்தை இவ்வளவு அதிகமான மக்கள் உண்மையில் நம்பாமல் இருப்பது ஏன்?*

____

____

____

____

உ. பாவத்தின் விளைவுகள்

மனிதனின் இயல்பானது அவனது வீழ்ச்சிக்கு முன்னதாக, சோதித்தறியப்படாத பரிசுத்த தன்மையாக அல்லது உறுதிப்படுத்தப்படாத ஒன்றும் அறியாமையாக இருந்தது என்பதால், வீழ்ச்சிக்குப் பிறகு மனிதனின் நிலை என்னவாக உள்ளது? மீட்கப்படாத மனிதனின் நிலையைப் பற்றி வேத வசனங்கள் பின்வருமாறு விவரிக்கின்றன:

1. **தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்ட நிலை**

- பிரிக்கப்பட்டு மற்றும் ஒளிக்கப்பட்டான் — *ஏசா. 59:2*
- தேவனிடத்திலிருந்து அந்நியப்பட்டான் — *கொலோ. 1:21*
- தேவனுக்கு விரோதியானான் — *ரோமர் 5:10*

2. **பாவங்களில் மரித்த நிலை**

- பாவம் செய்கிற ஆத்துமா சாகும் — *எசே. 18:1-4*
- அக்கிரமங்களிலும் பாவத்திலும் மரித்த நிலை — *எபே. 2:1*
- தேவபக்தியற்ற நிலை — *ரோமர் 5:6*
- பாவிகள் — *ரோமர் 5:8*

3. **உடல் ரீதியான மற்றும் ஆவிக்குரிய மரணத்திற்கு ஆக்கினைத் தீர்ப்பிடப்பட்ட நிலை**

- பாவம் மரணத்தையும் நியாயத் தீர்ப்பையும் கொண்டு வந்தது — *ரோமர் 5:16-18*
- ஆக்கினைத் தீர்ப்பின் கீழாக வந்த நிலை — *ரோமர் 8:1*
- தேவனுடைய கோபாக்கினைக்கு ஆளான நிலை — *எபே. 2:3*
- பாவங்களின் குற்றச்சாட்டின் கீழான நிலை — *கொலோ. 2:14*
- எல்லாரும் பாவத்தின் கீழ் உள்ள நிலை — *ரோமர் 3:9*
- அவிசுவாசிகள் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்டு நிற்குதல் — *யோவா. 3:18*

4. **இழந்து போகப்பட்டு நம்பிக்கையற்ற நிலையில் இருத்தல்**

- கிறிஸ்துவிடமிருந்து பிரிக்கப்பட்ட நிலை — *எபே. 2:12*
- தேவனுடைய உடன்படிக்கைகளுக்கு அந்நியரான நிலை — *எபே. 2:19*
  - நம்பிக்கையற்றவர்கள்
  - தேவனற்றவர்கள்

5. **ஆதாமுக்குள்**

ரோமர் 5:12, 18
1 கொரி. 15:21, 22
எல்லா மனிதர்களும் பாவம் மற்றும் மரணத்தின் சாபத்திற்குள்ளாா இருக்கின்றனர்.

6. ***சாத்தானுடைய இராஜ்யத்தில் உறுப்பினராய் இருக்கும் நிலை***

யோவா. 8:42-47
கொலோ. 1:13-14
அப். 26:18
மீட்கப்படாத மக்கள் யாவரும் சாத்தானைத் தங்கள் பிதாவாகக் கொண்டு சாத்தானுடைய இராஜ்யத்தில் பாகமாக/அங்கமாக உள்ளனர்.

7. ***நித்தியமான அக்கினிக் கடலுக்கென்று குறித்து வைக்கப்பட்டுள்ள நிலை***

யோவா. 3:16
2 தெச. 1:6-10
நியாயத் தீர்ப்பும் நித்திய தண்டனையும் தேவனை மறுப்பவர்களுக்கான முடிவாக உள்ளது.

<u>முடிவுரை:</u> மனிதன் தனது பாவத்தின் காரணமாக, மனிதன் முற்றிலும் இழந்து போகப்பட்டு, தேவனற்று, பாவத்திற்கான நித்திய தண்டத்தைச் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிறான்.

மனிதன் மோசமானவனே அல்ல என்று கூறுபவர்கள் வேத வசனத்தின் பின்வரும் தெளிவான, தெளிந்த போதனையைப் புறக்கணிக்கின்றனர்:
தேவனிடத்திலிருந்து பிரிந்த மனிதன்

- ***முற்றிலும் சீர் கெட்டவனாக பாவம் நிறைந்தவனாக இருக்கிறான்***
- ***முற்றிலும் இழந்து போகப்பட்ட நிலையில் இருக்கிறான்***
- ***நித்திய தண்டனைக்கென்று ஆக்கினைத் தீர்ப்பிடப்பட்டு குறித்து வைக்கப்பட்டுள்ளான்.***

இதுவே பாவத்தின் விளைவாக உள்ளது!

பயிற்சி: *பாவத்தின் விளைவு இவ்வளவு மோசமாய் இருக்கும் பொழுது, பாவம் ஏன் இவ்வளவு பிரபலமாக உள்ளது?*

____

____

____

____

ஊ. | பாவமும் அவிசுவாசியும்

அவிசுவாசியின் முற்றாக இழந்து போகப்பட்ட நிலைமை பற்றி நாம் ஏற்கனவே கண்டுளளோம்.

(லூக். 19:9-10)

ஆனால் அவிசுவாசி இழந்து போகப்பட்ட அந்த நிலைக்கு ஆளானது எவ்வாறு?

பின்வரும் மூன்று விஷயங்களினால் எல்லா மனிதர்களும் பாவத்தின் கீழ் ஆக்கினைக்குட்பட்டவர்களாய் நிற்கின்றனர் என்று வேத வசனங்கள் போதிக்கின்றன:

- **சுதந்தரிக்கப்பட்ட பாவ இயல்பு**

ஆதாம் பாவம் செய்த பொழுது, எல்லா மனிதர்களும் இயல்பிலேயே பாவமுடையவர்களானார்கள் மற்றும் அந்தப் பாவ இயல்பானது பெற்றோர்களிடம் இருந்து பிள்ளைகளுக்கு வந்து சேர்ந்தது (**ஆதி. 5:1-3**ஐக் காணவும்). மனிதனில் உள்ள வீழ்ந்து போன தேவசாயலானது மனிதனின் இயல்பாயிற்று. தேவனிடமிருந்து வளைந்து சுயம் மற்றும் பாவத்தை நோக்கிச் சென்ற மனிதனுக்குள் இருந்த முன் நிலைப்பாடு தான் பாவ இயல்பாக உள்ளது. மனிதன் இயல்பிலேயே பாவத்திற்கு சாய்கின்ற பிறவிக் குணமும் மற்றும் அதைப் பற்றிய கவர்ச்சியான எண்ணமும் கொண்டவனாக இருக்கின்றான்.

பாவத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும் இயல்பைக் கொண்டுள்ளதன் விளைவாக நாம் தேவனைப் பொறுத்தமட்டில் ஆவிக்குரிய மரண (பிரிதல்) நிலையிலேயே பிறக்கிறோம்.

ரோமர் 5:19
எபே. 2:3
சங். 51:5

மாம்சத்தில் உள்ள பாவத்தை நியாயத் தீர்க்க (ஆக்கினைக்குட்படுத்த) சிலுவையில் கிறிஸ்துவின் மீட்பளிக்கும் மரணம் தான் பாவ இயல்புக்கான சிகிச்சையாக உள்ளது.

கலா. 5:24
ரோமர் 8:3-5
எபே. 2:4-6, 19
கொலோ. 2:11

எல்லா மக்களும் பாவ இயல்புடனேயே பிறக்கின்றனர்.

- **சுமத்தப்பட்ட பாவம்**

ஆதாம் பாவம் செய்த பொழுது அவனது பாவத்தைத் தேவன் அவன் மூலமாகப் பிறக்கப் போகிற அனைவருக்கும் கட்டளையிட்டார் (கணக்கில் வைத்தார் அல்லது சுமந்தினார்) அதனால் அவர்கள் சட்டப்படி பாவத்தின் குற்றத்திற்கு ஆளாக நேரிட்டது. **ரோமர் 5:12-14**

உடல் ரீதியான மரணம் என்பதே சுமத்தப்பட்ட இப்பாவத்தின் விளைவாக உள்ளது. **1 கொரி. 15:22.**

பாவமானது எல்லா மனிதர்களும் உடல்ரீதியான மரணத்தின் கீழ் வரக் காரணமாயிற்று.

சுமத்தப்பட்ட பாவத்திற்கான சிகிச்சை இரு மடங்கானதாக உள்ளது:

(1) **நீதிமானாக்கப்படுதல்** - கிறிஸ்துவின் நீதியானது விசுவாசிக்கு விதிக்கப்படும் அல்லது கணக்கில் வைக்கப்படும் செயல்.
2 கொரி. 5:21
ரோமர் 4:22-25

(2) உடல் ரீதியான மரணத்தின் மீதான வெற்றியை உத்தரவாதப் படுத்துகிற கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதல்.
ரோமர் 6:4
1 கொரி. 15:12-22, 54-58.

கிறிஸ்து இல்லாமல் உள்ள மக்கள் யாவரும் பாவத்தினால் குற்றம் சுமத்தப் பட்டுள்ளனர் மற்றும் அதன் தண்டனை உடல் ரீதியான மரணம் என்பதாக உள்ளது.

- **தனிப்பட்ட பாவங்கள்**

எல்லாரும் பாவிகளாய் உள்ளனர் என்று அறிவிப்பதில் தேவனுடைய ஆக்கினைத் தீர்ப்பு நீதியும் மனிதர்களின் தனிப்பட்ட பாவங்களுக்கு உறுதிப்படுத்தப் படுகின்றது.
ரோமர் 3:9-18, 23
வெளி. 20:11-15

ஆவிக்குரிய மரணம் என்பது தனிப்பட்ட பாவங்களின் விளைவாக உள்ளது.
எசே. 18:1-4, 19-20
ரோமர் 6:23
ரோமர் 8:13

சிலுவையில் கிறிஸ்து சிந்திய இரத்தத்தினால் அளிக்கப்படும் மன்னிப்பே தனிப்பட்ட பாவங்களுக்குச் சிகிச்சையாக உள்ளது.
எபே. 1:7
கொலோ. 2:13-15

பயிற்சி: பாவம் மற்றும் பாவங்கள் ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடு என்ன? எது எதற்குக் காரணமாகின்றது?

____

____

____

____

பாவத்திற்கான எல்லா மனிதர்களுக்குமான ஆக்கினைத்தீர்ப்பு		
காரணம்	விளைவு	சிகிச்சை
பாவ இயல்பைச் சுதந்தரித்தல்	ஆவிக்குரிய மரணம்	மீட்பு
சுமத்தப்பட்ட பாவம்	உடல் ரீதியான மரணம்	நீதிமானாக்கப்படுதல்
தனிப்பட்ட பாவங்கள்	ஆவிக்குரிய மரணம்	மன்னிப்பு

கிறிஸ்துவின் சிலுவையினால் மட்டுமே மனிதனின் பாவப் பிரச்சனை யானது நித்தியத்திற்கும் தீர்த்து வைக்கப்படுகின்றது
1 பேது. 2:24-25

ஆனால் இது பாவத்தைப் பொறுத்தமட்டில் விசுவாசியை எங்கு விட்டு வைக்கிறது?

எ. பாவமும் விசுவாசியும்

விசுவாசியின் **தனிப்பட்ட** (கடந்த கால, நிகழ் கால மற்றும் எதிர்கால) **பாவங்கள்** முழுமையாக **மன்னிக்கப்பட்டுள்ளன.**
கொலோ. 1:14

உடல் ரீதியான மரணத்தை விளைவிக்கும் **சுமத்தப்பட்ட பாவமானது** கிறிஸ்துவின் **உயிர்த்தெழுதலின்** மூலம் கையாளப்பட்டுள்ளது.
யோவா. 11:25-26
1 கொரி. 15:20-22

மனிதனின் "பாவ இயல்பு" பற்றிய விஷயம் என்ன?

பழைய பாவ இயல்பானது சிலுவையில் நியாயத் தீர்க்கப்பட்டு, ஆக்கினைக்கு உட்படுத்தப்பட்டிருக்கையில் (**ரோமர் 8:1-4**) மனித உடலின் முழுமையாக உள்ள பகுதியானது விசுவாசியின் உடல் உயிர்ப்பிக்கப்பட்டு மகிமைப்படுத்தப் படுகிற வரையில் அழிவுறாது. நித்திய நிலையை அடையும் வரையில் பாவத்தின் சாபமானது நீக்கப்படுவதில்லை (**வெளி. 22:3**ஐக் காணவும்).

ஆனால் வேத வசனமானது, விசுவாசியின் பாவ இயல்பு மற்றும் பாவத்தில் தொடர்ந் திருத்தல் ஆகியவற்றுடன் விசுவாசிக்குள்ள உறவு பற்றி குறிப்பிடத்தக்க சத்தியங்கள் பலவற்றைப் போதிக்கிறது.

1. விசுவாசி பாவத்திற்கு மரித்தவராய் இருக்கிறார்.
2. விசுவாசி இனியும் பாவம் செய்து கொண்டிருக்க வேண்டியதில்லை.
3. விசுவாசி தனது பழைய பாவ இயல்பு அழிக்கப்படாதிருப்பினும் அதன் வல்லமையிலிருந்து பிரித்து வைக்கப்பட்டிருக்கிறார்.
4. விசுவாசி பாவம் செய்யாமல் இருக்கும்படி பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அவருக்குக் கிடைக்கிறது.
   ரோமர் 6:1-14
   ரோமர் 8:5-14
5. விசுவாசி பாவம் செய்கின்ற பொழுது, அது தேவனுடன் அவருக்குள்ள உறவை அழிக்காது ஆனால் அது தேவனுடனான அவரது ஐக்கியத்தை முறித்துப் போடும்.
   1 யோவா. 1:3-6
6. உண்மையான விசுவாசிகள் வாழ்வின் தொடர்ந்த வழியாக பாவத்தில் நடக்க மாட்டார்கள்.
   1 யோவா. 3:9-10

மற்றும் விசுவாசியானவர் தனது மாம்சத்திற்கு (பழைய பாவ இயல்புக்கு) எதிராக இன்னும் போராட வேண்டியிருக்கையில் - அவருடைய புதிய இயல்பு டன் அவர் அதில் வெற்றியடையும் வகையில்,

- தாம் பாவத்தின் வல்லமைக்கு மரித்துள்ளதை விசுவாசத்தினால் உணர்ந்து அறிகின்றார்.
- பாவத்தை எதிர்த்து நிற்க தமக்குள்ளாக வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைச் சார்ந்து நிற்கின்றார்.
- வசனத்திற்குக் கீழ்ப்படிதலில் ஆவிக்குள்ளாக/ஆவியானவர் மூலமாக நடந்து கொள்வதைத் தேர்வு செய்து கொள்கின்றார்.
  1 பேது. 1:13-16
  1 பேது. 2:11-12
  ரோமர் 7:14-25
  கலா. 5:13-26
  கொலோ. 3:5-10
  2 கொரி. 7:1
  எபி. 12:4

விசுவாசி பாவம் செய்கிற பொழுது, அவர் கர்த்தருடனான தனது ஐக்கியத்தை மீட்டுக் கொள்வதற்கு தனது பாவங்களை உண்மைத் தன்மையுடன் அறிக்கையிட்டு கிறிஸ்துவால் ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள மன்னிப்பை உரிமைகோருதல் அவசியமாகும்.

1 யோவா. 1:7-9

பயிற்சி: மீட்பின் போது தேவன் விசுவாசிகளைப் பூரணர்களாகவும் இனியும் பாவம் செய்யக் கூடாதவர்களாகவும் ஆக்குவது ஏன்?

____

____

____

____

8. இரட்சிப்பு - இரட்சிப்பியல்

அ. இரட்சிப்பின் தேவை

இரட்சிப்பு என்றால் "விடுவித்தல்" என்று அர்த்தப்படுகிறது மற்றும் இது பாவத்தின் ஆக்கினைத்தீர்ப்பு மற்றும் தண்டத்திலிருந்து விடுவித்தலுக் கான ஒரு வழியை மனிதனுக்கு அளிப்பதில் தேவனுடைய ஊழியத் தைக் குறிக்கின்றது.

1. <u>மனிதனின் இழந்து போகப்பட்ட நிலை</u>

இரட்சிப்பின் தேவையானது ஏற்கனவே நம்பத் தக்க வகையில் செயல் விளக்கப்படுத்தப்பட்டபடி, மனிதனின் இழந்து போகப்பட்ட நிலையின் அடிப்படையில் அமைந்துள்ளது.

ரோமர் 3:9-19, 23
எபே. 2:1-3
எபி. 9:27

மனிதன் மீட்கப்படுவதற்கு, தான் **இழந்து** போகப்பட்டுள்ளதை அறிய வேண்டும். பவுல், **ரோமர் 3:21-31**ல் சுவிசேஷத்தை எடுத்துரைப்பதற்கு முன்னதாக **ரோமர் 1-3** அதிகாரங்கள் யாவற்றை யும் மனிதனின் "இழந்து போகப்பட்ட நிலை"யை செயல்விளக்கப் படுத்துவதற்குச் செலவிட்டார்.

மக்களில் பலர் பின்வருமாறு நம்பிக்கை கொண்டிருப்பவர்களாய்க் காணப்படுகின்றனர்:

1. தாங்கள் உண்மையில் "பாவிகளாக" இருப்பதில்லை.
2. தாங்கள் மற்ற சில மக்களைப் போல அவ்வளவு மோசமானவர்கள் அல்ல.
3. நரகம் என்பது உண்மையில் இருப்பதில்லை.
4. தங்களின் நீதியுள்ள செயல்கள் (நன்மை) தங்களின் தீமையுள்ள செயல்களை (தீமை) எடை குறைத்து விடும்.
5. அன்பான தேவன் மக்களை நரகத்திற்குச் செல்ல அனுமதிக்க மாட்டார்.
6. முடிவில் எல்லா மக்களும் எப்படியாவது மீட்கப்பட்டு விடுவார்கள்.

இந்த "நம்பிக்கைகளில்" எதுவுமே உண்மையானவையல்ல - இவை யாவும் வேதாகம ரீதியானவைகள் அல்ல - என்பதே இவற்றின் ஒரே பிரச்சனையாக உள்ளது.

கிறிஸ்துவை விட்டுப் பிரிந்திருக்கையில் பின்வருவதே உண்மை நிலையாய் உள்ளது:

- எல்லா மக்களும் இழந்து போகப்பட்டு உதவியற்ற நிலையில் உள்ளனர்.
- தங்கள் பாவங்களில் மரிக்கும்படி ஆக்கினைத் தீர்ப்பு பெற்றுள்ளனர்.
- தங்கள் பாவங்களினால் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, அந்நியப்படுத்தப் பட்டுள்ளனர்.

இரட்சிப்பின் உபதேசம் என்பது, மனிதனின் இழந்து போகப் பட்ட, பாவம் நிறைந்த நிலைக்கு தேவன் தம்முடைய பரிசுத்தத்தை யும் நீதியையும் மீறிச் செல்லாத நிலையில் ஒரு வழி வகையை அளித்தல் என்பதாக உள்ளது. அதை தேவன் மாத்திரமே செய்ய முடியும், ஏனெனில் மனிதன் பாவத்தில் இருந்து தன்னையே மீட்டுக் கொள்ளும் வல்லமை மற்றும் திறன் ஆகியவற்றில் குறைவு பட்டுள்ளான்.

பாவம் என்பது மனிதனை தனது "நீதியான" நிலையை இழக்கக் காரணமாயிற்று. ஏனெனில் "நீதி" என்பது "நேர்மையானதாக" உள்ளது, இது ஒழுக்கத் தூய்மை மற்றும் தேவனுடன் நேராக நிற்றல் என்பதாகவும் உள்ளது.

பிரச்சனை வருகிறது: நீதியற்ற மனிதன் பரிசுத்தமும் நீதியும் உள்ள தேவனுடன் மீண்டும் ஒரு முறை தக்க வகையில் உறவுபடுவதற்குத் தேவையான நீதியை எவ்வாறு ஆதாயப்படுத்திக் கொள்ள முடியும்?

2. <u>மனிதன் தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ள இயலாமை</u>

தேவன் ஒருவரே மீட்க முடியும் தேவனின்றி இரட்சிப்பு சாத்திய மாகாது என்பது வேத வசனத்தின் தெளிவான போதனையாக உள்ளது.

ஏசா. 59:1-4
ஏசா. 59:15-21
லூக். 18:23-27
ரோமர் 5:6-8

ஆனால் அது மனிதர்கள் தங்களை மீட்டுக் கொள்ள முயற்சி செய்வதைத் தடை செய்வதில்லை.

3. *தன்னைத்தானே மீட்டுக் கொள்வதற்கு மனிதனின் முயற்சிகள்*

மனிதர்கள் தங்களைத் தாங்களே மீட்டுக் கொள்வதற்குப் பின்வரும் 4 பிரதான வழிகளில் முயற்சி செய்துள்ளனர்:

- ***நல்லவராய் இருத்தலினால்*** *(தனிப்பட்ட தகுதி - நீதி)*
  ஏசா. 64:6
  மத். 5:20

  தேவனுடன் தொடர்புடைய வகையில் மனிதனின் நீதி என்பது அழுக்கான கந்தையைப் போன்றதாக உள்ளது. பரிசுத்தமான தேவனுக்கு ஏற்புடைய நீதியானது மனிதனின் உள்ளான குணமாய் இருப்பதில்லை.

  <u>குறிப்பு:</u> மக்களில் சிலர் பிறரைக் காட்டிலும் மேன்மையானவர்களாக (அதாவது, அதிகம் நீதியுள்ளவர்களாக) இருந்தாலும் பரிசுத்தமான தேவனுக்கு எதிராக அளக்கப்படுகையில் அவர்கள் நீதியுள்ளவர்களாகக் காணப்படுவதில்லை!

- ***நன்மை செய்வதினால்*** *(செயல்படுதல்/செய்கைகள்; மத ரீதியான சடங்காச்சாரம்; சட்டத்தைக் கைக் கொள்ளுதல்)*
  எபே. 2:8-9
  கலா. 2:15-16, 21
  கலா. 3:11
  யாக். 2:10

நாம் செய்கின்ற செயல்களினால் நீதியை ஆதாயப்படுத்த முடியாது.

- ***தங்கள் நிலைமையினால்*** *(மதவழி வழிப் பெருமை*
  ரோமர் 2:25-29
  ரோமர் 1:16
  யோவா. 1:12

  நீதி என்பது இயல்பான பிறப்பினாலோ அல்லது பாரம்பரியத்தினாலோ வருவதில்லை.

- ***தாங்கள் அறிந்துள்ளவற்றினால்*** *(ஞானம் மற்றும் புத்திக் கூர்மை)*
  1 கொரி. 1:18-23
  1 கொரி. 2:14
  மத். 16:16-17

இயேசு யாராய் இருக்கிறார் என்ற உண்மை நிலையானது மனிதரால் பகுத்தறியப்பட முடியாது, அது தேவனாலேயே வெளிப்படுத்தப்பட வேண்டும்.

நீதி என்பது அறிவினால் மாத்திரம் வருவதல்ல.

<u>முடிவுரை:</u> ***தேவன் இல்லாமல் இரட்சிப்பு என்பது சாத்தியமற்றதாகவே உள்ளது.***

பயிற்சி: இரட்சிப்பைப் பொறுத்த அளவில் மனிதர்கள் தாங்கள் இழக்கப்பட்டுள்ள உண்மையை உணர்ந்தறிதல் என்பது ஏன் அவ்வளவாய் முக்கியம் வாய்ந்ததாக உள்ளது? இதை மக்கள் ஒப்புக் கொள்வதென்பது ஏன் அவ்வளவு கடினமாக உள்ளது?

____

____

____

____

ஆ. தேவனுடைய அளிப்பு

1. தேவனுடைய முதல் முயற்சி

தேவன் தவறு செய்திராத போதிலும், மனிதனை அவர் தம்முடன் சரியான உறவுமுறைக்குத் திரும்பக் கொண்டு வருவதற்கு வழிமுறையை அளிக்க அவரே முதல் அடிவைப்பை எடுத்து வைத்தார்.

- ஸ்திரீயின் "வித்து" சாத்தானை நசுக்குவார் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்தார். ***ஆதி. 3:15***
- தோட்டத்தில் ஆதாம் ஏவாளின் பாவத்தைத் தேவன் மூடினார் ***ஆதி. 3:21***
- பாவத்தின் தண்டமான மரணத்திலிருந்து நோவாவையும் அவரது குடும்பத்தையும் மீட்கும் வழிமுறையாகத் தேவன் பேழையைப் பயன்படுத்தினார். ***ஆதி. 6:17-18***
- ஆபிரகாமின் சந்ததியின் மூலமாக மீட்பின் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தைத் தேவன் வாக்களித்தார். ***ஆதி. 12:3***; மற்றும் ***கலா. 3:13-18***ஐயும் காணவும்.
- ஈசாக்கிற்குப் பதிலாக பலி ஒன்றை தேவன் அளித்தார். ***ஆதி. 22:12-19***
- விசுவாசத்தினாலே பலி செலுத்தப்பட்ட ஆட்டின் இரத்தத்தைத் தங்கள் வீடுகளின் மேல் தடவியிருந்த (இஸ்ரவேல்) வீட்டார் அனைவரையும் தேவனுடைய சாவின் தூதன் "கடந்து" சென்றான்.
  யாத். 12:21-30
  எபி. 11:28
- பிராயச் சித்தத்தின் நாளிலே தேவன் சிலுவையில் கிறிஸ்துவின் ஒப்புரவாக்கும் ஊழியத்தை முன் கண்ணோட்டமிட்டார். ***லேவி. 16:1-34***

- தேவன் உலகத் தோற்றத்துக்கு முன்பே கிறிஸ்துவை அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியாக்கினார். **வெளி. 13:8; 1 பேது. 1:19-20**
- மீட்புக்கான தேவனுடைய நித்திய திட்டமானது பின்னால் தோன்றிய எண்ணம் அல்ல.
  எபே. 1:3-14; அப். 2:22-24
- நாம் யாவரும் பாவிகளாகவும் உதவியற்ற நிலையிலும் இருந்த பொழுதே தேவன் கிறிஸ்துவை மரிக்கும்படி அனுப்பினார்.
  யோவா. 1:29; ரோமர் 5:6-8
- தேவன் முந்தி நம் மீது அன்புகூர்ந்து நமக்காக மரிக்கும்படி இயேசுவை அனுப்பினார்.
  1 யோவா. 4:7-10; மாற். 10:45
- மனிதனல்ல தேவனே மனிதனை தம்முடன் ஒப்புரவாக்குவதற்காக மீட்பின் திட்டத்தைச் செயல்படுத்தினார்.
  2 கொரி. 5:16-19

2. <u>இரட்சிப்பின் அடித்தளம்</u> (தேவன் தாமே)

இரட்சிப்பு என்பது தேவனுடைய பண்பின் 3 அம்சங்களில் அடித்தளமிடப் பட்டுள்ளது.

- தேவனுடைய **அன்பு** **யோவா. 3:16**, **யோவா. 15:12-13** (மனிதனுக்குத் தேவன் காண்பிக்கும் தவறாத, நிபந்தனையற்ற உறுதிப்பாடு)
- தேவனுடைய **இரக்கம்** **ரோமர் 9:10-18**, **யூதா 21** (தண்டிக்க வேண்டியவர்களுக்குத் தேவன் தண்டனையை நிறுத்தி வைத்தல்)
- தேவனுடைய **கிருபை** **எபே. 2:4-10**, **தீத்து 2:11** (தகுதியற்றவர்களுக்குத் தேவன் காண்பிக்கும் தயவு)

எந்த ஒரு மனிதனும் சுய தகுதி, வழி வழிப்பெருமை, சாதனை அல்ல நற்செயல்கள் ஆகியவற்றினால் மீட்கப்படுவதில்லை - மீட்பு தேவனிலேயே அடித்தளம் இடப்பட்டுள்ளது.

3. <u>இரட்சிப்பின் அடிப்படை</u> (சிலுவை)

இரத்தம் சிந்துதலினால் மட்டுமே பாவமன்னிப்பு வரக் கூடும். சிலுவையில் கிறிஸ்து சிந்திய இரத்தமே தேவன் மனிதனுடைய பாவங்களை மன்னிப்பதைச் சாத்தியமாக்குகின்றது.

எபி. 9:7
எபி. 9:13-14, 22
எபி. 10:19-22

எபே. 1:7
1 பேது. 1:18-24
யோவா. 1:29
வெளி. 5:6-10

தேவனின் நீதியை நிறைவுபடுத்தவும் பாவங்களுக்கு பரிகாரம் அளிக்கவும் பலி ஆடு என்ற வகையில் தேவனுடைய பாவமற்ற பரிபூரணமான குமாரனுடைய இரத்தம் சிந்தப்பட வேண்டியிருந்தது என்பதைக் கவனியுங்கள். இயேசு கிறிஸ்து ஒருவரே தேவனிடத்திற்குச் செல்லும் ஒரே வழியாய் இருக்கிறார்.
அப். 4:12
யோவா. 14:6

4. இரட்சிப்பின் வழிகள் (விசுவாசம்)

சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தமானது விசுவாசம் என்ற வழி அல்லது வாய்க்காலின் மூலமாக மனிதனின் பாவங்களின் மீது தனிப்பட்ட வகையில் செயல்முறைப்படுத்தப் படுகின்றது. இது பழைய ஏற்பாட்டில் பஸ்காவன்று பலி செலுத்தப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தம் விசுவாசத்தினால் வீட்டு கதவு நிலைகளில் தடவப்பட்ட காட்சியில் சித்தரிக்கப்பட்டது, அதனால் மரண தூதன் அவ்வீட்டினுள் இருப்பவர்களைக் "கடந்து சென்று" அவர்களை மரணத்திலிருந்து விடுவித்தான்.

விசுவாசம் என்பது தான் ஒரு மனிதன் தேவனுடன் சரியான உறவுமுறைக்குத் திரும்பவரக் கூடிய ஒரே வழியாக உள்ளது.
எபி. 11:6

- <u>பழைய ஏற்பாட்டு இரட்சிப்பு</u>

  பழைய ஏற்பாட்டில் மக்கள் தேவன் மீது கொண்ட விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டார்கள்.
  ஆதி. 15:6
  ஆப. 2:4
  எபி. 11:1-2
  ரோமர் 4:1-3

ப ஏ விசுவாசத்தின் உணர்வுள்ள சாரமானது இரட்சிப்புக்குத் தேவையான நீதி தேவனிடத்திலிருந்து மட்டுமே வர முடியும் என்ற உண்மையுடன் தொடர்புடையதாக இருந்தது. (***1 பேது. 1:10-12***ஐக் காணவும்).

- <u>புதிய ஏற்பாட்டு இரட்சிப்பு</u>

புதிய ஏற்பாட்டு இரட்சிப்பு விசுவாசத்தினாலேயே கிடைக்கிறது என்பது தெளிவு.

எபே. 2:8-10



ப.ஏ. பரிசுத்தவான் விசுவாசத்தினால் சிலுவையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கையில், புஏ பரிசுத்தவான் விசுவாசத்தினால் சிலுவையைப் பின்னோக்கிக் காண்கின்றார். தேவனுடைய நோக்கியிலிருந்து காணுகையில், கிறிஸ்து உலகத் தோற்றத்திற்கு முன்பிருந்தே அடிக்கப்பட்டவராய் இருந்தார் (***1 பேது. 1:20*** மற்றும் ***வெளி. 13:8*** ஆகியவற்றைக் காணவும்). தேவன் பஏ பரிசுத்தவான்களுக்கு (கிறிஸ்துவின்) இரத்தத்தை "எதிர்நோக்கில்" செயல் முறைப்படுத்தினார் மற்றும் அவர் புஏ பரிசுத்தவான்களுக்கு அதை "பின்நோக்கில்" செயல்முறைப்படுத்தினார்.

- <u>விசுவாசத்தின் அர்த்தம்</u>

வேதாகம ரீதியாக, விசுவாசம் என்பது,

- தேவனில் விசுவாசம் கொள்ளுதல்
- நமது பாவங்களுக்கு மன்னிப்புக்கென்று தனிப்பட்ட செலுத்துதலை அளிக்க சிலுவையில் கிறிஸ்துவின் மரணத்தின் மீது நம்பிக்கை கொள்ளுதல்.
- கிறிஸ்துவை மீட்பராகப் பெறுவதால் மீட்பின் இலவச கொடையைப் பெறுதல் என்பவற்றின் செயல்பாடாக உள்ளது.

விசுவாசம் என்பது தேவனிடத்தில் உங்கள் இயேசு கிறிஸ்து மூலமாக மீட்கும்படி **கேட்பதும்**, அவருடைய சித்தமான அவரது வசனத்தின் அடிப்படையில் **நம்பிக்கை** கொள்ளுவதுமாக உள்ளது.

யோவா. 5:24

- <u>விசுவாசத்தின் குறிக்கோள்</u>

இரட்சிக்கும் விசுவாசமானது தேவனையே எப்பொழுதும் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

ரோமர் 9:32-33

- <u>விசுவாசத்தின் உட்பொருள்</u>

ஒருவர் தாம் மீட்கப்படுவதற்கு மிகச் சரியாக எதை விசுவாசிக்க வேண்டும்? மீட்கும் விசுவாசம் என்பது நீங்கள் இழந்து போகப்பட்டு இருக்கிறீர்கள் என்று நம்புவதையும் மற்றும் பின்வருபவைகளை விசுவாசிப்பதையும் உள்ளடக்கியிருக்கின்றது:

- இயேசு தேவனாயிருக்கிறார் (***ரோமர் 10:9-10***)
- நமது பாவங்களுக்கு பதிலாக இயேசு சிலுவையில் மரித்தார்.
- இயேசு அடக்கம் பண்ணப்பட்டு 3ம் நாளில் உயிர்த்தெழுந்தார் (***1 கொரி. 15:3-5***).

- <u>மனந்திரும்புதல் மற்றும் விசுவாசம் ஆகியவற்றின் உறவுமுறைகள்</u>

  இரட்சிப்புக்கு மனந்திரும்புதல் தேவைப்படுகின்றது, ஆனால் அது விசுவாசத்தி லிருந்து பிரிக்கப்பட்ட அல்லது விசுவாசத்திலிருந்து விலகி நிற்கிற ஒரு விஷயமாய் இருப்பதில்லை.

  "மனந்திரும்புதல்" என்றால் ஒருவர்,
  - தேவனைப் பற்றி
  - நீங்கள் ஒரு பாவி என்பது பற்றி
  - உங்களுக்கு இரட்சிப்பு தேவை என்பது பற்றி

  தனது சிந்தையை மாற்றிக் கொள்ளுதல் என்று அர்த்தப்படுகிறது. இது பாவத்திலிருந்து விலகி தேவனை நோக்கித் திரும்பி வருதலைக் கொண்டு வருகிறது.

  அப். 26:20

  மனந்திரும்புதலும் நம்பிக்கையும் விசுவாசம் என்ற நாணயத்தின் இரு முகப்புக்களாக உள்ளன, இவை வேத வசனங்களில் ஒன்று கூட்டியே பயன் படுத்தப்படுகின்றன. எ.கா.

  "மனந்திரும்பி விசுவாசியுங்கள்" ***மாற். 1:14-15***

- கர்த்தத்துவ இரட்சிப்பின் சில வடிவங்களினுடைய தவறு

  ஒருவர் தாம் மீட்கப்படுவதற்கு இயேசுவை "கர்த்தர்" (எஜமானர்) என்று நடைமுறையில் உணர்ந்து அறிய வேண்டுமா?
  ரோமர் 10:9

  இரட்சிப்பின் நிபந்தனைகளில் இயேசு கர்த்தர் என்று கூறுதல் என்பது அவருடைய தெய்வீகத்தை, அதாவது அவர் தேவனாகவும் தகுதி நிலையில் எல்லாருக்கும் எஜமானராகவும் (கர்த்தராகவும்) இருக்கின்றார் என்பதை ஒப்புக் கொள்ளுதல் ஆகும். இது நமது வாழ்வின் குறிப்பிட்ட பகுதி, இயக்கம், கட்டுப்பாடு, செல்வாக்கு முதலியவற்றில் கிறிஸ்துவை கர்த்தர் என்ற வகையில் உணர்ந்து அறிந்து கொள்ளுதலுடன் தொடர்புடையதாய் இருப்பதில்லை. கர்த்தர் அல்லது எஜமானர் என்ற வகையில் இயேசுவை நடைமுறையில் அறியும் இந்த உணர்ந்தறிதலானது இரட்சிப்பின் வேளையில் வரலாம், ஆனால் இது வழக்கமாக பிற்பாடு ஒருவர் தம் வாழ்வைக் கிறிஸ்துவுக்கு கட்டுப்படுத்தி ஒப்புக் கொடுத்தல் என்றால் என்ன என்பதை ப் புரிந்து கொள்ளும் பொழுது வருவதாக உள்ளது. (***லூக். 9:23; ரோமர் 12:1; 1 பேது. 3:15*** ஆகியவற்றைக் காணவும்)

  கிறிஸ்துவில் உள்ள விசுவாசமே இரட்சிப்புக்கு முழுமையான தேவையாக உள்ளது.
  யோவா. 3:16
  யோவா. 17:3
  அப். 10:43

  இரட்சிப்புக்கு விசுவாசத்தை தவிர வேறு எந்தத் தேவையையும் கூட்டுதல் என்பது கிறிஸ்துவின் கிருபையை ஒன்றுமற்றதாக்கும் செயலாக உள்ளது (***கலா. 2:21***ஐக் காணவும்).

பயிற்சி: மனிதனை மீட்க தேவனைத் தூண்டியது எது? மனிதனை மீட்பதற்குத் தேவன் கடமைப்பட்டவராய் இருந்தாரா?

____

____

____

____

இ. இரட்சிப்பில் தேவனுடைய தேர்ந்தெடுக்கும் நோக்கம்

தேர்ந்து கொள்ளுதல்/தேர்வு செய்தல் என்பது, சில மக்களை மீட்க வேண்டும் என்று தேவன் தீர்மானித்ததினால் அவர் தம் இரக்கத்தில் செயல்முறைப் படுத்திய உலகியலுக்கு முற்பட்ட தேவனுடைய தெரிந்து கொள்ளுதலாக உள்ளது.

எபே. 1:4-6, 11
ரோமர் 9:11-24
அப். 13:48
யோவா. 6:44
யோவா. 17:1-6, 12
1 பேது. 1:1-2
2 பேது. 1:3
2 தீமோ. 2:10
வெளி. 3:5
வெளி. 13:8
வெளி. 17:8
வெளி. 20:15
வெளி. 21:27

தேர்ந்து கொள்ளுதல் பற்றிய பல சத்தியங்கள் எடுத்துரைக்கப்பட வேண்டியதாக உள்ளது:

- தேர்ந்து கொள்ளுதல் என்பது மனிதனுடையதல்ல ஆனால் அது தேவனுடைய தனிச் சிறப்புரிமையாகவும் அவருடைய பணியாகவும் உள்ளது. தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் யார் என்பதைத் தேவனே அறிகின்றார்.
- தேர்ந்து கொள்ளுதல் என்பது இராஜரீகமான தேவனால் அவரது இரக்கம் மற்றும் கிருபையின் காரணமாகச் செயல்படுவதன் அடிப்படையில் ஆனதாக உள்ளதேயல்லாமல், எவரொருவரின் தனிப்பட்ட தகுதியின் அடிப்படையில் அமைவதில்லை.
- தேர்ந்து கொள்ளுதல் என்பது தேவனுடைய மகிமையையும் நற்பண்பையையும் பிரதிபலிக்கின்றது.

- தேர்ந்து கொள்ளுதல் என்பது மக்களின் மத்தியில் "சார்புநிலை அல்லது ஒப்பீட்டு நீதி"யின் கருத்தை ஒன்றுமற்றதாக்குகின்றது.
- எவரொருவரும் எவ்வழியிலாவது மீட்கபடுவதற்குத் தகுதியுடையவராய் இல்லாதிருப்பதால், தேவனுக்கு எதிராக முறையிடுவதற்கான அடிப்படை ஆதாரங்கள் எதுவும் இருப்பதில்லை.
  ரோமர் 3:9-18
  யோவா. 3:18
- தேர்ந்து கொள்ளுதல் என்பது சுவிசேஷ அறிவிப்பின் அவசியத்தை நீக்கிப் போடுவதில்லை. தேர்ந்து கொள்ளுதல் பற்றிப் போதித்த பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க நிர்ப்பந்தம் பண்ணப்பட்டதையும் உணர்ந்தார்.
  1 கொரி. 9:16
- தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் மீட்கும் விசுவாசத்தைச் செயல்படுத்தாமல் மீட்கப் படுவதில்லை.
  ரோமர் 1:16; யோவா. 3:36

தெய்வீக இராஜரீகமான தேர்ந்து கொள்ளுதல் மற்றும் விசுவாசத்தினால் இரட்சிப்பு (அல்லது மீட்கப்படுவதற்காக விசுவாசிக்க வேண்டிய மனிதனின் பொறுப்பு) ஆகிய இரண்டுமே இணையான சத்தியங்களாக உள்ளன, இவ்விரண்டுமே வேத வசனத்தினால் போதிக்கப் படுகின்றன மற்றும் இவ்விரண்டுமே விசுவாசத்தினால் சத்தியம் என்ற வகையில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவைகளாய் உள்ளன. இவைகள் மனித சிந்தையில் ஒப்புரவாக்கப் பட முடியாது. வேத வசனத்தில் இவ்விதமாக இணையானதாகவும் ஆனால் முரண்படுபவை யாக காணப்படுவதாகவும் உள்ள சத்தியங்களுக்கு இன்னுமொரு எடுத்துக்காட்டை **அப். 2:22-24**ல் காணவும், இது கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்ததற்கு யார் பொறுப்பாளியாய் இருக்கிறார் என்பதுடன் தொடர்புடையதாக உள்ளது. தேர்ந்து கொள்ளுதல் என்பதை நாம் புரிந்து கொள்ளாதிருக்கலாம் என்பது இதன் சத்தியத்தை ஒன்றுமற்றதாக்கி விடுவதில்லை (**ரோமர் 11:33-36**ஐக் காணவும்) ஒரு காரானது எப்படி வேலை செய்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளாமல் இருந்தாலும் அதை ஓட்டிச் செல்லுதல் நம்மால் மறுக்கப்பட்டால் எப்படியிருக்கும்?

பாவத்தின் காரணமாக எல்லா மனிதரும் தேவனுக்கு முன்பாக ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்டு நிற்கையில், எவரொருவரும் தேவன் அவர்களை அனுப்புவதால் நரகத்திற்கு (நித்திய தண்டனைக்கு) செல்லுவதில்லை, ஆனால் அவர்கள் தங்களுக்குத் தேவன் வெளிப்படுத்திய சத்தியத்தைப் புறக்கணித்தலைத் தேர்ந்து கொள்வதினாலேயே நரகத்திற்குச் செல்லுகின்றனர்.

ரோமர் 1:18
யோவா. 3:36
யோவா. 8:24
2 தெச. 1:5-12
2 தெச. 2:8-12

தொடர்புடைய மற்ற சில சொற்றொடர்கள்:

- அழைத்தல் - இது தேவன் ஒரு நபரின் இரட்சிப்புக்கென்று தம்மிடத்தில் அவரை இழுத்துக் கொள்ளுதல் என்பதைக் குறிக்கின்றது. ஆனால் தேவன் ஒருக்காலும் ஒரு நபரின் சித்தத்தின்மீது மேலாதிக்கம் செய்வதோ அல்லது மீட்கப்படும்படி அவரை பலவந்தப்படுத்துவதோ இல்லை. தேவனுடைய இழுத்துக் கொள்ளுதலானது கடைசியில் அந்நபர் மனப் பூர்வமாய் வருதலில் அவரை வெற்றிக் கொள்ளும்.
  யோவா. 6:44

- முன் குறித்தல் - இது வேத வசனத்தில் இழந்து போகப்பட்டவர்களின் தொடர்பாகப் பயன்படுத்தப்படுவதில்லை. தேவன் சிலரை நரகத்திற்கு என்றும் மற்றவர்களைப் பரலோகத்திற்கென்றும் முன் குறித்து வைப்பதில்லை. முன் குறித்தல் என்பது விசுவாசிகளுக்கு தேவன் கொண்டுள்ள நிறைவான இலக்கைக் குறிக்கின்றது - அவர்கள் தேவனுடைய சுவிகார புத்திரர்கள் என்ற வகையில், கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பானவர்களாய் இருக்கும்படி தேவனால் முன் குறிக்கப்பட்டுள்ளனர்.
  ரோமர் 8:28-30
  எபே. 1:5, 11
  பிலி. 3:20-21

- முன்னறிவு - இது தேவன் தம்மில் விசுவாசம் கொள்பவர்கள் யார் என்பதை முன்னதாகவே அறிந்துள்ளார் என்ற உண்மையைக் குறிக்கின்றது. ஆனால் தேவனுடைய முன்னறிவானது அவர்கள் விசுவாசிக்கக் காரணமாவதில்லை.
  1 பேது. 1:1-2
  யோவா. 10:14-16

  தேர்ந்து கொள்ளுதல் என்பது தேவனுடைய பொறுப்பாக உள்ளது - சுவிசேஷத்தை அறிவித்தல் என்பது நமது பொறுப்பாக உள்ளது.

பயிற்சி: தேர்ந்தெடுத்தல் என்ற உபதேசத்தை விசுவாசிகளில் பலர் இவ்வளவு பலமாக மறுப்பது ஏன்? இது இரட்சிப்பைப் பற்றிய அவர்களின் கண்ணோட்டம் குறித்து வெளிப்படுத்துவது என்ன?

____

____

____

____

ஈ. இரட்சிப்பில் பரிசுத்த ஆவியானவரின் பணி

இரட்சிப்பில் பரிசுத்த ஆவியானவர் மிகவும் குறிப்பிடத் தக்க வகையில் பணியாற்று கிறார், நாம் இதைப் பற்றி ஏற்கனவே, பரிசுத்த ஆவியானவர் பற்றிய உபதேசத்தின் கீழ் அவருடைய தற்கால ஊழியம் மற்றும் பணி என்ற தலைப்பில் கலந்துரையாடி இருக்கின்றோம். இந்த ஊழியமானது பாவத்தை உணர்த்துதல், பாத்திலிருந்து சுத்திகரித்தல், மற்றும் புதிய ஜீவனை அருளுதல் ஆகியவற்றை உள்ளடக்கி யிருக்கின்றது.
1 பேது. 1:2
தீத்து 3:5

உ. கிறிஸ்துவின் பரிகாரத்தினுடைய இயல்பும் விரிவளவும்

- **பரிகாரத்தின் இயல்பு**

  பரிகாரம் என்பது பாவத்தை **"மேலாக மூடுதல்"** அல்லது தேவனுக்கு ஏற்புடைய/தகுதியான கிரயத்தை (நிறைவை) ஏற்படுத்துதல் என்பதைச் செய்வதாக உள்ளது, ஏனென்றால் பாவம் என்பது அவரது பரிசுத்த பண்பை மீறிப் போடுதலாக உள்ளது.

  பரிசுத்த தேவனுக்கு எதிரான பாவமானது "நிவிர்த்தி செய்யப்பட" வேண்டியதாக உள்ளது. தக்க பரிகாரம் செய்யப்படவில்லையென்றால் தேவன் பாவத்தை மன்னிக்க இயலாது. பரிகாரம் என்பதன் கருத்தானது பழைய ஏற்பாட்டில் (எ.கா. லேவி. 16) வேர் கொண்டுள்ளது மற்றும் எல்லா மனிதர்களின் பாவங்களுக்கும் நிரந்தரமான பரிகாரத்தை ஏற்படுத்துபவராக கிறிஸ்து தேவனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

  மத். 1:21

  யோவா. 1:29

  1 பேது. 3:18

  முதலில் கூடாரத்திலும் பின்பு தேவாலயத்திலும் மகாப் பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருந்த உடன்படிக்கையின் பேழையானது "கிருபாசனத்தை" அல்லது "பரிகார இடத்தை" கொண்டிருந்தது, இதன் மீது, பேழைக்குள் வைக்கப்பட்டிருந்த கற்பலகைகளினால் குறிக்கப்பட்ட பத்து கட்டளைகளை மக்கள் மீறிய பாவத்தின் காரணமாகப் பலியிடப்பட்ட விலங்குகளின் இரத்தத்தைப் பிரதான ஆசாரியர் தெளிப்பார்.

  ஆனால் **எபிரெய** நிருபம் சுட்டிக் காட்டுகின்றபடி, இது பாவத்தைக் கையாளுவதற்கான ஒரு தற்காலிகமான வழியாகவே இருந்தது, மற்றும் இது முறைப்படி தனிநபர்களுக்காகவும், ஆண்டு தோறும் மக்களுக்காகவும் செய்யப்பட வேண்டியதாக இருந்தது. பிரதான ஆசாரியர் மக்களின் பாவங்களுக்கு "நிவிர்த்தி செய்தலை" மேற்கொள்ளும் முன்பு தனக்காகப் பலி செலுத்த வேண்டியிருந்தது.

  எபி. 7:26-28

  எபி. 9:1-9

  எபி. 9:11-14

  மற்றும் பாவங்களின் நிவாரணத்திற்கு தற்காலிகமான பலியாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய பலி மிருகம் முழுமையானதாக, குற்றம் இல்லாததாக இருக்க வேண்டியது போலவே பாவங்களைக் கையாளுவதற்கான கடைசி பலியான தேவனுடைய மேசியாவும் பூரணப்பட்டவராக (பாவமற்றவராக) இருந்து அப்பலியை நிறைவேற்றினார்.

  சிலுவையில் கிறிஸ்துவின் மரணத்தில் தேவன், மனிதர்களின் பாவங்களுக்கு நிவாரணம் தருகின்ற நிறைவான ஒரு வழியை - தமது ஒரே குமாரனுடைய விலையேறப் பெற்ற மரிக்க வேண்டியிருந்தது - அவர் மரிக்கும்படியாக மனிதராகவும் பாவமற்றவராய் இருக்கும்படியாக தெய்வீகமானவராகவும் இருந்தார்.

  எபி. 2:17

  1 யோவா. 4:10

  1 பேது. 1:18-19

இயேசு கிறிஸ்துவின் பரிகாரமானது,

- ***தியாகம் நிறைந்ததாக உள்ளது***

  கிறிஸ்து, பிதாவின் மீது தாம் கொண்டிருந்த அன்பு மற்றும் கீழ்ப்படிதலினால் தம் ஜீவனை ஒரு பலிக் கொடையாக அளித்தார்.

  யோவா. 3:16
  யோவா. 10:17-18
  1 கொரி. 5:7
  எபி. 9:26
  எபி. 12:2

  பலி என்பது மதிப்புமிக்க எதையேனும் கொடுப்பதை உள்ளடக்குகிறது. மனிதர்களை மீட்பதற்குத் தேவன் தமது சொந்த குமாரனையே கொடுத்தார். கிறிஸ்து தம்மையே பலியாக்கினார்!

- ***பதிலீடானதாக உள்ளது***

  தேவனுடைய பாவமற்ற மகன் என்ற வகையில் கிறிஸ்து தமக்காக பலி செலுத்த வேண்டிய அவசியம் இல்லாது போயிற்று. சிலுவையில் அவரது பலியானது எல்லா மனிதர்களின் பாவங்களுக்காகப் **பதிலீடாகச் செலுத்தப்பட்டதாய்** இருந்தது. மனிதர்கள் ஏற்படுத்த முடியாதிருந்த பூரணமான, நிலையான பலியை மனிதர்களுக்காக கிறிஸ்து செலுத்தினார். யாரோ ஒருவர் கூறியபடி, "நாம் செலுத்த முடியாத ஒரு கடன்பட்டிருந்தோம், கிறிஸ்து தாம் பட்டிராத ஒரு கடனைச் செலுத்தினார்."

  கிறிஸ்துவின் பலியானது, நமக்காகத் தண்டத்தைச் செலுத்த அவர் தம் சரீரத்தில நமது பாவங்களைச் சுமந்த வகையில் "எல்லாருக்குமாக ஒரே தரம்" செலுத்தப்பட்டதாகும்.

  எபி. 7:27
  எபி. 9:26
  மாற். 10:45
  1 பேது. 2:24
  2 கொரி. 5:21

- ***போதுமானதாக உள்ளது***

  சிலுவையில் கிறிஸ்துவின் மரணம் எல்லாக் காலங்களிலும் எல்லா மனிதர்களும் செய்யும் பாவங்களுக்கு கிரயம் (பரிகாரம்) செலுத்தப் போதுமானதாய் இருந்தது, அதை தேவன் அவ்வாறே ஏற்றுக் கொண்டார். கிறிஸ்துவின் பதிலீடான பரிகாரத்தில் தேவன் திருப்தியடைந்தார்.

  எபி. 10:10
  எபி. 10:13-14
  1 பேது. 3:18
  1 யோவா. 2:2
  எபி. 1:3

– **நிறைவானது**

கிறிஸ்துவின் ஒரே முறையான பூரணமான பலியானது பாவத்திற்கு தேவையான நிறைவான (கடைசியான) பலியாக இருந்தது.
எபி. 9:12-15
எபி. 10:17-18

– **நிரந்தரமானது**

கிறிஸ்துவின் பரிபூரணமான பலியானது பாவத்தை கையாளுவதற்கு நிரந்தரமான வழி ஒன்றை அருளியது.
எபி. 10:12-14
எபி. 9:28
1 யோவா. 1:7-9

பயிற்சி: மீட்புக்கான தேவனுடைய திட்டம் அவரது பாவமற்ற மகனை உள்ளடக்கியது ஏன்? நீங்கள் மீட்பை இவ்வழியில் வடிவமைத்திருப்பீர்களா?

____

____

____

____

- <u>பரிகாரத்தின் விரிவளவு</u>

  கிறிஸ்து தேர்ந்து கொள்ளப்பட்டவர்களுக்காக (மீட்கப்படும்படி தேவனால் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்பட்டவர்களுக்காக) மட்டுமே மரித்தார் என்று சிலர் வாதம் செய்து கொண்டிருக்கையில், வேத வசனத்தின் சாட்சியம், சிலுவையில் அளிக்கப்பட்ட பாவமன்னிப்பை விசுவாசத்தினால் பெற்றுக் கொள்வதை எல்லாரும் தேர்ந்து கொள்ள மாட்டார்கள் என்ற காரணத்தினால் எல்லாரும் மீட்கப்பட மாட்டார்கள் என்றாலும், கிறிஸ்து எல்லா மனிதர்களுக்காகவும் மரித்தார் என்று தெளிவாக எடுத்துரைக்கிறது. இரட்சிப்பு எல்லாருக்கும் கிடைப்பதாகவும், எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று தேவன் விருப்பம் கொண்டுள்ளதாகவும் இருக்கையில், அவிசுவாசத்தின் காரணமாக எல்லா மனிதர்களும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ள மாட்டார்கள்
  1 தீமோ. 2:3-6
  1 தீமோ. 4:10
  யோவா. 3:16

அப். 17:30-31
ரோமர் 10:12-13
1 யோவா. 2:2
எபி. 2:9

இயேசு தேவபக்தியற்ற, இழந்து போகப்பட்ட எல்லா மனிதர்களுக்காவும் - அவரைப் புறக்கணிக்கிறவர்களுக்காகக் கூட - மரித்தார். அந்தக் கருத்தில், கிறிஸ்த எல்லா மனிதர்களையும் மீட்படையக் கூடியவர்களாகவே தர வழைத்துள்ளார்.
ரோமர் 5:6-8
2 பேது. 2:1

– *<u>சிலுவையில் கிறிஸ்துவின் ஊழியத்தின் 3 அம்சங்கள்</u>*

சிலுவையில் கிறிஸ்துவின் ஊழியம் (அவரது) சிந்தையில் 3 அடிப்படை நோக்கங்களுடன் வடிவமைக்கப்பட்டது:

ஒப்புரவாக்குதல் | மீட்பு | பரிகாரம்

- *<u>ஒப்புரவாக்குதல்</u> (மனிதனை நோக்கியது)*

ஒப்புரவாக்குதல் என்றால் உடைந்து போனதை **மீளக் கட்டுதல்** என்று அர்த்தப்படுகின்றது. தேவனுடன் மனிதனின் உறவு உடைந்து போக பாவம் காரணமாய் இருந்தது. பாவம் நிறைந்த மனிதர்கள் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டு, தேவனுக்கு அந்நியர்களாகவும் விரோதிகளாகவும் இருக்கின்றனர். கிறிஸ்துவுக்குள் தேவன் உலகத்தாரை ஒப்புரவாக்கி மனிதர்கள் தம்முடன் சரியான உறவுமுறைக்குத் திரும்பி வருவதைச் சாத்தியமாக்கினார். தேவன் மனிதனுடன் அல்ல ஆனால் மனிதனே தேவனுடன் ஒப்புரவாக வேண்டியது அவசியமாக உள்ளது.
2 கொரி. 5:16-21
ரோமர் 5:10-11
கொலோ. 1:21-22

- *<u>மீட்பு (பாவத்தை</u> நோக்கியது)*

மீட்டல் என்பது அவர் செலுத்தியுள்ள விலையினால் நம்மை **விடுவித்தல்** அல்லது திரும்ப வாங்கிக் கொள்ளுதல் என்று அர்த்தப்படுகின்றது. இழந்து போகப்பட்ட மனிதர்கள் பாவத்திற்கும் சாத்தானுக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கின்றார்கள். மனிதர்கள் இனியும் பாவத்திற்கு அடிமைகளாய் இராதபடிக்கு கிறிஸ்து மீட்பின்/விடுதலையின் விலையைச் சிலுவையில் செலுத்தி விட்டார்.
மாற்கு 10:45
கலா. 4:4-5
தீத்து 2:14
கலா. 3:13-14
1 பேது. 1:18
கொலோ. 1:13-14
எபி. 9:15

- <u>பரிகாரம்</u> (தேவனை நோக்கியது)

பாவம் என்பது தேவனுடைய பரிசுத்த பண்பை மீறுதல் என்பதாக உள்ளது. அந்த பாவத்திற்கு போதிய, தகுதியான விலை செலுத்தப் பட வேண்டும் அல்லது அதற்குரிய தண்டம் நிலைநிற்க வேண்டும் என்று தேவனுடைய நீதி கேட்கின்றது. தேவனுடைய பரிசுத்தமும் நீதியும் "பரிகாரம்" பெற்றுக் கொள்ள வேண்டும் மற்றும் அவருடைய கோபம் அமைதிப்படுத்தப்பட வேண்டும் (திருப்தி செய்யப்பட மற்றும் பரிகாரம் செலுத்தப்பட வேண்டும்). சிலுவை யில் கிறிஸ்துவின் மரணம், பரிசுத்த தேவனைத் திருப்திப்படுத்தக் கூடிய போதுமான ஒரே விலையைச் செலுத்திற்று.

1 யோவான் 2:2ஐக் காணவும் - இங்கு "பரிகார பலி" என்பது நிவிர்த்தி செய்கிற பலி என்பதாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
ரோமர் 3:26ஐக் காணவும் - இங்கு "பரிகார பலி" என்பது கிருபாதார பலி என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
எபி. 2:17ஐக் காணவும் - இங்கு "நிவிர்த்தி செய்கிறதற்கேதுவாக" என்பது நிவிர்த்தியை உள்ளடக்கியிருக்கின்றது.

எனவே கிறிஸ்து
பாவத்திற்கு மனிதனின் அடிமைத்தனம் (மீட்பு)
தேவனுடன் மனிதனுக்கிருந்து முறிந்து போன உறவு (ஒப்புரவாக்குதல்)
தேவனுடைய பண்பை மனிதன் மீறி நடந்த செயல் (பரிகாரம்/ நிவிர்த்தி)
ஆகியவற்றைக் கையாண்டுள்ளார்.

பயிற்சி: கிறிஸ்து - தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்காக மாத்திரமல்ல - எல்லா மக்களுக்காகவும் மரித்தார் என்பது ஏன் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது?

____

____

____

____

மீட்பின் இயல்பு மற்றும் விரிவளவு பற்றிய மூன்று தனிச் சிறந்த கண்ணோட்டங்களை பக்கம் 233ல் உள்ள வரைவட்டவணை முன் வைக்கின்றது.

மூன்று கண்ணோக்கக் கருத்துக்களிலிருந்து மீட்பு (பற்றிய விளக்கம்)

கண்டிப்பான (தீவிரமான) கால்வினீயர்கள்	மித வாத கால் வினியர்கள்	**அர்மீனியனியம்**
1. முழுமையான சீர்கேடு	1. முழுமையான சீர்கேடு	1. மனிதன் பாவத்தினால் மாசுப்பட்டுள்ளான்.
2. நிபந்தனையற்று தேர்ந்து கொள்ளப்படுதல்	2. தெய்வீக தேர்ந்து கொள்ளுதல்	2. மீட்கப்படும் பொழுது தேர்ந்து கொள்ளப்பட்டவன் ஆகிறான்.
3. வரையறைக்குட்பட்ட நிவிர்த்தி	3. எல்லையற்ற நிவிர்த்தி	3. எல்லையற்ற நிவிர்த்தி.
4. எதிர்த்து நிற்க இயலாத கிருபை	4. பயன் அளிக்கக் கூடிய கிருபை	4. எதிர்த்து நிற்கக்க கூடிய கிருபை.
5. பரிசுத்தவான்களின் நீடிய பொறுமை	5. பரிசுத்தவான்களின் நீடிய பொறுமை	5. மீட்பை இழந்து போகக் கூடும்.
கவனம்	கவனம்	கவனம்
(1.) எல்லா தேவனுடையது - மனிதனுடையது ஒன்றுமில்லை	(1) எல்லாம் தேவனுடையதே, ஆனால் மனிதன் விசுவாசத்தினால் பதில்செயல் செய்ய வேண்டும்.	(1) மனிதனாலேயே எல்லாம் தொடங்கப்படுகிறது, ஆனால் பரிசுத்த ஆவி போதுமான விசுவாசம் தருகிறார்.
(2.) தேவனுடைய பயனளிக்கக் கூடிய கிருபை = மனிதனுடைய சொந்த விசுவாசம்	(2.) இரட்சிப்புக்கு பயனளிக்கக் கூடிய கிருபை + சொந்த விசுவாசம் அவசியம்	(2) விசுவாசிக்க கிருபை = சொந்த விசுவாசம்
(3.) தேர்ந்து கொள்ளப்பட்டவர்களுக்காக மட்டுமே கிறிஸ்து மரித்தார்.	(3.) கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார் மற்றும் எல்லாரையும் மீட்படையக் கூடும்படி தரவழைத்தார்.	(3.) கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார் ஆனால் கிரியைகளின் வாயிலாகவே உட்படுத்துகிறார்.
தேவனுடைய பங்கின் மீது மிக அதிகமான வலியுறுத்தம்	**தேவனுடைய மற்றும் மனிதனுடைய பங்கின் மீது சமமான அளவில் வலியுறுத்தம்**	**மனிதனுடைய பங்கின்மீது மிக அதிகமான வலியுறுத்தம்.**

ஊ. **இரட்சிப்பின் விளைவுகள்**

விசுவாசத்தினால் கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளத் தேர்ந்து கொண்டு சிலுவையில் அவரது பரிகார ஊழியத்தை ஏற்றுக் கொள்கின்றவர்களுக்கு இரட்சிப்பு எதை நிறைவேற்றுகிறது?

மீட்பில்/இரட்சிப்பில் இருந்து ஏறக்குறைய எல்லையற்ற எண்ணிக்கையிலான பயன்கள் விசுவாசிக்குப் பெருக்கெடுத்து வருகின்றன!

- *இரட்சிப்பின் பயன்கள்*

1. ***நீதிமானாக்கப்படுதல்*** *- விசுவாசிக்காக கிறிஸ்து அவரது தண்டனைச் செலுத்தியுள்ளதால் தேவனுக்கு முன்பாக விசுவாசி* ***பாவக் குற்றம்*** *இல்லாதிருக்கிறார் என்ற சட்டப்பூர்வமான அறிவிப்பு, மற்றும் விசுவாசிக்கு நீதியைச் சட்டபூர்வமாகச் சுமத்துதல், இவ்விதமாக ஆதாமின் பாவத்தினுடைய செயல் விளைவைத் திருப்பி விடுதல்.*
   ரோமர் 3:21-26
   ரோமர் 5:1, 9
   2 கொரி. 5:21
   பிலி. 3:8-9

   நீதிமானாக்கப்படுதல் என்பது ஆகிய இரண்டையும் அர்த்தப்படுத்துகிறது.
   - *குற்றமற்றவர் என்று அறிவித்தல் (-)*
   - *கிறிஸ்துவின் நீதியை அருளுதல் (+)*

2. ***பாவங்களுக்கு மன்னிப்பு***

   மன்னிக்கப்பட்டிருத்தல் என்றால் தேவன் நமது பாவங்களை இனியும் நமக்கெதிராகப் பற்றிக் கொண்டிருப்பதில்லை மற்றும் அவர் நம்மை மன்னித்திருக்கிறார் என்று அர்த்தப்படுகின்றது. விசுவாசிகள் மீட்கப்பட்டுள்ளனர் அல்லது தங்கள் பாவங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர் மற்றும் அவர்கள் இனியும் தேவகோபத்தை எதிர்கொள்வதோ அல்லது பாவத்திற்கான ஆக்கினைத் தீர்ப்பின் கீழ் நிற்பதோ இல்லை.
   அப். 10:43
   எபே. 1:7
   யோவா. 3:36
   ரோமர் 8:1

3. ***மறுபடி பிறப்பிக்கப்படுதல்***

   மறுபடி பிறப்பிக்கப்படுதல் என்றால் புதிய வாழ்வு கொடுக்கப்படுதல் என்று அர்த்தப்படுகின்றது - மேலிருந்து ஆவிக்குரிய வகையில் பிறத்தல் அல்லது மீண்டும் பிறத்தல். விசுவாசிகள் இரட்சிப்பில் தேவனிடமிருந்து புதிய ஜீவனைப் பெறுகின்றனர் மற்றும் கிறிஸ்துவுக்குள் புதுப்படைப்புகளாய் உள்ளனர். இப்பொழுது விசுவாசி பாவத்தில் மரித்திருப்பதற்குப் பதிலாக தேவனுக்குள் பிழைத்திருக்கிறார்.
   யோவா. 1:12-13
   யோவா. 3:3-8
   தீத்து 3:4-7
   2 கொரி. 5:17

ரோமர் 6:8-11
1 யோவா. 5:1
1 பேது. 1:3

4. பரிசுத்தமாக்கப்படுதல்

பரிசுத்தமாக்கப்பட்டிருத்தல் என்பது பின்வருமாறு அர்த்தப்படுகிறது:

- பாவத்திலிருந்து முழுமையாக **சுத்திகரிக்கப்படுதல்**
  2 பேது. 1:9
  எபி. 9:14

- பரிசுத்தமும் நீதியுமாக்கப்படுதல்
  1 கொரி. 1:30
  எபே. 1:4
  2 கொரி. 5:21

- தேவனுக்கென்றும் அவரது ஊழியத்திற்கென்றும் பிரித்து வைக்கப்படுதல்.
  ரோமர் 1:1
  ரோமர் 15:16

கிறிஸ்துவுக்குள் விசுவாசியின் தகுதிநிலைப் பரிசுத்தம் என்பது மீட்பில் முழுமைப்படுத்தப் படுகின்றது ஏனெனில் அவர் கிறிஸ்துவின் நீதியையே பெற்றுள்ளார் (**எபே. 5:25-27; எபே. 5:3**); அவரது நடைமுறைப் பரிசுத்தம் என்பது வசனத்திற்குக் கீழ்ப்படிதலில் ஆவியானவரின் வல்லமையினால் இன்னும் அதிகம் பரிசுத்தமாகின்ற செயல்முறையாக உள்ளது.
ரோமர் 8:12-14
1 பேது. 1:14-16
எபி. 12:10-14
2 கொரி. 7:1
நடைமுறையில் பரிசுத்தமாக்கப்படுதல் என்பது அன்றாட வாழ்வில் - பண்பிலும் நடக்கையிலும் - கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பானவர்களாய் ஆகும் செயல்முறையாக உள்ளது.

5. **பாவத்திலிருந்து விடுதலை**

- **பாவத்திற்கு அடிமைப்படுதல்**
  விசுவாசிகள் இப்பொழுது பாவத்திற்கல்ல நீதிக்கே அடிமைகளாகக் கட்டப்பட்டு இருக்கின்றனர்.
  ரோமர் 6:17-18

- **பாவத்தின் ஆக்கினைத் தீர்ப்பு**
  விசுவாசிகள் இனியும் ஆக்கினைத் தீர்ப்புக்குக் கீழாகவும் பாவத்தின் குற்றத்திலும் நிலைநிற்பதில்லை.
  ரோமர் 8:1

- **பாவத்தின் வல்லமை மற்றும் பாவ இயல்பு**
  விசுவாசிகள் பாவத்திற்கு மரித்தவர்களாகவும் பழைய இயல்பில் இருந்து விடுதலையானவர்களாகவும் உள்ளனர். ஒரு விசுவாசி பாவம் செய்தால் அது அவர் செய்யும்படித் தேர்ந்து கொள்வதினால் தானே தவிர அவர் செய்ய வேண்டியிருப்பதினால் அல்ல.
  ரோமர் 6:6-12

- **பாவத்திற்கான தண்டம்**
  இனியும் தேவகோபத்தை அதன் நித்திய தண்டனையுடன் எதிர் நோக்க வேண்டியதில்லை.
  ரோமர் 6:23
  1 தெச. 5:9

- **பிரமாணத்திற்கு அடிமைப்பட்டிருத்தல்**
  விசுவாசிகள் தங்களைக் கட்டி வைத்திருந்து தங்களின் பாவம் நிறைந்த தன்மையை வெளிப்படுத்தியிருந்த பிரமாணத்தின் கட்டுப்பாடுகளில் இருந்து விடுதலையாகி இருக்கின்றனர்.
  ரோமர் 7:5-6
  கலா. 5:1, 18

- **மரண பயம்**
  கிறிஸ்துவுக்குள் உள்ள விசுவாசிகள் மரண பயம் கொண்டிராதபடிக்கு கிறிஸ்து மரணத்தை வெற்றிக் கொண்டார்.
  எபி. 2:14-15
  1 கொரி. 15:54-57

தேவன் நோக்கம் கொண்டுள்ளபடி விசுவாசிகள் இவை எல்லாவற்றிலிருந்தும் இப்பொழுது விடுதலையாகியுள்ளார்கள்.

6. கிறிஸ்துவுக்குள் நித்திய ஜீவனைப் பெறுதல்

விசுவாசிகள் இப்பொழுது எப்பொழுதும் தேவனுடைய குமாரனின் நித்திய ஜீவனைப் பெற்றவர்களாய் உள்ளனர்.
யோவா. 17:3
1 யோவா. 5:10-12

நித்திய ஜீவன் என்பது விசுவாசிகள் கொண்டுள்ளதும் இப்பொழுதும் எப்பொழுதும் வெளிப்படுத்தப்பட வேண்டியதுமான கிறிஸ்துவின் ஜீவனாய் உள்ளது.

7. பரிசுத்த ஆவியானவரின் வரம் அருளப்படுகிறது

பரிசுத்த ஆவியானவர் தேவனால் அருளப்படும் வரமாக உள்ளார். அவர்,

- கிறிஸ்துவின் சரீரத்தில் **ஞானஸ்நானம்** பெற்றவர்களுக்கு
  1 கொரி. 12:13
- கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுடன் **அடையாளப்படுத்தப்பட்டவர்களுக்கு**
  ரோமர் 6:3-5
- **நிரந்தரமாக** வாசம் பண்ணும்படி
  1 கொரி. 3:16

தேவனால் அருளப்படுகிறார்.

- அவரது மீட்பின் வாக்குத்தத்தமாக **முத்திரையிடப்படுதல்**
  எபே. 1:13-14

- சபையில் ஊழியம் மற்றும் பக்திவிருத்திக்காக **வரம் அருளப்படுதல்**
  1 கொரி. 12:7-11
  1 கொரி. 14:12

- கிறிஸ்துவுக்கு சான்று பகர, தேவனுக்கு ஊழியம் செய்ய மற்றும் பரிசுத்தத்தில் நடந்து கொள்ள **வல்லமை அளிக்கப்படுதல்**
  அப். 1:8
  கொலோ. 1:28-29
  கலா. 5:16-18, 22-25

- துதி, ஊழியம், ஆராதனை மற்றும் நன்றிகள் செலுத்துதல் ஆகியவற்றிற்காக **நிரப்பப்படுதல்.**
  எபே. 5:18-20
  கொலோ. 3:15-17

பரிசுத்த ஆவியானவரின் வரமானது விசுவாசிகளுக்கு மீட்பின் பயன்களை உறுதிப்படுத்தி, அவர்கள் அந்த பயன்களை முழுமையாக அநுபவிக்க வல்லமையளிக்கின்றது.

8. தேவனுடைய இராஜ்யத்திற்கு மாற்றப்படுதல்

விசுவாசிகள் இப்பொழுது சாத்தானுடைய இராஜ்யத்திற்குப் பதிலாக தேவனுடைய இராஜ்யத்திற்குள் உறுப்பினர்களாய் உள்ளனர் மற்றும் அவர்கள் பரலோக இராஜ்யத்தின் குடிமக்களாகவும் இவ்வுலகில் அந்நியர்களாகவும் (பரதேசிகளாகவும்) உள்ளனர்.

பிலி. 3:20
1 பேது. 2:11-12
கொலோ. 1:13
அப். 26:18

விசுவாசிகள் ஒரு புதிய அரசரைக் கொண்டுள்ளனர் மற்றும் பூமியில் தேவனுடைய அரசின் அங்கமாக உள்ளனர்.

9. தேவனுடைய பிள்ளையாக சுவிகரித்துக் கொள்ளப்படுதல்

விசுவாசி, சாத்தானைத் தனது தகப்பனாகக் கொண்டிருப்பதற்குப் பதிலாக தேவனைத் தனது பிதாவாகக் கொண்டுள்ளார், இவர் பிதாவிடம் சென்று சேரும் வழி உட்பட பிள்ளைக்குரிய எல்லா சிலாக்கியங்களும் அருளப்பட்டவராய் இருக்கிறார்.

கலா. 4:1-7
யோவா. 1:12
ரோமர் 8:14-16
ரோமர் 5:1-2
எபி. 4:14-16

10. கிறிஸ்துவோடு உடன் சுதந்திரராய் இருப்பதாக அறிவிக்கப்படுதல்

விசுவாசிகள் பிதாவினால் குமாரனுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ள சகல ஆசீர்வாதங்களையும் கிறிஸ்துவுடன் பகிர்ந்து கொள்ளக் குறிக்கப் பட்டுள்ளனர்.
ரோமர் 8:17
கொலோ. 1:12
வெளி. 20:4-5

11. தேவனுக்குச் சிநேகிதராக்கப்படுதல்

விசுவாசி தேவனுக்கு விரோதியாய் இருப்பதற்குப் பதிலாக இப்பொழுது ஒரு சிநேகிதராக அவ்வுறவு மறைமுகமாய்க் குறிப்பிடும் அனைத்தையும் கொண்டவராக இருக்கின்றார்.
யோவா. 15:14-15
யாக். 2:23
யாக். 4:4

12. ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதிக்கப்படுதல்

கிறிஸ்துவுக்குள் ஒவ்வொரு விசுவாசியும் தேவனுக்குப் பிரியமான தேவபக்தி யுள்ள வாழ்வை வாழ்வதற்கு தேவையான ஒவ்வொன்றும் தரப்பட்டவராய் இருக்கின்றார்.
எபே. 1:3
2 பேது. 1:2-4

13. "கிறிஸ்துவுக்குள்" வைக்கப்பட்டு அவரால் உள்ளாக வாசம் பண்ணப்படுகிறார்

- விசுவாசியின் ஜீவன் கிறிஸ்துவின் ஜீவனுக்குள்ளாக இருக்கும்படி கிறிஸ்து விசுவாசிக்குள் வந்து வாசம் பண்ணுகிறார்.
  கொலோ. 3:3-4
  கலா. 2:20
  ரோமர் 8:9-11

- விசுவாசிகள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள் உறுப்பினர்களாக இருக்கின்றனர்.
  ரோமர் 6:3
  ரோமர் 12:3-8
  1 கொரி. 12:12-14, 27

14. நித்திய பாதுகாப்பு

தேவனுடைய தன்மையின் காரணமாக விசுவாசியின் இரட்சிப்பு பாதுகாக்கப் பட்டதாக உள்ளது. ஒரு நபர் தன்னைத் தானே இரட்சிக்க முடியாதது போலவே அவர் தம்மைத் தாமை "இரட்சிக்கப்படாதவராக" ஆக்க முடியாது. விசுவாசியானவர் தேவனுடைய வல்லமையினாலேயே மீட்புக்குக் காக்கப்பட்டுள்ளார்.
யோவா. 10:25-30
ரோமர் 8:31-39

1 பேது. 1:3-5
2 கொரி. 1:22
எபே. 4:30

நித்திய பாதுகாப்பைப் பற்றி வேதவசனம் தெளிவாய்ப் போதிக்கின்றது.

15. இரட்சிப்பிற்கு உறுதிப்பாடு

விசுவாசி அறிந்தாலும் அறியாவிட்டாலும், உணர்ந்தாலும் உணரா விட்டாலும் கிறிஸ்துவுக்குள் பாதுகாப்புடன் இருக்கின்றார்! இருப்பினும், விசுவாசி விசுவாசத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை உணர முடியும் ஏனென்றால் வசனத்தின் சத்தியமும் ஆவியானவரின் உள்ளான சாட்சியமும் இதை உறுதிப்படுத்துகின்றன.
ரோமர் 8:16
1 யோவா. 5:11-12

16. மகிமைப்படவும் கிறிஸ்துவுக்கு ஒப்பானவர்களாகவும் குறிக்கப்படுதல்

பிலி. 3:20-21
1 கொரி. 15:48-49
2 கொரி. 3:18
ரோமர் 8:28-30
1 யோவா. 3:2
வெளி. 22:1-6

விசுவாசிகள் கிறிஸ்துவைப் போல் இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய நிறைவான இலக்காக உள்ளது.

பயிற்சி: விசுவாசி என்ற வகையில் உங்கள் மீட்பின் பயன்களுக்கு உங்கள் பதில்செயல் எவ்வாறு இருக்க வேண்டும்?

____

____

____

____

"இவ்வளவு பெரிதான இரட்சிப்பை" நாம் அறியாதிருந்தால் அல்லது புறக்கணித்தால் அது (நம் நிலை) பரிதாபகரமானதாகவே இருக்கும். ***எபி. 2:1-4***

பயிற்சி: இவ்வளவு நல்ல பயன்கள் மற்றும் ஆசீர்வாதங்களுடன், மற்றும் கிறிஸ்துவைப் புறக்கணிப்பதன் மிக மோசமான விளைவுகளுடன், எவரொருவரும் ஏன் இரட்சிக்கப்படுவதை விரும்பாதிருக்க வேண்டும்?

____

____

____

____

9. சபை - சபையியல்

அ. சபையின் இயல்பு

1. விளக்கம்

புதிய ஏற்பாட்டில் இந்த கிரேக்க வார்த்தை (ecclesia) "வெளியே அழைக்கப்பட்ட மக்களின் கூடுகை" என்ற அடிப்படை அர்த்தம் தரும் வகையிலேயே பயன்படுத்தப்பட்டது (***மத். 16:15-19***). சபை என்பது உலகிலிருந்து "வெளியே அழைக்கப்பட்டதாகவும்" மற்றும் உலகத்தில் தேவனுடைய நோக்கத்திற்காக ஊழியம் செய்ய "அழைக்கப்பட்டதாகவும்" உள்ளது. இது உலகளாவிய மற்றும் உள்ளூர் சார்ந்த இரு கருத்துக்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2. உலகளாவிய சபை

உலகளாவிய வகையில் பேசுகையில், சபை என்பது பெந்தெகொஸ்தே தொடங்கி (இது வரையிலும் இனியும்) கிறிஸ்துவில் விசுவாசத்தினால் தேவனுடைய ஆவியானவரால் பிறந்துள்ளவர்களாகவும், கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக ஆவியானவரால் ஞானஸ்நானம் பெற்றவர்களாகவும் இருக்கிற எல்லா மக்களையும் கொண்டதாக உள்ளது. (1 கொரி. 12:13) இவ்விதமாக உருவாக்கப்பட்ட சபையானது இயேசு கிறிஸ்துவைத் தலைவராகக் கொண்டுள்ள இயற்கைக்கு மேலான ஆவிக்குரிய உயிர்ப்பொருளாக உள்ளது. (எபே. 1:22-23). சபை என்பது தேவன் தம்முடைய ஆவியினாலேயே வாசம் பண்ணுகிற இயங்கும் உயிராய் உள்ளது. (எபே. 2:22)

இந்த உலகளாவிய அம்சத்தில், வேத வசனம் சபையை பின்வருவன போன்ற விவரிக்கும் சொற்றொடர்கள் பலவற்றைக் கொண்டு குறிப்பிடுகிறது:

கிறிஸ்துவின் சரீரம்	*(எபே. 4:12)*	தேவனுடைய மக்கள்
கிறிஸ்துவின் மணவாட்டி	*(2 கொரி. 11:2)*	
தேவனுடைய மாளிகை	*(1 கொரி. 3:9)*	
இராஜரீக ஆசாரியக் கூட்டம்	*(1 பேது. 2:9)*	பரிசுத்த ஜாதி
தேவனுடைய மக்கள்	*(1 பேது. 2:9)*	தேர்ந்துகொள்ளப்பட்ட மக்கள்
ஆவிக்கேற்ற மாளிகை	*(1 பேது. 2:5)*	ஜீவனுள்ள கற்கள்
பரிசுத்த ஆசாரியக்கூட்டம்	*(1 பேது. 2:5)*	

நிறுவன ரீதியாக கிறிஸ்து "பிரதான மூலைக்கல்லாகவும்" **(1 பேது. 2:6-7)** "தலையாகவும்" **(எபே. 1:22)** இருக்கிறார், மற்றும் விசுவாசிகள் தங்களின் தகுதி, படிநிலை, அல்லது பணிநிலை போன்றவற்றினால் எவ்வித வித்தியாசமும் கொண்டிராமல் **(1 கொரி. 12:12-13; எபே. 3:6; கலா. 3:28; கொலோ. 3:11)** அவரது சரீரத்தில் அவயவங்களாக இருக்கின்றனர் **(1 கொரி. 12:27)**. சபையின் உலகளாவிய அம்சத்தைப் புரிந்து கொள்வது இன்றியமையாததாக இருக்கையில், சபையின் உள்ளூர் சார்ந்த அம்சம் குறிப்பிடத் தக்கதாக உள்ளது, ஏனென்றால் இங்குதான் உலகளாவிய சபையானது தனது செயல்முறை வெளிப்பாட்டைக் கண்டறிகின்றது.

3. உள்ளூர் சபை

உள்ளூர் சார்ந்த ஒரு கருத்தமைவில் சபை என்ற வார்த்தையானது குறிப்பிட்ட ஒரு இடத்தில் குடியிருக்கின்ற அறிக்கையிட்ட விசுவாசிகளின் கூடுகை அல்லது குழுவிற்கும் கூட பயன்படுகின்றது. (ஆனாலும்) சபை என்பது ஒரு இடமாகவோ அல்லது ஒரு கட்டிடமாகவோ இருப்பதில்லை ஆனால் அந்த இடத்தில் (அது ஒரு வீடாகவோ அல்லது மரத்தின் கீழாகவோ இருக்கக் கூடும்) கூடி வருகின்ற மக்களையே குறிக்கின்றது. **(ரோமர் 16:3-5)**. உள்ளூர் சபையின் இந்த சந்தர்ப்பப் பொருளில்தான் சபையின் பணியாளர்களும் அதன் அரசாங்கமும் ஆழ்ந்து சிந்திக்கப்படும். உள்ளூர் சபை சிற்றளவில் ஒரு உலகளாவிய சபையாகப் பணிபுரிந்து அதே அடிப்படை ஊழியத்தை செயல்படுத்தி, கிறிஸ்துவைத் தனது தலையாகக் கொண்டு, பரிசுத்த ஆவியானவரை தனக்கு வல்லமையளிக்கக் கொண்டுள்ள வகையில் "ஆவிக்குரிய" முறையில் ஒருங்கமைவு பெற்றிருக்க வேண்டும்.

பயிற்சி: உலகளாவிய சபைக்கும் உள்ளூர் சபைக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை ஒரு வாக்கியத்தில் எடுத்துரைக்கவும்.

____

____

____

____

ஆ. சபையின் தொடக்கம்/தோற்றம்

1. <u>புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்ட ஒரு இரகசியம்</u>

சபை என்பது தனிச் சிறந்த வகையில் புதிய ஏற்பாட்டின் கருத்தாக உள்ளது மற்றும் இது தேவனால் கிறிஸ்துவின் பரிகார மரணத்தின் மூலம் படைக்கப்பட்டது, கிறிஸ்துவின் ஒரே சரீரமான சபையில் யூதர்களும் புற இனத்தார்களும் ஒப்புரவாக்கப்பட்டனர். (**எபே. *2:13-19***)

சபையின் இரகசியம் (முன்பு வெளிப்படுத்தப்படாத சத்தியம்) பழைய ஏற்பாட்டில் அறியப்படாததாக இருந்தது ஏனெனில் "கிறிஸ்து உங்களில் மகிமையின் நம்பிக்கையாய் உள்ளார்" என்பது அதன் இன்றியமையாத் தன்மையாக உள்ளது.

எபே. *1:9-10*
எபே. *3:3-12*
எபே. *5:25-32*

2. <u>சபையின் அஸ்திபாரம்</u>

அ. **இயேசு கிறிஸ்து** சபையின் பிரதான மூலைக்கல்லாக இருக்கிறார், ஏனெனில் அவருக்குள்ளாகவே சபை இருக்கிறது மற்றும் வளர்கிறது.

எபே. *2:19-22*
1 கொரி. 3:11

விசுவாசிகளுக்குள் தனித்தனியே கிறிஸ்து வாசம் பண்ணுகிறார், மற்றும் இவ்விதமாக அவர் ஒன்று சேர்ந்த வகையில் சபையிலும் வாசம் பண்ணுகிறார். சபை "கிறிஸ்துவுக்குள் இருக்கிறது" என்றும் கூறப்படுகிறது.

ஆ. அப்போஸ்தலர்கள்

அப்போஸ்தலர்கள் துணை நிலை அஸ்திபாரமாக உள்ளனர், மனித ரீதியில் பேசுவதென்றால், இவர்களே சபையைத் தோற்றுவித்தனர்.

இது அநேகமாக, கிறிஸ்துவில் கொண்டுள்ள விசுவாசத்தைப் பற்றி பேதுரு கூறிய அறிக்கையை குறிப்பிடுவதாயிருக்கலாம். இந்த அறிக்கையே சபை கட்டப்பட்ட பாறையாயிற்று மற்றும் இது அப்போஸ்தலர்களின் வாழ்வின் சாட்சியத்தையும் அவர்களின் போதனையையும் குறிப்பாய் இருக்கலாம் (**மத். *16:13-18***).

இ. தேவனுடைய வசனம்

சபையின் அஸ்திபாரத்தினுடைய மூன்றாவது தூணாக விளங்குவது **தேவனுடைய வசனமாகும்**. இதில் சபையின் இயல்பும் ஊழியமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் இது சபையின் போதனையினுடைய உட்கருத்தை அடக்கியுள்ளது.

கொலோ. 1:24-27

அப். 2:42-47

1 தெச. 2:13-14

3. <u>பெந்தெகொஸ்தே அன்று தொடக்கங்கள்</u>

சபையானது பெந்தெகொஸ்தேயன்று தனது தொடக்கத்தைக் கொண்டிருந்தது, அன்று தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியான வரைக் கொண்டு 120 பேரை ஞானஸ்நானப் படுத்தினார், மற்றும் அவர்கள் சுவிசேஷத்தை அறிவிக்கத் தொடங்கினார்கள். (அப். 1:2). பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுதலின் தொடர்பாக "சபை" என்ற வார்த்தை அப். 5:11ல் முதன் முதலாகக் காணப்படுகிறது.

சபை யுகமானது பெந்தெகொஸ்தேயன்று தொடங்கியது, இது மகா உபத்திரவ காலத்திற்கு முன்னதாக சபையானது (பரவச நிலைக்கு) எடுத்துக் கொள்ளப்படும் வரையிலும் தொடரும்.

இ. சபையின் நோக்கம்

இப்பொழுது நாம் பின்வருவன பற்றிய வேதாகம ஆதாரங்களைச் சுருக்கமாகக் கலந்துரையாட விரும்புகிறோம்: சபையின் மிகப் பொது வான பணியாளர்கள் (மூப்பர், ஆயர், மேய்ப்பர் மற்றும் உதவிக்காரர்); பணியாளர்கள் என்ற வகையில் சபையில் பெண்களின் பணிப்பங்கு; மற்றும் சபை அரசாங்கத்தின் மூன்று அடிப்படை வடிவங்கள் (எபிஸ் கோப்பல், பிரிஸ்பைட்டேரியன் மற்றும் சபைக்குழுமம் சார்ந்தது). ஆனால் முதலில் நாம் சபையின் நோக்கம் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

புதிய ஏற்பாடு அதன் வெளி அமைப்பில் பின்வருவனவற்றை வலியுறுத் துவதாகக் காணப்படுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும்:

- நிறுவனமய அமைப்புகளுக்குப் பதிலாக கொள்கைகள்
- பணியாளர்கள், தகுதி/பதவி மற்றும் பட்டப் பெயர்கள் ஆகியவற்றிற்குப் பதிலாக பணி மற்றும் ஊழியம்
- அனுபவம் மற்றும் புகழ்/சிறப்புத் தன்மை ஆகியவற்றிற்குப் பதிலாக ஆவிக்குரிய தகுதிகள்

குறிப்பாக சபையானது குறைந்தபட்சம் பின்வரும் 7 நோக்கங்களைக் கொண்டுள்ளது:

1. ***(மக்களை) சீஷர்களாக்கி பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படியச் செய்தல்***
மத். 28:18-20
    - மக்களைக் கிறிஸ்துவிடம் கொண்டுவருதல் (சுவிசேஷ ஊழியம்)
    அப். 1:8
    மாற். 16:15
    கொலோ. 1:24-27
    பிலி. 1:12-18
    - போதிக்கவும் பயிற்றுவிக்கவும் தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்தி மக்களைக் கிறிஸ்துவுக்குள் கட்டி எழுப்புதல் (வளரத் தேவையானவற்றைத் தருதல்)
    அப். 2:42
    எபே. 4:11-16
    2 தீமோ. 3:16-17
2. ***ஆவியானவரின் வல்லமையினால் ஊழியம் செய்தல்*** (வல்லமைப்படுத்துதல்)
கொலோ. 1:28-29
எபே. 1:18-19
எபே. 3:20
3. ***ஒன்று கூடுவதற்கு ஒன்று கூடுதல்*** (பக்திவிருத்தியூட்டுதல்)
    - ஐக்கியத்திற்காக
    அப். 2:42-45
    கலா. 2:9
    1 யோவா. 1:3
    - ஆராதனை, ஜெபம் மற்றும் துதி ஆகியவற்றுக்காக
    அப். 6:4
    எபே. 6:18-20
    - ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்தி புத்திக்கூறுவதற்காக
    எபி. 10:25
4. ***உலகத்தில் கிறிஸ்துவின் ஊழியத்தை நிறைவடையச் செய்தல்***
லூக். 24:46-49
யோவா. 17:13-16
5. ***உலகத்தில் நீதியை வளரச் செய்தல்/மேம்படுத்துதல்***

    சபையானது நற்செயல்களைச் செய்ய வேண்டும் மற்றும் உலகத்தின் பாவ இருள், துன்மார்க்க ஆகியவற்றின் மத்தியில் பரிசுத்தத்தின் வெளிச்சமாகக் காட்சி அளிக்க வேண்டும்.
    1 பேது. 2:11-12
    பிலி. 2:14-16
    எபே. 4:17-5:11
    எபே. 2:10
    எபி. 10:24

6. தன்னை கிறிஸ்துவின் மணவாட்டியாகத் தயார் செய்து கொள்ளுதல் வெளி. 19:7

சபையானது கிறிஸ்துவின் மணவாட்டி என்ற தகுதி நிலையில் ஏற்கனவே சுத்தமானதாக உள்ளது (**எபே. 5:26-27**), ஆனால் நடைமுறையில் சபை ஒழுக்கம் மற்றும் பாவத்தை கையாளுதல் போன்ற விஷயங்களின் மூலம் அது அதிகம் தூய்மையடைய வேண்டியுள்ளது. இது, ஒழுக்கவீனம், பிரிவினை, பெருமை, வஞ்சனை, கள்ள போதனை, பேராசை முதலியவற்றிலிருந்து சுத்திகரித்தலை உள்ளடக்கியிருக்கின்றது.

அப். 5:9-11
ரோமர் 16:7
1 கொரி. 5:1-13
மத். 18:15-20
1 கொரி. 3:1-9

7. தேவனை மகிமைப்படுத்துதல்

தற்கால உலகிலும் வரவிருக்கும் காலங்களிலும் தேவனை மகிமைப் படுத்துதல் என்பதே சபையின் நிறைவான நோக்கமாக உள்ளது.

எபே. 1:5-6
எபே. 1:12
எபே. 3:20-21
2 தெச. 1:11-12
1 பேது. 4:8-11
வெளி. 5:6-14

பயிற்சி: சபையின் (மேற்கூறப்பட்ட) 7 நோக்கங்களில் மிக அதிகமாகப் புறக்கணிக்கப்படும் இரண்டு நோக்கங்கள் எவை? ஏன்?

____

____

____

____

ஈ. உள்ளூர் சபையின் அலுவலர்கள்

புதிய ஏற்பாட்டு சபையில் இரு வகைப்பட்ட அலுவலர்கள் உள்ளனர் என்பது தெளிவாகக் காணப்படுகின்றது - **மூப்பர்கள்** (ஆவிக்குரிய தலைவர்கள்) மற்றும் **உதவிக்காரர்கள்** (ஊழியம் செய்யும் தலைவர்கள்). உதவிக்காரர்களும் மூப்பர்களைப் போலவே உயர்ந்த ஆவிக்குரிய தகுதிகள் கொண்டிருந்தனர், ஆனால் அவர்களின் பணியானது ஊழியம் அல்லது நிர்வாகம் சார்ந்ததாக இருந்தது. *(1 தீமோ. 3:1-7; அப். 6:1-7)*

குறிப்பு: ஆவிக்குரிய தகுதிகள் பற்றிய வரைவட்டவணையைக் காணவும் (பக். 1840, NIV Study Bible).

ஆவிக்குரிய தலைவர்கள் - மூப்பர்கள்

தெளிவாய்த் தெரிவதிலிருந்து தொலைவில் இருக்கையில், ஆயர், மூப்பர், மற்றும் மேய்ப்பர் ஆகிய சொற்றொடர்கள் புதிய ஏற்பாட்டில் ஒரே விதமான பணி நிலையையே அர்த்தப்படுத்துகின்றன என்பது சிறந்த முடிவாக உள்ளது. ஒவ்வொரு சொற்றொடரையும் அதன் அடிப்படைப் பயன்பாட்டையும் உணர்வுடன் உதவும்.

1. விளக்கங்கள்

அ. ஆயர் (கண்காணி) "episkopos"

ஆயர் என்பது "episkopos" என்ற கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பாக உள்ளது, மற்றும் இது, "கண்காணி" என்று அர்த்தப்படுகின்றது. **பிலி. 1:1**ல் பவுல் பிலிப்பி நகரில் இருந்த சபைக்கு எழுதியதில், "..... பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் ....." என்று குறிப்பிட்டார், ஆனால் மூப்பர்கள் அல்லது மேய்ப்பர்கள் பற்றிக் குறிப்பிடவில்லை. **அப். 20:17**ல் பவுல் தமது பிரியாவிடைக்காக எபேசு நகரில் இருந்த மூப்பர்களை (மிலேத்துவுக்கு) வரும்படி கேட்டுக் கொண்டார், ஆனால் அவர்களுக்கான தமது பிரியாவிடைப் பிரசங்கத்தில் அவர்களை தேவனுடைய மந்தைக்கு மேய்ப்பராக ("pastor") இருக்கிற "கண்காணிகள்" (ஆயர்கள்) என்று அழைத்தார். மற்றும் **தீத்து 1:5-7** வசனப் பகுதியானது ஆயர் மற்றும் மூப்பர் என்ற பதங்களை ஒன்றுக்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்துவதாகக் காணப்படுகிறது. (**வ. 5**ல் மூப்பர்கள் மற்றும் **வ. 7**ல் கண்காணி). **1 தீமோ. 3:1-7**ல் கண்காணிகளுக் கான தகுதிகளின் பட்டியலில் மூப்பர் (என்ற வார்த்தை) குறிப்பிடப்பட வில்லை என்பதும் கவனிக்க ஆர்வமுள்ளதாக இருக்கிறது. இந்தப் பட்டியலைத் தொடர்ந்து **வச. 8-13ல்** உதவிக்காரர்களுக்கான தகுதிகள் தரப்படுகின்றன. ஆயர்கள் மற்றும் மூப்பர்கள் என்பவர்கள் ஒருவகைப் பட்டவர்களே என்பதே முடிவாகக் காணப்படுகிறது. ஆலோசனை அளிக்கப்பட்டபடி, எல்லா ஆயர்களும் மூப்பர்களாய் இருந்தனர், ஆனால் எல்லா மூப்பர்களும் ஆயர்களாக(கண்காணிகளாக)ப் பணியாற்றவில்லை என்ற நிலை இருந்தாலும் மூப்பர் என்பது தகுதி அல்லது பட்டப் பெயரைக் குறிப்பிடுகிறது மற்றும் ஆயர் என்பது பணியைக் குறிக்கிறது என்பது நலமாய் இருக்கலாம்,

இவ்விதமாக,

ஆயர் என்பது - ஊழியத்தின் **இயல்பைக்** குறிக்கலாம்
மூப்பர் என்பவர் - **பட்டப் பெயரைக்** குறிக்கலாம்
மேய்ப்பர் என்பது - **பணியைக்** குறிக்கலாம்.

ஆ. மூப்பர் (முதியவர்) "prebuteros"

மேலே கவனத்தபடி, மூப்பர் என்ற வார்த்தை கண்காணி என்ற வார்த்தை யுடன் ஒன்றுக் மாற்றாக மற்றொன்று பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் காணப்படுகின்றது. "மூப்பர்" என்பது தலைவர்கள் வயது மற்றும் ஆவிக்குரிய பக்குவம் தொடர்பானது மற்றும் "கண்காணிகள்" என்பது அவர்களின் ஊழியத்தின் இயல்பு தொடர்பானது என்று குறிப்பிடுவதானது இச்சொற்றொடர்களை வித்தியாசப்படுத்தும் இன்னொரு வழியாகக் காணப்படுகிறது. "மூப்பர்" என்பது தகுதி/பதவி அல்லது பட்டப் பெயரைக் குறிப்பிடலாம் என்பதற்கு **தீத்து 1:5**ல் உள்ள குறிப்பு ஒரு சுட்டிக்காட்டுத லாக உள்ளது. அங்கு பவுல் தீத்துவை "நகரங்கள் தோறும் மூப்பர்களை நியமிக்கும்படி" கட்டளை கொடுத்தார்.

இ. மேய்ப்பர் (மேய்ப்பவர்) "poimen"

என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையானது மேய்ப்பர் என்று அர்த்தப்படுகின்றது மற்றும் இது பதவியை அல்ல பணியையே குறிக்கின்றது மற்றும் இவ்விதமாகவே இது புதிய ஏற்பாட்டில் பொதுவாகத் தர வழைக்கப்பட்டுள்ளது. மூப்பர்கள் (**1 பேது. 5:1**) மற்றும் கண்காணிகள் (**அப். 20:28**) ஆகிய இருவருமே தேவனுடைய மந்தைக்கு (மேய்ப்பர்) என்று கூறப்பட்டுள்ளனர். என்பது மிக அடிக்கடி வினை வடிவத்திலேயே காணப்படுகிறது, அதாவது ஒரு பெயர்ச் சொல்லாக இருப்பதற்குப் பதிலாக (மேய்க்க) என்று உள்ளது, இவ்விதமாக, என்பது புதிய ஏற்பாட்டில் தனிப்பட்ட பணியல்ல ஆனால் இது கண்காணிகள் மற்றும் மூப்பர்கள் ஆகியோருடைய பணியுடன் அதிகம் தொடர்புடையதாக உள்ளது என்றே காணப்படுகிறது. கிரேக்க வார்த்தையான என்பதிலிருந்து வந்த ஊழியக் காரர் என்ற வார்த்தை வலுவான சமச் சொல்லாக இருப்பது போலவே, மேய்ப்புக்கான நிருபங்களில் பவுலினால் விவரிக்கப்பட்டபடி என்பதும் ஒரு சமானச் சொல்லாக உள்ளது. **எபே. 4:13** தற்செயலாக, மேய்ப்பராகவும் போதகராகவும் என்ற சொற்றொடரானது ஆவிக்குரிய வரங்கள் மற்றும் ஊழியத்தின் பணிநிலை ஆகியவற்றின் பகுதியை எடுத்துரைக்கின்றது. ஆகையால் அவர்கள் சபையின் அலுவலர்களாய் நடத்தப்படுவதில்லை ஏனெனில் கண்ணோக்கில் உள்ள வகையில் சபையில் ஆளுகை செய்யும் அதிகாரத் திறன் என்பது உள்ளதாகக் காணப்படுவதில்லை.

2. பணியாளர்களின் பொறுப்புகள்

சபைப் பணியாளர்கள் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும் என்று வேத வசனம் கட்டளை இடுகின்றது:

- பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்யும் பணிக்காக சபை உறுப்பினர்களுக்குத் தேவையானவற்றை அளித்துப் பயிற்றுவித்தல். எபே. 4:11-12
- சபைப் பணிகளை ஆளுகை செய்து நிர்வகித்தல் 1 தீமோ. 5:17
- வசனத்தைப் போதித்து பிரசங்கித்தல் 1 தீமோ. 4:13-16
- ஆவிக்குரிய விஷயங்களைக் கண்காணித்தல் 1 தீமோ. 3:1

- தேவனுடைய மக்களை மேய்த்தல்
  1 பேது. 5:1-4
- கள்ள போதனையை எதிர்த்து நிற்குதல்
  தீத்து 1:9
- சபை உறுப்பினர்களுக்கும் சபையின் பிறதலைவர்களுக்கும் நல்ல முன்னுதாரணங்களை அமைத்தல்
  எபி. 13:7
  1 கொரி. 11:1
  1 தீமோ. 4:11-12

சபைத் தலைவர்கள் மதிக்கப்பட, கீழ்ப்படியப்பட மற்றும் நன்கு ஊதியம் அளிக்கப்பட வேண்டும் ஆனால் அவர்கள் தங்கள் ஊழியர்கள் குறித்துத் தேவனுக்குக் கணக்கு ஒப்புவிப்பார்கள்
1 கொரி. 9:13-14
எபி. 13:7
1 தீமோ. 5:19
யாருக்கு அதிகம் பொறுப்பும் பாக்கியம் கொடுக்கப்பட்டுள்ளதோ, அவரிடத்தில் அதிகமாகக் கணக்குக் கேட்கவும்படும் (லூக். *12:48*ஐக் காணவும்)

3. <u>எண்ணிக்கை</u>

1 தீமோ. 3:1-7ல் மூப்பர் என்பது ஒருமையிலும் அதைத் தொடர்ந்து உதவிக் காரர்களைப் பற்றிய குறிப்பு (அவர்களின் எண்ணிக்கை) பன்மையிலும் குறிப் பிடப்பட்டிருந்தாலும், மூப்பர்கள் (கண்காணிகள்) என்பவர்கள் வழக்கமாய் பன்மையிலேயே (***பிலி. 1:1*** மற்றும் ***தீத்து 1:5***) குறிப்பிடப்பட்டுள்ளனர். காலம் வளர்வுற்ற பொழுது ஒரு மூப்பர் ஒரு தனி சபைக்குழுமத்தை ஒரு வகையான பாஸ்டர் என்ற வகையில் வழிநடத்தியிருப்பார் அவருடன் ஊழியம் புரியும் உதவிக்காரர்கள் இருந்திருப்பார்கள் என்று இது அர்த்தப்பட முடியும். ஒரு நகரின் சபைகளின் குழுமங்கள் அல்லது கூருகைகளில் எத்தனை மூப்பர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்பது வேத வசனங்களிலிருந்து தெளிவாகக் காணப்படுவதில்லை. ஒவ்வொரு தனி சபைக்குழுமத்திற்கும் அல்லது வீடுகளில் கூடி வந்த சபைக்கும் மூப்பர் ஒருவர் நியமிக்கப்பட்டார் என்பது கூட நிச்சய மாக அறிய முடியாததாக உள்ளது. உண்மை விஷயம் என்ற வகையில், மூப்பர் களை நியமிக்கும்படி தீத்துவுக்குப் பவுல் அளித்த புத்திமதியில் தனித் தனி சபைகளில் என்று குறிப்பிடாமல் நான் உனக்குக் கட்டளையிட்டபடியே பட்டணங்கள் தோறும் (***தீத்து 1:5***) என்றுதான் உள்ளது. ஆனால் அப். *14:23*ல் அந்தந்த சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி என்றுள்ளது. துரதிருஷ்டவசமாக, பவுலின் திட்டவட்டமான ஆணைகள் வேத வசனங்கள் தெரிவிப்பதில்லை. இவ்விதமாக, ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் உள்ள சபைகளைக் கண்காணிப்பதற்கு மூப்பர்களின் குழு ஒன்றையும் அல்லது ஒவ்வொரு சபைக்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்களையும் நியமிப்பது அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் காணப்படுகிறது. மீண்டுமாக, புதிய ஏற்பாடானது பதவி, அமைவு, எண்ணிக்கை அல்லது பட்டப்பெயர் ஆகிய வற்றின் மீது வலியுறுத்தம் தராமல் பணி மற்றும் ஊழியத்தின் மீதோ வலியுறுத்தம் தருகிறது என்பது குறிப்பிடத் தக்கதாக உள்ளது.

4. <u>பணி</u> (ஊழியம்)

ஊழியத்தின் கருத்து நிலையில் இருந்து காணுகையில், மூப்பர்கள் அடிப்படையில் ஆவிக்குரியதாக உள்ள பல்வேறு பணிகளை நிகழ்த்த வேண்டியவர்களாய் இருந்தனர். இந்தப் பணிகள் பல்வேறு பரந்த வகைகளுக்குள் அமைகின்றன:

- சபையைக் கண்காணித்தல் **(அப். 20:28)**
- சபையை ஆளுகை செய்தல் **(1 தீமோ. 5:17)**
- (எல்லா மூப்பர்களும் போதித்து பிரசங்கித்து இராதிருப்பினும், எல்லாரும் "போதக சமர்த்தர்களாய்" இருந்தனர். **1 தீமோ. 3:2)**
- சபையை மேய்த்தல் (pastoring) **(1 பேது. 5:1-4)**
- விசுவாசத்தைக் காத்து அதற்காகப் போராடுதல் **(தீத்து 1:9)**
- நிதி விஷயங்களை மேற்பார்வையிடுதல் **(அப். 11:30)**

5. <u>தகுதிகள்</u>

மூப்பர்களாக நியமிக்கப்படும் மனிதர்களின் இயல்பான திறன்கள் அல்லது வியாபார அனுபவங்கள் ஆகியவை பெரும்பாலும் இன்றைய நாட்களில் தகுதி வகையாகக் கருதப்பட்டாலும் வேதாகமத்தில் இவற்றிற்கல்ல ஆனால் அம்மனிதர்களின் ஆவிக்குரிய தகுதிகளுக்கே அடிப்படை முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது என்பது கவனிக்க உற்சாகமானதாக உள்ளது. இந்தத் தகுதிகள் இரண்டும் முக்கிய வசனப் பகுதிகளில் பட்டியலிடப்பட்டு பின்வரும் 3 விரிவான வகைகளில் அடங்குகின்றனவாக உள்ளன:

1. தனிப்பட்ட பண்பு மற்றும் நேர்மை/சீரிய நிலை
2. இல்லத்தில் நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவம்
3. சமுதாயத்தில் நற்சாட்சி

1 தீமோ. 3:1-7

குற்றஞ்சாட்டப்படாதவன் (வ. 2)
ஒரே மனைவியை உடைய புருஷன் (வ. 2) (பல மனைவிகளை உடையவராயிராமை/விவாக இரத்தானவராயிராமை)
ஜாக்கிரதையுள்ளவன் (வ. 2)
தெளிந்த புத்தியுள்ளவன் (வ. 2)
யோக்கியதையுள்ளவன் (வ. 2)
அந்நியரை உபசரிக்கிறவன் (வ. 2)
போதக சமர்த்தன் (வ. 2)
மதுபானப் பிரியனாயிராமை (வ.3)
அடிக்கிறவனாயிராமை (வ. 3)
பொறுமையுள்ளவன் (வ. 3)
சண்டை பண்ணாதவன் (வ. 3)
பண ஆசை இல்லாதவன் (வ. 3)
தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன் (வ. 3)

தன் பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களாய்க் கீழ்ப்படியப் பண்ணுகிறவன் **(வ. 4)**

நூதன சீஷனாயிராமை **(வ. 6)**

புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவன் **(வ. 7)**

தீத்து 1:5-9 (இங்கு புதிதாய்க் குறிப்பிடப்பட்ட தகுதிகள் மட்டும் தரப்பட்டுள்ளன)

கீழ்ப்படிதலும் கட்டுப்பாடும் உடைய பிள்ளைகளைக் கொண்டிருத்தல் **(வ. 6)**

தன் இஷ்டப்படி செய்யாதவன் **(வ. 7)**

முற்கோபமில்லாதவன் **(வ. 7)**

நல்லோர் மேல் பிரியமுள்ளவன் **(வ. 8)**

நீதிமான் **(வ. 8)**

பரிசுத்தவானும் இச்சையடக்கமுள்ளவனும் **(வ. 8)**

சத்தியத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்ளுகிறவன் **(வ. 9)**

ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லவும்/எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவன் **(வ. 9)**

6. <u>நியமனம்</u>

தீத்து 1:5ல் சபைப் பணியாளர்கள் மூப்பர்களின் தேர்வு செய்வதில் ஈடுபட்டனர் என்பது உறுதி, அங்கு பவுல் தீத்துவிடம், குறைவாயிருக்கிறவைகளை நிறைவாக்கும்படியும் பட்டணங்கள் தோறும் மூப்பர்களை ஏற்படுத்தும்படியும் அறிவுறுத்தினார். ஆனால் அப். 14:23ல் உள்ள வகையில் காணும் பொழுது சபைக்குழுமம் (முழுவதும்) தேர்ந்து கொள்ளுதலில் ஈடுபட்டது என்பதும் சம அளவுக்குத் தெளிவாக உள்ளது, அங்கு ஏற்படுத்தி வைத்து என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையானது வாக்களித்தல் அல்லது கைகளை உயர்த்திக் காட்டுதல் என்ற கருத்தைக் கொண்டுள்ளது. அத்துடன் கூடுதலாக, அப். 20:28ல் மூப்பர் என்ற தகுதிக்குப் பரிசுத்த ஆவியானவரால் அழைப்பு சுட்டிக்காட்டப்படுவதாகக் காணப்படுகின்றது, ஒருவேளை சபைக்குழுமத்தால் தேர்வு செய்யப்பட வேண்டிய (வாக்களிக்கப் பட வேண்டிய) தகுதியுள்ள மனிதர்கள் தேர்வு செய்யப்படுதலில் அலுவலர்கள் (மூப்பர்கள்) வழிநடத்தியிருக்கலாம். நியமனம் என்பது இலேசாகச் செயல்படுத்தப்படவில்லை என்பது மிகவும் தெளிவாக உள்ளது.

7. <u>திருநிலைப்படுத்துதல்</u>

- விளக்கம் மற்றும் விவரிப்பு

திருநிலைப் படுத்துதலை விவரிப்பதற்குப் புதிய ஏற்பாட்டில் நுட்ப வார்த்தை எதுவும் இல்லையென்றாலும் திருநிலைப்படுத்துதல் என்பது ஒரு நபரை ஊழியப் பணிநிலைக்கென்று அனுமதிப்பது என்று பொருள் படுகிறது. திருநிலைப்படுத்துதல் என்பது ஒரு நபரின் மீது வரத்தையோ அல்லது பணிநிலையையோ உறுதிப்படுத்துவதில்லை. திருநிலைப்படுத்துல் என்பது ஒரு நபரின் வாழ்வில் ஊழியம் செய்யும்படி தேவன் அழைப்பு விடுப்பதை சபை உறுதிப்படுத்தும் செயல்பாடாக உள்ளது. மற்றும் குறிப்பிட்ட நாமகரணக் கூட்டத்தினுள் பணியாற்றுவதற்கு, திருமணம் செய்து வைத்தல், ஞானஸ்நானம் கொடுத்தல், கர்த்தருடைய பந்தியை நடத்துதல் போன்றவற்றை செய்வதற்கு இது ஒரு அவசியமான செயலாக உள்ளது.

- ஆவிக்குரிய அடிப்படை

புதிய ஏற்பாட்டில் திருநிலைப் படுத்துதலுக்கென்று குறிப்பிட்ட செய்முறை எதுவும் முன்வைக்கப்பட்டிராதிருப்பினும், இது மூப்பர்கள் தங்கள் கைகளை வைக்குதல் என்ற செயலில் இருந்து தனது தொடக்கத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது ***(1 தீமோ. 4:14; 2 தீமோ. 1:6)***. சபை மற்றும் ஆய்வுக்குழுவின் அழைப்பு என்பவை சபை வரலாற்றில் வளர்ச்சியுற்ற செயல்முறைமைகளாகவும் மாறுபட்ட சபைகள் மற்றும் நாமகரணக் கூட்டங்களில் மிகவும் வேறுபடுகின்றவைகளாவும் உள்ளன.

நியமிக்கப்படுபவர், ஊழியத்திற்கான தமது அழைக்கப்படுதலை உறுதியாய் அறிந்திருக்க வேண்டும் என்பது தெளிவாய்க் காணப் படுகிறது ***(1 கொரி. 9:16; 1 தீமோ. 1:12)***, அதனால், சபையின் செயல் பொது அங்கீகாரத்தையும், உறுதிப்பாட்டையும், ஆதரவையும் காட்டுவதாயிருக்கும். திருநிலைப்படுத்துதல் என்பது இன்றைய நாட்களில் அதிகாரத்தையோ அல்லது ஆவிக்குரிய வல்லமை யையோ அல்லது வரங்களையோ அருளுவதில்லை, மற்றும் இது ஒருவரின் ஊழியத்திற்கான அடிப்படையாக இருப்பதுமில்லை, ஏனெனில் அது ஒரு தெய்வீக அழைப்பாக உள்ளது. எனவே, திருநிலைப்படுத்துதல் என்பது அதன் சாராம்சத்தில், தேவனால் நியமிக்கப்பட்ட ஊழியர்களை சபை ஒப்புக் கொண்டு, உறுதிப் படுத்துதல் என்பதாக உள்ளது. திருநிலைப்படுத்துதல் என்பது மூப்பர்கள், பாஸ்டர்கள், ஊழியர்கள் மற்றும் பிறருடன் அதன் பயன்பாட்டுடன் கூடுதலாக, உதவிக்காரர்களுக்கும் பயன்படுத்தப் படுகிறது. இவர்கள் வழக்கமாய் பிரசங்கிப்பதோ அல்லது சபையின் சடங்குகளை நிறைவேற்றுவதோ இல்லையென்றாலும் இவர்களும் திருநிலைப் படுத்துப்படுகின்றனர்.

பயிற்சி: சபைத் தலைமைத்துவத்தைத் தேர்ந்தெடுப்பதில் மிகப் பல சபைகள் இன்றைய நாட்களில் ***1 தீமோ. 3:1-7***ஐப் புறக்கணிப்பவைகளாகக் காணப்படுவது ஏன்? இன்றைய நாட்களில் எந்த அடிப்படைத் தகுதி அதிகமாய்ப் பயன்படுத்தப் படுகின்றது?

____

____

____

____

ஊழியம் செய்யும் தலைவர்கள் | உதவிக்காரர்கள்

புதிய ஏற்பாட்டு சபையில் பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டாம் வகைப் பணியாளர் என்பது உதவிக்காரரின் அலுவல் என்பதாகக் காணப்படுகின்றது. இந்தச் சொல்லின் வினைவடிவமானது "ஊழியம் செய்ய அல்லது பணியாற்ற" என்று மொழிபெயர்க்கப் பட்டிருப்பினும் இது "ஊழியக்காரன்" என்ற நேரடி அர்த்தத்தையே கொண்டுள்ளது. இந்தச் சொற்றொடரானது அலுவலக ரீதியில் இல்லாத பொதுவான கருத்திலும் மற்றும் அலுவலக ரீதியான நுட்பக் கருத்திலும் பயன்படுத்தப்பட வேண்டியதாய் இருப்பதாகக் காணப்படுகின்றது.

1. <u>பொதுவான கருத்து</u>

1 தீமோ. 4:6ல் "diakonas" என்ற சொற்றடர் இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரரை (பணியாளரை)ப் பொதுவாகக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது எப்பாப்பிராவைக் குறிப்பதற்கு இதே வகையில் **கொலோ. 1:7**ல் பயன்படுத்தப் படுகின்றது. diakonas என்ற வார்த்தை இவ்விதமாய்ப் பயன்படுத்தப்பட்டுள்ள வகையில் இயேசு கிறிஸ்துவின் "சுவிசேஷத்தினுடைய எந்த ஊழியக்காரரையும்" குறிக்கக் கூடும். **(ரோமர் 15:15-16)**. இது கிறிஸ்துவையே குறிப்பதற்குக் கூடப் பயன்படுத்தப்பட்டுள்ளது. **மாற். 10:45**

2. <u>நுட்பக் கருத்து</u>

சபையில் அலுவலக ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பணியைக் குறிப்பதற்கும் புதிய ஏற்பாட்டில் என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. **பிலி. 1:1**ல் உதவிக்காரர்கள் சபையின் பணியாளர்களாக கண்காணிகளுடன் (ஆயர்களுடன்) உணர்ந்தறியப்பட்டுள்ளதாகக் காணப்படுகின்றது. **1 தீமோ. 3:8-13**ல் உதவிக்காரர் களின் ஆவிக்குரிய தகுதிகள் கண்காணிகளின் தகுதிகளுக்குப் பிறகு குறிப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

3. <u>இந்தப் பணியின் தொடக்கம்</u>

உதவிக்காரரின் பணியினுடைய தொடக்கமானது மூப்பர்களின் பணியின் தொடக்கம் போன்று அவ்வளவு தெளிவாகக் காணப்படுவதில்லை. ஒருவேளை, சிலர் ஆலோசனை தெரிவிக்கின்றபடி, உதவிக்காரர்கள் ஆவிக்குரிய கண்காணிப்பை உள்ளடக்கியிராத பணிகளை நிறைவேற்றுபவர்களாக மூப்பர்களின் உதவியாளர் களாகப் பணியில் முதலாவது ஈடுபட்டிருந்திருக்கலாம். அவர்கள் அலுவலகம் சாராத ஊழியக்காரர்களாயிருந்து, காலப் போக்கில் அவர்களில் சிலர் "diaconate" அல்லது உதவிக்காரர்களின் அமைப்பு என்பதாக அலுவலக ரீதியாக அங்கீகரிக்கப் பட்டிருந்திருக்கலாம். ஒரு காலகட்டம் கடந்த பிறகு இந்தப் பணியின் வளர்நிலை அங்கீகரித்தல் ஏற்பட்டிருக்கலாம்.

மற்றவர்கள், **அப். 6:1-6**ல் உதவிக்காரர்களின் பணிநிலை தொடக்கத்தைக் காணுகின்றனர். இங்கு "பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேர்" சபையில் இருந்த ஏழை விதவைகளுக்குப் பந்தி விசாரணை செய்யும் ஊழியத்திற்காகத் தேர்ந்து கொள்ளப்பட்டனர். சிலர் இந்த நிகழ்ச்சியை உதவிக்காரரின் ஊழியத்திற்கான சாத்தியமுள்ள தொடக்கமாகக் காணுகையில், மற்றவர்கள் அப். 6:1-6 உதவிக்காரர் ஊழியத்தை ஏற்படுத்துதலைக் குறிப்பதில்லை என்ற கருத்தைக் கொண்டுள்ளார்கள். எவ்வகையிலும், இந்தப் பணிநிலையானது சபையில் அலுவலக ரீதியாக அங்கீகரிக்கப்பட்டதாயிற்று.

4. <u>பணிகள்</u>

உதவிக்காரர்கள் அடிப்படையில் நிர்வாக (நிதி மற்றும் ஊழியம்) பணிப் பொறுப்பில் ஊழியம் செய்தார்களா அல்லது அத்துடன் கூடுதலாக மூப்பர்களின் மேற்பார்வையின் கீழ் உறுதியாய்க் கட்டப்பட்ட ஆவிக்குரிய பொறுப்புகளைக் கொண்டிருந்தார்களா என்பது குறித்து கருத்துப் பிரிவினை உள்ளது.

புதிய ஏற்பாட்டில் உதவிக்காரர்கள் அடிப்படையாக நிதி மற்றும் நிர்வாக விஷயங்களில் ஈடுபட்டிருந்தனர் ஆனால் மூப்பர்களின் இயக்கத்தின் கீழ் ஆவிக்குரிய கடமைகளையும் நிறைவேற்றினர் என்று முடிவு செய்வது அறிவிற்கு ஏற்புடையதாகக் காணப்படுகிறது.

5. <u>தகுதிகள்</u>

மூப்பர்களுக்குப் போலவே, உதவிக்காரர்களுக்கான தகுதிகளும் இயல்பில் ஆவிக்குரியவைகளாகவும், கிறிஸ்தவப் பண்பு மற்றும் நடக்கையுடன் தொடர்புடையவைகளாகவும் உள்ளன. **1 தீமோ. 3:8-13**ல் இன்றியமையாத தகுதிகளின் பட்டியல் அடங்கியுள்ளது.

- மதிப்புக்குத் தகுதியான மனிதர்கள் **(வ. 8)**
- உண்மையுள்ளவர்கள் **(வ. 8)**
- மதுபானப் பிரியராய் இராதவர்கள் **(வ. 8)**
- இழிவான ஆதாயத்தை இச்சியாதவர்கள் **(வ. 8)**
- விசுவாசித்தலில் உறுதியான நம்பிக்கையுடயவர்கள் **(வ. 9)**
- தங்களுக்கு எதிரான கருத்து ஒன்றும் கொண்டிராதவர்கள் **(வ. 10)**
- ஒரே மனைவியை உடைய புருஷர் **(வ. 12)** (பலதாரம் உடையவராயிராமை/விவாக இரத்து செய்தவராயிராமை)
- தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்கள் **(வ. 12)**

இந்தப் பட்டியலானது மூப்பர்களின் தகுதிகளின் பட்டியலைப் போன்றதாகவே உள்ளது ஆனால் "போதக சமர்த்து" அல்லது "உபசரிப்பு" பற்றி ஒன்றும் கூறப்படவில்லை ஆனாலும் உதவிக்காரர்கள் முன்னதாகச் சோதித்து அறியப்பட வேண்டும் **(வ. 10).**

6. <u>உதவிக்காரிகளாகப் பெண்கள்</u>

உதவிக்காரப் பணியில் பெண்கள் உதவிக்காரிகளாகப் பணியாற்ற வேண்டுமா கூடாதா என்பது பற்றிய விவாதம் இவ்வாழ்க்கையில் ஒருக்காலும் முடிவடையாமல் போகலாம். உதவிக்காரிகளின் பணியை ஆதரிக்க இரண்டு ஆதார வசனப் பகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன. முதலாவது **ரோமர் 16:1** இதில் பவுல் பெயோளை கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரி என்று குறிப்பிடுகிறார். இந்தக் குறிப்பானது ஒரு பொதுவான ஊழியர் என்ற கருத்தில் உதவிக்காரரைக் குறிப்பிடுகிறதா அல்லது இது ஒரு அலுவலகப்பட்டப் பெயரா என்பது தெளிவாகத் தெரியவில்லை, ஆயினும் இதன் சந்தர்ப்பப் பொருளானது பதவி நிலையை அல்ல ஊழியத்தையே மறைமுகமாய் உணர்த்துகிறது.

இன்னொரு வசனப் பகுதி **1 தீமோ. 3:11**ல் காணப்படுகின்றது, அங்கு பவுல் உதவிக்காரர்களுக்கான தகுதிகளின் மத்தியில் அந்தப்படியே அவர்களின் மனைவிகளும் நல்லொழுக்கமுள்ளவர்களு....மாயிருக்க வேண்டும் என்று கூறுகின்றார். பொதுவாக இவ்விடத்தில் "ஸ்திரீகளும்" என்றுள்ளது உதவிக்காரர்களின் மனைவிகளை உதவிக் காரிகளை அல்லது பெண் உதவிக்காரர்கள் அல்லது ஊழியக்காரிகளைக் குறிப்பிடக் கூடும். (இவ்விடத்தில் NIVயானது ஸ்திரீகளும் என்பதை பொருள் விளக்கும் தீர்மானத்துடன் "அவர்களின் மனைவிகளும்" என்று மொழிபெயர்க்கின்றது.

தகுதிகளைக் கவனியுங்கள்

- நல்லொழுக்கமுள்ளவர்கள்
- அவதூறு பண்ணாதவர்கள்
- தெளிந்த புத்தியுள்ளவர்கள்
- உண்மையுள்ளவர்கள்

மூப்பர்களின் ஆவிக்குரிய அதிகாரத்தின் கீழ் அல்லது உதவிக்காரரான தங்கள் கணவர்களின் ஆவிக்குரிய அதிகாரத்தின் கீழ் ஒரு ஊழியப் பணித்துவத்தில் பெண்கள் செயல்பட வேண்டும் என்பது மிகச் சிறந்த பதிலாகக் காணப்படுகிறது.

ஒரு ஊழியப் பணித்துவத்தின் கீழ் செயல்படுதல் என்பது ஆண்களுக் குப் பெண்கள் போதிக்கக் கூடாது அல்லது அவர்கள் மீது அதிகாரம் செலுத்தக் கூடாது என்ற பொதுவான தடையை மீறுவதாயிருக்காது.

பயிற்சி: வழிநடத்தும் அல்லது ஊழியம் செய்யும் பணித்துவத்தில் தேவனுடைய கண்ணோக்கில் ஏதேனும் உண்மையான வேறுபாடு உள்ளதா? ஆம் அல்லது இல்லை என்றால் ஏன்?

____

____

____

____

சபையில் பணியாளர்கள் என்ற வகையில் பெண்களின் பங்கு

– பொதுவாக

சபையில் பெண்கள் ஆளுகை செய்யும் அல்லது அதிகாரம் செலுத்தும் பணியாளர்களாய் இருப்பதற்கு வேத வசன ரீதியான பலத்த ஆதாரம் எதுவும் இல்லை என்றே காணப்படுகின்றது. மேலே குறிப்பிட்டபடி, ஊழியம் செய்யும் தகுதித் திறனில் ஒரு பெண் இருத்தல் என்பது பணித்துவப் பங்கு அனுமதிக்கப்பட்ட இடத்தின் கருத்தில் வேர் கொண்டுள்ளது, இது மூப்பர்களின் அதிகாரத்தின் கீழ் உள்ளது.

சபையில் பெண்களின் பங்கு என்பது தேவனின் கீழ் உள்ள ஆனால் பெண்களுக்கு மேலாக உள்ள ஆண்களின் தலைமைத்துவத்தின் கீழானது என்ற வேத வசனத்தின் படியான படைப்பின் கருத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது ***(1 கொரி. 11:3; 8-12)***.

– சபையில் பேசுதல்

1 கொரி. 14:34-35ல், கீழ்ப்படிதலின் அடிப்படையில் பவுல், "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள்; பேசும்படி அவர்களுக்கு உத்தரவில்லை ....." என்று கூறுகிறார். "பேசாமலிருக்க" என்ற வார்த்தையானது இங்கு "ஒன்றும் கூறக் கூடாது" என்று அர்த்தப்பட முடியும் என்றாலும், இவ்விடத்தில், பணி ரீதியான அல்லது அதிகாரத்துவ திறனில் பேசுதல் (கூடாது) என்ற கருத்தையே எடுத்துரைக்கின்றது. பெண்கள் சபையில் பிறரிடத்தில் கேட்பதற்குப் பதிலாக வீட்டில் தங்கள் கணவர்களிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

– உபதேசம் பண்ணுதல் அல்லது ஆண்கள் மீது அதிகாரம் செலுத்துத

1 தீமோ. 2:12ல் பவுல், பெண்கள் "உபதேசம் பண்ணவோ அல்லது ஆண் மீது அதிகாரம் செலுத்தவோ" கூடாது என்பதை மிகவும் தெளிவாக்குகின்றார்; "அவர்கள் அமைதலாய்" இருக்க வேண்டும். இவ்விடத்தில் "அமைதல்" என்ற வார்த்தை "அடங்காதவர்களாயிருக்கக் கூடாது" என்று அர்த்தப்படுகின்றது. இவ்வசனமானது, ஒரு பெண்ணை சபையின் அதிகாரமுள்ள பதவியில் ஒரு அலுவலராகவோ அல்லது ஆண்களுக்குப் போதிக்கிறவளாகவோ இருப்பதிலிருந்து விலக்கி வைப்பதாகத் தெளிவாய்க் காணப்படுகின்றது. வேறொரு இடத்தில் முதிர்வயதான பெண்மணிகள் இளம் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் போதிக்கும்படி ஊக்கப்படுத்தப் படுகின்றனர். ***(தீத்து 2:3-5)***

– முடிவுரை

பெண்கள் ஊழியப் பணிகளையும் பிற பெண்களுக்கும் மற்றும் பிள்ளைகளுக்கும் போதிக்கும் பணிகளையும் சபையில் மேற்கொள்ளலாம் ஆனால் ஒரு ஆணின் அதிகாரத்தின் கீழான சூழ்நிலை தவிர மற்ற வேளைகளில் ஆண்கள் மீது அதிகாரம் செலுத்தவோ அல்லது அவர்களுக்குப் போதித்தலோ கூடாது என்று வேத வசனங்கள் போதிப்பதாகக் காணப்படுகின்றது. தேவன் ஆணையும் பெண்ணையும் வித்தியாசப்பட்ட பணிப் பங்குகளைச் செய்யும் வகையில் படைத்தார் என்பதை நினைவில் வையுங்கள். (ஆனாலும்) அது ஆணையோ அல்லது பெண்ணையோ தேவனுக்கு முன்பாக அதிகம் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக்குவதில்லை - வித்தியாசப்பட்டவர்களாக மட்டுமே ஆக்குகிறது! கீழ்ப்படிதல் மற்றும் மாறுபட்ட பணிப் பங்கு ஆகியவற்றின் கருத்தானது திரித்துவத்திலும் காணப்படுகின்றது.

உ. **உள்ளூர் சபையின் நிறுவன அமைப்பும் அரசுமுறையும்/ஆளுகை முறையும்**

1. பொதுவான கருத்து

அரசாங்கம் என்ற வார்த்தையானது ஒரு நிறுவனம் அல்லது நிலையத்தின் ஆளுகை, மற்றும் அதன் விஷயங்களின் மீதும் செயல்களின் மீதும் கட்டுப்பாடு செய்தல் அல்லது அதிகாரத்தைச் செயல்படுத்துதல் என்ற கருத்தைக் கொண்டு வருகின்றது. கிறிஸ்துவைத் தலைவராகக் கொண்டு சபையானது அடிப்படையில் ஆவிக்குரிய உயிர்ப்பொருளாய் இருப்பதால் இந்தக் கருத்தானது அடிக்கடி முற்போக்கானதாக இருக்கையில், சபை அரசாங்கத்தின் வேதாகம ரீதியான வடிவமானது அரசாங்கமாகவே இருப்பதில்லை, புதிய ஏற்பாடானது குறிப்பிட்ட நிறுவன ரீதியான அமைப்பு முறையை வெளிப்படுத்துகின்றது. மற்றும், சபை வரலாறு, உள்ளூர் சபை பாரம்பரியமாக நிறுவன ரீதியான அமைப்பு முறையையும் மனித நிர்வாகிகளையும் கொண்டிருந்தது என்பதைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

சபை என்பது நிறுவன ரீதியான வடிவமைப்பிற்கு வேதாகம ரீதியான அடிப்படையைக் கொண்டுள்ளதா இல்லையா என்பது உண்மைப் பிரச்சனை கையாளும் விஷயம் அல்ல, ஆனால் எந்த வடிவமைப்பை வேதாகமம் குறிப்பிட்டுப் பரிந்துரைக்கிறது என்பதே உண்மைப் பிரச்சனையாக உள்ளது. வேதாகமத்தில் சபை அரசாங்கத்தின் மூன்று அடிப்படை மாதிரிகள் ஆதரிக்கப்படுகின்றன மற்றும் இந்த மூன்று மாதிரிகளும் பல்வேறு வடிவங்களில் நூற்றாண்டுகளினூடே நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. இந்த மூன்று அடிப்படை வடிவமைப்புகளையும் அவைகளால் உரிமைகோரப்பட்ட வேதாகம அடிப்படையையும் நாம் இப்பொழுது சுருக்கமாகக் கண்ணோக்குவோம்.

2. சபை அரசாங்கத்தின் மூன்று அடிப்படை வடிவமைப்புகள்

எப்பிஸ்கோப்பல், பிரிஸ்பைட்டேரியன் மற்றும் சபைக்குழுமம் சார்ந்தது என்பவை சபை அரசாங்கத்தின் மூன்று அடிப்படை வடிவமைப்புக்களாக உள்ளன. சொற்பொருள் நிலைக் கருத்திலிருந்து, நோக்குகையில் எப்பிஸ்கோப்பல் வடிவமைப்பானது சில வேளைகளில் "படிநிலைத்துவமானது" என்றும் பிரிஸ்பைட்டேரியன் வடிவமைப்பானது "ஒருங்கிணைந்த" அமைப்பு என்றும் அழைக்கப் படுகின்றது.

- **எப்பிஸ்கோப்பல் அல்லது படிநிலைத்துவ வடிவமைப்பு**

அ. <u>விளக்கம்</u> - எப்பிஸ்கோப்பல் வடிவமைப்பு என்பது ஆயர்களால் சபையில் உள்ள அரசாங்கமாக உள்ளது.

ஆ. <u>விவரிப்பு</u> - இது ஆயர்கள் (கண்காணிகள்), பிரிஸ்பைட்டர்கள் (அல்லது குருக்கள்) மற்றும் உதவிக்காரர்கள் ஆகியோரின் மும்மடங்கு ஊழியத்தை உள்ளடக்கியிருக்கிறது. மூப்பர்களை(அல்லது குருக்களை)யும் உதவிக்காரர்களையும் திருநிலைப்படுத்தக் கூடிய உரிமையைக் கொண்டுள்ள ஆயர்களுக்கு மட்டுமே மூப்பர்கள் (அல்லது குருக்கள்) கீழ்ப்படிந்திருக்க வேண்டும். செயல்விளைவில் ஆயரே சபையை ஆளுகின்றார்.

எப்பிஸ்கோப்பல் வடிவமைப்பானது மாறுபட்ட அளவைகளில், ரோமன் கத்தோலிக்கம், எப்பிஸ்கோப்பல், லுத்தரன், ஆங்கிலிகள், ஆர்த்தடாக்ஸ் மற்றும் மெதடிஸ்டுகள் சபைகளில் காணப்படுகின்றது. ரோமன் கத்தோலிக்கர்கள் மற்றும் ஆங்கிலிக்கர்கள் போன்ற சிலர் ஆயர்களின் வழி வழி வரும் செயலை புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்களுக்கு ஒரு வகையான அப்போஸ்தலிக்க வழிவழி கருத்தில் பின்னோக்கிக் கண்டறிய முயற்சிக்கின்றனர்.

இ. <u>வேதாகம ரீதியான அடிப்படை</u> - எப்பிஸ்கோப்பல் வடிவமைப்பானது புதிய ஏற்பாட்டில் காணப்படுவதில்லை, ஆனால் இது இரண்டாம் நூற்றாண்டில் போப் நிறைவான/மேலான ஆயராக ஆன செயலுடன் எழும்பிற்று என்பதே எப்பிஸ்கோப்பல் வடிவமைப்பின் பிரச்சனையாக உள்ளது. உண்மையில் புதிய ஏற்பாடானது ஆயர் என்ற சொற்றொடர் மூப்பர் என்று பொருள்படும் வகையில், பயன்படுத்துவதால், இதில் ஆயருக்கென்று ஒரு தனித்த பணிநிலை எடுத்துரைக்கப்படுவதில்லை. சில சபைப் பாரம்பரியங்களில் அப்போஸ்தலிக்க வழி வழி வரும் கருத்து எழும்பினாலும் இதற்கும் வேதாகம ரீதியான அடிப்படை எதுவும் இருப்பதில்லை. இந்த முடிவானது, புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலிக்கப் பணியின் தனிச் சிறப்பின் அடிப்படையிலானதாக உள்ளது மற்றும் விசுவாசிகளின் ஆசாரியத்துவம் பற்றிய வசனரீதியான உபதேசமானது ஒவ்வொரு விசுவாசியும் தேவனிடத்தில் சென்று சேர நேரடியான தனிப்பட்ட வழியைக் கொண்டுள்ளார் என்று போதிக்கின்றது மற்றும் அவர் (விசுவாசி) வேத வசனங்களைப் பரிசுத்த ஆவியானவரின் துணை கொண்டு/ஆவியானவரின் வழிநடத்துதலின் கீழ் தமக்குத்தாமே விளக்கம் அளித்துக் கொள்ள முடியும் என்றும் போதிக்கின்றது.

- **பிரிஸ்பைட்டேரியன் அல்லது ஒருங்கிணைந்த வடிவமைப்பு**

அ. <u>விளக்கம்</u> - சபை அரசாங்கத்தின் பிரிஸ்பைட்டேரியன் வடிவமைப்பானது சபையின் உறுப்பினர்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படும் மூப்பர்களால் ஆளுகை செய்யப்படுதலைக் குறிக்கின்றது.

ஆ. <u>விவரிப்பு</u> - இது சபை அரசாங்கத்தின் பிரதிநித்துவ வடிவமைப்பாக உள்ளது, இங்கு மக்கள் மூப்பர்களின் மூலம் மறைமுகமாய் ஆளுகின்றனர். உள்ளூர் சபையானது என்ற குழுவால் ஆளப்படுகிறது, இக்குழு, உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படும் ஆளுகை செய்கிற மூப்பர்களைக் கொண்டுள்ளது, இதில் போதிக்கும் மூப்பர் அல்லது ஊழியர் தலைமை அலுவலராக இருப்பார். **1 தீமோ. 5:17**ன் அடிப்படையில், ஆளுகை செய்கின்ற ஆனால் போதிக்காத/பிரசங்கிக்காத அல்லது திருநிலைப்படுத்துதலை நிறைவேற்றி வைக்காத மூப்பர்களுக்கும், போதிக்கின்ற/பிரசங்கிக்கின்ற மற்றும் திருநிலைப்படுத்துதல்களை நிறைவேற்றி வைக்கின்ற போதிக்கும் மூப்பர் களுக்கும் இடையில் அடிக்கடி ஒரு வித்தியாசம் ஏற்படுத்தப்படுகின்றது.

பணிநிலையில் தனித்தன்மை கொண்டிருக்கையிலும் கூட, போதிக்கும் மற்றும் ஆளுகை செய்யும் மூப்பர்கள் தங்களுக்கு மேல் மூன்றாம் வகைமுறையிலான ஊழியம் எதுவுமின்றி சம அதிகாரம் கொண்டுள்ளனர். ஆளுகை செய்யும் மூப்பர்கள் வழக்கமாக உள்ளூர் சபையினரால் திருநிலைப்படுத்தப்படுகையில், போதிக்கும் மூப்பர்கள் பிற ஊழியர்களால் திருநிலைப்படுத்தப் படுகின்றனர். பிரிஸ்பைட்டேரியன்களும் மற்றும் சில சுயாதீனமான சபைகளும் இந்த வடிவமைப்பைப் பின்பற்றுகின்றனர்.

இ. வேதாக ரீதியிலான அடிப்படை - பிரிஸ்பைட்டேரியன் வடிவமைப்பானது அதனுடைய வேதாக ரீதியிலான அடிப்படையை, அப்போஸ்தலர்களினால் மூப்பர்கள் நியமனம் செய்யப்பட்டதில் (**அப். 14:23; தீத்து 1:5**), எருசலேம் மாநாட்டின் நடக்கையில் (**அப். 15:1-35**), மற்றும் திருநிலைப்படுத்துதலின் வசனப் பகுதிகளில் (**1 தீமோ. 4:14**) காணுகின்றது.

அப்போஸ்தலர்கள் தவிர ஆளுபவர்களும் சபையில் இருந்தார்கள் என்பது மிகவும் தெளிவாகக் காணப்படுகின்றது. **(எபி. 13:7, 17)** இருப்பினும், சபைக்குழுமமானது சபை அரசாங்கத்தில் ஈடுபட்டிருந்ததாகப் பல நிகழ்ச்சிகளில் தெளிவாய்க் காணப்படுகின்றது **(அப். 6:1-6; 14:23; 15:6)**

- **சபைக்குழுமம் சார்ந்த வடிவமைப்பு**

அ. விளக்கம் - சபைக்குழுமம் சார்ந்த வடிவமைப்பில் உள்ளூர் சபையின் நிறைவான ஆளுகை செய்யும் அதிகாரமானது அதன் உறுப்பினர்களின் மீது உவந்தளிக்கப்பட்ட ஜனநாயக வடிவமைப்பு நிலை வலியுறுத்தம் பெறுகிறது.

ஆ. விவரிப்பு ஊழியர்கள் வழிநடத்துனர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கையில், அவர்களின் அதிகாரமானது முற்றிலும் சபைக் குழுமத்துடன் உள்ள உறவைச் சார்ந்தமைகிறது மற்றும் நிறைவு ஆய்வில் அவர்களின் அதிகாரமானது சபையின் வேறு எந்த உறுப்பினரின் அதிகாரத்தை விடவும் அதிகமானதாக இல்லை.

சபை அரசாங்கத்தின் இந்த மாதிரியானது பேப்திஸ்துகள், சுயாதீன சுவிசேஷகர்கள், சீஷர்கள் மற்றும் பல வேதாகம மற்றும் சுயாதீனமான சபைகளால் பின்பற்றப் படுகின்றது.
தனிப்பட்ட வகையில், இதன் அலுவலர்களில் பாஸ்டர்களும் உதவிக்காரர்களும் இருக்கின்றனர், பல இடங்களில் தனிப்பட்ட ஒரு பாஸ்டர் புதிய ஏற்பாட்டு மூப்பருக்கு சமமானவராகக் கருதப் படுகின்றார். உதவிக்காரர்கள் பெரும்பாலும் சபையின் உலகியல் மற்றும் ஆவிக்குரிய நலன்களுக்கான பொறுப்புடையவர்களாய் உள்ளனர் மற்றும் சில இடங்களில் இவர்கள் திருநிலைப் படுத்தப் படுகின்றனர் மற்றும் சில இடங்களில் இவர்கள் திருநிலைப்படுத்தப் படுவதில்லை.

சபை அமைப்பின் முடிவுகள் நடத்துபவர்களால் செயல்படுத்தப் பட்டாலும், உண்மையில் சபையின் வாழ்வில் செயல்விளைவிக்கக் கூடிய எல்லா முடிவுகளும் பாஸ்டர்(கள்) மற்றும் உதவிக்காரர்களால் செயல்படுத்தப்பட்டாலும் சபைக்குழுமத்தினாலேயே முடிவு செய்யப்படுகின்றன.

இ. வேதாகமரீதியான அடிப்படை - சபை அரசாங்கத்தின் சபைக்குழுமம் சார்ந்த வடிவமைப்பு புதிய ஏற்பாட்டில் எருசலேம் மாநாடு (அப். 15) உட்பட வேதாகம ரீதியான ஆதாரத்தை மிக விரிவான அடிப்படையாகக் கொண்டுள்ளது. எருசலேம் மாநாட்டில் முடிவு மேற்கொள்ளும் செயல்பாட்டில் அப்போஸ்தலர்களும், மூப்பர்களும் மற்றும் சபையார் யாவரும் ஈடுபடுத்தப்பட்டனர். மற்றும் ஒவ்வொரு சபையும்,

1. தனது சொந்தப் பணியாளர்களையும் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்கின்றது, மற்றும்
 (அப். 6:1-6; 15:2-3).

2. தனது சொந்த சபை ஒழுங்குமுறையைச் செயல்படுத்தும் அதிகாரம் கொண்டிருந்தது.
 1 கொரி. 5:1-13
 2 கொரி. 2:5-11
 2 தெச. 3:14-15

 மற்றும் சபை அமைப்பு தனது பணியாளர்களுடன் முடிவுகளை மேற்கொள்வதில் ஈடுபட்டிருந்தது ***(அப். 15:22)***, பிரதிநிதிகளை பெற்றுக் கொண்டது ***(அப். 15:4; 18:27)***; பரிந்துரையாளர்களை அனுப்பியது ***(2 கொரி. 8:19)*** மற்றும் ஊழியக்காரர்களை நியமித்து அனுப்பியது ***(அப். 13:3; 14:26)***. புதிய ஏற்பாட்டில் சபையானது ஒவ்வொரு சபைக் குழுமத்தின் சுய ஆட்சி உரிமையை உணர்ந்தறிந்திருந்தது மற்றும் உள்ளூர் சபைக்கு மேலாக நிலையான சபை நிறுவன ரீதியான அமைப்பு முறை எதையும் அளித்ததில்லை என்பது உறுதி. உள்ளூர் சபைக்குழுமத்தின் மீது ஆளுகை செய்யும் அதிகாரம் கொண்ட நிறுவன ரீதியான வடிவமைப்புக்கு (எ.கா. மாவட்ட அளவு முதலியன) வசன ரீதியான ஆதாரம் எதுவும் இல்லையென்றே காணப்படுகின்றது. அப்படியிருந்தும் எப்பிஸ்கோப்பல் மற்றும் பிரிஸ்பைட்டேரியன் வடிவமைப்புக்கள், முழுமையான சுயாட்சி உரிமையில்லாத வகையில் உள்ளூர் சபையை அங்கமாகக் கொண்டுள்ள நிறுவன ரீதியான மேல் வடிவமைப்பு முறையைப் பொதுவாகக் கொண்டுள்ளன. சில சபைக் குழுமம் சார்ந்த வடிவமைப்புகள், உள்ளூர் சபையின் சுயாட்சி அமைவை ஒன்றுமற்றதாக்கி விடாமல் சபைகளின் தன்னார்வ இணைவுக்குழுக்களைப் பயன்படுத்திக் கொள்கின்றன. நாமகரணத்துவக் கூட்டங்களின் பிரச்சனைகள் முதலியன சபை வரலாறு என்ற பாடத்தில் விளக்கியுரைக்கப்படும்.

<u>முடிவுரை:</u>
சபை அரசாங்கத்தின் எப்பிஸ்கோப்பல் வடிவமைப்பு முறையானது வேதாகமத்திற்குப் பிந்திய காலங்களில் வளர்ச்சியுற்றது மற்றும் இப்படிப்பட்ட வடிவமைப்பானது வேத வசனத்தில் மிகவும் பலவீனமான ஆதாரம் கொண்டதாக உள்ளது. சபைக்குழுமம் சார்ந்த மற்றும் பிரிஸ்பைட்டேரியன் ஆகிய இரண்டு வடிவமைப்புக்களுக்குமே வேதாகம ரீதியான ஆதாரங்கள் சுட்டிக் காண்பிக்கப்பட முடியும் மற்றும் இவ்விரு முறைமைகளின் பகுதிகளும் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. வேதாகம ஆதாரமானது ஒரு அடிப்படை ஜன நாயகத்தை ஆதரிக்கிறது என்று சிலர் முடிவு செய்கையில், தொடக்க கால சபை அரசாங்கமானது சபைக்குழுமம் சார்ந்த மற்றும் பிரிஸ்பைட்டேரியன் வடிவமைப்புக்களில் இருந்து பெறப்பட்ட கூறுகளின் கலவையாக இருந்தது என்று முடிவு செய்தலே மிகச் சிறந்ததாகக் காணப்படுகிறது.

மீண்டும், புதிய ஏற்பாடானது ஆவிக்குரிய தகுதிகளையும் ஊழியத்தையும் வலியுறுத்துவது போல அவ்வளவு அதிகமாக நிறுவன ரீதியான வடிவத்தையும் அமைப்பு முறையையும் வலியுறுத்துவதில்லை.

புதிய ஏற்பாடானது ஒரு உள்ளூர் சபைக்கு நிறுவன அமைப்பின் ஒரு விபரமான வடிவமைப்பை பரிந்துரைத்து முன் வைப்பதில்லை, ஆனால் மாறுபட்ட சூழ்நிலைகளில் சற்று நெகிழ்த்தப்படக்கூடிய அடிப்படைக் கொள்கைகளை வலியுறுத்துகின்றது.

புதிய ஏற்பாடானது பின்வருபவற்றின் மீது மாபெரும் வலியுறுத்தம் வைக்கின்றது:

1. ஒருமைப்பாடு
2. ஒழுங்குமுறை
3. ஆராதனை, பக்திவிருத்தியூட்டுதல், ஐக்கியம், மற்றும் சுவிசேஷ ஊழியம் என்ற ஊழியப் பணிகளை நிறைவேற்றுதல்.
4. பரிசுத்த ஆவியானவரால் பலப்படுத்தி, வழிநடத்தப்படுதலின் கீழ் முடிவெடுத்தலிலும் ஊழியத்திலும் சபைக்குழுமங்கள் செயல் துடிப்புடன் ஈடுபடுதல், மற்றும்
5. இயேசு கிறிஸ்துவின் தலைமைத்துவம்.

பயிற்சி: சபையின் நிறுவன அமைப்பு மற்றும் அரசாங்கம் என்பதன் தேவைப்படுகிற ஒரு வடிவமைப்பு குறித்து புதிய ஏற்பாடு மௌனமாயிருப்பது ஏன்?

____

____

____

____

ஊ. உள்ளூர் சபையின் மேலாணைகள்/சடங்குகள்

1. பொதுவாக

- விளக்கம்

"மேலாணை" என்ற வார்த்தையானது, அங்கீகரிக்கப்பட்ட மத ரீதியான சடங்கு அல்லது நடைமுறை என்பதன் அடிப்படைக் கருத்தைக் கொண்டுள்ளது. "ஒரு வரிசை, ஒரு ஒழுங்கு முறை" என்று அர்த்தப்படுகிற "ordo" என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து வருகிறது. இறையியல் அல்லது சபையியல் நிலைக் கருத்தில் இருந்து நோக்குகையில் இது கிறிஸ்துவின் சபையானது நடத்தும்படி/ நிகழ்த்தும்படி கிறிஸ்துவால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு புறம்பான/ வெளிப்படையான சடங்காச்சாரக் கொண்டாட்டமாக அல்லது நடைமுறையாக உள்ளது.

• "சாக்ரமந்துடன்" உறவு

"சாக்ரமந்து" மற்றும் "மேலாணை" என்பவை ஒரு பொருள் கொண்ட சொற்களாய் உள்ளன என்றாலும், இவை ஒவ்வொன்றும் மாறுபட்ட இறையியல் தனிச் சிறப்பைக் கொண்டு வருகின்றன. இவ்விரு சொற்களில் எதுவும் வேத வசனங்களில் நேரடியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதால் விசேஷமாக இது உண்மையாக உள்ளது - இச்சொற்றொடரைப் பயன்படுத்துகின்றவர்களால் இதன் இறையியல் தனிச் சிறப்பானது இணைக்கப்பட்டதாக இருக்கிறது.

"சாக்ரமந்து" என்பது பரிசுத்தம் என்ற வகையில் தனியே பிரித்து வைக்கப்பட்ட ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகின்றது. எனவே "மேலாணை" என்பது வெளிப்படையான சைகை, அடையாளம், சடங்கு அல்லது கொண்டாட்டம் என்பதன் கருத்தைக் கொண்டிருக்கையில், இது பொதுவாக பங்கேற்பவரிடத்தில் ஏற்படும் மாற்றத்திற்குக் காரணமான கருத்தை உள்ளடக்குவதில்லை. இதற்கு மறுபுறத்து, "சாக்ரமந்து" என்பது வழக்கமாக, தேவனுடைய கிருபையைக் கொண்டு வரும் கருத்தைப் பெற்றுள்ளது மற்றும் இது, "தெய்வீக ஏற்பாட்டினால், அடையாளப்படுத்துதலுடன் கூட கிருபையும் மாற்றங்களும் செயல்விளைவுடன் கொடுக்கப்படுவதற்காக வல்லமை கொண்டுள்ள வகையில் புலன்களுக்கு முன் வைக்கப்படும் சில விஷயங்கள்" என்று நுணக்கமாக விளக்கப்படுகின்றது. கிருபையைக் கொண்டு வருகிற சடங்காச்சாரங்கள் என்பதைப் பெரும்பான்மையான புரட்டஸ்டண்டுகள் நம்புவதில்லையாதலால் "மேலாணை" என்ற சொற்றொடர் விரும்பித் தேர்ந்தெடுத்தப்படுகின்றது.

2. <u>அறிந்துணரப்பட்ட மேலாணைகள் - கர்த்தருடைய பந்தி/இராப்போஜனம் மற்றும் ஞானஸ்நானம்</u>

விளக்கத்தின்படி காண்கையில், சபைக்கு கிறிஸ்துவால் குறிப்பாகப் பரிந்துரைக்கப்பட்ட சடங்குகள் மட்டுமே "மேலாணைகள்" என்றிருப்பதால் பெரும்பாலான புரட்டஸ்டண்டு கள் - கர்த்தருடைய இராப் போஜனம் மற்றும் ஞானஸ்நானம் என்ற - இரு மேலாணை களை மட்டும் அறிந்துணர்ந்து/ ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்துகின்றனர். இவற்றுடன், உறுதிபூசுதல், பாவசங்கீர்த்தனம், நோயில் பூசுதல், குருத்துவம், மெய்விவாகம் என்பவற்றைச் சேர்த்து மொத்தம் ஏழு சாக்ரமந்துகளை ரோமன் கத்தோலிக்க மார்க்கம் கொண்டுள்ளது. இருப்பினும், கர்த்தருடைய இராப்போஜனம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றைத் தவிர (இவற்றில்) வேறெந்த மேலாணைக்கும் உறுதியான வேத வசன ஆதாரம் இல்லை. ஆகையால், நாம் புதிய ஏற்பாட்டு சபையினால் அறிந்துணரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இவ்விரு மேலாணைகளைப் பற்றி மட்டும் விபரமாகக் காண்போம்.

3. <u>கர்த்தருடைய இராப்போஜனம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின் பொதுவான தனிச்சிறப்புகள்</u>

தொடக்க கால சபையின் ஐக்கியமானது ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய இராப் போஜனம் ஆகியவற்றுடன் அறிவித்தல் (Kerygma) மற்றும் போதித்தல் (didache) என்பவற்றையும் உள்ளடக்கியிருந்தது. இந்த மேலாணைகள், சபையின் உறுப்பினர்களை இயேசு கிறிஸ்துவுடன் உறவுபட்டுக் கொண்டு வருதலுக்கும், அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுடன் அவர்களைப் பரிசுத்த ஆவியானவரால் அடையாளப்படுத்து வதற்குமான வழிமுறைகளாகக் கொள்ளப்பட்டிருந்தன. இவ்விதமாக அவைகள் சுவிசேஷத்தின் காணப்படக் கூடிய பிரதிநிதித்துவங்களாக இருந்தன. காணப்படக்கூடிய மேலாணைகள் சுவிசேஷத்தினால் நிறைவேற்றப்படுகிற அதே வகையான ஐக்கியத்தை ஏதோ ஒரு இரகசியமான/அற்புதமான/புரிந்து கொள்ள இயலாத வழியில், கொடுப்பதாகக் கருதப்பட்டன.

காலப் போக்கில், கத்தோலிக்க சபையினால் பயன்படுத்தப்படும் இலத்தீன் வல்கேட் வேதாகமத்தில் "musterion" (mystery - இரகசியம்) என்ற கிரேக்க வார்த்தையை மொழிபெயர்க்கப் பயன்படுத்தப்பட்ட "sacrement" (சாக்ரமந்து) என்ற வார்த்தை யானது சடங்குகளுடன் ஒரு மாய வித்தையான வல்லமையின் கருத்தை இணைத்தது. ஆகையால் சாக்கரமந்துகளின் கருத்தானது உண்மையில், ஒரு அடையாள அல்லது நினைவுகூருதல் இயல்புடன் உள்ளதாகக் கருதப்படுவதற்குப் பதிலாக கிருபையைக் கொண்டு வருகின்ற கருத்தாக மேம்படுத்தப்பட்டது.

தொடக்க கால சபையின் முக்கியமான பிதாக்களில் ஒருவரான அகஸ்தீன் என்பவர் சாக்ரமந்துவை, "உள்ளான மற்றும் காண முடியாத கிருபையின் வெளிப்படையான காணக் கூடிய அடையாளம்" என்று விளக்கப்படுத்தினார்.

பலர், ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய இராப் போஜனம் என்ற புதிய ஏற்பாட்டு அடையாளத்துவ மேலாணைகளில் முறையே விருத்தசேதனம் மற்றும் பஸ்கா என்ற பழைய ஏற்பாட்டு இணைக் கருத்துக்களைக் காண்கின்றனர். இது கர்த்தருடைய இராப் போஜனம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின் நினைவுகூருதல் அல்லது அடையாளத்துவ இயல்புகளை ஆதரிக்கப் பயன்படுகின்றது.

மீண்டுமாக, "மேலாணை" என்பது விரும்பித் தேர்ந்து கொள்ளக்கூடிய சொற்றொடரா யிருக்கும், ஏனெனில் "சாக்ரமந்து" என்ற சொற்றொடரின் பயன்பாட்டுடன் இணைவு கொண்டுள்ளதாக உள்ள நிலையில் உண்மையில் கிருபையைக் கொண்டு வருகிற அடிப்படை வேதாகம ஆதாரம் எதுவும் இருப்பதாகக் காணப்படுவதில்லை.

4. அறிந்துணரப்பட்ட மேலாண்மைகள் அக்கறையுடன் கவனிக்கப்படுதல்

அ. கர்த்தருடைய இராப் போஜனம் (திருவிருந்து)

1. தொடக்கம்/தோற்றம்

சபையின் மேலாணைகளில் ஒன்று என்ற வகையில் கர்த்தருடைய பந்தியைக் கடைப்பிடிக்கும் வழக்கம் தனது நிலைநாட்டுதலை/ஸ்தாபிக்கப்படுதலை கிறிஸ்து தம்முடைய மரணத்திற்கு முந்திய இரவில் பஸ்கா உணவை உண்ட வேளையில் காண்பித்த முன்மாதிரி மற்றும் கொடுத்த கட்டளை ஆகியவற்றில் கண்டறிகிறது. பஸ்காவானது எகிப்திலிருந்து இஸ்ரவேல் மக்களை விடுவித்த தேவனுடைய மீட்பின் செயலை நினைவுகூரும் வகையில் கடைப்பிடிக்கப் பட்டது என்பது உண்மையே. இயேசுவுக்கு நேர விருந்த பரிகாரம் செலுத்தும், பதில்செயலான, தியாகம் நிறைந்த மரணம் பஸ்காவை மட்டுமின்றி பழைய ஏற்பாட்டு பலி செலுத்தும் சடங்குகளையும் நிறைவேற்றி இடம் மாற்றுவதற் காக நேர்ந்தது (**1 கொரி. 5:7**). ஆனால் பழைய ஏற்பாட்டில் இருந்த மீட்பின் வகைகளைப் பின்னோக்குவதற்கு மாறாக, சீஷர்கள் கிறிஸ்துவையும் அவர்களுக்காக அவர் செலுத்திய பூரணத்துவ பலியையும் நினைவுகூர வேண்டியதாக இருந்தது.

கர்த்தருடைய இராப் போஜனத்தை (அவர்) ஏற்படுத்திய நிகழ்ச்சியானது ஒப்பீட்டு சுவிசேஷங்களிலும் (**மத். 26:26-29; மாற். 14:22-26** மற்றும் **லூக். 22:14-20**), மற்றும் **1 கொரி. 11:23-34**ல் பவுலினாலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. லூக்கா மற்றும் பவுல் ஆகியோரின் பதிவுகளில் இதை என் நினைவாகச் செய்யுங் கள் என்ற கர்த்தருடைய வெளிப்படையான கட்டளை கொடுக்கப் பட்டுள்ளது. **அப். 2:42-47** வசனப் பகுதியும் கூட கர்த்தருடைய இராப் போஜனத்தின் தொடக்க காலக் கடைப்பிடித்தலைச் சித்தரிக்கலாம்.

2. <u>பொருட் கூறுக</u>

(கர்த்தருடைய இராப் போஜனம் பற்றிய) வேதாகம விபரங்கள் யாவையும், (1) நன்றி தெலுத்துதல், (2) அப்பம் (கிறிஸ்துவின் சரீரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது) பிடுதல் மற்றும் (3) திராட்ச ரசமுள்ள பாத்திரம் (சிலுவையில் சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது) ஆகியவற்றை வலியுறுத்துகின்றன.

3. <u>சொல் வழக்கியல்</u>

இந்த மேலாணையானது "கர்த்தருடைய இராப்போஜனம்," "திருவிருந்து," "அப்பம் பிடுதல்," "கர்த்தருடைய பந்தி" மற்றும் "Eucharist" ("நன்றி செலுத்துதல்" என்பதற்கான கிரேக்கச் சொல்லில் இருந்து வந்தது) என்று பல வகையில் குறிப்பிடப்படுகின்றது. கர்த்தருடைய இராப்போஜனம் என்பது ஒருவேளை மிகவும் பரந்த/விசாலமான சொற்றொடராய் உள்ளது எனலாம் மற்றும் இதுவே இன்றைய நாட்களில் புரொட்டஸ்டண்டு சபைகளில் மிகவும் பொதுவான பயன்பாட்டில் உள்ளது.

4. <u>அர்த்தம் மற்றும் தனிச்சிறப்பு</u>

கர்த்தருடைய பந்தியின் அர்த்தம் மற்றும் அதை கிறிஸ்து எவ்வாறு முன் வைத்தார் என்பது பற்றி சபை வரலாறு முழுவதிலும் ஐந்து (5) பிரதானக் கண்ணோட்டங்கள் பற்றிக் கொண்டிருக்கப்பட்டுள்ளன:

அ. <u>நினைவுகூருதல் என்ற கண்ணோட்டம்</u>

கர்த்தருடைய இராப்போஜனம் என்பது அடிப்படையில் இயேசுவின் நினைவுகூருதலாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று அவர் (இயேசு) நோக்கங்க கொண்டிருந்தார் என்பது வேத வசன ஆதாரத்திலிருந்து மிகவும் தெளிவாக உள்ளதாகக் காணப்படுகிறது - "இதை என் நினைவாகச் செய்யுங்கள்."

இங்கு (1) கிறிஸ்துவை நினைவுகூருதல் மற்றும் (2) அவருடைய சரீரத்தின் உறுப்பினர்கள் ஒருவர் மற்றவருடனும், கிறிஸ்துவுடனும் கொண்டுள்ள ஐக்கியம் என்ற இரண்டு அடிப்படைச் சிந்தனைகள் உள்ளன.

- நினைவு கூருதல்

  இந்தக் கருத்தில் மூன்று மடங்கிலான தனிச் சிறப்பு உள்ளடக்கப் பட்டுள்ளது - (1) கிறிஸ்துவின் கடந்த காலத்தை ஒருக்காலும் மீண்டும் செய்யப்படாத, எல்லா மனிதர்களுக்கும் பதிலீடான மீட்பின் பலியை நினைவுகூருதல், (2) கிறிஸ்துவின் மீட்கும் பிரசன்னம், மற்றும் கிறிஸ்துவின் எதிர்கால வருகை.

- ஐக்கியம்

கர்த்தருடைய பந்தியானது நாம் அந்தப் பந்தியில் ஐக்கியமாகும் பொழுது, கிறிஸ்துவுடனும் மற்ற விசுவாசிகளுடனும் நாம் கொண்டுள்ள ஒருமைப்பாட்டை நமக்கு நினைவூட்ட வேண்டும். ஐக்கிய விருந்தில் விசுவாசி கிறிஸ்துவுடன் நெருங்கிய ஐக்கியத்தை(தோழமைத்துவத்தை)ப் பகிர்ந்து கொள்கின்றார் மற்றும் பிற விசுவாசிகளுடன் ஒருமைப்பாட்டை அல்லது ஒன்றிப்பை அனுபவிக்கின்றார்.

மாற்றம் அடையாமல் நிலைத்திருக்கும் இந்தப் பொருட்கூறுகளின் வழியே கர்த்தருடைய பந்தியின்/இராப் போஜனத்தின் ஆசரிப்பில் கிறிஸ்து உண்மையாக ஆனால் ஆவிக்குரிய வழியில் பிரசன்னமாகின்றார். இந்தக் கண்ணோட்டத்தில் கர்த்தருடைய பந்தியானது கிருபையைக் கொண்டு வருகிற வழிமுறையாக இன்றி, அவருடைய மரணத்தைப் பின்னோக்கியும் அவருடைய மறுவருகையை முன்னோக்கியும் காணும் ஒரு நினைவுகூருதலாக உள்ளது.

ஆ. <u>ரோமன் கத்தோலிக்கக் கண்ணோட்டம்</u>

கிறிஸ்து, "இது என் சரீரம் மற்றும் இது என் இரத்தம்" என்று கூறும்பொழுது அதை அவர் நேர்ப்பொருளாகவே அர்த்தப்படுத்தினார் என்பதை அடிப்படையாக வலியுறுத்துவதின் அடிப்படையில், ரோமன் கத்தோலிக்கர்கள், "குருவானவர் அப்பொருட்களின் மீது வசீகர வார்த்தைகளைக் கூறும்பொழுது" அப்பமும் திராட்ச இரசமும் தோற்றத்தில் மாறுபடாதிருப்பினும் கிறிஸ்துவின் சரீரமாகவும் இரத்தமாகவும் உண்மையிலேயே மாற்றம் அடைகின்றன என்று போதிக்கின்றனர். இது கட்புலனாகாத வகையில் பொருள் மாற்றம் அடைதல் என்று அழைக்கப் படுகின்றது. இந்தக் கண்ணோட்டம் வேத வாக்கிய அடிப்படையற்றதாக உள்ளது, ஏனென்றால், இது, ***எபி. 10:10-12***, மற்றும் ***9:28***ன் போதனையைத் தெளிவாக மறுக்கின்ற கருத்தான ஐக்கிய விருந்து ஆசரிக்கப்படும் போதெல்லாம் ஒவ்வொரு முறையும் கிறிஸ்துவின் பலி திரும்பத் திரும்பச் செலுத்தப்படுகிறது என்ற கருத்தை கொண்டுள்ளது. அத்துடன் கூடுதலாக, வேத வசனத்தின் சந்தர்ப்பப் பொருளானது, கிறிஸ்துவின் மொழிநடை உருவகமாக அல்லது அடையாளமாக உள்ளதைச் சுட்டிக்காண்பிக்கின்றது, இது போதனையானது நேரடியானதாகவும் ஆனால் மொழிநடையானது உருவகமாக அல்லது அடையாளத்துவமாகவும் உள்ள அவருடைய ஜீவ அப்பம் பற்றிய உரையாடல் (***யோவா. 6:47-69***) போன்றதாகவே உள்ளது.

எனவே, இந்தப் பொருட்கூறுகளில் கிறிஸ்து உண்மையாகவே உடல்ரீதியாகப் பிரசன்னமாகிறார், இவை உண்மையிலேயே கிறிஸ்துவின் சரீரமாகவும் இரத்தமாகவும் மாறுகின்றன மற்றும் இவ்விதமாக இது கிருபையைக் கொண்டு வரும் வழியாக உள்ளது என்று இந்தக் கண்ணோட்டம் நிலைப்பாடு கொண்டுள்ளது.

இ. <u>லுத்தரன் கண்ணோட்டம்</u>

இந்த நிலைப்பாடானது, கர்த்தருடைய இராப்போஜனத்தின் போது கிறிஸ்து ஏதோ ஒரு வழியில் உண்மையாகவே பிரசன்னமாகிறார், ஆனால் பொருட் கூறுகள் அவரது உண்மைச் சரீரமாக மற்றும் இரத்தமாக மாற்றம் அடைவதில்லை என்று கருத்துக் கொண்டுள்ளது - கிறிஸ்து இந்தப் பொருட்கூறுகளின் "உள்ளாக, உடன் மற்றும் கீழாக" இருக்கிறார் என்று கூறப்படுகின்றது. இது

Consubstantiation என்று அழைக்கப்படுகின்றது. இவ்விதமாக, பங்கேற்பவர்கள் ஏதோ ஒரு வழியில் கிறிஸ்துவின் உண்மைச் சரீரத்திலும் இரத்தத்திலும் பங்கெடுத்துக் கொள்வதாகக் காணப்படுகின்றனர். இந்தக் கண்ணோட்டமானது ரோமன் கத்தோலிக்கத்தின் ஊறுவிளைவிக்கும் அதே வகையான குறைபாடுகளைப் பங்களிக்கின்றது மற்றும் இதற்கு(ம்) வேத வசனத்தின் பலத்த ஆதாரம் எதுவும் இல்லை.

ஈ. <u>சுவிங்கிலியக் கண்ணோட்டம்</u>

புரொட்டஸ்ண்டு சீர் திருத்தவாதியான சுவிங்கிலி என்பவர் வழக்கமாக, கர்த்தருடைய இராப்போஜனத்தின் நினைவுகூருதல் கண்ணோட்டத்துடன் இணைவு கொண்டுள்ளார். கர்த்தருடைய இராப்போஜனம் என்பது அடிப்படையில் ஒரு நினைவுகூரும் செயலாகவே இருந்தது என்பதை வலியுறுத்திய சுவிங்கிலி, கிறிஸ்துவின் உடல் ரீதியான பிரசன்னம் பற்றிய எந்தக் கருத்தையும் புறக்கணித்தார். இருப்பினும், விசுவாசத்துடன் இதில் பங்கேற்பவர்களுக்கு கிறிஸ்து, ஆவிக்குரிய வகையில் பிரசன்னமாகிறார் மற்றும் அவர் (பங்கேற்பவர்) ஏதோ ஒரு வகையில் "இராப்போஜனத்தில் தேவனுடைய கிரியையை உணர்ந்தறிகிறார்."

நினைவுகூருதல் கண்ணோட்டமானது தனது வேர்களை சுவிங்கிலியின் கண்ணோட்டத்தில் கண்டறிந்திருப்பினும், அவர் ஒரு வேளை இராப் போஜனத்தில் கிறிஸ்துவுடன் ஐக்கிய விருந்து கலந்து கொள்ளும் கருத்தைக் குறைவாக மதிப்பிட்டார்/கீழாக வலியுறுத்தினார்.

உ. <u>சீர் திருத்தக் கண்ணோட்டம்</u>

கால்வீனியக் கண்ணோட்டமானது, இராப் போஜனத்தில் கிறிஸ்துவின் உடல் ரீதியான பிரசன்னத்தை மறுக்கின்றது, ஆனாலும் இது "இராப்போஜனத்தில் அவருடைய முழுமையான நபர்த்துவம் - உடலும் இரத்தமும் - மகிழ்வுடன் அனுபவிக்கப்படுகிறது" என்பது போன்ற வழியில் கிறிஸ்துவின் ஆவிக்குரிய பிரசன்னம் உண்மையாகவே உள்ளது என்ற கருத்தைப் பற்றிக் கொண்டிருப்பதில்லை. கிறிஸ்துவின் தியாகம் நிறைந்த மரணம் "விசுவாசத்துடன் இந்தப் பொருட் கூறுகளில் பங்கேற்பதன் மூலம் விசுவாசிக்கும் உள்ளாக ஏதோ ஒரு வகையில் செயல் விளைவை ஏற்படுத்துகிறது" என்ற பயன் அளிக்கும் அம்சம் ஒன்று இங்குள்ளது. எனவே சீர் திருத்தக் கண்ணோட்டத்தில் பொருட் கூறுகள் அடையாளத்துவம் என்பதைக் காட்டிலும் அதிகமானவைகளாய் உள்ளன, மற்றும் விசுவாசி கிறிஸ்துவின் மீட்பின் பிரசன்னத்தை அனுபவிக்கின்றார்.

5. செயல்படுத்துதலின் வகை முறையும் கால அளவும்

கர்த்தருடைய பந்தியில் ஜெபம், நன்றி செலுத்துதல், அப்பம் பிடுதல், பாத்திரத்தில் பானம் பண்ணுதல் ஆகியவை உள்ளடங்க வேண்டும் என்று இருக்கையில், செயல்படுத்துதலின் உண்மையான வகை மற்றும் கால அளவு (எத்தனை நாட்களுக்கு ஒருமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற விபரம்) ஆகியவை வேத வசனத்தில் விவரிக்கப்படாது இருக்கின்றன. தொழுகை நிறைந்த கடைப்பிடித்தலானது புதிய ஏற்பாட்டு சபையின் முறையான/வழக்கமான பாகமாய் இருந்தது என்பது தெளிவாய் உள்ளது.

6. முடிவுரை

வேத வசனத்தின் ஆதாரமானது கர்த்தருடைய பந்தியின் நினைவு கூருதல் மற்றும் ஐக்கியத்துவ அம்சங்களைச் சுட்டிக் காண்பிக்கின்றது - ஆனால் அந்தப் பொருட்கூறுகளை எடுத்துக் கொள்ளுகையில் அவற்றுடன் மாயவித்தையான அல்லது அற்புதமான எதுவும் நடப்பதாகவோ இணைந்திருப்பதாகவோ சுட்டிக்காண்பிப்பதில்லை. பொருட் கூறுகள் கிறிஸ்துவின் சிதைக்கப்பட்ட சரீரம் மற்றும் சிந்தப்பட்ட இரத்தம் ஆகியவற்றின் அடையாளத்துவங்களாக உள்ளன. கிறிஸ்துவின் ஆவிக்குரிய பிரசன்னமானது வசனத்தில் மற்றும் விசுவாசியின் வாழ்வில் பொதுவாக உள்ளது போலவே கர்த்தருடைய இராப் போஜனத்திலும் உண்மையானதாக உள்ளது. கர்த்தருடைய இராப்போஜ னமானது புதிய ஏற்பாட்டு சபையின் முறைப்படியான ஆராதனையில் தனிச் சிறப்பு மிக்க, அர்த்தம் நிறைந்த பாகமாய் இருந்தது. இன்றைய நாட்களில் தொழு கொள்ளும் எண்ணப் போக்குடன், தங்களைத்தாங்களே சோதித்தறிந்து கொண்டுள்ள நிலையிலும் மற்றும் கர்த்தருடனும் பிற விசுவாசிகளுடனும் தகுதியான வகையில் உறவுபட்டுள்ள விசுவாசிகள் பந்தியைச் சுற்றிக் கூடிவருகை யிலும் அதுவே உண்மையாய் இருக்க வேண்டும் - வேறு விதமாய் இதைசசெயதல என்பது "தகுதியற்ற வகையில்" பங்கேற்பதாக இருக்கும்.

கர்த்தருடைய பந்தியின் தனிச்சிறப்பைப் பற்றிப் பின்வருபவை தொகுத் துரைக்கின்றன:

- இது கிறிஸ்துவுக்கு ஒரு நினைவுகூருதலாய் உள்ளது **(1 கொரி. 11:24-25)**
- இது புதிய உடன்படிக்கையின் உத்தரவாதமாக உள்ளது **(லூக். 22:20)**
- இது கிறிஸ்துவின் மரணத்தை அறிவித்தலாக உள்ளது **(1 கொரி. 11:26)**
- இது கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்குதலாக உள்ளது **(1 கொரி. 11:26)**
- இது கிறிஸ்துவுடனும் விசுவாசிகளுடனும் ஐக்கியம் கொள்ளுதலுக் கானதாக உள்ளது **(1 கொரி. 10:21)**

பயிற்சி: கர்த்தருடைய இராப்போஜனம் பற்றிய எந்தக் கண்ணோட்டம் மிகவும் அதிகமான வேதாகம ரீதியான ஆதாரத்தைக் கொண்டுள்ளது?

ஆ. ஞானஸ்நானம்/திருமுழுக்கு

1. <u>விளக்கம்</u>

ஞானஸ்நானம் அல்லது திருமுழுக்கு என்பது "baptizo" என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து தரவமைக்கப்பட்டுள்ளது, இது சபைக்குள் கிறிஸ்தவத் தொடக்கத்திற்கான சடங்கு என்ற வகையில் தொடக்க கால சபையில் ஒருவரை தண்ணீரில் கழுவும் அல்லது அமிழ்த்தும் செயலைக் குறிக்கின்றது. விசுவாசி களின் திருமுழுக்கு தொடக்க காலங்களில் இருந்தே செயல்படுத்தப்பட்டு வந்துள்ளது இது அவர் மனந்திரும்பி கிறிஸ்துவில் உள்ள தனிப்பட்ட விசுவாசத்தை அறிக்கையிடுதலைத்தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.

2. <u>தொடக்கம்</u>

ஞானஸ்நானம்/திருமுழுக்கு என்பது அதன் முன்னோடிச் செயலை யோவானின் ஞானஸ்நானத்திலும் யூத மார்க்கத்து அமைந்தவர்களின் ஞானஸ்நானத்திலும் கண்டறிகின்றது, இருப்பினும் கிறிஸ்தவரின் அல்லது விசுவாசியின் ஞானஸ்நானம் என்பது முந்திய இரண்டு வகைகளிலும் இருந்து மாறுபட்டதாக, கிறிஸ்துவின் கட்டளையின் படி நிகழ்த்தப்படுவதாக உள்ளது (**அப். 19:3; மத். 28:19**).

கிறிஸ்துவின் காலத்தில் இருந்த யூதர்களின் ஞானஸ்நானத்திற்கான சிறு குளங்கள் இஸ்ரவேல் நாட்டில் இன்றும் காணப்படக் கூடும் (எ.கா. சவக்கடல் சுருள்கள் கண்டு பிடிக்கப்பட்ட இடமான கும்ரான்).

யூதமார்க்கத்து அமைந்தவர்கள் நியாயப்பிரமாணத்தின்படி தண்ணீரில் சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிருந்தது மற்றும் யோவானின் ஞானஸ்நானம் என்பது வரவிருந்த மேசியாவினால் அளிக்கப்படும் பாவ மன்னிப்பை எதிர்நோக்கி மனந்திரும்புதலுக்கானதாக இருந்தது (**மாற். 1:1-8**)

நாம் காணப்போகின்றபடி, யூதத்துவத்துடன் ஒருவரை வெளிப்படையாய் அடையாளப்படுத்தும் யூத மார்க்கத்து அமைந்தவரின் ஞானஸ்நானமும், யோவானுடனும், அவருடைய செய்தியுடனும் ஒருவரை அடையாளப் படுத்தும் யோவானின் ஞானஸ்நானமும் கொண்டிருந்தது போலவே ஆயினும் அதைக் காட்டிலும் அதிகம் தனிச்சிறப்பு வாய்ந்த நோக்கம் கொண்டதாக கிறிஸ்தவ ஞானஸ்நானம் என்பது உண்மையில் உலகளாவிய நடைமுறையாக இருந்தது. கர்த்தருடைய பந்தி/இராப் போஜனம் என்ற மேலாணையைப் போன்றே ஞானஸ்நானமும் நமது கர்த்தரால் கட்டளை யிடப்பட்டதாகும்.

3. <u>அர்த்தம் மற்றும் நோக்கம்</u>

ஞானஸ்நானத்தின் செயல்விளைவு பற்றிய கேள்வியானது நூற்றாண்டுகளினூடே அதிகம் விவாதத்திற்கும் வாக்குவாதத்திற்கும் உரிய பாடப் பொருளாக இருந்துள்ளது. "ஞானஸ்நானம் இரட்சிக்கிறது" என்று கூறுவதாகக் காணப்படும் பிரச்சனைக்குரிய வசனப் பகுதிகள் இருக்கையில் (**மாற். 16:16; அப். 2:38; அப். 22:16; 1 பேது. 3:20-21**), அப்படிப்பட்ட வசனப் பகுதிகளுக்கு, அறிவிற்கு ஏற்புடைய விளக்கங்களும் உள்ளன. இவ்வசனப் பகுதிகள் ஒவ்வொன்றையும் நெருங்கிப் பரிசீலனை செய்தால், அது தண்ணீர் ஞானஸ்நானம் என்ற செயல் (ஒருவரை) இரட்சிப்பதில்லை, ஆனால் இது உள்ளான இரட்சிக்கும் விசுவாசத்தினுடைய ஒரு வெளிப்படையான செயல்விளக்கமாக மட்டுமே உள்ளது என்பதைக் காண்பிக்கும்.

விசுவாசம் என்பதுதான் இரட்சிப்புக்கு முழுமையான நிபந்தனையாக உள்ளது மற்றும் அத்துடன் கூடுதலாக ஒரு வேண்டுகோள் என்ற வகையில் தண்ணீர் ஞானஸ்நானம் கேட்கப்படுகிறது என்ற கருத்தை நிலைநாட்டுகின்ற தெளிவான வேத வசனப் பகுதிகள் பலவற்றைப் புதிய ஏற்பாட்டில் காண முடியும் (**யோவா. 3:16; எபே. 2:8-9; அப். 10:43**).

என்றால், ஞானஸ்நானத்தின் அடிப்படைச் செயல் என்னவாக உள்ளது? ஞானஸ்நானம் என்ற மேலாணையானது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுடன் விசுவாசியின் அடையாளப் படுத்துதலின் ஒரு வெளிப்படையான அடையாளமாக உள்ளது (**ரோமர் 6:3-4; கொலோ. 2:12; 1 பேது. 3:21**)

கிறிஸ்தவ ஞானஸ்நானமானது "இயேசு கிறிஸ்துவின் பெயரில் அல்லது பெயருக்குள்" பெறும் ஞானஸ்நானமாக உள்ளது. (அப். 2:38). ஆகையால், இது இயேசு கிறிஸ்துவுடன் "அடையாளப்படுத்துப்படுதலை" அடையாளப் படுத்துகிறது. இது ஒரு விசுவாசி தனது பழைய வாழ்க்கைக்கும் பாவத்திற்கும் மரித்து புதிய வாழ்வில் அவருடைய உயிர்த்தெழுதலின் சித்தரிப்பாக உள்ளது.

ஆனால் ஆவிக்குரிய ஞானஸ்நானமானது விசுவாசியை சபையுடன் (கிறிஸ்துவின் சரீரம் - **1 கொரி. 12:13**) "அடையாளப்படுத்துவது" போலவே தண்ணீர் ஞானஸ்நானத்தில் விசுவாசி இயேசு கிறிஸ்துவுக்கான தனது வெளிப்படையான நிலைப்பாட்டை மேற்கொள்கின்றார் மற்றும் ஒரு உள்ளூர் சபைக்குழுமத்தில் மற்ற விசுவாசிகளுடனும் தனது நிலைப்பாட்டை மேற்கொள்ளுகின்றார். சொல்லப் போனால், சில சபைகளில் ஞானஸ்நானம் என்பது சபை உறுப்பினர்த்துவத்திற்கு ஒரு முன் வேண்டுகோளாக உள்ளது.

கர்த்தருடைய இராப் போஜனத்திற்கு உள்ளது போலவே, ஞானஸ்நானமும் உள்ளான ஆவிக்குரிய உண்மை நிலை அல்லது அனுபவத்தின் வெளிப்படையான அடையாளமாக உள்ளது. மற்றும் முழுக்காட்டுதல் என்பது பயன் படுத்தப்படும் மாதிரியாக இருக்கும் பொழுது, இந்த அடையாளத்துவமானது கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுடன் பிரதிநிதித்துவப்படுத்தும் அடையாளம் என்ற வகையில் விசுவாசி தண்ணீருக்குள் சென்று மீண்டும் வருதலில் இந்த அடையாளம் மிகத் தெளிவாக உள்ளது. இரட்சிப்பின் வேளையில் பரிசுத்த ஆவியானவரின் கிரியையான உள்ளான மறுபிறப்பு மற்றும் சுத்திகரித்தல் (பாவங்களில் இருந்து தூய்மைப் படுத்துதல்) என்பது ஞானஸ்நானத்தில் வெளிப்படையாக சித்தரிக்கப்படுகிறது அல்லது பிரதிநிதித்துவப் படுத்தப் படுகின்றது (ரோமர் 6:3-6). எனவே தண்ணீர் ஞானஸ்நானம் என்பது ஞானஸ்நானம் பெறுபவரின் விசுவாசத்தையும், விசுவாசத்திற்குப் பதில்செயலாக தேவனால் நிறைவேற்றப் படும் இரட்சிப்பையும் அடையாளப்படுத்தியது.

கர்த்தருடைய இராப் போஜனமானது கிறிஸ்துவுடனான ஐக்கிய உறவை வலியுறுத்துகையில், ஞானஸ்நானம் என்பது அவருடன் நாம் ஒன்றாகுதலின் மீது கவனம் செலுத்துகின்றது.

பயிற்சி: தண்ணீர் ஞானஸ்நானம் விசுவாசியை எந்தெந்த முக்கியமான வழிகளில் கிறிஸ்துவுடன் அடையாளப்படுத்துகின்றது?

---

4. ஞானஸ்நானத்தின் வகைமுறை

ஒருவேளை, ஞானஸ்நானத்தின் வேதாகமரீதியான வகைமுறையைத் தீர்மானிக்க அதன் அர்த்தம், மற்றும் தனிச் சிறப்பு ஆகியவை பற்றி பல நூற்றாண்டுகளாக அதிக வாக்குவாதங்கள் சீறியெழுந்திருக்கலாம்.

தெளித்தல், ஊற்றுதல் அல்லது பீறிடச் செய்தல் மற்றும் முழுக்காட்டுதல் ஆகியவை ஞானஸ்நானத்தின் அடிப்படையான வகைமுறைகளாக உள்ளன.

- தெளித்தல் அல்லது ஊற்றுதல் (பீறிடச் செய்தல்)

  baptizo என்ற வார்த்தையின் இரண்டாம் நிலை அர்த்தமான "செல்வாக்கின் கீழ் கொண்டு வருதல்" என்பதைப் பயன்படுத்தி, முழுக்காட்டுதலைத் தவிர்த்து ஒரு வகை முறையில் மனநிறைவடைபவர்கள், தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்பது "மேல் வருதல்" என்பதை மிகச் சிறப்பாக அடையாளப் படுத்துகிறது என்று வாதம் செய்கின்றனர். இயேசுவின் ஞானம் பற்றிக் கூறுவது போன்ற வசனப் பகுதிகள் இந்தக் கருத்தை ஆதரிப்பதற்கு அடிக்கடி குறிப்பிடப்படுகின்றன (**லூக். 3:21-22**ஐக் காணவும்). தூய்மைப்படுத்துதல் என்ற அடிப்படைக் கருத்து இச்சடங்கில் காணப்படுகின்ற வரையில் ஞானஸ்நானத்தின் வகைமுறை எது என்பது இடர்ப்பாட்டிற்குரியதல்ல என்ற பொதுவான கருத்தொன்று பேப்டிஸ்ட்டு வட்டாரங்களுக்கு வெளியே மேலோங்கியுள்ளது, மற்றும் வேதாகமம் ஞானஸ்நானத்திற்கு ஒரு குறிப்பிட்ட வகைமுறையைப் பரிந்துரைப்பதில்லை.

  முழுக்காட்டுதலைத் தவிர பிற வகை முறைகள் எதுவும் வேதாகம ரீதியாகப் பலத்த ஆதாரம் எதுவும் கொண்டிருப்பதில்லை என்பதே அவ்வித வகை முறையின் பிரச்சனையாக உள்ளது.

- முழுக்காட்டுதல்

  அமிழ்த்து அல்லது முழுக்காட்டு என்பதே baptize என்ற வார்த்தை யின்அடிப்படை அர்த்தமாக உள்ளதென்று சொற்பொருளியல் நிபுணர்கள் ஒப்புக் கொள்ளுகின்றனர். மற்றும் யோவானின் ஞானஸ்நானம் முழுக் காட்டுதலாகவே இருந்தது என்பதைப் பெரும்பான்மையான கல்வி யாளர்கள் ஒப்புக் கொள்ளுகின்றனர். மற்றும் முழுக்காட்டுதல் என்பது வேதாக ரீதியான ஞானஸ்நானங்களின் வகை முறையாய் உள்ளதாகக் காணப்படுவதுடன், இது 13ம் நூற்றாண்டு வரையிலும் கூட கிறிஸ்தவ உலகில் ஒரு பொதுவான வழக்கமாய் இருந்தது.

எனவே வேதாகம வசனப் பகுதிகளுடன் சொற்பொருள் ஆய்வியல் ஆதாரங்களும், புதிய ஏற்பாட்டு சபையின் நடைமுறையும் மற்றும் சபை வரலாறும் ஆகிய இவை யாவும் (ஞானஸ்நானத்தின்) வகை முறையாக முழுக்காட்டுதலையே சுட்டிக்காண்பிக்கின்றன மற்றும் இது, இரட்சிப்பு என்பதை வெளிப்படையான, புறம்பான வழிமுறையில் மிகத் தெளிவாக அடையாளப்படுத்துகின்றது.

இருப்பினும், உபதேச ரீதியான உறுதிப்பாடு என்பது ஞானமுள்ளதாயிருப்பதில்லை. அதிலும் சிறப்பாக, இக்கருத்தானது பிற வழிகளில் கொண்டு செலுத்தப்படக் கூடியதாய் இருக்கும் பொழுது அது ஞானமுள்ளதாய் இருப்பதில்லை மற்றும் தண்ணீர் ஞானஸ்நானம் இரட்சிப்பதில்லை. மற்றும் கர்த்தருடைய பந்தியைப் போன்றே, தண்ணீர் ஞானஸ்நானத்தின் எந்த வகை முறையானது நமது கர்த்தரால் கட்டளையிடப்பட்டது என்ற வாக்குவாதத்தில், ஞானஸ்நானத்தின் அர்த்தமும் தனிச்சிறப்பும் இழந்து போகப்படக் கூடாது. (**மத். 28:18-20**ஐக் காணவும்)

5. <u>ஞானஸ்நானத்திற்கு உட்படுபவர்கள்</u>

ஞானஸ்நானத்தின் எந்த வகைமுறை வேதாகம ரீதியானது என்ற வினாவில், வாக்குவாதத்தின் அடிப்படையில் குழந்தை ஞானஸ்நானம் என்பதின் பிரச்சனையானது அநேகமாய் சம அளவு கேள்விக்குரியதாக இருக்கலாம்.

சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, ஞானஸ்நானம் என்பது ஒரு விசுவாசிக்கும், கிறிஸ்துவுக்கும் மற்றும் அவருடைய சபைக்கும் இடையில் உள்ள உறவின் வெளிப்படையான ஒரு அடையாளமாக இருப்பதால், விசுவாசத்தினால் பகுத்தறிவுள்ள, மனப்பூர்வமான முடிவெடுக்கக் கூடிய விசுவாசிகள் மட்டுமே ஞானஸ்நானத்திற்குத் தகுதி வாய்ந்தவர்கள் என்ற கருத்து பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகின்றது. இருப்பினும், நூற்றாண்டுகளினூடாக, சபையின் மிகப் பெரும் பிரிவுகள் விசுவாசிகளைப் பெற்றோர்களாகக் கொண்ட பச்சிளம் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தலை நடைமுறைப் படுத்தியிருக்கின்றன.

விசுவாசிகளின் குழந்தைகள் தங்களிடம் தனிப்பட்ட விசுவாசம் இல்லாதிருப்பினும், தங்கள் பெற்றோருடன் கொண்டுள்ள உறவின் உண்மை நிலையின் நிமித்தம், சுவிசேஷத்தினால் வாக்களிக்கப்பட்ட இரட்சிப்புக்கு, குறிப்பிட்ட உறவுமுறையைத் தாங்கி நிற்கின்றனர் என்று பலர் விசுவாசிக்கின்றனர். பச்சிளம் குழந்தைகளின் ஞானஸ்நானத்திற்கான விவாதங்கள், (1) விருத்த சேதனம் என்ற பழைய ஏற்பாட்டுச் சடங்குடன் ஒப்பிடுதல், (2) நடபடிகளில் "வீட்டாரின்" ஞானஸ்நானங்கள் (எ.கா. **அப். 16:31-34**) பச்சிளம் குழந்தைகள் உள்ளடக்கியிருந்திருக்க வாய்ப்புண்டு; (3) பெற்றோர்களில் ஒருவர் மட்டும் விசுவாசியாய் இருக்கும் வீட்டாருக்கு குறிப்பிட்ட ஆசீர்வாதங்கள் (1 கொரி. 7:14) என்பவற்றை மையப்படுத்தியுள்ளன.

இருப்பினும், பின்வரும் காரணங்களுக்காக, பச்சிளம் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் என்ற கருத்திற்கு எதிராக ஏராளமான அளவு ஆதாரம் இருக்கிறது என்பது பிரச்சனையாக உள்ளது: (1) பச்சிளம் குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்குமாறு போதிக்கின்றதாக எந்த ஒரு வேத வசனத்தையும் திட்டவட்டமாக மேற்கோள் காண்பிக்க முடியாது; (2) சபைக்குக் கர்த்தருடைய பிரதான கட்டளையில் ஞானஸ்நானம் கொடுத்தல் என்பதுடன், "சீஷராக்குதல்" மற்றும் போதித்தல் ஆகியவையும் கூடக் கொடுக்கப் பட்டுள்ளன இவற்றைக் குழந்தைகளுக்கு நடைமுறைப்படுத்துவது என்பது மிகவும் கடினமானதாகக் காணப்படுகின்றது; (3) இரட்சிப்புக்குத் தேவையான விசுவாசத்தைப் பச்சிளம் குழந்தையால் செயல்படுத்த இயலாது; (4) வீட்டார் என்ற சொற்றொடர் பச்சிளம் குழந்தைகள் உள்ளடங்கியிருத்தலை வற்புறுத்துவதில்லை மற்றும் அவ்வித வசனப் பகுதிகள், அதில் உள்ள யாவரும் சுவிசேஷத்தை கேட்டிருந்து விசுவாசித்தனர் என்று மறைமுகமாய் உணர்த்துகின்றது;

3ம் நூற்றாண்டின் கடைசிப் பாதிக்காலம் வரையிலும் விசுவாசிகளின் ஞானஸ்நானத்துடன் பச்சிளம் குழந்தைகளின் ஞானஸ்நானம் எழுந்ததில்லை என்று சபையின் மிகத் தொடக்க கால வரலாறு சுட்டிக் காண்பிக்கிறது; (6) ஞானஸ்நானம் மற்றும் விருத்த சேதனம் ஆகியவற்றின் ஒப்புவமையானது, யூதராய் இருப்பதற்கு இயல்பான பிறப்பே போதுமானதாக இருந்தது மற்றும் இரட்சிப்புக்கு (ஆவிக்குரிய பிறப்புக்கு) சொந்த விசுவாசத்தைச் செயல்படுத்துவது அவசியமாக உள்ளது என்பதை ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது உடைபடுகின்றது.

ரோமன் கத்தோலிக்கர்கள் போல் ஞானஸ்நானம் இரட்சிக்கின்றது என்பதை விசுவாசியமல் அல்லது சீர்திருத்த இறையியலில் உள்ளது போல் பலப்படுத்துதல் அல்லது அதிகமாக்குதல் என்பதின் கருத்தில் கிருபையின் வழிமுறையாக உள்ளதென்று யூகித்தரிதலில் பச்சிளம் குழந்தைகளின் ஞானஸ்நானம், அதன் (ஞானஸ்நானத்தின்) தனித்தன்மையை இழந்திருக்கின்றது, குறிப்பாக ஞானஸ்நானத்தின் தெளிவான வேதாகம ரீதியான அர்த்தத்தை - இரட்சிக்கும் விசுவாசத்தை ஏற்கனவே செயல்படுத்தியுள்ள ஒருவர் கிறிஸ்துவுடனும் சபையுடனும் வெளிப்படையாக அடையாளப் படுத்தப்படும் அர்த்தத்தை இழந்து நிற்கிறது.

விசுவாசம் என்பது மட்டும் இரட்சிப்பின் முழுமையான நிபந்தனையாக உள்ளது மற்றும் இது மட்டுமே கிருபையைப் பெற்றுக் கொள்கின்ற ஒரே வழிமுறையாக உள்ளது என்ற வேத வசனத்தின் மிகத் திரளான அமைப்புடன் நிறைவடைய வேண்டும் என்பதே கத்தோலிக்க மற்றும் சீர்திருத்தக் கண்ணோட்டங்களின் பிரச்சனையாக உள்ளது. தண்ணீர் ஞானஸ்நானம் இரட்சிப்பதில்லை!

பயிற்சி: கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தைச் செயல்படுத்துதல் அல்லது தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுதல் - இவற்றில் இரட்சிப்புக்கு எதைச் செய்வது மிக சுலபமானதாக உள்ளது?

____

____

____

____

முடிவுரை

ஞானஸ்நானமும் கர்த்தருடைய இராப்போஜனமும் மட்டுமே மேலாணைகளாக அங்கீகரிக்கப்படுகின்றன, ஏனென்றால் இவையிரண்டு மட்டுமே - மத். 28:19-20ஸ் ஞானஸ்நானம் லூக். 22 மற்றும் 1 கொரி. 11:24-26ல் கர்த்தருடைய இராப் போஜனமும் - கிறிஸ்துவால் கட்டளையிடப்பட்டவைகளாக உள்ளன. எந்த ஒரு மதச் சடங்கும் அல்லது கொண்டாட்டமும் கிறிஸ்தவர்களால் நிரந்தரமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதில் அவற்றிற்கு மூன்று ஆய்வுக் கேள்விகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

(1) கிறிஸ்து இதைக் கட்டளையிட்டாரா?

(2) புதிய ஏற்பாட்டு சபை இதை நடைமுறைப்படுத்தியதா?

(3) இன்றைய நாட்களில் விசுவாசிகளுக்கு சபையில் இது அர்த்தம் எதையும் கொண்டுள்ளதா?

இம்மூன்று சோதனைகளையும் ஞானஸ்நானமும் கர்த்தருடைய இராப் போஜனமும் மாத்திரமே சந்திக்கின்றவைகளாய் உள்ளன.

எ. தேவனுடைய தீர்க்கதரிசனத் திட்டத்தில் சபையின் எதிர்காலம்

கிறிஸ்துவின் முதல் வருகையில் அவரை மேசியாவாக/அரசராக ஏற்றுக் கொள்ளாத இஸ்ரவேலர் அவரைப் புறக்கணித்து சிலுவையில் அறைந்தனர் ***(யோவா. 11:45-53; யோவா. 19:14-16)***. இதன் விளைவாக, கிறிஸ்து

- ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இஸ்ரவேலைப் புறக்கணித்தார். ***மாற். 3:31-35***
- அந்தத் தலைமுறையினர் மீது நியாயத் தீர்ப்பை விதித்தார். ***லூக். 19:41-44***
- "இராஜ்ஜியம்" இஸ்ரவேலிடமிருந்து தற்காலிகமாய் எடுக்கப்பட்டு இன்னொருவருக்கு (சபைக்கு) கொடுக்கப்படும் என்று அறிவித்தார். ***மத். 21:33-46,*** விசேஷமாக ***வ. 43.***

இயேசு சற்று காலத்திற்கு சபைக்கே "இராஜ்யத்தைக் கொடுத்தார்." ரோமர் 11:1-36

சபையும் இஸ்ரவேலரும் தேவனால் ஒரே நோக்கத்திற்காக ஆனால் மாறுபட்ட காலங்களில் பயன்படுத்தப்பட்ட தனித்தனி உளதாயிருக்கும் (உயிர்ப்) பொருட்கள் என்று வேத வசனம் போதிக்கின்றது.

இருப்பினும், வேதாகமக் கல்வியாளர்கள் பலர் இஸ்ரவேலை சபையுடன் சமப்படுத்த அல்லது குறைந்தபட்சம் சபையானது "ஆவிக்குரிய இஸ்ரவேலாக" உள்ளது என்று கூற முயற்சி செய்கின்றனர்.

இப்படிப்பட்ட தவறான அனுகுமுறையானது பின்வருபவற்றிலிருந்து விளைகின்றது.

- ஆபிரகாமுடனான உடன்படிக்கையின் பாகம் என்ற வகையில் இஸ்ரவேலுக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய ஆசீர்வாதங்கள்/வாக்குத்தத்தங்கள் எல்லாவற்றையும் சபையானது நிறைவேற்றுகிறது என்று காணுகின்ற வேத விளக்க ஆய்வியலின் அடையாளத்துவ அல்லது ஒப்புவமை விளக்கவுரை அமைப்பு.
- வேத வசனப் பகுதிகள் பலவற்றில் வெளிப்படுத்தப் படுகின்றபடியாக சபை என்பது யூதர்கள் மற்றும் புறஜாதியாரைக் கொண்டதாக உள்ளதென்ற சத்தியத்தின் தவறான குறிப்பிடுதல்.
  ரோமர் 2:17-29
  ரோமர் 11:1-36
  கலா.3:26-29
  எபே. 3:6

சபையில் யூதர்கள் மற்றும் புறஜாதியார் ஆகிய இரு சாராரும் உறுப்பினர்களாக இருப்பினும் வேத வசனத்தில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது இஸ்ரவேலுடன் ஒருக்காலும் சமப்படுத்தப்படவில்லை.

- ஆபிரகாமுடன் மற்றும் தாவீதுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைகளின் நிபந்தனையற்ற, மாற்ற முடியாத வாக்குத்தத்தங்கள் உட்பட இஸ்ரவேலுக்கான தேவனுடைய தீர்க்கதரிசனம் பற்றிய தவறான புரிந்து கொள்ளுதல். ***ரோமர் 11:25-32; ஆதி. 12:1-7; ஆதி. 15; ஆதி. 17:1-11; 2 சாமு. 7:8-16.***

- *கடைசிக் காலத்தில் இஸ்ரவேலரை மத ரீதியாக, பொருளாதார ரீதியாக, மற்றும் அரசியல் வலிவாற்றல் ரீதியாக ஒன்று கூட்டி மீளக் கட்டியெழுப்புவதாக தேவன் கூறிய வாக்குத்தத்தங்களின் நிறைவேற்றத்தை மறுத்தல். **எரே. 31:27-40***
- *இஸ்ரவேல் மற்றும் சபை ஆகியவற்றிக்கிடையில் உள்ள வித்தியாசத்தைப் பற்றிய தெளிவின்மை.*

  *புதிய ஏற்பாடு முழுவதிலும் வேத வசனமானது சபைக்கும் இஸ்ரவேலுக்கும் இடையில் வித்தியாசத்தைப் பராமரிக்கின்றது. **(1 கொரி. 10:32)** மற்றும் மீட்கப்பட்ட யூதர்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய இரு சாராரின் நிறைவான நோக்கமுமே தேவனை என்றென்றும் ஆராதித்து அன்புகூருதலாக **(வெளி. 22:1-5)** இருப்பினும், அவர்கள் தேவனுடைய தீர்க்கதரிசனத்தின் திட்டத்தில் மாறுபட்ட செயல் பணிகளை நிறைவேற்றுகின்றனர். இஸ்ரவேல் என்பது தேவன் தமது மீட்பின் திட்டத்தை நிறைவேற்ற உலகிற்கு மேசியாவைக் கொண்டு வர அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட கருவியாக உள்ளது. சபை என்பது கிறிஸ்து பரத்துகேறியது மற்றும் அவரது மறுவருகை ஆகியவற்றிற்கு இடைப் பட்ட காலத்தில் யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் அவருடைய சுவிசேஷத்தை அறிவிப்பதற்கென்று தேவனால் தெரிந்து கொள்ளப் பட்ட கருவியாக உள்ளது.*

  *சபையும் யூதர்களும் (இஸ்ரவேல்) வெளி. புத்தகத்தில் இன்னும் மாறுபட்டவர்களாய் உள்ளனர் **(வெளி. 2:8; 11; 3:7-9; 7:4; 21:12** ஆகியவற்றைக் காணவும்). சபையானது **வெளி. அதிகாரங்கள் 2:3; அதிகாரம் 19** மற்றும் **அதிகாரம் 22** ஆகியவற்றில் குறிப்பிடப் பட்டுள்ளது. இஸ்ரவேல் என்பது, **வெளி. 4:19**ல் 7 ஆண்டு மகா உபத்திரவ காலத்தின் பாடப் பொருளாகவும், **வெளி. 12-13**ல் அந்தி கிறிஸ்துவால் துன்புறுத்தப் படுவதாகவும் உள்ளது. ஆனால் **வெளி. 4:19**ல் சபை குறிப்பிடப்பட்டிருப்பதில்லை.*

- *ஆபிரகாமுடனான உடன்படிக்கையின் வித்து என்ற வகையில் கிறிஸ்துவின் மூலம் வருகின்ற இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை இஸ்ரவேலாக ஆகாமலேயே சபையானது மகிழ்வுடன் அனுபவிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளத் தவறுதல். (கலா. 3:11-18). ஆனால் சபையானது தேவனுடைய மாற்றப்பட இயலாத வாக்குத்தத்தங்கள் என்ற வகையில் ஆயிரமாண்டு அரசாட்சியில் இஸ்ரவேலுக்கு மட்டுமே நிறைவேற்றப்பட விருப்பதாக வாக்களிக்கப்பட்டுள்ள பொருள் ரீதியான, உலகப் பிரகாரமான ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக் கொள்வதில்லை.*

★ சபையை ஒருவர் இஸ்ரவேலுடன் சமப்படுத்துவதற்கு, இஸ்ரவேலுக்கான தேவனுடைய திட்டம் மற்றும் வாக்குத்தத்தங்கள் பற்றிக் குறிப்பிடுகின்ற வேத வசனத்தின் ஏராளமான பகுதியை அவர் மதிக்காமல் இருந்தாக வேண்டும். ★

சபைக்கான தேவனுடைய தீர்க்கதரிசனத்திட்டமானது பின்வருவன வற்றை உள்ளடக்குகின்றது:

- **சுவிசேஷத்தை அறிவித்தல்**
  சபையின் யுகத்தில் (பெந்தெகொஸ்தேயில் இருந்து பரவச நிலை வரைக்கும்) இஸ்ரவேலுக்குப் பதிலாக சபையே சுவிசேஷத்தை அறிவிக்கவும் பூமியில் கிறிஸ்துவைப் பிரதிநிதித்துவப் படுத்தவும் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட கருவியாக உள்ளது. ***கொலோ. 1:24-29; 2 கொரி. 5:16-21***

  சபையானது தற்காலத்தின்போது பூமியின் மீது தேவனுடைய இராஜ்யத்தின் மாற்றம் செய்யப்பட்ட தற்காலிகமான, ஆவிக்குரிய வடிவமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. கிறிஸ்து தமது சபையைத் தம்மிடத்தில் சேர்த்துக் கொள்ளவும், மற்றும் இஸ்ரவேலுக்கும் மீட்கப்படாத உலகத்திற்கும் மாபெரும் உபத்திரவ காலத்தைத் தொடங்கும் சைகை காட்டுவதற்கும் திடீரென்று மீண்டும் வருவார். ***யோவா. 14:1-5; 1 தெச. 4:13-18; 1 தெச. 1:10***

- **கிறிஸ்துவின் கறைதிரையற்ற மணவாட்டியாக அவருக்கு முன் நிறுத்தப் பட்டுள்ளது.**
  ஆட்டுக்குட்டியானவரின் திருமண விருந்தின் வேளையில்
  சபையானது கிறிஸ்துவின் மணவாட்டியாக - குமாரனுடைய மீட்பின் ஊழியத்திற்காக அவருக்குப் பிதாவானவருடைய அன்புப் பரிசாக உள்ளது.
  எபே. 5:25-33
  வெளி. 19:6-9
  வெளி. 21:9-10

- **தேவன் எந்நாளும் மகிமைப்படுத்தி சேவித்தல்**
  சபையின் தனிச் சிறப்பானது குறைந்தபட்சம் நித்திய நிலை தொடங்கும் வரையிலாவது நிலைத்து நிற்கின்றது.
  வெளி. 21:1-4
  எபே. 3:21
  வெளி. 22:5-6, 16-17

ஏ. சபை பற்றிய புதிய ஏற்பாட்டின் திறவுகோல் வசனப் பகுதிகள்

புதிய ஏற்பாட்டின் பெரும்பகுதியானது சபையைப் பற்றி எடுத்துரைப்பதா யிருக்கையில், பின்வரும் தேர்ந்தெடுக்கப்பட்ட வசனக் குறிப்புகள் குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்தவைகளாய் உள்ளன.

மத். 16:18	-	சபையின் அஸ்திபாரம்
மத். 18	-	சபையின் ஒழுங்கு முறை
யோவா. 13-17	-	சபைக்கு அறிவுறுத்தல்கள்
அப். நட	-	சபையின் வரலாறு
ரோமர் 12-16	-	சபையில் உபதேசத்தின் நடைமுறை
1 கொரி.	-	சபைப் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தல்
எபே.	-	சபையின் இயல்பு

கொலோ.	-	சபையும் கிறிஸ்துவும்
***1, 2* தெச.**	-	சபையின் எதிர்காலம்
***1, 2* தீமோ., தீத்து**	-	சபையின் நடைமுறை ஊழியம்
***1, 2* பேதுரு**	-	சபை துன்புறுத்தப்படுதலும் பாடுகளும்
எபி. *13*	-	சபை தலைவர்களுக்குக் கீழ்ப்படிதல்
***1* யோவா.**	-	சபையில் பாவத்தைக் கையாளுதல்
வெளி. *2-3*	-	சபையைக் கிறிஸ்து மதிப்பிடுதல்

10. எதிர்கால விஷயங்கள் - முடிவியல்

அறிமுகம்

– <u>முடிவியலின் இயல்பு</u>

முடிவியல் என்பது **எதிர்கால (கடைசி) விஷயங்களின் படிப்பாக உள்ளது**. இது மனிதர்கள், இஸ்ரவேல், சபை மற்றும் படைப்பு முறைமை முழுவதற்குமான தேவனுடைய தீர்க்கதரிசனத் திட்டத்தை விரித்துரைக்கின்றது.

– <u>நிறைவேற்றப்படாத தீர்க்கதரிசனத்தை ஏன் படிக்க வேண்டும்?</u>

எதிர்காலத்தின் மீது கவனம் செலுத்தி, நிகழ்காலத்தைப் புறக்கணித்து விடும் எண்ணப்போக்கு ஒன்றுள்ளது. ஆனால் தீர்க்கதரிசனம் பற்றிய தக்க கண்ணோக்கானது,

1. இப்பொழுது உலகத்தில் தமது வாழ்வைத் தூய்மைப்படுத்தும்.
2. வர இருக்கின்றவைகளுக்கு நம்மைத் தயார்ப்படுத்தும்.
3. சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுதலை மேம்படுத்தும்.
4. நித்திய விஷயங்களின் மீது நமது கவனத்தை நிலைப்படுத்தும்.
5. தேவனுடைய உண்மைத் தன்மையை மெய்ப்பிக்கும் (**தீத்து 2:11-15**)

வர இருக்கின்றவற்றைப் புரிந்து கொள்ள உதவுவதற்குப் பின்வரும் பக்கங்களில் ஆறு வரைவட்டவணைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- மையமான முடிவு கால நிகழ்ச்சிகள்
- தேர்ந்தெடுக்கப்பட்ட திறவுகோல் வசனங்கள்
- ஆயிரம் வருட அரசாட்சி/பரவச நிலை பற்றி முக்கிய/முதன்மைக் கண்ணோட்டங்கள்
- உபத்திரவத்தின் முதன்மை நிகழ்ச்சிகள்
- **வெளிப்படுத்தின விசேஷத்தின்** வரைவு அட்டவணை
- முடிவு கால வியல் சொற்றொடர்களின் விளக்கங்கள்


வாழ்கின்ற பு.ஏ. பரிசுத்தவான்கள் மறுரூபப்படுதல் மரித்த பு.ஏ. பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதல் விசுவாசிகளின் செயல்களுக்கு பேமா இருக்கை நியாயத்தீர்ப்பு பரலோகத்தில் சபையின் திருமண விருந்து. இது உபத்திரவ காலத்தின் போது ஆட்டுக் குட்டியானவரை மணமகனாகக் கொண்டு நடைபெறும்.
ப.ஏ. பரிசுத்தவான்களும், உபத்திரவத்திலிருந்த பு.ஏ. பரிசுத்தவான்களும் உயிர்ப்பிக்கப்பட்டு நியாயத்தீர்க்கப் படுதல்.
உயிருடன் உள்ள யூதர்களும் புறஜாதியாரும் உபத்திரவத்திலிருந்து வெளியேற்றப்பட்டு ஆயிரம் வருட அரசாட்சிக்கோ அல்லது பாதாளத்திற்கோ செல்லும்படி நியாயந்தீர்க்கப்படுதல் (மத். 25)
கிறிஸ்துவின் சிலுவை மரணம் உயிர்த்தெழுதல் பரமேறுதல்
தீர்க்கதரிசி ஆசாரியர் என்ற வகையில் கிறிஸ்து
முதலாம் வருகை
பெந்தெகொஸ்தே (பரிசுத்த ஆவியானவர் அருளப்படுதல்)
சபை யுகம்
சபையின் பரவச நிலை
மகா உபத்திரவம் தேவகோபம்; நியாயாதிபதியாகக் கிறிஸ்து மீட்படைந்தவர்கள் பிரவேசிப்பதில்லை
இஸ்ரவேலுடன் உடன்படிக்கை
அந்திகிறிஸ்து
முத்திரை நியாயத்தீர்ப்புகள்
இஸ்ரவேலுடன் உடன்படிக்கை மீறப்படுதல்
பாழாக்கும் அருவருப்பு
எக்காள நியாயத்தீர்ப்பு
மிருகமும் கள்ள தீர்க்கதரிசியும்
யூதர்கள் துன்புறுத்தப்படுதல்
கலச நியாயத்தீர்ப்புகள்
அர்மெகதோன்
இரண்டாம் வருகை
சாத்தான் கட்டப்படுதல்
மக்களை வஞ்சிக்க முடியாது
ஆயிரம் ஆண்டு அரசராகக் கிறிஸ்து வெளி. 19-20
பூமியில் சமாதானம் இஸ்ரவேல் (சுய) நாட்டில் மேசியாவின் ஆளுகை ஆபிரகாமுடனும் மற்றும் தாவீதுடனான உடன்படிக்கைகள் நிறைவேறுதல் மீட்படையாதவர்கள் பிரவேசிப்பதில்லை
சாத்தான் விடுவிக்கப்படுதல்
தோற்கடிக்கப்பட்டு நரகத்தில் தள்ளப்படுதல்
மீட்கப்படாமலேயே பரிசுத்தவர்கள் உயிர்ப்பிக்கப் படும் பெரிய வெள்ளை அரியணைத் தீர்ப்பு
மீட்கப்பட்டவர்கள் என்றென்றும் தேவனுடன்
பழைய வானமும் பூமியும் அழிக்கப் பட்டு புதிய பூமியும் வானமும் படைக்கப்படுதல்
நித்திய நிலை
மீட்கப்படாதவர்கள் தேவனிடமிருந்து பிரிக்கப்படுதல் நித்தியமாக
கி.பி. 33
2000 ஆண்டுகள்?
31/2 ஆண்டுகள்
31/2 ஆண்டுகள்
1000 ஆண்டுகள்
கர்த்தருடைய நாள்
நித்தியம்

தேர்ந்தெடுக்கப்பட்ட திறவுகோல் வசனப் பகுதிகள்

முதலாவது வருகை	சிலுவையில் அறையப்படல் உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல்	பெந்தெகொஸ்தே	சபையுகம்	பரவசநிலை	உபத்திரவம்	இரண்டாம் வருகை	ஆயிரமாண்டு
ஏசா. 53 ஏசா. 7:14 ஏசா. 61:1 மத். 1:25	லூக். 24:26, 46 ரோமர் 1:4 1 கொரி. 15:3-4, 23 அப். 1:9-11 எபே. 1:20	யோவேல் 2 அப். 2	மத். 13 எபே. 3:1-7 மத். 28:18-20 ரோமர் 9-11 மத். 21:33-46	1 தெச. 4:13-18 1 கொரி. 15:51-57 யோவா. 14:1-3 வெளி. 3:10	தானி. 9:24-27 எரே. 30:1-9 மத். 24:24-28 1 தெச. 5:9 வெளி. 3:10 வெளி. 6:18	தானி. 2:44-45 சக. 14:1-11 மத். 24:27 மத். 16:28 வெளி. 19	ஏசா. 11:1-5 2 சாமு. 7:14 ஆதி. 12, 15, 17 வெளி. 20:1-6 மீகா 4:1-8 எரே. 31:27-40

நியாயத் தீர்ப்புகள்	உயிர்த் தெழுதல்கள்	பழைய வானமும் பூமியும் அழிக்கப் பட்டு புதிய வான மும் பூமியும் படைக்கப்படுதல்	மீட்கப்பட்ட வர்களுக்குப் பரலோகம்	மீட்கப்படாத வர்களுக்கு அக்கினிக் கடல்	நித்திய நிலை
<u>விசுவாசிகளின் கிரியைகள்</u> 1 கொரி. 3:11-15 2 கொரி. 5:10 <u>வாழும் புறஜாதியார்</u> மத். 25:31-46 <u>வாழும் யூதர்கள்</u> எசே. 20:33-38 லூக். 17:30-27 <u>மீட்கப்படாமல் மரித்தவர்கள்</u> வெளி. 20:11-15 எபி. 9:27-28	<u>மீட்கப்பட்டவர்கள்</u> லூக். 14:14 யோவா. 5:28-29 1 தெச. 4:16 வெளி. 20:4 தானி. 12:2 <u>மீட்கப் படாதவர்கள்</u> தானி. 12:2 வெளி. 20:11-15	வெளி. 21:1 2 பேது. 3:10-13	யோவா. 14:2 வெளி, 4:5 வெளி. 21:22	லூக் 16:23 2 தெச. 1:7-9 வெளி. 20:13-15	வெளி. 21:1-8 வெளி. 22:1-5

ஆயிரமாண்டு அரசாட்சி பற்றிய முதன்மைக் கண்ணோட்டங்கள்

விஷயம்/பிரச்சனை : ஆயிரமாண்டு அரசாட்சியுடன் தொடர்புடைய வகையில் கிறிஸ்துவின் 2ம் வருகை எப்பொழுது உள்ளது?

ஆயிரமாண்டு முன் அரசாட்சி கொள்கை



1) நேரடியான வேத விளக்கம் ஆய்வு
2) இஸ்ரவேல் சபை
3) தீர்க்கதரிசனத்தை நிறைவேற்ற பூமியின் மீது உண்மையிலேயே ஆயிரமாண்டு அரசாட்சி

ஒரு ஆயிரமாண்டு



1) அடையாளத்துவ வேத விளக்கம் ஆய்வு – சபை இஸ்ரவேலின் தீர்க்க தரிசனத்தை நிறைவேற்றுகிறது
2) இஸ்ரவேல் = சபை ''இப்பொழுது இராஜ்யத்தின் யுகம்''
3) பரவச நிலை = 2ம் வருகை "parousia"

ஆயிரமாண்டு பின் அரசாட்சி கொள்கை



1) பகுதி அடையாளத்துவ வேத விளக்க ஆய்வு இஸ்ரவேல் = சபை
2) சபை ஆயிரமாண்டு அரசாட்சியைக் கொண்டு வருகிறது உலகம் மிக மேன்மையானதாகும்.
3) பரவச நிலை = 2ம் வருகை "parausia"

ஆயிரமாண்டு முன் அரசாட்சி பரவச நிலைக் கண்ணோட்டங்கள் விஷயம்/பிரச்சனை: சபையின் பரவச நிலை: உபத்திரவம் எப்பொழுது நடந்தேறுகிறது?

உபத்திரவத்திற்கு முந்தி பரவசநிலை



1) சபை துன்புறுவதில்லை/உபத்திரவப்படுவதில்லை
2) பரவச நிலை = 2ம் வருகையின் முதல் கால நிலை
3) நேரடியான வேத விளக்க ஆய்வு

உபத்திரவத்திற்குப் பிந்தி பரவச நிலை



1) சபை உபத்திரவத்தின் ஊடாகக் கடந்து செல்லுகிறது
2) பரவச நிலை = 2ம் வருகை
3) பகுதி நேரடியான வேத விளக்க ஆய்வு = சபை

உபத்திரவத்தின் முதன்மையான நிகழ்ச்சிகள் (வெளி. 7:19)

முதல் பாதி

1) 144,000 யூத சுவிசேஷங்கள் தேவனால் காலத் தொடக்கத்தில் முத்திரையிடப்படுதல் (7:1-8).
2) அந்தி கிறிஸ்து தோற்றம் (6:2) மற்றும் 10 இன ஒன்றிப்பினிடமிருந்து கிரீடம் தரப்படுதல் (17:12).
3) 1ம் முத்திரையின் ஒரு பாகமாக (6:2) சமாதானத்தையும் பாதுகாப்பையும் வாக்களித்து அந்தி கிறிஸ்து இஸ்ரவேலுடன் ஒரு உடன்படிக்கை ஏற்படுத்துகின்றான் மற்றும் அதனை நிறைவேற்றுகின்றான் (தானி. 9:27. காலக்கடிகாரத்தைத் தொடங்கி வைக்கின்றான்.
4) உலக சபை நிறுவப்படுகிறது (17:1-6)
5) முத்திரை நியாயத்தீர்ப்புகள் பூமியின் மீது ஊற்றப்படுகின்றன.
   - அ) அந்தி கிறிஸ்து – பொய் சமாதானம் மற்றும் பாதுகாப்பு (6:1-2)
   - ஆ) யுத்தம் – அர்மெக்தோனின் "முகாம்" தொடக்க நிலைகளில் ஆரம்பிக்கின்றது (6:3-4)
   - இ) பஞ்சமும் விலையுயர்வும் – பொருளாதாரக் கூச்சல் குழப்பங்கள் (6:5-6)
   - ஈ) மரணம் – யுத்தம், பஞ்சத்தினால் பூமியில் கால்பங்கு மக்கள் தொகை கொல்லப்படுதல் (6:7-8)
   - உ) பரிசுத்தவான்கள் துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப்படுதல் (6:9-10)
   - ஊ) வானவியல் தொந்தரவுகள் மற்றும் பூமியதிர்ச்சிகள் மற்றும் கொந்தளிப்புகள் ஏற்படுதல் (6:12-17)
6) எசேக்கியேல் 38 மற்றும் 39 – கோகு மற்றும் மாகோகு யுத்தம் இது இஸ்ரவேலை மீட்பதற்குத் தேவன் இடைப்படுவதினால் முடிவுக்கு வருகிறது. இது 31/2 ஆண்டுகளின் முடிவு காலத்திற்கு அருகில் நடைபெறுகின்றது. ருஷ்யாவும் மற்றும் திரைமறைவு நாடுகளும் கோகு மற்றும் மாகோகைப் போன்று இருக்கின்றனர்.

மையக் கருத்து

1) அந்தி கிறிஸ்து இஸ்ரவேலுடனான உடன்படிக்கையை முறிக்கிறான். பாழாக்கும் அருவருப்பை இஸ்ரவேலின்/எருசலேமின் தேவாலயத்தில் நிலைநாட்டி வைத்து அதை ஆராதிக்கும்படி வற்புறுத்துகிறான் (11:7; 13:1-10).
2) சாத்தான் பரலோகத்தை விட்டுத் தள்ளப்பட்டு, பூமியில் கட்டவிழ்த்து விடப்படுகின்றான் (12:7-12). இவன் அந்தி கிறிஸ்து (மிருகம்) மற்றும் அவனுடைய கள்ள தீர்க்கதரிசி ஆகியோருக்கு முழுமையாக வல்லமையும் வழிகாட்டுதலும் அளிக்கும்படியாக இவ்வாறு கட்டவிழ்த்து விடப்படுகிறான். யூதர்கள் துன்புறுத்தப்படுகின்றனர்.

உபத்திரவ காலம் முழுவதிலும் தேவனுடைய கிருபை

உபத்திரவ காலத்தின் போது 144,000 யூத சுவிசேஷ ஊழியர்கள் (7:3-4) மற்றும் இரண்டு சாட்சிகள் (11:3) ஆகியோரின் சாட்சியத்தின் மூலம் யூதர்கள் மற்றும் புறஜாதியாரில் பலர் கிறிஸ்துவிடம் வருகின்றனர் (7:9; 20:4).

இருப்பினும் மனிதர்களில் பலர் தேவன் அளிக்கும் கிருபையை மறுத்து இன்னமும் மனந்திரும்பாமல் இருக்கின்றனர் (9:20, 21; 16:9, 11). இவ்விதமாக தங்களின் நியாயத்தீர்ப்பை முத்திரையிடுகின்றனர்.

இரண்டாம் பாதி

1) இஸ்ரவேல் துன்புறுத்தப்படுதல் மிகவும் அதிகமாகின்றது (12:13-17)
2) அந்தி கிறிஸ்து உலக மதத்தையும் பொருளாதாரத்தையும் கட்டுப் படுத்துகிறான் (13)
3) எக்காள நியாயத் தீர்ப்புகள் பூமியின் மீது ஊற்றப்படுகின்றன.
   - அ) பூமி – தாவரங்களில் 1/3 பங்கு அழிகின்றது (8:7)
   - ஆ) சமுத்திரம் – 1/3 பங்கு இரத்தமாகுதல் (16:3)
   - இ) நன்னீர்கள் – 1/3 பங்கு கசப்பாகின்றது (8:10-11)
   - ஈ) வானம் – குழப்பம் தாக்குதல் (8:12-13)
   - உ) தேள் கொட்டுதல் – மனிதர்கள் மீது 5 மாதமளவும் (9:1-12)
   - ஊ) மனித இனம் – 1/3 மனிதர் கொல்லப்படுதல் (9:13-21)
4) பொருளாதார நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு மிருகத்தின் முத்திரை அவசியமாகிறது (13:16-18)
5) இரண்டாம் பாதியின் முடிவு வேளையில் கலச நியாயத் தீர்ப்புகள் பூமியின் மீது ஊற்றப்படுகின்றன
   - அ) கொடிய புண்கள் (16:1-2)
   - ஆ) சமுத்திரம் இரத்தமாகி மீன்கள் இறந்து போகுதல் (16:3)
   - இ) நன்னீர்கள் இரத்தமாகுதல் (16:4-7)
   - ஈ) சூரியன் மனிதரைத் தகித்தல் (16:8-9)
   - உ) மிருகத்தின் இராஜ்யம் இருளடைதல் (16:10-11)
   - ஊ) ஐப்பிராத்து நதி வற்றிப் போகுதல் (16:12-16)
   - எ) கல்மழை உட்பட பூமி வாதிக்கப்படுதல் (16:17-21)
6) உலகப் பொருளாதார அமைப்புகள் அழிபடுதல் (18)
7) இஸ்ரவேலுக்கு எதிரான அர்மெகதோன் யுத்தத்தின் முடிவில் கடைசி யுத்தத்திற்காக உலக சேனைகள் ஒன்றுகூடி முகாமிடுதல் (14:20; 16:14; 19:19)
8) விரோதிகளைத் தோற்கடிக்கவும் இஸ்ரவேலை மீட்கவும் கிறிஸ்து வல்லமையுடனும் மகிமையுடனும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இரண்டாம் முறையாக வருகை தருதல். மிருகமும் கள்ளத் தீர்க்கதரிசியும் அக்கினிக் கடலில் தள்ளப்பட்டு, எஞ்சியவர்கள் கொல்லப்படுதல் (19:11-12)

வெளிப்படுத்தின விசேஷம்

இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுத்துதல்

C கி. பி. 90
அப்போஸ்தலரான யோவான்

நீ கண்டவைகளையும் 1	இப்பொழுது இருக்கிறவைகளையும் 2 3	4	இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளையும்					22
பத்மு தீவில் யோவானுக்கு வெளிப்படுத்துதல் 1:1-20	ஏழு சபைகளுக்குத் தூதர்கள் கிறிஸ்து : பாராட்டுதல் கண்டித்தல் திருத்துதல் 2 3	அரியணை : முத்திரை இடப்பட்ட புத்தகச்சுருளும் பாத்திரரான ஆட்டுக் குட்டியானவரும் 4 5	அந்தி கிறிஸ்துவும் இஸ்ரவேலின் சமாதானத்திற்கான உடன்படிக்கையும், 7 முத்திரை நியாயத் தீர்ப்புகள் (யுத்தம், பஞ்சம், மரணம், பூமியதிர்ச்சி முதலியன) (6). எசே. 38-39ன் கோகு மற்றும் மாகோகு ஆகியோரின் யுத்தம் மையக் கருத்து இஸ்ரவேலுடனான உடன்படிக்கை முறிவடைதல். தேவாலயத்தில் பாழாக்குதல் அருவருப்பு. 7 <u>எக்காள நியாயத் தீர்ப்புகள்</u> (பூமி, தண்ணீர், மனிதன்) (8-9) இஸ்ரவேல் தீவிரமாய்த் துன்புறுத்தப்படுதல் (12) சாத்தான் வானத்திலிருந்து விழத் தள்ளப்படுதல் மற்றும் அந்தி கிறிஸ்துவுக்கும் (மிருகம்) கள்ளத் தீர்க்கதரிசிக்கும் (13) வல்லமை அளித்தல். 7 <u>கலச நியாயத்தீர்ப்புகள்</u> (புண்கள், சூரியன், இருள்) (16) மத ரீதியான பாபிலோன் (17) வியாபார ரீதியான பாபிலோன் (18) 6 18	அர்மெகதோன் யுத்தமும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் 19	சாத்தான் கட்டப்படுதல். கிறிஸ்து பூமியில் ஆளுகை செய்தல். சாத்தான் கட்டவிழ்த்து விடப்படுதல். "கோகு மற்றும் மாகோகு" ஆகியோரின் கடைசிக் கலகம். 20:1-9	சாத்தான் அழிக்கப்படுதல். பாவிகள் நியாயந் தீர்க்கப்படுதல். பெரிய வெள்ளை அரியணை. 20:10-15	நித்திய நிலை ஆராதனை ஊழியம் துதி 21:1-22:5	அதிகாரத்துவம் எச்சரிக்கைகள் முடிவுரை 22:6-21
இயேசு கிறிஸ்து விடமிருந்து அவரைப் பற்றிய தரிசனம்	கிறிஸ்துவும் ஏழு சபைகளும்	நீதியுள்ள நியாயாதிபதியினால் கோபத்திற்கு முன்னுரை	<u>மகா உபத்திரவம்</u> 7 ஆண்டுகள் அளவாக தேவனுடைய கோபம் ஊற்றப்படுதல். 144,000 யூத சுவிசேஷங்கள் மற்றும் இரண்டு சாட்சிகள் ஆகியோர் மூலமாக இரட்சிப்பு (தேவனுடைய இரக்கமும் கிருபையும்) அருளப்படுதல். **7ம் முத்திரையின் கீழ் 7 எக்காளங்கள்; 7ம் எக்காளம் 7 கலசங்களை அறிவிக்கிறது.** விளக்கம் தருகின்ற சொற்றொடர்கள் கீழ்க்கண்டவற்றில் உள்ளன : 1) 7:1-17 (144,000 முத்திரையிடப்பட்ட யூதர்கள்) 2) 10:1-11:14 (சிறு புத்தகமும் இரண்டு சாட்சிகளும்) 3) 12:1-14-20 (பெண், ஆண் குழந்தை, வலுசர்ப்பம், மிருகம், கள்ளத் தீர்க்கதரிசி)	இயேசு கிறிஸ்துவின் 2ம் வருகை	ஆயிரமாண்டு கிறிஸ்துவின் 1000 வருட அரசாட்சி	பெரிய வெள்ளை அரியணைத் தீர்ப்பும் அக்கினிக் கடலும்	புதிய வானம் மற்றும் புதிய பூமி நித்திய நிலை	

"மாரநாதா"

முடிவியல் சொற்றொடர்களின் விளக்கங்கள்

வெளிப்படுத்தின விசேஷத்தைப் படிப்பதில் சில திறவுகோல் சொற்றொடர்களைப் புரிந்து கொள்ளுதல் இன்றியமையாததாக உள்ளது:

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை - முதலில் ஒரு நியாயாதிபதியாகவும் பிறகு அரசராகவும் இந்த பூமிக்கு கிறிஸ்து தமது சரீரப் பிரகாரமாக மகிமையில் மீண்டும் வருதல்

பரவச நிலை - ஆகாயத்தில் கிறிஸ்துவைச் சந்திக்கவும் அவருடன் என்றென்றைக்கும் இருக்கவும் பூமியிலிருந்து முழுச் சபையையும் உடனடியாக ஒன்று கூட்டிக் கொள்ளுதல்

உபத்திரவம் - இரண்டாம் வருகைக்கு முந்திய ஏழாண்டுகள் கால அளவு, இக்காலத்தின் போது பாவத்திற்கு எதிரான தேவனுடைய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கோபமானது பூமியில் ஊற்றப்படுகையில் பூமியின் மீது மாபெரும் பாடுகளும் வருத்தங்களும் இருக்கும்.

ஆயிரம் வருடம் - வெளி. 20ல் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஆயிரம் வருட காலம், இக்காலத்தின் போது ஆபிரகாம், தாவீது மற்றும் புதிய உடன்படிக்கைகளின் நிறைவேற்றமாகக் கிறிஸ்து பூமியின் மீது ஆளுகை செய்வார் அது சமாதானம், வளம் மற்றும் நீதி ஆகியவற்றின் காலமாக இருக்கும்.

ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சி - இரண்டாம் வருகை முதலில் நடைபெறும் அதைத் தொடர்ந்து **வெளி. 20**ன் ஆயிரம் ஆண்டுகள் நேரடியாக நிறைவேறும் என்ற கண்ணோட்டம்.

ஆயிரம் ஆண்டு பின் அரசாட்சி - உலகமானது படிப்படியாகக் "கிறிஸ்தவமாக்கப்படும்" மற்றும் சபையானது ஆயிரமாண்டுகளுக்கு அரசாளும், அதன் பின் இரண்டாம் வருகை ஏற்படும் என்ற கண்ணோட்டம்.

ஒரு ஆயிரமாண்டு அரசாட்சி - கிறிஸ்துவோ அல்லது சபையோ பூமியை ஆயிரம் ஆண்டுகள் ஆட்சி செய்வதில் ஈடுபடப் போவதில்லை என்ற கண்ணோட்டம்; கிறிஸ்துவின் இரண்டாம் வருகையானது வரலாற்றின் முடிவிலேயே ஏற்படும்.

முன் -உபத்திரவம் - வரலாற்றில் எந்த எச்சரிப்பும் இன்றி பரவச நிலை ஏற்படும், அதன் பிறகு உபத்திரவம் தொடங்கும், அதைத் தொடர்ந்து அதன் முடிவில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்கும் (சபை உபத்திரவத்தினூடாகச் செல்லாது) என்ற கண்ணோட்டம்.

நடு - உபத்திரவம் - உபத்திரவ காலத்தின் நடுவில் பரவச நிலை நடைபெறும், ஆனால் இரண்டாம் வருகையானது முடிவில் தான் நடைபெறும் (இவ்விதமாக சபையானது உபத்திரவத்தின் இரண்டாம் பகுதிக்குக் கடந்து செல்லாது) என்ற கண்ணோட்டம்.

பின் உபத்திரவம் - உபத்திரவத்திற்குப் பின்பு/அதன் முடிவில் பரவச நிலையும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் ஒன்றாய் நிகழும் (இவ்விதமாக சபை உபத்திரவத்தினூடாகக் கடந்து செல்லும்) என்ற கண்ணோட்டம்.

– <u>தேவனுடைய தீர்க்கதரிசனத் திட்டத்தில் இஸ்ரவேல்</u>

இஸ்ரவேலைக் குறித்துச் சில திறவுகோல் சத்தியங்களைச் சிந்தையில் காக்க வேண்டும்:

- கானான் நாட்டைப் பற்றி ஆபிரகாமுடனான உடன்படிக்கையில் தேவன் இஸ்ரவேலருக்கு வாக்களித்த விஷயம் இனி முழுமையாய் நிறைவேற்றப்பட வேண்டியதாக உள்ளது. (**ஆதி. 12, 15, 17**)
- தாவீதின் அரியணையில் என்றென்றைக்கும் ஒரு அரசர் வீற்றிருப்பது தொடர்பாக தாவீதுடனான உடன்படிக்கையில் இஸ்ரவேலுக்குத் தேவனுடைய வாக்குத்தத்தமானது இன்னும் நிறைவேற்றப்பட வேண்டியதாக உள்ளது. (**2 சாமு. 7**)
- நாடு, மதம், புதுப்பித்தல் மற்றும் பொருளாதார மற்றும் அரசியல் வளமை குறித்து புதிய உடன்படிக்கையில் இஸ்ரவேலுக்குத் தேவனுடைய வாக்குத்தத்தமானது இன்னமும் ஆனால் ஆயிரமாண்டு அரசாட்சியில் நிறைவேற்றப்பட வேண்டியதாக உள்ளது. (**எரே. 31; எசே. 36**)
- கிறிஸ்துவின் முதல் வருகையில் அவரை அரசராக ஏற்றுக் கொள்ளாது இஸ்ரவேல் புறக்கணித்தது, இதன் விளைவாக, கிறிஸ்து இப்பூமியில் தமது இராஜ்யத்தைத் தம்முடைய இரண்டாம் வருகை வரையிலும் தள்ளிப் போட்டார்.
- புறஜாதியாரின் முழு எண்ணிக்கையும் மீட்கப்படும் வரையில் தேவன் யூதர்கள் மீது ஒரு பகுதியான, சட்ட ரீதியான, ஆவிக்குரிய பார்வையற்ற தன்மை (இருதயக் கடினம்) வரக் காரணமானார். ஆனாலும் இஸ்ரவேல் புறக்கணிக்கப்பட்டிருப்பதில்லை. (**ரோமர் 11:1; ரோமர் 11:25-32; அப். 13:47-48**).
- தற்காலத்தின் போது சுவிசேஷம் பிரசங்கிக்க மூலக் கருவியாயிருக்கும்படி தேவன் இஸ்ரவேலைத் தற்காலிகமாய்ப் புறக்கணித்து விட்டு அதற்குப் பதில் சபையை அமைத்துள்ளார்.
- சபையின் பரவச நிலைக்குப் பிறகு, தேவன் இஸ்ரவேலை மீண்டும் கொண்டு வந்து, அதைத் தம்மிடத்திற்கு அழைத்து, உபத்திரவங்களின் மூலம் அதைத் தூய்மைப் படுத்தி, 7 ஆண்டுகள் உபத்திரவ காலத்தின் போது அதை மீண்டும் தமது தேர்ந்து கொண்ட கருவியாகப் பயன்படுத்துவார். (**வெளி. 7:1-8; தானி. 9:24-27; தானி. 12:1-3; வெளி. 11:1-13; வெளி. 14:1-5**)
- மீட்கப்பட்ட இஸ்ரவேல், ஆயிரமாண்டு அரசாட்சியின் போது கிறிஸ்துவுடன் கூட அரசாண்டு, ஆபிரகாமுடன், தாவீதுடன் மற்றும் புதிய உடன்படிக்கைகளின் முழுப் பயன்களையும் மகிழ்வுடன் அநுபவிக்கும்.
- இஸ்ரவேலின் தனிச் சிறப்பானது நித்தியம் முழுவதிலும் பராமரிக்கப்படும் என்பதற்கு ஆதாரங்கள் சில உள்ளன. (**வெளி. 21:12**)

குறிப்பு: இஸ்ரவேல் தனது வரலாற்றின் பெரும்பான்மையான காலப் பகுதிகளில் கீழ்ப்படிதல் இல்லாதிருப்பினும், ஒவ்வொரு தலைமுறையிலும் "விசுவாசிக்கும் யூதர்களின் எஞ்சிய பகுதியினர்" (**ரோமர் 11:1-17**) என்று ஒரு குழு இருந்துள்ளது, மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட யூதர்களை மீட்பதற்குத் தேவன் இரக்கத்துடன் முடிவு செய்தார்.

ஏசா. 59:20; ஏசா. 45:17, 25; ரோமர் 11:26-27; தானி. 12:1

அ. சபையின் பரவசநிலை

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் சபையின் பரவச நிலையும் அடிக்கடி குழப்பப்பட்டும், ஒரே நிகழ்ச்சியாக நினைக்கப்பட்டும் உள்ளது. ஆனால் ஒவ்வொரு நிகழ்ச்சியும் தெளிவாகவே தனித்தனியானதாகவும் ஒவ்வொன்றும் மாறுபட்ட நோக்கத்திற்கு உதவுவதாகவும் உள்ளது.

பரவச நிலையையும் இரண்டாம் வருகையையும் "Parousia" அல்லது கிறிஸ்துவின் வருகையின் இரு தனித்தனி படிநிலைகள் என்று நினைப்பது ஒருவேளை மிகச் சிறந்ததாயிருக்கலாம். 7 ஆண்டுகள் மகா உபத்திரவத்தின் காலமானது இவ்விரு நிகழ்ச்சிகளையும் பிரிக்கின்றது.

1வது படி நிலை | "The Parousia" | *2வது படிநிலை*

(பரவச நிலை) —— *7 ஆண்டுகள்* மகா உபத்திரவம் —— (இரண்டாவது வருகை)

கிறிஸ்து தமது "மணவாட்டி" மீது உரிமைகோரி அவளை, அதாவது சபையை வானத்திற்கு எடுத்துக்கொள்ள ஆகாயத்தில் வருதல்

கிறிஸ்து பாவத்தை நியாயம் தீர்க்கவும் ஆயிரமாண்டு அரசாட்சியை அருளுடன் தொடங்கி வைக்கவும் பூமிக்கு ஒலிவ மலையின் மீது வருகிறார்.

1. பரவச நிலையின் விளக்கம்

கிறிஸ்துவின் மணவாட்டி என்ற வகையில் சபையானது கிறிஸ்துவுடன் என்றென்றும் இருக்கும்படியாக அவரைச் சந்திக்க ஆகாயத்தில் "எடுத்துக்கொள்ளப்படும்" நிகழ்ச்சி.

பரவச நிலையின் மீதான திறவுகோல் வசனப் பகுதிகள்:

யோவா. 14:1-3
1 தெச. 1:10
1 தெச. 4:13-18
1 தெச. 5:9-10
2 தெச. 2:1-12
வெளி. 3:10

பரவச நிலையின் தனிச் சிறந்த வலியுறுத்தங்கள் பின்வருமாறு:

(1) சபையைப் பெற்றுக் கொள்ளும்படியாகக் கிறிஸ்து ஆகாயத்தில் அல்லது மேகங்கள் மீது வருகிறார்.

(2) புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களில் மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு மகிமையுள்ள சரீரங்களைப் பெறுகின்றனர்.

(3) புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களில் உயிருடன் வாழ்பவர்கள் மறுரூபமாக்கப்பட்டு, மரிக்காமல் மகிமையடைகின்றனர் (**1 கொரி. 15:50-54**ஐக் காணவும்).

(4) புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் அனைவரும் ஆகாயத்தில் கிறிஸ்துவைச் சந்திக்க எழுப்பப்படுகின்றனர்.

(5) பரிசுத்தவான்கள் என்றென்றைக்கும் கிறிஸ்துவுடன் இருப்பார்கள்.

(6) பூமியில் மகா உபத்திரவம் நடக்கும் பொழுது சபையானது பரலோகத்தில் இருக்கும் மற்றும் அது பாவத்திற்கெதிராக ஊற்றப்படும் தேவ கோபத்திலிருந்து தப்புவிக்கப்படும்.

2. பரவச நிலையின் காலம்

வேத வசனம் பரவச நிலையின் மிகச் சரியான காலத்தை வெளிப்படுத்துவதில்லை, ஆனால் அது திடீரென்று வரும் மற்றும் அது நடைபெறக் கூடுவதற்கு முன்பு நிறைவேற்றப்பட வேண்டிய தீர்க்கதரிசனம் எதுவும் இருப்பதில்லை.

இதனால் தான் கிறிஸ்து தமது சபையைப் பரவச நிலைக்கு இட்டுச் செல்ல வரும் காலமானது "உடனடியானதாக" (அதாவது - கிறிஸ்து எந்த வேளையிலும் வரக் கூடும்) என்றுள்ளது. மற்றும் அது வேத வசனங்களை எழுதியவர்கள் சான்றளித்தபடி புதிய ஏற்பாட்டுக் காலங்களில் உண்மையானதாக உள்ளது.

குறிப்பு: உலகம் முழுவதிலும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படாத வரையிலும் கிறிஸ்து திரும்ப வர முடியாது என்று இன்றைய நாட்களில் மக்கள் பலர் போதிக்கின்றனர். இதற்கு நடைமுறைப்படுத்தப்படும் வசனத்தை நெருங்கி ஆய்வு செய்தலானது (மத். 24:14) சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் இந்த நிகழ்ச்சியானது சபையினால் அல்ல ஆனால் இஸ்ரவேலினாலேயே (வெளி. 7, 11, 14ன் 144,000 முத்திரையிடப்பட்ட யூதர்கள் மற்றும் இரண்டு சாட்சிகள்) உபத்திரவ காலத்தின் போது செய்யப்படும் என்பதை வெளிப்படுத்துகின்றது. மத். 24-25ல் ஒலிவ மலை உரையானது இஸ்ரவேலுக்கான தேவனுடைய தீர்க்கதரிசனத்திட்டத்தை வெளிப்படுத்துகிறதேயன்றி சபைக்கான அவரது திட்டம் அதில் வெளியிடப்படுவதில்லை. அடுத்துள்ள பக்கத்தில் ஒலிவ மலை உரை பற்றிய ஒரு சுருக்கப் புறக்குறிப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது.

புறக்குறிப்பு
ஒலிவ மலை உரை
(மத். 24-25)

I. அறிமுகம் ***(24:1-3)***

II. மகா உபத்திரவம் ***(24:4-26)***

அ. முதல் பாதியின் அடையாளங்கள் ***(4-8)***

1. வஞ்சித்தல் ***(4)***
2. கள்ள தீர்க்கதரிசிகள் ***(5)***
3. யுத்தங்கள்/வதந்திகள் ***(6)***
4. பஞ்சங்கள் மற்றும் பூமியதிர்ச்சிகள் ***(7-8)***

ஆ. இரண்டாம் பாதியின் அடையாளங்கள் ***(9-14)*** "மகா உபத்திரவம்"

1. இஸ்ரவேல் துன்புறுத்தப்படுதல் ***(9-10)***
2. கள்ள தீர்க்கதரிசிகள் ***(11)***
3. அன்பு தணிந்து போகுதல்; அக்கிரமம் மிகுதியாகுதல் ***(12)***
4. எல்லா இணங்களுக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுதல் ***(13-14)***

இ. இரண்டாம் பாதியின் விரிவான விளக்கம் ***(15-26)***

1. பாழாக்கும் அருவருப்பு ***(15)***
2. உபத்திரவப்படுத்துதல், கள்ள தீர்க்கதரிசிகள், மரணம் ***(16-26)***

III. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ***(27-30)***

IV. இஸ்ரவேலை மீண்டும் ஒன்று கூட்டுதல் *(31)*

V. உபத்திரவப்படும் மக்களுக்கு அறிவுறுத்தல்கள் ***(32-51)***

(ஜாக்கிரதையாய், கவனமாய், ஆயத்தமாய், உண்மையாய் இருங்கள்)

VI. உயிர் வாழும் யூதர்களின் மீது நியாயத் தீர்ப்பு ***(25:1-30)***

அ. பத்து கன்னியர்கள் ***(1-13)***

ஆ. தாலந்துகள் ***(14-30)***

VII. உயிர் வாழும் புறஜாதியார் மீது நியாயத் தீர்ப்பு ***(31-46)***

அ. அறிவித்தல் ***(31-33)***

ஆ. செம்மறி ஆடுகள் (மீட்கப்பட்டவர்கள்) ***(34-40)***

இ. வெள்ளாடுகள் (இழந்து போகப்பட்டவர்கள்) ***(41-46)***

மேலும் **மத். 24-25**ன் பாடக் கருத்தாக உள்ளது நியாயத் தீர்ப்பு செய்வதற்குக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்பது தானே தவிர, இதில் பரவச நிலை என்பது பாடக் கருத்தாயிருப்பதில்லை. எடுத்துக் காட்டாக, **மத். 24:38-41**ல் பரவச நிலைக்குக் குறிப்புள்ளதாக யூகிக்கப் படுகிறது ஆனால் அது உண்மையில் இரண்டாம் வருகைக்கான குறிப்பாகவே உள்ளது. இங்கு எடுத்துக் கொள்ளப்படுவர் பரவச நிலை அடைவதில்லை ஆனால் அவர் இழந்து போகப்பட்டுள்ளதால் நியாயத் தீர்ப்பு அடையும்படியாகவே எடுத்துக் கொள்ளப்படுகின்றார். விடப்பட்டுள்ளவர் மீட்கப்பட்டவராக ஆயிரமாண்டு அரசாட்சியினுள் செல்கின்றார் (**லூக். 17:34-37**ஐக் காணவும்)

3. <u>பரவச நிலை பற்றிய முதன்மைக் கண்ணோட்டங்கள்</u>

- உபத்திரவப்படுதல் தொடர்பில் பரவச நிலை நிகழும் பொழுது, அது வழக்கமாக ஒரு நபரின் பரவச நிலைக் கண்ணோட்டத்தைத் தீர்மானிக்கின்றது.

பக். 278ல் உள்ள வரைவட்டவணையானது பின்வரும் இரு அடிப்படை நிலைப்பாடுகளுக்கு இடையில் உள்ள வித்தியாசங்களைத் தொகுத்துரைத்துச் சித்தரிக்கின்றது:

- உபத்திரவத்திற்குப் பிந்திய கண்ணோட்டம் (உபத்திரவத்திற்குப் பிறகு பரவச நிலை உண்டாகிறது)
- உபத்திரவத்திற்கு முந்திய கண்ணோட்டம் (உபத்திவத்திற்கு முன்பு பரவச நிலை உண்டாகிறது)

- **உபத்திரவத்திற்குப் பிந்திய பரவச நிலை கண்ணோட்டம்**

இந்தக் கண்ணோட்டத்தின் முக்கிய கருத்துக்கள் பின்வருமாறு:

- பரவச நிலையும் இரண்டாம் வருகையும் "parousia" என்ற அதே வார்த்தையினால் விவரிக்கப்படும் ஒரே நிகழ்ச்சியாக உள்ளன.

- சபையானது தூய்மையடைதலுக்காக உபத்திரவத்தை அனுபவிக்கிறது, ஆனால் அதனூடாக சபை பாதுகாக்கப்படும்.

- 1 தெச. 4:13-5:11 மற்றும் வெளி. 3:10 போன்ற "பரவசநிலை" வசனப் பகுதிகளின் சந்தர்ப்பப் பொருளாக உள்ளது நியாயத்தீர்ப்பு என்பதேயாகும்.

உபத்திரவத்திற்குப் பிந்திய கண்ணோட்டத்திற்குப் பதில்செயல்

- பரவச நிலையும் இரண்டாம் வருகையில் ஒரே வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கையில், வேத வாக்கியங்கள் சுட்டிக் காண்பிக்கின்றபடி இவை இரண்டும் மிகவும் மாறுபட்ட நிகழ்ச்சிகளாக உள்ளன.

பரவச நிலை	**இரண்டாம் வருகை**
– கிறிஸ்து ஆகாயத்தில் வருகிறார்.	– கிறிஸ்து பூமிக்கு வருகிறார்
– பரிசுத்தவான்கள் கிறிஸ்துவைச் சந்திக்க எழும்புகின்றனர்	– பரிசுத்தவான்கள் கிறிஸ்துவுடன் திரும்புகின்றனர்.
– சபையை எடுத்துக் கொள்வதற்காகக் கிறிஸ்து வருகிறார்	– பாவத்தை நியாயத் தீர்ப்பதற்காகக் கிறிஸ்து வருகிறார்.
– மாபெரும் அகமகிழ்வு	– மாபெரும் அழிவு

- சபையானது ஏற்கனவே கிறிஸ்துவினால் தூய்மையாக்கப்பட்டுள்ளது **(எபே. 5:25-27)** மற்றும் அது நிலைப்பாட்டில் அவரது மணவாட்டியாய் இருக்கத் தயாராக உள்ளது மற்றும் கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள தனித்தனி உறுப்பினர்கள் ஏற்கனவே அவருடைய நீதியைக் கொண்டுள்ளனர். **2 கொரி. 5:21; 1 கொரி. 1:30**

- ஏழாண்டு மகா உபத்திரவம் என்பது பின்வருபவற்றிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது:

  – மீட்கப்படாத எல்லா மனிதர்களின் பாவங்களுக்குத் தண்டனை அளிக்க
  – இஸ்ரவேலைச் சுத்திகரிக்க ("யாக்கோபினின் இக்கட்டு" காலம்) **எரே. 30:7**

உபத்திரவம் என்பது சபைக்காக வடிவமைக்கப்பட்டிருப்பதில்லை!

- பாவத்திற்கெதிராய் ஊற்றப்படும் தேவனுடைய தண்டனையாகிய கோபாக்கினைக்கென்று சபையானது நியமிக்கப்பட்டிருப்பதில்லை என்று வேத வசனம் தெளிவாய்ப் போதிக்கிறது.
- **வெளி. 4-18ல்** பூமியின் மீது உபத்திரவத்தின் போது "சபை" காணப் படுவதில்லை. "பரிசுத்தவான்கள்" என்ற சொற்றொடரானது தேவ பக்தியுள்ளவர்கள் என்று அர்த்தப்படுகின்றது, மற்றும் இவ்விதமாகவே இது பழைய ஏற்பாட்டிலும் *(சங். 34:9)*, புதிய ஏற்பாட்டிலும் **(1 கொரி. 14:33; வெளி. 13:7)** பயன்படுத்தப்படுகின்றது. "பரிசுத்தவான்கள்" என்பது சந்தர்ப்பப் பொருளைச் சார்ந்த நிலையில் சபையைக் குறிக்கலாம் அல்லது குறிக்காதிருக்கலாம்.

சபையின் பரவச நிலை உபத்திரவத்திற்குப் பிறகு வரும் என்கிற கண்ணோட்டமானது,

- பரவச நிலையின் நோக்கத்தைத் தோல்வியடையச் செய்கிறது.
- தெளிவான வசனப் பகுதிகள் பலவற்றைப் புறக்கணிக்கின்றது.
- உபத்திரவத்தின் நோக்கத்தைத் தவறாகப் புரிந்து கொள்கின்றது.

- **உபத்திரவத்திற்கு முன்பு பரவச நிலை இருக்கும் என்ற கண்ணோட்டமானது,**

  - வேதாகம ரீதியாகப் பலத்த ஆதாரம் கொண்டுள்ளது.
  - பரவச நிலையின் எல்லா வலியுறுத்தங்களையும் எடுத்துக் கொள்கின்றது.
  - சபைக்கான தேவனுடைய நோக்கத்துடன் சீர்பொருந்தியதாக உள்ளது.
  - உபத்திரவத்தின் வேளையில் இஸ்ரவேலைச் சுத்திகரிக்கும் தேவனுடைய நோக்கத்துடன் சீரானதாக உள்ளது.
  - இஸ்ரவேலுக்கும் சபைக்கும் இடையில் வித்தியாசத்தைப் பராமரிக்கின்றது.
  - சாதாரண - நேரடியான விளக்கவுரையின் அடிப்படையில் உள்ளது.

4. <u>பரவச நிலையைத் தொடர்ந்து சபை பரலோகத்தில் இருக்கும்</u>

மகா உபத்திரவத்தின் போது மீட்கப்படாத யூதர்களும் புறஜாதியாரும் பூமியின் மீது தேவனுடைய கோபத்தை அனுபவித்துக் கொண்டிருக்கையில், சபையைப் பொறுத்தமட்டில் முதன்மையான இரு விஷயங்கள் பரலோகத்தில் நடைபெறுகின்றன.

- **விசுவாசிகளின் கிரியைகளுக்கு "பேமா" இருக்கை நியாயத் தீர்ப்பு**

சபையின் (கிறிஸ்துவின் சரீரத்தின்) உறுப்பினர் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் கிறிஸ்துவுக்குச் செய்த ஊழியங்களின் அடிப்படையில் மதிப்பிடப்படுவார்கள். இது உண்மையில் ஒரு நியாயத் தீர்ப்பாக இருப்பதில்லை (**ரோமர் 8:1**ஐக் காணவும்) ஆனால் பலன்களின் நோக்கத்திற்கான ஒரு மறு கண்ணோட்டமாகவும் மதிப்பிடுதலாகவும் உள்ளது. பேமா என்பது பாவத்தைக் குறித்து ஏதும் செய்வதற்கில்லை, ஆனால் கிறிஸ்துவுக்கான ஊழியத்தைக் குறித்தே செயல்படுகின்றது.

திறவுகோல் வசனங்கள்:
ரோமர் 14:10-12
1 கொரி. 4:1-5
1 கொரி. 3:5-15
2 கொரி. 5:6-10

ஒவ்வொரு விசுவாசியிடத்திலும் மூன்று அடிப்படைக் கேள்விகள் கிறிஸ்துவால் கேட்கப்படும்:

கிறிஸ்துவுக்காக நீங்கள் என்ன செய்தீர்கள்?

- *அது பயன்மிக்கதாகவும் தகுதி வாய்ந்ததாகவும் இருந்ததா?*
- *அது நித்திய பண்புடையதாக இருந்ததா?*

அதை நீங்கள் எவ்வாறு செய்தீர்கள்?

- *ஆவியானவரின் வல்லமையினாலா?*
- *உக்கிராணக்காரர் என்ற வகையிலா?*
- *ஊழியக்காரர் என்ற வகையிலா?*
- *அல்லது உங்கள் சொந்த பலத்திலும் ஞானத்திலுமா?*

அதை நீங்கள் ஏன் செய்தீர்கள்?

- *ஊக்குவித்தல்?*
- *தேவனுடைய அங்கீகாரத்தையா அல்லது மனிதர்களின் பாராட்டுதலையா, எதை நாடினீர்கள்?*

*பலன்களை (கிரீடங்களை) இழந்து போகுதல் என்பது வருத்தத்திற்குக் காரணமாகும், மற்றும் பலன்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுதல் என்பது விசுவாசியைக் கிறிஸ்துவுக்கு மதிப்புமிக்க சிலவற்றைக் கொடுக்கக் கூடிய வராக்கும் (**வெளி. 4:10-11**). கிறிஸ்தவர்களை பேமா இருக்கையில் மதிப்பிடுதல் என்பது பரலோகத்தில் பாக்கியங்களின் தகுதிநிலை மற்றும் ஊழியம் ஆகியவற்றைத் தீர்மானிக்கலாம்.*

- ***ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்து***

பூமியில் உபத்திரவத்தின் போது, பரலோகத்தில் கிறிஸ்து, தமது கரைதிரையற்ற மனைவியாகிய சபையுடன் ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்தில் இணைவார், இது ஆயிரம் ஆண்டு அரசாட்சியின் போது முழுமையாக விளக்கப்படும்.

எபே. 5:25-27
வெளி. 19:6-9
வெளி. 21:9

பயிற்சி: *பரவச நிலையின் அடிப்படை நோக்கம் என்ன? பரவச நிலையின் எந்தக் கண்ணோட்டம் பலத்த வேதாகம ரீதியான ஆதாரம் கொண்டுள்ளது?*

ஆ. 7 ஆண்டுகள் மகா உபத்திரவம்

மகா உபத்திரவம் என்பது பாவம், பாவிகள் மற்றும் பூமிக்கு எதிராகத் தேவன் தமது கோபத்தையும் நியாயத் தீர்ப்பையும் ஊற்றும் பொழுது அது முழு உலகத்தையும் பாதிக்கும் காலமாக உள்ளது, இது "யாக்கோபுக்கு இக்கட்டுக் காலம்" என்று அழைக்கப்படுகின்றது **(எரே. 30:7)** மற்றும் இது இஸ்ரவேலுக்கு தனிப்பட்ட "ஆபத்தின் காலமாக" உள்ளது **(தானி. 12:1-2)**

வேத வசனங்களின்படி, 7 ஆண்டுகள் உபத்திரவமானது சபையின் பரவச நிலைக்குப் பிறகு தொடங்குவதாகவும் பின்வரும் நோக்கங்களைக் கொண்டதாகவும் உள்ளது:

- பாவத்தை நியாயத் தீர்க்க தேவனுடைய உண்மைத் தன்மையைச் செயல்விளக்கப்படுத்துதல்.
- பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுதல்
- இஸ்ரவேலின் மீட்பை முடித்து வைத்தல்.
- கிறிஸ்து இப்பூமியில் அரசராக ஆட்சி செய்ய ஏதுவாக பாவத்தைத் தண்டித்து அநீதியை நியாயந் தீர்த்தல்.
- பூமியில் உள்ள மீட்கப்படாத யூதர் மற்றும் புறஜாதியார் மனந்திரும்பி, தேவனிடம் திரும்புவார்களா அல்லவா என்று சோதித்தல்.

திறவுகோல் வசனங்கள்:

எரே. 30:1-9
செப். 1:14-2:3
தானி. 9:24-27
மத். 24:3-31
தானி. 12:1-2
வெளி. 3:10
யோவேல் 2:28-32
வெளி. 5-19

விவரிப்பு:

உபத்திரவம் என்பது பாவத்திற்கு எதிராக தேவனுடைய பரிசுத்த கோபம் முழு வீச்சில் ஊற்றப்படும் பொழுது வருத்தம், கலக்கம், துன்புறுத்தல், வேதனை மற்றும் பாவத்திற்கான நியாயத் தீர்ப்பு ஆகியவை நிகழும் தனிப்பட்ட வகையான காலமாக உள்ளது. **(வெளி. 15:1)** மீட்கப்பட்ட எந்த நபரும் இந்த உபத்திரவத்தினுள் பிரவேசிப்பதில்லை. பக். 279ல் உள்ள வரைவட்டவணையானது மகா உபத்திரவத்தின் முதன்மை நிகழ்ச்சிகளை விவரிக்கின்றது.

யுத்தம், சீரழிவு, அழிவு மற்றும் மரணம், பஞ்சம், வியாதி முதலியவை இதற்கு முன்னும் பின்னும் ஒருக்காலும் கண்டிராத அளவுக்கு இருக்கும். விசுவாச விலக்கம், விக்கிரகாரதனை, தேவ தூஷணம் மற்றும் பொய்யான ஆராதனை ஆகியவையும் இணையற்று விளங்கும். அந்தி கிறிஸ்து தனது பொய்யான போலியான, உலக முழுமைக்கும் ஒரே மதம் என்பதையும், ஒரே அரசு, பொருளாதாரத் திட்டம் ஆகியவற்றை நிலைநாட்டி, தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக, தேவனுக்குப் பதிலாகத் தன்னை ஆராதிக்கும்படி கேட்டுக்கொள்வான்.

உபத்திரவத்தின் போது தேவனுடைய படைப்பானது பாவத்திற்காக நியாயத்தீர்க்கப்பட்டு, மீட்கப்படுவதற்காகச் சுத்திகரிக்கப்படும். (**ரோமர் 8:18-25; 2 பேது. 3:8-13**ஐக் காணவும்)

<u>உபத்திவத்தின் போது மீட்பு</u>

பின்வருபவற்றின் மூலம்

- பரிசுத்த ஆவியானவர் செய்யும் குற்றம் உணர்த்தும் ஊழியம்
- **வெளி. 11**ன் இரண்டு சாட்சிகள்
- **வெளி. 7** மற்றும் **14ன்** 144,000 முத்திரையிடப்பட்ட யூத சுவிசேஷகர்கள்.
- தூதர்களால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் (**வெளி. 14:6-7**)

ஒவ்வொரு கோத்திரம், இனம், மொழி மற்றும் மக்கள் ஆகியவற்றில் இருந்தும் பலர் மீட்கப்படுவார்கள். ஆனால் உபத்திரவத்தின் பொழுது இவர்களில் பலர் வேத சாட்சியாக மரிப்பார்கள் (**வெளி. 6:9-11**) மற்றும் பலர் தேவனுடைய கோபத்திலிருந்து (தப்பிக்க) அடைக்கலம் நாடுவார்கள் (**வெளி. 6:16-17**), ஆனால் பலர் மனந்திரும்ப மறுத்து விடுவார்கள் (**வெளி. 9:20-21**) மற்றும் இழந்துபோகப்பட்டவர்களாகவே இருந்து விடுவார்கள்.

தேவனுடைய நியாயத் தீர்ப்பு முடிவடைந்து, உபத்திரவத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருப்பதால், அர்மெகதோனில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையானது (**வெளி. 19:11-21**) உபத்திரவத்தை முடிவுக்குக் கொண்டு வரும்.

பயிற்சி: பரவச நிலையின் பாடக் கருத்தைப் புரிந்து கொள்வதற்கு உபத்திரவத்தின் நோக்கம் எவ்வாறு உதவுகின்றது?

____

____

____

____

இ. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

கிறிஸ்து தமது முதல் வருகையில் பின்வரும் தமது பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுகையில் புறக்கணிக்கப்பட்டதால் அவருடைய இரண்டாம் வருகை அவசியமாகின்றது:

- ***தீர்க்கதரிசி*** *(தேவனுடைய சத்தியத்திற்கு உருக் கொடுத்துப்பேசுதல்)* ***எபி. 1:1-2*** *மற்றும்*
- ***ஆசாரியர்*** *(பாவத்திற்குப் பூரணமான பலி செலுத்துதல்).* ***எபி. 10:11-18***

ஆனால் கிறிஸ்து அரசர் என்ற வகையில் தம் பணிப் பொறுப்பில் புறக்கணிக்கப் பட்டார் (யோவா. 19:12-17) மற்றும் தேவனுடைய விரோதிகளைத் தமக்குக் கீழ்ப்படுத்துவதற்காக முதலில் அவர் நியாயாதிபதி என்ற வகையில் திரும்பி வருவார், அவ்வாறு வந்து பாவத்திற்கு நியாயத் தீர்ப்பைச் செயல்படுத்தி, அதன் பிறகு இராஜாதி இராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் என்றென்றைக்கும் ஆளுகை செய்வார் ***தானி. 2:34, 44-45; 1 கொரி. 15:24-28***

- உபத்திரவத்தின் போது கிறிஸ்துவின் ஊழியம்

  பரலோகத்தில் - பேமா இருக்கையில் கிறிஸ்து விசுவாசிகளை மதிப்பீடு செய்து, தமது மணவாட்டியுடன் (சபையுடன்) ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்தைக் கொண்டாடுவார். மற்றும் அவர் பரலோகத்திலிருந்து, உபத்திரவ காலத்தில் முத்திரை, எக்காளம் மற்றும் கலச நியாயத் தீர்ப்புகளின் மூலம் பாவத்திற்கெதிராகத் தேவகோபம் ஊற்றப்படுவதைக் கண்காணிப்பார். இவ்வாறு செய்யக் கிறிஸ்து ஒருவரே திறனும் தகுதியும் உடையவரா யிருக்கிறார். ***வெளி. 5:1-6:1***

  பூமியில் - கிறிஸ்து தம் தூதர்களின் மூலமாக, பாவம் மற்றும் அநீதிக்கெதிராக நியாயத் தீர்ப்பைச் செயல்படுத்துவார். ***யோவா. 5:22***

  7 ஆண்டுகள் உபத்திரவ காலத்தின் முடிவில் கிறிஸ்து, அர்மெகதோனின் முகாமின் கடைசி யுத்தத்தில் மிருகம் மற்றும் அவனது தேவபக்தியற்ற சேனை ஆகியவற்றிற்கு எதிராக யுத்தம் செய்வதற்காக தமது பரிசுத்த தூதர்களுடனும் பரிசுத்தவான்களுடனும் திரும்ப வருவார். அவரது வெற்றி விரைவானதாகவும், முழுமையானதாகவும் மற்றும் அழிப்பதாகவும் இருக்கும் ***வெளி. 19:11-21***

எனவே கிறிஸ்துவின் இரண்டாம் வருகையானது பின்வருவனவற்றிற்கானதாக உள்ளது:

- தீர்க்க தரிசனத்தை நிறைவேற்றுதல்
- நீதியுள்ள நியாயாதிபதி என்ற வகையில் பாவத்திற்கெதிரான தேவகோபத்தைச் செயல்படுத்துதல்.
- பூமியின் மீது தமது ஆயிரம் ஆண்டு அரசாட்சியை நிலைநாட்டி பூமியின் இராஜாக்கள் மீது ஆளுகை செய்யும்படியாக மக்கள் இனங்களை தமக்குக் கீழ்ப்படுத்துதல்.

  சங். 2:1-12; பிலி. 2:5-11

கிறிஸ்து. இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களைக் கொண்டு வர முடிவதற்கு முன்பாகத் தம்முடைய மக்களின் பாவங்களை நியாயத் தீர்த்தாக வேண்டும். பழைய ஏற்பாட்டில் தீர்க்க தரிசனமாய்க் கூறப்பட்ட முடிவியல் ரீதியான கர்த்தருடைய நாள் என்பது தேவனுடைய நியாயத் தீர்ப்புடன் தொடங்கி, ஆயிரம் ஆண்டு அரசாட்சியின் ஆசீர்வாதங்களுடன் முடிவடையும். ***மத். 3:1-4; 4:5-6; செப். 1:14-18; செப். 3:8-20.***

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய திறவுகோல் வசனங்கள்

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை விவரிப்பதும், அதை பரவச நிலை மற்றும் பிற தீர்க்கதரிசன நிகழ்ச்சிகள் ஆகியவற்றிலிருந்து தெளிவாக வித்தியாசப்படுத்திக் காட்டுவதுமான பல திறவுகோல் வசனப் பகுதிகள் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் உள்ளன.

தானி. 2:44-45
சக. 14:1-11
மத். 24:27-44
லூக். 21:20-36
1 தெச. 5:1-3
2 பேது. 3:1-16
வெளி. 19:11-21

இவ்வசனப் பகுதிகள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையினுடைய பின்வரும் அம்சங்களை முக்கியப்படுத்துகின்றன:

- அது உடனடியானதாக மற்றும் எதிர்பாராததாக இருக்கும்.
- கிறிஸ்து எப்பொழுதும் திரும்ப வருவார் என்பதை எவரொருவரும் அறிவதில்லை.
- அது மாபெரும் வல்லமையுடனும் மகிமையுடனும் இருக்கும்.
- பூமி முழுவதும் அதை அறிந்து கொள்ளும்.
- கிறிஸ்து நியாயத் தீர்ப்பில் வருகை தருவார்.
- ஒலிவ மலையின் மீது கிறிஸ்து பூமியைத் தொடுவார்.
- கிறிஸ்து, தேவனுடைய விரோதிகளையும் யூதர்களையும் தோல்வியுறச் செய்து, மக்களினங்களைத் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளுவார்.

மீண்டுமாக, பரவச நிலை மற்றும் இரண்டாம் வருகை ஆகியவற்றின் விவரிப்புகள் மற்றும் நோக்கம் ஆகியவற்றிலிருந்து காணுகையில் இவ்விரு நிகழ்ச்சிகளுமே இரண்டு மாறுபட்ட நிகழ்ச்சிகளாய் உள்ளன என்பது தெளிவாகின்றது.

ஆயிரம் ஆண்டு அரசாட்சியுடன் தொடர்புடைய வகையில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் காலம்

பக். 278ல் உள்ள வரைபடம் காண்பிக்கின்றபடியாக கிறிஸ்து தம் இரண்டாம் வருகையில் எப்பொழுது வருவார் என்பதற்கு மூன்று அடிப்படைக் கண்ணோட்டங்கள் உள்ளன. பரவச நிலையின் காலம் பற்றி இரண்டு அடிப்படைக் கண்ணோட்டங்கள் - உபத்திரவத்திற்கு முன்போ (pre) அல்லது பின்போ (post) இருக்கும் என்பவை - உள்ளன என்பதை நினைவில் வையுங்கள். இங்குள்ள பிரச்சனையானது ஆயிரம் ஆண்டு அரசாட்சியுடன் தொடர்புடைய வகையில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய விஷயத்தைக் கையாளுகின்றது.

ஆயிரமாண்டு அரசாட்சிக்கு முன்பு, ஆயிரமாண்டு அரசாட்சிக்குப் பின்பு மற்றும் ஒரு ஆயிரம் ஆண்டு அரசாட்சி என்பவையே (கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய) மூன்று (3) கண்ணோட்டங்களாக உள்ளன. இந்த 3 கண்ணோட்டங்கள் வரை வட்டவணையில் சித்தரிக்கப்பட்டிருக்கையில், அவை ஒவ்வொன்றையும் பற்றிய சுருக்கமான விவரித்தல் பின்வருமாறு:

- **ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்குப் பின் என்ற கண்ணோட்டம்**

இந்தக்கண்ணோட்டமானது பின்வரும் கருத்துக்களைப்பற்றிக் கொண்டுள்ளது:

- தேவனுடைய இராஜ்யம் என்பது ஆயிரம் ஆண்டு அரசாட்சியைப் போன்றதாக உள்ளது.
- மனித குலம் மேன்மையடைகின்றது மற்றும் சபையானது சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலின் மூலமாக சமாதானம், வளம் மற்றும் நீதி ஆகியவற்றைப் பூமிக்குக் கொண்டுவரும் மாபெரும் காலத்தின் செயல்முறையில் உள்ளது.
- ஆயிரம் ஆண்டு ஆரசாட்சி என்பது 1000 ஆண்டு அளவு இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை.
- சபைக்கும் இஸ்ரவேலுக்கும் இடையில் உண்மையில் வித்தியாசம் எதுவும் இருப்பதில்லை - இஸ்ரவேலுக்குக் கூறப்பட்ட பெரும்பாலான தீர்க்க தரிசனங்களை சபையானது அடையாளத்துவ வகையில் நிறைவேற்றுகின்றது.
- பரவச நிலையும் இரண்டாம் வருகையும் ஒரே நிகழ்ச்சியாகவே உள்ளன.
- மனித முயற்சியும் ஆவியானவரின் வல்லமையும் இராஜ்யத்தைக் கொண்டுவரும்.

<u>வேதாகம ரீதியான ஆதாரம்</u>

ஆயிரமாண்டு அரசாட்சிக்குப் பின் என்ற கொள்கையின் பரிந்துரையாளர்கள், **மீகா 4:1-5; கலா. 6:16** மற்றும் **ரோமர் 1:16** போன்ற வசனப் பகுதிகள் சுவிசேஷத்தின் வல்லமையையும் பூமியின் மீது சமாதானம் மற்றும் வளமை ஆகியவற்றையும் சுட்டிக் காட்டுவதாகக் குறிப்பிடுகின்றனர்.

<u>ஆயிரமாண்டு அரசாட்சிக்குப் பின் என்ற கண்ணோட்டத்திற்கான பதில்செயல்</u>

இந்தக் கண்ணோட்டமானது,

- வேதாகம ரீதியான பலத்த ஆதாரம் கொண்டிருப்பதில்லை.
- புதிய உடன்படிக்கை, ஆயிரம் ஆண்டு அரசாட்சி மற்றும் இஸ்ரவேல் பற்றிய தீர்க்கதரிசனம் இனி நிறைவேற்றப்பட வேண்டியதாய் உள்ளன என்ற பழைய ஏற்பாட்டின் பெரும்பாலான பகுதிகளைப் புறக்கணிக்கின்றது.
- பொருள் விளக்கத்தின் நேரடியான விதியைப் பயன்படுத்தத் தவறுகின்றது.
- **வெளி. 20:1-6** போன்ற வசனப் பகுதிகளை ஆவிக்குரியவைகளாக்க வேண்டும்.
- ஆயிரம் ஆண்டு அரசாட்சியின் நோக்கத்தைத் தவறாகப் புரிந்து கொள்கின்றது.

- இஸ்ரவேலுக்கும் சபைக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை மங்கலாக்குகின்றது.
- நீதிமான்களான மனிதர்கள் துன்மார்க்க மனிதர்களை மாற்றும் திறனையும் வல்லமையையும் உயர்த்திப் பிடிக்கின்றது.
- உலகமும் மக்களும் மேன்மையடையமாட்டார்கள், ஆனால் இன்னும் அதிக மோசமாவார்கள் என்ற வேத வசனத்தின் போதனையைப் புறக்கணிக்கின்றது (எ.கா. **2 தீமோ. 3:1-9; மத். 24:3-14)**
- உலக வரலாறு மற்றும் மனிதன் பற்றிய வேதாகம ரீதியான பதிவை எதிர்த்து நின்று முரண்படுகிறது.
- உண்மை நிலையுடன் ஒத்துப்போவதில்லை.

- **ஒரு ஆயிரம் ஆண்டு கண்ணோட்டம்**

இந்தக் கண்ணோட்டமானது பின்வரும் கருத்துக்களைப் பற்றிக் கொண்டுள்ளது:

- இஸ்ரவேல் = சபை
- சபையானது இஸ்ரவேலுக்குக் கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள் யாவற்றையும் அடையாளத்துவமாக நிறைவேற்றுகின்றது.
- பூமியானது இப்பொழுது அரசாட்சியின் யுகத்தின் கீழ் உள்ளது - இது ஆவிக்குரிய அரசாக மட்டுமே உள்ளது.
- பரவச நிலை = இரண்டாம் வருகை
- பூமியில் கிறிஸ்துவின் 1000 ஆண்டு அரசாட்சி என்பது நேர்ப் பொருளில் இராது.
- இப்பொழுதுள்ள "சபை/அரசாட்சி யுகத்தின்" முடிவில் கிறிஸ்து வருகிறார்.
- சபை யுகமானது ஆபத்தில்/இக்கட்டில் முடியும் பின்பு கிறிஸ்து வருவார்.
- தாவீது மற்றும் சாலமோன் ஆகியோரின் நாட்களிலேயே இஸ்ரவேலர்களுக்கான நாடு பற்றிய வாக்குத்தத்தம் நிறைவேற்றப்பட்டு விட்டது. **(1 இராஜா. 4:21; 8:65)**

<u>வேதாகம ரீதியான ஆதாரம்</u>

மத். 13:33 மற்றும் **மத். 16:18-19** போன்ற வசனப்பகுதிகள் சில வேளைகளில் பயன் படுத்தப்பட்டாலும், ஒரு ஆயிரம் ஆண்டு அரசாட்சி என்பதற்கு வேத வசனரீதியான உண்மை ஆதாரம் எதுவும் இருப்பதில்லை.

ஒரு ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்குப் பதில்செயல்

- இஸ்ரவேல் மற்றும் சபை ஆகியவற்றுக்கு இடையில் உள்ள வித்தியாசத்தை மங்கலாக்குகின்றது.
- ஆயிரமாண்டு அரசாட்சியுடன் தொடர்புடைய எல்லா வசனப் பகுதிகளையும் அடையாளப்படுத்துவமாக அல்லது ஆவிக்குரிய வகையில் விளக்கியுரைக்க வேண்டும்.
- (நாடு பற்றிய வாக்குத்தத்தங்கள் உள்ளிட) இஸ்ரவேலுக்கு உரைக்கப்பட்ட தீர்க்க தரிசனங்கள் இஸ்ரவேலினாலோ அல்லது ஆவிக்குரிய வகையில் சபையினாலோ நிறைவேற்றப்பட்டவைகளாய்க் காண வேண்டும்.
- ஆயிரம் ஆண்டு அரசாட்சி, மற்றும் புதிய உடன்படிக்கை போல இஸ்ரவேலுக்குத் தேவனின் வாக்குத்தத்தம் தொடர்பான வேத வசனத்தின் திரளான பகுதிகளைப் புறக்கணிக்க வேண்டும்.
- தற்கால இராஜ்யம்/சபை யுகத்தின் உண்மை நிலைக்கு நேர்மாறானதாக உள்ளது - இது உலகளாவிய சமாதானம், வளமை, மற்றும் நீதி ஆகியவற்றின் காலமாக இருப்பதில்லை.

- **ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு முன் என்ற கண்ணோட்டம்**

இந்தக் கண்ணோட்டமானது பின்வரும் கருத்துக்களைப் பற்றிக் கொண்டுள்ளது:

- வேத வசனங்கள் எல்லாவற்றிலும் சாதாரணமான நேரடியான பொருள் விளக்கம் பின்பற்றப்பட வேண்டும்.
- புதிய ஏற்பாட்டில் மறு உறுதிப்படுத்தப்பட்ட நாடு பற்றிய வாக்குத் தத்தங்கள் இஸ்ரவேலுக்கு இனி முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டியவைகளாய் உள்ளன (**ஆதி. 15:18-21**)
- இஸ்ரவேலை மீண்டும் ஒன்றுகூட்டி, அரசியல், மதரீதியான மற்றும் பொருளாதார ரீதியான வலிவார்ந்த தன்மைகளுடன் நாட்டை மீளக் கொண்டு வருதலின் வாக்குத்தத்தத்தைக் கர்த்தர் இனி நிறைவேற்ற வேண்டியுள்ளது.
- வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ள ஆயிரம் ஆண்டு அரசாட்சி இன்னும் ஏற்படவில்லை.
- தேவனுடைய நோக்கங்களைப் பொறுத்தமட்டில் இஸ்ரவேலும் சபையும் வித்தியாசப்பட்டவைகளாக உள்ளன.
- "தேவனுடைய இராஜ்யத்தின்" குறிப்பிட்ட சில அம்சங்கள் சபையில் காணப்படுகையில் (**லூக். 17:20-21; ரோமர் 14:17; கொலோ. 1:13; 2 தெச. 1:5**), இது வேத வசனத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள பூமியின் மீதான கிறிஸ்துவின் ஆயிரம் ஆண்டு அரசாட்சியாக இருப்பதில்லை.
- 7 ஆண்டுகள் மகா உபத்திரவத்தின் முடிவின் போது கிறிஸ்து நியாயத்தீர்ப்பைச் செயல்படுத்தவும், பூமியின் மீது தம் ஆயிரம் ஆண்டு அரசாட்சியை நிலைநாட்டவும் மற்றும் ஆபிரகாம், தாவீது மற்றும் புதிய உடன்படிக்கைகளை முழுமையாக நிறைவேற்றவும் வருவார்.
- கிறிஸ்தவர்களும் பரிசுத்தவான்களும் இப்பூமியின் மீது 1000 ஆண்டுகள் ஆளுகை செய்வார்கள் - அது சமாதானம், வளம் மற்றும் நீதி ஆகியவற்றின் காலமாய் இருக்கும்.

<u>வேத வசன ரீதியான ஆதாரம்:</u>

- ஆபிரகாமுடன், தாவீதுடன் மற்றும் புதிய உடன்படிக்கைகளின் வாக்குத்தத்தங்கள் பற்றிய நேரடியான பொருள் விளக்கமானது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கிறிஸ்து மீண்டும் வருவதை வற்புறுத்துகின்றது.
- கிறிஸ்துவின் இரண்டாம் வருகையானது வேத வசனங்களில் எப்பொழுதுமே நியாயத் தீர்ப்பைத் தொடர்ந்து வரும் ஆசீர்வாதமாகவே சித்தரிக்கப்பட்டுள்ளது. எ.கா. **மல். 3:1-4; சக. 14:1-21**
- **வெளி. 19:11-21** (இரண்டாம் வருகை) என்பது நாள் வரிசைக் கணக்கின்படி *வெளி. 20:1-6*ல் பின்பற்றப்பட்டுள்ளது, (ஆயிரம் ஆண்டு அரசாட்சி) என்பது நேரடியாக நிறைவேற்றப்படும் (இவ்வசனப் பகுதியில் 1000 என்பது ஆறுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது)
- **வெளி. 6:19** நாள் வரிசைக் கணக்கின்படி அமைக்கப்பட்டுள்ளது

ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு முன் என்ற கண்ணோட்டத்திற்குப் பதிலுரை

இந்தக் கண்ணோட்டமானது,

- சாதாரண நேரடியான பொருள் விளக்கத்தை மதிக்கின்றது.
- வேத வசனத்தின் மேலான அனைத்து போதனைகளுடனும் சீர் பொருந்தியுள்ளது.
- சபை மற்றும் இஸ்ரவேல் ஆகியவற்றிற்கு இடையே உள்ள வித்தியாசங்களைப் பராமரிக்கின்றது.
- மகா உபத்திரவம், நியாயத் தீர்ப்பில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மற்றும் அதைத் தொடரும் ஆயிரம் ஆண்டு அரசாட்சி ஆகியவற்றின் நோக்கத்தைப் புரிந்து கொள்கின்றது.
- நிபந்தனையற்ற மற்றும் மாற்றப்பட முடியாத வகையில் செய்வதாகத் தேவன் வாக்களித்துள்ள ஆபிராகமுடன், தாவீதுடன் மற்றும் புதிய உடன்படிக்கைகளின் நிறைவேற்றத்தை மதிக்கின்றது.

முடிவுரை

அடுத்த 4 தீர்க்க தரிசன நிகழ்ச்சிகளின் வேதாகம ரீதியாக ஆலோசனை அளிக்கப்பட்ட பூமியின் மீதான நிகழ்ச்சிகள் பின்வருமாறு:

1. சபையின் பரவச நிலை
2. பாவத்தைத் தண்டிக்கவும் இஸ்ரவேலைத் தூய்மைப்படுத்தவும் 7 ஆண்டுகள் மகா உபத்திரவம்.
3. நியாயத்தீர்ப்பில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை
4. பூமியின் மீது கிறிஸ்துவின் 1000 ஆண்டு அரசாட்சி

இப்பொழுது நாம் ஆயிரம் ஆண்டு அரசாட்சியின் இயல்பு மற்றும் நோக்கம் பற்றிய சுருக்கமான கவனத்திற்குத் திரும்புகின்றோம்.

ஈ. ஆயிரம் ஆண்டு அரசாட்சி

விளக்கம்: ஆயிரம் ஆண்டு அரசாட்சி என்பது, தாவீதுடன் மற்றும் புதிய உடன்படிக்கைகளின் நிறைவேற்றத்தில் உலகளாவிய சமாதானம், வளம் மற்றும் நீதி ஆகியவை விளங்கி நிற்கக் கூடிய பூமியின் மீது கிறிஸ்து ஆளுகை செய்யும் 1000 ஆண்டுகளைக் குறிக்கின்றது.

திறவுகோல் வசனப்பகுதிகள்:

வெளி. 5:9-10
வெளி. 20:1-6
ஏசா. 2:1-5
ஏசா. 11:1-11
ஏசா. 35:1-10
ஏசா. 65:20-25
ஓசியா 2:14-23
மீகா 4:1-8

எரே. 31:27-40
எசே. 36:22-38
எசே. 40-48

<u>விவரிப்பு:</u>
இந்தத் திறவுகோல் வசனங்களின் அடிப்படையில் ஆயிரம ஆண்டு அரசாட்சியைப் பற்றிய ஒரு விவரிப்பு பின்வருமாறு:

- இஸ்ரவேலர்கள் அவர்களின் நாட்டில் சமாதானத்தில் மீண்டும் கூட்டப்படுவார்கள்.
- இஸ்ரவேலின் அரசியல், பொருளாதாரம் மற்றும் மதம் சார்ந்த வலிவுத்தன்மைகள் மீளக்கட்டப்படும்.
- எருசலேம் உலகின் தலைநகராக விளங்கும்.
- கிறிஸ்து பூமியின் எல்லா இனங்களுக்கும் அரசராய் இருந்து ஆளுகை செய்வார்.
- உயிர்ப்பிக்கப்பட்ட பரிசுத்தவான்கள் கிறிஸ்துவுடன் ஆளுகை செய்வார்கள்.
- கர்த்தரைப் பற்றிய அறிவு பூமியெங்கும் நிறைந்திருக்கும்.
- மனித குலத்தின் மீது பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுவார்.
- கிறிஸ்துவுக்கு நினைவுகூருதலின் பலிகளும் ஆராதனையும் நடக்கின்ற ஆயிரம் ஆண்டு அரசாட்சியின் ஆலயம் ஒன்று எருசலேமில் இருக்கும்.
- உலகம் முழுவதிலும் சமாதானமும் வளமையும் மெய்ப் பொருளாய் இருக்கும்.
- இந்தக் காலகட்டத்தின் போது சாத்தானும் அவனது அசுத்த ஆவிகளும் கட்டி வைக்கப்பட்டிருப்பார்கள்.
- விலங்குகளின் இராஜ்யத்தில் விரோதம் எதுவும் இராது.
- 100 ஆண்டுகள் வயதானவர்கள் இளைஞர்களாகக் கருதப்படுவார்கள்
- மீட்கப்படாத எந்த நபரும் ஆயிரம் ஆண்டு அரசாட்சியில் பிரவேசிக்க மாட்டார்.

<u>ஆயிரம் ஆண்டு அரசாட்சியின் மக்கள் தொகை</u>

பரவலான அழிவு மற்றும் மரணம் ஆகியவற்றைக் கொண்ட 7 ஆண்டுகள் மகா உபத்திரவத்தின் காலத்தைத் தொடர்ந்து ஆயிரம் ஆண்டு அரசாட்சி வருவதால், பூமியின் மீது இந்த அரசாட்சியில் இருக்கப் போகும் மக்கள் யார்?

ஆயிரம் ஆண்டு அரசாட்சியில் பூமியின் மீது இருக்கப் போகும் இயல்பான மக்கள் தொகையானது சாத்தியமான பல ஆதாரமூலங்களில் இருந்து வருவதாக உள்ளது:

- உபத்திரவத்தினூடே தேவனால் சரீரப் பிரகாரமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள 144,000 முத்திரையிடப்பட்ட யூதர்கள். **(வெளி. 14:1-5)**
- உபத்திரவ காலத்தில் மீட்கப்பட்ட யூதர்களும் புறஜாதியாரும் முடிவு வரையிலும் பிழைத்திருப்பார்கள் **(வெளி. 14:6-12)**

மற்றும் **வெளி. 20, 21** ஆகியவற்றின் அடிப்படையில், ஆயிரம் ஆண்டு அரசாட்சியின் போது, பூமியின் மீதுள்ள மக்களுக்கும், உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களுக்கும் இடையில் செய்திப் பரிவர்த்தனை இருக்கும்.

குறிப்பு: ஆயிரம் ஆண்டு அரசாட்சி தொடங்குவதற்கு முன்பு அவ்வேளையில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்குள் பிரவேசிக்கலாமா என்பதைக் காணுவதற்காகக் கிறிஸ்து அவர்களை நியாயத் தீர்ப்பார்.

- உபத்திரவத்தின் முடிவில் உயிர் வாழும் யூதர்களை நியாயந்தீர்த்தல்.
  எசே. 20:33-38
  லூக். 17:30-37

- உபத்திரவத்தின் முடிவில் உயிர் வாழும் புறஜாதியாரை நியாயந் தீர்த்தல்
  மத். 25:31-46

எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் நியாயத் தீர்ப்புக்குச் செல்லுகின்றனர்; எஞ்சியுள்ளவர்கள் பூமியின் மீது ஆயிரம் ஆண்டு அரசாட்சியின் ஆசீர்வாதங் களுக்குள் பிரவேசிக்கின்றனர்.

ஆயிரம் ஆண்டு அரசாட்சியினுள் பிரவேசிக்கும் யாவரும் மீட்கப்படுவார்கள். ஆண்டுகள் கடக்கும் போது, அவர்கள் பிள்ளைகளைப் பெறுவார்கள் - அப்பிள்ளைகளில் சிலர் மீட்கப்படுவார்கள் மற்றும் சிலர் கிறிஸ்துவைப் புறக்கணிப்பார்கள். (புறக்கணிக்கும் இந்த) பிந்திய குழுவினர் தாம் ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்குப் பிறகு சாத்தானுடன் சேர்ந்து கலகம் செய்வார்கள். **வெளி. 20:7-10**

<u>ஆயிரம் ஆண்டு அரசாட்சியின் நோக்கம்</u>

ஆயிரம் ஆண்டு அரசாட்சியில் குறிப்பிடத்தக்க பல நோக்கங்கள் நிறைவேற்றப் படுகின்றன:

- ஆபிரகாமுடனான உடன்படிக்கையில் உள்ள நாடு அளித்தல் பற்றிய வாக்குறுதி நிறைவேற்றப்படுகிறது.
- தாவீதுடனான உடன்படிக்கையில் உள்ள அரசர்/அரியணை வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுகின்றன.
- புதிய உடன்படிக்கையில் உள்ள இஸ்ரவேலுக்குரிய உலகப் படியான/ ஆவிக்குரிய ஆசீர்வாதங்களின் வாக்குறுதிகள் இஸ்ரவேல் மீண்டும் ஒன்று கூட்டப்பட்டு மீளக்கட்டப்படுகிற வகையில் நிறைவேற்றப்படுகின்றன.
- பூமியின் மீது உலகளாவிய சமாதானம், வளமை மற்றும் நீதி ஆகியவை இருக்கும் காலத்திற்கு பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றப்படுகின்றன.
- கிறிஸ்துவின் முதல் வருகையில் அவர் புறக்கணிக்கப்பட்டிருப்பினும், சங். 2ல் தேவன் வாக்குத்தத்தம் செய்தபடி, அவரே (கிறிஸ்துவே) பூமியின் மீது அரசராய் இருப்பார்.
- மனிதன் எப்படி வாழ வேண்டும் என்று கிறிஸ்து நோக்கங் கொண்டுள்ளார் என்பதற்கு பூமியின் மீது ஒரு செயல் விளக்கம் இருக்கும்.
- ஆலயத்தில் செலுத்தப்படும் ஆயிரம் ஆண்டு நினைவு பலிகள், ஆராதனை எப்படி நடத்தப்பட்டிருக்கப்பட வேண்டும் என்பதைச் சித்தரிக்கும்.
- 1000 ஆண்டளவாகச் சாத்தான் கட்டப்பட்டிருந்த போதிலும், ஆயிரம் ஆண்டு அரசாட்சியின் தொடக்கத்திற்குப் பின் பிறக்கின்ற மக்களுக்கு தேவன், மனிதனின் பாவம் நிறைந்த தன்மையையும், தேவனுடைய நீதியையும் உறுதிப்படுத்துவார்.

பயிற்சி: வேத வசனம் இவ்வளவு தெளிவாய்க் காணப்படும் பொழுது, பூமியின் மீது கிறிஸ்துவின் 1000 ஆண்டு அரசாட்சியை மக்களில் பலர் நம்புவதற்குக் கடினமானதாகக் காண்பது ஏன்?

____

____

____

____

உ. சாத்தான் அவிழ்த்து விடப்படுதல் - கடைசிக் கலகம்

ஆயிரம் ஆண்டுகளின் முடிவில், மீண்டும் ஒருமுறை மக்களினங்களை வஞ்சிக்கும்படியாகவும் தேவனுக்கெதிரான கடைசிக் கலகம் ஒன்றை வழிநடத்தும்படியாகவும் ஒரு குறுகிய கால அளவுக்குச் சாத்தான் விடுவிக்கப்படுவான். (**வெளி. 20:7-10**)

சாத்தானைக் கடைசியாக நியாயத் தீர்ப்பதும், ஆயிரம் ஆண்டு அரசாட்சியின் போது வெளிப்படையாகக் கலகம் செய்யாவிட்டாலும், கிறிஸ்துவைப் புறக்கணித்திருந்த மக்களின் பாவம் நிறைந்த தன்மையை உறுதிப்படுத்துவதும் தேவனுடைய நோக்கமாக உள்ளது.

இவ்விடத்தில் **வெளி. 20**ல் ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்குப் பிறகு நடப்பதாகச் சித்தரிக்கப்படும் கோகு மற்றும் மாகோகு ஆகியோரின் யுத்தம் **எசே. 38-39**ல் விவரிக்கப்பட்டுள்ள அதே யுத்தமாக இருப்ப தில்லை, இது மகா உபத்திரவ காலத்தின் முதல் 3 1/2 ஆண்டுகளின் முடிவுக்கு முன்னதாகவே நடைபெறும் என்பது உறுதி. காலமும் விவரிப்பும் முற்றிலும் மாறுபட்டவைகளாக உள்ளன. **வெளி.** நூலில் உள்ள கோகு மற்றும் மாகோகு என்பவர்கள் தேவனை எதிர்க்கின்ற எல்லாரையும் குறிப்பிடலாம்.

தேவனுடைய வெற்றி விரைவானதாக, நிச்சயமானதாக மற்றும் முழுமையானதாக உள்ளது. அதன் பிறகு மீட்கப்படாது மரித்தவர்களின் உயிர்த்தெழுதலும், இறுதி நியாயத் தீர்ப்பும் நடைபெறுவதற்கான காலம் வரும்.

ஊ. சரீர உயிர்த்தெழுதல்

சரீர உயிர்த்தெழுதலின் உண்மையானது வேத வசனத்தில் மிகவும் தெளிவானதாக இருக்கையில், அதன் காலம், முறை மற்றும் வரிசை ஆகியவை பற்றி தெளிவான கருத்து இருப்பதில்லை.

சரீர உயிர்த்தெழுதல் 3 குழுவினருக்கு பொருந்துகின்றது:

- கிறிஸ்து
- மீட்கப்பட்டவர்கள்
- மீட்கப்படாதவர்கள்

மற்றும் ஒருவேளை இது நான்கு படி நிலைகளில் நடைபெறலாம்:

1. கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதல்

கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலானது உயிர்த்தெழுதலின் "முதற்கனி" என்ற வகையிலும், சரீர உயிர்த்தெழுதலின் உண்மை நிலைக்கு முற்றிலுமான உத்தர வாதம் என்ற வகையிலும் கண்ணோக்கப்படுகிறது. மகிமைப்படுத்தப்பட்ட உயிர்த்தெழுந்த ஆவிக்குரிய சரீரத்தின் அவசியமானது தீவிரமானதாக உள்ளது, ஏனெனில் "மாம்சம்" தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது.

சிலுவையின் மீது கிறிஸ்துவின் மரணத்தில், வர இருக்கின்ற பரிசுத்தவான்களின் சரீர உயிர்த்தெழுதலுக்கு ஒரு சிறு முன் கண்ணோட்டம் இருந்தது (**மத். 27:50-54**ஐக் காணவும்), ஆனால் கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதல் ஒரு முன்மாதிரியாகவும் உத்தரவாதமாகவும் உள்ளது.

ரோமர் 6:4-9
கொலோ. 1:18
1 கொரி. 15:20-23

2. புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களின் சரீர உயிர்த்தெழுதல்

மரித்த புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் ("கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்") சபையின் பரவச நிலையில் உயிர்ப்பிக்கப்படுவார்கள். பரவச வேளையின் போது உயிருடன் இருக்கும் பரிசுத்தவான்கள் இறக்கமாட்டார்கள் ஆனால் அவர்களின் சரீரங்கள் அந்த வேளையில் மறுரூபம் அடையும். (**1 தெச. 4:13-18; 1 கொரி. 15:50-57; பிலி. 3:20-21**).

3. பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் மற்றும் உபத்திரவப்படும் பரிசுத்தவான்கள் ஆகியோரின் சரீர உயிர்த்தெழுதல்

பரவச நிலையின் போது பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் உயிர்ப் பிக்கப்படுவார்கள் (**மத். 27:50-54**ஐக் காணவும்) என்று சிலர் நம்புகையில், அவர்களின் சரீர உயிர்த்தெழுதல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நிகழும் என்பதற்கே அதிகம் வாய்ப்புள்ளது. (தானி. 12:1-2ஐக் காணவும்). உபத்திரவப் படும் பரிசுத்தவான்களும் அந்த வேளையில் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (**வெளி. 20:1-6**).

சரீர உயிர்த்தெழுதல் என்பது பழைய ஏற்பாட்டிலும் (**சங். 16:8-11; ஏசா. 26:19; தானி. 12:1-2**) மற்றும் புதிய ஏற்பாட்டிலும் (**யோவா. 2:19-22; யோவா. 5:28-29; யோவா. 6:39-40; யோவா. 11:25; 2 கொரி. 5:1-5**) போதிக்கப்படுகின்றது.

விசுவாசிகளின் சரீர உயிர்த்தெழுதல் முதலாம் உயிர்த்தெழுதல் என்று அழைக்கப்படுகின்றது; இது ஜீவனுக்கென்று உயிர்த்தெழுதலாகவும் நீதிக்கென்று உயிர்த்தெழுதலாகவும் உள்ளது!

4. <u>மீட்கப்படாதவர்களின் சரீர ரீதியான உயிர்த்தெழுதல்</u>

ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு பிறகு மற்றும் கடைசி நியாயத் தீர்ப்புகளுக்குச் சற்று முன்னதாக வரையிலும் மீட்கப்படாதவர்களுக்குச் சரீர உயிர்த்தெழுதல் இருப்பதில்லை. மீட்கப்படாதவர்கள் உயிர்த்தெழுதலில் எந்த வகையான சரீரம் கொண்டிருப்பார்கள் என்பது தெளிவாக இருப்பதில்லை, ஆனால் அது அழியாததாகவும், மகிமைப்படாததாகவும் இருக்கும். இது இரண்டாம் மரணம் என்று அழைக்கப்படுகின்றது (**வெளி. 20:5-6, 11-14**).

''இடைப்பட்ட சரீரம்'' என்பதற்கான குறிப்பு

மரித்த மக்களின் உயிர்த்தெழுதலுக்கு முன்னதாக அவர்களின் ஆவிகளைக் கொண்டிருக்கக் கூடிய "சரீரம்" ஒன்றிற்கான வேத ரீதியான உண்மை ஆதாரம் எதுவும் இருப்பதில்லை. உயிர்த்தெழுதல்கள் நடைபெறும் வரையிலும் மீட்கப்பட்டு மற்றும் மீட்கப்படாமல் மரித்த அனைவருடைய சரீரங்களும் கல்லறையில் இருக்க, அவர்களின் ஆத்துமாக்கள்/ஆவிகள் (பொருள் சார அம்சம்) தேவனுடைய பிரசன்னத்திலோ அல்லது தேவனுடைய பிரச்சன்னத்திலிருந்து பிரிக்கப்பட்டு உணர்வுடன் வதை படுதலிலோ இருக்கின்றன. (**லூக். 16:19-31**ஐக் காணவும்).

எ. நியாயத் தீர்ப்புகள்

மக்கள் தேவனுக்கு எவ்விதம் பதில்செயல் புரிந்தனர். என்பதைப் பொறுத்து அவர்களுக்குப் பலவகையான நியாயத் தீர்ப்புகளை வேத வசனம் வெளிப்படுத்து கின்றது. எல்லா மனிதர்களும் தங்களின்

- பாவ இயல்பு
- ஆதாமிலிருந்து சுமத்தப்பட்ட பாவம்
- பாவத்தின் செயல்களை உறுதிப்படுத்துதல்

ஆகியவற்றினால் தேவனுக்கு முன்பாக ஆக்கினைக்குள்ளாகும் நிலையில் நிற்கின்றனர் என்பதை நினைவில் வையுங்கள்.

ஆனால் எந்த ஒரு நபரும் இந்த மூன்று விஷயங்களுக்காக மட்டுமே நரகத்திற்கு (அக்கினிக் கடலுக்கு) செல்லும்படி நியமிக்கப்படுவதில்லை, ஆனால் தேவன் யாராய் இருக்கிறார் என்பதையும், அவர் கிறிஸ்துவினுடைய மரணத்தின் மூலம் பாவத்தின் ஆக்கினைத் தீர்ப்பில் இருந்து வெளிவரும் வழியை எவ்விதம் அருளியுள்ளார் என்றும் தேவன் வெளிப்படுத்தியுள்ளவற்றைப் புறக்கணித்து, தங்களின் அவிசுவாசத்தினா லேயே நரகத்திற்குப் பாத்திரர் ஆகின்றனர். **யோவா. 3:14-21; 36; யோவா. 8:24; ரோமர் 1:18; 2 தெச. 1:6-10; 2 தெச. 2:12; 1 யோவா. 5:9-12.**

தேவனை ஏற்பது அல்லது புறக்கணித்தல் என்பது தான் ஒரு நபரின் நித்திய அடைவிடத்தைத் தீர்மானிக்கின்றது!!

- *விசுவாசிகளின் நியாயத் தீர்ப்பு*

  கிறிஸ்துவின் மூலம் தேவன் அருளுகின்ற இரட்சிப்பை விசுவாசிகள் ஏற்றுக் கொண்டுள்ளதால் அவர்கள் தேவனுக்கு முன்பாக ஆக்கினைத் தீர்ப்பின்றி நிற்கின்றனர் (**ரோமர் 8:1**). விசுவாசிகள் தங்களின் பாவங்களுக்குப் பதில் கிரயமாய்ச் செலுத்தப்பட்ட கிறிஸ்துவின் பலியை விசுவாசத்தினால் ஏற்றுக் கொண்டதால் குற்றமற்றவர் என்று அறிவித்தலின் மூலம் தேவன் அவர்களை "நீதிமானாக்கு கின்றார்." மற்றும் தேவன் ஆதாமிலிருந்து விசுவாசிகளின் மேல் சுமத்தப்பட்டுள்ள பாவத்தை ஒன்றுமற்றதாக்குவதற்காக அவர்கள் மீது கிறிஸ்துவின் நீதியைச் சுமத்துகின்றார். (**ரோமர் 5:15-19; 2 கொரி. 5:21**)

  ஏற்கனவே சுட்டிக்காண்பிக்கப்பட்டபடி, விசுவாசிகளுக்கான ஒரே "நியாயத் தீர்ப்பு" கிறிஸ்துவின் "பேமா இருக்கையில்" உள்ளது, இங்கு அவர்களின் ஊழியங்கள் இரட்சிப்புக்காக இன்றி பலன்களின் நோக்கத்திற்காக மதிப்பிடப் படுகின்றன.

- *மீட்கப்படாதவர்களின் நியாயத் தீர்ப்பு*

  அவிசுவாசிகள் யாவருக்கும் கடைசி நியாயத்தீர்ப்பானது அவர்களின் சரீர உயிர்த்தெழுதலுக்குப் பிறகு பெரிய வெள்ளை அரியணையில் நடைபெறுகின்றது. (**வெளி. 20:11-15**) மரணத்திற்குப் பின்பு ஒரு இரண்டாவது வாய்ப்பைப் பற்றி வேத வசனம் போதிப்பதில்லை. **எபி. 9:27-28**

  மீட்கப்படாதவர்கள் பின்வரும் காரணங்களினால் நியாயந் தீர்க்கப்பட்டு ஆக்கினைக்குட்பட்டவர்களாய் இருக்கின்றனர்:

  — அவர்களின் செயல்கள் (கிரியைகள்/நடக்கை) அவர்களின் பாவம் நிறை தன்மையை உறுதிப்படுத்துகின்றன ("புத்தகங்கள்")

  — அவர்களின் பெயர்கள் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதில்லை மற்றும் அவர்கள் இந்த வாழ்வில் கிறிஸ்துவைப் புறக்கணித்துள்ளனர். ("புத்தகம்")

குறிப்பு: இரட்சிப்பு அல்லது ஆக்கினைத் தீர்ப்பு என்பதின் விஷயமானது நாம் தேவனுக்கு எவ்வாறு பதில்செயல் செய்கிறோம் என்பதைக் கொண்டு தீர்க்கப்படுகின்றது. ஆனால், "பரலோகம்" அல்லது "நரகத்திற்கு" செல்லும் பொழுது நம் நிலை எது போல் இருக்கும் என்பது நாம் வாழ்ந்துள்ள வாழ்க்கையைச் சார்ந்துள்ளது. ஒவ்வொரு நாளும் நாம் செய்கின்ற ஒவ்வொன்றும் உண்மையிலேயே நித்தியத்திற்குக் கணக்கிடப்படுகின்றது.
வெளி. 20:13 (அவிசுவாசிகள்)
2 கொரி. 5:10 (விசுவாசிகள்)

- *சாத்தான்/அசுத்த ஆவிகள் மீது நியாயத்தீர்ப்பு*

  சாத்தானும் அவனது விழுந்து போன தூதர்களும் அவர்களின் வீழ்ச்சியின் போது தேவனாலும் சிலுவையில் கிறிஸ்துவாலும் நியாயத் தீர்க்கப்பட்டனர், ஆனால் கலகத்திற்காக அவர்களுக்கு விதிக்கப்பட்ட நியாயத் தீர்ப்பானது, மீட்பு உட்பட தேவன் மனிதனுக்காக் கொண்டுள்ள அவரது நித்தியமான திட்டம் முடிவடையும் வரைக்கும் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. தேவன் தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளச் சாத்தானைப் பயன்படுத்துகிறார்.

ஆதி. 3:14-15
ஏசா. 14:12
யோவா. 12:31
யோவா. 16:11
எபி. 2:14-15
யாக். 4:7
வெளி. 12:7-12

பயிற்சி: *விசுவாசிகளின் மற்றும் அவிசுவாசிகளின் நியாயத்தீர்ப்புக்கு இடையில் உள்ள நுட்பமான வேறுபாடுகளை விவரிக்கவும். நாம் இவ்வாழ்வில் என்ன செய்கின்றோம் என்பது உண்மையிலேயே மாறுபாட்டை ஏற்படுத்துகின்றதா? ஏன்?*

____

____

____

____

நமது செய்கைகள் (பரலோகமா அல்லது நரகமா என்ற) நமது அடைவிடத்தைத் தீர்மானம் செய்வதில்லை, ஆனால் நாம் அங்கு செல்லும் போது எப்படி இருப்போம் என்பதைப் பற்றிச் சிலவற்றைச் செய்ய வேண்டியவையாக உள்ளன.

ஏ. மனிதனின் அடைவிடம்

1. தற்காலிகம்

- சரீர உயிர்த்தெழுதலுக்கு முன்னதாக

  – <u>பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள்</u>

பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களின் உடலானது, அதன் நிறைவான உயிர்த்தெழுதலுக்காகக் காத்திருப்பதற்கு கல்லறைக்கு (பழைய ஏற்பாட்டில் இது என்று அழைக்கப்பட்டது) சென்றது. (**ஏசா. 38:10; சங். 16:10**). பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களின் ஆவி/ஆத்துமாவும் கூட உயிர்த்தெழுதல் வரையிலும் பாதாளத்தில் (கல்லறை மற்றும் மரித்தோரின் வட்டாரம்) அடைபட்டுள்ளதாகச் சிலர் நம்புகின்றனர். இருப்பினும், பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களின் சரீர உயிர்த்தெழுதலுக்கு முன்பாக அவர்களின் ஆத்துமா/ஆவி உணர்வுடன் இருத்தல் என்பது போதிக்கப் பட்டதாக அல்லது பலத்த வகையில் மறைவாய் உணர்த்தப்பட்டதாக காணப்படுகிறது.

பழைய ஏற்பாட்டிலும் மற்றும் புதிய ஏற்பாட்டிலும் மரணம் என்பது உடலில் இருந்து ஆவி/ஆத்துமா பிரிதல் என்பதாக உள்ளது. (**சங். 146:4; லூக். 8:53-56; லூக். 23:46; யாக். 2:26**). ஆகையால் மரணத்தின் வேளையில் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவானுடைய ஆவி உடனடியாக தேவனுடைய பிரசன்னத்திற்குச் சென்றது என்று முடிவு செய்வதே மிகச் சிறந்ததாக உள்ளது. மரணத்திற்குப் பிறகு(ம்) உணர்வுடன் இருத்தலை வேத வசனம் போதிக்கின்றது. (**ஆதி. 5:24; 1 சாமு. 28:11-19; 2 சாமு. 12:22-23; ஏசா. 14:9-11**)

கிறிஸ்து மறுரூபமான வேளையில் மோசேயும் எலியாவும் அவருடன் தோற்றம் தந்த நிகழ்ச்சியானது, மரித்த பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் கர்த்தருடைய பிரசன்னத்தில் உணர்வுடன் இருக்கின்றனர் என்பதற்குப் பலமாக விவாதிக்கின்றது. (**மத். 17:1-3**)

  – <u>பழைய ஏற்பாட்டு காலத்தில் மீட்கப்படாதவர்கள்</u>

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்த அவிசுவாசிகளின் சரீரம் மற்றும் ஆத்துமா/ஆவி ஆகிய இரு அம்சங்களுமே நியாயத் தீர்ப்புக்கென்று உயிர்ப்பிக்கப்படுதலுக்குக் காத்திருப்பதற்காக பாதாளத்திற்குச் சென்றன. (**ஏசா. 26:13-14; சங். 9:17; சங். 31:17**) இவ்விதமாக, பழைய ஏற்பாட்டு காலத்தில் மீட்கப்பட்டிராதவர்களின் ஆவிகள் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டவைகளாக பெருந்துன்பம் மற்றும் உணர்வுள்ள வாதையில் உள்ளவைகளாக் இருந்தன. (**ஏசா. 50:11; ஏசா. 57:21; ஏசா. 66:24**)

பாதாளம் என்பது, பழைய ஏற்பாட்டு காலத்தில் இருந்த மீட்கப்படாதவர்களின் உடல் மற்றும் ஆவி ஆகியவற்றை தற்காலிகமாக வைத்திருக்கும் இடமாக உள்ளது.

- <u>புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள்</u>

புதிய ஏற்பாட்டில் "Hades" (hell - நரகம்) என்பது அநேகமாக பழைய ஏற்பாட்டின் "Sheol" ***(அப். 2:27-31)*** (பாதாளம்) என்பதற்குச் சமமானதாக இருக்கலாம். இது கல்லறையைக் குறிப்பிடுவதாகவும் உள்ளது. புதிய ஏற்பாட்டுப் பரிசுத்த வானின் உடலானது சரீர உயிர்த்தெழுதலுக்காகக் காத்துக் கொண்டு கல்லறையில் "உறங்குகின்றது." *(1 தெச. 4:14-15)*. இது உடலானது உயிர்த்தெழுதலுக்காகக் காத்திருக்கையில் தற்காலி கமாய் வைக்கப்பட்டிருக்கும் இடமாக உள்ளது. ***(யோவா. 11:11-15)***

புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான் கல்லறையில் இருக்கையில் "ஆத்துமா உறக்கம்" என்ற கருத்திற்கு வேதாகம ரீதியான ஆதாரம் எதுவும் இல்லை. புதிய ஏற்பாட்டுப் பரிசுத்த வானுடைய ஆவி/ஆத்துமா உடனடியாக கர்த்தருக்கு முன்பாக உணர்வுள்ள பிரசன்னத்திற்கும் ஆசீர்வாதத்திற்கும் கடந்து செல்லுகின்றது. ***(2 கொரி. 5:1-8; லூக். 23:38-43; லூக். 23:46)***

விசுவாசியைப் பொறுத்தமட்டில், சரீரத்தில் இல்லாதிருத்தல் என்பது கர்த்தருடன் இருத்தல் என்பதாக உள்ளது.

இயேசுவின் சரீரம் மட்டுமே கல்லறைக்குச் சென்றது என்பதை ஜாக்கிரதையாய்க் கவனியுங்கள். அவரது ஆவி உடனடியாகப் பிதாவிடம் திரும்பிச் சென்றது. மற்றும் சிலுவையில் இருந்த திருடனும் அதே நாளில் இயேசுவுடன் கூட பரதீசில் (பரலோகத்தில்) இருந்திருப்பான்.

- <u>புதிய ஏற்பாட்டுக் காலத்தில் மீட்கப்படாதவர்கள்</u>

மீட்கப்பட்ட மற்றும் மீட்கப்படாத மக்களின் ஆவிகளுக்கு என்ன நடக்கின்றது என்பதற்கு லூக்கா சுவிசேஷம் ஒரு தனிச் சிறந்த மற்றும் குறிப்பிடத்தக்க சித்தரிப்பை அளிக்கின்றது. இவ்வசனப் பகுதியானது, பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு காலத்தில் உள்ள மீட்கப்பட்ட மற்றும் மீட்கப் படாதவர்களின் அடைவிடம் குறித்து மிகச் சரியாகப் போதிக்கின்றது. ***(லூக். 16:19-31)***

இவ்வசனப் பகுதியானது, Sheol (ப.ஏ.) மற்றும் Hades (N.T.) என்பது இரு பிரிவிடங்கள் கொண்டது என்ற கண்ணோட்டத்திற்கு வழிநடத்தியிருக்கின்றது. இந்தக் கண்ணோட்டத்தின்படி, ஒரு பிரிவு விசுவாசிகளுக்கும், இன்னொரு பிரிவு அவிசுவாசிகளுக்குமானதாக உள்ளது. விசுவாசிகளுக்கான பிரிவானது பரதீசு அல்லது ஆபிரகாமின் பக்கம் (மடி) என்று அழைக்கப்படுகின்றது, இது சரீர உயிர்த்தெழுதல் நடைபெறும் வரையில் ஓய்வு மற்றும் அமைதிக்கான தற்காலிக இடமாக உள்ளது. இன்னொரு பிரிவு "நரகம்" (Hades) என்பதாக உள்ளது - இது தப்ப வழியற்ற வகையில் அக்கினி, தண்டனை மற்றும் உணர்வுடன் வதைபடுதல் ஆகியவை கொண்ட தற்காலிக இருப்பிடமாக உள்ளது. Hades என்பது இரு பாகங்கள் கொண்டதாக உள்ளதென்று இவ்வசனப் பகுதி கூறுவதில்லை என்பதைக் கவனியுங்கள், ஆனால் ஒரு அகலமான கால்வாய் (பெரும்பிளப்பு) Hades ஐ பரதீசில் இருந்து நிரந்தரமாய்ப் பிரிக்கின்றது என்று மட்டுமே இது கூறுகின்றது.

பரதீசு என்பது தேவனுடைய பிரசன்னத்தைக் குறிக்கின்றது (பரலோகம்), இங்கு உணர்வுள்ள சமாதானமும் ஆறுதலும் இருக்கும் **(2 கொரி. 12:1-4**ஐக் காணவும்). என்பது நரகத்தைக் குறிக்கின்றது, இங்கு உணர்வுடன் கூடிய வதைபடுதல் மற்றும் வேதனையுடன் தேவனுடைய பிரசன்னத்தில் இருந்து நித்திய பிரிவு உண்டாகியிருக்கும் ***(மத். 10:28).***

புதிய ஏற்பாட்டில் (கெஹென்னா) என்ற வார்த்தையானது நரகத்தைக் குறிப்பதாகவும் அவிசுவாசிகளை வாதிக்கும் நித்திய அக்கினியைச் சித்தரிப்பதாகவும் உள்ளது. ***(மத். 25:41; மத். 5:22; மாற். 9:42-49)***

2. மனிதனின் கடைசி அடைவிடம்

- ***மீட்கப்படாதவர்கள்***

ஆயிரம் ஆண்டு அரசாட்சியின் முடிவில், சாத்தானுடைய கடைசிக் கலகத்திற்குப் பிறகு, மீட்படையாமல் மரித்த யாவரும் சரீர உயிர்த்தெழுதல் அடைந்து அக்கினிக் கடலில் என்றென்றைக்கும் இருக்கும்படி தள்ளப்படுவார்கள்.
(2 தெச. 1:8-9; வெளி. 20:5-15)

மீட்கப்படாதவர்கள் நித்திய தண்டனைக்கென்று சரீரத்தில் உயிர்த்தெழுதல் என்பது வேத வசனத்தினால் தெளிவாய்ப் போதிக்கப்பட்டுள்ளது.
(அப். 24:15; தானி. 12:2)

அவர்கள் செய்துள்ளவற்றின் அடிப்படையில் நியாயத் தீர்ப்பு இருக்கும் என்பதால் அவிசுவாசிகளுக்கு தண்டனையில் வித்தியாசப்பட்ட அளவு முறைகள் இருப்பதை உணர்ந்து அறியலாம். ***(மத். 11:20-22; லூக். 20:45-47; ரோமர் 2:1-11;*** விசேஷமாக ***வச. 5-6*** ஆகியவற்றைக் காணவும்)

எனவே எல்லா அவிசுவாசிகளுக்கும் நித்திய அக்கினிக் கடல்தான் நிரந்தரமான இளைப்பாறும் இடமாக உள்ளது, அங்கு பின்வருபவர்கள் என்றென்றைக்கும் இருப்பார்கள்:

- சாத்தானும் அவனது அசுத்த ஆவிகளும்
- மிருகமும் கள்ளத் தீர்க்கதரிசியும்
- எல்லா அவிசுவாசிகளும்
- மரணம்
- பாதாளம்

மீட்கப்படாத அனைவரின் கடைசி அடைவிடத்தைப் பற்றி இரு கூற்றுகளில் தொகுத்துரைக்க முடியும்:

"தேவனிடத்திலிருந்து நித்தியத்திற்கும் பிரிக்கப்பட்டிருத்தல்"
"நித்தியத்திற்கும் வாதனையில் இருத்தல்"

- ***மீட்கப்பட்டவர்கள்***

எல்லாக் காலங்களிலும் மீட்கப்பட்டவர்கள் "பரலோகத்திற்கு" (புதிய வானம் மற்றும் புதிய பூமி) உரியவர்களாய் உள்ளனர் ***(வெளி. 21:1; 2 பேது. 3:13)***

எல்லாக் காலங்களிலும் மீட்கப்பட்டவர்களின் கடைசி அடைவிடம் பற்றி பின்வருமாறு தொகுத்துரைக்க முடியும்:

"கர்த்தருடன் நித்தியத்திற்கும் இருத்தல்"
"நித்தியத்திற்கும் சமாதானமும் ஆசீர்வாதமும் உள்ள நிலையில் இருத்தல்"

பரலோகம் என்பது பரிசுத்தவான்களின் வட்டாரமாகவும் தேவனுடைய பிரசன்னத்தில் உள்ளதாகவும் இருக்கின்றது. ஆனால் விசுவாசிகள் "சரீரத்தில் இருக்கையில்" ***(2 கொரி. 5:10)*** செய்தவற்றின் அடிப்படையில் "பலன்களை" பெறுவார்கள் அல்லது இழப்பார்கள் என்பதால் எல்லா விசுவாசிகளுக்கும் பரலோகம் ஒரே மாதிரியானதாக இராது.

1. நித்திய நிலை

- **அவிசுவாசிகளுக்கு**

மீட்கப்படாதவர்களுக்கு இரண்டாம் வாய்ப்பொன்று இருப்பதில்லை. அவர்களின் நித்திய நிலையாக உள்ளது என்றென்றும் முடியாத தண்டனையும் தேவனிடத்திலிருந்து பிரித்து அக்கினிக் கடலில் வாதனை, குற்ற உணர்வு மற்றும் வருத்தமுமே ஆகும்.

- **விசுவாசிகளுக்கு**

விசுவாசிகளுக்கு நித்திய நிலை என்பது நீதிமான்கள் மட்டும் வாசம் செய்யும் புதிய வானம் மற்றும் புதிய பூமியில் இருக்கும். தேவன் பழைய வானத்தையும் பழைய பூமியையும் அக்கினி அழிவினால் தூய்மையாக்கி மீட்டு, தம்முடைய மீட்கப்பட்டவர்களுக்காக புதிய வானத்தையும் புதிய பூமியையும் படைப்பார்.

ரோமர் 8:18-21

2 பேது. 3:10-13

வெளி. 21:1

<u>நித்திய நிலையில் விசுவாசிகளுடத்தில் காணப்படாதவை என்ன?</u>

- *முரண்பாடு (சமுத்திரம்)*
- *கண்ணீர்கள்*
- *அலறுதல்*
- *வருத்தம்*
- *துக்கம்*
- *சுகவீனம் அல்லது வியாதி*
- *இரவு*
- *பாவம் அல்லது துன்மார்க்கம்*
- *மரணம்*
- *சாபம்*
- *ஆலயம்*
- *சூரியன் அல்லது சந்திரன்*

வெளி. 21:1-8

வெளி. 22:3

<u>பரலோகத்தில் யாரெல்லாம் இருப்பார்கள்?</u>

- *விசுவாசிகள் மட்டும் (ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்கள் மட்டும்)*
- *தேவன் தாமே*
- *ஆட்டுக்குட்டியானவர் அதன் ஆலயமாக*
- *தேவனுடைய மகிமை அதன் வெளிச்சத்திற்காக*
- *நீதிமான்கள் மட்டும் (**வெளி. 21:22-22:5**)*

மற்றும் **வெளி. 21-22**ன்படியாக, பின்வருபவை அங்கிருக்கும்:

- அது நம்புதற்கு அரிய அழகுமிக்க இடமாய் இருக்கும்
- பொன்னினாலும் விலையேறிய கற்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.
- ஜீவ நதி அங்கிருக்கும்.
- தேவனுடைய அரியணையைக் கொண்டிருக்கும்.
- ஜீவ விருட்சத்தைக் கொண்டிருக்கும்.

பரிசுத்தவான்கள் (மீட்கப்பட்ட யூதர்கள், புறஜாதியார், சபை) என்பவர்கள் "அவருடைய ஜனங்களாகவும் தேவன்தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாகவும்" **(வெளி. 21:3)** இருப்பதால், அவர்கள் தேவனை என்றென்றைக்கும்

- ஆராதித்து
- சேவித்து
- துதித்து

மற்றும் அவருடைய பிரசன்னத்தை நித்தியத்திற்கும் மகிழ்வுடன் அனுபவிப்பார்கள்.

ஏனெனில், பரிசுத்தவான்கள்

- தேவனுடைய முகத்தைக் காண்பார்கள்
- அவருடைய நாமம் அவர்களின் நெற்றிகளில் எழுதப்பட்டிருக்கும். **(வெளி. 22:4)**
- கிறிஸ்துவைப் போலிப்பார்கள், ஏனெனில் அவர் உண்மையில் இருக்கிற வண்ணமாகவே அவரை அவர்கள் தரிசிப்பார்கள் **(1 யோவா. 3:1, 2; பிலி. 3:20-21)**

வேதாகமத்தின் முதல் மூன்று அதிகாரங்களில் **(ஆதி. 1-3)** பாவத்தின் சாபம் மற்றும் விளைவுகளால் ஏற்பட்ட பாதிப்புகளை, வேதாகமத்தின் கடைசி மூன்று அதிகாரங்கள் **(வெளி. 20-22)** என்றென்றைக்குமாக திருப்பிப் போடுகின்றன. இது தேவனுடைய படைப்பு முழுமைக்குமான மீட்புக்கான அவருடைய பரபூரணமான திட்டம் ஆகும். **மற்றும் நாம் நித்தியத்தை - பரலோகத்தில் தேவனுடனா அல்லது அக்கினிக் கடலில் சாத்தானுடனா - எங்கு செலவிடுவோம் என்பது இவ்வாழ்வில் நாம் அவருடைய வெளிப்படுத்துதலுக்கு எவ்வாறு பதில்செயல் செய்கிறோம் என்பதையே சார்ந்துள்ளது!!**

1. *வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி மூன்று அதிகாரங்களில் நாம், ஆதியாகமத்தின் முதல் மூன்று அதிகாரங்களின் பாதிப்புகள் திருப்பப்படுதலைக் காணுகின்றோம். பின்வரும் வரைவட்டவணையானது இதை விவரிக்கும்:*

ஆதி. 1-3	*வெளி. 20-22*
*படைத்தல் **(1:1; 2:1***	*மறுபடியும் படைத்தல் **(21:1, 4)***
*மனிதனின் வீழ்ச்சி **(3:6-7)***	*மறுபடியும் மீட்கப்படுதல் (21:6-7)*
*சாத்தானின் வெற்றி **(3:1-5)***	*சாத்தானுக்கு கடைசி நியாயத் தீர்ப்பு **(20:10)***
*சாபம் சுமத்தப்படுகிறது **(3:15-19)***	*சாபம் நீக்கப்படுகிறது **(21:4, 5; 22:3)***
*மனிதன் தோட்டத்திலிருந்தும் ஜீவ விருட்சத்திலிருந்தும் துரத்தப்படுகிறான் **(3:22-24)***	*மனிதன் பரதீசையும் ஜீவ விருட்சத்தையும் மகிழ்வுடன் அனுபவிக்கிறான் **(22:1-5)***

முடிவுரை: *நமது நித்திய அடைவிடத்தைப் பொறுத்தமட்டில் பரலோகம் அல்லது நரகம் என்ற இரண்டு தெரிவுகள் மட்டுமே உள்ளன. மற்றும் நாம் தேவனுக்கு எவ்வாறு பதில்செயல் செய்கிறோமோ அதன் மூலமாக நாமே இவற்றில் எது நமக்குரியதாய் இருக்கும் என்பதை முடிவு செய்து கொள்கிறோம், இது நமது முடிவை முத்திரையிடுகிறது!*

பயிற்சி: வெளி. 21-22ல் *பரலோகம் பற்றிய விவரிப்பைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?*

____

____

____

____

முன்பு வாழ்ந்துள்ள, இப்பொழுது வாழுகின்ற அல்லது இனி வாழப் போகின்ற ஒவ்வொரு நபரும் பின்வரும் இருவகைகளில் ஏதாவதொன்றில் அடங்குகின்றனர் (மூன்றாவது விருப்பத் தேர்வு என்று ஒன்றும் இருப்பதில்லை)

ஆதாமுக்குள் (ரோமர் 5:12; 1 கொரி. 15:22)	***அல்லது***	***கிறிஸ்துவுக்குள் (ரோமர் 5:17; எபே. 2:6)***
சாத்தானின் பிள்ளை (யோவா. 8:44)	***அல்லது***	***தேவனின் பிள்ளை (யோவா. 1:12-13; வெளி. 21:7)***
இருளில் இராஜ்யத்தில் (எபே. 5:8; கொலோ. 1:13; அப். 26:18)	***அல்லது***	***ஒளியின் இராஜ்யத்தில் (எபே. 5:8; கொலோ. 1:13; அப். 26:18)***
பாவத்தில் மரித்தவர்கள் (எபே. 2:1)	***அல்லது***	***பாவத்திற்கு மரித்தவர்கள் (ரோமர் 6:11)***
அடைவிடம் = நரகம் (மத். 25:41; வெளி. 20:15)	***அல்லது***	***அடைவிடம் = பரலோகம் (வெளி. 21:3, 7; வெளி. 22:1-5, 14)***

"இது எதுவாக இருக்கும்?"

C.S. லூயிஸ் அவர்கள் இதைப் பின்வருமாறு உரைக்கிறார்: "ஒரு நாளில் எல்லாரும் தேவனுக்கு முன்பாக நின்று கொண்டு இருக்கையில் பின்வருமாறு இரண்டில் ஒன்று கூறப்படும்:

> நாம் தேவனிடம் "உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்று கூறுவோம்! (மற்றும் மீட்கப்படுவோம்)
>
> அல்லது
>
> தேவன் நம்மிடத்தில் "உனது சித்தம் செய்யப்படுவதாக" என்று கூறுவார்! (மற்றும் நாம் இழந்து போகப்படுவோம்)
>
> தேவன் உங்கள் தேவனாக இருக்கின்றார் அல்லது நீங்களே உங்களின் சொந்தக் கடவுளாக இருக்கின்றீர்களா!" ஒவ்வொரு நபரும் தங்கள் தெரிவை மேற்கொண்டு அதன் விளைவுகளை அறுவடை செய்ய வேண்டும்.
>
> ஆமென்
> *"மார நாதா"*

பிற்சேர்க்கை

வேதாகமத்தின் 66 புத்தகங்கள்

பழைய ஏற்பாட்டின் அமைப்பு

நியாயப்பிரமாணம்

பஞ்சாகமங்கள்

- ஆதியாகமம்
- யாத்திராகமம்
- லேவியராகமம்
- எண்ணாகமம்
- உபாகமம்

5 புத்தகங்கள்

வரலாற்று ஆகமங்கள்

- யோசுவா
- நியாயாதிபதிகள்
- ரூத்
- 1 சாமுவேல்
- 2 சாமுவேல்
- 1 இராஜாக்கள்
- 2 இராஜாக்கள்
- 1 நாளாகமம்
- 2 நாளாகமம்
- எஸ்றா
- நெகேமியா
- எஸ்தர்

12 புத்தகங்கள்

பாட்டாகமங்கள்

- யோபு
- சங்கீதம்
- நீதிமொழிகள்
- பிரசங்கி
- உன்னதப்பாட்டு

5 புத்தகங்கள்

தீர்க்கதரிசன ஆகமங்கள்

பெரியவை

- ஏசாயா
- எரேமியா
- புலம்பல்
- எசேக்கியேல்
- தானியேல்

சிறியவை

- ஓசியா
- யோவேல்
- ஆமோஸ்
- ஒபதியா
- யோனா
- மீகா
- நாகூம்
- ஆபகூக்
- செப்பனியா
- ஆகாய்
- சகரியா
- மல்கியா

17 புத்தகங்கள்

39 புத்தகங்கள்

புதிய ஏற்பாட்டின் அமைப்பு

சுவிசேஷங்கள்

- மத்தேயு
- மாற்கு
- லூக்கா
- யோவான்

4 புத்தகங்கள்

திருச்சபை வரலாறு

- அப்போஸ்தலர் நடபடிகள்

1 புத்தகம்

நிருபங்கள்

பவுலின் நிருபங்கள்

- ரோமர்
- 1-2 கொரிந்தியர்
- கலாத்தியர்
- எபேசியர்
- பிலிப்பியர்
- கொலோசேயர்
- 1-2 தெசலோனிக்கேயர்
- 1-2 தீமோத்யு
- தீத்து
- பிலமோன்

பொதுவானவை

- எபிரெயர்
- யாக்கோபு
- 1-2 பேருது
- 1, 2, 3 யோவான்
- யூதா

21 புத்தகங்கள்

தீர்க்கதரிசனம்

- வெளிப்படுத்தல்

1 புத்தகம்

27 புத்தகங்கள்

மீட்பின் வழி

I கடவுளின் நோக்கம் (ஐக்கியம்)

அ) கடவுளுடன் ஐக்கியம் கொள்ளவும், அவரை மகிமைப்படுத்தவும் வேண்டுமென்ற நோக்கத்தோடு மனிதன் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டான் (ஆதியா 1:26-31)

ஆ) கடவுள் மனிதனிடம் கீழ்ப்படிதலை மட்டுமே எதிர்பார்த்தல் (ஆதியாகமம் 2:16, 17)

II மனிதனின் பிரச்சினை (பாவம்)

அ) மனிதன் தானே கடவுளாக விரும்பி, கடவுளுக்குக் கீழ்ப்படியாமற் போய், பாவம் செய்தான் (ஆதி. 3)

ஆ) பாவம் உடலிலும், ஆன்மாவிலும் மரணத்தைக் கொண்டு வந்தது. அதாவது பரிசுத்தமான கடவுளை விட்டுப் பிரித்தது (ஏசாயா 59:2)

இ) எல்லா மனிதரும் பாவம் செய்து கடவுளின் மகிமையை இழந்தனர் (ரோமர் 3:23; 5:12)

ஈ) பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23; எபிரெயர் 9:27; வெளிப்படுத்தல் 20:15)

உ) பாவங்கள் மன்னிக்கப்பட இரத்தம் சிந்தப்படவேண்டும் (எபிரெயர் 9:22)

ஊ) இரட்சிப்படையாத மனிதரின் நித்தியமான முடிவு கடவுளைவிட்டுப் பிரிந்து இருப்பதேயாகும் (யோவான் 3:18-26; யூதா 1:7; 2 தெசலோனிகேயர் 1:8-9)

விளைவு : எல்லா மனிதரும் பாவத்திலே மரித்து, கடவுளைவிட்டுப் பிரிந்து இருக்கின்றனர் என்று வேதாகமம் கூறுகின்றபடியினால் (எபேசியர் 2:12) மனிதன் எவ்வாறு கடவுளோடுகூட சரியான முறையில் உறவு கொள்ள முடியும்?

III கடவுளின் முன்னேற்பாடு (மீட்பு)

அ) மனிதன் தன்னை மீட்டுக்கொள்ள இயலாது. ஏனெனில் . . .

1) நல்லவனாக இருப்பது மட்டும் போதாது (ஏசாயா 64:6)

2) நற்செயல்கள் செய்வது மட்டும் போதாது (எபேசியர் 2:9)

3) அறிவும் ஞானமும் இருந்தால் மட்டும் போதாது (மத்தேயு 16:17; 1 கொரிந்தியர் 1:21)

ஆ) கடவுளையன்றி வேறு வகையில் மீட்பு கிட்டாது (லூக்கா 18:26-27)

இ) இயேசு கிறிஸ்துவின் லமாக எல்லா மனிதருக்கும் மீட்பு கிட்டும்படியாக கடவுள் வகை செய்துள்ளார்.

1) கடவுள் இவ்வுலகை அதிகமாய் அன்புகூர்ந்ததினாலே தம்முடைய மைந்தனையே கொடுத்துள்ளார் (யோவான் 3:16)

2) நாம் நாதியற்ற பாவிகளாக இருக்கையில் கிறிஸ்து நமது பாவங்கட்காக மரித்தார் (ரோமர் 5:8)

3) கிறிஸ்து தமது உடலிலே நமது பாவங்களைச் சுமந்து நமக்காகச் சிலுவை மரத்தில் இரத்தம் சிந்தி தண்டம் செலுத்தித் தீர்த்தார் (1 பேதுரு 2:22-24)

4) வேத வாக்கியங்களின்படியே கிறிஸ்துவானவர் நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் செய்யப்பட்டு, ன்றாம் நாளிலே உயிரோடு எழுந்தார் (1 கொரி. 15:3-6)

5) இயேசு கிறிஸ்துவே கடவுளை அடையும் ஒரே வழி (யோவான் 14:6)

IV கடவுள் ஏற்படுத்தினதை மனிதன் பெற்றுக்கொள்ளுதல் (விசுவாசம்)

அ) மீட்பு என்பது கடவுளின் கிருபையால் கிட்டும் இலவச ஈவு (ரோமர் 6:23; எபேசியர் 2:8)

ஆ) விசுவாசத்தினால் மாத்திரமே மீட்பை அடைய இயலும் (அப்போஸ். 16:31; ரோமர் 10:9)

குறிப்பு : விசுவாசம் என்பது அறிவுப் பூர்வமாகச் செய்யும் ஒப்பந்தம் அல்ல. இது பாவமன்னிப்புக்காகவும், நித்திய வாழ்விற்கெனவும் ஒரு மனிதன் கிறிஸ்துவை நம்பி, பாவத்தை விட்டு விலகி கடவுளிடம் திரும்பி விடும் செயலாகும்.

இ) மீட்பு கடவுளோடு வாழும் நித்திய வாழ்வைத் தரும் (யோவான் 3:16, 1:12)

ஈவு : கடவுளின் கிருபையினால் கிட்டும் இலவச ஈவாகிய இரட்சிப்பையும், பாவ மன்னிப்பையும் விசுவாசத்தினாலே பெற்றுக்கொள்ள வேண்டும்.

போதகருக்குரிய வேதாகமப் பயிற்சி மையம்

விசுவாச அறிக்கை

இந்த விசுவாச அறிக்கை பரந்த, பொதுவான, வைதீக சுவிசேஷ மார்க்கத்தாரின் விசுவாசத்தையும் பிரதி பலிப்பதாகும். இது வேதாகம போதனைக்கு இசைவானது. காலத்தால் அழியாது நடைமுறையில் பின் பற்றுவதும் இதுவே. நாங்கள் குறிப்பாக கீழ்க்கண்ட கோட்பாட்டு உண்மைகள் உறுதிப்படுத்துகிறோம்.

1. **வேதாகமம்**

முழு வேதாகமம் கடவுளால் ஏவப்பட்டு எழுதப்பட்ட தேவ வார்த்தை எனவும், கடவுளின் மக்கள் தூய ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்டு, அப்படியே இந்த வேத வார்த்தைகளை எழுதினரென்றும் நாங்கள் விசுவாசிக்கின்றோம். ஆகவே வேதாகம லப்பிரதிகள் பிழையற்றது (குறைவற்றது). கடவுள் அற்புதமாக வேதாகமத்தைப் பாதுகாத்தார். இதுவே நமது விசுவாசத்திற்கும், வாழ்வின் ஊக்கத்திற்கும், வழிநடத்துதலுக்கும், ஆறுதலுக்கும், ஆலோசனைக்கும், நீதியைப் பயிற்றுவிப்பதற்கும் முழுமையான, மேலான அதிகாரம் பெற்றது (2 தீமோத்தேயு 3:16,17; 2 பேதுரு 1:20-21).

2. **கடவுள்** (திரித்துவம்)

ஒரே மெய்யான கடவுள் உண்டென நாங்கள் விசுவாசிக்கின்றோம். இவர் நித்தியமானவர். இவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்கிற ன்று தனிப்பட்ட ஆளத்துவம் உடையவர். திரித்துவத்தில் ஒவ்வொருவரும் தனித்தனியே முழுமையான கடவுள். சரிசமமானவர்கள், கடவுளின் பண்புகள், தன்மைகள் கொண்டவர்கள். இவரே நம்முடைய தொழுகைக்கும், ஊழியத்திற்கும் அருகதையுள்ளவர் (உபாகமம் 6:4; மத்தேயு 28:19; யோவான் 1:14; 10:30; 2 கொரிந்தியர் 13:14) என்று நாங்கள் விசுவாசிக்கின்றோம்.

3. **பிதாவாகிய கடவுள்**

திரித்துவத்தின் முதல் நபர் பிதாவாகிய கடவுள். இவர் நித்தியர், மாறாதவர், எல்லாம் வல்லவர், எல்லா அறிந்தவர், எல்லா ஞானமும் உள்ளவர். எல்லாரிலும் அன்புகொண்டவர், பூரண நீதியுள்ளவர், பரிசுத்தர் ஆளுகையில் மேலானவர், உலகைக் காப்பவர், இவரே நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவுக்குப் பிதாவும், விசுவாசிகள் யாவருக்கும் பிதாவாயிருக்கிறாரென்று நாங்கள் விசுவாசிக்கின்றோம் (ஆதியாகமம் 1:1; எபேசியர் 4:6; யோவான் 1:12-13; 5:19-21; 17:1-5; ஏசாயா 40:21-28; 43:10-13; 46:8-11; ரோமர் 8:14-15).

4. **குமாரனாகிய கடவுள்**

திரித்துவத்தில் இரண்டாம் நபர் இயேசு கிறிஸ்து. இவரே கடவுளின் ஒரே பேறான நித்திய குமாரன். கடவுளை மனிதருக்கு வெளிப்படுத்த, தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும் பொருட்டாக மனித உடலில் வெளிப் பட்டார். இழந்து போன இவ்வுலகை இரட்சிக்கத் தோன்றினார். மனித வடிவில் இயேசு தோன்றினபடியால் கடவுட் தன்மையை எவ்விதத்திலும் இழந்து விடவில்லை. ஆகவேதான் அவர் ஒரே மனிதனில் பிரிக்க இயலாத படி இணைக்கப்பட்ட முழுமையான மனிதன், முழுமையான கடவுள் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

இயேசு பரிசுத்த ஆவியானவராலே அற்புதமாக கருவிலே தோன்றினார். கன்னி மரியாளிடம் பிறந்தார். பாவமற்ற வாழ்வு நடத்தினார். எல்லாக் காலத்து மக்களுக்காகவும், எல்லாருக்காகவும், பாவங்கள் நீக்கப்படும் பொருட்டாக பூரணமான பலியாக, நமக்குப் பதிலாகச் சிலுவையில் மரித்தார். அடக்கம் செய்யப்பட்டார். மாண்ட உடலோடு உயிர் பெற்றெழுந்தார். உயிர்த்தெழுந்து மகிமையுள்ள உடலோடு பரலோகத்திற்கு ஏறிப் போனார். பிதாவின் வலது பக்கத்தில் அமர்ந்து, நமக்காகப் பரிந்து பேசி வருகிறார். தமது மணவாட்டியாகிய திருச்சபையைத் தம்மோடு சேர்த்துக் கொள்ள வரப்போகிறார். மீண்டும் இந்த பூமிக்கு சரீரத்தோடு தாமே யாவரும் காணும் படியாக வருவார். அவரே கடவுளின் நித்திய திட்டமான அவரது ஆயிருவருட அரசாட்சியை நிறைவேற்றி, நித்திய நியாயத்தீர்ப்பையும் மக்களுக்கு வழங்கி மனித வரலாற்றை முடிப்பாரென்று நாங்கள் விசுவாசிக்கின்றோம் (யோவான் 1:1,14,18; 3:16; லூக்கா 1:30-35; பிலிப்பியர் 2:5-8; கொலோசேயர் 2:3-9; மாற்கு 10:45; அப்போஸ்தலர் 2:22-24; யோவான் 1:29; ரோமர் 3:25-26; எபிரெயர் 10:5-14; 1 பேதுரு 2:24, 3:18; யோவான் 20:20; பிலிப்பியர் 3:20-21; எபிரெயர் 1:3; ரோமர் 8:34; 1 யோவான் 2:1; அப்போஸ்தலர் 1:11; எபிரெயர் 9:28; 1 தெசலோனிக்கேயர் 4:13-18; 2 தெசலோனிக்கேயர் 2:7; மத்தேயு 24:44; வெளிப்படுத்தல் 19:11-21; வெளிப்படுத்தல் 21:22).

5. **பரிசுத்த ஆவியானவராகிய கடவுள்**

திரித்துவத்தின் ன்றாம் ஆள் பரிசுத்த ஆவியானவர் சிறப்பாகக் கிறிஸ்துவை மகிமைப்படுத்தவும், கிறிஸ்து பாடுபட்டு சம்பாதித்த இரட்சிபபை மனிதர் யாவரும் பெற்றுக் கொள்வதற்காகவும்,

பெந்தெகோஸ்தே நாளிலே இவ்வுலகிற்கு இவர் வந்திறங்கினார். பாவத்தை உணர்த்தி ஒருவன் மறுபடியும் பிறப்பதற்கு உதவி செய்வதில் இவரே முதலிடம் வகிக்கிறார். இரட்சிப்போடு கூட நமக்குப் புது வாழ்வை அருளுகிறார். கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள் விசுவாசியை நிரந்தரமாக இணைப்பதற்குரிய ஞானஸ்நானம் கொடுக்கிறார். மீட்கப்படும் நாளுக்கென விசுவாசியை பத்திரமாக முத்தரிக்கிறார். அவருடைய ஆளுகைக்கு ஒப்புவித்த விசுவாசிகளை பரிசுத்த ஆவியானவர் நிரப்பி (வழி நடத்துகிறார், கட்டுப்படுத்துகிறார்). அவர்கள் கனிகொடுக்கவும், பாவத்தின் ஆளுகையற்ற வாழ்வு நடத்தவும் விசுவாசிகளுக்குப் பலனளிக்கிறாரென்று நாங்களி விசுவாசிக்கின்றோம். பரிசுத்த ஆவியானவரே விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய வரங்களை அளித்து, வேத வாக்கியங்களின் போதனைக்கேற்ப சபைக்குப் போதிக்க உதவுகிறாரெனவும் விசுவாசிக்கின்றோம் (1 கொரிந்தியர் 13:8; 14:22; யோவான் 16:7-15; 1 கொரிந்தியர் 6:19; 12:13; எபேசியர் 1:13-14; 4:30; கலாத்தியர் 5:16-17,22,23; ரோமர் 8:5-13; 1 பேதுரு 4:10-12; ரோமர் 12:3-8).

6. **மனிதன்**

கடவுளின் சாயலாக, கடவுளின் நேரடியான செயல்பாட்டின் லம் கடவுளால் மனிதன் உருவாக்கப் பட்டானேயன்றி, பரிணாம வளர்ச்சியின் லம் அவன் வரவில்லையென்று விசுவாசிக்கின்றோம். கடவுளை மகிமைப்படுத்தவும், ஆராதிக்கவும், அவருக்கு ஊழியம் செய்யவும், அவரோடு ஐக்கியம் கொள்ளவும் மனிதன் படைக்கப்பட்டான். மனிதன் கடவுளுக்குக் கீழ்ப்படியாமற் போய்ப் பாவம் செய்தான். இதனால் அவன் கடவுளை விட்டுப் பிரிந்து சரீர, ஆவிக்குரிய மரணங்களை ஏற்றான். அதோடு மனிதனின் பண்பு சீர்குலைந்து அவன் முழுமையும் இழந்து போன நிலைக்குத் தள்ளப்பட்டான். அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவனாகிய மனிதன் தன்னைத் தானே மீட்டுக்கொள்ளத் திராணியற்று, கடவுளோடு கூடிய சரியான உறவுக்குத் தன்னுடைய சுயமுயற்சியினால் அல்லது வலிமையினால் திரும்பி வர இயலாதவனாகிப் போனான் (ஆதியாகமம் 1:26, 2:6, 17; 3:17-24; ஏசாயா 59:1-2; ரோமர் 3:9-19,23; 5:6-8; லூக்கா 18:26-27; எபேசியா 2:1-3).

7. **சாத்தான்**

சாத்தான் தீமையைத் தூண்டுகிறவன், அவன் தீமையின் அவதாரமல்ல. உண்மையான ஒரு ஆவி என்று நாங்கள் விசுவாசிக்கின்றோம். அவன் வீழ்ந்துபோன தூதன். கடவுளின் மேலான ஆளுகைக்குட்பட்டு, அவரது அனுமதியின் பேரில், சொற்ப காலத்திற்கு இவ்வுலகின் அதிபதியாக இருக்கிறான். அவன் சிலுவை மரத்திலே முழுமையாக முறியடிக்கப்பட்டான். ஆயினும் அவனுக்குரிய நியாயத்தீர்ப்பு நிறைவேற்றப் படாமல், கடவுளால் ஆயிரம் வருட அரசாட்சி முடியும் வரைக்கும் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. அதன் பின்பு அவன் நித்திய அக்கினிக் கடலிலேத் தள்ளப்படுவான். இதற்கிடையே அவன் இந்த உலகத்தை வஞ்சித்து அவனது போலியான ஆட்சியை பூமியிலே நிலை நிறுத்துவதற்கென கடவுளை அவமதிக்கவும், தூஷிக்கவும், விசுவாசிகளைச் சோதித்து, குற்றம் சுமத்தி, தாக்கி, அழிக்கவும் முயன்று வருகின்றான். விசுவாசத்தின் லமாயும், பரிசுத்தாவியானவரின் வல்லமையைச் சார்ந்திருந்தும் விசுவாசிகள் அவனை எதிர்த்து நிற்க முடியும் (ஆதியாகமம் 3:1-5; ஏசாயா 15:12-17; எசேக்கியேல் 28:11-19; யோபு 1-2, 1 யோவான் 5:19; 2 கொரிந்தியர் 11:14; 1 தீமோத்தேயு 3:6; 1 பேதுரு 5:8-9; யாக்கோபு 4:7; வெளிப்படுத்தல் 12:9, 20:1-3, 7-10).

8. **இரட்சிப்பு**

சிலுவையில் இயேசு கிறிஸ்து சிந்தின இரத்தத்தினால் மாத்திரமே பாவமன்னிப்பும், இரட்சிப்பும் கிட்டுகிறது. இது கடவுளின் கிருபையினால் கிட்டும் இலவச ஈவு என்று நாங்கள் விசுவாசிக்கின்றோம். பரிசுத்த ஆவியானவரின் புதிதாக்கும் பணியினாலே இரட்சிப்பு நிறைவேறுகிறதேயன்றி மனிதனுடைய சொந்தக் கிரியையினாலோ, தகுதியினாலோ கிட்டுவதில்லை. கிறிஸ்து செய்து முடித்த கிரியையின் மேல் ஒருவன் தன் விசுவாசத்தை வைக்கும்போது மட்டுமே அவன் இரட்சிப்பைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறான். மனந்திரும்புதல் என்பது பாவத்தை விட்டு விலகி கடவுளிடம் திரும்புவது; இது நம்பும் விசுவாசத்தின் ஒரு பகுதியேயன்றி வேறுபட்டதல்ல. சுவிசேஷம் என்பது விசுவாசிக்கின்ற யாவருக்கும் இரட்சிப்பைத் தரும் கடவுளின் வல்லமையுற்றது. விசுவாசத்தினாலே இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட யாவரும் மறுபடியும் பிறந்தவர்கள். அவர்களது பாவங்கள் மன்னிக்கப்பட்டன. அவர்கள் கடவுளின் பிள்ளைகளாகின்றனர். கிறிஸ்துவுக்குள் அவர்கள் புது சிருஷ்டிகளாயிருக்கின்றனர். கடவுளின் பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற அவர்கள் மீட்கப்படும் நாளுக்கென்று பரிசுத்த ஆவியானவராலே முத்திரை போடப்பட்டுள்ளனர் (எபேசியர் 1:7, 13-14; யோவான் 1:12-13; 3:1-7; 14-16; 2 கொரிந்தியர் 5:17; ரோமர் 1:16; 10:9-10; எபேசியர் 2:8-10; ரோமர் 8:14-17, 31-39; யோவான் 10:27-29; 14:6; அப்போஸ்தலர் 26:20; 1 பேதுரு 1:3-5).

9. **கிறிஸ்துவ வாழ்வு**

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனக்கென அல்ல, கிறிஸ்துவுக்கெனவே வாழ வேண்டும். தனக்குள்ளே தங்கியுள்ள ஆவியானவரின் வல்லமையினால் கிறிஸ்துவைத் தன் வாழ்க்கையின் லம் வெளிப்படுத்திக்

கடவுளை மகிமைப் படுத்த வேண்டுமென்று நாங்கள் விசுவாசிக்கின்றோம். கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்கிற தீரா வாஞ்சையோடு ஒவ்வொரு விசுவாசியும் வளர்ந்து படிப்படியாக கிறிஸ்துவைப் போல மாறவேண்டும். ஆவியானவரின் வல்லமையினால், ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்தமான வாழ்வு நடத்த வேண்டும். சரீர இச்சைகட்கு இடமளிக்கக் கூடாது. தனக்குள்ள ஆவியின் வரங்களைப் பயன்படுத்திக் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் கட்ட வேண்டும். கிறிஸ்துவுக்கென சாட்சி பகர வேண்டும். ஆண்டவரின் கடைசிக் கட்டளையை நிறைவேற்றும்படி தனிப்பட்ட முறையில் சீடர்களை உருவாக்கும் பணியில் ஈடுபடவேண்டும். கடவுளுக்கு மகிமை உண்டாக நற்கிரியைகளைச் செய்து, கனி கொடுக்க வேண்டும் (கலாத்தியர் 2:20;
1 பேதுரு 1:15-16; 2:11; 2 கொரிந்தியர் 5:14-15; ரோமர் 6:11-13; எபேசியர் 2:10, 4:11-12; 4:22-24; 1 பேதுரு 4:10-11; அப்போஸ்தலர் 1:8; மத்தேயு 28:18-20; கொலோசேயர் 1:10; யோவான் 15:8-16).

10. **திருச்சபை**

திருச்சபை கிறிஸ்துவின் சரீரம்; இதற்கு இயேசுவே தலையாக இருக்கிறார்; விசுவாசத்தினாலே கிறிஸ்துவை மெய்யாகவே ஏற்றுக்கொண்ட யாவரும் இதன் உறுப்பினர்களாக இருக்கின்றனரென்று நாங்கள் விசுவாசிக்கின்றோம். குறிப்பிட்டப் பகுதியில் கிறிஸ்துவின் சரீரத்தைத் தெளிவாக வெளிப்படுத்தும் சாட்சியாக உள்ளூர் சபை உள்ளது. ஒரே ஆவியினாலே எல்லா உறுப்பினரும் கிறிஸ்துவின் சரீரத்திலே இணைக்கப் பட்டிருக்கிறபடியினாலே அவர்கள் அன்பிலே வாழ்ந்து ஒரே நோக்கத்திற்காக ஒற்றுமையுடன் இசைந்திருக்க வேண்டும். இதே நோக்கத்தில் உறுதியான உபதேசத்திற்கு எதிரானவற்றைத் தள்ளிவிட்டு உண்மையான வேத உபதேசங்களைப் பின்பற்றும் சபைப் பிரிவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனால் எவ்வித ஒற்றுமைக் குலைவு அல்லது ஊழியத்திற்கு இடையூறு ஏற்படக்கூடாது. இழந்துபோன நிலையிலுள்ள மனிதருக்கு கிறிஸ்துவை அறிவிப்பதும் அவர்களை சீடராக்கி, பூமியிலே கடவுளை மகிமைப்படுத்துவதுமே திருச்சபையின் நோக்கமாகும் (அப்போஸ்தலர் 1:8; 1 கொரிந்தியர் 12:12-27; எபேசியர் 1:20-23; 4:1-6; 4:12-16; மத்தேயு 28:18-20; யோவான் 17; கொலோசேயர் 1:24-29).

11. **நியமங்கள்**

திருமுழுக்கு, கர்த்தருடைய பந்தி என்கிற இரண்டு நியமங்கள் மட்டுமே வேத வாக்கியங்களின் படியான திருச்சபை அங்கீகரித்துள்ளவையென நாங்கள் விசுவாசிக்கின்றோம். இரட்சிப்பைத் தொடர்ந்து கீழ்ப்படிதலின் அடையாளமாக மூழ்கி எடுக்கப்படும் திருமுழுக்கு, விசுவாசி பாவத்திற்குச் செத்து, பழைய வாழ்வை அடக்கம் செய்து, புது வாழ்வுக்கென உயிரோடு எழும்புவதின் அடையாளச் சின்னமாகும். கிறிஸ்துவுடனே கூடிய ஐக்கியத்தையும், உறவையும் கொண்டாடுவதே கர்த்தருடைய பந்தியாகும். இது அவரது மரணத்தையும், உயிர்த்தெழுதலையும், வரப்போகும் அவரது இரண்டாம் வருகையையும் நினைவூட்டும் அடையாளமாகும் (மத்தேயு 28:19; அப்போஸ்தலர் 10:47-48; லூக்கா 22:19-20; 1 கொரிந்தியர் 11:23-28; ரோமர் 6:3-4).

12. **மனிதனின் நித்திய வீடு**

ஒவ்வொரு விசுவாசியும் மரிக்கும் போது உடனடியாக சுய நினைவோடு ஆண்டவரின் பிரசன்னத்தில் ஐக்கியம் கொண்டு கிறிஸ்துவின் வருகையில் அவனது சரீரம் உயிர்த்தெழுந்து, மகிமைப்படுவதற்கென காத்துக் கொண்டிருப்பானென்று நாங்கள் விசுவாசிக்கின்றோம். இவ்விதமாக விசுவாசி நித்திய வாழ்வைக் கடவுளுடன் அனுபவிப்பான். அவன் என்றென்றும் அவருடன் ஐக்கியம் கொண்டு அவருக்கு ஊழியம் செய்து அவரை ஆராதித்துக் கொண்டிருப்பான் (2 கொரிந்தியர் 5:6; 1 கொரிந்தியர் 15:12-58; லூக்கா 23:39-43; 1 தெசலோனிக்கேயர் 4:13-18; யோவான் 3:16; வெளிப்படுத்தல் 21-22).

ஒவ்வொரு அவிசுவாசியும் மரிக்கும்போது உடனடியாக சுயநினைவோடு ஆண்டவரை விட்டுப் பிரிந்து அவனது சரீரம் உயிர்த்தெழுந்து நித்திய ஆக்கினைக்கும், நியாயத்தீர்ப்புக்கும், தண்டனைக்கென்றும் காத்துக் கொண்டிருக்குமென்று நாங்கள் விசுவாசிக்கின்றோம் (லூக்கா 16:19-31; யோவான் 3:18-36; வெளிப்படுத்தல் 20:5,11-15; 2 தெசலோனிக்கேயர் 1:5-10).

13. **வரப்போகும் நிகழ்வுகள்**

அடுத்து நிகழவிருக்கும் தீர்க்கதரிசன நிகழ்ச்சி திருச்சபை எடுத்துக் கொள்ளப்படுதலாகும். அப்பொழுது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நடுவானில் திரும்பி வந்து, திருச்சபையுகத்தின் எல்லா விசுவாசிகளையும் தம்மிடம் சேர்த்துக் கொள்ளுவார் என்று நாங்கள் விசுவாசிக்கின்றோம் (யோவான் 14:1-3; தீத்து 2:11-14; 1 கொரிந்தியர் 15:51-52; 1 தெசலோனிக்கேயர் 4:13-18; பிலிப்பியர் 3:20-21). சபை எடுத்துக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து தானியேல் 9:24-27-இந் நிறைவேற்றமாக ஏழாண்டு பெரிய உபத்திரவ காலம் இருக்கும். வெளிப்படுத்தல் 6:1-19; 21 வரை விவரித்துக் கூறியுள்ளபடி இஸ்ரவேல் தூய்மை படுத்தப்படும்; முழு உலகும் சோதிக்கப்படும்; பாவத்திற்கு விரோதமாகக் கடவுளின் கோபம் ஊற்றப்படும் (எரேமியா 30:7; மத்தேயு 24; வெளிப்படுத்தல் 3:10; 1 தெசலோனிக்கேயர் 5:9-11).

பெரிய உபத்திரவக் காலத்தின் இறுதியில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்கும். அவர் பரலோகத்திற்கு எவ்வாறு ஏறிச் சென்றாரோ அப்படியே அதே சரீரத்தோடு மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் ஆயிரம் வருடம் அரசாட்சி செய்யவும் நியாயத்தீர்ப்பளிக்கவும் திரும்பவும் வருவார். இந்த ஆயிரம் வருட ஆட்சியில் அவர் பூமியை நீதியோடும், நியாயத்தோடும், சமாதானத்தோடும் ஆளுகை செய்து, கடவுள் இஸ்ரவேலரோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் (அப்போஸ்தலர் 1:8-11; வெளிப்படுத்தல் 19:11-21; எசேக்கியேல் 37:21-28; ஏசாயா 11:9; வெளிப்படுத்தல் 20:1-6).

கிறிஸ்துவின் ஆயிரம் வருட ஆட்சியைத் தொடர்ந்து சாத்தானுக்குரிய கடைசி நியாயத்தீர்ப்பு வழங்கப்பட்டு, அக்கினிக் கடலிலே அவன் நிரந்தரமாய்த் தள்ளப்படுவான். இதனைத் தொடர்ந்து பெரிய வெள்ளை சிம்மாசன நியாயத்தீர்ப்பு, அவிசுவாசிகளின் சரீர உயிர்த்தெழுதல், புதிய வானம் புதிய பூமி உண்டாகுதல், நித்தியமான நிலை போன்றவைத் தோன்றும் (வெளிப்படுத்தல் 20-22; 2 பேதுரு 3:1-14).

கொள்கை ஏற்பு

பல்வேறு சபைப் பிரிவுகளிலிருந்தும், தனிப்பட்ட சபைகளிலிருந்தும் வரும் மாணாக்கரை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். ஆயினும் விண்ணப்பிக்கும் மாணாக்கர் யாவரும் எங்களுடைய இந்த விசுவாச அறிக்கையை ஏற்றுக் கொண்டதாக எழுத்து லம் உறுதி செய்ய வேண்டும். வேறுபட்ட கருத்துக்கள் இருக்குமாயின் அப்படிப்பட்ட மாணாக்கரையும் நிபந்தனையின் பேரில் பயிற்சிக்கென ஏற்றுக் கொள்வோம். அதாவது அவர்கள் தங்கள் கருத்து வேறுபாடுகளைப் பற்றி இப்பயிற்சியின் போது போதிக்கவோ, விளம்பரம் செய்யவோ, கடைப்பிடிக்கவோ கூடாது என்ற நிபந்தனைக்குட்பட வேண்டும்.

"Tamil # 5 – Bible Doctrine Survey"

BPPL 2018